# சோவியத் யூனியன்

## விவரங்களும் தகவல்களும்

# சோவியத் யூனியன்

## விவரங்களும் தகவல்களும்

சோவியத் நாடு பிரசுரங்கள்
சென்னை, 1974

**USSR : Facts and Figures**

Tamil (1974)

***Price : Rs. 1-25*** விலை : ரூ 1-25

Printed by L. V. Sorokin and Published by him at Soviet Nadu Office, 44, Theagaraya Road, Madras-600017, for the Information Department of the USSR Embassy in India. Printed at the New Century Printers, Ambathur, Madras-600058.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| இரண்டாவது அரை - நூற்றாண்டில் பிரவேசம் | 1 |
| நாடும், அதன் மக்களும் | 17 |
| சுதந்திரமான, சமத்துவக் குடியரசுகளின் ஒன்றியம் | 35 |
| சமூக, அரசாங்க கட்டமைப்பு | 57 |
| அயல் நாட்டுக் கொள்கை | 95 |
| சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி | 113 |
| பொது ஸ்தாபனங்கள் | 136 |
| தேசப் பொருளாதாரம் | 165 |
| மக்களின் நல்வாழ்வு | 235 |
| சமூகப் பாதுகாப்பு | 245 |
| வீட்டு வசதி நிர்மாணம் | 259 |
| திருமணமும் குடும்பமும் | 267 |
| கல்வி | 274 |
| விஞ்ஞானம், தொழில் நுட்பவியல் முன்னேற்றம் | 286 |
| விளையாட்டு இயக்கம் | 307 |
| இராணுவப் படைகள் | 314 |
| கலாசாரம் | 319 |
| மதமும் திருச்சபையும் | 347 |

# இரண்டாவது அரை-நூற்றாண்டில் பிரவேசம்

*சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அரை நூற்றாண்டுக் கால வரலாறு சோவியத் சோஷலிச அரசாங்கக் கட்டமைப்புக்குள் ஒன்று சேர்ந்துள்ள அனைத்து தேசங்களின் உடைக்கவொண்ணாத ஒற்றுமை, நட்புறவின் வளர்ச்சியின் கதையாகும். சோஷலிசப் புரட்சியிலே பிறந்த, இப்போது உலகின் மிகப் பெரிய வல்லரசுகளில் ஒன்றான ஓர் அரசின் முன்னெப்போதும் கண்டிராத வளர்ச்சி, சர்வாம்ச அபிவிருத்தியின் கதையாகும் இது. சோவியத் அரசின் பதாகையின்கீழ் ஒன்று சேர்ந்துள்ள சகல குடியரசுகளின், நாட்டில் வாழுகின்ற சிறியதும் பெரியதும் ஆன சகல தேசிய இனங்களின் முதிர்ச்சியை நோக்கிய வளர்ச்சி அவை பொருளாதார சுபீட்சம், அரசியல் பக்குவநிலை, கலாசார அபிவிருத்தியில் உயர் மட்டத்தை எய்திருப்பதன் கதையாகும் அது.*

**1973** ஆம் ஆண்டு தருவாயில் தொழிலாளி வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள், அறிவுத் துறையினர்—அனைத்து சோவியத் மக்களும்—சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அமைப்பின் 50 ஆம் ஆண்டு விழாவினைக் கொண்டாடினர். இவ்விழாவினைக் கொண்டாடுவதற்காக, 1972 டிசம்பர் 21-22 இல் மாஸ்கோவில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி, சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத், ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசின் சுப்ரீம் சோவியத் ஆகியவற்றின் கூட்டுக் கூட்டம் மாஸ்கோவில் நடைபெற்றது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனித் பிரெஷ்னேவ் ''சோவியத் சோஷலிசக்

குடியரசுகளின் ஒன்றியத்தின் 50 ஆம் ஆண்டுவிழா'' அறிக்கையினைப் படித்தார். சோவியத் தேசிய இனக் கொள்கையின் தத்துவம் நடைமுறை பற்றியும், சோவியத் யூனியனில் வாழும் சகல தேசங்கள், தேசிய இனங்களின் பொருளாதாரம், கலாசாரத்துடன் தொடர்புடையதும், நட்புறவு, சோதர ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட புதிய சர்வதேசிய உறவுகளின் உருவாக்கத்துடன் தொடர்புடையதும் ஆன கட்சி, அரசாங்க நடவடிக்கை பற்றியும் ஒரு விவரமான பகுப்பாய்வை இந்த அறிக்கை தன்னகத்தே கொண்டிருந்தது. சோவியத் மக்களின் ஒன்றியத்தின் அரை - நூற்றாண்டு வாழ்க்கையின்போது அவர்களுக்குக் கிடைத்த அனுபவத்தின் சர்வதேச முக்கியத்துவத்தை இந்த அறிக்கை எடுத்துக் காட்டிற்று. புரட்சிகரத் தன்னம்பிக்கை உணர்வு நிறைந்துள்ள லியோனித் பிரெஷ்னேவின் அறிக்கை 24 ஆவது கட்சிக் காங்கிரசின் முடிவுகளைச் செயல்படுத்துவதில் கட்சியும் மக்களும் ஆற்றிய மாபெரும் பணியின் முடிவுகளைத் தொகுத்தளித்தது, அவசர அவசியப் பிரச்சினைகளைப் பற்றி ஆக்க ரீதியில் பகுப்பாய்வு செய்தது, கம்யூனிசத்தை நிர்மாணிக்கும் நீண்டகாலத் திட்டங்களை வகுத்தது.

மனித குலத்தின் முதல் சோஷலிச அரசை நிர்மாணித்த நூற்றுக்கு மேற்பட்ட தேசங்கள், தேசிய இனங்களின் பிரதிநிதிகளின் உலக மக்கள் அனைவருக்குமான சமாதான, நட்புறவுப் பிரகடனம் என்னும் பெயரில் உலக மக்களுக்குரிய ஒரு பிரகடனத்தை கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏகமனதாக ஏற்றனர்.

இவ்விழாக் கொண்டாட்டம் நாடு பூராவும் மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றது. உலகின் முதல் சோஷலிச நாட்டு மக்களின் ஜீவசக்தி அளிக்கும் நட்புறவு, சோதரத்துவ சக்தியாகிய சோவியத் ஒற்றுமையின், அவர்கள் லெனினிய கம்யூனிஸ்டுக் கட்சியைப் பின்பற்றி வருவது ஆகியவற்றின் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது அது.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் சகல மக்களுக்கும் தேசங்களுக்கும் நல்ல வளர்ச்சி வாய்ப்புக்களைத் திறந்து வைத்துள்ளது சோஷலிசம்.

சோவியத் மக்கள் தமது சோஷலிச சமுதாயத்தினுடையவும், புதிய சமூக உறவுகளினுடையவுமான அனுகூலங்களை முழுஅளவில் அனுபவிக்கின்றனர்; இவை தேசியப் பொருளாதாரத்தின் வேகமான வளர்ச்சியையும், மக்களின் கலாசார மட்டம், வாழ்க்கைத் தரங்களின் துரிதமான உயர்வையும் உத்தரவாதம் செய்கின்றன.

பல தேசிய இன சோஷலிச அரசை உருவாக்கிய பெருமை மிகப் பெரும் அளவு, கட்சியின், மக்களின் தலைவராகிய விளதீமிர்

இலியிச் லெனினேயே சாரும். காரல் மார்க்ஸ், ஃபிரடெரிக் எங்கல்சின் கருத்துக்களை ஆக்கபூர்வமாக வளர்த்த அவர் தேசிய இனப் பிரச்சினை மீது ஓர் இசைவான போதனையை உருவாக்கி, கம்யூனிஸ்டுக் கட்சியின் தேசிய இனக் கொள்கையின் விஞ்ஞானக் கோட்பாடுகளை விரித்துரைத்தார்.

சமத்துவம் பெற்ற நாடுகளின் ஒரு நெருக்கமான சுயவிருப்ப நேச அணியை நிலைநாட்டுவதற்காக, லெனினியக் கட்சியும், தொழிலாளி வர்க்கமும் எப்போதுமே உறுதியாக சகல தேசங்கள், தேசிய இனங்களின் சமத்துவத்தையும், சுதந்திரமான நாடுகளாகத் தம்மை உருவாக்கிக் கொள்வது வரையிலான தேசங்களின் சுயநிர்ணய உரிமையையும் ஆதரித்தன.

அக்டோபர் புரட்சிக்குச் சிறிது காலத்திற்கு முன்பு லெனின் எழுதினார்: ''நாம் சுயநிர்ணய உரிமை, சுதந்திரம், அதாவது விடுதலையை, அதாவது ஒடுக்கப்பட்ட நாடுகளுக்குப் பிரிந்து செல்லும் சுதந்திரத்தைக் கோருகிறோம்; நாட்டைப் பொருளாதார ரீதியில் துண்டாடுவதற்காகவோ அல்லது சிறு சிறு நாடுகள் ஏற்படவேண்டும் என்னும் லட்சியத்திற்காகவோ அவ்வாறு கோரவில்லை; மாறாக மெய்யாகவே ஜனநாயகமான, மெய்யாகவே சர்வதேசிய அடிப்படை கொண்ட பெரும் நாடுகள் ஏற்படுவதற்காகவும், நெருக்கமான ஒற்றுமையும் சொல்லப்போனால் நாடுகளின் இணைப்புக்காகவும் கூட—பிரிந்து செல்லும் சுதந்திரம் இன்றி இது சாத்தியமில்லை—இவ்வாறு நாம் விரும்புகிறோம்.''

''நாம் முரணற்ற சர்வதேசியவாதிகள்; நாம் சகல தேசங்களின் தொழிலாளிகளும் விவசாயிகளும் சுயவிருப்பக் கூட்டணி அமைத்துக் கொள்வதற்காகப் பாடுபடுகிறோம்,'' என்று லெனின் சுட்டிக்காட்டினார்.

முதலாளித்துவச் சுரண்டல் முறையையும், அதனுடன் கூடவே தேசிய ஒடுக்குமுறை அமைப்பையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில், அனைத்து மக்கள் சக்திகளின் நெருக்கமான ஒற்றுமையை ஒரு சோஷலிசப் புரட்சி மட்டுமே உத்தரவாதம் செய்கிறது என்பதை ஒரு புதுவகையான பல-தேசிய இன அரசை நிறுவிய அனுபவம் எடுத்துக்காட்டுகின்றது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டதுதான் இந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்கும், நாட்டில் வாழும் தேசங்கள், தேசிய இனங்களின் சோஷலிச வாழ்க்கை முறையை உருவாக்குவதற்கும் உரிய நிர்ணயமான அரசியல் முன்நிபந்தனையாக விளங்கிற்று; உற்பத்தி சாதனங்களில் பொதுவுடைமையை நிலைநாட்டுவதுதான் அதன் பிரதான பொருளாதார முன்தேவையாயிருந்தது.

சகல ரஷ்ய மக்களின் உரிமைகள் பிரகடனமும், உழைக்கும், சுரண்டப்பட்ட மக்களின் உரிமைகள் பிரகடனமும், அக்டோபர் புரட்சிக்குப் பிறகு ஏற்கப்பட்ட ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசுகளின்,இதர சோவியத் குடியரசுகளின் அரசியல் சட்டங்களும் தொழிலாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் அரசியல், பொருளாதார, கலாசார நிர்மாணத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பிரகடனம் செய்தன. முன்னுள் ஜார் ஆட்சி-ரஷ்யாவின் பல்வேறு மக்கள் புரட்சியின்போது உருவாக்கிய அனைத்து சோவியத் குடியரசுகளும் சமஷ்டி ஒற்றுமையை இயல்பாகவே விரும்பின. சோஷலிச நிர்மாணப் பாதையை மேற்கொண்ட அவை, சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் முன்மாதிரியாக விளங்கிய ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசின் பின்னால் மென்மேலும் அதிக நெருக்கமாக அணி திரண்டன. சோவியத் ஆட்சி ஏற்பட்ட முதல் ஐந்தாண்டுக் காலகட்டத்தில், புதிய சோஷலிச உறவுகளின் வளர்ச்சியிலும், தேசங்கள் தேசிய இனங்களிடையேயான ஒத்துழைப்பிலும் செழுமையான அனுபவம் கிடைத்தது.

தொழிலாளர், விவசாயிகளின் பல-தேசிய இன அரசு உருவாக்கப்பட்டதானது மாபெரும் அக்டோபர் புரட்சியினுடையவும், நாடு தழுவிய புரட்சிகர சீர்திருத்தங்களினுடையவும் லட்சியத்தின் தொடர்ச்சியாக விளங்கிற்று. இது புறநிலை வரலாற்று வளர்ச்சியின் நிர்ப்பந்தம் காரணமாக ஏற்பட்டது. செறிவான விஞ்ஞானபூர்வ பகுப்பாய்வின் அடிப்படையில் லெனின் சுட்டிக் காட்டியதாவது :

சோவியத் குடியரசுகளின் மிக நெருக்கமான ஒன்றியமின்றி உலக ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பிற்கிடையே அவை தம்மைப் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியாது ; சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தைப் பாதுகாத்து வலுப்படுத்துவது ''உலக பூர்ஷுவாக்களுக்கு எதிரான போராட்டத்திற்கும், பூர்ஷுவா சதிகளுக்கு எதிராகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் நமக்கு இன்றியமையாத, உலகக் கம்யூனிஸ்டு பாட்டாளி வர்க்கத்திற்கும் இன்றியமையாத'' ஒரு நடவடிக்கையாகும்.

சோவியத் குடியரசுகளின் ஒன்றியமும் அவற்றின் நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பும் இன்றி, ஏகாதிபத்தியம் நாசம் செய்த உற்பத்தி சக்திகளை மறுசீரமைப்பதும், ஒரு பொதுவான திட்டத்திற்கு ஏற்ப முறைப்படுத்தப்பட்ட தனியொரு சோஷலிசப் பொருளாதாரத்தை உருவாக்குவதும், அறிவார்ந்த சமூக உழைப்புப் பிரிவினையையும் நாட்டின் அனைத்து மக்களின் நலன்களை முன்னிட்டு இயற்கைச் செல்வாதாரங்களை பயனுறுதியுடன் பயன்படுத்துவதையும் உத்தரவாதம் செய்வது சாத்தியமல்ல.

சோவியத் குடியரசுகளின் நெருக்கமான ஒன்றியம் இன்றி, உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரங்கள் தொடர்ந்து வளர்ச்சியுறுவதையும், நாட்டின் சகல தேசங்கள், தேசிய இனங்களின் சர்வாம்ச கலாசார வளர்ச்சியையும் உத்தரவாதம் செய்வது சாத்தியமல்ல.

இந்த சந்தர்ப்பங்கள் யாவும், வெளிநாட்டு அபாயத்திலிருந்து பாதுகாப்பு பெறுவது, உள்நாட்டின் பொருளாதார முன்னேற்றம், சகல மக்களின் தேசிய வளர்ச்சிக்கான சுதந்திரம் ஆகியவற்றை உத்தரவாதம் செய்யக்கூடிய முறையில் சகல சோவியத் குடியரசுகளும் தனியொரு ஒன்றிய அரசின்கீழ் ஒன்று திரளுவதை கண்டிப்பாக வற்புறுத்தின.

ஒரே ஒன்றியத்தினுள்ளே ஒன்றிணைவது பற்றிய முடிவுகளை சகல குடியரசுகளின் சோவியத்துகளின் காங்கிரசுகளும் எடுத்தன. சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் நிறுவப் பெற்றது குறித்த பிரகடனத்தை 1922 டிசம்பர் 30இல் கூடிய முதலாவது அகில ஒன்றிய சோவியத்துக்களின் காங்கிரஸ் ஒரு மனதாக ஏற்றது. பல்வேறு மக்கள் சமாதான பூர்வமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்கும், சோதர ஒத்துழைப்புக்குமான அடித்தளம் இடப்பட்டதோடு 1917 அக்டோபரில் தொடங்கிய முயற்சிகளைப் புதிய ஒன்றிய அரசு முற்றுப் பெறச் செய்யும் என்னும் உறுதியான நம்பிக்கையை அது வெளிப்படுத்தியது.

சோவியத் குடியரசுகள், ஒன்றியத்தினுள் சுயவிருப்பமுடன் சேர்ந்ததானது அவற்றின் சோஷலிச ஆதிபத்திய உரிமையின் ஒரு தெளிவான வெளிப்பாடாகவும், அதன் நம்பகமான உத்தரவாதமாகவும் விளங்கிற்று. ரஷ்ய சோஷலிஸ்டு சோவியத் சமஷ்டி குடியரசும், உக்ரேனிய சோஷலிச சோவியத் குடியரசும், பைலோ ரஷ்ய சோஷலிச சோவியத் குடியரசும், டிரான்ஸ் காகேஷிய சோஷலிச சோவியத் சமஷ்டிக் குடியரசும் (இது, அசர்பைஜான், அர்மீனியா, ஜார்ஜியா ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது) சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அமைப்பு, ஒரே யூனியன் அரசினுள் அவை ஒன்றிணைவது குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

சமத்துவமான மக்களின் சுயவிருப்ப அரசாங்க ரீதியான ஒன்றியத்திற்காக லெனின் வகுத்த கோட்பாடுகள்தான் 1924 ஜனவரி 31இல் நடைபெற்ற இரண்டாவது அகில ஒன்றிய சோவியத்துகளின் காங்கிரசில் இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டன.

சோஷலிச நிர்மாணக் காலகட்டத்தின் போது, சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் தேசிய அரசு

நிர்மாணத்தைத் தொடர்ந்தும் செம்மையாகவும், நடத்துவதற்கான.சாதகமான சமூக-பொருளாதார நிலைமைகள் படிப்படியாக உருப் பெற்றன. 1924இல் துர்க்மென், உஸ்பெக் சோவியத் சோஷலிசக் குடியரசுகளும், 1929இல் தாஜிக் சோவியத் சோஷலிசக் குடியரசும் அமைக்கப்பட்டன. 1936இல் கஜக், கிர்கிஸ் சுயாட்சிக் குடியரசுகள் ஒன்றியக் குடியரசுகளாக மாற்றியமைக்கப்பட்டன. அதே ஆண்டில் முன்பு டிரான்ஸ் காகேஷிய சோஷலிஸ்டு சோவியத் சமஷ்டிக் குடியரசாக அமைந்திருந்த அசர்பைஜான், அர்மீனியன், ஜார்ஜிய சோவியத் குடியரசுகள் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் நேரடியாக இணைந்தன. புரட்சியினால் புதுவாழ்வு அளிக்கப்பட்ட இதர தேசியக் குழுக்களின் அரசியல் வளர்ச்சியும் சுயாட்சிக் குடியரசுகள், சுயாட்சிப் பிராந்தியங்கள், தேசியப் பிரதேசங்கள், ஆகியவற்றின் அமைப்பில் வடிவம் பெற்றது.

1936 டிசம்பர் 5இல் ஏற்கப்பட்ட சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அரசியல் சட்டம், சோஷலிசத்தின் வெற்றியையும், சோஷலிச சமுதாயத்தின் சமூக அரசு அமைப்பு அடித்தளங்களையும் சோவியத் மக்களின் கூட்டமைப்பையும் உறுதிப் படுத்திற்று.

1939-45இல் உக்ரேனிய மக்களும், 1939இல் பைலோ ரஷ்ய மக்களும் மீண்டும் சோவியத் யூனியனில் இணைந்தது பல-தேசிய இன சோஷலிச அரசின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். 1940இல் லாத்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகியவற்றின் உழைப்பாளி மக்கள் புரட்சிகரப் போராட்டத்தின் ஊடே சோவியத் அரசு அமைப்பை மீண்டும் நிலைநாட்டிக் கொண்டனர். தமது மக்களின் சுதந்திரமான விருப்பத்தின் அடிப்படையில் லாத்விய, லிதுவேனிய, எஸ்தோனிய சோவியத் குடியரசுகள் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் இணைந்தன. மோல்தேவிய மக்கள் மீண்டும் ஒன்றுபட்டதன் விளைவாக மோல்தேவிய சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசு ஓர் ஒன்றியக் குடியரசாக மாற்றியமைக்கப்பட்டது.

மாபெரும் தேசபக்தப் போர் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் வலிமைக்கு ஒரு கடுமையான சோதனையாக விளங்கிற்று. ஓர் ஒன்றியத்தில் மட்டுமே, தமது சக்திகளை ஒன்றிணைப்பதன் மூலம், சோவியத் யூனியனின் பல்வேறு மக்கள் தமது சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும், தமது புரட்சிகர சாதனைகளையும், பாதுகாத்து நிற்க முடியும் என்பதை மனித குலத்தின் மிக மிகப் பயங்கரமான எதிரியுடன், ஹிட்லர் பாசிசத்துடன் நடைபெற்ற மோதல் தெளிவாக எடுத்துக் காட்டிற்று. தேசபக்தப் போரில் அவர்கள் ஈட்டிய வரலாற்றுச்

சிறப்புடைய வெற்றி சோஷலிச சமுதாய அமைப்பு, அரசாங்க அமைப்பின் அனுகூலங்களையும், சோவியத் சோஷலிசக் குடியரசு களின் ஒன்றியத்தின் மாபெரும் வல்லமையையும், அதன் ஸ்திரத் தன்மையும் தெளிவாகக் காட்டிற்று.

போர்ப் பிற்கால பொருளாதார மறுசீரமைப்பு ஆண்டு களிலும், பிந்திய கம்யூனிச நிர்மாணக் காலகட்டத்திலும் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் மக்களின் லெனினிய நட்புறவு அம்சங்களான: சோஷலிசத் தாயகத்தின் பாலான விசுவாசம், அர்ப்பணிப்பு, கடும் உழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவை முனைப்படைந்தன. இத்துணை பெரும் எண்ணிக்கையுடைய தேசங்கள், தேசிய இனங்களின் உறவுகளில் சோவியத் குடியரசுகளின் சோதர ஒன்றியத்தில் தொடர்ந்து காணப்படும் இத்தகைய நலன்கள் நோக்கங்களின் தகர்க்க வொண்ணாத ஒற்றுமையை, எண்ணம் செயலின ஒற்றுமையை, இத்தகைய ஆன்மீக நேசப்பான்மை, நம்பிக்கை, பரஸ்பர அக்கறையை உலக வரலாறு ஒருபோதும் கண்டதில்லை.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அனைத்து குடியரசுகளின் வேகமான, விரிவான முன்னேற்றத்தில் பொருளா தார, சமூக-அரசியல், கலாசார வளர்ச்சி சமப்படுத்தப்படுவதும் அவற்றின் ஒட்டுமொத்தத் தரங்களின் அதிகரிப்பும் ஒரு முக்கிய அம்சமாக விளங்கின.

1917 புரட்சியின் போது மத்திய ஆசியா, கஜக்ஸ்தான் போன்ற எல்லைப்புற தேசியப் பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சி காலனி நாடுகளுக்கு வழக்கமாக உரியதல்லாத ஒரு வளர்ச்சி மட்டத்தினை எட்டின. அங்கிருந்த சமூகக் கட்டமைப்பு சாரத்தில் நிலப்பிரபுத்துவ தசையில் இருந்தது; வறுமையும், நோயும், அறியாமையும்தான் பெரும்பாலான மக்களின் கதியா யிருந்தது. மத்திய ஆசியாவில் 90 முதல் 96 சதவிகிதம் மக்களுக்கும், கஜக்ஸ்தானில் 82 சதவிகிதத்தினருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. நாட்டின் மையத்திற்கு வெகு நெருக்கமா யிருந்த டிரான்ஸ்காகேஷியாவின் பல பிராந்தியங்களும், பைலோ ரஷ்யாவும்கூட மிகப் பின்தங்கிய நிலையில் இருந்தன.

லெனினுடைய முன் முயற்சியின் பேரில், எல்லைப்புற தேசியப் பகுதிகளின் பொருளாதார, கலாசார, சமூக-பொருளாதார வளர்ச்சியை துரிதமாக்கக் கட்சி முன்வந்தது. ஒரு காலத்தில் ஒடுக்கப்பட்ட தேசங்கள் தேசிய இனங்களாயிருந்த இவற்றுக்கு நாட்டின் அதிக முன்னேற்றமடைந்த பகுதிகள், குறிப்பாக ரஷ்ய மக்களும் அவர்களின் தொழிலாளி வர்க்கமும் விரிவான உதவி அளித்தன. டிரான்ஸ்காகேஷியா, மத்திய ஆசியா, கஜக்ஸ்தான் ஆகிய குடியரசுகளுக்கு அளித்த உதவியில் நன்கொடையாக

அளிக்கப்பட்ட பல தொழிற்சாலைகள், ஆலைகள், தொழில் வளர்ச்சி பாசனத் திட்டங்களுக்கான நிதிகள், உணவுப் பண்டங்கள், தொழில்நுட்ப உதவி ஆகியவை அடங்கும். பல பொறியியலாளர் கள், நிபுணர்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், கலாசார ஊழியர்கள் உதவி செய்வதற்காக இந்த எல்லைப்புறப் பிரதேசங்களுக்குச் சென்றனர்.

பல ஆண்டுகள் அகில ஒன்றிய பட்ஜெட்டிலிருந்து ஒன்றியக் குடியரசுகளின் பட்ஜெட் செலவினங்களுக்காக மானியங்கள் வழங்கப்பட்டன. மிகப் பிரம்மாண்டமான பொருளாயத இன்னல்களுக்கு உட்பட்ட குடியரசுகள், பிராந்தியங்களின் குடி மக்களுக்கு விவசாய, சிவில் வரிகளிலிருந்து முழுமையாகவோ அல்லது ஓரளவுக்கோ விலக்களிக்கப்பட்டது. அதே சமயத்தில் விவசாயப் பண்டங்களின் கொள்முதல் விலைகள் ஒரு காலத்தில் பின்தங்கியிருந்த பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் முறையில் நிர்ணயிக்கப்பட்டன.

நாட்டின் முயற்சிகளையும் செல்வாதாரங்களையும் ஒன்றிணைப்ப தானது, வெகு குறுகிய காலத்திற்குள், ஜாராட்சியிலிருந்து வழி வழி வந்த பொருளாதார, கலாசாரப் பின்தங்கிய நிலைமையைப் போக்குவதையும், நாட்டை தொழில் மயமாக்கி விவசாயத்தை சோஷலிசமயமாக்குவதையும், ஒரு மெய்யான கலாசாரப் புரட்சியை நிறைவேற்றுவதையும், சோஷலிசத்தை நிர்மாணிப் பதையும், சோவியத் யூனியனை ஓர் உயர் வளர்ச்சி பெற்ற வல்லரசாக மாற்றுவதையும், கம்யூனிச சமுதாய நிர்மாணத்தைத் துவங்குவதையும் சாத்தியமாக்கியது.

சோவியத் யூனியனில் நிலவும் அனைத்து தேசங்கள், தேசிய இனங்களின் பிரம்மாண்டமான நிர்மாண ஆற்றலையும், படைப் பாற்றல் முன்முயற்சியையும் இப்பணி வெளிப்படுத்திற்று. வெல்லற்கரிய சோவியத் பாதுகாப்பு முறை நாட்டின் மக்களுக்கும், அவர்களின் படைப்பாற்றல் உழைப்புக்கும் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும், சுயாதீனத்தையும் அளிக்கின்றது. 1972க்கான நாட்டின் ஒட்டுமொத்த தொழிற்துறை உற்பத்தி 1922ஐ விட 320 மடங்கு அதிகமாகவும், இரண்டாவது உலகப் போருக்கு முன்பிருந்ததைவிட 14 மடங்கு அதிகமாகவும் உள்ளது. ஒரு காலத்தில் ஜாராட்சி கால ரஷ்யாவின் நிலப்பிரபுத்துவ, அரை நிலப்பிரபுத்துவ எல்லைப்புறப் பகுதியாயிருந்தவற்றில் இப்போது தொழிற்துறை, கலாசார மையங்களும், சகல நவீன வசதிகளுடன் கூடிய நகரங்களும், கிராமங்களும் உள்ளன.

சோவியத் ஒன்றியம் அமைக்கப்பட்ட பின்னர் கஜக்ஸ்தானின் தொழிற்துறை உற்பத்தி 600 மடங்கும், தாஜிகிஸ்தானின் உற்பத்தி 400 மடங்குக்கு மேலும், உஸ்பெகிஸ்தானின் உற்பத்தி

ஏறத்தாழ 240 மடங்கும், துர்க்மீனியாவினது 130 மடங்குக்கு மேலும் அதிகரித்துள்ளன. மொத்தப் பருத்தி உற்பத்தி உஸ்பெகிஸ்தானில் 120 மடங்கும், துர்க்மீனியாவில் 90 மடங்கும் உயர்ந்துள்ளது. கஜக்ஸ்தான் இப்போது 1922ஐக் காட்டிலும் அநேகமாக 30 மடங்கு தானியத்தை உற்பத்தி செய்கிறது. பைலோ ரஷ்யா, மோல்தேவியா, சைபீரியா மற்றும் பல முன்னுள் பின்தங்கிய பிரதேசங்களில் மாபெரும் மாறுதல்கள் நிகழ்ந் துள்ளன. வெகு நாட்களுக்கு முன்பே முன்னுள் தேசிய எல்லைப் புறப் பிரதேசங்களின் மக்கள் அனைவரும் எழுதப்படிக்கத் தெரிந்த வர்களாகி விட்டனர்; அவர்களுக்கென சொந்தப் பல்கலைக் கழகங் களும், விஞ்ஞானப் பேரவைகளும் உள்ளன. அவர்களின் கலாசார வளர்ச்சி மட்டம் உயர்வாக இருக்கின்றது.

1940 உடன் ஒப்பிடும் போது மெய்யான தலா வருமானம் நான்கு மடங்கையும் விட அதிகரித்துள்ளது; சில்லறை வர்த்தகப் பரிமாணம் ஏழு மடங்கையும்விட அதிகரித்துள்ளது; மருத்துவர்களின் எண்ணிக்கை 4.7 மடங்கு அதிகரித்துள்ளது; உயர் கல்வி அல்லது செகண்டரி கல்வி கற்றவர்கள் 6.5 மடங்கு அதிகரித்துள்ளனர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் சமூக உறவுகள் துறையில் தீவிர மான மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. சோவியத் யூனியனில் மனிதனை மனிதன் சுரண்டுவது ஒழிக்கப்பட்டு எவ்வளவோ காலமாகி விட்டது. இப்போது சோவியத் மக்கள் அனைவரும் சோஷலிச வர்க்கங்களையும் சமுதாயக் குழுக்களையும் சேர்ந்தவர் களே. அவர்கள் அனைவரும் ஒரு பொதுவான நோக்கம், ஒரு பொதுவான கண்ணோட்டத்தினுல் பிணைக்கப்பட்டுள்ளனர். கம்யூனிசம் அவர்களின் லட்சியம்; மார்க்சியம் - லெனினியம் அவர்களின் உலகக் கண்ணோட்ட அடிப்படை. சமுதாயத்தின் பிரதான உற்பத்தி சக்தியும், இன்றைய சகாப்தத்தின் மிகமிக முற்போக்கான வர்க்கமும் ஆகிய தொழிலாளி வர்க்கத்திலும், தனி உடைமை மனப்பான்மையைக் கைவிட்டுள்ள கூட்டுபண்ணை விவசாயிகளிலும், கம்யூனிச நிர்மாண லட்சியத்திற்கு தம் படைப் பாற்றல் முயற்சிகளை அர்ப்பணித்துக் கொண்டுள்ள சோவியத் அறிவுத்துறையினரிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந் துள்ளன.

ஒன்றியக் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகள் ஆகிய இருவகையைச் சேர்ந்த அனைத்துக் குடியரசுகளிலும், சகல தேசிய பிராந்தியங்கள், பகுதிகளிலும் இப்போது தொழிலாளி வர்க்கம் பெருவீதத்தில் உள்ளது. தனது இயல்பு காரணமாகவே சகல வர்க்கங்களிலும் மிகமிக சர்வ தேசியத் தன்மை வாய்ந்த தொழிலாளி வர்க்கம் தான், நமது நாட்டின் சகல தேசங்கள்,

தேசிய இனங்களை ஒன்றுபடுத்திய செயல்பாட்டில் நிர்ணயமான பாத்திரம் வகிக்கின்றது. நெருக்கமாகப் பிணைந்த உற்பத்திக் கூட்டமைப்புகளைச் சேர்ந்த சகல தேசிய இனங்களையும் சார்ந்த தொழிலாளிகள்தான், இடம் எதுவாயினும் சரி எல்லாத் தொழிற் துறை திட்ட நிலையங்களையும் நிறுவி வருகின்றனர்; நாட்டின் பல்வேறு பகுதிகளை ஒன்றிணைத்து, யூனியன் குடியரசுகளையும் சுயாட்சிக் குடியரசுகளையும், பிரதேசங்கள், பிராந்தியங்களையும் ஒன்றிணைத்து ஒரே பொருளாதாரா முழுமையாக மாற்றும் ரயில் பாதைகளைப் போட்டு வருகின்றனர்; கால்வாய்களைத் தோண்டு கின்றனர்; எண்ணெய்க் குழாய்ப் பாதைகளைப் போட்டு வரு கின்றனர்; மின் கடத்தி மார்க்கங்களைச் சமைத்து வருகின்றனர்.

ஒரு சோவியத் சோஷலிச கலாசாரம் தோன்றி மலர்ச்சி பெற்று வருகிறது; இக்கலாசாரம் உணர்விலும் அடிப்படை சாரத்திலும் ஒன்றுபோல் உள்ளது; ஆனால் அதேசமயத்தில் அது, ஒவ்வொரு சோவியத் தேசத்தின் கலாசாரத்தின், வாழ்க்கையின் மிகமிக மதிப்பு மிக்க அம்சங்களையும் மரபுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதே சமயத்தில் ஒவ்வொரு சோவியத் தேசிய கலாசாரமும் தனது சொந்தக் கருவூலத்திலிருந்து பயன் பெறுவ துடன் இதர சோதர தேசங்களின் செல்வத்திலிருந்தும் பயனைப் பெற்றுக் கொள்கிறது; மேலும் முறையே அது சோதர தேசங் களின் கலாசாரங்களுக்கும் பங்குப்பணி ஆற்றி அவற்றைச் செழுமைப்படுத்துகின்றது. இப்போக்கு தேசிய தடைச் சுவர்களைக் கொண்டிராத சகல உழைக்கும் மக்களுக்கும் சமமாகப் பணிபுரிகிற ஒரு புதிய, கம்யூனிச கலாசாரத்திற்கான அடித்தளத்தை இட்டு வருகின்றது.

சோவியத் யூனியனில் தேசிய இனப் பிரச்சினை வெற்றிகர மாகத் தீர்க்கப்பட்டதன் ஒரு முக்கியமான விளைவு சோவியத் யூனியனின் சகல சோஷலிச தேசங்கள், தேசிய இனங்களின் மொழி களும் சர்வாம்ச ரீதியில் வளர்ச்சியடைந்திருப்பதாகும். முன்பு மொழிக்குரிய வரி வடிவமில்லாத 40க்கு மேற்பட்ட இன மக்கள், சோவியத் காலகட்டத்தில், தமக்கென சொந்த எழுத்துக்களைப் பெற்றுள்ளனர்; இப்போது அவர்களுக்கு முழு வளர்ச்சி பெற்ற இலக்கிய மொழி உள்ளது. சோவியத் யூனியனிலுள்ள சகல தேசங்களும், தேசிய இனங்களும் ரஷ்ய மொழியைத் தமது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தமது பொது மொழியாகத் தேர்ந் தெடுத்துள்ளன. இது பல்வேறு சோவியத் மக்களின் உறவுகள், இணைவின் ஒரு சக்தி வாய்ந்த கருவியாகவும், நாட்டின் கலாசாரம் உலகக் கலாசாரத்தின் தலைசிறந்த சாதனைகளுடன் அவர்களுக் குள்ள தொடர்பின் சாதனமாகவும் மாறியுள்ளது. இது தவிர ரஷ்ய மொழி சர்வதேச உறவுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படு கிறது.

சோவியத் யூனியனில் ஒரு வளர்ச்சி பெற்ற சோஷலிச சமுதாயத்தைக் கட்டியதோடு சோவியத் மக்களின் முயற்சிகள் முழுமைத் தன்மை பெற்றிருக்கின்றன. இந்த சமுதாயத்தினுள்:

அகில யூனியன் பொருளாதாரம்—குடியரசுகளின் தேசியப் பொருளாதாரங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டும், தனியொரு அரசுத் திட்டத்திற்கு ஏற்பவும், ஒட்டுமொத்தமாக நாட்டினுடையவும் ஒவ்வொரு குடியரசினுடையவும், நலன்களுக்கு ஏற்பவும் வளர்த்துக் கொண்டும் உள்ள ஒரு பரஸ்பர உறவுடைய தேசிய-பொருளாதாரத் தொகுப்பு—ஓர் உயர் வளர்ச்சி மட்டத்தை எய்தியுள்ளது;

வர்க்க, தேசியப் பகைமைகள் ஒழிக்கப்பட்டு விட்டன; சமுதாயம் முழுமையாகவும், ஒவ்வொரு தேசமும் தேசிய இனமும் தனித்தனியாகவும் ஒரே மாதிரியான சமூகக் கட்டமைப்பைக் கொண்டுள்ளன; இக்கட்டமைப்பு தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயிகள், உழைக்கும் அறிவுத் துறையினரைக் கொண்டதாயிருக்கின்றது;

ஜனநாயக மத்தியத்துவம், சோஷலிச சமஷ்டித்துவம் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஒன்றிய அரசுரிமை, குடியரசுகளின் தேசிய அரசுரிமை என்னும் உடைக்கவொண்ணு ஒற்றுமைக்குள் சோவியத் சமூக ஜனநாயகத்தின் சர்வாம்ச வளர்ச்சி உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது;

விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், கலாசாரத்தின் வளர்ச்சியில் சகல தேசிய இனங்களின் உழைப்பாளி மக்களும செயலூக்கமுடன் பங்கு பற்றுவதற்கு அவசியமான தேவைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சோஷலிச தேசங்கள் தேசிய இனங்களின் மலர்ச்சி, செயலெதிர்ச் செயல், பரஸ்பர செழுமைப்படுத்தல் ஆகியவை சோவியத் மக்களின் வாழ்க்கையில் ஓர் இயல்பான வளர்ச்சி ஆகிவிட்டது;

மார்க்சிய-லெனினிய சித்தாந்தம், சோஷலிச சர்வதேசியம், சகல மக்களின் நட்புறவு உறுதியாக வேரூன்றி விட்டது; பொருளாயத, கலாசார செல்வங்கள், ஊழியர்களின் பரிமாற்றமும் பரந்த செயல் விளைவுகள் ஏற்படுத்தும் வகையில் நடைபெறுகிறது; பரஸ்பர செல்வாக்கு செலுத்துவதும், சகல மக்களின் வாழ்க்கை முறை முழுவதும் சர்வதேச மயமாக்கப்படுவதும் பல்வேறு வடிவங்களில் அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு குடியரசின் உழைப்பாளி மக்களும் ஒரு பல-தேசிய இன கூட்டமைப்பாக விளங்குகின்றனர்; இதனுள் தேசிய குணதிசயங்கள், சர்வதேசிய, சோஷலிச, பொதுவான சோவியத் அம்சங்கள் மரபுகளுடன் இசைவாக இணைக்கப்படுகின்றன.

சோஷலிச கம்யூனிச நிர்மாண ஆண்டுகளில் சோவியத் யூனியனில் ஒரு புதிய வரலாற்று மக்கள் கூட்டமைப்பு—சோவியத் மக்கள்—தோன்றியுள்ளனர். உற்பத்தி சாதனங்களின் சமூக உடமை, பொருளாதார, சமூக - அரசியல், கலாசார வாழ்க்கை ஒற்றுமை, மார்க்சிய-லெனினிய சித்தாந்தம், தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள், கம்யூனிச லட்சியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் உருவாக்கப்பட்டனர். கம்யூனிச நோக்கத்தின் பால் விசுவாசம், சோஷலிச தேசபக்தி, சர்வதேசியம், ஓர் உயர்தரமான உழைப்பு, சமூக-அரசியல் நடவடிக்கை, சுரண்டல், ஒடுக்குமுறை, தேசிய, இனவெறித் தப்பெண்ணங்களை சகித்துக் கொள்ளாமை ஆகியவை போன்ற தலைசிறந்த அம்சங்களை சோவியத் மனிதன் வளர்த்துள்ளான். அவன் சகல நாடுகளின் உழைப்பாளி மக்களுடன் வர்க்க ஒருமைப்பாடு கொள்கிறான். பல தலைமுறையைச் சேர்ந்த மெய்யான சர்வதேசிய வாதிகள்—கம்யூனிசத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட போராட்ட வீரர்கள்—வளர்ந்துள்ளனர். மக்களுக்குப் படைப்பாற்றல் வாய்ப்புக்கள் மேலும் அதிகரிப்பதற்கும், ஒவ்வொரு சோவியத் மனிதனின் சர்வாம்ச வளர்ச்சிக்கும் அவசியமான பொருளாயத, அறிவுத் துறை நிலைமைகள் உருவாக்கப்பட்டு விட்டன.

பல தேசிய இன சோவியத் அரசாங்கத்தை நிர்மாணித்ததில் பெறப்பட்ட அனுபவம் மார்க்சிய-லெனினியத்தின் முடிவுகளை அற்புதமாக ஊர்ஜிதம் செய்துள்ளது:

சமூகத்தை சோஷலிச முறையில் மறு நிர்மாணம் செய்வதன் அடிப்படையில் மட்டுமே தேசிய இனப் பிரச்சினையை முரணின்றித் தீர்க்க முடியும்;

தேசிய சமத்துவம் பற்றி பேசி விட்டு, ஆனால் அதனை ஒரு போதும் நிறைவேற்றாத சம்பிரதாய பூர்வமான பூர்ஷுவா ஜனநாயகத்தைப் போலல்லாமல், சோஷலிச ஜனநாயகம் சகல மக்களுக்கும் சம உரிமைகளையும் வாய்ப்புக்களையும் உத்தரவாதம் செய்கிறது. பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைப்பாளி மக்களின் ஜீவாதாரமான நலன்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தேசிய இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நிலைமைகளை உருவாக்குகிறது.

நமது அமைப்பின் இயல்பு காரணமாக சோவியத் நாட்டின் சகல தேசங்களும், தேசிய இனங்களும் நெருக்கமாக ஒன்றுசேருகின்றன, சர்வாம்ச ரீதியில் மலர்ச்சியடைகின்றன, உறுதியாக ஒன்றை ஒன்று நெருங்கி வருகின்றன; இது சோஷலிச வளர்ச்சியின் ஓர் எதார்த்த பூர்வமான உள்ளார்ந்த விதியாகும்;

சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் தான் ஒரு பல்-தேசிய இன அரசாங்கத்தின் மிகமிக உருப்படியானதும் செம்மையானதும்

ஆன வடிவம் ஆகும்; இது சமுதாயம் முழுவதன் நலன்களை ஒவ்வொரு தனிப்பட்ட தேசத்தின் நலன்களுடன் இசைவாக இணைக்கிறது.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் நிறுவப் பெற்றதும், அதன் வெற்றிகரமான வளர்ச்சியும் பிரம்மாண்டமான சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தவை. மனிதகுலம் முழுவதன் சமுதாய முன்னேற்றத்தில் ஒரு பெரும மைல் கல்லும் ஆகும். பல தேசிய இன சோஷலிச அரசை உருவாக்குவதிலும், சகல சோவியத் மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் ஒரு வளர்ச்சி பெற்ற சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதிலும், மிகமிக சிக்கலான தேசிய இனப் பிரச்சினையைச் சமாளிப்பதிலும் சோவியத் அனுபவம் உலக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது; அது சமுதாய, தேசிய விடுதலைக்குப் போராடும் அனைவருக்கும் விலை மதிக்கவொண்ணு உதவியை அளிக்கின்றது.

தற்போது முதலாளித்துவ அமைப்பை, சமுதாய, தேசிய ஒடுக்குமுறை, இனப் பாரபட்சம் ஆகியவை நிறைந்துள்ள அமைப்பை உலக சோஷலிச அமைப்பு எதிர்த்து நிற்கிறது. சோஷலிச சர்வதேசியக் கோட்பாடுகளை முரணற்ற வகையில் செயல்படுத்துவதானது, சோதர நாடுகளின் தனிப்பட்ட நலன்களும் பொது நலன்களும் மிக முழுமையான அளவுக்கு நிறைவேற்றப்படுவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. இப்புதிய சமூக அமைப்பு ஒரு புது வகையான சர்வதேசிய உறவுகளைப் புகுத்துகிறது. சோஷலிச நாடுகளின் உறவுகள் மென்மேலும் அதிகமான முறையில் தொடர்ந்து அதிகரித்து வரும் அரசியல், பொருளாதார, கலாசாரத தொடர்புகள், பொருளாதார ஒருங்கிணைப்பு வளர்ச்சி, அனுபவங்களையும் அறிவையும் செயலூக்கமுடன் பரிமாற்றம் செய்து கொள்ளல், அயல்துறைக் கொள்கையில் நெருக்கமான ஒத்துழைப்பு ஆகியவற்றல் மேலும் தனிச் சிறப்படைகின்றன.

இன்று சோஷலிசத்தின் நிலை முன்னெப்போதையும் விட வலுவாயிருக்கின்றது; சமாதான லட்சியத்திற்கு வெற்றி மேல் வெற்றி கிட்டி வருகின்றது. சோஷலிச நாடுகளின் ஒற்றுமை, ஒத்துழைப்பு, பரஸ்பர அனுகூலமான நடவடிக்கைகள் ஆகியவை சோஷலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் பிரச்சினைகளுக்கு மிகமிக வேகமானதும், மிகமிகப் பயனுறுதியுமுள்ள தீர்வு காண்பதற்கும், கம்யூனிச நிர்மாணத்திற்கும் இன்று அவசியம். எதிர்காலத்திற்கும் அவை தேவைப்படும்.

இதர சோஷலிச நாடுகளின் மக்களுடன் சோவியத் மக்கள் நெருக்கமான இணைவை ஏற்படுத்திக் கொள்வதற்கும், அவர்களது நட்புறவை வலுப்படுத்திக் கொள்வதற்கும், அவர்களிடையே

அரசியல், பொருளாதார, சித்தாந்த, கலாசார உறவுகளை சரி வாம்சரீதியில் விரிவுபடுத்திக் கொள்வதற்கும் பாடுபடுவதே தனது முதல் கடமை என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

உலக விவகாரங்களில் சோவியத் யூனியன், சமாதானம் நட்புறவுக் கொள்கையை உறுதியாகவும், முரணின்றியும் கடைப் பிடிக்கும் சக்தியாகவும், சகல மக்களின் சமத்துவம் எனும் லெனினியக் கோட்பாடுகளை உறுதியாக ஆதரிக்கும் சக்தியாகவும், காலனி ஆதிக்கம், நவீன காலனி ஆதிக்கம், இனவெறி, மற்றும் சகல வடிவிலுமான தேசிய ஒடுக்குமுறைகளையும் உறுதியாக எதிர்க்கும் சக்தியாகவும் விளங்குகிறது. இக்கொள்கை, ஏகாதிபத்தியம் பிற்போக்கு சக்திகளின் ஆக்கிரமிப்புப் போர்த் தந்திரத்தை முறியடிப்பதில் பிரதான அம்சமாக எப்போதுமே இருந்து வந்துள்ளது; ஆக்கிரமிப்புப் போருக்கு எதிரான செயலூக்கமுள்ள போராட்டக் கருவியாகவும் இருந்து வந் துள்ளது, சகல மக்களின் பந்தோபஸ்துக்காகவும், சுதந்திரத்திற் காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அது எப்போதும் பாடுபட்டு வந்துள்ளது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் பல காலனி, அரைக் காலனி நாடுகளின் அடிமைப் படுத்தப்பட்ட மக்கள் அரசமைப்பு உரிமையைப் பெற்றுள்ளனர். இப்போராட்டத்தில் அவர்கள் சோவியத் யூனியன், இதர சோஷலிசக் கூட்டமைப்பின் ஆதரவை சார்ந்து நின்றார்கள்.

சமத்துவம், பரஸ்பர மதிப்பு, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை ஆகியவற்றின் அடிப்படையிலும், பொதுவான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் விரிவான ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதன் அடிப்படையிலும் சோவியத் யூனியன் இளம் தேசிய அரசுகளுடன் உறவுகளை நிலை நாட்டிக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியத்திலிருந்து பொரு ளாதார விடுதலை பெறுவதற்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும், பாடுபடும் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் சகல மக்களின் புரட்சிகர இயக்கத்திற்கும் சோவியத் யூனியன் முரணின்றி ஆதரவு அளிக்கிறது. இன்னமும் நிலவிவரும் காலனி ஆதிக்க, இனவெறி ஆட்சிகளை எதிர்த்து ஆயுதந்தாங்கிய போராட்டம் நடத்தி வரும் தேசபக்தர்கள் பால் சோவியத் யூனியன் சர்வதேச ஒருமைப்பாட்டுக் கொள்கையை செயல் படுத்துகிறது.

பதட்ட நிலையை தளர்ச்சியடையச் செய்வது, சமாதானத் தைப் பாதுகாப்பது, சர்வதேசப் பந்தோபஸ்து ஆகியவற்றிற்கு உதவி புரியும் வகையில் பல்வேறு சமுதாய அமைப்புக்களை

கொண்ட அரசுகளுடன் சமாதான சகவாழ்வு எனும் லெனினியக் கோட்பாட்டை சோவியத் யூனியன் முரணின்றிக் கடைப் பிடிக்கின்றது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரசினுல் முன்வைக்கப்பட்ட சமாதானம், சர்வதேச ஒத்துழைப்புக்கும், சகல மக்களின் சுதந்திரம் சுயாதீனத்திற்கும் ஆன ஆக்கபூர்வ மான, எதார்த்த ரீதியான போராட்ட வேலைத் திட்டமானது சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த சகல சோஷலிச குடியரசுகளின், சகல சோவியத் மக்களின் ஜீவாதாரமான தேசிய நலன்களுக்கும், ஏற்புடையதாயிருக் கின்றது; இந்த வேலைத்திட்டத்திற்கு உலகெங்கணும் விரிவான ஆதரவு கிடைத்துள்ளது. இன்று சோவியத் யூனியன் உலக முழுவதினுலும் கம்யூனிச நிர்மாண நாடாகவும், சகல மக்களின் நட்புறவின் கோட்டையாகவும், சர்வதேசப் புரட்சிகர விடுதலை இயக்கத்தின் கொத்தளமாகவும் கருதப்படுகிறது.

நமது சமுதாயத்தின் வேகமான முன்னேற்றம் லெனினியக் கருத்துக்களின், படைப்பாற்றலையும், ஒன்று திரட்டும் சக்தியையும் வெளிப்படுத்துகிறது. பெரும்பாலான மக்களுக்கு அவற்றின் கவர்ச்சி சக்தி அதிகரித்து வருகின்றது. இக்கருத்துகள் அன்றாட வாழ்க்கையின் செயல்பாடுகளின் அடிப்படையாக மாறுகின்றன. இவை சோவியத் மக்களுக்கு உத்வேகமூட்டி அவர்களுக்கு புதிய தெம்பை அளிக்கின்றன.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24ஆவது காங்கிரசினுல் வகுக்கப்பட்ட பொருளாதார, சமூக, அரசியல், கலாசார வளர்ச்சிக்கான மகத்தான வேலைத்திட்டமும், கம்யூனிசத்தின் பொருளாயத, தொழில் நுட்ப அடிப்படையின் உருவாக்கமும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தற்போது வகுக்கப்பட்டு வருகின்ற சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் 1990 ஆண்டு வரை யிலான காலத்தின் பொருளாதார வளர்ச்சித் திட்டம் உற்பத்தி யின் பெருக்கத்திற்கும், வாழ்க்கைத் தரத்தின் மென்மேல் உயர்வுக்கும் புதிய வாய்ப்புக்களைத் திறந்து வைக்கும்.

உழைப்பாளி மக்களின் பொருளாயத, கலாசார மட்டத்தின் உயர்வும், அவர்களின் தனித்திறமைகள் ஆற்றல்களின் சர்வாம்ச வளர்ச்சிக்கு அவசியமான சகல நிலைமைகளின் உருவாக்கமும்தான் கட்சிக் கொள்கைகளின் அடிப்படைக் குறிக்கோள் ஆகும்.

''இந்த அரை-நூற்றுண்டு காலத்தில் கடந்து வந்துள்ள பாதை நமது அருமையான மக்கள் மீது நமக்கு நம்பிக்கையை உண்டு பண்ணுகிறது. கடந்த காலத்தில் நம்மை எதிர்நோக்கிய இடையூறுகள் சோஷலிசத்திற்கான நமது வெற்றிகரமான

முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை என்றால், இப்போது சோவியத் யூனியன் இத்தகைய சிகரங்களை எட்டிப்பிடித்திருப்ப தால், இனி யாரும் எதுவும் செய்து நமது முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது. லெனினுடைய கட்சியினால் வகுத்து முன் வைக்கப்பட்ட சகல நோக்கங்களும் நிச்சயமாக நிறைவேறும்'' என்று லியோனித் பிரெஷ்னேவ் ''சோவியத் சோஷசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் ஐம்பதாவது ஆண்டுவிழா'' பற்றிய தனது அறிக்கையில் வலியுறுத்துகிறார்.

# நாடும் அதன் மக்களும்

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் நிலப்பரப்பு 2.24 கோடி சதுர கிலோ மீட்டர் ஆகும்; இதில் 100க்கு மேற்பட்ட தேசங்கள், தேசிய இனங்களைச் சேர்ந்த 25 கோடி மக்கள் வாழ்கின்றனர்.

**இட அமைவும் எல்லைகளும்:** இப்பூவுலகின் மிகப் பெரிய நாடாகிய சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் (யு எஸ்.எஸ்.ஆர்.) 2·24 கோடி சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையது. இது நமது கோளத்தின் நிலப்பரப்பில் ஆறில் ஒரு பகுதி ஆகும். இது ஐரோப்பாவில் பாதிக்கு மேற்பட்ட பகுதியிலும், ஆசியாவில் மூன்றில் ஒரு பகுதியிலும் வியாபித்துள்ளது.

வடக்கிலிருந்து தெற்குவரை, ஃபிரான்ஸ் ஜோசப் நிலத் தீவுக் கூட்டத்தில் ருடால்ப் தீவின் முனையிலிருந்து (81°,50' வ); -செல்யூஷ்கின் முனை தான் (77°45வ) கண்டத்தின் வடகோடி முனை-தெற்கில் துர்க்மேனியாவில் குஷ்கா நகரம் (35°08,வ) வரை சோவியத் யூனியன் ஏறத்தாழ ஐயாயிரம் கிலோ மீட்டர் பரவிப் படர்ந்துள்ளது. மேற்கிலிருந்து கிழக்கு வரை காலினின்கிராட் நகரத்திற்கு வெகுசமீபத்திலிருந்து (19°38'கி) பேரிங் ஜலசந்தியில் ரத்மனோவ் தீவு (169°02' மே), கண்டத்தின் கிழக்குக் கோடியில் தெஷ்னேவ் முனை (169°40 மே)வரை அது ஏறத்தாழ பத்தாயிரம் கிலோ மீட்டர் தூரம் விரிந்து கிடக்கின்றது. உலகின் இருபத்தி நான்கு வகை கால மண்டலங்களில் பதினொன்று சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் ஊடே குறுக்கும் நெடுக்கும் செல்கின்றன. தூரக் கிழக்கில் புதிய நாள் உதயம் ஆகும் போது, மேற்கில் இன்னும் முந்திய நாளின் மாலையாகவே இருக்கின்றது.

வடக்கில் ஆர்க்டிக் மாகடலும் அதன் கடல்களான பேரன்ட்ஸ், சுக்சீ, கிழக்கு சைபீரியன், காரா, லாப்தெவ், வெள்ளைக் கடல்களும் தெற்கில் கருங்கடல், அஸோவ், காஸ்பியன், கடல்களும், கிழக்கில் பேரிங் கடலும், ஜப்பானியக் கடலும், ஒகோத்ஸ்க் கடலும், மேற்கில் பால்டிக் கடலும் நாட்டின் கரைகள் மீது அலை மோதுகின்றன.

நார்வே, பின்லாந்து, போலந்து, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி, ருமேனியா, துருக்கி, இரான், ஆப்கானிஸ்தானம், சீனு, மங்கோலியா, கொரியா மக்கள் ஜனநாயகக் குடியரசு ஆகிய 12 நாடுகளை சோவியத் யூனியன் எல்லையாகக் கொண்டுள்ளது. 60,000க்கு மேற்பட்ட கிலோமீட்டர் எல்லைக் கோட்டில் மூன்றில் இரண்டு பங்கு கடற்கரையாகும்.

**நில அமைப்பு:** தெற்கிலும், கிழக்கிலும் மேல் நோக்கி அண்ணுந்தும், வடக்கிலும் மேற்கிலும் கீழ் நோக்கி சரிந்தும் காணப்படும் ஒரு பிரம்மாண்டமான வட்டரங்கம் என்று சோவியத் யூனியனை வருணிக்க முடியும். அதன் பரந்த சமவெளிகள்—கிழக்கு ஐரோப்பிய, மேற்கு சைபீரிய, துரான் மத்திய சைபீரிய மேட்டு நிலமும்—தெற்கிலும் கிழக்கிலும் காகேஷியன், பாமிர், தியென்ஷான், அல்தாய், சாயன், தூரகிழக்கு மலைத்தொடர்களின் உச்சிப் பகுதிகளை எட்டுகின்றன. காஸ்பியன் கடலின் கிழக்குக் கரையில் காரகியே பள்ளப் பகுதியில் (கடல் மட்டத்தைவிட 132 மீட்டர் தாழ்ந்து உள்ளது) தான் நிலம் மிகத் தாழ்வாக உள்ளது. வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் யூரல் மலைகள் தான் (உயர்ந்த சிகரம் 1894 மீட்டர்) சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் ஐரோப்பிய, ஆசியப் பகுதிகளைப் பிரிக்கின்றன. காம்சட்கா தீபகற்பத்தில் இன்னும் அவிந்து விடாத சுமார் 20 எரிமலைகள் உள்ளன.

**மிக உயர்ந்த மலைகள்**
*(மீட்டர்களில்)*

| | |
|---|---|
| கம்யூனிச மலை | 7,495 |
| பொபேடா குன்று | 7,439 |
| லெனின் குன்று | 7 134 |
| கான் - டெங்கிரி | 6,995 |
| எல்பிருஸ் | 5,633 |
| துக் தாவ் | 5 198 |
| காஸ்பெக் | 5,047 |

**தட்ப வெப்ப நிலை:** சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் போன்ற இத்தகைய ஒரு பெரும் நாட்டில் தட்ப வெப்ப

நிலை வெகுவாக மாறுபட்டிருக்கிறது; தூர வடக்கில் துருவ உறை குளிர் தட்ப நிலை; தெற்கில் ஈரத்தாழ வெப்ப மண்டல தட்ப வெப்ப நிலை. கிரைமியாவின் தெற்குக் கடற்கரையிலும் மத்திய ஆசியாவின் சில பள்ளத்தாக்குகளிலும் வறட்சி. காகேஷிய கருங்கடல் கரையிலும், இரானை எல்லையாக உடைய காஸ்பியன் கடற்கரையில் தென்மேற்குப் பகுதியிலும் காற்றில் ஈரப்பசையுள்ள தட்ப வெப்ப நிலை, எனினும் நாட்டின் பெரும் பகுதியில் மிதமான ஐரோப்பிய தட்ப வெப்ப நிலை.

மேற்கில் ஜனவரி மாதத்தில் சராசரி வெப்பநிலை பூஜ்யத்தை விட சற்றுக்குறைவு ; இது நாட்டின் ஐரோப்பிய பகுதியின் மத்திய பிரதேசங்களில்-10° செ. ஆகவும், யூரல் பிரதேசத்தில் -16° செ. ஆகவும், மேற்கு சைபீரியாவில்—25°செ. ஆகவும், லெனா ஆற்று படுகையில்—40°செ. ஆகவும் வீழ்ச்சியடைகிறது. நிலவுலக வடக்கு அரைப்பகுதியில் துருவக் குளிர் ஓயிம்யாகோன் (யாகுதியா) கிராமத்தில் உள்ளது. இங்கு ஜனவரியின் சராசரி வெப்பநிலை பூஜ்யத்திற்கும் கீழ் 50° ; இது-72° வரை கீழே செல்கிறது. பசிபிக்கை நெருங்க நெருங்க வெதுவெதுப்பாகி வருகிறது : காம்சட்காவின் கிழக்குக் கரைகளிலும், சகாலினிலும், தெற்கு கடல் சார்ந்த பிரதேசங்களிலும் சராசரி ஜனவரி வெப்பம்—10° செ. பக்கமாக உள்ளது.

ஜூலையில் சராசரி வெப்பம் தூரவடக்கில்+4° லிருந்து+10° செ. வரையிலும்+கிழக்கு சைபீரியாவில்+10° லிருந்து+15° செ வரையிலும், மேற்கு சைபீரியாவிலும் நாட்டின் ஐரோப்பியப் பகுதியிலும்+15° லிருந்து+20° வரையிலும் உள்ளது. மாகடலி லிருந்து வெகுதூரத்தில் உள்ள மத்திய ஆசியாவில் வறுத்தெடுக் கும், வறட்சிமிக்க வெப்பம் உள்ளது. சமவெளிகளில் ஜூலையில் சராசரி வெப்பம்+30° செ. சில சமயங்களில் டெர்மெஜ் நகரத் தின் பக்கத்தில்+50° செ. வரை உயர்கிறது.

ஐரோப்பா முழுவதையும் எடுத்துக் கொண்டால் காகேஷிய கருங்கடற் கரையில் பாடுமியிலும் அதைச் சுற்றிலும் தான் மழை மிக அதிகமாக (ஆண்டுக்கு 2400 மி. மீ வரை) உள்ளது; மத்திய ஆசியாவின் நண்பகுதியில் மிகக் குறைவு (ஆண்டுக்கு 100 மி. மீ.)

**ஆறுகளும் ஏரிகளும்:** சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேற்பட்ட 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கு அதிகமான ஆறுகள் உள்ளன. அவற்றின் மொத்த நீளம் 30 லட்சம் கிலோ மீட்டர்.

பிரதான ஆறுகள்

*(கிலோ மீட்டர் நீளத்தில்)*

| | |
|---|---|
| ஓப் | 5,410 |
| ஆமுர் | 4,416 |
| லெஞ | 4,400 |
| யெனிசி | 4,092 |
| வோல்கா | 3,531 |
| சிர்-தார்யா | 2,991 |
| அமு-தார்யா | 2,600 |
| கொலிமா | 2,518 |
| யூரல் | 2.428 |
| நீப்பர் | 2,201 |

கப்பல் போக்குவரத்துக்கு வசதியுள்ள 5,20,000 கிலோ மீட்டர் நீர் மார்க்கங்கள் உள்ளன. இவற்றில் 30 சதவிகிதத்தில் போக்கு வரத்து மிக அதிகமாக உள்ளது. நாட்டின் ஐரோப்பியப் பகுதி ஆறுகள் பரவலான கால்வாய்களால் இணைக்கப்பட்டுள்ளன; இது ஆழ் நீர் கப்பல் போக்குவரத்து அமைப்பாக அமைந்து வெண்கடல், பால்டிக் கடல், காஸ்பியன் கடல், கருங்கடல், அசோவ் கடல்களை இணைக்கிறது.

சோவியத் யூனியனில் பிரம்மாண்டமான நீர் மின்சக்தி செல்வாதாரங்கள் உள்ளன ; இது உலகின் மொத்த செல்வாதாரத்தில் பதினொரு சதவிகிதம். இதில் 60 சதவிகித. நீர்மின் சக்திக்கு மேற்பட்ட செல்வாதாரங்கள் சைபீரியாவிலும், தூரக் கிழக்கிலும் உள்ளன.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் ஏறத்தாழ 2 லட்சத்து 70 ஆயிரம் ஏரிகள் உள்ளன; இவற்றில் பெரும்பகுதி நாட்டின் ஐரோப்பியப் பகுதியின் வடமேற்கு, தென் கிழக்குப் பிராந்தியங்களிலும், மேற்கு சைபீரியாவிலும், மற்றும் கிழக்கு சைபீரியாவின் வடபகுதிகளிலும் உள்ளன. இவ்வெண்ணிக்கையில் அநேகமாக 30 ஆயிரம் ஏரிகள் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவைவிட அதிகம்.

மிகப்பெரும் ஏரிகள்

*(சதுர கிலோ மீட்டர் பரப்பளவு)*

| | |
|---|---|
| காஸ்பியன் கடல் | 3,71,000 |
| ஆரல் கடல் | 66,500 |
| பைகால் | 31,500 |
| லதோகா | 18 400 |
| பால்காஷ் | 18 200 |
| ஒனெகா | 9,610 |
| இசுக்-குல் | 6,280 |

இயற்கையின் அதிசயங்களில் ஒன்ருகிய பைகால் ஏரி உலகிலேயே மிக ஆழமான (1620 மீட்டர்) ஒன்று. உலகின் ஈடுஇணையற்ற பரிசுத்தமான வெளிப்புற நல்ல தண்ணீர் ஆதாரத்தில் 20 சதவிகிதம் இந்த ஏரியில் இருக்கின்றது. இங்கு காணப்படும் 1800 வகை தாவரங்கள், விலங்குகளில் பெரும் பான்மை ஒப்புயர்வற்றவை. பைகால் படுகையில் அளப்பரிய கனிச்செல்வங்கள் உள்ளன. அங்குள்ள எல்லையில்லா மரங்கள் தொகுதி மாபெரும் மதிப்புடையவை.

நீர்மின் நிர்மாணம் நாட்டில் விரிவான முறையில் நடை பெற்றிருப்பது பல்லாயிரக்கணக்கான, மனிதனுல் உண்டுபண்ணப் பட்ட ''கடல்கள்'' தோன்றுவதற்கு வழி செய்துள்ளன; வால்கா நதி தீரத்தின் நடுப்பகுதியில் உள்ள குய்பிஷேவ் நீர்த்தேக்க மும் (6,500 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது), அங்காரா ஆற்றின் பிராட்ஸ்க் நீர்த்தேக்கமும், யெனிசி ஆற்றின் கிராஸ்ன யார்ஸ்க் நீர்த் தேக்கமும், வோல்கா ஆற்றின் ருபின்ஸ்க் நீர்த் தேக்கமும் மிகப் பெரியவை.

ஆற்று நீர் வழிப் போக்குவரத்துக் கால்வாய்கள் செறிவாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன; இக்கால்வாய்கள் பாசனத் திற்காகவும் கட்டப்பட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ளவை மனிதனுல் உண்டுபண்ணப்பட்ட பெரும் நீர்வழிக் கால்வாய்கள்: 227 கிலோ மீட்டர் வெண்கடல்-பால்டிக் கால்வாய், இது வெண்கடலை ஒனெகா ஏரியுடன் இணைத்து, அதன் மூலம் லெனின் கிராடுக்கும் வெண்கடலுக்கும் இடையே உள்ள தூரத்தை 4,000 கிலோ மீட்டர் குறைத்திருக்கிறது; மஸ்க்வா ஆற்றை வோல்காவுடன் இணைத்து சோவியத் தலைநகரத்தின் தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் 128 கிலோ மீட்டர் மாஸ்கோ கால்வாய்; கருங்கடலிலிருந்து காஸ்பியன் கடலுக்குச் செல்லும் மிகச் சிறிய நீர்வழியான 101 கிலோ மீட்டர் வால்கா-டான் கால்வாய்; ஐந்து கடல்களை ஒரே ஆழ்நீர் அமைப்பில் இணைத்து, பால்டிக் கடலிலிருந்து கருங்கடலுக்குச் செல்லும் நீர்ப்பாதையை ஐரோப்பாவைச் சுற்றிச் செல்லும் கடல் பாதையை பாதியாகக் குறைத்துள்ள 361 கிலோ மீட்டர் வால்கா-பால்டிக் கால்வாய்; இன்னும் நிர்மாணத்தில் உள்ள வட கிரைமிய கால்வாய் நீப்பர் ஆற்றின் நீரை ஏற்கெனவே வறண்ட கிரைமிய வன்பாலைக்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறது. முற்றுப்பெற்றவுடன் இதன் நீளம் 400 கிலோ மீட்டராக இருக்கும்.

போக்குவரத்துக்கு வசதியான 850 கிலோ மீட்டர் காரகும் கால்வாய் அமு-தார்யாவின் நீரை துர்க்மென் தலைநகரான அஷ்காபாத்திற்கு கொண்டு வருகிறது. இது கட்டி முடிக்கப் பட்டவுடன் இக்கால்வாயின் நீளம் 1,300 கிலோ மீட்டராக

இருக்கும் (ஒரு கிளை பிரிந்து தெற்கு நோக்கி துர்க்மென் வெப்ப மண்டலத்திற்கும் மற்றொரு கிளை காஸ்பியன் கரையிலுள்ள கிராஸ்னோவாட்ஸ்க் நகருக்கும் செல்லும்). இதுதான் உலகின் மிகப்பெரிய போக்குவரத்துக்கு வசதியான தானே ஓடும் கால்வாயாக இருக்கும்; இது கோடிக்கணக்கான ஹெக்டேர் கன்னி நிலத்திற்கு பாசன வசதி அளித்து வேகமாக வளர்ந்துவரும் புதிய எண்ணெய், எரிவாயு வயல்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யும். இது மத்திய ஆசியாவிலிருந்து காஸ்பியனுக்குச் செல்லும் நீர்ப்பாதையாகவும் விளங்கும்; கருங்கடல், பால்டிக் கடல், வெண்கடல் ஆகியவற்றின் தற்போதைய நீர்ப்பாதை களுடன் அதை இணைக்கும்.

**தாவரங்கள், விலங்குகள்.** உலகின் காடுகளில் ஐந்தில் ஒரு பங்கு சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் இருக்கிறது. இதன் பரப்பளவு 75 லட்சம் சதுர கிலோ மீட்டரைவிட அதிகம். சோவியத் யூனியன் பிரதேசத்தில் மூன்றில் ஒரு பங்கு காடாக உள்ளது. மொத்த மரச் செல்வாதாரம் 8000 கோடி கன மீட்டர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது; ஆண்டுதோறும் சுமார் 80 கோடி கனமீட்டர் வீதம் அதிகரித்து வருகின்றது; இது மட்டுமே உலகின் சகல நாடுகளின் மரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் காட்டுப் பிரதேசம் மேற்கில் பால்டிக்கிலிருந்து கிழக்கில் பசிபிக் வரை நீண்டு கிடக்கிறது. வடக்கில் இது துந்தர காடுகளாக மாறுகிறது; தெற்கில் ஓரளவு காடாக உள்ள ஸ்டெப்பி புல்வெளியாக மாறுகின்றது.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் சுமார் 17 ஆயிரம் தாவர வகைகள் உள்ளன; அவற்றில் நாம் அறிந்த உயர் தாவர இனங்களில் ஏறத்தாழ பாதி வகைகள் இங்கு இருக்கின்றன.

குறிப்பாக பல்வேறு வகையைச் சேர்ந்த விலங்குகள் இங்குள்ளன; வடக்கில் பல வகை கடல் நாய்களும், துருவக் கரடிகளும், கடற் குதிரைகளும், ஓநாய்களும், துருவ நரிகளும், கீரியினங்களும், வெள்ளை முயலும், கலைமான்களும் உள்ளன. உலகில் இன்னமும் உள்ள மென் மயிர் தோலுடைய மூன்று வகை கடல் நாய்களில் இரண்டு பசிபிக்கிலுள்ள சோவியத் தீவுகளில் இருக்கின்றன.

காட்டுப் பிரதேசங்களில் பொதுவாகக் காணப்படும் விலங்கு கள் கபில நிற, கறுப்பு நிறக் கரடிகள், சிவிங்கி, குள்ளநரி,

பெருந்தீனி தசை உண்ணி, மரநாய், அணில், சிப்முங்க அணில், கோலின்ஸ்கி, காட்டுப்பன்றி, மார்டன்கீரி, சிவப்பு மற்றும் சிறு மான்கள், உசூரி தைகா பிரதேசத்திலும், தூர கிழககிலும் வேங்கைப் புலிகள், சிறுத்தைப் புலி ஆகியவை. தெற்கு ஸ்டெப்பி வெளிகளிலும், பாலைவனங்களிலும முயல்கள், கொக்கு இனப் பறவை, ஆட்டியல் மான், ஜெய்ரான் மானியல் ஆட்டு வகை, ஸ்டெப்பி அர்க்கார், மான், வேங்கைப் புலி, சிறுத்தைப்புலி, கழுதைப்புலி ஆகியவை. காக்கசஸ் பகுதியில் செய்மான், மலையாடு, சிறுமான், வரைமான், காட்டு ஆடு, சிவப்பு ஓநாய், கீரி, உள்வாங்கி கொம்பு மலையாடுகளும் மத்திய ஆசியாவின் மலைப் பகுதிகளில் அர்க்கார், மலை ஆடு, சிவப்பு ஓநாய், கீரி, வளைந்த கொம்புடைய மலை ஆடு, பனிச்சிறுத்தை ஆகியவையும் காணப் படுகின்றன. வர்த்தக ரீதியில் முக்கியமானவை மென்மயிர் தோலுடைய விலங்கினங்கள் (அணில், நீர்வாழ் கொறிவிலங்கு, சாபிளகீரி, துருவநரி, மிங்க கீரி வகை) ஆகும். மென்மயிர்தோல் உற்பத்தியின் அளவிலும், வகைகளிலும், மதிப்பிலும் சோவியத் யூனியன் வேறு எந்த நாட்டையும்விட பின் தங்கியிருக்கவில்லை. லெனின் கிராடில் ஆண்டுதோறும் இருமுறை நடைபெறும் சர்வதேச மென்மயிர் தோல் ஏலத்திற்கு உலகெங்கணுமிருந்து வியாபாரிகள் வருகின்றனர்.

சோவியத் யூனியனின் ஏரிகள், ஆறுகள், கடல்களில் சுமார் 1,500 வகை மீன்கள் வாழ்கின்றன. இவற்றில் 250 க்கு மேற் பட்ட வகையைச் சேர்ந்த மீன்கள் மீன் பிடிக்கும் தொழிலுக்கு முக்கியமானவை.

மீன் பிடிப்பதில் சோவியத் யூனியன் உலகில் மூன்றுவது இடம் வகிக்கின்றது.

**இயற்கைப் பாதுகாப்புத் தலங்கள்.** சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் ஏறக்குறைய 80 இயற் கைப் பாதுகாப்புத் தலங்கள் இருக்கின்றன; இவை பல்வேறு பூகோளப் பிராந்தியங்களில் அமைந்துள்ளன. இவற்றில் பெரும்பாலான தாவர, விலங்கின வகைகள் உள்ளன. இப்பாது காப்புதலங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ளவை மிக மிக முக்கிய மானவை· வடக்கு யூரல் பகுதியில் பெச்சோரா - இலிச் (7,14,300 ஹெக்டேர்), பைலோ ரஷ்யாவில் பைலோ வெஷ்காயா புஷ்சா (74,200 ஹெக்டேர்), வால்கா கழிமுகத்தில் அஷ்டிரகான் பாது காப்புத் தலம் (42,500 ஹெக்டேர்), பைகால் ஏரியின் கிழக்குக் கரையில் பார்குசின் மலைத்தொடர் பகுதியில் பார்குசின் பாது காப்புத்தலம் (2,48,200 ஹெக்டேர்), தெற்கு யூரல் மலைகளின் கிழக்கு சரிவில் இல்மென் பாதுகாப்புத்தலம், (32,000

ஹெக்டேர்), வாரனேஷ் பாதுகாப்புத்தலம் (30,800 ஹெக் டேர்).

**கனிச் செல்வம்:** கனிச் செல்வத்தில் சோவியத் யூனியனுக்கு இணையே கிடையாது. நிலக்கரி, இரும்புத்தாது, மாங்கனீஸ், இயற்கை எரிவாயு, ஈயம், நிக்கல், கோபால்ட், டங்ஸ்டன், மாலிப் டெனம், அஞ்சனக்கல். கந்தகம், அபடைட், ஆஸ்பெஸ்டாஸ், இதர பல கனிப் பொருள்களில் உலகின் மிகப் பெருமளவு சேமிப்புகள் இங்கு உள்ளன.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் கண்டு பிடிக்கப்பட்ட இரும்புத்தாது படிவங்கள் உலகின் இச்செல்வத்தில் 40 சதவிகிதத்தை விடவும் அதிகமாகும். சுமார் மூன்றில் இரு பங்கு இரும்புத்தாது தலங்கள் நாட்டின் ஐரோப்பியப் பகுதியில் இருக்கின்றன. இங்குதான் கிரிவாய் ராக் தாது வயல்களும், குர்ஸ்க் காந்த சத்துள்ள அனோமலியும் உள்ளன. கிழக்குப் பிரதேசங்களில் மிகச் செறிவான தலங்கள் யூரல் பிரதேசத்திலும், கசாக்ஸ்தான், கிழக்கு சைபீரியாவிலும் உள்ளன.

தங்கம், யுரேனியம் உட்பட சகல தெரிந்த உலோக வளங் களும் சோவியத் யூனியனில் உள்ளன.

சோவியத் யூனியனின் எண்ணெய் வளம் உலகின் இச்செல் வத்தில் கணிசமான பகுதியாகும். கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை எரிவாயுச் செல்வம் 16 நூறுயிரம் கோடி கன மீட்டர் ஆகும்; இது எந்த நாட்டினதையும் விட அதிகம். மிக மிக அதிகமான சேமிப் புகள் ஒன்பது எண்ணெய் வள மாநிலங்களான மேற்கு சைபீரியா, வோல்கா - யூரல், கிரைமியா - காகேஷியா, யூரல் - எம்பா, மேற்கு துர்க்மென், மத்திய ஆசியா, நீப்பர் - தானத்ஸ், கார்ப் பேதியன், தூர கிழக்கு ஆகியவற்றில் இருக்கின்றன.

உலோகம் - அல்லாத விரிவான பலவகை கனிகளும் இங்கு உள்ளன. உலகின் பாஸ்பரைட் செல்வத்தில் பாதிக்கு மேற்பட்ட பகுதியும், பொட்டாசியம் உப்புக்களில் மூன்றில் இரண்டு பங்கும், இந்நாட்டில் உள்ளன. சோடியம் குளோரைட் (உணவு உப்பு) செல்வாதாரத்திற்கு உண்மையில் அளவே இல்லை. மிரபிலைட், சலவைக்கல், பலவண்ண மணி உருப்படிகம், கருங்கல், வெண்ணீலக் கல், சுண்ணாம்புக்கல், எரிமலைப்பாறை, காரீயகம், கந்தகம் ஆகியவை பற்றியும் இதையே கூறலாம். கால காலமாக இந்நாடு மைகாவை உலகச் சந்தைக்கு சப்ளை செய்து வந்துள்ளது; மரகதம், மாணிக்கம் ஆகியவற்றுக்கும், பச்சை நிறக்கல், பழுப்புக் கல், மற்றும் பிற ஓரளவு விலைமதிப்புள்ள மணிக்கற்களுக்கும் இது புகழ் பெற்றதாகும். வைரங்களும் உள்ளன.

**இயற்கைப் பாதுகாப்பும் இயற்கைச் செல்வங்களை அறிவார்ந்த முறையில பயன்படுத்துவதும :** விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் இன்று வேகமாக வளர்ந்து வருவதை ஒட்டி இயற்கைப் பாதுகாப்பு, இயற்கைச் செல்வத்தை அறிவார்ந்த முறையில் பயன்படுத்தும் பிரச்சினை சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் ஆழமாகக் கவனிக்கப்பட்டு வருகின்றது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரஸ் இயற்கையைப் பாதுகாப்பது குறித்துப் புதிய முக்கியமான நடவடிக்கைகளை வகுத்துள்ளது; இவை 1971 - 75க்கு இடைப்பட்ட ஐந்தாண்டு கால கட்டத்தின் அரசு பொருளாதார வளர்ச்சித் திட்டத்தில் பிரதிபலித்துள்ளன. இது தவிர, அசுத்த மடைவதிலிருந்து காஸ்பியன், வோல்கா, யூரல் ஆற்றுப் படுகைகளைப் பாதுகாக்கவும், பைகால் ஏரியின் செல்வங்களை மேலும் அறிவார்ந்த முறையில் பாதுகாக்கவும் ஆன சில நடவடிக்கைகளையும் மற்றும் பிற பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியும், சோவியத் யூனியன் அமைச்சரவையும் அண்மையில் ஒப்புக்கொண்டன.

1972 செப்டம்பர் 20இல் எடுத்த ஒரு முடிவில் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் சபை, தேசியச் செல்வத்தை மேலும் அறிவார்ந்த முறையில் பயன்படுத்துவதை உத்தரவாதம் செய்வதற்கு மேலும் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை அங்கீகரித்தது. நிலம், அதன் செல்வாதாரங்களையும், காடுகள், நீர், தாவரங்கள் உயிரினங்கள் ஆகியவற்றை பாதுகாப்பது, காற்று அசுத்தமடைவதைத் தடுப்பது குறித்த சட்டத்தைக் கறாராகக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை இம்முடிவு கோடிட்டுக் காட்டுகிறது. வேலை, ஓய்வுக்குச் சாதகமான, ஆரோக்கியமான நிலைமைகளை உண்டுபண்ணுவதற்காக விஞ்ஞான, தொழில் நுட்பவியல் முன்னேற்றத்தை இயற்கை, அதன் செல்வாதாரங்கள் பாலான ஒரு பொறுப்பு மிக்க, கவனமான போக்குடன் இணைக்க வேண்டும்.

ஒன்றியக் குடியரசுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மத்தியக் கமிட்டிகளும், அமைச்சரவைகளும், அமைச்சகங்களும், துறைகளும் இயற்கைப் பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றியும், நில அரிப்பு, பூமிக்கு மேலும் அடியிலும் உள்ள நீர்கள் அசுத்தமடைவது ஆகியவற்றைத் தடுப்பது, தாவரம் உயிரினங்களைப் பாதுகாப்பது, காற்று மண்டலம் அசுத்த மடைவதைத் தடுப்பது ஆகிய

பணிகள் மீது பயனுறுதியுள்ள கட்டுப்பாட்டை நிலைநாட்டுவது குறித்த பிரச்சினைகள் பற்றியும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியும், சோவியத் யூனியன் அமைச்சரவையும் 1973 ஜனவரி 10ஆம் நாள் விடுத்த ஓர் அறிக்கையில் கோருகின்றன. வெளியே செல்லும் அசுத்த வாயுக்களின் நச்சு விளைவைக் குறைக்கவும், தொழிற்சாலை கழிவுப் பொருட்கள் சுற்றுப்புறத்தை அசுத்தமடையச் செய்வதைத் தடுக்கவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது. பசுமை கொழிக்கும் பகுதிகளை விஸ்தரிப்பது, இயற்கைப் பாதுகாப்பு குறித்த அறிவைப் பரப்புவது, நாட்டின் செலவத்தை அறிவார்ந்த முறையில் பயன்படுத்துவது ஆகியவை பற்றி நடவடிக்கைகளும் அதில் சுட்டப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கைகள் ஏற்கெனவே உருப்படியான பலன்களை அளித்துள்ளன. தொழிற்துறை மையங்களில் நீர், காற்று மண்டலத்தின் அசுத்த மட்டம் குறைக்கப்பட்டுள்ளது. மீன், செல்வாதாரங்களையும், காடுகளையும் பாதுகாத்து மீண்டும் வளரச் செய்யவும், மரம் மற்றும் இதர இயற்கைச் செல்வாதாரங்களை மேலும் அறிவார்ந்த முறையில் பயன்படுத்தவும், தொழிற்சாலைகளின் கழிவுப் பொருட்களை சுத்தப்படுத்தவும், நிலத்தை அபிவிருத்தி செய்யவும், நாட்டின் பற்பல காட்டு மிருகங்கள் பறவைகளைப் பாதுகாக்கவும் ஊக்கமிகு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இயற்கைப் பாதுகாப்புத் துறையில் அன்னிய நாடுகளுடனும் சர்வ தேச அமைப்புகளுடனும் தனது ஒத்துழைப்பை விஸ்தரித்துக் கொள்வதற்கு சோவியத் யூனியன் செயலூக்கமுள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**மக்கட் தொகை:** 25 கோடி. சீனா, இந்தியாவுக்கு அடுத்தபடி சோவியத் யூனியன் மக்கட் தொகையில் உலகில் மூன்றாவது இடம் வகிக்கின்றது. 1917ல் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி ஏற்பட்ட சமயத்தில், இப்போது சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியமாக உள்ள பிரதேசத்தில் ஏறத்தாழ 16·3 கோடி மக்கள் வாழ்ந்து வந்தனர். இளம் சோவியத் குடியரசின் ஆரம்ப ஆண்டுகள் வெகு கடினமானவையாய் இருந்தன. முதலாளிகள், நிலச்சுவான்தார்களால் துவக்கப்பட்ட உள்நாட்டுப் போரும், 14 அந்நிய நாடுகளின் தலையீடும், பொருளாதார முற்றுகையும், அதைத் தொடர்ந்த பேரிடர்களும் - கொள்ளை நோய்கள், பல பகுதிகளில் பஞ்சம் - இவையெல்லாம் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்தன. உள்நாட்டுப்போரும், தலையீடும் முடிவடைந்த 1922க்குப் பிறகு சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் மக்கட் தொகை தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது.

1941ல் நாஜி ஜெர்மனி சோவியத் யூனியன் மீது படையெடுத்த போது அதன் மக்கட் தொகை 19.9 கோடியாக இருந்தது. போரின் போது 2 கோடி சோவியத் குடிமக்கள் உயிரிழந்தனர். போருக்கு முற்பட்ட மக்கட் தொகையை எய்துவதற்கு 1955ஆம் ஆண்டு வரை பிடித்தது.

1973 நண்பகுதியில் சோவியத் யூனியனின் மக்கட் தொகை 25 கோடியாக அதிகரித்தது. இவ்வாறு, போர்கள் நடைபெற்ற போதிலும், அதன் விளைவாக எண்ணற்ற இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் அரை நூற்றாண்டுக்கு சற்றே அதிக காலத்திற்குள் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் மக்கட் தொகை ஐம்பது சதவிகிதம் அதிகரித்தது.

இயற்கையான வளர்ச்சி: மொத்தத்தில் மக்கட் தொகையின் இயற்கையான அபிவிருத்தி போதுமான உயர்மட்டத்தில் (மக்கட் தொகையில் ஆயிரம் பேருக்கு 9.3 பேர் வீதம்) இருந்தது. சோவியத் சமுதாயமும், அரசும் வளர்ச்சி விகிதத்தை முனைப்பாக்குவதில் அக்கறை கொண்டுள்ளன.

வாழ்க்கைத் தரங்களில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி, இலவசமான பொது சுகாதார சேவைகள், அனைத்து மக்களையும் தனக்குள் அணைத்துக் கொண்டுள்ள அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு அமைப்பு இவையெல்லாம் மரண விகிதத்தை நாலில் ஒரு பங்காகவும் குழந்தை மரணத்தை புரட்சிக்கு முற்பட்ட காலத்தில் இருந்ததில் பதினொன்றில் ஒரு பங்காகவும் குறைத்தன. இக்காலகட்டத்திற்குள் சாரசரி ஆயுள் இருமடங்காக அதிகரித்து இப்போது 70 ஆண்டாக இருக்கிறது.

1972ல் சோவியத் யூனியனில் 70 வயதைத் தாண்டியவர்கள் 1.2 கோடிக்கு மேற்பட்டிருந்தனர். 90வயதுக்கு மேற்பட்டவர்கள் 3,18,000 பேரும், நூறுவயதுக்கு மேற்பட்டவர்கள் 20,000 பேரும், (மக்கட் தொகையில் 1,00,000 பேருக்கு 8 பேர் வீதம்) இருந்தனர். மிக மிக வயதானவர்களில் பெரும்பாலோர் காகசசில் வசிக்கின்றனர். நாட்டின் ஆகவயதான மனிதரான 168 வயது வயதுடைய ஷிராலி முஸ்லிமோவ் அசர்பைஜான் குடியரசில் வாழ்கிறார். பல்லாயிரக்கணக்கான மிகு வயதான மனிதர்கள் உக்ரைனிலும், ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பைலோரஷ்யாவிலும், 170 பேர் யாகுதியாவிலும் வாழ்கின்றனர். ஆனால் சோவியத் யூனியனின் இதர பகுதிகளிலும் மிகு வயதானவர்கள் ஆங்காங்கே இருக்கின்றனர்.

| ஆண்டு | மொத்த மக்கட் தொகை (ஆண்டின் துவக்கத்தில் கோடிகளில்) | | | மொத்த மக்கட் தொகையில் சதவிகிதத்தில் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| 1913 | 15.92 | 7.91 | 8.01 | 49.7 | 50.3 |
| 1922 | 13.61 | 6.50 | 7.11 | 47.7 | 52.3 |
| 1940 | 19.41 | 9.30 | 10.11 | 47.9 | 52.1 |
| 1959 | 20.88 | 9.40 | 11.48 | 45.0 | 55.0 |
| 1970 | 24.17 | 11.14 | 13.03 | 46.1 | 53.9 |
| 1971 | 24.39 | 11.25 | 13.14 | 46.1 | 53.9 |
| 1972 | 24.68 | 11.38 | 13.25 | 46.2 | 53.8 |
| 1973 | 24.86 | 11.50 | 13.36 | 46.3 | 53.7 |

**ஆண்கள்-பெண்கள் விகிதம்.** போரின் காரணமாக இன்னும் கூட பெண்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். போருக்கு முந்திய ஆண் குடிமக்களின் எண்ணிக்கையை எட்டுவதற்கு போருக்குப் பிறகு 20 ஆண்டுகள் பிடித்தன.

பெரும்பாலான நாடுகளில் இருப்பது போன்று பெண்களோடு ஒப்பிட்டால் ஆண்கள் விகிதம் ஏறத்தாழ 106:100 ஆக இருக்கிறது.

**மக்கட் தொகைப் பகிர்வு.** மக்கட் தொகை பெருக்க விகிதம் பல்வேறு இடங்களில் பல்வேறு விதமாக இருக்கின்றது. உதாரணமாக நாட்டின் ஐரோப்பியப் பகுதியில், கடந்த அரை நூற்றுண்டில் மக்கட் தொகை நாலில் ஒரு பங்கு அதிகரித்துள்ளது; அதே சமயத்தில் ஆசியப் பகுதியில் இது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. இதை, முதலாவதாக மக்கட் தொகையினர் குடிபெயர்ந்து சென்ற காரணங் காட்டியும், இரண்டாவதாக போரின் அழிவைக் காட்டியும்—இது நாட்டின் ஐரோப்பியப் பகுதியை அதிகம் பாதித்தது—மூன்ருவதாக, பிறப்பு விகிதத்தி லுள்ள வேறுபாட்டைக் காரணம் காட்டியும் விளக்க முடியும்.

ரஷ்ய சமஷ்டி (தொழிற்துறை கேந்திரங்கள்), உக்ரைன், மொல்தேவியா, உஸ்பெகிஸ்தான் ஆகியவற்றின் சில பகுதிகள் ஐரோப்பிய நாடுகளைப் போன்று ஜனநெருக்கம் கொண்டவை. ஆனால் பரந்த வடக்குப் பகுதிகளிலும், சில மலைப் பிரதேசங்களி லும் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு ஒரு மனிதனையும் விடக்குறைவு.

சோவியத் யூனியன் பூராவுக்கும் சராசரி மக்கட் தொகை செறிவு சதுர கிலோ மீட்டருக்கு 11 நபர்களே.

**நகர்ப்புற வளர்ச்சி:** பொருளாதார வாழ்க்கை, சமூக வாழ்க்கை ஆகியவற்றின் சகலதுறைகளிலும் சோவியத் யூனியனின் பிரம்மாண்டமான முன்னேற்றம், கிராமப்புறத்துடன் ஒப்பிடும் போது நகர்ப்புறத்தில் வாழ்பவர்களின் விகிதத்தை தீவிரமாக மாற்றியுள்ளது. புரட்சிக்கு முற்பட்ட காலத்தில் ஐந்தில் ஒரு பங்கையும் விடக்குறைவான மக்களே நகரங்களில் வாழ்ந்து வந்தனர்; மாருக 1973ல் பாதிக்கு மேற்பட்டோர், 59 சதவிகி தத்திற்கு மேற்பட்டவர்கள் நகரங்களிலும், பட்டினங்களிலும், பட்டண வகை குடியிருப்புகளிலும் வாழ்ந்தனர்.

புரட்சிக்கு முன்பு நாட்டில் ஒவ்வொன்றும் 1,00,000க்கு மேற்பட்ட மக்கட் தொகை கொண்ட நகரங்கள் 29 இருந்தன; 1971இல் இந்த எண்ணிக்கை 222ஆக உயர்ந்து விட்டது;

1959இல் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் 10 லட்சம் மக்கட் தொகைக்கு மேற்பட்ட மாநகரங்கள் மூன்று மட்டுமே இருந்தன: அவை, மாஸ்கோ, லெனின்கிராட், கீவ் ஆகும். 1973க்குள் மேலும் ஒன்பது நகரங்கள் இவற்றுடன் சேர்ந்து கொண்டுள்ளன. அவையாவன: தாஷ்கண்ட், பாகு, கார்க்கோவ், கார்க்கி, நோவோசிபிர்ஸ்க், குய்பிஷேவ், ஸ்வர்ட் லோவஸ்க், மின்ஸ்க், ஒதெஸ்ஸா.

இன்று சோவியத் மக்கட் தொகையில் நகர்வாழ் மக்களின் விகிதம் உலக சராசரியைவிட அதிகமாயிருக்கின்றது; இது ஐரோப்பாவின் சராசரிக்கு அநேகமாக சமம். 1980இல் சோவியத் மக்களில் ஏறத்தாழ மூன்றில் இரு பகுதியினர் நகர்ப் புற வாசிகளாயிருப்பர்.

சமூகக் கட்டமைப்பு: சமூகத்தின் வர்க்கக் கட்டமைப்பில் சோஷலிச நிர்மாணம் ஒரு தீவிரமான மாறுதலை உண்டு பண்ணி யுள்ளது. சோவியத் யூனியனில் சுரண்டலாளர்களோ, நில வுடமையாளர்களோ, வியாபாரிகளோ, தொழிலதிபர்களோ கிடையாது. குலக்குகள்—கிராமப்புற பூர்ஷுவாக்கள்—இப் போது அறவே கிடையாது. விவசாயிகள் பெரும் விவசாய உற்பத்திக் கூட்டுறவுகளிலும், கூட்டுப் பண்ணைகளிலும் ஒன்று திரண்டுள்ளனர்.

தற்போது சோவியத் சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயிகள், உழைக்கும் அறிவுத்துறையினர் ஆகியோர் உள்ளனர். தொழிலாளி வர்க்கத்தை சேர்ந்த மக்களின்—புதிய சமுதாயத்தின் பிரதான உற்பத்தி சக்தியின்—சதவிகிதத்தில் நிலையான அதிகரிப்பு உள்ளது. மக்களின் கல்வி மட்டம் உயர உயர, அறிவுத்துறையினரின் வீதாசாரம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது; இந்த தர்க்க நியதியான மாற்றம் சோவியத் யூனியனில் ஏற்பட்டே தீரும்.

இனப் பகுப்பு: சோவியத் யூனியன் ஒரு பல-தேசிய இன அரசு; இதில் 100க்கு மேற்பட்ட பெரியதும் சிறியதும் ஆன தேசிய இனங் கள் உள்ளன. ரஷ்யர்களையும் (1970ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்புப்படி இவர்களின் எண்ணிக்கை 12.9 கோடி அல்லது மொத்த மக்கட்தொகையில் 53.4 சதவிகிதம்) உக்ரேனி யர்களையும் (4.07 கோடி, மக்கட் தொகையில் 17 சதவிகிதம்) போன்ற பெரிய தேசங்களுடன் கூடவே சுமார் ஆயிரம் பேரே உள்ள மக்களும், (ஒரோசி, இங்கனசானி) அல்லது வெறும் நூறு பேர்களே (யூகாகிர்கள்) உள்ள மக்களும போன்ற மிகச்சிறு தேசிய இன மைனரிடிகளும் உள்ளனர்.

| | 1913 | 1928 | 1939 | 1959 | 1972 |
|---|---|---|---|---|---|
| மொத்த மக்கட் தொகை (உழைக்காது சார்ந்து இருப்போர் உட்பட) | 100 | 100 | 100 | 100 | 100 |
| தொழிற்சாலை தொழிலாளிகளும் அலுவலக சிப்பந்திகளும் | 17.0 | 17.6 | 50.2 | 68.3 | 80.7 |
| இவர்களில் தொழிலாளிகள் மட்டும் | 14.0 | 12.0 | 32.5 | 48.2 | 59.8 |
| கூட்டுப் பண்ணை விவசாயிகளும் கூட்டமைப்புகளில் ஒன்று திரட்டப் பட்டுள்ள கைவினைஞர்களும் | — | 2.9 | 47.2 | 31.4 | 19.3 |
| தனிப்பட்ட விவசாயிகளும் கூட்டுறவு களில் ஒன்று திரட்டப்படாத கைவினைஞர்களும் | 66.7 | 74.9 | 2.6 | 0.3 | — |
| பூர்ஷுவாக்கள், நிலவுடமையாளர்கள், வியாபாரிகள், குலக்குகள் | 16.3 | 4.6 | — | — | — |

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரசில் குறிப்பிடப்பட்டது போல, சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் சோஷலிச நிர்மாண ஆண்டுகளின் போது, சோஷலிச தேசங்கள், தேசிய இனங்களின் அழிக்கவொண்ணு, மென் மேலும் அதிகரித்துவரும் சமூக - அரசியல், சித்தாந்த ஒற்றுமை புதிய வரலாற்று மக்கள் கூட்டமைப்பில்—சோவியத் மக்கள்—வடிவம் பெற்றுள்ளது.

# சுதந்திரமான, சமத்துவக் குடியரசுகளின் ஒன்றியம்

*சோவியத் குடியரசுகளின் ஒற்றுமை, பரஸ்பர உதவி மூலமாக மட்டுமே பொருளாதார, சமூக-அரசியல், கலாசாரத் துறைகளில் அவற்றின் வேகமான முன்னேற்றம் சாத்தியமாகியுள்ளது.*

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் 15 சமத்துவ, அரசுரிமை படைத்த குடியரசுகளின் சுய விருப்ப, சமஷ்டி அமைப்பு ஆகும். அவையாவன: ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசு, உக்ரேன், கஜக், உஸ்பெக், பைலோரஷ்ய, ஜார்ஜிய, அசர்பைஜான், மொல்தேவிய, லிதுவேனிய, கிர்கிஸ், தாஜிக், லாத்விய, அர்மீனிய, துர்க்மென், எஸ்தோனிய சோவியத் சோஷலிசக் குடியரசுகள்.

## ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசு

1917 நவம்பர் 7இல் உருவாக்கப்பட்டது. இதன் பரப்பளவு 17,075.4 ஆயிரம் சதுர கிலோ மீட்டர். மக்கட் தொகை 1,32,200 ஆயிரம் பேர். அதன் 60க்கு மேற்பட்ட தேசிய இனங்களில் ரஷ்யர்கள் (83%), தாதாரியர் (3.7%), உக்ரேனியர் (2.6%), சுவாஷ்கள் (1.3%) ஆகியோரும் உட்படுவர். இத்துடன் 16 சுயாட்சிக் குடியரசுகளும் (பஷ்கிர், புர்யாட், தாகெஸ்தான், கபர்டினோ பால்கார், கால்முக், கரேலியன், கோமி, மாரி, மொர்த்வினிய, வடக்கு ஓசேடிய, தாத்தாரிய, துவின், உட்முர்ட், செசனோ—இங்குஷ், சுவாஷ், யாகுத்), ஐந்து சுயாட்சிப் பிராந்தியங்களும், குறிப்பாக, அடிகே, கோர்னோ—அல்தாய், யூத, கரசேவோ-செர்கெஸ், காகஸ் ஆகியவையும், அகின்ஸ்கி - புர்யாத், கோமி - பெர்மியக், கொர்யாக், நெனட்ஸ், தைமுர், உஸ்த்-உர்ட்யான்ஸ்கி

புர்யாத், காண்டி-மன்சி, சுகோட், எவெங்கி, யாமலோ-நெனட்ஸ் ஆகிய 10 தேசியப் பகுதிகளும் இணைந்துள்ளன.

தலைநகரம் மாஸ்கோ; அதன் மக்கள் தொகை 74 லட்சம், இதர பெரு நகரங்களில் லெனின்கிராட் (41 லட்சம்) கார்க்கி (12 லட்சம்), நோவோசிபிர்ஸ்க் (12 லட்சம்), குய்பிஷேவ் (11 லட்சம்), ஸ்வெர்த்லோவ்ஸ்க் (11 லட்சம்), காசான் (9,19,000), செல்யாபின்ஸ்க் (9,28,000, பெர்ம் (9,01,000), ஓம்ஸ்க் (9,05,000), வோல்காகிரா (8,69,000), ராஸ்தோவ்-ஆன்-டான் (8,45,000), உஃபட (8,44,000), சாரடோவ் (8,05,000), வாரனேஷ் (7,13,000), கிராஸ்னயார்ஸ்க் (7,07,000), யாரஸ்லாவல் (5,49,00 நோவோகுஸ்நெத்ஸ்க் (5,13,000) உட்படும்.

இக்குடியரசின் கனிச்செல்வங்களில் நிலக்கரி, எண்ணெ எரிவாயு, தூள் நிலக்கரி, அபடைட், பாஸ்பரைட்ஸ், பொட் சியம் உப்புக்கள், இரும்புத்தாது, தங்கம், வைரங்கள், உலோகங்கள், செம்பு, ஈயம், துத்தநாகம், தகரம், அலுமின் தொழிலுக்கான கச்சாப் பொருட்கள், மாங்கனீஸ், மெக்னீ வெள்ளி ஆகியவை உட்படும்.

பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை பொருள், மின்விசை, இரசாயன, பொறியியல், மரம் அ தொழில், ஜவுளி தொழில்களும், இரும்பு, இரும்பல்லாத உ தொழில்களும் ஆகும். 1972இல் 32 1 கோடி டன் எண்ணெ 35.9 கோடி டன் நிலக்கரியும், 8.7 0 கோடி கனமீட்டர் இய எரிவாயுவும், 53,600 கோடி கிலோவாட் மணி மின்சாரமும், 4.5 கோடி டன் தேனிரும்பும், 6.92 கோடி டன் உருக்கும், 11,77,000 மோட்டார் வாகனங்களும், 2,30,000 டிராக்டர்களும், 512.7 கோடி சதுரமீட்டர் பருத்தி ஜவுளிகளும், 49 கோடி சதுர மீட்டர் கம்பளி துணிகளும், 58.4 கோடி சதுர மீட்டர் லினென் துணிகளும், 84.6 கோடி சதுர மீட்டர் பட்டுத் துணிகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

விவசாயம் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது; அதில் பல கிளைகள் உள்ளன. 13,415 கூட்டுப்பண்ணைகளும், 322 மீன் பிடிக்கும் தொழில் கூட்டுறவுகளும், 8,897 அரசுப் பண்ணைகளும் இருக்கின்றன; 1972இல் இவை மொத்தத்தில் 9.14 கோடி டன் தானியத்தையும், 21 லட்சம் டன் சூரியகாந்தியையும், 3.45 கோடி டன் உருளைக்கிழங்கையும், 1.57 கோடி டன் சர்க்கரை வள்ளியையும் உற்பத்தி செய்தன. இதற்கிடையில், கால்நடை வளர்ப்புத்துறையில், 5.37 கோடி இறைச்சி மற்றும் பால் கொடுக்கும் மாடுகளும், 3.27 கோடி பன்றிகளும் 6.62 கோடி

வெள்ளாடு செம்மறியாடுகளும் இருக்கின்றன. 1972இன் உற்பத்தியில் 70 லட்சம் டன் ஆட்டிறைச்சியும், 4.44 கோடி டன் பாலும், 2,840 கோடி முட்டைகளும் 2,13,000 டன் கம்பளியும் உட்படும்.

1972 இல் மக்கட்தொகையில் ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் 30 மருத்துவர்கள், 115 ஆஸ்பத்திரி படுக்கைகள் இருந்தன. 1972 இல் 1,01,000 பொதுக் கல்விப் பள்ளிகளில் 2·46 கோடி மாணவர்கள் கல்வி கற்றனர். 462 உயர்கல்வி அமைப்புகளில் 27 லட்சம் மாணவர்கள் அல்லது ஒவ்வொரு பத்தாயிரத்திற்கும் 204 பேர் வீதம், 2,450 விசேஷ உயர் நிலைக் கல்வி அமைப்புகளில் 26 லட்சம் மாணவர்கள் அல்லது ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கு 197 பேர் வீதம் படித்தனர். 62,000 பொது நூலகங்களும், 80,000 கிளப்புகளும், 312 நாடக அரங்குகளும், 95,000 திரைப்பட யூனிட்களும் இருக்கின்றன. மொத்தத்தில் 55,000 நூல்கள் ஆண்டுதோறும் ஒட்டுமொத்தமாக 120 கோடி பிரதிகளில் அச்சடிக்கப்படுகின்றன. இங்கு 4,125 சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் உள்ளன. அவை 12·5 கோடி பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன; 4223 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை 9·7 கோடி பிரதிகள்.

## உக்ரேனியன் சோவியத் சோஷலிசக் குடியரசு

1917, டிசம்பர் 25இல் உருவாக்கப்பட்டது. இதன் பரப்பளவு 6,03,700 சதுர கிலோ மீட்டர். மக்கட் தொகை 48,200 ஆயிரம் பேர். இதில் உக்ரேனியர்கள் (75%), ரஷ்யர்கள் (19·4%), யூதர்கள் (1·6%) மற்றும் பைலோ-ரஷ்யர்கள், போலந்துக்காரர்கள், மொல்தேவியர்கள், பல்கேரியர்கள், ஹங்கேரியர்கள் இத்தியாதி உள்ளனர். தலைநகர் கீவ். இதன் மக்கட்தொகை 18,27,000. இதர பெரும் நகரங்களில் கார்க்கோவ் (13 லட்சம்), ஒதெஸ்ஸா (10,00,000), டானட்ஸ்க் (9,19,000), நீப்பர் பெட்ரோவ்ஸ்க் (9,23,000), ஜபரோஷி (7,14,000). கிரிவாய் ரோக் (6,09,000), லுவாவ் (5,94,000) ஆகியவை உட்படும்.

உக்ரேனியக் குடியரசில் இரும்புத்தாது, மாங்கனீஸ், நிலக்கரி, கந்தகம், இயற்கை எரிவாயு, பாறை உப்பு, பொட்டாஷியம் உப்பு ஆகியவை கிடைக்கின்றன.

இப்பொருளாதாரத்தின் சிறப்பம்சம் சுரங்கத் தொழிலையும் செய்பொருள் தொழிலையும் இணைக்கும், பல கிளை விவசாயத்தையும் செய்யும் ஓர் அனுகூலமான முறையாகும். சர்க்கரையின் பிரதான விற்பனையாளனாகவும் (55 லட்சம் டன்), நிலக்கரி,

உலோகங்கள், பொறியியல் இனங்களை பிரதானமாக உற்பத்தி செய்பவனுகவும் இக்குடியரசு இருக்கின்றது.

1972 இல் 21·1 கோடி டன் நிலக்கரியும், 1·45 கோடி டன் எண்ணெயும், 6,720 கோடி டன் கனமீட்டர் எரிவாயுவும், 12 கோடி டன் இரும்புத் தாதுவும், 15,800 கோடி கிலோ வாட் மணி மின்விசையும், 4·31 கோடி தேனிரும்பும், 4·92 கோடி டன் உருக்கும், 1,28,800 மோட்டார் வாகனங்களும் 1,25,000 டிராக்டர்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

8,981 கூட்டுப்பண்ணைகளும், 99 மீன்பிடிக்கும் தொழில் கூட்டுறவுகளும், 1,615 அரசாங்கப் பண்ணைகளும், இக்குடியரசில் உள்ளன. 1972 இல் இக்குடியரசில் 2·27 கோடி கொம்புடைய கால்நடைகளும் 1·96 கோடி பன்றிகளும், 91 லட்சம் வெள்ளாடு களும், செம்மறி ஆடுகளும் இருந்தன. 1972 இல் இக்குடியரசின் அரசுப் பண்ணைகளும், கூட்டுப் பண்ணைகளும் 3·26 கோடி டன் தானியத்தையும், 2.2 கோடி உருளைக்கிழங்கையும், 1,12,000 டன் மென்சணலையும், 4·9 கோடி டன் சர்க்கரை வள்ளியையும், 24 லட்சம் டன் சூரியகாந்தி விதையையும் அறுவடை செய்தன; 57 லட்சம் டன் காய்கறிகளைப் பயிரிட்டன; 32 லட்சம் டன் இறைச்சி, 1·94 லட்சம் டன் பால், 1,040 கோடி முட்டைகள் 26,000 டன் கம்பளியையும் உற்பத்தி செய்தன.

மக்கட்தொகையில் ஒவ்வொரு 10 ஆயிரம் பேருக்கும் 29 டாக்டர்களும், 110 மருத்துவமனை படுக்கைகளும் இருக்கின்றன. 1972 இல் 29,300 பொதுக் கல்விப் பள்ளிகளில் 84 லட்சம் மாணவர்கள் கல்வி கற்றனர். 138 உயர் கல்வி அமைப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை 8,03,000 அல்லது ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் 166 பேர் வீதமும், 755 விசேஷ செகண்டரி கல்வி அமைப்புகளில் 7,92,000 பேர்கள், அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கும் 164 வீதமும் இருந்தது. இங்கு மொத்தம் 27,500 பொது நூல்நிலையங்களும் 26,000 கிளப்புகளும் 71 நாடக அரங்குகளும், 29,000 திரைப்பட யூனிட்களும் இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் 8000 நூல்கள் மொத்தம் 12·7 கோடி பிரதி களில் வெளியிடப்படுகின்றன; 496 சஞ்சிகைகள், பத்திரிகை களின் அச்சடிக்கப்படும் மொத்தப் பிரதிகள் 1 கோடிக்கும் அதிகம். 2,041 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை 2·1 கோடி பிரதிகள்;

## பைலோரஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசு

1919 ஜனவரி 1 இல் உருவாக்கப்பட்டது. இதன் பரப்பளவு 2,07,600 சதுர கிலோ மீட்டர். மக்கள் தொகை 92,00,000. இதில் பைலோரஷ்யர்கள் (81%), ரஷ்யர்கள் (10·4%),

போலந்துக்காரர்கள் (4·3%), உக்ரேனியர்கள் (2·1%), யூதர்கள் (1·6%) ஆகியோர் உட்படுவர். தலைநகர் மின்ஸ்க் (அதன் ஜனத்தொகை 10,38,000).

தூள் கரி, பாறை உப்பு, பொட்டாஷியம் உப்பு, எண்ணெய், பாஸ்பரைட்ஸ், கட்டுமான சாதனங்கள் ஆகியவை பைலோ ரஷ்யாவில் நிறையக் கிடைக்கின்றன; நிலக்கரி, பழுப்பு நிலக் கரி, கற்பலகை ஆகிய செல்வாதாரங்களும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

குடியரசின் தேசிய வருமானத்தில் 60 சதவிகிதம் தொழில் களிலிருந்து கிடைக்கின்றது. இஞ்சினியரிங், உலோக உற்பத்தித் தொழில்கள் தலையாய இடம் வகிக்கின்றன. 1972இல் உற்பத்தி செய்யப்பட்ட இனங்களில் கடும்-உழைப்பு லாரிகளும் (32,000), டிராக்டர்கள் (82,000), உருளைக்கிழங்கு தோண்டும் இயந்திரங் கள் (28,000), இயந்திரக் கருவிகள் (30,000) சிலோ - வெட்டும் இயந்திரங்கள் (37,100), கனி உரங்கள் (81,00,000 டன்கள்), மோட்டார் சைக்கிள்கள் (1,62,000), லினன் துணி (7,54,00,000 சதுர மீட்டர்) 14 கோடி ரூபிள் மதிப்புள்ள பல் வேறு கருவிகள், தானியங்கி சாதனம், கம்பியூடர்கள் ஆகியவை இதில் உட்படும்.

இக்குடியரசில் 2,174 கூட்டுப் பண்ணைகளும், 834 அரசு பண்ணைகளும் சேர்ந்து 1972ல் 46 லட்சம் டன் தானியத்தையும் 1,07,000டன் மென் சணலும், 14 லட்சம் டன் சர்க்கரை வள்ளியும், 1.29 கோடி டன் உருளைக்கிழங்கும், 8,46,000 டன் காய்கறிகளும் உற்பத்தி செய்தன. இறைச்சி, பால் பண்ணைத் தொழிலும் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. இக்குடியரசில் 58 லட்சம் கொம்புடைய கால்நடைகளும், 40 லட்சத்திற்கு மேற்பட்ட பன்றிகளும் உள்ளன. மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியாயிருந்த தண்ணீர் கட்டி நிற்கும் நிலங்கள் மீட்பு செய்யப்பட்டன; இவை விவசாய ரீதியில் வெகு எதிர்காலப் பயனுடையவை. இதுவரை 17,51,700 ஹெக்டேர் சதுப்பு நிலங்களிலிருந்து நீர் வடிக்கப்பட்டன.

மக்கட் தொகையில் ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் 27 மருத்துவர்கள், 107 மருத்துவமனைப் படுக்கைகள் இருக்கின்றன. 1972இல் இக்குடியரசின் 10,783 பொதுக் கல்விப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை மொத்தத்தில் 19 லட்சம். 28 உயர் கல்வி அமைப்புகளில் 1,46,000 மாணவர்கள் அல்லது 10000 பேருக்கு 155 பேர் வீதமும் 130 விசேஷ செகண்டரி பள்ளிகளில் மொத்தம் 1,51,000 அல்லது 10000 பேருக்கு 164 வீதமும் படித்து வந்தனர். இக்குடியரசில் 7,200 பொது நூல்நிலையங்களும், சுமார் 6000 கிளப்புகளும், 14 நாடக அரங்குகளும், 6,700

திரைப்பட காட்சி சாலைகளும் இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் 2600 நூல்கள் மொத்தத்தில் 2.6 கோடிக்கு மேற்பட்ட பிரதிகளில் வெளியிடப்படுகின்றன. இங்குள்ள 111 சஞ்சிகைகள், பத்திரிகைகளின் வெளியீடு 16 லட்சம் பிரதிகள்; 168 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை 40 லட்சம் பிரதிகளுக்கு மேம்பட்டு இருக்கிறது.

## உஸ்பெக் சோவியத் சோஷலிசக் குடியரசு

1924, அக்டோபர் 27இல் உருவாக்கப்பட்டது. இதன் பரப்பளவு 4,47,400 சதுர கிலோ மீட்டர். மக்கட் தொகை 1.29 கோடி, இவர்களில் உஸ்பெக்குகள் (64·7%) ரஷ்யர்கள் (12.5%) தாத்தாரியர் (4.8%), கஜக் (4.6%) தாஜிக் (3.8%) காரகல்பக்குகள் (1.9%), கொரியர்கள் (1.3%), உக்ரேனியர்கள் (1%). தலை நகர் தாஷ்கண்ட் (ஜனத்தொகை 15,04,000). காராகல்பக் சுயாட்சி குடியரசு இதில் இணைந்துள்ளது.

உஸ்பெகிஸ்தானில் எண்ணெய், எரிவாயு, செம்பு, பல்வகை உலோகங்கள், தங்கம், பாக்சைட், கவோலின் களிமண், நிலக்கரி, ஜிப்சம், சலவைக் கல், பாறை உப்பு, பொட்டாஷியம் உப்பு, கந்தகம், கண்ணாடி செய்வதற்கான மண், சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்கள் ஆகியவை கிடைக்கின்றன. இக்குடியரசில் கனிச் சத்துள்ள நீரூற்றுக்களும், நோய்களை குணப் படுத்தும் களிமண்களும் உள்ளன. இங்கு மலை ஆறுகளில் மின் விசை உற்பத்திக்கு பிரம்மாண்டமான ஆற்றல்கள் இருக்கின்றன; அதே சமயம் ஆறுகளிலும், ஆரல் கடலிலும் வர்த்தக முறையில் முக்கியத்துவம் வாய்ந்த மீன்கள் நிறைந்து காணப்படுகின்றன.

ஒரு பெரும் தொழிற்துறை கேந்திரமாக இருப்பதோடு மட்டுமின்றி, இக்குடியரசு சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் பிரதான பருத்தி விற்பனையாளனுகவும் உள்ளது. 1972இல் இக்குடியரசு 2,350 கோடி கிலோவாட் மணி மின் சாரத்தையும், 14,21,900டன் எண்ணெயையும், 3,730 கோடி கன மீட்டர் இயற்கை எரிவாயுவையும், 39,07,000டன் நிலக்கரியையும், 3,99,300டன் உருக்கையும், 3,36,200டன் உருட்டு உருக்கையும், 49,22,000டன் கனி உரங்களையும், ஆயிரக் கணக்கான டிராக்டர்கள் பருத்தி பொறுக்கும் இயந்திரங்கள், கிரேன்கள், அகழ்வு இயந்திரங்களையும் உற்பத்தி செய்தது.

இங்கு 1042 கூட்டுப் பண்ணைகளும், ஆறு மீன்பிடி கூட்டுறவுகளும், 322 அரசாங்கப் பண்ணைகளும் இருக்கின்றன. 28 லட்சம் ஹெக்டருக்கும் மேற்பட்ட நிலம் பயிர் செய்யப்படுகின்றது. பருத்தி சாகுபடிதான் கேந்திரக் கிளையாக விளங்குகிறது;

1972இல் 47 லட்சம் டன் பருத்தி பொறுக்கப்பட்டது. 1972இல் தானிய உற்பத்தி 9,60,000 டன்கள். இக்குடியரசு பட்டு, நெல், திராட்சை, முலாம் பழவகைகளை உற்பத்தி செய்கிறது. கால் நடை வளர்ப்பில் காரகுல் செம்மறி ஆடுகள் வளர்ப்பு பிரதான மாக உள்ளது. 80 லட்சம் செம்மறி ஆடுகளு , வெள்ளாடுகளும் ஆண்டு பூராவும் புல்வெளிகளில் மேய்கின்றன. மேலும் ஏராள மான கசாப்பு மாடுகளும் பால்மாடுகளும் (30 லட்சம்), பன்றி களும், (3,40,000), ஏராளமான கோழிகளும் இங்கு உள்ளன.

மக்கட் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கும் 22 மருத் துவர்கள், 100 மருத்துவமனை படுக்கைகள் வீதம் உள்ளன. 1972இல் 9353 பொதுக் கல்விப் பள்ளிகளில் 35 லட்சம் மாணவர்கள் கல்வி கற்றனர் 38 உயர் கல்வி அமைப்புகளின் மாணவர் எண்ணிக்கை 2,31,000 அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு 179 மாணவர் வீதம்; 165க்கு மேற்பட்ட விசேஷ செகண்டரி கல்வி அமைப்புகளில் 1,71,000 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10000 பேருக்கு 132 மாணவர் வீசம் படிக்கின்றனர். இங்கு 5,822 பொது நூல் நிலையங்களும் 3400 கிளப்புகள், 25 நாடக அரங்குகள் 4000 திரைப்பட யூனிட்களும் உள்ளன. ஆண்டு தோறும் 2000க்கு மேற்பட்ட நூல்கள் 3.2 கோடி பிரதிகள். மொத்தத்தில் அச்சடிக்கப் படுகின்றன. 124 பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகளின் மொத்த விற்பனை 45 லட்சம் பிரதிகள் 225 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை 37 லட்சம் பிரதிகள்.

## கஜக் சோவியத் சோஷலிசக் குடியரசு

1936 டிசம்பர் 5இல் உருவாக்கப்பட்டது. இதன் பரப்பளவு 27,17,300 சதுர கிலோ மீட்டர். மக்கட்தொகை 1,37,00,000. இவர்களில் கசாக்குகள் (32·4%), ரஷ்யர்கள் (42·8%). உக்ரேனி யர்கள் (7·2%), மற்றும் பைலோரஷ்யர்களும், உஸ்பெக்குகள், உய்குர்கள், கொரியர்கள், துங்கன்கள், இதரர்களும் உட்படுவர்.

தலைநகர் அல்மா-அதா, ஜனத்தொகை 7,94,000. மற்றொரு பெரும் நகர் காரகண்டா (5,52,000).

கனிப்பொருள்களில் (90க்கு மேற்பட்டவை) இரும்பு, செம்பு, ஈயம், துத்தநாகம், குரோமைட், வனுடியம், டங்ஸ்டன், நிலக்கரி, எண்ணெய், பாஸ்பரைட்ஸ், அரிய உலோகங்களும் சுண்ணும்புக்கல், சீமைச் சுண்ணும்பு, சலவைக்கல், ஜிப்சம் போன்ற கட்டடம் கட்டுவதற்கான சாதனங்களும் உட்படும். மின்விசை செல்வாதாரம் ஏராளமாக உள்ளது. இக்குடியரசின் தொழில்கள் தமது தேவைகள் அனைத்தையும் ஸ்தல ஆதாரங்களிலிருந்தே பூர்த்தி செய்து கொள்கின்றன. 1972இல் இதன் உற்பத்தி

4,130 கோடி கிலோவாட் மணி மின்சாரம், 1·8 கோடி டன் எண்ணெய், 350 கோடி கன மீட்டர் இயற்கை எரிவாயு 7·44 கோடி டன் நிலக்கரி.

இதே போன்று விவசாயமும் வேகமாக முன்னேறி வருகிறது. வடக்கில் 2·4 கோடி ஹெக்டர் கன்னி நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வந்த பிறகு இக்குடியரசு இன்று ரஷ்ய சமஷ்டிக்குப் பிறகு சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் இரண்டாவது ஆக முக்கியமானஉணவுக் களஞ்சியமாக விளங்கு கிறது. தெற்கிலுள்ள பாசனவசதி பெற்றுள்ள நிலங்களில் பருத்தி, நெல், சர்க்கரைவள்ளி, பல்வேறு காய்கறிகள், முலாம் பழம் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மலை அடி வாரங்களில் கணக்கிட முடியாத திராட்சைப்பழத் தோட்டங் களும், இதர பழத் தோட்டங்களும் காணப்படுகின்றன. எனினும், மொத்த விவசாய உற்பத்தியில் பாதிக்கு மேல் கால்நடை வளர்ப் பின் மூலம் கிடைக்கிறது. பெருந்திரளான செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் (3·35 கோடி) விரிவான மேய்ச்சல் நிலப்பரப்பில் மேய்கின்றன; இங்கு திரளான ஒட்டகங்களும், கசாப்பு மாடுகள், பால் மாடுகளும் (76 லட்சம்) குதிரைகளும் (13 லட்சத்திற்கு மேல்) காணப்படுகின்றன. மட்டுமின்றி 3·3 கோடி கோழிகளும் இங்கு இருக்கின்றன.

1972 அறுவடைக் கணக்கு 2·9 கோடி டன் தானியம், 2,92,000 டன் கச்சாப் பருத்தி, 24 லட்சம் டன் சர்க்கரைவள்ளி, ஏறத்தாழ 20 லட்சம் டன் உருளைக்கிழங்கு, 8,22,000 டன் காய் கறிகள் ஆகும். கால்நடை வளர்ப்புத் துறையின் உற்பத்தியில் 9,34,800 டன் இறைச்சியும், 3,900 டன் பாலும், ஏறத்தாழ 200 கோடி முட்டைகளும் 91,000 டன் கம்பளி ரோமமும் உட்படும். இங்கு 425 கூட்டுப்பண்ணைகளும், 26 மீன் பிடிக்கும் தொழில் கூட்டுறவுகளும், 1631 அரசாங்கப் பண்ணைகளும் உள்ளன.

மக்கட் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கும் 23 மருத்துவர்கள், 120 மருத்துவமனைப் படுக்கைகள் இருக் கின்றன. 1972இல் 10,041 பொதுக்கல்விப் பள்ளிகளில் மொத்தம் 33 லட்சம் மாணவர்கள் படித்தனர். 44 உயர் கல்வி அமைப்புகளில் 2,02,800 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு 150 பேர் வீதமும், 190 விசேஷ செகண்டரி கல்வி அமைப்புகளில் 2,23,000 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 ஆயிரம் பேர்களுக்கு 162 பேர் வீதமும் படித்தனர். இங்கு 8,000 பொது நூல்நிலையங்களும், 7,300 கிளப்புகளும், 25 நாடக அரங்குகளும் 9,000 திரைப்பட யூனிட்களும் இருந்தன. ஆண்டுதோறும் 2,000க்கு மேற்பட்ட நூல்கள் 2·5 கோடி பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன; 159 சஞ்சிகைகள்.

பத்திரிகைகளின் மொத்த விற்பனை 27 லட்சம்; 361 செய்தி பத்திரிகைகளின் விற்பனை 40 லட்சத்தையும்விட அதிகமாகும்.

## ஜார்ஜிய சோவியத் சோஷலிசக் குடியரசு

1921 பிப்ரவரி 25இல் ஸ்தாபிக்கப்பட்டது. பரப்பளவு 69,700 சதுர கிலோ மீட்டர். மக்கட்தொகை 48,38,000. இவர்களில் ஜார்ஜியர்கள (66·8%) ஓசேடியன்கள் (3·2%) அடகாசியன்கள் (1·7%), அர்மீனியர்கள் (9·7%), ரஷ்யர்கள் (8·5%) மற்றும் அசர்பைஜானியர், கிரேக்கர்கள், யூதர்கள், அட்ஜாரியன்கள், உக்ரேனியர்கள், குர்துகள் ஆகிய தேசிய இனங்கள் உட்படுவர். இதில் அப்காசியன் சுயாட்சிக் குடியரசும், அட்ஜாரியன் சுயாட்சிக் குடியரசும், மற்றும் தெற்கு ஓசேடியன் சுயாட்சிப் பிராந்தியமும் இதில் இணைந்துள்ளன. தலைநகர் திபிலிசி (9,46,000 மக்கள்).

பொருளாதாரத்தில் தலையாய கிளைகள் சுரங்கத் தொழில், மின்விசை உற்பத்தி, முன்னேற்றமடைந்து வரும் பொறியியல் தொழில் வெப்ப மண்டல பயிர்களை வளர்த்தல், திராட்சைப் பயிர்த் தொழில், இறுதியாக பல சுகவாச ஸ்தலங்களைப் பயன்படுத்தல் ஆகியவை. 1972இன் உற்பத்தி 998·8 கோடி கிலோவாட் மணி மின்சாரம், 21,60,000 டன் நிலக்கரி, 18 லட்சத்தையும் விட அதிகமான டன்களில் மாங்கனீஸ் தாது, 7,10,000 டன் தேனிரும்பு 13 லட்சம் டன் உருக்கு, 10,00,000 டன் உருட்டு உருக்கு, 4,54,000 டன் உருக்கு குழாய்கள், 15,800 மோட்டார் கார்கள், 5,61,000 டன் கனி உரங்கள், 15,80,00,000 லிட்டர் திராட்சைப்பழம், ஒயின் மது, 1,10,00,000 பாட்டில் ஷாம்பெயன் மது, 1,700 கோடிக்கு மேற்பட்ட சிகரெட், 21,600 டன் தேயிலை ஆகும்.

இங்கு 1,234 கூட்டுப்பண்ணைகளும், மீன்பிடிக்கும் தொழில் கூட்டுறவுகளும். 265 அரசு பண்ணைகளும் உள்ளன. வெப்ப மண்டல தோட்டப் பயிர்கள், திராட்சைத தோட்டங்கள், இதர பழத்தோட்டங்கள் மொத்த சாகுபடி நிலத்தில் 27% ஆகும். நிலத்தில் மூன்றில் ஒரு பங்குக்குப் பாசன வசதி உண்டு. இங்கு வளர்பவை: தேயிலை, திராடசை, பூருவித ஆரஞ்சு, இலுமிசசை, துங் மரங்கள், யூகலிப்டஸ், மூங்கில், கிரீஷியன் வாகை, உயர்ரக புகையிலை. சாகுபடி செய்யப்படும் நிலத்தில் 65 சதவிகிதத்தில் தானியம் விளைக்கப்படுகிறது. இங்கு 20 லட்சம் செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் 15 லட்சம் கசாப்பு மாடுகள், பால் மாடுகள், 7,00,000 பன்றிகள் உள்ளன.

மக்கட் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கும் 37 மருத்துவர்களும், 93 மருத்துவமனை படுக்கைகளும் உள்ளன.

1972 இல் 4,521 பொதுக் கல்விப் பள்ளிகளில் மொத்தத்தில் 10 லட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதற்கிடையில் 18 உயர்கல்வி அமைப்புகளில் மாணவர் எண்ணிக்கை 86,000 அல்லது ஒவ்வொரு 10,000 க்கு 180 மாணவர் வீதமும், 100 விசேஷ செகண்டரி கல்வி அமைப்புகளில் மொத்தத்தில் 53,000 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு 109 மாணவர் பயில்கின்றனர். இங்கு 3,640 பொது நூல் நிலையங்களும், 2100க்கு மேற்பட்ட கிளப்புகளும், 22 நாடக அரங்குகளும், 1800 திரைப்பட யூனிட்டுகளும் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் 2500 தலைப்புடைய நூல்களின் அச்சடிக்கப்படும் மொத்தப் பிரதிகள் 1·76 கோடி. 116 சஞ்சிகைகள், பத்திரிகைகள் 12 லட்சம் பிரதிகள் விற்பனை ஆகின்றன. 141 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை 30 லட்சம் பிரதிகளுக்கு அதிகமாகும்.

## அசர்பைஜான்
## சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசு

1920 ஏப்ரல் 28ல் ஸ்தாபிதம். இது 86,600 சதுர கிலோமீட்டர் வியாபித்துள்ளது. மக்கட் தொகை 54,20,000. இதில் அசர்பைஜானியர்கள் (73·8%), ரஷ்யர்கள் (10%), அர்மீனியர்கள் (9·4%), லெஜ்கின்கள் (2·7%) மற்றும் ஜார்ஜியர்கள் யூதர்கள், ஆகியவர்கள் உட்படுவர். நாகிசேவன் சுயாட்சிக் குடியரசும், நாகோர்னோ-காரபாக் சுயாட்சிப் பிராந்தியமும் இதில் உட்படும். தலைநகர் பாகு. (மக்கட் தொகை 13,37,000).

கனிச் செல்வங்களில் ஆப்ஷெரான் தீபகற்பத்திலும், காஸ்பியனில் கரைக்கு அப்பால் நெப்தியான்யே காம்னியிலும், எண்ணெயும், காரடாகின் இயற்கை எரிவாயும், மற்றும் இரும்புத் தாது, அலுநைட், பாறை உப்பு, பல்வகை உலோகங்கள், இரும்பு, நிமிளையும், வன்பால் அழற்பாறை வகை, ஜல்லிக்கல், மண், களிமண் போன்ற சட்டட சாதனங்களும், உட்படும். இக்குடியரசில் கனி நீரூற்றுக்களும் செறிவாக உள்ளன.

இதன் தலையாய தொழில்கள் எண்ணெய் தோண்டி எடுப்பதும், சுத்திகரிப்பும் ஆகும். மற்றும் பொறியியல், இரசாயனத் தொழில், எரிவாயு தொழில், மின்சார சாதனம், இரும்பு இரும்பல்லாத உலோகம், கட்டட சாதனங்கள் உற்பத்தி ஆகிய தொழில்கள். 1972 இல் மின்சார உற்பத்தி 1270 கோடி கிலோவாட் மணி, எண்ணெய் 1·84 கோடி டன், எரிவாயு 690 கோடி கனமீட்டர், உருகசு 7,48,400 டன், உருட்டு உலோகம் 6,26,000 டன்கள், உருக்கு குழாய்கள் 4,83,000 டன்கள், கந்தக அமிலம் 1,32,000

டன்கள், பல்லாயிரக்கணக்கான போரிங் பம்புகள், மின்சார மோட்டார்கள், பற்பல டன்கள் சிமெண்ட், செங்கல்கள், கற்பாளங்கள், முன்பு வார்க்கப்பட்ட இரும்பு, சிமெண்ட் கலவை, ஜவுளிகள், கம்பளங்கள், சமுக்காளங்கள் ஆகும்.

இங்கு 943 கூட்டுப்பண்ணைகளும், 428 அரசு பண்ணைகளும், ஏழு மீன்பிடி தொழில் கூட்டுறவுகளும் உள்ளன. 1972இல் 75,000 டன் மீன்கள் பிடிக்கப்பட்டன. பாசன வசதி பெற்ற விவசாயம் பிரதான இடம் வகிக்கிறது. 1972ல், 8,59,000 டன் தானியமும், 4,31,000 டன் கச்சாப் பருத்தியும், 36,000 டன் புகையிலையும், 4,66,000 டன் காய்கறிகளும், 1,15,000 டன் பழங்கள். 2,35,000 டன் திராட்சையும் உற்பத்தி செய்யப் பட்டன. திராட்சைத் தோட்டப் பயிர் தவிர, பழவகை பயிர் தொழிலும் பட்டுத் தொழிலும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. கால்நடைகள் இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் பிரதானமாக வளர்க்கப்படுகின்றன. 15,64,000 கால்நடைகள் உள்ளன; இவற்றில் 6,07,000 பசுக்களும் எருமைகளும் ஆகும். ஏறத்தாழ 47,00,000 செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் கோழிகளும் எல்லா இடங்களிலும் வளர்க்கப்படுகின்றன. 1972இன் உற்பத்தியில் 95,900 டன் இறைச்சியும், 4,96,500 டன் பாலும், 44·6 கோடி முட்டைகளும், 7,700 டன் கம்பளியும் உட்படும்.

மக்கள் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கும் 27 மருத்துவர்கள், 94 மருத்துவமனை படுக்கைகள் வீதம் உள்ளன. 1972இல் 5,115 பொதுக் கல்விப் பள்ளிகளில் மொத்தத்தில் 15 லட்சம் மாணவர்கள் பயின்றனர். இதற்கிடையில் 13 உயர் கல்வி அமைப்புகளில் 1,00,000 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கு 183 மாணவர் வீதமும், 79 விசேஷ செகண்டரி பள்ளிகளில் 70,000 மாணவர்கள் அல்லது 10,000 பேருக்கு 129 மாணவர் வீதமும் இருந்தனர். 3,000 பொது நூல் நிலையங்களும், 2,200 கிளப்புகளும், 12 நாடக அரங்குகளும் 2,000க்கு மேற்பட்ட திரைப்பட யூனிட்களும் இங்கு இருக்கின்றன. ஏறத்தாழ 1,300 தலைப்புடைய நூல்களின் ஆண்டு பதிப்பு மொத்தம் 1·22 கோடி பிரதிகள், 147 சஞ்சிகைகள், பத்திரிகைகளின் மொத்த விற்பனை 15 லட்சம் பிரதிகள்; 115 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை 22 லட்சம் பிரதிகள்.

## லிதுவேனியன் சோவியத் சோஷலிசக் குடியரசு

1940 ஜூலை 21ல் நிறுவப்பட்டது. பரப்பளவு 65,200 சதுர கிலோ மீட்டர். மக்கட்தொகை 32 லட்சம். இவர்களில் லிதுவேனியர்கள் (80·1%), ரஷ்யர்கள் (8·6%), போலந்துக்

காரர்கள் (7·7%), பைலோரஷ்யர்கள் (1·5%), மற்றும் உக்ரேனியர்களும், யூதர்களும் உட்படுவர். தலைநகரம் வில்னியஸ் (4,09,000 வாசிகள்).

இக்குடியரசில் தூள்கரி, சுண்ணும்புக்கல், களிமண் செழிப்பாக கிடைக்கின்றது; இது நீண்டகாலமாக அம்பருக்கு பேர் பெற்றது; இது புதைந்து மக்கிப்போன பைன் மரத்தின் பிசினிலிருந்து கிடைக்கிறது. இக்குடியரசின் உயர்ரக எண்ணெய் 1963இல் முதல் தடவையாக கிளைபெடாவுக்கு அருகில் கொப்பளித்து வெளியே வந்தது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் இனங்களில் மின்சார மோட்டார்கள் (1972இல் 3,48,000), மின்சார வெல்டிங் கருவிகள் (79,600), உலோகம் வெட்டும் இயந்திரக் கருவிகள் (22,300). லினன் துணி (2·1 கோடி சதுர மீட்டர்), பருத்தித் துணி (3·88 கோடி சதுர மீட்டர்), கம்பளித் துணி 1·51 கோடி சதுர மீட்டர் பின்னல் ஆடை, மீன்பிடிக்கும் தோணிகள், டர்பைன்கள், கணக்கிடும் இயந்திரங்கள், தொலைக் காட்சிப் பெட்டிகள், டேப் ரிகார்டர்கள், சைக்கிள், மீட்டர்கள், இதர கருவிகள் உட்படும். மீன்பிடிக்கும் தொழில், மென் இயந்திரத் தொழில், உணவுத் தொழில், மற்றும் கட்டடம் கட்டும் சாதன தொழில்கள் ஆகியவை மிக முன்னேறியுள்ளன.

இங்கு 1384 கூட்டுப்பண்ணைகளும், ஒரு மீன்பிடிக்கும் தொழில் கூட்டுறவும், 299 அரசு பண்ணைகளும் உள்ளன. இறைச்சிக்காகவும், பாலுக்காகவும் கால்நடைகளை வளர்ப்பதற்கு விவசாயத்தில் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. மென்சணல், சர்க்கரை-வள்ளி, உருளைக்கிழங்கு, இதர காய்கறிகள் விரிவாக வளர்க்கப்படுகின்றன. இறைச்சிக்கான மாடுகளும் பால் மாடுகளும் அநேகமாக 19 லட்சம் இருந்தன. இங்கு 22 லட்சத்திற்கு மேற்பட்ட பன்றிகள் உள்ளன. 1972இல் 4,33,300 டன் இறைச்சியும் 75 கோடி முட்டைகளும் 16,12,000 டன் பாலும், மற்றும் 19 லட்சம் டன் தானியமும், 9,75,000 டன் சர்க்கரை வள்ளியும், 24 லட்சம் டன் உருளைக் கிழங்கும் உற்பத்தி செய்யப்பட்டன.

மக்கட் தொகையில் ஒவ்வொரு 10 000 பேருக்கு 30 மருத்துவர்களும் 105 மருத்துவமனைப் படுக்கைகளும் உள்ளன. 1972இல் 3,432 பொதுக் கல்விப் பள்ளிகளில் 6,00,000 மாணவர்கள் கல்வி கற்றனர். இதற்கிடையே 12 உயர்கல்வி அமைப்புகளில் 59,000 மாணவர்கள் அல்லது 10,000 பேருக்கு 180 மாணவர் வீதமும், 79 விசேஷ செகண்டரி கல்வி அமைப்புகளில் 66,000 மாணவர்கள் அல்லது 10,000 பேருக்கு 205 மாணவர் வீதமும் இருந்தனர். இங்கு 2,500 பொது நூல்

நிலையங்களும், 1500 கிளப்புகளும், நாடக அரங்குகளும், 1500 திரைப்பட யூனிட்களும், இருக்கின்றன. ஆண்டு தோறும் ஏறக்குறைய 2,000 தலைப்பில் நூல்கள் மொத்தம் 15 கோடி பிரதிகளில் அச்சடிக்கப்படுகின்றன. 123 சஞ்சிகைகள், பத்திரிகைகளின் விற்பனை 20 லட்சம் பிரதிகள்; 88 செய்திப்பத்திரிகைகளின் விற்பனை 18 லட்சம் பிரதிகள்.

## மொல்தேவிய சோவியத் சோஷலிசக் குடியரசு

1940 ஆகஸ்டு 2 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பரப்பளவு 33,700 சதுர கிலோ மீட்டர்கள். மக்கட் தொகை 37,21,000 (64.6%). உக்ரேனியர்கள் (14.2%), ரஷ்யர்கள் (11.6%). காகௌஸ் (3.5%), யூதர்கள் (2.7%), பல்கேரியர்கள் (2.1%) ஜிப்சிகள் (0.25%) ஆகியோரும் உட்படுவர்.

தலைநகர் கிஷினேவ் (4,15,000 வாசிகள)

கனிச் செல்வத்தில் பெரும்பாலும் களிமண், உரச்சத்துடைய மண், காக்குவிளு போன்ற கட்டட சாதனங்கள் உட்படும். எண்ணெய், எண்ணெய் - செல்வமுடைய படிவ அடுக்குகளும் கூட கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

தொழில்களில் பெரும்பாலும் உணவுத் தொழில் ஆதிக்கம் செலுத்துகிறது. 1972இல் சர்க்கரை 3,23,000 டன்கள் டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவுப்பண்டம் 113.6 கோடி டன்கள், தாவர எண்ணெய் 1,47,000 டன்கள், ஒயின் மது 27,00,00,000 லிட்டர்கள், பிராந்தி 52,70,000 லிட்டர்கள் உற்பத்தி செய்யப்பட்டன. உடைகள், பின்னல் ஆடைகள், காலணி, பட்டுத்துணிகள் ஆகியவையும் உற்பத்தி செய்யப் பட்டன.

ஸ்தல ஆதாரங்களிலிருந்து செங்கல், சுண்ணும்பு, கூரை ஓடுகள் உற்பத்தி செய்வதுடன், கட்டட சாதனங்கள் தொழில் சிமெண்டையும், கூரைத் தகட்டையும், இரும்பு - சிமிண்ட் கலவை கட்டுமான சாதனங்களையும் உற்பத்தி செய்கின்றது. நுட்பக் கருவிகள், பெரும் எஞ்சினீயரிங் சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி வேகமாக முன்னேறி வருகின்றது. 1972இல் உற்பத்தி செய்யட்பட்ட இனங்களில் 8,000 டிராக்டர்கள், 69,500 சென்டிரி பியூகல் பம்புகள், 2800 மரவேலை இயந்திரங்கள் 4,62,000 கிலோ வாட் ஆற்றல் மின்சார மோட்டார்கள், 60,000 KWA ஆற்றல் மின்விசை கடத்திகள், மற்றும் பல்வேறு சாதனங்களும் உட்படும்.

1972 இல் விவசாயத்தில் 494 கூட்டுப் பண்ணைகளும், 213 அரசு பண்ணைகளும் 7,00,000 டன் காய்கறிகளையும், 36 லட்சம் டன் சர்க்கரை வள்ளியையும், 8,58,000 டன் பழங்களையும், 3,86,000 டன் சூரியகாந்தி விதையையும், ஏராளமான திராட்சை, புகையிலை, நறுமண எண்ணெய் தரும் தாவரங்களையும் உற்பத்தி செய்தன. இங்கு கால்நடைத் தொழிலும் அபிவிருத்தி அடைந்துள்ளது. கசாப்பு, 10,43,000 மாடுகளும் பால் மாடுகளும், 13,32,000 செம்மறி ஆடு, வெள்ளாடுகளும், 15,50,000 பன்றிகளும் இருக்கின்றன.

மக்கட் தொகையில் ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் 22 மருத்துவர்களும், 99 மருத்துவமனைப் படுக்கைகளும் இருக்கின்றன. 1972 இல் 21·67 பொதுக் கல்வி பள்ளிகளில் மொத்தம் 8,00,000 மாணவர்கள் படித்தனர்; இதற்கிடையே, 8 உயர் கல்விப் பள்ளிகளில் 32,800 மாணவர்கள் அல்லது 10000 பேருக்கு 115 மாணவர் வீதமும், 46 விசேஷ செகண்டரி பள்ளிகளில் 52,800 மாணவர்கள் அல்லது 10,000 பேருக்கு 142 மாணவர் வீதமும் படித்தனர். இங்கு 1,897 பொது நூல் நிலையங்களும், 1,787 கிளப்புகளும், 8 நாடக அரங்குகளும், 1826 திரைப்பட யூனிட்களும் இருக்கின்றன. ஆண்டு தோறும் 1,800 நூல்கள் மொத்தத்தில் 1·25 கோடி பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன. 81 சஞ்சிகைகள், பத்திரிகைகளின் விற்பனை 13 லட்சம் பிரதிகள்; 119 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை 20 லட்சம் பிரதிகள்.

## லாத்விய சோவியத் சோஷலிசக் குடியரசு

1940 ஜூலை 21 இல் அமைக்கப்பட்டது. பரப்பளவு 63,700 சதுர கிலோ மீட்டர். மக்கட் தொகை—24,30,000, இவர்களில் லெட்டுகள் (56·8%), ரஷ்யர்கள் (29·8%), பைலோ ரஷ்யர்கள் (4%), போலந்துக்காரர்கள் (2 7%), உக்ரேனியர்கள் (2·3%), லிதுவேனியர்கள் (1·7%), யூதர்கள் (1·6%) உட்படுவா.

தலைநகர் ரீகா (வசிக்கும் மக்கள் 7,65,000).

இக்குடியரசில் இரசாயன, பெட்ரோ-இரசாயன தொழில்களும், அச்சு இயந்திர, இஞ்சினியரிங், உலோகம் வெட்டுப் கப்பல் கட்டும், மர-வேலை, உணவு, மென்னியந்திரத் தொழில்களும் வளர்ந்துள்ளன. மொத்த தொழிற்துறை உற்பத்தியில் இஞ்சினியரிங் பொருள் உற்பத்தி கால்பங்கு ஆகும்.

1972 இல் இக்குடியரசு 230 கோடி கிலோவாட் மின்விசையை உற்பத்தி செய்தது. அது ஆண்டுதோறும் மின்சார ரயில்வண்டி

களையும் (சோவியத் யூனியனின் மொத்த உற்பத்தியில் கால்பங்கு), பயணிகள் வண்டிகளையும் (596), சப்தம் செய்யாத டிராம்கள் (250), சிறு பஸ்கள் (3,400), விவசாய இயந்திரங்களையும், தொலைபேசிகள், மின்சார பல்புகள், சகல வேலை லோடர்கள், டீசல் இஞ்சின்கள், தானியங்கி டெலிபிரண்டர் எக்ஸ்சேஞ்சுகளையும்,ரேடியோ பெட்டிகள், மின்சார வெப்பத் தகடுகள், தொழில் நுட்ப ரப்பர் சாமான்களையும், மருந்துப் பொருட்கள், பின்னல் ஆடைகள், மேஜை நாற்காலி சாமான்கள், காகிதத்தையும் உற்பத்தி செய்கிறது. 4,00,000 டன்களுக்கு அதிகமான மீன்கள்—இவை :பெரும்பாலும் அட்லாண்டிக் மீன்வகையும் அயிரை வகை மீனும் (சோவியத் யூனியன் மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு), பிடிக்கப்படுகின்றன. இறைச்சி அடைப்பான் தொழிலும், பால்பண்ணைத் தொழிலும் முன்னேற்றமடைந்துள்ளன.

விவசாயத்தில் பால்பண்ணைத் தொழிலிலும், தரமான பயிர் செய்வதிலும், பன்றி வளர்ப்பிலும் தனித்தேர்ச்சி ஏற்பட்டுள்ளது. சாகுபடி நிலம் மொத்த நிலத்தில் சுமார் பாதி, இதில் மூன்றில் இரண்டு பங்கு உழவு நிலம்; மீதி பசும்புல் நிலமும், மேய்ச்சல் நிலமும் ஆகும்; தாவர வளர்ப்பு இரண்டாம் பட்சம்; இது கால்நடைகளுக்கு தீனியை அளிக்கின்றது.

இங்கு 641 கூட்டுப் பண்ணைகளும், 14 மீன் பிடிக்கும் தொழில் கூட்டுறவுகளும், 230 அரசுப் பண்ணைகளும் இருக்கின்றன. கசாப்பு மாடுகள், பால்மாடுகள், 12,88,000; அதில் பசுக்கள் 5,95,000; பன்றிகள் 11,36,000, செம்மறி ஆடுகளும் கோழிகளும் முறையே 3,30,000 ம் 66,16,000 ஆகும்.

1972 க்கான மொத்த உற்பத்தியில் தானியம் 9,72,000 டன்கள், மென்சணல் 5000 டன்கள், சர்க்கரை வள்ளி 2,94,000 டன்கள், உருளைக்கிழங்கு 15 லட்சம் டன்கள், இதர காய்கறிகள் 2,34,000 டன்கள் ஆகும்.

மக்கட் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கு 37 மருத்துவர்களும், 120 மருத்துவமனைப் படுக்கைகளும் உள்ளன. 1972 இல் 1,203 பொதுக்கல்வி பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை 3,63,000 ஆகும். இதற்கிடையே 10 உயர்கல்வி அமைப்புகள் 42,500 மாணவர்களுக்கு அல்லது 10,000 பேருக்கு 174 மாணவர் வீதமும், 54 விசேஷ செகண்டரி பள்ளிகள் 39,300 மாணவர்களுக்கு அல்லது 10,000 பேருக்கு 161 மாணவர் வீதமும் கல்வி போதித்தது. இங்கு 1600 பொது நூல் நிலையங்களும், ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளப்புகளும், 10 நாடக அரங்குகளும், 1,300 திரைப்பட யூனிட்களும் இருக்கின்றன.

ஆண்டுதோறும் 24,000 தலைப்பில் நூல்கள் மொத்தத்தில் 1·6 கோடி பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன ; அதே சமயத்தில் 98 சஞ்சிகைகள். பத்திரிகைகளின் விற்பனையும், 76 செய்திப் பத்திரிகைகளின் விற்பனையும் முறையே 20 லட்சமும், 13 லட்சமும் ஆகும்.

## கிர்கிஸ் சோவியத் சோஷலிசக் குடியரசு

1936 டிசம்பர் 5 இல் அமைக்கப்பட்டது. பரப்பளவு 1,98,500 சதுர கிலோ மீட்டர். மக்கட் தொகை—31,45,000. இதில் கிர்கீசியர்களும் (43·8%), ரஷ்யர்களும் (29·2%), உஸ்பெக்குகள் (11·3%), உக்ரேனியர்கள் (4·1%), தாத்தாரியர் களும் (2·4%), மற்றும் உய்குர்களும், கஜக்குகளும், தாஜிக்களும் உட்படுவர்.

தலைநகர் ஃப்ருன்சே (4,63,000 நகர வாசிகள்).

இங்கு கிடைக்கும் கனிப்பொருட்களில் பாதரசம், அஞ்சனக் கல், நிலக்கரி, எண்ணெய், இயற்கை எரிவாயு, ஈயம், துத்தநாகம் உட்படும். இதன் ஆறுகள் எதிர்காலத்தில் மின்சார சப்ளை செய்யும் வாய்ப்புடையவை.

இது பெரும்பாலும் இரும்பல்லாத உலோகங்கள், அஞ்சனக் கல், பாதரசம், ஈயம், துத்தநாக தாதுக்கள் ஆகியவற்றில் தலையாய இடம் வகிக்கிறது. இக்குடியரசில் ஒரு வளர்ந்துவரும் மின்விசை இஞ்சினியரிங் தொழிலும் உள்ளது. 1972 இல் கிர்கீசியா 38,27,000 டன் நிலக்கரி, 406 கோடி கிலோவாட் மணி மின்விசை, 39·5 கோடி கனமீட்டர் எரிவாயுவையும், 2,292 வகை இயந்திரக் கருவிகளையும் உற்பத்தி செய்தது. அதன் தொழில்கள், மின்சார சாதனங்கள் கருவிகளையும், மோட்டார் வாகனங்கள், பல்வேறு பண்ணை இயந்திரங்கள், கட்டட சாதனங்கள், தோல்கள், கம்பளி துணிகள், பட்டுத் துணிகளையும் கூட உற்பத்தி செய்கின்றன

அல்பைன் புல்வெளி கால்நடை வளர்ப்பு விவசாயத்தில் பிர தானமாய் உள்ளது. நேர்த்தியான, ஓரளவு நேர்த்தியான ரோம ஆடுகள், கசாப்பு மாடுகள், பால் மாடுகள், உயர்தரமான குதிரை கள் வளர்ப்புக்கு இங்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. 1971 இல் இங்கு 97 லட்சம் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகளும், 9,35,800 கசாப்பு மாடுகள், பால் மாடுகளும், 2,64,000 குதிரைகளும் இருந்தன. பன்றிகளின் (2,83,600) வளர்ப்பும், முயல்கள், தேனீ வளர்ப்பும்கூட வளர்ந்து வருகின்றன.

1972 ல் மொத்த உற்பத்தி 1,89,000 டன் பருத்தியும், 18,25,000 டன் சர்க்கரை வள்ளியும், 11,68,000 டன் தானியமும் ஆகும். ஸ்தலத்தில் விளையும் தானியம் இக்குடியரசின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்கிறது. பாசன வசதி யுடைய நிலங்களில் கௌஃபும், சணலும், புகையிலையும், பாப்பி யும் பயிரிடப்படுகின்றன. தோட்டப்பயிர், திராட்சை சாகுபடி, பட்டு புழு வளர்ப்பு நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. இங்கு 236 கூட்டுப் பண்ணைகளும், 109 அரசு பண்ணைகளும் உள்ளன.

மக்கட் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கும் 21 மருத்துவர்களும் 110 மருத்துவமனைப் படுக்கைகளும் உள்ளன. 1972 இல் 1810 பொதுக் கல்விப் பள்ளிகளில் 8,23,000 மாணவர்கள் படித்தனர். இதற்கிடையில் ஒன்பது உயர்கல்வி அமைப்புக்களில் 49,200 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 பேர்களுக்கு 156 வீதமும், 36 விசேஷ செகண்டரி கல்வி அமைப்புகளில் 41,900 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு 133 மாணவர் வீதமும் இருந்தனர். 1,400 பொது நூல் நிலையங்களும், 1,039 கிளப்புகளும், 6 நாடக அரங்குகளும், 1,100 திரைப்படக் காட்சி யூனிட்டுகளும் இருந்தன. ஆண்டு தோறும் 1,000 நூல்கள் 64 லட்சம் பிரதிகள் மொத்தத்தில் அச்சடிக்கப்படுகின்றன. 46 சஞ்சிகைகள், பத்திரிகைகளின் மொத்த விற்பனை 7,23,000 பிரதிகள், 90 செய்திப் பத்திரிகை களின் விற்பனை 9,60,000 பிரதிகள்.

## தாஜிக் சோவியத் சோஷலிசக் குடியரசு

1929 டிசம்பர் 5 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பரப்பளவு 1,43,100 சதுர கிலோ மீட்டர். மக்கட் தொகை—32,00,000 இதில் தாஜிக்குகளும் (56·2%), உஸ்பெக்குகள் (23%), ரஷ்யர்கள் (11·9%), கிர்கீசியர் (1·2%), உக்ரேனியர் (1·1%), கஜக்குகளும் (0·3%) உட்படுவர். கோர்நோ—பாடாக்ஷான் சுயாட்சிக் குடியரசு இதில் இணைந்துள்ளது.

தலைநகரம் துஷான்பே. (4,11,000 மக்கள்).

கனிப்பொருட்களில் நிலக்கரி, எண்ணெய், எரிவாயு, இரும்புத் தாது, பலவகை உலோகங்கள், துத்தநாகம், ஈயம், அலுமினியத் தாது, தங்கம், மணிக்கற்களும், பாறை உப்பின் ஏராளமான படி வங்கள், கட்டட சாதனங்கள் செய்வதற்கான மூலப் பொருட்கள் ஆகியவை உட்படும். பல கனிச்சத்து நீரூற்றுக்கள் இங்கு உள்ளன. பிரதான தொழில்கள் ஜவுளித் தொழிலும், உணவுத் தொழில் களும் ஆகும். தாது சுத்தப்படுத்தும் தொழில், கட்டட சாதனங்கள் உற்பத்தி, உலோக வேலை, இஞ்சினியரிங், மின்சார

இஞ்சினியரிங் ஆகிய தொழில்களுடன் கூடவே நிலக்கரி, எண்ணெய், துத்தநாகம், ஈயம், டங்ஸ்டன் ஆகிய தொழில்களும் வேகமாக வளர்ந்து வருகின்றன.

1972 க்கான உற்பத்திப் புள்ளி விவரங்கள் : 354·8 கோடி கிலோவாட் மணி மின்சாரம், 1,98,000 டன் எண்ணெய், 49·8 கோடி கனமீட்டர் எரிவாயு, 9,00,000 டன் நிலக்கரி, மொத்தமாக 17,63,000 கிலோவாட் மணி ஆற்றல் மின் கடத்திகள், 9,67,000 டன் சிமெண்ட், 6,00,000 கனமீட்டர் முன்பே தயாரித்த உருக்கு சிமெண்ட் கலவைகள், 31·3 கோடி செங்கற்கள், 6·6 கோடி தகட்டு ஓடுகள், 2,57,000 டன் பருத்தி இழைகள், 7·8 கோடி சதுர மீட்டர் பருத்தி ஜவுளி, 4·3 கோடி சதுர மீட்டர் பட்டுத்துணி, 35 லட்சம் சதுர மீட்டர் போர் வைகள், கம்பளங்கள்.

விவசாயத்தில், பருத்தி சாகுபடி பட்டுப்புழு வளர்ப்பு, தோட்டப்பயிர், திராட்சை சாகுபடி, கோதுமை, பார்லி பயிரிடுதல், மலைப் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1972 இல் கச்சாப் பருத்தி அறுவடை 7,43,000 டன்கள். ஜெரேனியம் செடி, எள் செடி, புகையிலை ஆகியவை இங்கு உற்பத்தி செய்யப்பட்ட இதர தொழிற்துறை செடி வகைகள். உண்மையில், சோவியத் யூனியனுக்கு ஜெரேனியம் எண்ணெய் சப்ளை செய்யும் பிரதான குடியரசு இது.

கால்நடை வளர்ப்புத் துறையில் செம்மறி ஆடு வளர்ப்பு—ஆஷ்ட்ரகான் ஆடுகள் உட்பட—ஆதிக்கம் வகிக்கிறது. ஆண்டு தோறும் 2,50,000 தோல் கிடைக்கிறது. இங்கு 10,60,000 கசாப்பு மாடுகளும் பால் மாடுகளும்—4,05,000 பசுக்கள் உட்பட—95,000 பன்றிகளும், 27 லட்சம் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகளும் இருக்கின்றன. 1972 ல் உற்பத்தி 70,700 டன் இறைச்சி, 3,14,000 டன் பால், 5,004 டன் கம்பளி ரோமம், 16·6 கோடி முட்டைகள் ஆகிய அளவை எட்டிற்று.

265 கூட்டுப் பண்ணைகளும், 107 அரசுப் பண்ணைகளும் உள்ளன.

மக்களின் ஒவ்வொரு 10,000 பேருக்கு முறையே 16 மருத்துவர்களும் 98 மருத்துவமனைப் படுக்கைகளும் உள்ளன. 1972 இல் 3,088 பொதுக்கல்விப் பள்ளிகளில் 8,46,000 மாணவர்கள் படித்தனர். இதற்கிடையே 7 உயர்கல்வி அமைப்பு களில் 46,200 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு 149 மாணவர் வீதமும், 36 விசேஷ செகண்டரி கல்விப் பள்ளி களில் 36,700 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு

118 மாணவர் வீதமும் இருந்தனர். 1,163 பொது நூல் நிலையங்களும், 929 கிளப்புகளும், 10 நாடக அரங்குகளும், 1,000 க்கு மேற்பட்ட திரைப்படக் காட்சி யூனிட்டுகளும் இங்கு உள்ளன; இதற்கிடையில் 720 நூல்களின் 57 லட்சம் பிரதிகள் ஆண்டு தோறும் மொத்தத்தில் அச்சடிக்கப்படுகின்றன. முறையே 42 சஞ்சிகைகள், பத்திரிகைகள், 60 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை 4,60,000 பிரதிகளும் 9,58,000 பிரதிகளும் ஆகும்.

## அர்மீனிய சோவியத் சோஷலிசக் குடியரசு

1920 நவம்பர் 29 இல் அமைப்பு. பரப்பளவு 29,800 சதுர கிலோ மீட்டர். மக்கட் தொகை 26,72,000. இதில் அர்மீனியர்களும் (88·6%) அசர்பைஜானியர்களும் (5·9%), ரஷ்யர்களும் (2·7%), குர்துகளும் (1·5%), மற்றும் உக்ரேனியர்களும், கிரேக்கர்களும், அசீரியர்களும் உட்படுவர்.

தலைநகர் எரவான், (8,43,000 மக்கள்).

இரும்பல்லாத உலோகம், இரசாயன, மின்சார இஞ்சினியரிங் தொழில்கள் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளன. 1972 ல் உற்பத்தி செய்யப்பட்ட இனங்களில் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் காய்ப்பு செம்பு, அதி-மாலிப்டெனம், அலுமினியம், செயற்கை ரப்பர், கனிஉரம் (3,45,000 டன்கள்), வார்னிஷ், பெயின்ட், சாயப் பொருட்கள், கந்தக அமிலம் (84,400 டன்கள்) இரசாயன இழைகள் (7800 டன்கள்), மின் கடத்திகள் (50,20,000 கிலோவாட் ஆற்றல்) ஏ. சி. ஜெனரேட்டர்கள், (10,21,000 கிலோவாட் ஆற்றல்) ஹைட்ரோ டர்பைன்கள், கம்பிரசர்கள், உலோகம் வெட்டும் இயந்திரக் கருவிகள் (11,600 உருப்படிகள்) தானியங்கி சாதனங்கள், நடமாடும் மின்விசை ஆலைகள், டயர்கள், சிமெண்ட், பருத்தி, கம்பளி, பட்டுத்துணிகள், (முறையே இவை 6·86 கோடி, 60 லட்சம், 1·35 கோடி சதுர மீட்டர்கள்) போர்வைகள், கம்பளங்கள் (16,20,000 சதுர மீட்டர்), அடைப்பான் உணவுப் பொருட்கள் (26 கோடி டின்கள்), ஒயின் (9 கோடி லிட்டர்) ஆகியவை உட்படும். மின்விசை உற்பத்தி 751·6 கோடி கிலோவாட் மணி. ஜவுளி, காலணி, ஒயின் தயாரிப்பு, அடைப்பான் ஆகிய தொழில்கள் பிரதானமாக ஸ்தலத்தில் உற்பத்தி செய்யும் சாதனங்களை அடிப்படையாகக் கொண்டவை.

265 அரசு பண்ணைகளும், 475 கூட்டுப் பண்ணைகளும் விவசாயத்தை நடத்திச் செல்கின்றன. பயிரிடப்பட்ட நிலத்தில் பாதியில் தானிய உற்பத்தி; மீதியில் கால்நடை தீவனப் பயிர்கள். காய்கறிகள், வாசனை எண்ணெய் சத்துள்ள

செடிகள், அநேகமாக முற்றிலும் அரராட் பள்ளத்தாக்கில் உற்பத்தியாகின்றன. பாதாம், ஆலிவ், அத்தி, மாதுளை, மல்பெரி, திராட்சை, பழங்கள், புகையிலை ஆகிய வறண்ட வெப்பமண்டல பிரதேசத் தாவரங்கள் கடல் மட்டத்திலிருந்து 1,400 மீட்டர் வரை உயர்வான இடங்களில் வளர்க்கப்படுகின்றன, கடல் மட்டத்திலிருந்து 2,300 மீட்டர் உயர்வான பிரதேசங்களில் பருப்பு வகைகள், சர்க்கரை-வள்ளி, உருளைக் கிழங்கு, சில இடங்களில் மீண்டும் புகையிலை அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. அதற்கும் அப்பாற்பட்டு நிரந்தரமான பனிக் கட்டி பரந்துள்ள அல்பைன் புல்வெளிப் பிரதேசம் தரமானதான செம்மறி ஆடு வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

1972 அறுவடை புள்ளி விவரங்களாவன: தானியம் 2,61,000 டன்கள், காய்கறிகள் 3,02,000 டன்கள், பழங்கள் 71,000, டன்கள், திராட்சைப்பழம் 1,04,000 டன்கள். அதே ஆண்டில காலநடை வளர்ப்புத் தொழிலின் உற்பத்தி இறைச்சி 54,500 டன்கள், பால் 4,07,600டன்கள், 27.2 கோடி முட்டைகள், கம்பளி 4,100 டன்கள் இருந்தன. இங்கு 7,13,000 இறைச்சி மாடுகள் பால்மாடுகள்—2,83,500 பசுக்கள் உட்பட—1,50,000 பன்றிகள், 23,18,000 செம்மறி ஆடுகள் வெள்ளாடுகள் உள்ளன.

மக்கள் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கு டாக்டர்களும், ஆஸ்பத்திரி படுக்கைகளும் முறையே 30 ஆகவும் 86 ஆகவும் உள்ளன. 1972இல் 1511 பொதுக் கல்விப் பள்ளிகளின் மொத்த மாணவர் எண்ணிக்கை 6,77,600. அதேசமயம் 12 உயர்கல்வி அமைப்புகளில் 53,900 மாணவர்களும், அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு 200 மாணவர் வீதமும், 59 விசேஷ செகண்டரி கல்வி அமைப்புகளில் 50,200 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 ஆயிரம் பேரில் 185 மாணவர் வீதமும் இருந்தனர். இங்கு 1,266 பொது நூல் நிலையங்களும் 1,100 கிளப்புகளும், 14 நாடக அரங்குகளும், 752 திரைப்பட காட்சி யூனிட்டுகளும் இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் 1,100 நூல்கள் 1.05 கோடி பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன; 104 சஞ்சிகைகள் பத்திரிகைகளின், 75 செய்திப் பத்திரிகைகளின் விற்பனை முறையே 8,64,000 பிரதிகளும், 12 லட்சம் பிரதிகளும் ஆகும்.

## துர்க்மென் சோவியத் சோஷலிசக் குடியரசு

1924 அக்டோபர் 27இல் அமைப்பு: பரப்பளவு 4,88,100 சதுர கிலோ மீட்டர். துர்க்மென் (65.6%), ரஷ்யர்கள் (14.5%),

உஸ்பெக்குகள் (8.3%), கஜக்குகள் (3.2%), தாத்தாரியர் (1.7%), உக்ரேனியர்கள் (1.6%), அர்மீனியர்கள் (1.1%) உட்பட மொத்த மக்கட் தொகை 23,64,000 ஆகும்.

தலைநகர் அஷ்காபாத் (2,73,000 மக்கள்)

கனிப் பொருள்களில் எண்ணெய், எரிவாயு, மிரபிலைட், ஈயம், நிலக்கரி, கந்தகம், டாரைட், மாக்னிஷியம், அயோடின், புரோமின், பொட்டாஷியம், விதரைட், மற்றும் சுண்ணாம்புக்கல், மணற் பாறை, ஜிப்சம், சரளைக்கல், படிக்கக்கல், போன்ற பயனுள்ள கட்டட சாதனங்கள் ஆகியவை உட்படும்.

பொருளாதாரத்தின் கேந்திரக் கிளைகள் கனி கச்சாப் பொருட்களைத் தோண்டி எடுப்பதும் சுத்திகரிப்பதும் ஆகும்; எரிவாயு, இரசாயன, எண்ணெய் சுத்திகரிப்பு, எஞ்சினியரிங் தொழில்களும் வேகமாக வளர்ந்து வருகின்றன. பருத்தி ஜவுளி, பட்டு ரீலிங், உலகப் புகழ்பெற்ற கம்பளங்கள், போர்வைகள் நெய்தல், ஆகிய மென் ரக தொழில்களும் பிரபலமடைந்துள்ளன. தலையாய உணவுப் பொருட் தொழில்கள் இறைச்சியை டின்களில் அடைத்தல், ஒயின் தயாரிப்பு, மீன்களைப் பதப்படுத்தல் ஆகியவை; இவையெல்லாம் ஸ்தல ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டவை.

1972க்கான உற்பத்தி விவரங்கள் வருமாறு: 183 கோடி கிலோவாட் மணி மின்சாரம், 159 கோடி டன் எண்ணெய், 2,130 கோடி கன மீட்டர் எரிவாயு, 76,000 டன் கனி உரம், 4,59,000 கன மீட்டர் முன்பே தயாரிக்கப்பட்ட இரும்பு சிமெண்ட் கலவை சிமெண்ட் கூறுகள், 18 கோடி செங்கல்கள், 3.5 கோடி ஆஸ்பெஸ் டாஸ் சிமெண்ட் தகட்டு ஓடுகள், 99 லட்சம் சதுர மீட்டர் சன்னல் கண்ணாடி, 2,72,000 டன் பருத்தி இழை, 68,000 சதுர மீட்டர் கம்பளங்கள், போர்வைகள், 8,85,000 சதுரமீட்டர் கம்பளித்துணிகள், 54 லட்சம் சதுரமீட்டர் பருத்தித் துணிகள், 1.79 கோடி சதுர மீட்டர் பருத்தி ஜவுளி ஆகியவை இக்குடியரசு 1,22,70,000 லிட்டர் ஒயினையும் 1,88,000 டன் உப்பையும் உற்பத்தி செய்தது.

இங்கு 372 கூட்டுப் பண்ணைகளும், 4 மீன்பிடிக்கும் தொழில் கூட்டுறவுகளும், 53 அரசுப்பண்ணைகளும் இருக்கின்றன. இங்குள்ள சகல சாகுபடி நிலங்களும் நீர்பாசன வசதி பெற்றவை. பிரதான பயிர் பருத்தி, இதில் நேர்த்தியான இழை பருத்திவகை ஏராளமாயுள்ளது: கோதுமை, பார்லி, சோளம், மக்காச் சோளம் பயிரிடப்படுகின்றன. பட்டுப்புழு வளர்ப்பு, தோட்டக்

கலை, திராட்சை, மது தயாரிப்புக்கலை எல்லா பாலைவனப் பசுந்திடல்களிலும் வளர்க்கப்பட்டுள்ளன.

1972க்கான அறுவடைக் கணக்கில் 1,14,400 டன் தானியமும், 9,31,500 டன் பருத்தியும், 26,000 டன் கெனுஃபும், 1,66,800 டன் காய்கறிகளும், 1,41,600 டன் முலாம் பழவகையும் உட்படும்.

கால்நடை வளர்ப்புத் துறையில், ஆஷ்டிரகான் செம்மறி ஆடு, ஒட்டகங்கள், குதிரைகள் ஆகியவற்றின் வளர்ப்பு ஆதிக்கம் வகிக்கின்றது.

1972ல் 4,59,600 கசாப்பு மாடுகள், பால்மாடுகளும், இதில் 1,93,100 பசுக்களும் உட்படும்—99,100 பன்றிகளும், 39 லட்சம் செம்மறி வெள்ளாடுகளும், இருந்தன; உற்பத்தியில் 61,300 டன் இறைச்சி, 1,97,400 டன் பால், 13·5 கோடி முட்டைகள் 12,400 டன் கம்பளி ரோமம் ஆகியவை உட்படும்.

மக்கட்தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கு 22 மருத்துவர்கள், 102 மருத்துவமனை படுக்கைகள் உள்ளன. 1972ல் 1653 பொதுக் கல்விப் பள்ளிகளில் 6,12,500 மாணவர்கள் கல்வி கற்றனர். அதே சமயத்தில், 5 உயர் கல்வி அமைப்புகளில் 29,700 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு 125 மாணவர் வீதமும், 29 விசேஷ செகண்டரி பள்ளிகளில் 28,600 மாணவர்கள் அல்லது ஒவ்வொரு 10,000 பேருக்கு 120 மாணவர் வீதமும் இருந்தனர். 1,133 பொது நூல்நிலையங்களும், 733 கிளைப்புகளும், 6 நாடக அரங்குகள், 775 திரைப்படக்காட்சி யூனிட்டுகளும் இருக்கின்றன. மொத்தத்தில் 467 நூல்கள் 50 லட்சத்திற்கு மேற்பட்ட பிரதிகளில் ஆண்டுதோறும் அச்சடிக்கப்படுகின்றன. அதே சமயத்தில் 38 சஞ்சிகைகள் பத்திரிகைகளும், 47 செய்திப் பத்திரிகைகளும் முறையே 4,00,000க்கு மேற்பட்ட பிரதிகளும், 7,75,000 பிரதிகளும் விற்கப்பட்டன.

## எஸ்தோனிய சோவியத் சோஷலிசக் குடியரசு

1940 ஜுலை 21இல் அமைப்பு. பரப்பளவு 45,100 சதுர கிலோ மீட்டர். மக்கட்தொகை-14,05,000 பேர். இவர்களில் எஸ்தோனியர்கள் (68·2%), ரஷ்யர்கள் (24·7%), உக்ரேனியர்கள் (2·1·/.), பின்லாந்துக்காரர் (1·4·/.), பைலோரஷ்யர்கள் (1·4·/.), யூதர்கள் (0·4·/.) ஆகியோர் உட்படுவர்.

தலைநகரம் தாலினின் (3,86,000 நகர் வாசிகள்).

முதல் வரிசையில் இடம் பெறத்தக்க கனி, எளிதில் நெருப்புப் பற்றக் கூடிய மென்களிக்கல் ஆகும். இதன் மதிப்பிடப்பட்ட வளம் பல நூற்றுக்கணக்கான கோடி டன் அளவுக்குச் செல்கிறது. இதிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 2 கோடி டன் வெட்டி எடுக்கப்படுகிறது. (சோவியத் யூனியனின் மொத்த உற்பத்தியில் ஐந்தில் மூன்று பங்கு), மென்களிக்கல் வடிநிலத்தின் மையமாக விளங்கும் கோக்த்லாஜார்வேயைச் சுற்றிலும் ஒரு பெரும் தொழில்துறை பிராந்தியமே உருவாகி விட்டது.

1972இல் இக்குடியரசு ஏராளமான அளவில் மின்சாரத்தை (மொத்தத்தில் 1,450 கோடி கிலோ வாட் மணி) உற்பத்தி செய்தது; மென்களிக்கல்லிலிருந்து எரிவாயுவை (56·8 கோடி கன மீட்டர்) எடுத்தது; மின்சார மோட்டார்களையும் (1,805 அல்லது சோவியத் யூனியன் மொத்த உற்பத்தியில் பத்தில் ஒரு பங்கையும் விட அதிகம்), நில அபிவிருத்திக்கான அகழ்வு இயந்திரங்களையும் (1828), காகிதத்தையும் (146·6 கோடி சதுர மீட்டர்— உற்பத்தியில் ரஷ்ய சமஷ்டிக்கு இரண்டாவதாக), மென்களிக்கல் தொழிலுக்கான சாதனங்கள், கேபிள் கம்பிகளையும் உற்பத்தி செய்தது. உணவுத் தொழில்களில் இறைச்சியை டின்களில் அடைத்தல், வெண்ணெய் தயாரித்தல், சிறப்பாக மீன், மீன் உணவு பதப்படுத்தல் ஆகிய தொழில்கள் பிரதானமானவை. இவை இக்குடியரசின் மொத்த தொழில்துறை உற்பத்தியில் மூன்றில் ஒரு பாகமாக இருக்கின்றன.

235 கூட்டுப் பண்ணைகளும், 164 அரசு பண்ணைகளும் இங்கு உள்ளன. கால்நடை வளர்ப்பு முதலிடம் வகிக்கிறது. இதர வகையில் பார்லி, ஓட்ஸ், கால்நடைத் தீவனப் புல், கலப்பு தானியங்கள், பெரும்பாலும் கால்நடை தீவனம் ஆகிய சாகுபடியும், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், பழவகை பயிரிடுதல், குதிரை வளர்ப்பு, மென்மயிர் தோல்கொண்டுள்ள பிராணிகளை வளர்த்தல், முக்கியமாக ஒருவகை நரி, மின்க் ஆகியவை வளர்த்தல் உட்படும். விவசாய உற்பத்தியில் மூன்றில் இரு பங்காக உள்ள கால்நடை வளர்ப்புத் துறையில் உயர்தரமான விலங்குகள் வளர்ப்பு, இறைச்சிப் பண்ணை, பால்பண்ணை ஆகியவற்றுக்கும், இறைச்சிக்காக பன்றிகள் வளர்ப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. 1972ல் இங்கு 7,43,900 கசாப்பு மாடுகள், பால் மாடுகளும் இருந்தன. இதில் 3,15,400 பசுக்கள் மற்றும் 6,94,400 பன்றிகளும், 1,82,000 செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் இருந்தன.

1972இல் 1,52,600 டன் இறைச்சியும், 10,45,000 டன் பாலும், 42·5 கோடி முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

மக்களில் ஒவ்வொரு 10,000 பேருக்கும் டாக்டர்கள், மருத்துவமனைப் படுக்கைகளின் எண்ணிக்கை முறையே 34 ஆகவும் 112 ஆகவும் இருந்தது. 1972இல் 766 பொதுக் கல்விப் பள்ளி களில் மொத்தம் 2,16,100 மாணவர்கள் கல்வி கற்றனர். அதே சமயத்தில் 6 உயர் பள்ளிகளிலும், 37 விசேஷ செகண்டரி பள்ளி களிலும் முறையே 21,800 மாணவர்களும், 23,800 மாணவர் களும் அல்லது ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் 155 பேர், 170 பேர் வீதமும் இருந்தனர். இங்கு 816 பொது நூல்நிலையங் களும், 515 கிளப்புகளும், 9 நாடக அரங்குகளும், 514 திரைப் படக்காட்சி யூனிட்டுகளும் இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் 2,300 நூல்களின் 1·3 கோடிக்கு மேற்பட்ட பிரதிகள் மொத்தத்தில் அச்சடிக்கப்படுகின்றன; அதே சமயம் 153 சஞ்சிகைகள் பத்திரிகைகளின் 34 செய்திப் பத்திரிகைகளின் மொத்த விற்பனை முறையே12 லட்சமாகவும், 10 லட்சத்திற்கு மேலாகவும் உள்ளது.

# சமூக, அரசாங்க கட்டமைப்பு

*சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியமுறை ஒரு பல-தேசிய இன அரசுக்கு மிகவும் நிலையான, பயனுள்ள முறையாகும்; சமூகம் முழுவதன் நலன்களுக்கும் அதிலுள்ள ஒவ்வொரு தேசத்தின் நலன்களுக்கும் இடையே இணக்கம் நிலவ இந்த முறை உத்தரவாதமளிக்கிறது.*

சோவியத் யூனியனில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உலகின் முதலாவது சோஷலிச சமுதாயம் 1917 அக்டோபர் புரட்சி தோற்றுவித்த மாற்றங்களிலிருந்து பிறந்ததாகும்.

மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையை ஒழித்துக் கட்டியதன் மூலமும், அனைத்துப் பிரஜைகளுக்கும் சமத்துவ உரிமைகளையும் வாய்ப்புக்களையும் அளித்ததன் மூலமும், சோஷலிசம் உண்மையான தனி மனித சுதந்திரத்தை உத்தரவாதம் செய்துள்ளது; சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களது சுபீட்ச நலனும் அவர்களது சுதந்திரமான, சர்வாம்ச வளர்ச்சியும் இடையறாது மேம்படுவதற்கான சகல நிலைமைகளையும் உருவாக்கித் தந்துள்ளது.

சோவியத் யூனியனில் கட்டப்பட்டுள்ள முன்னேற்றமடைந்த சோஷலிச சமுதாயம் இணக்கமான வளர்ச்சி கொண்ட ஒரு சமுதாயமாகும்; இந்த சமுதாயத்தில் சோஷலிசத்தினதும் அதன் பொருளாதார அரசியல் அமைப்பினதும் எல்லா அனுகூலங்களும் முழு அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

சோவியத் சமுதாயத்தின் சமூக-அரசியல், சித்தாந்த ஒற்றுமை, சோவியத் தேசபக்தி, சோவியத் தேசிய இன மக்களிடையேயுள்ள நட்புறவு, கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையில் மக்களின் ஐக்கியம் ஆகியவையே சோவியத் யூனியனது பலத்திற்கு ஆதாரமாகும்.

## சோவியத் முறையின் அடிப்படை அம்சங்கள்

சோவியத் யூனியனின் அரசியல் சட்டப்படி சோவியத் நாட்டில் எல்லா அதிகாரங்களும் உழைப்பாளி மக்களுக்கே சொந்தம். இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆட்சி அமைப்புக்களான உழைப்பாளி மக்கள் பிரதிநிதி களது சோவியத்துக்கள் இந்த அதிகாரங்களை வகிக்கின்றன. சோவியத்துக்களே அரசின் அரசியல் அடித்தளம்.

சோவியத் சமுதாயத்தின் பொருளாதார அடித்தளம் சோஷலிசப் பொருளாதார அமைப்பும், உற்பத்திச் சாதனங்களிலும் இயற்கை வளங்களிலுமான சோஷலிச உடைமையுமாகும்.

உற்பத்திச் சாதனங்களில் தனிவுடைமை என்பதை சோவியத் சோஷலிச அமைப்பு என்றென்றைக்குமாக ஒழித்துக் கட்டிவிட்டது. உற்பத்திச் சாதனங்களில் தனிவுடைமைதான் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமைக்கு மூலகாரணமாகும். சோவியத் சமுதாயத்தில் மக்களிடை முற்றிலும் புது விதமான உற்பத்தி உறவுகள், தோழமை மிக்க ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி என்னும் உறவுகள் வளர்ந்துள்ளன. உழைப்பாளி மக்களே - தொழிலாளிகள், விவசாயிகள், அறிவுத்துறையினர் ஆகியோர் - நாட்டின் செல்வமனைத்துக்கும் சொந்தக்காரர்களாக, தமது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளும் எஜமானர்களாக விளங்குகின்றனர். கம்யூனிச நிர்மாணம் என்னும் ஒரு பொதுக் குறிக்கோளை சோவியத் மக்கள் பெற்றுள்ளனர்.

சோவியத் யூனியனில் சோஷலிசப் பொதுச் சொத்துக்கள் அரசாங்கச் சொத்துக்கள் வடிவத்திலோ அல்லது கூட்டுறவு, கூட்டுப்பண்ணைச் சொத்துக்கள் வடிவத்திலோ அமைந்துள்ளன.

அரசாங்க சோஷலிசச் சொத்துக்கள் மக்கள் அனைவருக்கும் சொந்தம். நிலம், கனிச் செல்வம், காடுகள், நீர்நிலைகள், தொழில் நிலையங்கள், அரசாங்கம் நடத்தும் விவசாய நிறுவனங்கள், பாங்குகள், செய்திப் போக்குவரத்துச் சாதனங்கள், ரயில் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, விஞ்ஞான, கலாசார, வர்த்தக, பொதுசேவை நிறுவனங்கள், நகரங்களிலும் நகரப்புற பாணி குடியேற்றங்களிலுமுள்ள குடியிருப்பு வசதிகள், அரசாங்க நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் ஆகிய இவை யாவும் இந்தச் சொத்துக்களில் அடங்கும். அரசு தனது பொருளாதார அமைப்புக்கள் மூலம் மக்கள் சார்பில் அரசாங்க சொத்துக்களை நிர்வகிக்கிறது.

விவசாயிகள் தாமாகவே முன்வந்து பெரிய கூட்டுப் பண்ணைகளை அமைத்துக் கொண்டதன் விளைவாகவும், மற்றவர்கள்

பல்வேறு வகையான கூட்டுறவுகளை ஏற்படுத்திக் கொண்டதன் விளைவாகவும் கூட்டுறவு, கூட்டுப்பண்ணை சொத்துக்கள் தோன்றின.

கூட்டுறவு சொத்துக்கள் - எந்திரங்கள், பொதுக் கட்டடங்கள், தொழில் நிலையங்கள், எல்லோருக்கும் பொதுவான கால் நடைகள், கூட்டுப் பண்ணைகள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்கள் முதலியவை - அந்தந்தக் கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த விவசாயிகளுக்குச் சொந்தம். கூட்டுப் பண்ணையின் உறுப்பினர்களே இந்தச் சொத்துக்களை நிர்வகிக்கின்றனர்.

சோஷலிச கூட்டுறவு, கூட்டுப்பண்ணைச் சொத்துக்கள் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றன; பொது நலன்களுக்கான கூட்டு உழைப்பின் அடிப்படையில் அவை அமைந்துள்ளன. இந்த இரண்டு வகையான சொத்துக்கள் சோவியத் தேசப் பொருளாதாரத்தில் நிலைத்து நின்று, சோஷலிச உற்பத்தியும் வாழ்க்கைத் தரங்களும் இடையறாது வளர்வதற்கு வகை செய்கின்றன.

சொந்த சொத்துக்கள் சமூக சொத்துக்களிலிருந்து பிறந்தவையேயாகும். ஏனென்றால் மக்கள் சமூக உழைப்பில் பங்கெடுத்துக் கொள்வதற்காகக் கிட்டும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டவை சொந்த சொத்துக்கள். பிரஜைகள் சொந்த சொத்துக்கள் பெற்றிருப்பதற்கும் அவற்றைப் பிதுரார்ஜிதமாகப் பெறுவதற்கும் உரிமை உண்டு. இது சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது. சொந்த உடைமைகள் தவிர ஒரு வீடு, பழத் தோட்டம், கார், மற்றும் தன் சொந்த உபயோகத்துக்கு இதர பல பொருள்களை வைத்திருப்பதற்கு ஒவ்வொரு சோவியத் பிரஜையும் உரிமை பெற்றுள்ளார். ஆனால் ஓர் ஆலையையோ, வர்த்தக நிறுவனத்தையோ, அல்லது வாடகைக்கு விட்டு லாபம் சம்பாதிக்கும் சொத்துக்களையோ பெற்றிருக்க யாருக்கும் உரிமை இல்லை. பிறர் உழைப்பைச் சுரண்டி லாபம் சம்பாதிக்கும் தனியார் நிறுவனங்கள் சோவியத் யூனியனில் தடை செய்யப் பட்டுள்ளன. தனிப்பட்ட விவசாயிகளும் கைவினைஞர்களும் மற்றவர்கள் உழைப்பைச் சுரண்டாமல், தங்களது சொந்த உழைப்பின் அடிப்படையில் சிறு சிறு துணைப் பொருளாதாரங்களை மேற்கொள்ளச் சட்டம் அனுமதிக்கிறது.

உழைப்பது ஒவ்வொரு பிரஜையினது கடமை என சோவியத் யூனியன் அரசியல் சட்டம் கூறுகிறது. சோவியத் யூனியனில் ஒருவரது சமூக அந்தஸ்தும் சுபிட்ச நலனும் அவரது சொந்த உழைப்பாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. ''சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம்'' என்னும் சோஷலிசக் கோட்பாடு சோவியத் யூனியனில் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. பொது நலன்களுக்கும் சொந்த நலன்களுக்கும்

இடையே இணக்கம் நிலவவும், சோஷலிச சமுதாயத்தின் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தில் தனிப்பட்ட பிரஜைகளிடையே பொருளாயத செல்வம் மிக நியாயமான முறையில் விநியோகிக்கப்படவும் இந்தக் கோட்பாடு வகை செய்கிறது.

**சோவியத் அரசு.** 1917 ஆம் வருட அக்டோபர் புரட்சி பழைய அரசாங்க அமைப்பை ஒழித்துக் கட்டிற்று; முதலாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது; முற்றிலும் ஒரு புதுவிதமான அரசை-சோஷலிச அரசைத் தோற்றுவித்தது.

சோஷலிச அரசு அதன் வளர்ச்சிப் போக்கில் இரண்டு வரலாற்றுக் கட்டங்களைக் கடந்து செல்கிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறி, சோஷலிசம் இறுதியாகவும் முடிவாகவும் வெற்றி பெறுவது வரையுள்ள கட்டம் முதலாவது கட்டம். இந்தக் காலகட்டத்தில் சோஷலிச அரசு பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசாக இருந்து வருகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்குமுள்ள ஐக்கியத்தின் ஒரு விசேஷ வடிவம், முதலாளித்துவத்தை வெற்றி கொள்வதும், சோஷலிசத்தைக் கட்டி வலுப்படுத்துவதற்காக பூர்ஷுவா எதிர்ப்பை ஒடுக்குவதுமே இதன் குறிக்கோள் என்று லெனின் எழுதினார்.

பெரிதும் முன்னேற்றமடைந்த, அரசியல் ரீதியில் மிகச் சிறந்த முறையில் அணி திரட்டப்பெற்ற தொழிலாளி வர்க்கம் சோஷலிச அரசில் தலைமைப் பாத்திரம் வகிக்கிறது. அது தனது கூட்டாளிகள்—உழைக்கும் விவசாயிகள், அறிவுத் துறையினர், கைவினைஞர்கள் முதலியோர்—சோஷலிச நிர்மாணம் எனும் பொது லட்சியத்தில் தமக்குரிய இடத்தைப் பெறுவதற்கு உதவுகிறது.

லெனின் கருத்துப்படி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது பலாத்காரம் மட்டுமே அல்ல; பலாத்காரமே அதன் பிரதான பணியுமல்ல, மிகக் கடுமையான வர்க்கப் போராட்டங்கள் நடைபெற்று வந்த காலங்களில்கூட ஒரு சோஷலிச சமுதாயத்தைக் கட்டி வளர்ப்பதற்கும், புதிய மனிதனை உருவாக்குவதற்குப் பிரதான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

சோவியத் அரசும் சமுதாயமும் ஒரு மகத்தான வரலாற்றுப் பாதையைக் கடந்து வந்துள்ளன. சோஷலிசத்தின் பூரணமான, இறுதியான வெற்றி சோவியத் யூனியனை ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்துக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளது—அதாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலிருந்து குறிப்பிட்ட சில வர்க்கங்களின் நலன்களை அல்லாமல் ஒட்டுமொத்தமாக சோவியத்

மக்கள் எல்லோரது நலன்களையும் பிரதிபலிக்கும் அனைத்து மக்களது அரசுக்கு மாறும் கட்டத்துக்குக் கொண்டுவந்து சேர்த்துள்ளது.

இந்த நிலைமைகளில், சோவியத் ஜனநாயகமானது மக்களில் பெரும்பான்மையினரான தொழிலாளி வர்க்கத்தின் ஜனநாயகமாக இருந்து மக்கள் அனைவருக்குமான சோஷலிச ஜனநாயகமாகப் பரிணமித்துள்ளது.

அனைத்து மக்களது அரசு முதிர்ச்சி பெற்ற சோஷலிசத்தின் அரசியல் நிறுவனமாகும். கம்யூனிசத்தை நிர்மாணிப்பதே இதன் நேரடிக் குறிக்கோள்.

## அரசு கட்டமைப்பு

சோவியத் யூனியனில் வாழும் எல்லா தேசிய இனங்களும் சமத்துவ உரிமைகளை அனுபவிக்கின்றன; தமது வளர்ச்சிக்கு சமத்துவ வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

அரசியல் சட்டத்தின் 123வது ஷரத்து கூறுவதாவது: ''அரசியல், பொருளாதார, கலாசார, அரசாங்கத் துறைகளிலும் இதர எல்லாத் துறைகளிலும் பொது நடவடிக்கைகளிலும் இன, வர்ண பாகுபாடின்றி சோவியத் பிரஜைகள் அனைவரும் சமத்துவ உரிமைகள் படைத்தவர்கள் என்பது இன்றியமையாத நியதியாகும்.

''குறிப்பிட்ட தேசிய இனத்தை அல்லது வர்ண இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகப் பிரஜைகளின் உரிமைகளை நேரடியாக அல்லது மறைமுகமாகக் கட்டுப்படுத்துவதோ, நேரடியாக அல்லது மறைமுகமாக தனிச் சலுகைகள் அளிப்பதோ, தேசிய இன அல்லது வர்ண இன ஒதுக்கலையும் குரோதத்தையும் விரோதத்தையும் ஆதரித்துப் பிரசாரம் செய்வதோ சட்டப்படி தண்டிக்கப்படத் தக்க குற்றங்களாகும்.''

ஒவ்வொரு தேசிய இனமும் குறிப்பிட்ட தேசிய அரசையோ, தேசிய பிரதேச அமைப்பையோ பெற்றிருக்கிறது. அதாவது இந்த அமைப்பு யூனியன் குடியரசாகவோ, சுயாட்சிக் குடியரசாகவோ, சுயாட்சிப் பிராந்தியமாகவோ அல்லது தேசியப் பிரதேசமாகவோ உள்ளது.

சோவியத் யூனியன் 15 சோவியத் சோஷலிசக் குடியரசுகளை இணைக்கும் ஒரு சமஷ்டி அரசு. அந்தப் பதினைந்து சோவியத் சோஷலிசக் குடியரசுகளாவன: ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசு, உக்ரைன் சோவியத் சோஷலிசக் குடியரசு, பைலோரஷ்ய சோவியத் சோஷலிசக் குடியரசு, உஸ்பெக்

சோவியத் சோஷலிசக் குடியரசு, கஜாக் சோவியத் சோஷலிசக் குடியரசு, ஜார்ஜிய சோவியத் சோஷலிசக் குடியரசு, அஜர்பெய்ஜான் சோவியத் சோஷலிசக் குடியரசு, மொல்தாவியா சோவியத் சோஷலிசக் குடியரசு, லிதுவேனிய சோவியத் சோஷலிசக் குடியரசு, லாத்விய சோவியத் சோஷலிசக் குடியரசு, கிர்கீஜிய சோவியத் சோஷலிசக் குடியரசு, தாஜிக் சோவியத் சோஷலிசக் குடியரசு, அர்மீனிய சோவியத் சோஷலிசக் குடியரசு, துருக்மேனிய சோவியத் சோஷலிசக் குடியரசு, எஸ்தோனிய சோவியத் சோஷலிசக் குடியரசு.

**ஒரு யூனியன்** குடியரசு தேசிய, அரசுரிமை படைத்த சோவியத் சோஷலிச அரசாகும்.

ஒவ்வொரு யூனியன் குடியரசும் சோவியத் யூனியனது அரசியல் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட, அதே சமயம் குடியரசின் தேசிய, பொருளாதார, மற்றும் இதர விசேஷ அம்சங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்ட தனது சொந்த அரசியல் சட்டத்தைப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு யூனியன் குடியரசுக்கும் அதன் சொந்த சிவில், கிரிமினல், தொழிலாளர் சட்டத் தொகுப்புக்களும், குடும்பச் சட்டமும், இதர சட்டங்களும், நீதி மன்றக்கள், குடி உரிமையும், தேசிய கீதமும், கொடியும், அரசாங்கச் சின்னமும், தலைநகரமும் உண்டு.

ஒரு யூனியன் குடியரசின் பிரதேசத்தை அதன் அனுமதியின்றி மாற்ற முடியாது. அயல் நாடுகளுடன் நேரடி உறவுகள் கொள்ளவும், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும், ராஜியப் பிரதிநிதிகளையும் தூதரகப் பிரதிநிதிகளையும் பரிமாறிக் கொள்ளவும் ஒவ்வொரு குடியரசுக்கும் உரிமை இருக்கிறது.

ஒரு யூனியன் குடியரசில் அதன் மிக உயர்ந்த ஆட்சி அமைப்பு தனது தலைமைக் குழுவைக் கொண்ட குடியரசின் சுப்ரீம் சோவியத் ஆகும். அதே போல் ஒரு யூனியன் குடியரசில் அதன் மிக உயர்ந்த நிர்வாக அமைப்பு அமைச்சரவையாகும். உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளும் அவற்றின் நிர்வாகக் கமிட்டிகளும் ஸ்தல ஆட்சி அமைப்புக்களாகவும் நிர்வாக அமைப்புக்களாவும் விளங்குகின்றன. ஒரு யூனியன் குடியரசு தனது சொந்த தலைமை நீதி மன்றத்தையும் பெற்றுள்ளது.

யூனியன் குடியரசு அதன் பிரதேசத்திற்குள் சுயேச்சையாக ஆட்சி அதிகாரம் நடத்துகிறது. யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத் குடியரசின் அரசியல் சட்டத்தை ஏற்கிறது; அதன் பகுதிகளாக உள்ள சுயாட்சிக் குடியரசுகளின் அரசியல் சட்டங்களை ஊர்ஜிதம் செய்கிறது, குடியரசின் பொருளாதாரத் திட்டத்தையும்

பட்ஜெட்டையும் அங்கீகரிக்கிறது. சம்பந்தப்பட்ட குடியரசின் நீதி மன்றங்களில் தண்டிக்கப்பட்ட பிரஜைகளை விடுதலை செய்யும் அதிகாரமும், அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரமும் யூனியன் குடியரசுக்கு உண்டு.

ஒன்றிய மட்டத்தில் எல்லா அரசு விவகாரங்களையும் நிர்வகிப்பதில் எல்லா யூனியன் குடியரசுகளும் சம அடிப்படையில் பங்கு கொள்வதன் மூலம் அவற்றின் சமத்துவம் உத்தரவாதம் செய்யப்படுகிறது. குடியரசுகள் பின்கண்டவாறு சமத்துவப் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன:

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தேசிய இனங்கள் சோவியத்—ஒவ்வொரு குடியரசிலிருந்தும் 32 பிரதிநிதிகள்;

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழு—ஒவ்வொரு குடியரசிலிருந்தும் ஒரு துணைத்தலைவர் (இவர்கள் மரபாக யூனியன் குடியரசுகளது சுப்ரீம் சோவியத்துக்களின் தலைமைக் குழுக்களின் தலைவர்களாக இருப்பார்கள்.)

சோவியத் யூனியன் அமைச்சரவையில் குடியரசுகளது அமைச்சரவைகளின் தலைவர்கள் தமது பதவி காரணமாக அங்கம் வகிப்பர்;

சோவியத் யூனியன் தலைமை நீதி மன்றத்தில் யூனியன் குடியரசுகளது தலைமை நீதி மன்றங்களின் தலைவர்கள் தமது பதவி காரணமாக இடம் பெற்றிருப்பர்.

இதர யூனியன் குடியரசுகளுடன் ஒப்பிடும்போது எந்த யூனியன் குடியரசுக்கும் எந்தச் சலுகைகளோ தனி உரிமைகளோ இல்லை.

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து செல்ல ஒவ்வொரு யூனியன் குடியரசுக்கும் உரிமை இருக்கிறது. சோவியத் யூனியன் அமைக்கப்பட்ட உடனேயே இந்த உரிமை யூனியன் குடியரசுகளுக்கு வழங்கப்பட்டது. இந்த உரிமையை ரத்து செய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ சமஷ்டி அமைப்புக்கு அதிகாரம் இல்லை. சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து செல்வதற்கு யூனியன் குடியரசுகளுக்குள்ள உரிமை சோவியத் யூனியன் அரசியல் சட்டத்திலும் எல்லா யூனியன் குடியரசுகளது அரசியல் சட்டங்களிலும் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

சுயாட்சிக் குடியரசு ஒரு யூனியன் குடியரசின் பகுதியாக அதில் இணைந்துள்ள ஒரு சோவியத் சோஷலிச தேசிய அரசமைப்பாகும். ஒவ்வொரு சுயாட்சிக் குடியரசுக்கும் அதன் பிரத்தியேக இயல்புகளைப் பிரதிபலிக்கும் சொந்த அரசியல் சட்டமும், சொந்த சுப்ரீம் சோவியத்தும், சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவும்,

அமைச்சரவையும், தலைமை நீதி மன்றமும், ஸ்தல ஆட்சி அமைப்புகளும், நிர்வாக அமைப்புகளும் உண்டு.

சுயாட்சிக் குடியரசுக்கு சொந்த எல்லைகள் இருக்கின்றன. இந்த எல்லைகளை அதன் சம்மதமின்றி மாற்ற முடியாது. சுயாட்சிக் குடியரசு தனது சொந்த நீதி பரிபாலன முறையையும், பொருளாதார கலாசார வளர்ச்சி சம்பந்தப்பட்ட சட்ட முறைமையையும், குடி உரிமையையும், அரசாங்க சின்னத்தையும் கொடியையும் தனது சொந்த தலைநகரையும் பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு சுயாட்சிக் குடியரசுக்கும் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தேசிய இனங்கள் சோவியத்தில் சமத்துவ பிரதிநிதித்துவம் (ஒவ்வொரு குடியரசுக்கும் 11 பிரதிநிதிகள்) இருக்கிறது; அது ஒரு பகுதியாக இருக்கும் யூனியன் குடியரசு சுப்ரீம் சோவியத்தில் இதர சுயாட்சிக் குடியரசுகளுக்கு சமத்துவ அடிப்படையில், அதன் மக்கட் தொகையின் அளவுக்கேற்ப பிரதிநிதிகள் இருக்கிறார்கள். யூனியன் குடியரசின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் காரணத்தினால் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து செல்லும் உரிமை சுயாட்சிக் குடியரசுக்கு இல்லை.

சோவியத் யூனியனது யூனியன் குடியரசுகளில் மொத்தம் இருபது சுயாட்சிக் குடியரசுகள் இருக்கின்றன. இவற்றில் ரஷ்ய சமஷ்டியிலுள்ள சுயாட்சிக் குடியரசுகள் 16. அவையாவன: பஷ்கீர் சுயாட்சிக் குடியரசு, புர்யாத் சுயாட்சிக் குடியரசு, செச்சனோ-இங்குஷ் சுயாட்சிக் குடியரசு, சுவாஷ் சுயாட்சிக் குடியரசு, தாகெஸ்தான் சுயாட்சிக் குடியரசு, கபார்தினோ-பல்கார் சுயாட்சிக் குடியரசு, கால்மிக் சுயாட்சிக் குடியரசு, கரேலியன் சுயாட்சிக் குடியரசு, கோமி சுயாட்சிக் குடியரசு, மாரி சுயாட்சிக் குடியரசு, மொர்தாவியன் சுயாட்சிக் குடியரசு, வட ஒஸ்ஸேதியன் சுயாட்சிக் குடியரசு, தாத்தார் சுயாட்சிக் குடியரசு, துவா சுயாட்சிக் குடியரசு, உத்முர்த் சுயாட்சிக் குடியரசு, யாகூத் சுயாட்சிக் குடியரசு. அஜர்பெய்ஜான் சோவியத் சோஷலிசக் குடியரசில் நகிசெவான் சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசும், ஜார்ஜிய குடியரசில் அப்காஜியன் சுயாட்சிக் குடியரசும் அஜாரியன் சுயாட்சிக் குடியரசும், உஸ்பெக் குடியரசில் காரா-கல்பெக் சுயாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசும் உள்ளன.

**சுயாட்சிப் பிராந்தியம்** என்பது அதன் தனித் தன்மையான இயல்புகள், தேசிய இணைப்பு காரணமாக நிர்வாக அரசியல் சுயாட்சியை அனுபவிக்கும் ஒரு தேசிய - பிரதேச அமைப்பாகும். சுயாட்சிப் பிராந்தியம் யூனியன் குடியரசு அல்லது பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. பிராந்தியத்தின் உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்தே அதன் ஆட்சி அமைப்பு;

சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியே பிராந்தியத்தின் மிக உயர்ந்த நிர்வாக அமைப்பு. ஒவ்வொரு சுயாட்சிப் பிராந்தியத்திற்கும் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தேசிய இனங்கள் சோவியத்தில் சமத்துவ பிரதிநிதித்துவமும்—அதாவது ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஐந்து பிரதிநிதிகள் வீதம்—அது ஒரு பகுதியாக இருக்கும் யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத்தில் வீதாசாரப் பிரதிநிதித்துவமும் உண்டு.

ஆட்சி அமைப்புக்களிலும், நிர்வாக அமைப்புக்களிலும், நீதிமன்றங்களிலும், புரோகுரேட்டரின் அலுவலகத்திலும், பள்ளிக்கூடங்களிலும், கலாசார பொது நிறுவனங்களிலும், பத்திரிகைகளிலும் எல்லாப் பணியும் அந்தப் பிராந்திய மக்களின் தாய் மொழியிலேயே நடத்தப்படுகிறது.

யூனியன் குடியரசுகளுக்குள் மொத்தம் எட்டு சுயாட்சிப் பிராந்தியங்கள் உள்ளன. இவற்றில் அடிகே, கோர்னி அல்தாய், யூத, கராசாய்-சிர்காஸ்ஸிய, காக்காஸ் சுயாட்சிப் பிராந்தியங்கள், ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசிலும், நகோர்னி கராபக சுயாட்சிப் பிராந்தியம் அஜெர்பைஜான் சோவியத் சோஷலிச குடியரசிலும், தென் ஒஸ்ஸேதியன் சுயாட்சிப் பிராந்தியம் ஜார்ஜிய சோவியத் சோஷலிசக் குடியரசிலும், கோர்னி பதாக்ஷான் சுயாட்சிப பிராந்தியம் தாஜிக் சோவியத் சோஷலிசக் குடியரசிலும் இருக்கின்றன.

ஒரு தேசியப் பகுதியும் குறிப்பிட்ட தேசிய இயைபை (சாதாரணமாக இதில் பல தேசிய இனங்கள் வாழ்கின்றன) கொண்டதாகும். பொதுவாக ஒரு தேசியப் பகுதி குறைந்த மக்கட் தொகையையே பெற்றுள்ளது.

ஒவ்வொரு தேசியப் பகுதியின் சார்பிலும் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தேசிய இனங்கள் சோவியத்தில் ஒரு பிரதிநிதி இடம் பெற்றுள்ளார். ரஷ்ய சோவியத் சமஷ்டிக் குடியரசின் சுப்ரீம் சோவியத்துக்கு தேசியப் பகுதிகளிலிருந்து அனுப்பப்படும் பிரதிநிதிகளைப் பொருத்த வரையில், ஜனத்தொகை அளவின் வீதாசாரத்திற்கு ஏற்ப அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஒரு தேசியப் பகுதியில் ஆட்சி அதிகாரமும் நிர்வாக அதிகாரமும் உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது ஸ்தல சோவியத்தாலும் அதன் நிர்வாகக் கமிட்டியாலும் செலுத்தப்படுகின்றன. இவை ரஷ்ய சமஷ்டியின் ஸ்தல ஆட்சி, நிர்வாக அமைப்புக்கள் முறையின் ஒரு பகுதியாக உள்ளன. ஆட்சி அமைப்புகளும், நிர்வாக அமைப்புகளும், நீதி மன்றங்களும், புரோகுரேட்டரின் அலுவலகளும் தமது அலுவல்களை ஸ்தல தேசிய இனத்தின் தாய் மொழியில்

நடத்துகின்றன. பின்கண்ட பத்து தேசியப் பகுதிகள் உள்ளன: அகின்ஸ்கி-புர்யாத், கொமி-பெர்மியாக், கொர்யாக், நெனெத்ஸ், தைமீர், உஸ்த் - ஆர்தின்ஸ்கி புர்யாத், காண்டி - மான்சி, சுகோத்ஸ்கி, எவெங்கி, யாமலோ-நெனெதஸ்.

சோவியத் யூனியனில் பிராந்தியங்களும், வட்டாரங்களும், நகரங்களும், கிராமங்களும் அடிப்படை நிர்வாகப் பிரதேச யூனிட்டுகளாக உள்ளன. ரஷ்ய சமஷ்டியிலும் பிரதேசங்களும், தேசியப் பகுதிகளும் உள்ளன.

ஒவ்வொரு யூனியன் குடியரசும் தனது நிர்வாக-பிரதேசப் பிரிவினை சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் சுதந்திரமாக தீர்மானிக்கிறது.

## சோவியத்துகள், மக்கள் ஆட்சி அமைப்புகள்

உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகள் ஆட்சி அதிகாரத்தின தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவம் வாய்ந்த அமைப்புகள்.

சோவியத்துகள் மக்கள் அதிகாரத்தின் வடிவங்களாகும். அவை அனைத்து மக்களது ஜீவாதார நலன்களையும் பிரதிநிதித்துவப் படுததுகின்றன, பிரதிபலிக்கின்றன.

பாரிஸ் கம்யூனினது அனுபவம் உட்பட சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் அனுபவத்தைத் தன்னுள் கொண்ட சோவியத்துகள் ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று ரீதியான புரட்சிகர அனுபவத்திலிருந்து பிறந்தவையாகும். முதலாவது ரஷ்யப் புரட்சி (1905—1907) நடைபெற்ற ஆண்டுகளில் உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகள் முதன் முதலில் ரஷ்யாவின் பெரிய தொழில் கேந்திரங்களில் தோன்றின. ஜார் எதேச்சாதிகாரத்தில் அவை மிருகத்தனமாக உடைத்தெறியப் பட்டன. எனினும் 1917ல் நாடெங்கும் புரட்சி அலைமோதிய போது அவை மீண்டும் தலையெடுத்தன. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகுதான் அவை மக்கள் ஆட்சியின் முழு வளர்ச்சி யடைந்த அமைப்புகளாக நிலை கொண்டன.

உழைப்பாளி மக்களது தலைமை அதிகாரம் பற்றிய பிரச்சினைக்கு அக்டோபர் புரட்சியின் ஆரம்ப ஆண்டுகளிலேயே தீர்வு காணப்பட்டு விட்டது. உழைப்பாளி மக்களதும் சுரண்டப் பட்ட மக்களதும உரிமைப் பிரகடனத்தில் இது பற்றிக் குறிப்பிடப் பட்டதாவது: "அதிகாரம் முழுவதும் உழைப்பாளி மக்களிடமும் அவர்களது அங்கீகாரம் பெற்ற தொழிலாளிகள், படைவீரர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளிடமே இருக்க வேண்டும்."

உழைப்பாளி மக்களது தலைமை அதிகாரம் பற்றிய கருத்து தற்போது நடைமுறையிலிருந்து வரும் சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது. அரசியல் சட்டத்தின் 3வது ஷரத்து கூறுவதாவது: ''சோவியத் யூனியனில் எல்லா அதிகாரங்களும் நகரப்புற, கிராமப்புற உழைப்பாளி மக்களுக்கே சொந்தம். இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகள் இந்த அதிகாரங்களை வகிக்கின்றன.''

ஆட்சி அதிகார அமைப்புகள் என்ற முறையிலும் மக்களது சுயாட்சி அமைப்புகள் என்ற முறையிலும் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி சம்பந்தப்பட்ட விவகாரங்களில் முடிவுகள் எடுக்க சோவியத்துகள் உரிமை பெற்றுள்ளன.

எல்லா ஆட்சி அமைப்புகளது பணிகளும் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் நடைபெறுகின்றன: கிராம, நகர சோவியத்துகளிலிருந்து சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் வரை எல்லா சோவியத்துகளும் நேரடி வாக்குரிமை அடிப்படையில் பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன; எல்லாப் பிரதிநிதிகளும தமது வாக்காளர்களுக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டவர்கள்; வாக்காளர்கள் விரும்பினால் அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளலாம்; அரசாங்க நிர்வாக அமைப்புகள் அந்தந்த சோவியத்துகளால் நியமிக்கப்பட்டு அவற்றுக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளன; உயர் ஆட்சி அமைப்புகள் இயற்றும் சட்டங்கள் அவற்றின் அதிகாரத்திற்குட்பட்டவர்களைக் கட்டுப்படுத்தும்.

**சோவியத்துக்களுக்குத் தேர்தல்கள்:** சோவியத் யூனியனில் அமுலிலிருக்கும் தேர்தல் முறையும், தேர்தல் நடைமுறை விதிகளும் எல்லா சோவியத் பிரஜைகளும் தமது சித்தத்தை சுதந்திரமாக வெளியிடுவதற்குத் துணை புரிகின்றன. பிரஜைகளுக்குள்ள வாக்குரிமைகளுக்கு எத்தகைய கட்டுப்பாடுகளும் இல்லை.

சோவியத் யூனியன் அரசியல் சட்டப்படி, உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது எல்லா சோவியத்துகளின் உறுப்பினர்களும் சர்வ ஜன, சமத்துவ, நேரடி வாக்குரிமை அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேசிய இனம், வர்ண இனம், பால், மதம், கல்வி, குடியிருப்பு இடம், பிறப்பு அந்தஸ்து, சொத்து அந்தஸ்து, கடந்தகால நடவடிக்கைகள் என்ற பாகுபாடின்றி, 18 வயதடைந்த எல்லோருக்கும் பிரதிநிதிகள் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை உண்டு. புத்திசுவாதீனமில்லாதவர்கள் என்று சட்டப்படி அறிவிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த உரிமை இல்லை.

பதினெட்டு வயதடைந்த ஒவ்வொரு சோவியத் பிரஜையும் ஸ்தல சோவியத் தேர்தலுக்கு நிற்க அருகதை பெற்றுள்ளார்; இருபத்தியொரு வயதடைந்தவர்கள் யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத்துக்கோ அல்லது சுயாட்சிக் குடியரசின் சுப்ரீம் சோவியத்துக்கோ தேர்ந்தெடுக்கப்படலாம்; இருபத்தி மூன்று வயதடைந்தவர்கள் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்துக்கும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

சோவியத் யூனியனில் தேர்தல்கள் உண்மையிலேயே சர்வ ஜனத் தன்மை கொண்டவை; அவை மக்களின் முழு ஆதரவைப் பெற்றுள்ளன. உதாரணமாக, 1970ல் சோவியத் யூனியனின் எட்டாவது சுப்ரீம் சோவியத்துக்கு நடைபெற்ற தேர்தல்களில் 99·9 சதவிகித வாக்காளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்.

தேர்தல்களை நடத்துவதற்காகவும் தேர்தல் நடைமுறைகளில் மக்கள் கண்காணிப்புக்கு வகை செய்வதற்காகவும் தேர்தல் கமிஷன்கள் (மத்திய, வட்டார, ஸ்தல கமிஷன்கள்) அமைக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்கள், கூட்டுறவுக் கழகங்கள், கட்சி நிறுவனங்கள் இதர பொது நிறுவனங்கள், கழகங்கள், பல்வேறு தொழில் நிலையங்கள் போன்றவற்றின் தேர்ந்தெடுக்கபபட்ட பிரதிநிதிகள் இக்கமிஷன்களில் அங்கம் வகிக்கின்றனர்.

சோவியத்துகளின் தேர்தலுக்கு வேட்பாளர் நியமிக்கும் உரிமை பொது நிறுவனங்களுக்கும் கழகங்களுக்குமே உண்டு; தொழிற்சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், கட்சி, இளைஞர், மற்றும் இதர நிறுவனங்கள், தொழில் நிலையங்களையும் நிறுவனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள், ஊழியர்களின் பேரவைக் கூட்டங்கள், ராணுவ யூனிட்டுகளின் பேரவைக் கூட்டங்கள் கூட்டுப் பண்ணை விவசாயிகளின் பேரவைக் கூட்டங்கள் ஆகியவற்றை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம். பொதுவாக உழைப்பாளி மக்களின் பேரவைக் கூட்டங்களில்தான் வேட்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

சோவியத் யூனியனின் தேர்தலுக்கு நியமிக்கப்படும் வேட்பாளர்களுக்கு எத்தகைய தேர்தல் செலவுகளும் ஏற்படுவதில்லை. எல்லாச் செலவுகளையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. வேட்பாளர்களாக நியமிக்கப்படுவதற்கு எத்தகைய வருமானம் அல்லது சொத்துத் தகுதியும் வேண்டியதில்லை.

சோவியத் சமுதாயத்தில் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் சமூக சக்திகளோ அல்லது எதிரெதிரான நலன்களைப் பிரதிபலித்து, அரசாங்க அமைப்புகளில் மேலாதிக்கம் பெறுவதற்குப் போராடும் கட்சிகளோ இல்லை- இதனுல் தான் சோவியத யூனியனில் வேட்

பாளர்கள் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளனர்; கம்யூனிஸ்டுகளாலும் கட்சி சார்பற்றவர்களாலும் அவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

தேர்தல் சட்டங்களும் தேர்தல் நடைமுறையும் வாக்காளர் கூட்டங்களில் ஒவ்வொரு வேட்பாளரையும் பற்றி சுதந்திரமாகவும் விமர்சனக் கண்ணோட்டத்தோடும் விவாதிப்பதற்கு வகை செய்கின்றன. யாரை வேட்பாளராக நியமிப்பது என்பது பெரும்பாலான வாக்குகளால் தீர்மானிக்கப்படுகிறது. இந்தக் கூட்டங்களில் தொகுதி வாக்காளர் மாநாடுகளுக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட தேர்தல் வட்டாரத்தைச் சேர்ந்த பொது நிறுவனங்களாலும் தொழில் நிலையங்களாலும் நியமிக்கப்பட்ட எல்லா வேட்பாளர்களைப் பற்றியும் இந்தப் பிரதிநிதிகள் நன்கு பரிசீலனை செய்து அவர்களில் மிகவும் தகுதியான ஒருவரை பொறுக்கி எடுக்கின்றனர்.

வட்டார தேர்தல் மாநாடுகளின் ஆதரவைப் பெறாத வேட்பாளர்கள் தமது பெயர்களை வேட்பாளர் பட்டியலிலிருந்து திரும்பப் பெற்றுக் கொள்கின்றனர் அல்லது அவர்களை முன்மொழிந்த நிறுவனங்களால் அவர்களது பெயர்கள் நீக்கப்படுகின்றன.

பிரதிநிதிகளைத் தமது இஷ்டப்படி தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் சுயேச்சையான வாக்குரிமை மூலம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளரை ஆதரித்தோ, எதிர்த்தோ வாக்களிப்பதற்கு ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு. 1973ல் ஊராட்சி சோவியத்துகளுக்கு நடைபெற்ற தேர்தல்கள் போது, 20 லட்சத்துக்கு மேற்பட்ட வேட்பாளர்களில் 80 வேட்பாளர்கள் தேவையான பெரும்பான்மை வாக்குகள் பெறத் தவறியதால் திரும்பப் பெறப்பட்டனர்.

1972 செப்டம்பரில் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் "சோவியத் யூனியனில் உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் பிரதிநிதிகளுடைய அந்தஸ்து பற்றிய" சட்டத்தை இயற்றிற்று. இந்தச் சட்டம் பிரதிநிதிகளது விரிந்த, பன்முகப்பட்ட நடவடிக்கைகளுக்கான சட்டக் கோட்பாடுகளை வகுத்துக் கூறுகிறது. அவர்களது உரிமைகளையும் கடமைகளையும், பல்வேறு அரசாங்க, பொது அமைப்புக்களுடன் அவர்களுக்குள்ள உறவுகளையும் இச்சட்டம் நிர்ணயித்துக் கூறுகிறது.

இந்தப் புதிய சட்டம் பிரதிநிதிகளுக்கு முன்னிலும் விரிவான அதிகாரங்களை வழங்குகிறது; இதனால் அவர்கள் பொது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் கவனம் செலுத்துவது சாத்தியமாகிறது.

**ஒரு பிரதிநிதியின் கடமைகள்:** பிரதிநிதித்துவம் வாய்ந்த ஆட்சி அதிகார அமைப்பின் உறுப்பினர் என்ற முறையில் ஒரு பிரதிநிதி சோவியத்தின் பணியிலும் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட நிரந்தரக் கமிஷன்கள் மற்றும் சோவியத்தின் இதர அமைப்புகள் ஆகியவற்றின் பணியிலும் முன்னின்று பங்குகொள்ளக் கடமைப் பட்டுள்ளார்.

சோவியத் சட்டத்தை நிலைநாட்டவும், சட்டம் மீறப்படுவதற்கு எதிரான போராட்டத்திலும் உழைப்பாளி மக்களை உயர்ந்த சமூக உணர்வும், கடமை உணர்வும் சோஷலிச சட்ட முறைமையைச் சண்டிப்பாகக் கடைப்பிடிக்கும் உணர்வும் கொண்டவர்களாக வளர்த்து ஆளாக்குவதிலும் முன்னின்று பங்கு கொள்ளவும் பிரதிநிதி கடமைப்பட்டுள்ளார்.

பிரதிநிதி சோவியத்திலுள்ள மக்களின் முழு அதிகாரம் பெற்ற தூதுவர் ஆவார். அவர் சோவியத்தின் பொதுப்படையான நடவடிக்கைகளுக்கும், தேர்தல் காலத்தில் பிரதிநிதிகளுக்கும் அவர்கள் மூலம் சோவியத்துக்களுக்கும் அளிக்கப்பட்ட மக்களின் தாக்கீதுகளை நிறைவேற்றுவதற்கும் பொறுப்பானவர். வீட்டு நிர்மாணம், முனிசிபல் நிர்மாணம், பொது சேவை வசதிகளையும் இதர வசதிகளையும் ஏற்பாடு செய்து தருதல், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகளைக் கட்டுதல் போன்றவை சம்பந்தப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் சாதாரணமாக இந்தத் தாக்கீதுகளில் அடங்கியிருப்பது உண்டு.

ஒரு குறிப்பிட்ட சோவியத்தின் பதவிக் காலம் முழுவதிலும் வாக்காளர்கள் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர்; அவர்களது பணியைக் கண்காணிக்கின்றனர்; அவர்களது பணியில் அவர்களுக்கு உதவி புரிகின்றனர். அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, மக்கள்பால் பிரதிநிதிகளுக்குள்ள பொறுப்புகள் சம்பந்தப்பட்ட கோட்பாடும், பிரதிநிதிகள் மீது மக்களுக்குள்ள கண்காணிப்பு சம்பந்தப்பட்ட கோட்பாடும் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதன் பயனே இது.

சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தின் 142வது ஷரத்து கூறுவதாவது: ''தனது பணி பற்றியும், தனது சோவியத்தின் பணி பற்றியும் தன் வாக்காளர்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பது ஒவ்வொரு பிரதிநிதியினது கடமையாகும்.''

பிரதிநிதி தமது வாக்காளர்களுக்கு சோவியத்தின் முடிவுகளைத் தெரிவிக்க வேண்டும்; அவற்றின் பொருளை விளக்கிக் கூற வேண்டும்; அவை நிறைவேற்றப்படுவதற்கு மக்களின் முயற்சிகளை ஒருங்கு திரட்ட வேண்டும்; அந்த முடிவுகள் நடைமுறைப்படுத்தப் படும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். பிரதிநிதி தமது

வாக்காளர்களுக்கு அவ்வப்போது பொறுப்புக் கூறக் கடமைப் பட்டுள்ளார். ஒவ்வொருவரும் தமது அபிப்பிராயத்தைக் கூறவும், பிரதிநிதியின் பணி பற்றியோ அல்லது பொதுவாக சோவியத்தின் பணி பற்றியோ விமர்சிக்கவும் இது துணை புரிகிறது; சோவியத்துகளின் பணியில் மக்கள் நேரடியாக செல்வாக்கு வகிப்பதற்கு இது உத்தரவாதம் செய்கிறது. சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தின் 142வது ஷரத்தில் குறிப்பிட்டுள்ளபடி "...சட்டத்துக்கிணங்க வாக்காளர்களில் பெரும்பாலோரது முடிவின் பேரில் ஒரு பிரதிநிதி எந்தச் சமயத்திலும் திரும்ப அழைக்கப்படலாம்: ஒரு பிரதிநிதி தம்மீது மக்கள் வைத்த நம்பிக்கைக்குப் புறம்பாக நடந்து கொள்ளும் போதோ அல்லது தமது அந்தஸ்துக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடும்போதோ இவ்வாறு நடைபெறுகிறது.

பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்கும் பிரச்சினை பொது நிறுவனங்களாலும் வாக்காளர் கூட்டங்களாலும் எழுப்பப்படுகிறது. பெரும்பான்மையான வாக்காளர்களது முடிவைத் தொடர்ந்து பிரதிநிதி திரும்ப அழைக்கப்படுகிறார்.

பிரதிநிதிகள் தமது வாக்காளர்களைச் சார்ந்திருக்க வேண்டும், அரசாங்க அமைப்புகளில் அவர்களது நலன்களைப் பிரதிபலிக்க வேண்டும் என்று சோவியத் சட்டம் பிரகடனம் செய்வதோடு மட்டுமன்றி, உண்மையில் அதற்கு உத்தரவாதமும் செய்கிறது. தமது பிரதிநிதிகளைத் திரும்ப அழைப்பதற்கு வாக்காளர்களுக்குள்ள உரிமை அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டால்தான் இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பும் மெய்யான ஜனநாயகத் தன்மை உடையது, உண்மையில மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடியது எனக் கருத முடியும் என்ற லெனினது கோட்பாடு கைகூடியுள்ளது என்பதையே இது காட்டுகிறது.

ஒரு பிரதிநிதியின் உரிமைகள். ஒவ்வொரு பிரதிநிதியும் தனது உரிமைகளை தங்குதடையின்றியும், பயனுறுதியோடும் அனுபவிப்பதற்கும் தமது கடமைகளை ஆற்றுவதற்கும் அவசியமான நிலைமைகளை சோவியத் அரசு தோற்றுவிக்கிறது.

பிரதிநிதி தனது அதிகாரங்களைச் செலுத்த முடியாதபடி தடை செய்பவர்களோ அல்லது ஆட்சி அதிகாரத்தின் பிரதிநிதியான அவரது கௌரவத்துக்கும் அந்தஸ்துக்கும் பங்கம் விளைவிப்பவர்களோ சட்டப்படி தண்டிக்கப்படத் தக்கவர்களாவர்.

எந்த சோவியத்தைச் சேர்ந்த பிரதிநிதியும் அந்த சோவியத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த அமைப்புக்கும் பிறரைத் தேர்ந்தெடுக்கவும் தாமே தேர்ந்தெடுக்கப்படவும்; சம்பந்தப்பட்ட சோவியத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட எந்தப் பிரச்சினையையும்

பரிசீலனைக்கு முன்வைக்கவும் அது சம்பந்தப்பட்ட விவாதங்களில் கலந்து கொள்ளவும்; சோவியத்தின் கூட்டத் தொடர்களில் விவாதத்திலிருக்கும் பிரச்சினைகள் குறித்து எந்த யோசனைகள் கூற வும்; நகல் தீர்மானங்களுக்குத் திருத்தங்களும் மாற்றங்களும் கொண்டுவரவும்; தமது வாக்கின் மூலம் தீர்மானங்கள் மீது தம் கருத்தைத் தெரிவிக்கவும் உரிமை பெற்றுள்ளார்.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரதிநிதியோ, யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத் பிரதிநிதியோ அல்லது சுயாட்சிக் குடியரசின் சுப்ரீம் சோவியத் பிரதிநிதியோ தாம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள சுப்ரீம் சோவியத்தில் எந்த மசோதாவும் கொண்டு வரு வதற்கு உரிமை உண்டு.

தகவல்கள் கோருவதற்கு ஒரு பிரதிநிதிக்கு உரிமை இருக்கிறது. சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரதிநிதி, யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத் பிரதிநிதி அல்லது சுயாட்சிக் குடியரசின் சுப்ரீம் சோவியத் பிரதிநிதி முறையே சோவியத் யூனியன் அரசாங்கத்திடமும், யூனியன் குடியரசின் அரசாங்கத் திடமும், சுயாட்சிக் குடியரசின் அரசாங்கத்திடமும், அமைச்சர் களிடமும், சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்தாலும், யூனி யன் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளாலும், சுயாட்சிக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளாலும் உருவாக்கப்பட்ட அரசாங்க நிர்வாக அமைப்புகளது தலைவர்களிடமும் தகவல்கள் கோருவதற்கு உரிமை உண்டு.

ஸ்தல சோவியத்தின் பிரதிநிதி சம்பந்தப்பட்ட நிர்வாகக் கமிட்டியிடமும், சோவியத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள தொழில் நிலையங்களதும் நிறுவனங்களதும் ஸ்தாபனங்களதும் நிர்வாகிகளிடமும் தகவல்கள் கோரலாம்.

தகவல் கோரப்பட்ட அரசாங்க அமைப்போ அல்லது அதிகாரி யோ சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கால வரம்பிற்குள் அந்தத் தகவலைத் தந்தாக வேண்டும்.

சோவியத் யூனியனில் எல்லாப் பிரதிநிதிகளும் சட்டக் காப்புரிமை பெற்றுள்ளனர், சோவியத்தின் அனுமதி இன்றியும், சோவியத் கூட்டங்கள் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில் அதன் நிர்வாக அமைப்பின் அனுமதியின்றியும் எந்தப் பிரதிநிதி மீதும் வழக்குத் தொடரவோ, அவரைக் கைது செய்யவோ, நீதி மன்ற நடவடிக்கைகள் மூலம் அவரை நிர்வாகத் தண்டனைகளுக்குட் படுத்தவோ முடியாது.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரதிநிதியும், யூனியன் குடியரசு சுப்ரீம் சோவியத் பிரதிநிதியும், சுயாட்சிக் குடியரசு

சுப்ரீம் சோவியத் பிரதிநிதியும் முறையே சோவியத் யூனியன் பிரதேசத்திலும், யூனியன் குடியரசுப் பிரதேசத்திலும், சுயாட்சிக் குடியரசுப் பிரதேசத்திலும் எல்லா ரயில், மோட்டார், நீர்வழி, விமானப் போக்குவரத்துகளையும் அதேபோல் டாக்ஸிகள் நீங்கலாக எல்லா வகையான முனிசிபல் போக்குவரத்துகளையும் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு ஸ்தல சோவியத் பிரதிநிதிக்குத் தனது சோவியத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட பிரதேசத்தில் (விமானப் போக்குவரத்து தவிர) இதே போன்ற உரிமைகள் உண்டு.

சோவியத்தின் அல்லது அதன் அமைப்புகளின் அதிகாரம் பெற்று ஒரு பிரதிநிதி அரசாங்க அமைப்புகளதும், தொழில் நிலையங்களதும், கூட்டுப் பண்ணைகளதும், அரசாங்கப் பண்ணைகளதும் பணியை மேற்பார்க்கிறார். வாக்காளர்கள் எழுப்பும் பிரச்சினைகளுக்குத் துரிதமாகத் தீர்வு காணுவதற்குப் பாடுபட பிரதிநிதி கடமைப்பட்டுள்ளார். சோவியத்தின் வட்டாரத்திற்குள் அமைந்துள்ள தொழில் நிலையங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் தலைவர்கள் பிரதிநிதிக்குத் தேவையான எல்லா விவரங்களையும் வழங்கக் கடமைப்பட்டுள்ளனர்.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகள் உட்பட சோவியத் நாட்டில் எல்லாப் பிரதிநிதிகளும் தத்தமது வேலைகளில் இருந்து கொண்டே தமது கடமைகளை ஆற்றுகின்றனர்; இதற்காக அவர்கள் சம்பளம் எதுவும் பெற்றுக் கொள்வதில்லை. தனது சோவியத்தால் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனில் பணியாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும்போது பிரதிநிதி அவரது வேலையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்; எனினும் தமது வழக்கமான சம்பளத்தைப் பெறுகிறார்.

சோவியத் பிரதிநிதிகள் பல்வேறு வாழ்க்கைத் தொழில்களைக் கொண்டவர்கள். அவர்கள் முறையான வேலையில் இருந்து வருவதும், தாம் வேலை செய்யும் துறையில் நல்ல ஞானம் பெற்றிருப்பதும் அவர்கள் பல்வேறு பிரச்சினைகள் பற்றிய விவாதங்களில் திறமையாக பங்கு கொள்வதற்கும், வாக்காளர்களது நலன்களுக்கு இசைந்த முறையில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் துணைபுரிகின்றன.

**சோவியத் அமைப்பு.** உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது எல்லா சோவியத்துகளும், மத்திய சோவியத்துகளாயினும் ஸ்தல சோவியத்துகளாயினும், ஒரே அரசாங்க அமைப்பு முறையாக விளங்குகின்றன.

ஒவ்வொரு சோவியத்தும் தனது நிர்வாக—பிரதேசப் பகுதியில் மிக உயர்ந்த ஆட்சி அமைப்பாகத் திகழ்கிறது. எல்லா சோவியத்துகளும் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின்

அடிப்படையில் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன. இந்தக் கோட்பாடு அனைத்து சோவியத்துகளையும் ஒரே ஆட்சி அமைப்பு முறையின்கீழ் இணைக்கிறது. ஒவ்வொரு சோவியத்தும் சோவியத் அமைப்பு முழுவதும் ஒட்டுமொத்தமாக மக்களுடன் பரஸ்பரம் நெருங்கிய தொடர்புகள் கொள்வதற்கு இது துணை புரிகிறது ; அரசு நிர்வாகத்தில் மக்கள் விரிவாகவும் தீர்மானமாகவும் பங்கேற்பதை உத்தரவாதம் செய்கிறது.

ஒரே, மத்தியத்துவப்படுத்தப்பட்ட ஜனநாயக அரசாங்க அமைப்புகள் முறையில் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தும், பதினைந்து யூனியன குடியரசுகளது சுப்ரீம் சோவியத்துகளும், இருபது சுயாட்சிக் குடியரசுகளது சுப்ரீம் சோவியத்துகளும், 50,000 ஸ்தல சோவியத்துகளும் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு சோவியத்தும் தத்தமது நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்கிறது ; சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் யூனியனது அமைச்சரவையையும், யூனியன் குடியரசுகளது சுப்ரீம் சோவியத்துகள் குடியரசு அமைச்சரவைகளையும், ஸ்தல சோவியத்துகள தமது நிர்வாகக் கமிட்டிகளையும் ஏற்படுத்திக் கொள்கின்றன.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத். சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தான் நாட்டின் மிக உயர்ந்த ஆட்சி அமைப்பு. சோவியத் மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த அமைப்பு என்ற முறையில் தலைமை அதிகாரம் இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் இயைபு சோவியத் சமுதாயத்தின் சமூக, தேசிய கட்டுக்கோப்பைப் பிரதிபலிக்கிறது. சுப்ரீம் சோவியத்தானது சோவியத மக்களின் எல்லாப் பகுதியினரது பிரதிநிதிகளையும் தன்னுள் கொணடுள்ளது.

சோவியத் யூனியனின் தற்போதைய சுப்ரீம் சோவியத்தில் (இது 1970 ஜூனில் தேர்ந்தெடுக்கப்பட்டது) 1,517 பிரதிநிதிகள் உள்ளனர். இவர்களில் 418 பேர் தொழிலாளிகள், 282 பேர் கூட்டுப் பண்ணை விவசாயிகள். இவ்வாறு, உற்பத்தித் துறையில் நேரடியாக ஈடுபட்டுள்ள தொழிலாளிகளும் விவசாயிகளும் மொத்தப் பிரதிநிதிகளில் பாதிக்கும் சற்று அதிகமாக உள்ளனர். 73 பிரதிநிதிகள் இஞ்சினீயர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், 146 பிரதிநிதிகள் விஞ்ஞானம், கலாசாரம், இலக்கியம், கலை ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்கள். 478 பிரதிநிதிகள அரசாங்க, தொழிற்சங்க, கட்சி, இளைஞர் அமைப்புகளில் பணியாற்று கின்றனர். 57 பிரதிநிதிகள் நாட்டின் ஆயுதப் படைகளைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்றனர். பிரதிநிதிகளில் 463 பேர் (30·5 சதவிகிதம்) பெண்கள்.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகள் 62 தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் இரண்டு சபைகளைக் கொண்டுள்ளது; தேசிய இன பாகுபாடின்றி எல்லா சோவியத் பிரஜைகளது பொது நலன்களையும் யூனியன் சோவியத் பிரதிபலிக்கிறது; ஒவ்வொரு தேசத்தின், ஒவ்வொரு தேசிய இனத்தின் தனித்தன்மை வாய்ந்த பொருளாதார அம்சங்களிலிருந்தும், வரலாற்று கலாசாரப் பின்னணியிலிருந்தும் எழும் விசேட நலன்களை தேசிய இனங்கள் சோவியத் பிரதிபலிக்கிறது.

இந்த இரண்டு சபைகளுக்குமுள்ள வித்தியாசம் அவற்றின் தேர்தல் முறையில்தான் பொதிந்துள்ளது. மக்கட் தொகையில் ஒவ்வொரு 3 லட்சம் பேருக்கும் ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் யூனியன் சோவியத் தேர்தெடுக்கப்படுகிறது, ஒவ்வொரு யூனியன் குடியரசிலிருந்தும் 32 பிரதிநிதிகள், ஒவ்வொரு சுயாட்சிக் குடியரசிலிருந்தும் 11 பிரதிநிதிகள், ஒவ்வொரு சுயாட்சிப் பிராந்தியத்திலிருந்தும் 5 பிரதிநிதிகள், ஒவ்வொரு தேசியப் பகுதியிலிருந்தும் ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் அந்தந்த யூனியன் குடியரசுகளையும், சுயாட்சிக் குடியரசுகளையும், சுயாட்சிப் பிராந்தியங்களையும், தேசியப் பகுதிகளையும் சேர்ந்த பிரஜைகளால் தேசிய இனங்கள் சோவியத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இவ்வாறு தேசிய இனங்கள் சோவியத்தில் நிலப்பரப்பையோ மக்கட் தொகையையோ பொருத்து அல்லாமல், தேசிய அமைப்பின் வகையைப் பொறுத்தே பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. யூனியன் குடியரசுகளிலேயே மிகப் பெரியதான (மக்கட் தொகை 13 கோடி 22 லட்சம்) ரஷ்ய சமஷ்டிக்கு தேசிய இனங்கள் சோவியத்தில் 32 இடங்கள் உள்ளன; அதே சமயம் மிகக் குறைந்த மக்கட் தொகை கொண்ட (14 லட்சம்) எஸ்தோனியாவுக்கும் இதே எண்ணிக்கை உள்ள இடங்கள் இருக்கின்றன.

இரு சபைகளும் சமத்துவ உரிமை படைத்தவை. இரண்டும் ஒரே அளவு காலம்வரை (நான்கு ஆண்டுகள்) பதவியில் இருக்க உரிமை உண்டு. சட்டங்கள் இயற்றுவதற்கு இரு சபைகளுக்கும் சமஉரிமை இருக்கிறது. சாதாரண பெரும்பான்மை வாக்கால் இரண்டு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டால்தான் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

எந்தப் பிரச்சினை பற்றியேனும் இரு சபைகளுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால், இரு சபைகளிலிருந்தும் சமத்துவ எண்ணிக்கையுள்ள பிரதிநிதிகளைக் கொண்ட மத்தியஸ்தக் கமிஷன் தீர்வு காணுவதற்காக அந்தப் பிரச்சினை விடப்படுகிறது. கமிஷனால் ஓர் உடன்பாட்டிற்கு வர இயலவில்லை என்றாலோ அல்லது அதன் முடிவு ஏதேனும் ஒரு சபையைத் திருப்திப்படுத்த

வில்லை என்றாலோ அந்தப் பிரச்சினை மீண்டும் இரு சபைகளிலும் விவாதிக்கப்படுகிறது. அப்போதும் இரு சபைகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்படவில்லை என்றால் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தைக் கலைத்து விடுகிறது; புதுத் தேர்தல்கள் நடத்தப் படுகின்றன.

அரசியல் சட்டத்தின் 32 வது விதியின்படி, நாடு முழுவதற்கும் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்துக்கு மட்டுமே உண்டு. அதன் சட்டம் இயற்றும் பணிகள் எதையும் நிர்வாக அமைப்புகள் மேற்கொள்ள முடியாது.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தானது சோவியத் யூனியனின் சர்வதேச ஒப்பந்தங்களைச் செய்து கொள்கிறது, அவற்றை ஊர்ஜிதம் செய்கிறது அல்லது ரத்து செய்கிறது; யுத்தம் சமாதானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் குறித்து முடிவு செய்கிறது; சோவியத் யூனியனில் புதிய குடியரசுகளைச் சேர்த்துக் கொள்கிறது; சோவியத் யூனியனது அரசியல் சட்டம் சரிவரப் பின்பற்றப்படும்படியாகக் கண்காணிக்கிறது, யூனியன் குடியரசுகளது அரசியல் சட்டங்கள் சோவியத் யூனியனது அரசியல் சட்டத்திற்கு இசைவானதாக இருக்கும்படிப் பார்த்துக் கொள் கிறது; யூனியன் குடியரசுகளுக்கு இடையே எல்லைகளில் ஏற்படும் மாற்றங்களை அங்கீகரிக்கிறது; யூனியன் குடியரசுகளது கட்டுக் கோப்புக்குள் புதிய சுயாட்சிக் குடியரசுகளையும் சுயாட்சிப் பிராந்தியங்களையும் அமைப்பதை அங்கீகரிக்கிறது; கடன்கள் வாங்குகிறது, வழங்குகிறது; நில உரிமை சம்பந்தமான அடிப் படைக் கோட்பாடுகளையும், கனிச் செல்வங்கள், காடுகள், நீர்நிலைகள் முதலியவற்றைப் பயன்படுத்திக் கொள்வது சம்பந்த மான அடிப்படைக் கோட்பாடுகளையும் வரையறுத்துக் கூறுகிறது; பொதுக் கல்வித் துறையிலும் பொது அதிகாரத் துறையிலும் அடிப்படைக் கோட்பாடுகளை நிர்ணயித்துத் தருகிறது; தொழி லாளர் சட்டங்கள், நீதி பரிபாலனம், நீதித்துறை நடைமுறை பற்றிய சட்டங்கள், திருமணம் குடும்பம் பற்றிய சட்டங்கள், சிவில் கிரிமினல் சட்டங்கள், சீர்திருத்த உழைப்புச் சட்டங்கள் ஆகியவை சம்பந்தமான அடிப்படைகளை நிர்ணயித்துத் தருகிறது; சோவியத் குடியுரிமை குறித்தும் அயல்நாட்டினரின் உரிமைகள் குறித்தும் சட்டங்கள் இயற்றுகிறது; அகில-யூனியன் ரீதியில் பொது மன்னிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

அவசியம் ஏற்படும்போது சுப்ரீம் சோவியத் அந்தந்த அரசாங்க அமைப்புகளைத் திருத்தியமைக்கிறது, அவற்றின் கட்டமைப்பை யும் இயைபையும் மாற்றுகிறது.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் ஆண்டுதோறும் தேசப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை அங்கீகரிக்கிறது; சோவியத் யூனியன் அரசாங்க பட்ஜெட்டையும் அதன் நிறைவேற்றம் குறித்த அறிக்கையையும் ஊர்ஜிதம் செய்கிறது.

சோவியத் அயல் நாட்டுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் மிக முக்கிய பங்காற்றுகிறது.

அரசியல் சட்டப்படி சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் உயர் அமைப்புகளை நியமிக்கவும், தேர்ந்தெடுக்கவும் செய்கிறது. அது சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. சுப்ரீம் சோவியத் கூட்டங்கள் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில் அதன் அலுவல்களைத் தலைமைக் குழு மேற்கொள்கிறது. சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தானது சோவியத் அரசாங்கத்தையும் (சோவியத் யூனியன் அமைச்சரவை), சோவியத் யூனியனின் புரொகுரேட்டர் ஜெனரலையும் நியமிக்கிறது; சோவியத் யூனியனது தலைமை நீதிமன்றத்தை தேர்ந்தெடுக்கிறது.

சுப்ரீம் சோவியத் எல்லா அரசாங்க அமைப்புகள் மீதும் நாட்டின் உயர் அதிகாரிகள் மீதும் மிக உயர்ந்த கண்காணிப்பைச் செலுத்துகிறது.

பல்வேறு நாடாளுமன்றங்களுக்கிடையே உறவுகள் ஏற்படுத்திக் கொள்வதற்காக சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் கீழ் தேசிய நாடாளுமன்றக் குழு அமைக்கப்பட்டது. அகில-நாடாளுமன்ற யூனியனில் அது ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து வருகிறது.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு நிரந்தரமாக செயல்படும் உயர் ஆட்சி அமைப்பு. சோவியத் யூனியனின் கூட்டுத் தலைமை அது.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் இரு சபைகளது கூட்டுக் கூட்டத்தில் தலைமைக் குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதில் 37 பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுத் தலைவர், பதினைந்து துணை தலைவர்கள் (யூனியன் குடியரசுகளது எண்ணிக்கைக்கு ஏற்ப), தலைமைக் குழுவின் செயலாளர், இருபது உறுப்பினர்கள் ஆகியோரே இவர்கள்.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியக் கூட்டங்கள் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலங்களில், சுப்ரீம் சோவியத்தின் அதிகார வரப்புக்குட்பட்ட பல்வேறு பிரச்சினைகள் மீது தலைமைக் குழு முடிவுகள் எடுக்கும். உதாரணமாக, அவசியம் ஏற்படும் போதெல்லாம் சட்டங்களுக்குத் திருத்தங்கள் கொண்டு வருகிறது;

அரசாங்கத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களை அவர்களது பதவிகளி லிருந்து விலக்கி புதிய உறுப்பினர்களை நியமிக்கிறது; சோவியத் யூனியன் தலைமை நீதிமன்ற உறுப்பினர்களை விடுவிக்கவும் செய் கிறது. இந்தப் பிரச்சினைகள்மீது தலைமைக் குழு எடுக்கும் எல்லா முடிவுகளும் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் அங்கீகாரத் திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; தலைமைக் குழு தனது நடவடிக்கைகள் யாவற்றுக்கும் சுப்ரீம் சோவியத்துக்கு முற்றிலும் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளது.

இரு சபைகளாலும் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் நிரந்தரக் கமிஷன்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு கமிஷனின் வகையைப் பொருத்து அவை சுயேச்சையான முடிவு களை எடுக்கின்றன. ஒவ்வொரு சபையிலும் தற்போது 13 கமிஷன்கள் உள்ளன. அவை யாவன: யோக்கியதாம்சக் கமிஷன், சட்டப் பிரேரணைகள் கமிஷன், திட்ட, பட்ஜெட் கமிஷன், அயல் விவகாரங்கள் கமிஷன், இளைஞர் விவகாரங்கள் கமிஷன், தொழில், போக்குவரத்து, செய்திப் போக்குவரத்துக் கமிஷன், கட்டட நிர்மாண, கட்டடப் பொருள்கள் தொழில் கமிஷன், விவசாயக் கமிஷன், பொது சுகாதார, சமூகப் பாது காப்புக் கமிஷன், பொதுக் கல்வி, விஞ்ஞான, கலாசார விவகாரங்கள கமிஷன், வர்த்தக, சமூக சேவைகள் கமிஷன், இயற்கைப் பாதுகாப்புக் கமிஷன்.

நகல் பசோதாக்களைத் தயாரிப்பதும் சட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும், நிர்வாக அமைப்பு களின் அலுவல்களைக் கண்காணிப்பதும் நிரந்தரக் கமிஷன்களின் பணிகளாகும்.

இரு சபைகளது கூட்டுக் கூட்டத்தில் சுப்ரீம் சோவியத், சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவையை, அரசாங்கத்தை நியமிக்கிறது.

**சோவியத் யூனியன் அமைச்சரவை.** சோவியத் யூனியனது ஆட்சி அதிகாரத்தின் மிக உயர்ந்த நிர்வாக, பரிபாலன அமைப்பாகும். அமைச்சரவைத் தலைவர், துணைத்தலைவர்கள், அமைச்சர்கள், அரசாங்கக் கமிட்டிகளின் தலைவர்கள், எல்லா யூனியன் குடியரசு களது அமைச்சரவைகளின் தலைவர்கள் உட்பட மொத்தம் 80க்கு மேற்பட்டவர்கள் இதில் உள்ளனர்.

சோவியக் சர்க்கார் எல்லா அரசாங்க நிர்வாக அமைப்பு களின் பணிகளை ஒன்றுபடுத்தி, ஒருமுகப்படுத்தி, அவற்றுக்கு வழிகாட்டுகிறது அமைச்சரவையின் பணி கூட்டு முயற்சிகளின் அடிப்படையில அமைந்துள்ளது.

அமைச்சரவையின் நிர்வாக, பரிபாலனப் பணி முழுவதும் சோவியத் சட்டங்களைச் சரியான முறையில் கடைப்பிடிக்கும் அடிப்படையில் அமைந்திருக்கிறது. சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரகடனம் செய்த சட்டங்களின் அடிப்படையிலும் அவற்றுக்கு இணங்கவும் அது முடிவுகள் மேற்கொள்கிறது, உத்தரவுகள் பிறப்பிக்கிறது. சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி சோவியத் யூனியன் அமைச்சரவை:

சோவியத் யூனியன் அமைச்சகங்களும் அதன் அதிகார வரம்புக்குட்பட்ட சில அமைப்புகளதும் பணிகளை ஒருமுகப் படுத்தி அவற்றுக்கு வழி காட்டுகிறது;

பொருளாதார திட்டத்தையும் அரசாங்க பட்ஜெட்டையும் நிறைவேற்றுதற்கும் பொருளாதார, நிதி அமைப்பைப் பலப் படுத்துவதற்குமாக நடவடிக்கைகளை மேற்கொள்கிறது;

சட்டத்தையும் ஒழுங்கையும் பிரஜைகளின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது;

அயல் நாடுகளுடனான உறவுகள் துறையில் பொது வழி காட்டுகிறது;

ஆண்டுதோறும் ராணுவ சேவைக்கு அழைக்கப்படும் பிரஜை களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதுடன், நாட்டின் ஆயுதப் படைகள் ஒழுங்கமைக்கப்படுவதற்கு வழி காட்டுகிறது.

சோவியத் யூனியனது அரசாங்கக் கமிட்டிகளையும் அவசியம் ஏற்படும்போது பொருளாதார, கலாசார, தற்காப்பு விவகாரங்கள் சம்பந்தமாக சோவியத் யூனியன் அமைச்சரவை யின் கீழ் விசேஷக் கமிட்டிகளையும் மத்திய போர்டுகளையும் அமைக்கிறது.

சோவியத் யூனியன் அமைச்சரவை சுப்ரீம் சோவியத்துக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளது.

யூனியன் குடியரசுகளது சுப்ரீம் சோவியத்துகள்தான் யூனியன் குடியரசுகளில் மிக உயர்ந்த ஆட்சி அமைப்புகள். அவற்றில் ஒரே சபைதான் உண்டு

அந்தந்தக் குடியரசுகளின் அரசியல் சட்டங்களில் நிர்ணயிக்கப் பட்டுள்ள மக்கட் தொகை விகிதாசாரப்படி யூனியன் குடியரசு களது சுப்ரீம் சோவியத்துகளுக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் சுப்ரீம் சோவியத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை வருமாறு: ரஷ்ய சமஷ்டியின் சுப்ரீம் சோவியத்-884 பிரதிநிதிகள், உக்ரைன்-469 பிரதிநிதிகள், பைலோரஷ்யா 421 பிரதிநிதிகள், கஜாக்ஸ்தான்-476 பிரதிநிதிகள், உஸ்பெக்கிஸ்தான் - 458 பிரதிநிதிகள், துருக்மேனியா-285 பிரதிநிதிகள், இத்தியாதி.

யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத் சர்வஜன, சமத்துவ, இரகசிய வாக்கெடுப்பு மூலம் நான்கு ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத்: யூனியன் குடியரசின் அரசியல் சட்டத்தை ஏற்கவும், அதற்குத் திருத்தங்களும் மாற்றங்களும் கொண்டு வரவும், யூனியன் குடியரசின் ஒரு பகுதியாக இருக்கும் சுயாட்சிக் குடியரசுகளின் அரசியல் சட்டங்களை உறுதி செய்யவும், யூனியன் குடியரசின் சட்டங்களை இயற்றவும், குடியரசின் பொருளாதாரத் திட்டத்தையும் பட்ஜெட்டையும் அங்கீகரிக்கவும், குடியரசின் அரசாங்க அமைப்புகளதும் உயர் அதிகாரிகளதும் பணியை உயர்ந்த மட்டத்தில் கண்காணிக்கவும் உரிமை பெற்றுள்ளது. குடியரசின் நீதித்துறை அமைப்புகளால் தண்டிக்கப்பட்ட பிரஜைகளுக்கு மன்னிப்பு அளிக்கவும் அதற்கு உரிமை உண்டு.

யூனியன் குடியரசின் மிக உயர்ந்த அதிகாரம் படைத்த அமைப்பாக உள்ள அதன் சுப்ரீம் சோவியத் யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவையும் குடியரசின் தலைமை நீதிமன்றத்தையும் தேர்ந்தெடுக்கிறது; யூனியன் குடியரசின் அமைச்சரவையை நியமிக்கிறது; அவசியம் ஏற்படும்போதெல்லாம் இந்த அமைப்புகளின் இயைபில் மாற்றங்கள் செய்கிறது.

யூனியன் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகள் யோக்கியதாம்சக் கமிஷன் சட்ட பிரேரணைகள் கமிஷன், திட்ட பட்ஜெட் கமிஷன், அயல் விவகாரங்கள், இளைஞர் விவகாரங்கள், இயற்கைப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான கமிஷன்கள், பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகள் கலாசாரம் சம்பந்தப்பட்ட கமிஷன்கள் முதலிய பலதரப்பட்ட கமிஷன்களை தேர்ந்தெடுக்கின்றன. ஒவ்வொரு குடியரசின தனி இயல்புகளைப் பொருத்து இத்தகைய கமிஷன்களின எண்ணிக்கை மாறுபடுகிறது.

அமைச்சரவையே ஒரு யூனியன் குடியரசினது ஆட்சி அதிகாரத்தின் மிக உயர்ந்த நிர்வாக, பரிபாலன அமைப்பாகும், அதன் அரசாங்கமாகும் அது யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத்துக்கோ அல்லது கூட்டங்கள் நடைபெறுவதற்கு இடைப்

பட்ட காலங்களில் யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவுக்கோ பொறுப்புக் கூறக் கடமைப்பட்டது.

**சுயாட்சிக் குடியரசுகளது மிக உயர்ந்த ஆட்சி அமைப்புகள்** அடிப்படையில் யூனியன் குடியரசுகளில் இருப்பவை போன்றவையே ஆகும்.

அந்தந்த சுயாட்சிக் குடியரசின் அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மக்கட் தொகை வீதாசாரப்படி பிரஜைகளால் சுயாட்சிக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத் நான்கு ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதன் உறுப்பினர் எண்ணிக்கை 60 முதல் 150 வரை இருக்கலாம்.

சுயாட்சிக் குடியரசின் அரசியல் சட்டத்தை ஏற்றல் அதற்குத் திருத்தங்கள் கொண்டு வருதல், இந்த நடவடிக்கைகளை அந்தந்த யூனியன் குடியரசின் சுப்ரீம் சோவியத்தின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்தல்; சுயாட்சிக் குடியரசின் நடப்பு சட்டங்களை இயற்றுதல்; தனது உயர்ந்த ஆட்சி அமைப்புகளை நியமித்தல்; குடியரசின் பொருளாதாரத் திட்டத்தையும் பட்ஜெட்டையும் அங்கீகரித்தல்; குடியரசின் அரசாங்க அமைப்புகளதும் உயர் அதிகாரிகளதும் பணியை உயர்ந்த மட்டத்தில் கண்காணித்தல் ஆகியவை சுயாட்சி குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளுக்குள்ள அதிகாரங்களில் அடங்கும்.

சுயாட்சிக் குடியரசின் சுப்ரீம் சோவியத் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவையும் தலைமை நீதிமன்றத்தையும் தேர்ந்தெடுக்கிறது; அமைச்சரவையை நியமிக்கிறது.

**உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது ஸ்தல சோவியத்துகள்** ஒரே சோவியத் அமைப்பின் பிரிக்க முடியாத பகுதியாக அமைந்துள்ளன. அவை பிரதேசங்களிலும், பிராந்தியங்களிலும், வட்டாரங்களிலும், நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் ஆட்சி அதிகாரத்தை வகிக்கின்றன; தமது அதிகார வரம்புக்குட்பட்ட பிரச்சினைகளுக்கு சுயேச்சையாகத் தீர்வுகள் காணுகின்றன.

எல்லா ஊராட்சி சோவியத்துகளும் இரண்டாண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவற்றின் பிரதிநிதித்துவ வீதாசாரம் அந்தந்த யூனியன் குடியரசின் அரசியல் சட்டத்தால் வரையறுக்கப்படுகிறது. பொதுவாக பிரதேச, பிராந்திய சோவியத்துகளில் 100 பிரதிநிதிகளும், வட்டார, சோவியத்துகளில் 75 பிரதிநிதிகளும், நகர சோவியத்துகளில் 50 பிரதிநிதிகளும், கிராம சோவியத்துக்களில் 25 பிரதிநிதிகளும் உள்ளனர்.

ஊராட்சி சோவியத்துகள் தமது நிர்வாகக் கமிட்டிகளின் பணிகளுக்கு வழி காட்டுகின்றன. சட்டத்தையும் ஒழுங்கையும்

நிலைநாட்ட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. எப்போதும் சட்டத்தைக் கடைப்பிடித்து ஒழுகும்படியாகக் கவனித்துக் கொள்கின்றன. பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாக்கின்றன; ஸ்தல பொருளாதார கலாசார விவகாரங்களை நிர்வகிக்கின்றன, ஸ்தல பட்ஜெட்டுகளைத் தயாரித்து அங்கீகரிக்கின்றன. மக்களின் சுபீட்ச நலனிலும், நகரப்புறத்திலும் கிராமப்புறத்திலும் மக்களது தேவைகளை முழு அளவுக்குப் பூர்த்தி செய்வதிலும் அன்றாடம் அக்கறை காட்டுவது ஊராட்சி சோவியத்துகளின் கடமை.

தேச வியாபகமான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவும் தமது யோசனைகளை சம்பந்தப்பட்ட அமைப்புகளிடம் சமர்ப்பிக்கவும் ஊராட்சி சோவியத்துகள் உரிமை பெற்றுள்ளன.

அண்மையில் ஊராட்சி சோவியத்துக்கு நடைபெற்ற தேர்தல்களில் (1973 ஜூன்) இந்த அமைப்புகளுக்கு ஏறத்தாழ 22,00,000 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் தொழிலாளிகளும் விவசாயிகளும் 65 சதவீதத்தினர்; 46 சதவீதம் பிரதிநிதிகள் பெண்கள். எல்லா பிரதிநிதிகளிலும் 55.5 சதவீதத்தினர் கட்சி சார்பற்றவர்கள், சோவியத் யூனியனின் அனைத்து தேசங்களும் தேசிய இனங்களும் சோவியத்துகளில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. ஒவ்வொரு தேர்தலிலும் சோவியத் யூனியன் அமைப்பில் பெருமளவு மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக, 1973ல் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் பாதிக்கும் அதிகமானவர்கள் முதல் தடவையாகத் தேர்தெடுக்கப்பட்டவர்களாவர். லட்சக்கணக்கான உழைப்பாளி மக்கள் அரசாங்க நிர்வாகத்தில் பயிற்சி பெறவும், பொது விவகாரங்களில் முன்னின்று பங்கெடுத்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஈட்டவும் சோவியத்துகள் துணை புரிகின்றன.

## சட்ட அமைப்பு

சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தின் 32வது ஷரத்தின் படி, சோவியத் யூனியன் முழுவதற்கும் சட்டங்கள் இயற்றும் அதிகாரங்கள் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்துக்கு மட்டுமே உண்டு.

இவ்வாறே, யூனியன் குடியரசுகளிலும் சுயாட்சிக் குடியரசுகளிலும் சட்டங்கள் இயற்றும் அதிகாரங்கள் அந்தந்தக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளுக்கு மட்டுமே உண்டு என்று யூனியன் குடியரசுகளதும் சுயாட்சிக் குடியரசுகளதும் அரசியல் சட்டங்கள் குறிப்பிடுகின்றன.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தாலும், யூனியன் குடியரசுகளதும் சுயாட்சிக் குடியரசுகளதும் சுப்ரீம் சோவியத்து

களாலும் இயற்றப்படும் ஏராளமான சட்டங்களைக் கொண்டதே சோவியத் சட்ட ஆக்கத்துறை.

சோவியத் யூனியனின் சட்டங்கள் சமூக வாழ்க்கையின் பிரதான துறைகளில் சமூக உறவுகளை நிர்ணயிக்கும் சட்ட விதிகளை நிலை நாட்டுகின்றன; சோவியத் யூனியன் முழுவதற்கும் பொருந்தக் கூடிய அடிப்படை சட்டக் கோட்பாடுகளை வகுத்துத் தருகின்றன.

அகில-யூனியன் சட்டங்களில் அடங்கியுள்ள கோட்பாடுகளும் நியதிகளும் யூனியன் குடியரசின் சட்டங்களில் வளர்க்கப்படுகின்றன, செழுமைப்படுத்தப்படுகின்றன, ஸ்தூல வடிவம் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு குடியரசுக்கும் சொந்த சிவில் சட்டங்களும், தண்டனைச் சட்டங்களும், நடைமுறை சம்பந்தப் பட்ட சட்டங்களும், ஏனைய சட்டங்களும் உள்ளன. குறிப்பிட்ட குடியரசில் வரலாற்று ரீதியில் உருவான பொருளாதார, கலாசார அம்சங்களையும் இதர அம்சங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டே இந்தச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இவை இக்குடியரசில் மட்டுமே செயல்படுத்தப்படுகின்றன.

சோவியத் சட்டங்கள் ஒரே அடித்தளத்தைக் கொண்டவை. அதே சமயம் அவை யூனியன் குடியரசுகள் ஒவ்வொன்றின் பிரத்தியேக அம்சங்களையும் நிலைமைகளையும் கணக்கிலெடுத்துக் கொள்கின்றன.

நீதித்துறை. சோவியத் யூனியனில் எல்லா நீதிமன்றங்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. நீதிபதிகள் சுதந்திரமானவர்கள். சட்டத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள். அரசியல் சட்டத்திலேயே வரையறுத்துக் கூறப்பட்டுள்ள கோட்பாடு இது. பிறர் தலையீடின்றி மனத்தெளிவோடும், முற்றிலும் சட்டத்திற்கு இணங்கவும், நீதிமன்றத்தில் நிலைநாட்டப்பட்ட சாட்சியங்களுக்கு ஏற்பவும் நீதிபதிகள் தீர்ப்புகள் வழங்குகின்றனர்.

சட்டமுறைமை கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கப்படுவதற்கும், தனி நபர் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதற்கும் பின்கண்ட உத்தரவாதங்கள் சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ளன: நீதிமன்றத்தின் உத்தரவின்றியோ புரோகுரேடரின் அனுமதியின்றியோ யாரையும் கைது செய்ய முடியாது; குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்காதவரை எவரும் குற்றமிழைத்தவராகக் கருதப்பட மாட்டார், அவருக்குத் தண்டனையும் அளிக்க முடியாது; சட்டத்தின் முன்னும் நீதிமன்றத்தின் முன்னும் எல்லாப் பிரஜைகளும் சமம்; விசாரணையில் சம்பந்தப்பட்ட நபர்களால் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் நீதிமன்ற நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டும்; ஒருவர் வழக்கு பற்றிய எல்லா விவரங்களையும்

அவசியமானுல் மொழி பெயர்ப்பாளர் மூலம் பூரணமாகத் தெரிந்து கொள்வதற்கும், அவர் நீதிமன்றத்தில தமது சொந்த மொழியில் தமது கட்சியை எடுத்துரைப்பதற்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்; வழக்கு விசாரணை பகிரங்கமாக நடைபெறுகிறது, எதிர்த்து வழக்காடுவதற்குக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு முழு உரிமை உண்டு. வழக்கு சம்பந்தப்பட்ட எல்லா சந்தர்ப்பங்களை யும் விரிவாகவும், முழுமையாகவும், நேர்மையாகவும் ஆராய வேண்டும் என்று சோவியத் சட்டம் நீதி மன்றத்தையும், புரோகுரேட்டரையும், புலன் விசாரணை அதிகாரியையும் கட்டுப் படுத்துகிறது.

சோவியத் நீதித்துறை சோவியத் சமூக அமைப்பையும், அரசமைப்பையும், சோஷலிசப் பொருளாதார அமைப்பையும், சோஷலிச சொத்துக்களையும் ஆதரித்து நிற்கிறது; அரசியல் உரிமைகளையும், தொழிலாளர் உரிமைகளையும், குடியிருப்பு உரிமை களையும், சொத்துரிமைகளையும், பிரஜைகளின் இதர உரிமை களையும் பாதுகாக்கிறது; சட்டங்களைக் கண்டிப்பாகவும் பிறழா மலும் கடைப்பிடிக்கும்படியும், தமது தேசிய கடமையையும் சமூக கடமையையும் பொருத்த வரையில் நேர்மையாக நடந்து கொள்ளும்படியும் பிரஜைகளுக்குப் போதிக்கிறது.

நீதிமன்றம் குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவதன் நோக்கம் சிட்சை அளிப்பது மட்டுமல்ல, அவனைத் திருத்தி நல்வழிப் படுத்து வதுமாகும்.

சோவியத் யூனியனில் விசாரணைக்கு வரும் வழக்குகளில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம் தொழிலாளர் சட்டங்கள், திருமண, குடும்ப சட்டங்கள், குடியிருப்பு வசதிகள் சட்டங்கள் போன்றவை சம்பந்தப்பட்ட சிவில் வழக்குகளே ஆகும் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

**நீதி பரிபாலன முறை.** சோவியத் யூனியன் தலைமை நீதி மன்றம், யூனியன் குடியரசுகள் சுயாட்சிக குடியரசுகளின தலைமை நீதிமன்றங்கள், பிரதேச, பிராந்திய, தேசியப் பகுதி, நகர நீதி மன்றங்கள், மக்கள் நீதிமன்றங்கள் ஆகியவற்ருல் சோவியத் யூனியனில் நீதி பரிபாலிக்கப்படுகிறது.

எல்லா நீதிபதிகளும் ஐந்தாண்டுக் காலத்திற்குத் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். சோவியத் யூனியன் தலைமை நீதிமன்றம் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தினுல் தேர்ந்தெடுக்கப்படு கிறது. யூனியன் குடியரசுகளின் தலைமை நீதிமன்றங்களும் சுயாட்சிக் குடியரசின் தலைமை நீதிமன்றங்களும் முறையே யூனியன் குடியரசுகளது சுப்ரீம் சோவியத்துகளாலும், சுயாட்சிக் குடியரசு களது சுப்ரீம் சோவியத்துகளாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பிரதேச, பிராந்திய, தேசியப் பகுதி, நகர நீதிமன்றங்கள்

அந்தந்த உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. சர்வஜன, சமத்துவ, நேரடி வாக்குரிமை அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் மக்கள் நீதிமன்றங்கள் பிரஜைகளால் தேர்நதெடுக்கப்படுகின்றன. மக்கள் நீதிபதிகள பதவிகளுக்கு தொழிலாளர் நிறுவனங்கள் வேட்பாளர்களை நியமிக்கின்றன. இருபத்தைந்து வயதடைந்த எந்த சோவியத் பிரஜையும் மக்கள் நீதிபதியாகலாம்: சொத்து, அந்தஸ்து சமூக அந்தஸ்து போன்ற தகுதிகள் ஏதும் இதற்கு வேண்டியதில்லை.

எல்லா நீதிமன்றங்களும் அவற்றைத் தேர்ந்தெடுக்க சோவியத்துகளுக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளன. மக்கள் நீதிமன்றங்கள் தம்மைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளன. நீதிபதிகள் தமது நடவடிக்கைகள் பற்றியும் தத்தமது நீதி மன்றங்களின் நடவடிக்கைகள் பற்றியும் அவ்வப்போது உழைப்பாளி மக்கள் கூட்டங்களில் விளக்கிக் கூறியாக வேண்டும். எந்த ஒரு நீதிபதியும் அவர் மீது வைதத நம்பிக்கைக்குப் பாததிரமானவராக நடந்து கொள்ளத் தவறினல் அவர் திரும்ப அழைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடைபெறுகினறன.

எல்லா சோவியத் நீதிமன்றங்களிலும் ஒரு நீதிபதியும் இரண்டு மக்கள் அசெஸர்களும் வழக்குகளை விசாரிக்கின்றனர். நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் முடிவு செய்வதில் நீதிபதியுடன் மக்கள் அசெஸர்கள் சரிநிகர் சமதது்வ உரிமைகள் பெற்றுள்ளனர். பிரதேச, பிராந்திய நீதிமன்றங்களதும் அதேபோல் நகர, தேசியப் பகுதி நீதிமன்றங்களதும் மக்கள் அசெஸர்கள் அந்தந்த உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளால் தேர்நதெடுக்கப்படுகின்றனர். சோவியத் யூனியன் தலைமை நீதிமன்றத்தின் மக்கள் அசெஸர்கள், யூனியன் குடியரசுகளது தலைமை நீதிமன்றங்களின் மக்கள் அசெஸர்களும் முறையே சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தாலும், யூனியன் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளாலும், சுயாட்சிக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

மக்கள் நீதிமன்றங்களின் மக்கள் அசெஸர்கள் நேரடியாக மக்களால் அவர்கள் வேலை செய்யும் இடங்களிலும் குடியிருக்கும் இடங்களிலும் நடைபெறும் கூட்டங்களில் பகிரங்க வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வாழ்க்கையின் எல்லாத் துறைகளைச் சேர்ந்தவர்களும் மக்கள் அசெஸர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நீதியைப் பரிபாலிப்பதில் இவர்கள் தமது வாழ்க்கை அனுபவம், அறிவுக் கூர்மை, மனச்சாட்சி ஆகியவற்றால்

வழிகாட்டப்பட்டு, சோஷலிச ஒழுக்க நெறிகளுக்கும் சோவியத் சட்டங்களுக்கும் இணங்க செயல்படுகின்றனர்.

சோவியத் யூனியனில் 6 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அசெஸர்கள் உள்ளனர். மக்கள் அசெஸர்களுக்கான தேர்தல்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன. இதன் பயனாய் லட்சக்கணக்கான உழைப்பாளி மக்கள் நீதி பரிபாலனத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

**மக்கள் நீதிமன்றம்.** மக்கள் நீதிமன்றமே சோவியத் நீதி பரிபாலன முறையின் பிரதான பகுதியாகும். எல்லா சிவில், கிரிமினல் வழக்குகளில் 95 சதவிகிதத்திற்கு அதிகமானவற்றை அது விசாரிக்கிறது.

மக்கள் நீதிமன்றம் ஒவ்வொரு வட்டாரத்திலும், வட்டாரங்களாகப் பிரிக்கப்படாத ஒவ்வொரு நகரத்திலும் செயல் படுகிறது.

**நகரப்புற, பிராந்திய, பிரதேச நீதிமன்றங்கள், சுயாட்சிப் பிராந்தியங்கள், தேசியப் பகுதிகளின் நீதிமன்றங்கள், சுயாட்சிக் குடியரசுகளின் தலைமை நீதி மன்றங்கள்.** இந்த நீதி மன்றங்கள் விசேட முக்கியத்துவமுள்ள சிவில், கிரிமினல் வழக்குகளை விசாரிக்கின்றன; மக்கள் நீதிமன்றங்கள் விதிக்கும் தண்டனைகளும், அளிக்கும தீர்ப்புகளும் சட்ட ரீதியானவையாகவும் செல்லத்தக்கவையாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்கின்றன. இந்த நீதி மன்றங்கள் சிவில், கிரிமினல் வழக்குகளுக்கான நீதிபரிபாலன போர்டுகளையும் நீதிமன்ற தலைமைக் குழுக்களையும் பெற்றுள்ளன.

**யூனியன் குடியரசுகளின் தலைமை நீதிமன்றங்கள்.** இவைதான் யூனியன் குடியரசுகளின் மிக உயர்ந்த நீதிமன்ற அமைப்புகளாகும். இவை ஒவ்வொன்றிலும் சிவில், கிரிமினல் வழக்குகளுக்கான நீதி பரிபாலன போர்டுகளும், தலைமைக் குழுவும், பிளீனமும் உள்ளன.

எந்தெந்த வழக்குகள் யூனியன் குடியரசினது தலைமை நீதி மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டவை என்பதைச் சட்டம் வரையறுத்துக் கூறவில்லை. இந்த தலைமை நீதிமன்றம் தனது சொந்த முன் முயற்சியின் பேரிலோ அல்லது யூனியன் குடியரசின் புரோகுரேட்டரது யோசனையின் பேரிலோ, கீழ் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டதும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களால் விசேட சமூக முக்கியத்துவம் வாய்ந்ததுமான எந்த வழக்கையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம். தலைமை நீதி மன்றம் விதிக்கும் தண்டனைகளையும் அளிக்கும் தீர்ப்புகளையும் மேல் முறையீடு நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியாது. ஆனால் கண்காணிப்பு தோரணையில் செயல்படும் யூனியன் குடியரசினது தலைமை நீதிமன்றத்தின் தலைமைக் குழுவினால் அவை

பரிசீலிக்கப்படலாம். தலைமை நீதிமன்றத்தின் பிளீனம் யூனியன் குடியரசிலுள்ள எல்லா நீதிமன்றங்களின் நடவடிக்கைகளையும் மேற்பார்க்கிறது.

அது குடியரசின் சட்டங்களை எவ்வாறு அனுசரிப்பது என்பதை நீதிமன்றங்களுக்குக் காட்டுகிறது; சட்டங்கள் இயற்றுவது சம்பந்தமாகவும் அவற்றுக்கு விளக்கம் கூறுவது சம்பந்தமாகவும் குடியரசின் தலைமை நீதிமன்றத்துக்கு யோசனைகள் சமர்ப்பிக்கிறது. தலைவர், துணைத் தலைவர்கள், குடியரசு தலைமை நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் பிளீனத்தில் இடம் பெற்றுள்ளனர். பிளீனம் கூட்டங்களில் குடியரசின் புரோகுரேட்டர் கலந்து கொள்வது அவசியம்.

சோவியத் யூனியன் தலைமை நீதிமன்றம். இதுவே நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்ற அமைப்பு. இதில் சோவியத் யூனியன் தலைமை நீதிமன்றத்தின் பிளீனம், சிவில் வழக்குகளுக்கான நீதிபரிபாலன போர்டு, கிரிமினல் வழக்குகளுக்கான நீதி பரிபாலன போர்டு, ராணுவ நீதி பரிபாலன போர்டு ஆகியவை அடங்கியுள்ளன.

சோவியத் யூனியன் தலைமை நீதிமன்றத்தின் நீதி பரிபாலன போர்டுகள் சட்டரீதியாக தம் பரிசீலனைக்கு வரும் தனி முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை முதல்நிலை நீதிமன்றமாக விசாரிக்கின்றன.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் பிளீனம் தான் மிக உயர்நிலை நீதிமன்றமாகும். யூனியன் குடியரசுகளது தலைமை நீதிமன்றங்களின் தலைவர்களைக் கொண்டது இது. பிளீனம் கூட்டங்களில் சோவியத் யூனியன் புரோகுரேட்டர்-ஜெனரலும் சோவியத் யூனியன் நீதித்துறை அமைச்சரும் கலந்து கொள்கின்றனர்.

நீதி நடைமுறைகளைத் தொகுத்துக் கூறுவதும், சட்டங்களை மிகச் சரியாகவும் கண்டிப்பாகவும் செயல்படுத்துவதற்கான வழி துறைகளை நீதிமன்றங்களுக்கு வகுத்துத் தருவதும் சோவியத் யூனியன் தலைமை நீதிமன்ற பிளீனத்தின் தலையாய பணியாகும்.

நடைமுறையிலுள்ள சட்டங்களை மேம்படுத்துவதற்கு பிளீனத்தின் பரிந்துரையின் பேரில் சோவியத் யூனியனின் தலைமை நீதிமன்றம் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்துக்கு யோசனைகள் சமர்ப்பிக்கிறது. சோவியத் யூனியன் தலைமை நீதிமன்றத்தின் நீதிமன்ற போர்டுகள் வழங்கும் தண்டனைகளையும் தீர்ப்புகளையும் எதிர்த்தும், யூனியன் குடியரசுகளது தலைமை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் அகில-யூனியன் சட்டங்களுக்கு முரணாக இருந்தாலோ அல்லது அவை வேறு ஏதேனும் யூனியன் குடியரசினது நலன்களுக்கு விரோதமாக இருந்தாலோ அவற்றை எதிர்த்தும் சோவியத்

யூனியன் தலைமை நீதிமன்றத் தலைவரதும் சோவியத் யூனியன் புரோகுரேட்டர் ஜெனரலதும் கோரிக்கையின் பேரில் சமர்ப்பிக்கப் பட்ட ஆட்சேபங்களை சோவியத் யூனியன் தலைமை நீதிமன்றத்தின் பிளீனம் விசாரணை செய்கிறது. இவ்வாறு சோவியத் யூனியன் தலைமை நீதிமன்றம் நாட்டின் சகல நீதிமன்றங்களது நடவடிக்கை களையும் கண்காணித்து, அதன் மூலம் நீதிபரிபாலனம் முறையாக நடைபெறும்படியாக பார்த்துக் கொள்கிறது.

சோவியத் யூனியன் நீதித்துறை அமைச்சகமும் அதன் ஸ்தல அமைப்புகளும் நீதிமன்றங்களின் ஒழுங்கமைப்பையும், நீதிபதிகள் மக்கள் அசெஸர்களின் தேர்தல்களையும், நீதிமன்றங்களின் பராமரிப்பையும் மேற்பார்க்கின்றனர்.

*தண்டனைகளின் வகைகள்:* கிரிமினல் குற்றங்களுக்குப் பின் வரும் தண்டனைகள் வழங்கப்படுகின்றன: சமூகக் கண்டனம், அபராதங்கள், சில பதவிகளை வகிக்கும் உரிமையை அல்லது குறிப் பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமையை இழத்தல், நாடு கடத்தல், தேசப்பிரஷ்டம் சிறைவாசமற்ற சீர்திருத்த உழைப்பு, சிறைவாசம்.

கூடுதல் தண்டனைக்காக மட்டும் பயன்படுத்தப்படும் வேறு இரண்டு சிட்சை முறைகளும் உள்ளன: கௌரவ பட்டத்தையோ அல்லது ராணுவ அந்தஸ்தையோ பறிமுதல் செய்தல்; சொத்துக் களைப் பறிமுதல் செய்தல்.

கடுமையான குற்றம் இழைத்தோர் விஷயத்தில்தான் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் நடைமுறை பின்பற்றப்படு கிறது. ஆனால் தண்டிக்கப்பட்டவரின் குடும்பத்தினரது சொத்துக் களும் அவருக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் சில பொருள் களும் பறிமுதல் செய்யப்படுவதில்லை.

சிறைவாசத் தண்டனை அல்லாத வேறு தண்டனைகள் சோவியத் கிரிமினல் சட்டத்தில் இருப்பது அதன் ஒரு விசேஷ அம்சமாகும். சிறைவாசத்திற்குட்படுத்தாமல் சீர்திருத்த உழைப்புத் தண்டனை விதிக்கும் நடைமுறை மிக விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. தண்டனையை எங்கு அனுபவிப்பது என்று குறிப்பிடாமல் ஒரு மாதம் முதல் ஓராண்டுக் காலம் வரை சீர்திருத்த உழைப்புத் தண்டனையை நீதிமன்றம் வழங்கலாம்; இவ்வாறு தண்டனை பெற்றவர்கள் தாம் வேலைக்கமர்த்திக் கொள்ளப்பட்டுள்ள இடத் திலேயே பெரும்பாலும் தொடர்ந்து வேலை செய்கின்றனர். நீதி மன்ற உத்தரவுப்படி அவர்களது சம்பளத்தில் ஐந்து முதல் இருபது சதவிகிதம் பிடித்துக்கொள்ளப்படுகிறது. இதல்லாமல், சீர்திருத்த உழைப்புத் தண்டனையை அனுபவிக்கும் காலம் தண்டிக்கப்பட்ட வரின் சர்வீசுடன் பொதுவாக சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

அதிகப்பட்ச சிறைவாச காலம் பத்து ஆண்டுகளாகும். எனினும் கடுமையான குற்றங்கள் இழைத்தோருக்கும் அபாயகர மான குற்றவாளிகளுக்கும் 15 ஆண்டுக் காலம் வரை தண்டனை விதிக்கலாம்.

தண்டிக்கப்பட்டவர்கள் தங்கள் தண்டனையை சிறைகளிலோ அல்லது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நடப்பது போல சீர்திருத்த உழைப்பு முகாம்களிலோ அனுபவிக்கின்றனர். தண்டிக்கப்பட்டவர்களைப் பரோலில் விடுதலை செய்வதற்கும் சோவியத் சட்டம் வகை செய்கிறது.

தண்டிக்கப்பட்டவர்கள் தாம் தண்டனை அனுபவிக்கும் இடங்களில் பயனுள்ள வேலைகளில் ஈடுபடுகின்றனர். இதற்கு அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இங்கு அவர்கள் பல்வேறு தொழில்களைக் கற்றுக் கொள்ளலாம்; பொதுக் கல்வியும் பெறலாம். தண்டிக்கப்பட்டோர் முன்னைவிட சிறந்த தகுதிகளுடன் தமது சகஜ தொழில் வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு இவை யாவும் துணை புரிகின்றன. தமது தண்டனையை அனுபவித்து முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்க ஸ்தல அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர்.

அசாதாரணமாக கொடிய குற்றம் இழைத்தோர், வேறொருவரது உயிருக்கு ஆபத்து விளைவிக்க முயன்றவர், சோஷலிச அமைப்பின் அடித்தளங்கள் மீது அத்துமீறல்கள் செய்தோர் போன்றோர்க்கு மரண தண்டனை வழங்க சட்டம் இடம் கொடுக்கிறது. ஆனால் பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களுக்கும், குற்றம் இழைக்கப்படும் சமயத்திலோ, தண்டனை விதிக்கப்படும் சமயத்திலோ, தண்டனை நிறைவேற்றப்படும் சமயத்திலோ கர்ப்பிணிகளாக உள்ள பெண்களுக்கும் மரண தண்டனை விதிப்பதை சட்டம் அனுமதிக்கவில்லை. சோவியத் யூனியனில் மரண தண்டனை ஒரு தற்காலிகமான, விதிவிலக்கான நடவடிக்கையாகவே எப்போதும் கருதப்பட்டு வந்துள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் புனர் பரிசீலனை செய்தல். கிரிமினல் வழக்கில் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு, அது அறிவிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குப் பிறகு நடைமுறைக்கு வருகிறது. சிவில் வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பு பத்து நாட்களுக்குப் பிறகு நடைமுறைக்கு வருகிறது. இந்தக் காலத்திற்குள்ளாக, தண்டிக்கப்பட்டவரோ, அவருடைய வழக்கறிஞரோ, வாதியோ, பிரதிவாதியோ மேல் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து கொள்ளலாம். இதே காலத்திற்குள்ளாக, நீதிமன்றத்தின் தீர்ப்பை புரோகுரேட்டரும் அப்பீல் செய்து கொள்ளலாம். முறையீடு அல்லது ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்ட கணத்திலிருந்து மேல்நீதிமன்றம் வழக்கைப் புலன்

விசாரணை செய்து தீர்ப்புக் கூறும்வரை தண்டனை அல்லது தீர்ப்பு நிறைவேற்றப்படுவது நிறுத்தி வைக்கப்படுகிறது. முறையீடு மனுவில் அல்லது ஆட்சேபணை மனுவில் அப்பீலுக்காக என்ன காரணங்கள் கூறப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட வழக்கை மேல் நீதிமன்றம் பூரணமாக மறு பரிசீலனை செய்கிறது. கீழ்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு அல்லது தண்டனை சரியானது என்று மேல்நீதிமன்றம் கருதினால் அது நடைமுறைக்கு வர அனுமதிக்கிறது. எனினும் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அல்லது தண்டனை அமுலுக்கு வந்த பிறகும்கூட அதனை எதிர்த்து சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கோ புரோகுரேட்டரின் அலுவலகத்திற்கோ முறையீடு செய்து கொள்ளலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில், தீர்ப்பு அல்லது தண்டனை தவறானது என்று தகுதி வாய்ந்த அதிகாரிகளுக்குத் தெரியவந்தால் அவர்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு ஆட்சேபம் தாக்கல் செய்கின்றனர். இதன் பேரில் அந்த நீதிமன்றம் சட்டப்படி வழக்கை மீண்டும் விசாரிக்கிறது. இவ்வாறு வழக்குகளைத் திரும்பவும் விசாரிகும் நடைமுறையானது ஒரு நீதிமன்றம் செய்யக்கூடிய தவறைத் திருத்துவதற்கும், நியாயமற்ற தீர்ப்பு அல்லது தண்டனையை ரத்து செய்வதற்கும் எல்லா வாய்ப்புக்களையும் அளிக்கிறது.

**வழக்கறிஞர்கள்.** வழக்கறிஞர் கழகங்கள் யூனியன் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளால் வகுத்தளிக்கப்பட்ட ஒழுங்கு முறைகளின்படி இயங்குகின்றன. வழக்கறிஞர்கள் பூர்வாங்க விசாரணைகளிலும் நீதிமன்றங்களிலும் குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பில் ஆஜராகி வாதாடுகின்றனர்; சிவில் வழக்குகளிலும் மத்தியஸ்த நீதிமன்றங்களிலும் பிரதிநிதிகளாக செயல்படுகின்றனர்; பிரஜைகளுக்கும் நிறுவனங்களுககும் சட்ட உதவி புரிகின்றனர்.

அரசாங்க வழக்கறிஞர் கட்டாயமாகப் பங்கெடுத்துக் கொள்ளும் வழக்குகளில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஒருவர் அவசியம் ஆஜராக வேண்டும் என்று சட்டம் வலியுறுத்திக் கூறுகிறது. குற்றம் சாட்டப்பட்டவரால் ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள முடியவில்லை என்றால், நீதிமன்றமே அவருக்கு இலவசமாக ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்து தருகிறது.

சோவியத் வழக்கறிஞர் கழகத்தில் 15,000 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 40 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் பெண்கள்.

**புரோகுரேட்டரின் அலுவலகம்.** சட்ட நேர்மையையும் நீதியையும் முற்றிலும் பலப்படுத்துவது சோவியத் அரசு மேலும் வளர்ச்சியடைவதற்கான முந்திய தேவைகளில் ஒன்றாகும். நீதிமன்றங்களும், இதர அரசாங்க அமைப்புகளும், உழைப்பாளி மக்கள்

பிரதிநிதிகளது சோவியத்துகளும், பொது மக்களும் சட்டம் கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கும்படியாகப் பார்த்துக் கொள்கின்றனர். எல்லா நிறுவனங்களும், அதிகாரத்தில் உள்ளவர்களும், பிரஜைகளும் சட்டங்களை உரிய முறையில் கடைப்பிடித்து ஒழுகும்படி கவனித்துக் கொள்ளும் தலைமை கண்காணிப்பு அதிகாரம் சோவியத் யூனியன் அரசியல் சட்டத்திற்கு இணங்க சோவியத் யூனியனின் புரோகுரேட்டர்-ஜெனரலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியன் புரோகுரேட்டர்-ஜெனரல் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தால் ஏழாண்டுக் காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். அவர் யூனியன் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகள், பிரதேசங்கள், பிராந்தியங்கள், பிரதான நகரங்கள் முதலியவற்றின் புரோகுரேட்டர்களை ஐந்தாண்டுக் காலத்திற்கு நியமிக்கிறார்.

சோவியத் யூனியன் அரசியல் சட்டப்படி, புரோகுரேட்டரின் அலுவலகங்கள் எந்த ஸ்தல அமைப்புக்களுக்கும் கட்டுப்படாமல் தமது அலுவல்களை சுயேச்சையாக ஆற்றுகின்றன; அவை சோவியத் யூனியன் புரோகுரேட்டர்-ஜெனரலுக்கு மட்டுமே கட்டுப்பட்டவை.

சோவியத் யூனியன் புரோகுரேட்டர்-ஜெனரலும் அவருக்குக் கட்டுப்பட்ட புரோகுரேட்டர்களும் பின்கண்ட கடமைகளைச் செய்கின்றனர் :

எல்லா அமைச்சகங்களும், இலாகாக்களும், அவற்றின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களும், தொழில் நிலையங்களும், ஸ்தல சோவியத்துகளின் நிர்வாக அமைப்புகளும், அதிகாரிகளும், பிரஜைகளும் சட்டத்தைக் கடைப்பிடித்து ஒழுகும்படியாகக் கண்காணித்தல் ;

குற்றமிழைத்தவர்களை விசாரணைக்குக் கொண்டு வருதல் ;

எந்தப் பிரஜையும் முறையற்று தண்டிக்கப்பட்டுவிடாதபடியும், அவரது உரிமைகளை கட்டுப்படுத்தப்பட்டுவிடாதபடியும் குற்றப் புலன் விசாரணையின்போது சட்ட நேர்மை பின்பற்றப்படும்படியாகக் கவனித்துக் கொள்ளுதல் ;

நீதிமன்ற அமைப்புகள் வழங்கும் தண்டனைகளும் தீர்ப்புகளும் செல்லுபடியாகத் தக்கவையாகவும், நியாயமானவையாகவும் இருக்கும்படி கண்காணித்தல் ;

தண்டனைகளை நிறைவேற்றுவதில் சட்ட நேர்மை பின்பற்றப்படும்படியாக மேற்பார்த்தல்.

**காவற்படை.** பொது பந்தோபஸ்தையும் ஒழுங்கையும் கவனித்துக் கொள்ளும் அமைப்பு இது. காவற்படை பிரஜைகளின் பந்தோபஸ்தைப் பாதுகாக்கிறது; அரசாங்க சொத்துகளையும் பொது சொத்துகளையும் தனிப்பட்டவர்களின் சொத்துகளையும் பாதுகாக்கிறது; போக்குவரத்து விதிகளை எல்லோரும் கடைப் பிடித்து ஒழுகும்படி பார்த்துக் கொள்கிறது.

காவற்படை யூனியன் குடியரசுகளது உள்விவகாரங்கள் அமைச்சகங்களின் அதிகாரத்திற்கும், ஸ்தல ரீதியில் சோவியத் நிர்வாகக் கமிட்டிகளது சம்பந்தப்பட்ட இலாகாக்கள், போர்டு களின் அதிகாரத்திற்கும் உட்பட்டது. நாடு முழுவதுப குற்றச் செயல்களை ஒழித்துக் கட்டுவதற்கான வழிதுறைகளை சோவியத் யூனியன் உள்விவகார அமைச்சகம் வகுத்துத தருகிறது.

காவற்படை தனது அலுவல்களைப் புரிவதற்குப் பொதுமக்கள் ஆதரவும் உதவியும் நல்குகின்றனர்.

**பொது ஒழுங்கு தொண்டர் படைகள்.** பொது ஒழுங்கைப் பாது காப்பதில் மக்கள் பெருவாரியாகப் பங்கெடுத்துக் கொள்வதற்கு இவை பெரிதும் வகை செய்கின்றன. உழைப்பாளி மக்கள் தாமே முன்வந்து இந்தத் தொண்டர் படைகளை அமைத்துக் கொள் கின்றனர். இப்படையைச் சேர்ந்தவர்கள் மாதம் ஒருமுறை தமது ஓய்வு நேரத்தில் பொது இடங்களில் சில மணி நேரம் ரோந்து வருகின்றனர்.

இத்தொண்டர் படையினருக்கு காவற்படையினருக்குள்ள நிர்வாக அதிகாரங்களோ அலுவல்களோ இல்லை, பொது ஒழுங்குக்கு எத்தகைய பங்கம் ஏற்படுவதையும் உரிய காலத்தில் தடுப்பதே அவர்களது பிரதான பணி. ஆனால் சட்டம் கடுமையாக மீறப்பட்டால் அவர்கள் குற்றவாளியை காவற்படையிடம் அழைத்துச் செல்கின்றனர்.

சர்க்கார் அதிகாரிக்கு எதிராக இழைக்கப்படும் கிரிமினல் குற்றத்திற்கு எததகைய கடும் தண்டனை அளிக்கப்படுகிறதோ, அத்தகைய கடும் தண்டனை இப்படையைச் சேர்ந்த தொண்டருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றத்திற்கு வழங்கப்படுகிறது.

**மக்கள் கண்காணிப்பு.** பயனுறுதியுள்ள கண்காணிப்பிலும் அரசு நிர்வாகத்திலும் வெகுஜனங்கள் இடையறாது பங்கெடுத்துக் கொள்வது சம்பந்தமாக லெனின் தெரிவித்த கருத்துக்களின் அடிப் படையில் மக்கள் கண்காணிப்பு அமைப்புகளின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

கிராம சோவியத்துகள், தொழில் நிலையங்கள், நிறுவனங்கள், கூட்டுப் பண்ணைகள், அரசாங்கப் பண்ணைகள் முதலியவற்றில்

ஏற்படுத்தப்படும் குழுக்களும் நிலையங்களும் மக்கள் கண்காணிப்பு அமைப்பு முறையின் முதுகெலும்பாக விளங்குகின்றன. இந்தக் குழுக்களையும் நிலையங்களையும் சேர்ந்த உறுப்பினர்கள் ஊழியர் கூட்டங்களில் இரண்டு ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். 80 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தற்போது மக்கள் கண்காணிப்பு முறையில் ஈர்க்கப்பட்டுள்ளனர். லெனின் இந்த முறையை போதனை முக்கியத்துவம் வாய்ந்தது என்று எப்போதுமே கருதி வந்துள்ளார். ஏனென்றால் அரசு விவகாரங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் உழைப்பாளி மக்கள் ஆட்சி பரிபாலனக் கலையைக் கற்றுக் கொள்வர் என்று நம்பினர். ''விரிவான, பொதுவான, சர்வாம்ச..'' கண்காணிப்பை சோஷலிசப் புனரமைப்பின் சாரம் என்று கருதினர்.

குழுக்களையும், நிலையங்களையும் தவிர நாடெங்கும் மக்கள் கண்காணிப்புக் கமிட்டிகள் உள்ளன. உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளால் அவை அமைக்கப்படுகின்றன. சோவியத்துகள், பொது ஸ்தாபனங்கள், உழைப்பாளி மக்கள் நிறுவனங்கள் போன்றவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இவற்றில் இடம் பெறுகின்றனர். இந்தக் கமிட்டிகளில் வெகு சில நிரந்தர ஊழியர்களே உள்ளனர். உதாரணமாக, வட்டார, நகரக் கமிட்டிகளில் தலைவர் பதவிதான் ஒரே நிரந்தர நியமனமாகும். பெரும்பாலான பணி கண்காணிப்பாளர்களும் இன்ஸ்பெக்டர்களாலும் பொதுஜன தொண்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இவர்கள் தமது கமிட்டிக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவசியம் ஏற்படும்போது தம் வேலையிலிருந்து முழுச் சம்பளத்துடன் இரண்டு வார காலம் வரை விடுமுறை பெறுகின்றனர்.

யூனியன் குடியரசுகளிலும் சுயாட்சிக் குடியரசுகளிலும் மக்கள் கண்காணிப்புக் கமிட்டிகளின் ஊழியர்கள அந்தந்தக் குடியரசுகளது அமைச்சரவையால அங்கீகரிக்கப்படுகின்றனர்; கமிட்டித் தலைவர்கள் சம்பந்தப்பட்ட குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளால் நியமிக்கப்படுகின்றனர்.

எல்லா மக்கள் கண்காணிப்பு அமைப்புகளது நடவடிக்கைகளுக்கும் சோவியத் யூனியன் மக்கள் கண்காணிப்புக் கமிட்டி வழிகாட்டுகிறது. இந்தக் கமிட்டி சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியினதும் சோவியத் யூனியன அமைச்சரவையினதும் மேற்பார்வையில் செயல்படுகிறது. சோவியத் யூனியன் மக்கள் கண்காணிப்புக் கமிட்டியின் ஊழியர்கள் சோவியத் யூனியன் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படுகின்றனர்; அதன் தலைவரை சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் நியமிக்கிறது.

சோவியத் யூனியனில் மக்கள் கண்காணிப்பு சர்வ வியாபக மானது. பொருளாதார, நிர்வாக, சமூக-கலாசாரத் துறைகளின் சகல நடவடிக்கைகளிலும் மக்கள் கண்காணிப்பாளர்கள் கவனம் செலுத்துகின்றனர். மக்கள் கண்காணிப்பு அமைப்புகளுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் யோசனைகளின் பேரில் இலாகாத் தலைவர்கள் தொழிலாளர் கூட்டங்களிலும், சோவியத் கூட்டங்களிலும், நிர்வாகக் கமிட்டிக் கூட்டங்களிலும் ஆஜராகி அறிக்கைகள் சமர்ப்பித்துப் பேசலாம். அம்பலப்படுத்தப்பட்ட குறைபாடுகளைக் களைவதற்குக் கால கெடுவை நிர்ணயிக்கவும், அரசு நலன்களுக்கு விரோதமாக சில அதிகாரிகள் எடுத்துக் கொள்ளும் சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், அவர்களைக் கீழ்ப்பதவிக்கு மாற்றவும் அல்லது வேலை நீக்கம் செய்யவும், எந்த அதிகாரியாலும் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட அவரது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யவும், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவும், குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர்வதற்காக தகுந்த சாட்சியங்களை புரோகுரேட்டர் அலுவலகத்தில் தாக்கல் செய்யவும் மக்கள் கண்காணிப்பு அமைப்புகளுக்கு உரிமை உண்டு. எனினும் மக்கள் கண்காணிப்பு அமைப்புகள் மேற்பார்ப்பதுடனும் தண்டனைகள் வழங்குவதுடனும் நின்று விடுவதில்லை. மோசமான நிர்வாகத்தைத் தவிர்ப்பதும், மக்களுக்கு போதனை அளிப்பதும், வேலையில் அவர்கள் தவறுகள் செய்யாதபடி தடுப்பதும் அவற்றின் பிரதான பணியாகும்.

மக்கள் கண்காணிப்பு அமைப்புகள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற பொதுஜனத் தொடர்பு சாதனங்களை விரிவாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. பொது மக்களின் பரந்த பங்கெடுப்பும், இடையறாத பணியும், விரிவான விளம்பரமும் மக்கள் கண்காணிப்பின் ஆற்றலையும் செல்வாக்கையும் வெகுவாக உயர்த்துகின்றன. சோவியத் ஜனநாயகத்தின் ஓர் அம்சத்தினது தெளிவான வெளிப்பாடாகும் இது.

# அயல் நாட்டுக் கொள்கை

*வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வு, தேசங்களின் சமத்துவம், காலனியாதிக்கத்தையும் எந்த வடிவத்திலும் உள்ள தேசிய ஒடுக்குமுறையையும் எதிர்த்து விட்டுக் கொடுக்காத போராட்டம் என்னும் லெனினியக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த ஓர் உறுதியான, முன்பின் முரணற்ற அயல் நாட்டுக் கொள்கை வழியை சோவியத் யூனியன் பின்பற்றுகிறது.*

சோவியத் அயல் நாட்டுக் கொள்கை சமாதானத்தையும் தேசங்களிடையே ஒத்துழைப்பையும் ஆதரித்து நிற்கும் கொள்கையாகும். சோவியத் யூனியனில் கம்யூனிசத்தைக் கட்டுவதற்கு மிகவும் சாதகமான சர்வதேச நிலைமைகளைத் தோற்றுவிப்பது, உலக சோஷலிச நாடுகளின் ஒற்றுமையைப் பலப்படுத்துவது, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவிலுள்ள சுதந்திர நாடுகளுடன நேச உறவுகளை வளர்த்துக் கொள்வது, வேறுபட்ட சமூக அமைப்புகளை உடைய நாடுகளிடை சாமாதான சகவாழ்வை மேம்படுத்துவது. உலக சமாதானத்தைப் பாதுகாத்து வலுப்படுத்துவது ஆகிய இவை சோவியத் அயல்நாட்டுக் கொள்கையின் நோக்கங்கள் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளின் அடிப்படையிலமைந்துள்ள சோவியத் அயல்நாட்டுக் கொள்கை எல்லா நாடுகளிலுமுள்ள உழைப்பாளி மக்களின் நலன்களுக்கும், சமாதானத்திற்காகவும் தேசவிடுதலைக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் ஏகாதிபத்தியத்தையும் பிற்போக்கையும் எதிர்த்துப் போராடி வரும் ஒடுக்கப்பட்ட காலனி மக்களின் ஆர்வ விருப்பங்களுடைய இசைந்ததாக உள்ளது.

சோவியத் அரசு இயற்றிய முதலாவது சட்டம் லெனினது சமாதானச் சட்டமாகும் (நவம்பர், 1917) அச்சமயம் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த எல்லா நாடுகளுக்கும அவற்றின்

அரசாங்கங்களுக்கும் சோவியத் சர்க்கார் சமர்ப்பித்த பிரேரணை இதில் அடங்கியிருந்தது யுத்தத்திற்கு முடிவுகட்டுவது சம்பந்த மாகவும், நாடுகளைக் கைப்பற்றிக் கொள்ளாமல் தோற்ற நாடு களிடம் நஷ்ட ஈடு கோராமல் ஒரு நியாயமான ஜனநாயக சமாதான ஒப்பந்தத்தை செய்து கொள்வது சம்பந்தமாகவும் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும்படி இந்த பிரேரணை வலியுறுத்திற்று சமாதானத்திற்காகப் பாடுபடுதல், எல்லா தேசிய இன மக்களது பரிபூரண சமத்துவத்தை அங்கீகரித்தல், அவற்றின் தேசிய சுதந்திரத்தையும் அரசு சுதந்திரத்தையும் கௌரவித்தல், சமூக அரசியல் அமைப்புகள் எப்படி இருப்பினும் எல்லா நாடுகளுடனும் சிறந்த அண்டை நேய உறவுகளை வளர்த்துக் கொள்ளுதல், பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாதிருத்தல—ஆகியவற்றை சோவியத் அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகளில் உட்படுத்தி சமாதானச் சட்டம் வகுத்துக் கொடுத்தது. ஜார் ஆட்சி பின்பற்றி வந்த காலனியாதிக்கக் கொள்கையைத் தான் நிராகரித்து விட்டதாக ''ருஷ்யாவையும் கிழக்குலகையும் சேர்ந்த எல்லா உழைக்கும் முஸ்லிமகளுக்கும்'' விடுக்கப்பட்ட வேண்டு கோளில சோவியத் அரசாங்கம் அறிவித்தது; கிழக்குலக நாடு களுடனான தனது உறவுகளில் இனிமேல் சமத்துவம், தன்னல மற்ற உதவி என்னும் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கப் போவ தாகப் பிரகடனம் செய்தது. கிழக்குலக நாடுகளுடன் ஜார் அரசாங்கம் செய்திருந்த எல்லா நேர்மையற்ற ஒப்பந்தங்களையும் சோவியத் சர்க்கார் ரத்துச் செய்தது; துருக்கியைப் பிரிவினை செய்வது சம்பந்தமான ஜாரின் இரகசிய ஒப்பந்தங்கள் செல்லுபடி யாகா என்று அறிவித்தது; பாரசீகத்தில் ஜார் ருஷ்யாவுக்கிருந்த எல்லா உரிமைகளையும் சலுகைகளையும் தானே முன்வந்து துறந்து விட்டது; துருக்கி, ஆப்கானிஸ்தான், மற்றும் பல நாடுகள் தமது தேசிய சுதந்திரத்தை எய்துவதற்கு உதவி புரிந்தது.

சோவியத் அரசாங்கம் தான் தோன்றிய ஆரம்ப நாட்கள் முதலே (உதாரணமாக 1922ல் நடைபெற்ற ஜெனோவா, ஹேக் மாநாடுகளில்,) முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான பூர்வமான பொருளாதார ஒத்துழைப்புக்கும் பொதுப் படைக்குறைப்புக்கு மான ஒரு விரிந்த திட்டத்தைத் திரும்பத் திரும்ப பிரரேபித்தது. எனினும் இந்தப் பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டன. 1920 21ல், சோவியக் குடியரசு, முதலாளித்துவ நாடுகளின முற்றுகையை உடைத்தெறிந்த பிறகு சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டது; லிதுவேனியா, லாத்வியா, எஸ்தோனியா, பின்லந்து, போலந்து ஈரான், ஆப்கானிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளுடன் ராஜிய உறவுகளையும் பிரிட்டன், ஜெர்மனி, நார்வே, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளுடன் வர்த்தக உறவுகளையும் ஏற்படுத்திக்

கொண்டது; 1922ல் ரபால்லோ ஒப்பந்தம் கையெழுத் தானதைத் தொடர்ந்து ஜெர்மனியுடன் ராஜிய உறவுகள் நிறுவிக் கொள்ளப்பட்டன. 1924-1925ல் சோவியத் அரசு மேலும் பலப்பட்டது. பிரிட்டன், இத்தாலி, ஆஸ்திரியா, கிரீஸ், நார்வே, சுவீடன், சீனு, டென்மார்க், பிரான்ஸ், ஜப்பான் முதலிய நாடுகளுடனும், பின்னர் 1933ல் அமெரிக்காவுடனும் ராஜிய உறவுகளை மேற்கொள்வதற்கு இது வழி கோலிற்று; ஏகாதிபத்திய நாடுகள் சோவியத் அரசை அங்கீகரித்த போதிலும், உலகின் முதலாவது சோஷலிச நாட்டைத் தனிமைப்படுத்தி, ஒரு சோவியத்-எதிர்ப்பு அணியை (லொகார்னே ஒப்பந்தங்கள். 1927ல் சோவியத்-பிரிட்டிஷ் உறவுகள் சீர்குலைவு, அகில-ஐரோப்பாத் திட்டம் முதலியன) உருவாக்கும் திட்டங்களை அவை கைவிட்டுவிடவில்லை. சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும் ஒரு பரந்த சோவியத்-எதிர்ப்புக் கூட்டணி உருவாவதைத் தடுப்பதற் காகவும் சோவியத் யூனியனுனது ஜெர்மனி, லிதுவேனியா (1926), பிரான்ஸ், லாத்வியா, எஸ்தோனியா, போலந்து, பின்லந்து (1932), இத்தாலி (1933) ஆகிய நாடுகளுடனும் இதர நாடு களுடனும் அனுக்கிரமிப்பு ஒப்பந்தங்களும் நடுநிலைமை ஒப்பந்தங் களும் செய்து கொண்டது. 1927ஆம் ஆண்டுக்கும் 1934ஆம் ஆண்டுக்கும் இடையேயான ஆண்டுகளில் நடைபெற்ற சர்வதேச மாநாடுகளில், சோவியத் யூனியன் பொது படைக் குறைப்புக்கு அல்லது குறைந்தபட்சம் பகுதிப் படைக் குறைப்புக்கு திட்டங்களை முன்வைத்தது. 1934ல் சர்வதேச சங்கத்தில் ''லீக் ஆப் நேஷன்ஸ்'' உறுப்பு நாடாகச் சேர்ந்த சோவியத் யூனியன் ஐரோப்பாவில் ஒரு கூட்டுப் பந்தோபஸ்து அமைப்பை நிறுவும் யோசனையைத் தெரிவித்தது. 1935ல் அது பிரான்சுடனும் செக்கோஸ்லோவாகியாவுடனும் பரஸ்பர உதவி ஒப்பந்தங்கள் செய்து கொண்டது.

யுத்தத்தைத் தடுப்பதற்கு சோவியத் யூனியன் தெரிவித்த பிரேரணைகளை பிரிட்டன், பிரான்ஸ். அமெரிக்காவின் தலைமை யிலிருந்த மேலைய நாடுகள் நிராகரித்துவிட்டன; அது மட்டுமன்றி எதியோப்பியாவிலும் ஸ்பெயினிலும் நடைபெற்ற ஜெர்மன், இத்தாலிய ஆக்கிரமிப்பையும், ஆஸ்திரியா வசப்படுத்திக் கொள்ளப் பட்டதையும், சீனுவுக்கு எதிராக ஜப்பான் கட்டவிழ்த்துவிட்ட ஆக்கிரமிப்பையும் தடுப்பதற்கு அவை எந்த நடவடிக்கையும் எடுத் துக் கொள்ளவில்லை. தவிரவும், 1938 செப்டம்பரில் பிரிட்டனும் பிரான்சும் மூனிக்கில் ஜெர்மனியுடனும் இத்தாலியுடனும் ஒரு பேரம் செய்து கொண்டன; இதன்படி செக்கோஸ்லோவாகி யாவைத் துண்டாட அவை சம்மதம் தெரிவித்தன. நாஜி ஆக்கிர மிப்பை கிழக்கு நோக்கி, அதாவது சோவியத் யூனியனை நோக்கித் திருப்பிவிடத் திட்டமிட்டன. இத்தகைய நிலைமை காரணமாகவும்,

நாஜி ஆக்கிரமிப்பை எதிர்த்து சோவியத் யூனியனுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுக்கும் யோசனையை பிரிட்டனும் பிரான்சும் ஏற்காததாலும் 1939ஆம் ஆண்டில் சோவியத் அரசாங்கம் சோவியத்-ஜெர்மன் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டது. சோவியத் யூனியன் தனது தற்காப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், சோவியத் சைனியங்களுக்கு நவ நவீன படைக் கலங்களை வழங்குவதற்கும் இந்த ஒப்பந்தம் இரண்டாண்டுக் கால அவகாசம் அளித்தது.

பாசிஸத்துக்கு எதிரான யுத்தத்தின் சுமையிலும் கஷ்ட நஷ்டங்களிலும் பெரும்பகுதியை சோவியத் யூனியன் ஏற்றது. அந்த நாடுகளது தோல்வியைத் துரிதப்படுத்துவதற்காக பாசிஸ-எதிர்ப்புக் கூட்டணியை அமைத்துப் பலப்படுத்த வேண்டும் என்று அது யோசனை கூறிற்று; பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் அது பரஸ்பர உதவி ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது; ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனையை ஆரம்பிக்கும்படி வலியுறுததிற்று. யுத்தப் பிற்கால ஆண்டுகளில் உலகைப் புனரமைப்பதிலும், ஐரோப்பிய நாடுகள் தமது சுதந் திரத்தை மீண்டும் பெறுவதற்கு உதவுவதிலும், ஜெர்மனியையும் அதன் கூட்டாளி நாடுகளையும் நிராயுதபாணிகளாக்குவதிலும் ஜனநாயகக் கோட்பாடுகளை மேற்கொள்வதற்கு யால்டா (1945), போட்ஸ்டாம் மாநாடுகளில் சோவியத் யூனியன் பெரு முயற்சி எடுத்துக்கொண்டது. அதே சமயம் தோல்வியடைந்த நாடு களுடனை உறவுகளில் நேர்மை மிக்க ஜனநாயகக் கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றும் சோவியத் ராஜதந்திரம் வற்புறுத்திற்று.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு முதலாளித்துவ நாடு களிடையே முரண்பாடுகள் அதிகரித்தன; உலக சோஷலிச அமைப்பு உதயமாயிற்று; ஏகாதிபத்திய காலனி அமைப்பு சிதைய ஆரம்பித்தது. உலக அரங்கில் சக்திகளின் பரஸ்பர நிலை சோஷ லிசத்திற்குச் சாதகமாகப் பெருமளவுக்கு மாறிற்று. இந்த நிலைமை களில், நிரந்தர சமாதானத்திற்கும், சோஷலிசத்தின் நிலையைப் பலப்படுத்துவதற்கும் சோவியத் யூனியன் தொடர்ந்து பாடு பட்டது. தேச விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் காலனி மக்களும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் மக்களும் நடத்திய போராட் டங்களுக்கு அது உதவிற்று. முதலாளித்துவ நாடுகள் சோவியத் யூனியனுக்கு எதிராக கெடுபிடிப் போரில் குதித்த போதிலும், அவற்றுடன் சமாதான சகவாழ்வு உறவுகளையும் காரியார்த்தமான ஒத்துழைப்பையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு சோவியத் யூனியன் இடையறாது முயற்சி செய்தது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை யும் இதர சர்வதேச நிறுவனங்களையும் தோற்றுவிப்பதில் சோவியத்

யூனியன் முன்னின்று பங்கெடுத்துக் கொண்டது. யுத்தத்தின் விளைவாக எழுந்த தகராறுக்குரிய பிரச்சினைகளுக்கு நியாயமான ஜனநாயக பூர்வமான தீர்வு காணுவதற்கு ஒரு திட்டத்தை அது முன்வைத்தது.

பொதுப் படைக் குறைப்பு, அணு ஆயுதங்களைத் தடை செய்தல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கும் சோவியத் யூனியன் அநேக பிரேரணைகளைத் தெரிவித்தது. பொதுப் படைக் குறைப்புத் திட்டம் ஒன்றை ஐ. நா. பொதுச் சபையின் முதல் கூட்டத் தொடரில் (1947) சோவியத் யூனியன் சமர்ப்பித்தது. அணுசக்தியை ராணுவ காரியங்களுக்காக உற்பத்தி செய்வதையும் பயன்படுத்துவதையும் தடைசெய்யும் யோசனையும் இதில் அடங்கியிருந்தது. ஐ. நா. பொதுச்சபையின் மூன்றாவது கூட்டத் தொடரில் மற்றொரு நகல் தீர்மானத்தை சோவியத் யூனியன் சமர்ப்பித்தது. அணு ஆயுதங்களைத் தடை செய்யவேண்டும் என்றும், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் தமது படை பலத்தை மூன்றிலொரு பங்கு குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் இந்த நகல் தீர்மானம் கூறிற்று. அமெரிக்காவின் ''அணு ஆயுத ராஜதந்திரமும்'', அணு ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதாக அந்நாடு அவ்வப்போது செய்துவந்த பயமுறுத்தல் களும் சோவியத் யூனியனை அணு ஆயுதங்கள் உற்பத்தியில் ஈடுபடும் படி நிர்ப்பந்தித்தன. எனினும், அணுகுண்டுகளையும், நீர்வாயு குண்டுகளையும், மக்களைப் பெருவாரியாக அழித்தொழிக்கும் ஏனைய நாசகர ஆயுதங்களையும் நிபந்தனையின்றி தடைசெய்ய வேண்டும் என்று சோவியத் யூனியன் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஐ. நா. பொதுச் சபையின் 14வது, 15வது கூட்டத் தொடர்களில் சோவியத் யூனியன் பொதுவான பூரணமான படைக்குறைப்புக் கான நகல் ஒப்பந்தம் ஒன்றைச் சமர்ப்பித்தது. வளி மண்டலத் திலும், புறவெளியிலும், நீருக்கடியிலும் அணு ஆயுதங்கள் சோதனைக்குத் தடைவிதிக்கும் ஒப்பந்தம் ஒன்று சோவியத் யூனியனின் முன்முயற்சியால் கையொப்பமாயிற்று. இதனைத் தொடர்ந்து அணு ஆயுத விஸ்தரிப்புத் தடை ஒப்பந்தம், புற வெளியில் தேசங்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் கோட் பாடுகள் பற்றிய (பெருவாரி நாசம் விளைவிக்கும் ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு விண்கலங்கள் புறவெளியில் பறப்பதைத் தடுத்தல்) ஒப்பந்தம், அணு ஆயுதங்களையும் பெருவாரி நாசம் விளைவிக்கும் ஏனைய ஆயுதங்களையும் கடல் படுகையிலும் மாகடலுக்கு அடியிலும் குவித்து வைப்பதைத்தடை செய்யும் ஒப்பந்தம் முதலான ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் பலப்படுத்துவதற்கும் ஓரளவு உத்தரவாதம் அளிக்கக் கூடிய கூட்டு பந்தோபஸ்து அமைப்பை ஏற்படுத்துவதைப் பொறுத்த வரையில், அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஐரோப்பாவில் ஒரு கூட்டு பந்தோபஸ்து ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள வேண்டும் என்று 1954ஆம் ஆண்டிலேயே சோவியத் யூனியன் யோசனை கூறிற்று. ஆனால் மேலைய நாடுகள் இந்த யோசனையை நிராகரித்து விட்டன. அது மட்டுமன்றி வட அட்லாண்டிக் ராணுவக் கூட்டில் (நேட்டோ) ஜெர்மன் சமஷ்டிக் குடியரசைச் சேர்த்துக் கொண்டன. இந் நிலைமைகளில் சோவியத் யூனியனும் ஐரோப்பிய சோஷலிச நாடு களும் 1955ல் தங்கள் தற்காப்புக்காக வார்சா ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. இது ஐரோப்பாவில் ஒரு முக்கிய தடை அரணாயிற்று.

உலக சோஷலிச அமைப்பு தோன்றியதைத் தொடர்ந்து அதன் உறுப்பினர் நாடுகளிடையே ஒரு புது விதமான உறவுகள் உருவாகி வளர்ந்தன. தேசிய அரசுரிமையை வளர்ப்பது, பொரு ளாதார கலாசார வளர்ச்சியை மேம்படுத்துவது ஆகியவை மட்டு மன்றி, சோஷலிச அமைப்பு முழுவதையும் வளர்த்து வலுப்படுத்து வதும் இந்த உறவுகளின் நோக்கமாகும். சோஷலிச சர்வதேசிய கோட்பாடுகளின் அடிப்படையில் தனது உறவுகளை அமைத்துக் கொள்ளும் சோவியத் யூனியன், சோஷலிச நாடுகளது மக்களுக்கு இடையே நேச உறவுகளை வளர்த்துக் கொள்ளும் ஒரு கொள்கையை, உலக சோஷலிச அமைப்பின் வலிமையை எல்லா வகையிலும் மேம்படுத்தும் ஒரு கொள்கையை உறுதியோடு ஆதரித்து நிற்கிறது.

சோவியத் யூனியன் லெனினிய அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றி, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களது தேச விடுதலை இயக்கத்திற்கு விரிவான, பயனுறுதியுள்ள உதவியை நல்குகின்றது. காலனி நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்கக் கோரும் பிரகடனம் ஒன்றை சோவியத் யூனியனது முன் முயற்சியின் பேரில் ஐ. நா. பொதுச் சபையின் 15வது கூட்டத் தொடர் ஏற்றது. இந்நாடுகளும் மக்களும் தேச விடுதலைக்காக நடத்தும் போராட்டத்திற்கு இப்பிரகடனம் பெரிதும் ஆக்க மளித்தது.

நிரந்தர சமாதானத்தையும் சர்வதேச பந்தோபஸ்தையும் எய்தப் பெறுவதும், வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளிடையே சிறந்த அண்டை, நேய, பரஸ்பரம் அனுகூலமான, நேர்மையான ஒத்துழைப்பை வளர்ப்பதும் எப்போதும் சோவியத் அயல்நாட்டுக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாக இருந்து வந்துள்ளன. நாடுகளின் சமாதான சகவாழ்வை ஆதரிக்கும்

இந்த உறுதியான கொள்கை எத்தகைய ஏகாதிபத்திய ஆக்கிர மிப்புக்கும் தக்க பதிலடி கொடுக்கும் பணியோடு பிரிக்க முடியாத படி இணைந்துள்ளது.

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப் பிடிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி தனது சித்தாந்த கோட்பாடுகளை, அசைக்க முடியாத மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளை, பாட்டாளி வர்க்க, சோஷலிச சர்வதேசியக் கோட்பாடுகளை உறுதி யாகப் பின்பற்றுகிறது.

சர்வதேச விவகாரங்களில் லெனினியக் கொள்கையை செயல் படுத்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி கொண்டுள்ள உறுதியை 1971ல் நடைபெற்ற 24வது கட்சிக் காங்கிரஸ் ஊர்ஜிதம் செய்தது. இந்தக் கொள்கை சமாதானத்தையும் சர்வதேச பந்தோபஸ்தையும் ஆதரிக்கும் கொள்கை; சோஷலிச நாடு களிடையே நட்பையும் ஒத்துழைப்பையும் மேலும் வளர்க்கும் கொள்கை; முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர் இயக்கத் துடன் சர்வதேச ஒருமைப்பாட்டினை பலப்படுத்தும் கொள்கை ; மக்களின் தேச விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கும் கொள்கை; இளம் நாடுகளிலுள்ள புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளுடனும் எல்லா ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகளுடனும் உறவுகளை விரிவும் வலுவும் படுத்தும் கொள்கை.

மத்தியக் கமிட்டி சமர்ப்பித்த நடைமுறை சாத்தியமான, தொலைநோக்குள்ள சமாதானத் திட்டத்தை 24வது காங்கிரஸ் ஒருமனதாக அங்கீகரித்தது. சமாதானத்தையும் சர்வதேச ஒத்துழைப்பையும் ஆதரிக்குப் இந்தத் திட்டம், சுதந்திரத்திற் காகவும் சுயாதீனத்திற்காகவும் மக்கள் நடத்தும் போராட்டத்தை ஆதரிக்கும் இத்திட்டம் பின்கண்ட அடிப்படைக் குறிக்கோள் களை முன்வைத்துள்ளது:

முதலாவதாக, தென்கிழக்கு ஆசியாவிலும், மத்திய கிழக்கிலும் யுத்த ஜுவாலைகளை அணைத்தல், ஆக்கிரமிப்புக்கு உள்ளான நாடுகளதும் மக்களதும் சட்டபூர்வமான உரிமைகளைக் கௌரவிக்கும் அடிப்படையில் இந்தப் பிராந்தியங்களில் ஓர் அரசியல் தீர்வு காணுவதற்கு வகை செய்தல்; எத்தகைய ஆக்கிர மிப்பு நடவடிக்கைகளுக்கும் அல்லது சர்வதேச வன்முறைக்கும் விரைவாகவும் உறுதியாகவும் பதிலடி கொடுத்தல், இது விஷயத் தில் ஐ. நா. வின் அதிகாரத்தையும் பயன்படுத்திக் கொள்ளுதல்; தகராறுக்குரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் படை பலத்தை உபயோகிப்பதாக அச்சுறுத்துவதையோ, உபயோகிப் பதையோ தவிர்க்கவும், அவசியமான இருதரப்பு அல்லது பிராந்திய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும் பாடுபடுவது;

இரண்டாவதாக, இரண்டாம் உலக யுத்தத்தின் விளைவாய் ஐரோப்பாவில் ஏற்பட்ட பிரதேச மாற்றங்கள் இறுதியானவை என்ற அடிப்படையில் செயல்படுதல் : பதற்றநிலை தணியும் திசை வழியில், ஐரோப்பாவில் சமாதானத்தைப் பலப்படுத்தும் திசை வழியில் ஒரு தீவிர திருப்பம் ஏற்பட வகை செய்தல் ; அகில ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்பு மாநாட்டைக் கூட்டி அதனை வெற்றி பெறச் செய்தல் ; சோவியத் யூனியனும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசும், போலந்தும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசும் செய்துகொண்ட ஒப்பந்தங்களை ஊர்ஜிதம் செய்து நடைமுறைக்குக் கொண்டு வரவும் மேற்கு பெர்லின் சம்பந்தப்பட்ட பிரச்சினை களுக்குத் தீர்வு காணவும் முயற்சி எடுத்துக் கொள்ளுதல். சோவியத் யூனியனும் இதர வார்சா ஒப்பந்த நிறுவன நாடுகளும் ஏககாலத்தில் இவ் ஒப்பந்தத்தையும் வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தையும் ரத்து செய்யவோ,அல்லது ஒரு முதல் நடவடிக்கை யாக இந்த ஒப்பந்தங்களின் ராணுவ நிறுவனங்களைக் கலைக்கவோ இணங்க தாம் தயாராக இருப்பதை மீண்டும் ஊர்ஜிதம் செய்கின்றன.

மூன்றாவதாக, அணு ஆயுதங்களையும், ரசாயன ஆயுதங்களை யும், கிருமி ஆயுதங்களையும் தடை செய்யும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் ; அணு ஆயுதங்கள் சோதனைக்கு முடிவு கட்டப் பாடுபடுதல் ; உலகின் பல்வேறு பகுதிகளில் அணு சூன்ய மண்டலங்கள் அமைப்பதை ஊக்குவித்தல். அணு ஆயுத படைக் குறைப்பை சோவியத் யூனியன் ஆதரிக்கிறது. இதன் பொருட்டு சோவியத் யூனியன், அமெரிக்கா, சீன மக்கள் குடியரசு, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய அணு ஆயுத நாடுகள் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டலாமென்று யோசனை கூறுகிறது.

நான்காவதாக, ஆயுத உற்பத்திப் போட்டியைத் தடுத்து நிறுத்த தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளுதல், படைக் குறைப்புப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு ஒரு சர்வதேச மாநாட்டைக் கூட்ட முயற்சி செய்தல் ; அயல் பிரதேசங்களி லுள்ள ராணுவ தளங்களைக் கலைக்கவும், குறிப்பாக சோஷலிச நாடு களதும் ஏகாதிபத்திய நாடுகளதும் ராணுவங்கள் நேருக்கு நேர் எதிரெதிராக நிற்கும் பிராந்தியங்களில், அதிலும் முக்கியமாக மத்திய ஐரோப்பாவில் படைகளையும் படைக்கலங்களையும் குறைக்கவும் பாடுபடுதல் ; சர்வதேச நெருக்கடிகளாகவும் யுத்த மாகவும் மாறக்கூடிய ஆயுதந்தாங்கிய மோதல்கள் தற்செய லாகவோ அல்லது வேண்டுமென்றே ஏற்படக்கூடிய சாத்தியக் கூறைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் வகுத்தல். ராணுவ பட்ஜெட்டுகளைக் குறைப்பது சம்பந்தமாக முக்கியமாக பெரிய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளத் தான் தயாராக இருப்பதை சோவியத் யூனியன் மீண்டும் வலியுறுத்துகிறது;

ஐந்தாவதாக, முந்திய காலனி ஆட்சிகளை ஒழிப்பது சம்பந்தமாக ஐ. நா. மேற்கொண்ட முடிவை பூரணமாக நிறைவேற்றவும், நிறவெறியையும் இன ஒதுக்கலையும் பின்பற்றும் நாடுகளை உலகம் முழுமையும் கண்டிக்கவும் பகிஷ்கரிக்கவும் வகை செய்தல்.

ஆறுவதாக, விரும்பும் முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான சகவாழ்வு உறவுகளையும், பரஸ்பரம் அனுகூலம் பயக்கும் ஒத்துழைப்பையும் விரிவுபடுத்துதல், ஏனைய நாடுகளுடன் பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலாசார உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், இயற்கையைப் பாதுகாத்தல், மின் வளங்களையும் இதர வளங்களையும் அபிவிருத்தி செய்தல், சர்வதேசப் போக்குவரத்தையும் செய்திப் போக்குவரத்தையும் மேம்படுத்துதல், மிகவும் அபாயகரமான பரவலான நோய்களைத் தடுத்தல், ஒழித்துக் கட்டுதல், புறவெளியையும் உலக மாகடலையும் ஆராய்தல் போன்ற மனிதகுலம் அக்கறை கொண்டுள்ள பிரச்சினைகளை சமாளிப்பதில் ஒத்துழைக்கவும் சோவியத் யூனியன் தயாராக உள்ளது.

சமாதானத்திற்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கும் போராடுவதற்கான இந்தத் திட்டம் உலகெங்குமுள்ள முற்போக்கு மனோபாவம் படைத்தோரின் பேராதரவைப் பெற்றது. கடந்த இரண்டு வருடங்களுக்குள்ளாகவே சமாதானத் திட்டம் இன்றைய சர்வதேச அரசியலில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது; சமாதானம், சுதந்திரம், தேசங்களின் பந்தோபஸ்து ஆகியவற்றுக்கான போராட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகி விட்டது.

சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனும், இந்நாடுகளின் பொது அயல் நாட்டுக் கொள்கை வழிகளின் பயனுகவும் உலக சோஷலிச அமைப்பைப் பலப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க வெற்றி பெறப்பட்டுள்ளது. உலக சோஷலிச அமைப்பு வரலாற்றின் திசை வழியால் மனிதகுல வளர்ச்சியின் முன்னணியில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டு, தற்போது மெய்யான எல்லா புரட்சி சக்திகளின், முற்போக்கு சக்திகளின் நம்பகமான கொத்தளமாக விளங்குகிறது. கோட்பாட்டு ரீதியான லெனினிய அயல்நாட்டுக் கொள்கை வழி எல்லா சோஷலிச நாடுகளிடையேயும் ஒற்றுமை வலுப்படவும் அவற்றிடையே ஒத்துழைப்பு வளர்ந்தோங்கவும் பாடுபடுகிறது. கூட்டு முயற்சிகளால் உருவாக்கப்பட்ட சோஷலிசக் கூட்டமைப்பு மேன்மேலும் வலுவடைந்து வருகிறது; வார்சா ஒப்பந்த நாடுகளிடையேயும் சிஎம்இஏ நாடுகளிடையேயும் சோதர ஒத்துழைப்பு உறுதியாக வளர்ந்து வருகிறது. இந்நாடுகள் தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் சோஷலிசக் கூட்டமைப்பின் நலன்களை

ஒவ்வொரு உறுப்பினர் நாட்டின் நலன்களுடன் இசைவுற இணைக்கின்றன. சீஎம்இஏ உறுப்பினர் நாடுகளின் சோஷலிச பொருளாதார ஒருங்கிணைப்புத் திட்டமும் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டு வருகிறது.

1973 ஜூனில் கிரைமியாவில் நடைபெற்ற சோதர கட்சிகளது தலைவர்களின் கூட்டம் சோஷலிச நாடுகளின் முயற்சிகளை ஒருமுகப்படுத்துவதற்கும், சோஷலிச, கம்யூனிச நிர்மாண லட்சியத்தை வளப்படுத்துவதற்கும் முக்கிய பங்காற்றிற்று,

சமாதானத்திற்கும் தேசங்களின் சுதந்திரத்திற்குமான போராட்டத்தில் கிட்டியுள்ள ஒரு தலைசிறந்த வெற்றி ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக வீரஞ்செறிந்த வியத்நாம் மக்கள் நடத்திவந்த போராட்டத்தில் அவர்கள் பெற்றுள்ள வெற்றியே யாகும். சோவியத் யூனியனதும் ஏனைய சோஷலிச நாடுகளதும் உலகின் அனைத்து சமாதான சக்திகளதும் உதவியுடன் ஈட்டப் பெற்ற வெற்றி இது.

வியத்நாம் மக்கள் தமது தாயகத்தின் விமோசனத்திற்காகவும் சோஷலிச நிர்மாணத்திற்காகவும் நடத்திய போராட்டத்திற்கு சோவியத் மக்கள் நல்கிய உதவி வியத்நாம் மக்கள் வெற்றி பெறுவதற்குப் பெரிதும் துணை புரிந்தது என்று 1973 ஜூலை 9-16 தேதிகளில் வியாத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியினதும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கத்தினதும் தூதுக்குழு சோவியத் யூனியனுக்கு மேற்கொண்ட அதிகார பூர்வமான விஜயத்தின்போது வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி முதல் செயலாளர் தோழர் லி துவான் கூறினர்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் விளைவுகளை அகற்றுவதற்காகவும், தமது சட்டபூர்வமான எல்லா உரிமைகளையும் பெறுவதற்காகவும், ஐ. நா. பந்தோபஸ்துக் கவுன்சிலின் தீர்மானங்களுக்கு இணங்க மத்தியக் கிழக்கில் ஒரு நியாயமான அரசியல் தீர்வு காணுவதற்காகவும் அரபு மக்கள் நடத்திவரும் போராட்டத்தை சோவியத் யூனியன் உறுதியோடு ஆதரிக்கிறது.

சோஷலிச நாடுகளதும், சகல சமாதான சக்திகளதும், முற்போக்கு சக்திகளதும் சர்வதேச ஒருமைப்பாடு தற்போது மிகுந்த முக்கியத்துவம் பெற்று, விடுதலைப் போராட்டத்திலும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டுவரும் சமூக, அரசியல் மாற்றங்களிலும் பெரும் பிரதிபலிப்பை உண்டு பண்ணி வருகிறது. சமாதானத்திற்காகவும் தேசிய அரசுரிமைக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் போராடும் சக்திகளும் வளர்ச்சியடைய இது துணை புரிகிறது.

கூட்டு சேரா நாடுகள் உலக விவகாரங்களில் மேன்மேலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இந்த இயக்கத்தின் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போக்குகளை சோவியத் யூனியன் உபர்வாக மதித்து ஆதரிக்கிறது.

இன்று உலகில் ஏற்பட்டுவரும் முற்போக்கான நிகழ்ச்சிப் போக்குகளுக்கு, சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் செயலூக்கத்துடன், உறுதியாக, ஒன்றுபட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் பெருமளவுக்குக் காரணமாகும். இந்த நாடுகள் பின்பற்றிவரும் கொள்கை அவசரமான சர்வதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் வகித்துவரும் செல்வாக்கு மேன்மேலும் அதிகரித்து வருகிறது என்பதை இது காட்டுகிறது. அதே சமயம் இது முதலாளித்துவ நாடுகளின் கொள்கையிலும் மாற்றம் ஏற்படச் செய்துள்ளது; சர்வதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விஷயத்தில் இந்த நாடுகள் முன்னிலும் எதார்த்த பூர்வமான போக்கைக் காட்ட ஆரம்பித்துள்ளன; வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வு என்னும் கோட்பாடு மேன்மேலும் பரந்த ஆதரவைப் பெற்று வருகிறது.

சர்வதேச நிலைமை கெடுபிடிப் போர் நிலையிலிருந்து முடிவமைதி நிலைக்கு, பரஸ்பரம் அனுகூலமான ஒத்துழைப்பு என்னும் நிலைக்கு மாறிவருகிறது என்பதற்கு இது மற்றுமொரு சான்றாகும்.

லியோனித் பிரெஷ்னேவ் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்கும், அமெரிக்காவுக்கும், பிரான்சுக்கும் மேற்கொண்ட விஜயம் இவ்வகையில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும், சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுத் தலைவர் நிகொலாய் பொத்கோர்னியும், சோவியத் யூனியன் அமைச்சரவைத் தலைவர் அலெக்சி கோசிகினும் சில அயல்நாடுகளுக்கு விஜயம் செய்தனர்.

ஐரோப்பாக் கண்டத்தின் அரசியல் நிலைமையும் அடிப்படையான, நம்பிக்கை மிகுந்த மாற்றங்களை அடைந்துள்ளது. யுத்தப் பிற்காலத்தில் ஐரோப்பா சம்பந்தமாக செய்யப்பட்ட ஏற்பாடுகள் உறுதியாக நிலைகொண்டு விட்டன. அகில ஐரோப்பிய மாநாடு சம்பந்தமாக ஒரு வெற்றிகரமான, தொடக்கம் மேற்கொள்ளப் பட்டது. அது கூட்டப்பட்டிருப்பது சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிச நாடுகளும் ஐரோப்பாவெங்கணுமுள்ள முற்போக்கு சக்திகளும் கடந்த பல ஆண்டுகளாக எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குக் கிட்டியுள்ள மிக முக்கியமான பலன்களில் ஒன்றாகும். நிரந்தர சமாதானமும், சிறந்த அண்டை நேய உறவுகளும், ஒத்துழைப்பும் நிலவக்கூடிய ஒரு பிரதேசமாக ஐரோப்பாவை

மாற்றுவதற்கு ஓர் உறுதியான அடித்தளத்தை இடுவதே இந்த மாநாட்டின் நோக்கம். மத்திய ஐரோப்பாவில் ஆயுதப் படைகளையும் படைக்கலங்களையும் குறைப்பது சம்பந்தமாக வியன்னாவில் அண்மையில் ஆரம்பமான பேச்சுவார்த்தைகளும் இக்கண்டத்தில் முடிவமைதிப் போக்கு மேம்படுவதற்குத் துணை புரியும்.

சமாதான சகவாழ்வுக் கொள்கையின் ஆக்கபூர்வமான தன்மைக்கு, சோவியத் யூனியனுக்கும் பிரான்சுக்கும் இடையே நிலவும் பரஸ்பரம் அனுகூலம் பயக்கும் உறவுகள் ஓர் உதாரணமாகும். சோவியத் யூனியனுக்கும் பிரான்சுக்கும் இடையிலான ஒத்துழைப்புக் கோட்பாடுகள் இதற்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 1973 ஜனவரியில் ஜாஸ்லாவலிலும் (பைலோரஷ்யா), 1973 ஜூனில் பாரிசிலும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் லியோனித் பிரெஷ்னேவுக்கும் பிரெஞ்சு ஜனாதிபதி ஜார்ஜெஸ் பாம்பிடுவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த உறவுகள் மேலும் வளர்ந்துள்ளன.

1973 ஜூனில், சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் லியோனித் பிரெஷ்னேவுக்கும் பிரெஞ்சு ஜனாதிபதி ஜார்ஜெஸ் பாம்பிடுவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு ஐரோப்பாவிலும் உலகெங்கணும் பதற்ற நிலை தணிவதற்கு ஆக்கபூர்வமான பங்காற்றியுள்ளது.

கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, சோவியத் சோஷலிசக் குடியரசுகள் ஒன்றியத்துக்கும் பிரான்சுக்கும் இடையிலான ஒத்துழைப்புக் கோட்பாடுகளையும் சோவியத் - பிரெஞ்சு பிரகடனத்தையும் உறுதியாக நிறைவேற்றும் அடிப்படையில் பிரெஞ்சு - சோவியத் உறவுகளை மேலும் வலுப்படுத்த இரு தரப்புகளும் கொண்டுள்ள ஆர்வம் மிகவும் முக்கியமானதாகும்.

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுடன் சோவியத் யூனியனும் போலந்து மக்கள் குடியரசும் செய்துள்ள ஒப்பந்தங்கள், மேற்கு பெர்லின் சம்பந்தமாக நான்கு நாடுகள் செய்துள்ள ஒப்பந்தம், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம ஆகிய இவையாவும் சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் நோக்கி ஐரோப்பா முன்னேறும் பாதையில் முக்கிய மைல்கல்களாகும். இந்த மைல்கல்கள் யுத்தப் பிற்கால எல்லைகள் மீறவொண்ணாதவை என்பதை நிலைநாட்டுகின்றன; ஐரோப்பாவில் சமாதான பூர்வமான ஒத்துழைப்பு மேலும் வளர்வதற்குப் பாதை செப்பனிட்டுத் தருகின்றன.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் 1973 மே மாதம் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்கு

மேற்கொண்ட விஜயமும், சான்ஸ்லர் டபிள்யூ. பிராண்ட்டுடன் அவர் நடத்திய பேச்சுவார்த்தைகளும் சோவியத் யூனியனுக்கும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்கும் இடையே உள்ள உறவுகளில் திருப்பம் ஏற்பட்டிருப்பதை ஊர்ஜிதம் செய்தன.

1970 மாஸ்கோ ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையையும், இதற்கு ஓராண்டுக்குப் பிறகு ஓரியண்டாவில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தையும் பின்பற்றி தோழர் எல். ஐ. பிரெஷ்னேவ் சான்ஸ்லர் டபிள்யூ. பிராண்ட்டுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளும், தோழர் பிரெஷ்னேவின் எப்ஆர்ஜி விஜயத்தின்போது சோவியத் யூனியனுக்கும் எப்ஆர்ஜிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களும், இந்த விஜயத்தின் பலன்கள் குறித்து வெளியிடப்பட்ட இரு தரப்புகளின் கூட்டு அறிக்கையும் சமாதானத்தின் நலன்கள் பொருட்டு சோவியத் சோஷலிசக் குடியரசுகள் ஒன்றியத்திற்கும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்கும் இடையே நல்லுறவுகளும் சிறந்த அண்டை நேய ஒத்துழைப்பும் மேலும் வளர்வதற்குப் புதிய வாய்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளன. இரு நாடுகளது பொருளாதார உறவுகளுக்கும் அவற்றின் நீண்ட கால தொழில்நுட்ப, கலாசார ஒத்துழைப்புக்கும் இது பொருந்தும்.

சோவியத் யூனியனுக்கும் இத்தாலி, பின்லந்து, ஸ்காண்டிநேவிய நாடுகள் போன்றவற்றுக்கும் இடையேயும் பரஸ்பரம் அனுகூலம் பயக்கும் அடிப்படையில் உறவுகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. சோவியத் யூனியனுக்கும் பிரிட்டனுக்குமுள்ள உறவுகளும் ஓரளவு அபிவிருத்தியடைந்துள்ளன.

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள உறவுகளில் சமீப காலத்தில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1973 ஜூனில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து, அமெரிக்க ஜனாதிபதி நிக்சனுடன் பயனுள்ள பேச்சு வார்த்தைகள் நடத்தினார்.

1972 மே மாதத்தில் மாஸ்கோவில் சோவியத் - அமெரிக்க உச்சகட்ட பேச்சு வார்த்தைகள் நடைபெற்ற பின் கழிந்த ஆண்டுகள் சோவியத் - அமெரிக்க உறவுகளை மேம்படுத்துவதற்கு இரு தரப்புகளும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் எவ்வளவு சரியானவை என்பதையும், எப்படி உரிய காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டவை என்பதையும் புலப்படுத்துகின்றன. இவ்விரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் சம்பந்தப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகள் ஏற்கப்பட்ட மாஸ்கோ கூட்டம் சோவியத் - அமெரிக்க உறவுகளில், பதற்ற நிலையைத் தணிக்கும் திசை வழியில்

அமைந்த உறவுகளையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் சகஜப் படுத்தும் திசை வழியில் அமைந்த ஒரு திருப்பு முனையாக இருந்தது.

1973 ஜூனில் வெற்றிகரமாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் சோவியத் - அமெரிக்க உறவுகள் சகஜமாக வளர்ச்சியடைவதற்கும், இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பரம் அனுகூலமுள்ள ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கும் ஒரு சிறந்த அடிப்படையை உருவாக்கித் தந்தன உலகம் முழுவதிலும பொதுவாக பதற்ற நிலை தணிந்துவரும் இயக்க நிகழ்வின் ஒரு பகுதி என்ற முறையில், இபபேச்சு வார்த்தைகள் இவ்வியக்க நிகழ்வை மேலும் பேம் படுத்தின.

அணு ஆயுத யுத்தத்தை என்றென்றைக்குமாக தடுப்பது பற்றி சோவியத் யூனியனும் அமெரிக்காவும் செய்து கொண்ட ஒப்பந்தம் அணு ஆயுத யுத்த அபாயத்தைத் தணிக்கும் திசை வழியில், இறுதியாக அந்த அபாயத்தைத் தவிர்க்கும் திசை வழியில், சர்வதேச பந்தோபஸ்துக்கு உண்மையான உத்தரவாதமளிக்கும் ஓர் அமைப்பைத் தோற்றுவிக்கும் திசை வழியில் எடுத்துக் கொள்ளப் பட்ட ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதும், அணு ஆயுதங் களைப் பயன்படுத்துவதாக பயமுறுத்தும் நிலையிலிருந்து அணு ஆயுத யுத்தத்தைத் தடுக்கும் நிலைக்கு, தகராறுக்குரிய எல்லாப் பிரச்சினைகளையும் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளும் நிலைக்கு மாறுவதும் மனிதகுலம் அனைத்துக்கும் வரலாற்று முக்கியத் துவம் வாய்நததாக இருக்கும்.

ஏவு - கணை எதிர்ப்பு அமைப்புகளையும், கேந்திர தற்காப்பு ஆயுதங்களையும் கட்டுப்படுத்துவது பற்றி செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைக்கப் பட்டுள்ளன. கேந்திர ஆயுதங்களை மேலும் கட்டுப்படுத்துவது சம்பந்தமாகவும் கூடிய மட்டும் அவற்றைக் குறைப்பது சம்பந்த மாகவும் சோவியத யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே புதிதாக நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைகளை வெற்றிகரமாக முடிக்க சோவியத் மக்கள் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்வர்.

அணு சக்தியை சமாதான காரியங்களுக்குப் பயன்படுத்தும் துறையில் விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந் தமும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உயர் சக்தி கொண்ட புதிய எரிபொருளை வழங்குவதே இதன் பிரதான குறிக் கோள்.

இடையே பல்வேறு துறைகளில் ஆக்கபூர்வ மான ஒத்துழைப்பு விரிவாக வளர்ச்சியுறுவதும், இந்த நாடுகள்

மத்தியில் வர்த்தக, பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளும் சோவியத் - அமெரிக்க உறவுகளை முன்னிலும் ஸ்திரமானவையாக ஆக்கும்.

சோவியத் - அமெரிக்க உறவுகள் சர்வதேச சமாதானத்தின் மேம்பாட்டுக்கு ஒரு நிரந்தர அம்சமாக விளங்குவதற்கு இதில் இரு நாடுகளும் தம பொறுப்புகளை உறுதியாக நிறைவேற்றுவது அவசியம். சோவியத் - அமெரிக்க உறவுகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி, தமது பரஸ்பர உறவுகளிலோ ஒன்று மற்றொன்றினது கூட்டாளி நாடுகளுடனான உறவுகளிலோ, இதர நாடுகளுடனான உறவுகளிலோ படை பலத்தை பயன்படுத்துவதில்லை அல்லது பயன்படுத்துவதாக அச்சுறுத்துவதில்லை என்று இரு நாடுகளும் கொடுத்துள்ள வாக்குறுதிகள், நாடுகளின் உரிமைகளையும் நலன்களையும் கௌரவிக்க இரு தரப்புகளும் தெள்ளத் தெளிவாக தெரிவித்துள்ள ஆவல் ஆகியவை சர்வதேச சூழ்நிலையைப் பெரிய அளவுக்கு மாற்றுவதில் முக்கிய அம்சமாக விளங்குகின்றன; இதர எல்லா நாடுகளுடனும் ஒத்துழைப்''தற்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குகின்றன.

முடிவமைதி இயக்க நிகழ்வில் ஆசியா மேன்மேலும் அதிகமான பங்கெடுத்து வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள உறவுகள் சுமுகமடைந்து வருவதை சோவியத் யூனியன் வரவேற்கிறது இளம் குடியரசான பங்களாதேஷின் சர்வதேச நிலையும் உறுதிப்பட்டு வருகிறது.

லியோனித் பிரெஷ்னேவின் இந்திய விஜயம் சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையே நட்புறவு மேலும் வளர்வதற்கு ஒரு முக்கிய நடவடிக்கையாக அமைந்தது.

ஆப்கானிஸ்தானுடன் சோவியத் யூனியன் நெடுங்காலமாகக் கொண்டுள்ள நேச உறவுகள் வெற்றிகரமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. சோவியத் யூனியன் ஈரானுடனும் துருக்கியுடனும் சகஜ உறவுகள் கொண்டுள்ளன.

சோவியத் - ஜப்பானிய உறவுகளில் அண்மைக் காலத்தில் ஆக்கரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இரு நாடுகளுக்குமிடையே உள்ள உறவுகள் சிறந்த அண்டை நேய உறவுகளாகவும் நேசத் தன்மை கொண்டவையாகவும் இருக்க வேண்டுமென்ற நிலையையே சோவியத் யூனியன் எப்போதும் எடுத்து வந்துள்ளது; ஜப்பானிலுள்ள விரிவான சமூக - அரசியல் சக்திகள் இந்த நிலையை மேன்மேலும் நன்கு புரிந்து ஆதரவளித்து வருகின்றன.

சீனாவைப் பொறுத்த வரையில், 24வது கட்சி காங்கிரஸ் வகுத்துக்கொடுத்த கொள்கை வழியை சோவியத் யூனியன் உறுதி

யாகக் கடைப்பிடிக்கிறது. சீனாவின்மீது நாங்கள் எத்தகைய பிரதேச உரிமைகளையும், பொருளாதார உரிமைகளையும் கொண்டாடவில்லை. சீன மக்கள் குடியரசுடன் உறவுகளை சுமுகப்படுத்திக் கொள்வதையும், மீண்டும் சோவியத் - சீன நட்புறவு ஏற்படுவதையும் நாங்கள் ஆதரிக்கின்றோம். இத்தகைய அரசியல் கொள்கை வழி சோஷலிசக் கூட்டமைப்பின் நலன்களுக்கும், உலகப் புரட்சி இயக்கத்தின் நலன்களுக்கும், சோவியத் யூனியன் சீனா ஆகிய இரு நாடுகளதும் நீண்ட கால ஜீவாதார நலன்களுக்கும் முற்றிலும் இசைந்ததாகும்.

பொதுவான, பூரணமான படைக் குறைப்புத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்தோடு சோவியத் யூனியனும் இதர சோஷலிச நாடுகளும் பல சந்தர்ப்பங்களில் ஆக்க பூர்வமான யோசனைகளை முன்வைத்துள்ளன. ஐ. நா. பொதுச்சபையால் இப்போது பரிசீலிக்கப்பட்டு வரும் சோவியத் பிரேரணையும் கூட இதே குறிக்கோள்கள் கொண்டவையே ஆகும். ஐ. நா. பந்தோபஸ்துக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள நாடுகள் தமது ராணுவ பட்ஜெட்டுகளில் 10 சதவிகிதத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்றும், இவ்வாறு மிச்சமாகும் பணத்தை வளரும் நாடுகளுக்கு உதவி செய்ய பயன்படுத்தவேண்டும் என்றும் இந்தப் பிரேரணை கூறுகிறது.

கெடுபிடி யுத்தக் கொள்கைகளிலிருந்து முடிவமைதிக்கும், ராணுவ மோதல் நிலையிலிருந்து பந்தோபஸ்தையும் சர்வதேச ஒத்துழைப்பையும் பலப்படுத்தும் நிலைக்கும் மாறி வருவது இன்றைய சர்வதேச உறவுகள் துறையின் அடிப்படைப் போக்காக உள்ளது என்பதில் ஐயமில்லை.

எனினும் உலக அரசியல் நிலைமை பரிபூரணமாக ஆரோக்கியமடைந்து விட்டது என்ற நிலையை அடைய இன்னும் எவ்வளவோ தூரம் செல்லவேண்டியுள்ளது. மத்தியக் கிழக்கில் அண்மையில் வெடித்த ராணுவ மோதல், சிலியில் நிகழ்ந்த கொடிய எதிர்ப்-புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு போன்ற சம்பவங்கள், அவை தன்மையில் வேறுபட்ட போதிலும், உலகம் முழுவதிலும் முடிவமைதி ஏற்படுவதற்கான பாதையைத் தடுப்பதற்கு ஏகாதிபத்தியப் பிற்போக்கு சக்திகள் மேற்கொண்டுள்ள முயற்சிகளேயாகும்.

எனவே, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் 1973 ஏப்ரல் மாதத்திய பிளீனம சுட்டிக்காட்டியது போல், சர்வதேச உறவுகளில் ஏற்பட்டுள்ள சாதகமான மாற்றங்களை மாற்ற முடியாததாகச் செய்வதே இன்றைய தலையாய பணி.

உலகில் நிலையான சமாதானத்தையும், கம்யூனிசத்தை நிர்மாணித்து வரும் சோவியத் மக்களுக்கு நம்பகமான பந்தோ

பஸ்தையும் உத்தரவாதம் செய்வதற்கு அரசியல் குழு செய்து வரும் பணியை பிளீனம் கூட்டம் பூரணமாக அங்கீகரித்தது. இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு லியோனித் பிரெஷ்னேவ் நேரடியாகஆற்றி வரும் மாபெரும் பங்கையும் பிளீனம் கூட்டம் குறிப்பிட்டது.

''தேசங்களிடையே சமாதானத்தை வளர்ப்பதற்கான'' 1973ம் வருட லெனின் பரிசு சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் லியோனித் பிரெஷ்னேவுக்கு வழங்கப்பட்டுள்ள செய்தியை சோவியத் மக்களும் உலக மக்களும் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றுள்ளனர்.

யுத்த, சமாதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் மக்களும், அவர்களது வெகுஜன நிறுவனங்களும், அரசியல் கட்சிகளும் முன்னின்று பங்கெடுத்துக் கொள்வது இன்றைய சர்வதேச நிகழ்ச்சிப் போக்கில் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று.

உலகெங்கும், சமாதானத்திற்கான போராட்டத்தில் அணி திரண்டு வரும் முற்போக்கு மனோபாவம் கொண்ட மக்களின் எண்ணிக்கை மேன்மேலும் அதிகரித்து வருகிறது. 1973 அக்டோபரில் மாஸ்கோவில் நடைபெற்ற சமாதான சக்திகளின் உலக காங்கிரஸ் இதற்கு ஒரு தெள்ளத் தெளிவான சான்றாகும். 143 நாடுகளிலிருந்து பல்வேறு அரசியல் கருத்துக்களையுடைய 1,600 தேசிய நிறுவனங்களையும் 120 சர்வதேசிய நிறுவனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த காங்கிரசில் பங்கு கொண்டனர். சமாதான இயக்கம் எத்தகைய பரந்த சமூக அடித்தளத்தினைப் பெற்றுள்ளது என்பதை இது புலப்படுத்துகிறது.

''இன்றுள்ள அபாயங்களையும் அநீதிகளையும் உலகின் சாமான்ய மக்கள் எவ்விதம் உணர்ந்துள்ளனர் என்பதை சமாதான சக்திகளின் உலக காங்கிரஸ் காட்டுகிறது. மனித குலத்தின் அறிவாற்றலையும், உழைப்பையும், செல்வத்தையும் மனித ஜீவன்களை அழிப்பதற்காகவோ அல்லது அடிமைப்படுத்துவதற்காகவோ பயன்படுத்தாமல் மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்கு புதிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று காங்கிரசின் வேண்டுகோள் கூறுகிறது.

சமாதான சக்திகளின் உலக காங்கிரஸ் மிகுந்த சர்வதேச முந்தியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். காங்கிரஸ் விடுத்த வேண்டுகோள்களும், அதில் பங்கு கொண்டவர்கள் எழுப்பிய குரல்களும் சமாதானத்திற்காக, எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த

மக்களின் இன்ப வாழ்வுக்காக, பந்தோபஸ்துக்காகப் போராடி வருபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் என்பது திண்ணம்.

இந்தக் காங்கிரசில் லியோனித் பிரெஷ்னேவ் சொற்பொழிவாற்றுகையில் பின்கண்டவாறு குறிப்பிட்டார்: ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும் பின்பற்றிவரும் உறுதியான சமாதானக் கொள்கை இன்றைய கட்டத்தில் 24வது கட்சி காங்கிரசின் சமாதானத் திட்டமாக உருவெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தை முன்வைக்கும்போது, பதற்ற பீடங்களை ஒழித்துக் கட்டுவதற்கு உதவுவதும், அணு ஆயுத யுத்தப் பேரழிவிலிருந்து தப்புவதற்கு மனித குலத்துக்கு துணை புரிவதும், முடிந்த எல்லா வழிகளிலும் பதற்ற நிலையைத் தணிப்பதும் எங்கள் கடமை என உணர்கிறோம். எல்லா உழைப்பாளி மக்களின் நலன்களை முன்னிட்டு, இந்த உன்னத குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நாங்கள் பாடுபட்டு வந்துள்ளோம்; இனியும் விடாது பாடுபட்டு வருவோம்.''

# சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி

*லெனினால் நிறுவப்பட்ட சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி வேறு எந்த அரசியல் கட்சியின் வரலாறும் கண்டிராத பாதைகளைக் கடந்து வந்துள்ளது. தலைமறைவாக இயங்கி வந்த ஒரு சிறு நிறுவனமாக இருந்து, அது கிட்டத்தட்ட 1 கோடி 50 லட்சம் கம்யூனிஸ்டுகளைக் கொண்ட ஒரு வலிமை மிக்க, ஒன்றுபட்ட படையாக, உலகின் முதலாவது சோஷலிச அரசுக்கு வழிகாட்டும் கட்சியாக வளர்ந்துள்ளது. இந்த உழைப்பாளி மக்களின் கட்சி சோஷலிச மக்கள் அனைவரின் முன்னணிப் படையாகி விட்டது. லெனின் குறிப்பிட்டதுபோல் கட்சியில் ''நம் காலத்தின் மதிநுட்பத்தையும், கௌரவத்தையும் மனச்சாட்சியையும் காண்கிறோம்.''*

பாட்டாளி வர்க்கத்தினது வர்க்க நிறுவனத்தின் மிக உயர்ந்த வடிவமாக லெனின் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவினார். பாட்டாளி வர்க்கம் தலைசிறந்த வர்க்கம்; வரலாற்றிலேயே, தனது சொந்த ஆதிக்கத்தை நிரந்தரமாக்கும் கொள்கைக்கு அல்லாமல், எல்லா வர்க்கங்களையும், எந்த ஒரு வர்க்கத்தின் அல்லது சமூகக் குழுவின் ஆதிக்கத்தையும் படிப்படியாக ஒழிப்பதற்காக அதாவது ஒரு கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவதற்காக ஆட்சியைக் கைப்பற்றப் போராடிய ஒரேவர்க்கம். தொழிலாளி வர்க்கத்தின் இந்தக் குறிப்பிட்ட பாத்திரம்தான் அதன் அரசியல் கட்சி சமுதாயத்தில் ஆற்றும் குறிப்பிட்ட பங்கை நிர்ணயிக்கிறது.

## போராட்டமும் வெற்றியும் நிறைந்த பாதை

ரஷ்ய சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் (ஆர். எஸ். டி. எல். பி) இரண்டாவது காங்கிரஸ் கூட்டப்பட்டதன் 70வது

ஆண்டுவிழாவை 1973 ஜூலை 30ல் சோவியத் மக்கள் கொண்டாடினர். இந்த காங்கிரஸ் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால் இந்த காங்கிரசில்தான் ரஷ்யாவிலிருந்த புரட்சிகர மார்க்சிஸ்டு நிறுவனங்கள் ஒன்றுபட்டு, லெனின் வகுத்துத் தந்த சித்தாந்த, அரசியல், ஸ்தாபனக் கோட்பாடுகளின் அடிப்படையில் ரஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் கட்சி அமைக்கப்பட்டது. ஒரு புது வகையான பாட்டாளி வர்க்கக் கட்சி, போல்ஷிவிக்குகளின் கட்சி, மாபெரும் லெனினிய கட்சி உருவாயிற்று. லெனின் எழுதினார்: ''தற்கால அரசியல் சிந்தனைப் போராட்டம் என்ற முறையிலும் அரசியல் கட்சி என்ற முறையிலும் போல்ஷிவிசம் 1903 முதலே இருந்து வருகிறது.''

ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தினது முக்கியத்துவத்தையும், உள்ளடக்கத்தையும் லெனின் பின்கண்டவாறு வருணித்தார்: ''வரலாறு இப்போது நமக்கு உடனடிப் பணியை வழங்கியுள்ளது; எந்த நாட்டின் பாட்டாளி வர்க்கத்தையும் எதிர் நோக்கிய எல்லா உடனடிப் பணிகளிலும் மிகப் புரட்சிகரமான பணி இது. இந்தப் பணியை நிறைவேற்றுவது அதாவது ஐரோப்பிய பிற்போக்கினது மட்டுமின்றி, ஆசியப் பிற்போக்கினதும் மிக சக்திவாய்ந்த கொத்தளத்தை அழித்தொழிப்பது ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்தை புரட்சிகர சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகப் பரிணமிக்கச் செய்யும்.''

அந்நாட்களில் ரஷ்ய ஜாரிஸத்தையும் முதலாளிகளையும் எதிர்த்த ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் அதிகமாக இல்லாவிட்டாலும் பெரிய தொழில் நிலையங்களில் ஒருங்கு திரண்டிருந்தது. லட்சோப லட்சக் கணக்கான ஏழை விவசாயிகளும் ஒடுக்கப்பட்ட மக்களும் அதன் நம்பகமான கூட்டாளிகளாக இருந்தனர். இத்தகைய சூழ்நிலை ரஷ்யாவில் வர்க்கப் போராட்டம் வளர்ச்சியுறப் பெரிதும் துணை புரிந்தது. இதுவே, ரஷ்யத் தொழிலாளி வர்க்கக் கட்சியின், பாட்டாளி வர்க்கத்தினது மெய்யான புரட்சிகர மார்க்சியக் கட்சியின், புது வகையான கட்சியின் தன்மையை நிர்ணயித்தது.

1895ல் லெனின் நிறுவிய தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகத்தின் அடிப்படையில் கட்சி அமைக்கப்பட்டது. நாட்டின் பல தொழிற் கேந்திரங்களைச் சேர்ந்த சமூக-ஜனநாயக நிறுவனங்களை இக் கழகம் ஒன்றுபடுத்திற்று. 1898ல் மின்ஸ்கில், நடைபெற்ற ஸ்தல சமூக-ஜனநாயக நிறுவனங்களின் முதல் காங்கிரஸ், ரஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை உருவாக்கத் தீர்மானித்தது. ஆனால் இந்த காங்கிரஸில் லெனினும் அவருடைய தோழர்களும் கலந்து

கொள்ளவில்லை. அப்போது அவர்கள் நாடுகடத்தப் பட்டிருந் தனர். சமூக-ஜனநாயக இயக்கத்தில் தலைதூக்கிய சித்தாந்த, ஸ்தாபன கருத்து வேறுபாடுகளைக் களைய இந்தக் காங்கிரஸ் தவறிவிட்டது.

ஒரு புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சியைத் தோற்று விப்பதற்கு, சித்தாந்த, ஸ்தாபன தயாரிப்புக்களைச் செய்வதிலும், சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான போராட்டத்திலும் இஸ்க்ரா பத்திரிகை முக்கிய பங்காற்றியது. லெனின் இப்பத்திரிகையை நிறுவி, 1900-1903 ஆம் ஆண்டுகளில் அதன் பிரதம ஆசிரிய ராகவும் இருந்தார். கோட்பாடு ரீதியான மார்க்சிய அடிப்படை யில் ஸ்தல கட்சிக் கமிட்டிகளும், தன்னலமற்ற புரட்சியாளர் களும், அணி திரள்வதற்கான ஒரு நடு மையமாக இந்தப் பத்திரிகை விளங்கிற்று. புரட்சிகர ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்தி லிருந்து மிகச் சிறந்தவர்களை இஸ்க்ரா ஒன்றிணைத்தது என்று லெனின் கூறினர்.

கட்சியை அமைக்கும்போது லெனின், ஏகாதிபத்தியம் இருந்து வரும் நிலைமைகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி நிலைமையில் எதார்த்தமாகவே புரட்சிகரமான ஒரு புதுவகை யான கட்சி, உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சி, இரண்டாம் அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு கட்சி தொழிலாளி வர்க்கத்திற்குத் தேவை என்ற முடிவுடனேயே செயல்பட்டார். சமூகத்தைப் புரட்சி கரமாக மாற்றுவதற்காக பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட் டத்திற்கு தலைமை தாங்க வேண்டுமென்றும், முதலாளித்துவத் திலிருந்து சோஷலிஷத்திற்கும் பிறகு கம்யூனிசத்திற்கும் மாறும் புரட்சிகரக் கட்டத்தில் அது தலைமை சக்தியாக விளங்க வேண்டு மெனவும், லெனின் கூறினர். மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகிய இருவரது போதனைகளாலும், ரஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அனுபவத்தாலும் வழிகாட்டப்பட்டும், மார்க்சியத்தை ஏகாதி பத்திய சகாப்தத்திற்கு ஆக்க ரீதியாகப்பயன்படுத்தியும் தொழிலாளி வர்க்கத்தினது புரட்சிகர நிறுவனத்தின் மிக உயர்ந்த வடிவமான கட்சியைப் பற்றிய ஒரு ஞானத்தை லெனின் வழங்கினர்; அதன் சிந்தாந்த, ஸ்தாபன கோட்பாடுகளை, போர்த் தந்திரத்தை, நடைமுறைத் தந்திரத்தை, கட்சி வாழ்க் கையின் நியதிகளை, கட்சித் தலைமையின் கோட்பாடுகளை நிர்ண யித்துக் கொடுத்தார்.

ஆர்.எஸ்.டி.எல்.பி.யின் இரண்டாவது காங்கிரஸ் கட்சி வேலைத் திட்டத்தை ஏற்றது. இது இரண்டு பகுதிகளைக் கொண்டதாக இருந்தது. ஒன்று, குறைந்தபட்ச வேலைத்திட்டம், பூர்ஷுவா-

ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தை எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளை இது வரையறுத்துக் கூறிற்று; இரண்டு, அதிகபட்ச வேலைத்திட்டம்—பாட்டாளி வர்க்கத்தின் மிக முக்கிய பிரச்சினைகளை, அதாவது சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிக்கும் பிரச்சினைகளை இது எடுத்துக் கூறிற்று.

இந்தக் காங்கிரஸில் லெனினும் அவருடைய ஆதரவாளர் களும் மார்க்சியத்தின் பிரதான கோட்பாட்டை—பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை சோஷலிசப் புரட்சியின் பிரதான பிரச் சினையாகக் கொள்ளும் போதனையை ஆதரித்துப் பேசினர். அவர்களது வற்புறுத்தலின் பேரில் இந்த விஷயம் கட்சியின் வேலைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது புரட்சி இயக்கத்தின் பாதையை நிர்ணயிப்பதில் பெரிய அளவிற்கு செல் வாக்கு வகித்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியினைக் குறித்தது.

இரண்டாவது காங்கிரஸில் லெனினும் அவருடைய ஆதர வாளர்களும் ஓர் உண்மைப் புரட்சிக் கட்சியின் ஸ்தாபன அமைப்பு பற்றிய கண்ணோட்டத்தை முன்வைத்து, அதனை ஆதரித்துப் பேசினர். பிற்காலத்தில் அதனை நடைமுறைப்படுத்தியும் காட் டினர். இந்தப் புரட்சிக் கட்சி முன்னேற்றமடைந்த கட்சியாக, அரசியல் உணர்வு மிக்க கட்சியாக, தொழிலாளிவர்க்கத்தின் நன்கு அணி திரட்டப்பட்ட படைப் பிரிவாக சமூக வளர்ச்சி பறறியும் வர்க்கப்போராட்டம் பற்றியும் பூரண ஞானம் கொண்ட கட்சியாக, புரட்சிகர நடவடிக்கைகளில் அனுபவம் வாய்ந்த கட்சியாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர். சித்தாந்த ரீதியில் உறுதியான, ஐக்கியமான மத்தியத்துவப் படுத்தப்பட்ட ஒரு கட்சிதான் அதிகாரத்தைக் கைப்பற்றத் தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்துக்கு தலைமை தாங்கி, அதனை வெற்றிக்கு இட்டுச் செல்லமுடியும்.

ரஷ்யாவில் புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சி ஒரு சர்வ தேச அரசியல் நிறுவனமாக அமைக்கப்பட்டது. பல்வேறு தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில், மக்களில் 57 சதவீதத்தினர் ரஷ்யரல்லாதவர்களாக உள்ள ஒரு நாட்டில், பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர் வர்க்கங்களுக்கிடையே விரோ தத்தையும், குரோதத்தையும் கிளர்த்திவிட ஜாரிஸம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துகொண்டிருந்த ஒரு நாட்டில் இது எளிதான பணியாக இருக்கவில்லை. இது குறித்து லெனின் எழுதிய தாவது: ''எதேச்சாதிகாரத்துக்கு எதிரான, ஒட்டுமொத்தமாக ரஷ்ய பூர்ஷுவாக்களுக்கு எதிரான போராட்டம் சம்பந்தப் பட்ட விஷயங்களில் நாம் ஒரே, மத்தியத்துவப்படுத்தப்பட்ட, போர்க்குண மிக்க நிறுவனமாகச் செயல்படவேண்டும், மொழி,

'தேசிய இன பாகுபாடின்றி பாட்டாளி வர்க்கம் முழுவதையும் நம் பக்கம் அணி திரட்ட வேண்டும்....''.

இவ்வாருக, போல்ஷிவிக் கட்சி அமைக்கப்பட்டது; மெய் யான பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கட்சியாக அது வளர்ந்து வலுப் பெற்றது. அது எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த முற்போக்கான பாட்டாளிகளைத் தன் அணிகளுடன் ஒன்று படுத்திற்று. அதே சமயம் போல்ஷிவிக் கட்சி அது தொடங்கப் பட்ட காலம் முதலே சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத் தின் ஒற்றுமைமிக்க, போர்த்திறமை மிக்க படைப்பிரிவாக இருந்து வந்துள்ளது.

லெனின் வகுத்துத் தந்த சித்தாந்த, அரசியல், ஸ்தாபனக் கோட்பாடுகள் (இவற்றின் படிதான் ஆர் எஸ் டி.எல்.பி. யின் இரண்டாவது காங்கிரஸில் ஒரு புதுவகையான கட்சி அமைக்கப் பட்டது) சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி உருவாகி வளர்வதற்கு அடிப்படையாக இருந்தன.

ஆர் எஸ் டி.எல் பி.யின் இரண்டாவது காங்கிரஸ் உலகத் தொழிலாளி வர்க்க இயக்க வரலாற்றில் ஒரு திரும்பு முனையாக அமைந்தது. அதன் முடிவுகள் ரஷ்ய சந்தர்ப்பவாதிகளின் நிலைகளுக்கு மட்டுமின்றி, இதர நாடுகளது திருத்தல்வாதிகளின் நிலைகளுக்கும் பலத்த அடி கொடுத்தன.

எதார்த்த நிலையை மார்க்சிய ரீதியில் ஆழமாக ஆராய்ந்தும், சமூக வளர்ச்சிப் போக்கை நுண்ணறிவுடன் கூடிய திறத்தோடு பரிசீலித்தும் ஏகாதிபத்திய சகாப்தத்தில் வர்க்கப் போராட்டத் தின் போர்த் தந்திரத்தையும், நடைமுறைத் தந்திரத்தையும் சோஷலிசப் புரட்சியின் கம்யூனிஸ்ட் நிர்மாணத்தின் கோட்பாட் டையும் லெனின் உருவாக்கித் தந்தார். இவை போல்ஷிவிக் கட்சிக்கும், தொழிலாளி வர்க்கம் முழுமைதற்கும் கம்யூனிஸ்டு இயக்கத்திற்கும் வழிகாட்டியாக அமைந்தன.

அச்சமயம் ரஷ்யாவில் மிகக் கடினமான நிலைமைகள் நிலவிய போதிலும், ஜார் அரசாங்கம் கொடிய அடக்குமுறைகளையும் ஒடுக்கு முறைகளையும் கட்டவிழ்த்துவிட்ட போதிலும் லெனின் தலைமையிலிருந்த போல்ஷிவிக் கட்சி தனக்குக் கிட்டிய எல்லா வாய்ப்புகளையும் சாதனங்களையும் பயன்படுத்தி, தொழிலாளிகளின் பரந்த பகுதியினரிடையேயும் இதர உழைப்பாளி மக்களிடையே யும், பரந்த அளவில் சித்தாந்த, அரசியல், ஸ்தாபனப் பணியை மேற்கொண்டது. 1905-1907 ஆம் ஆண்டுகளின் முதலாவது ரஷ்யப் புரட்சிக் காலத்திலும், ஸ்தோலிபின் அடக்குமுறைக் காலத்திலும், புதிய புரட்சிகர எழுச்சி ஆண்டுகளிலும், (1912-1914), முதலாம் உலக யுத்தத்தின் போதும் 1917 பிப்ரவரி புரட்சி நாட்களிலும் கட்சிதான் தொழிலாளி வர்க்கத்தையும்

ஏனைய உழைப்பாளி மக்களையும் ஜனநாயகத்திற்காகவும் சோஷலிசத்திற்காகவும், போராடும்படி தூண்டி ஊக்குவித்தது.

ரஷ்யாவில் ஜாரிஸம் தூக்கி எறியப்பட்டதானது உலகெங்கிலும் பிற்போக்காளர்களுக்கு ஒரு பேரிடியாக இருந்தது. இதற்குப் பிறகு லெனின் தலைமையிலிருந்த கட்சி சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்கான பாதையைக் காட்டிற்று. சோஷலிசத்திற்கான தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம், நிலத்திற்காக விவசாயிகள் போராட்டம், தேச விடுதலை இயக்கம் சர்வதேச சமாதான இயக்கம் முதலான அக்காலத்தின் எல்லாப் புரட்சி இயக்கங்களையும் ஏகாதிபத்தியத்தை வீழ்த்தும் பிரதான குறிக்கோளுக்கான போராட்டத்தில் ஒன்றிணைப்பதில் வெற்றி பெற்றது. பாட்டாளி வர்க்கமே இந்தப் புரட்சியின் தலைவனாக இருந்தது. ரஷ்ய விவசாயிகள் அதன் நெருங்கிய கூட்டாளிகளாக இருந்தனர். லெனினைத் தலைவராகக் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி வாகை சூடியது. மனித குல வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் மாறும் சகாப்தத்தை இது தொடங்கிவைத்தது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டின் ஆளும் கட்சி என்ற முறையில் தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைப்பாளி மக்களின் முயற்சிகளையும் சோஷலிசப் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாக்கும் பணியில், புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் பணியில், திருப்பிவிட்டது. ஆர்வத்திலும், வீச்சிலும் வேகத்திலும் முன்பின் காணா சோஷலிச மாற்றங்கள் சோவியத் குடியரசில் நிறைவேற்றப்பட்டன. நாட்டின் பன்னெடுங்கால பின்தங்கிய நிலை வெற்றி கொள்ளப்பட்டது; சோவியத் யூனியன் ஒரு மாபெரும் சோஷலிச அரசாயிற்று.

கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் சோவியத் மக்கள் நிறைவேற்றிய தீவிர சமூக, அரசியல் மாற்றங்களின் பிரதான விளைவு ஒரு வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயம் கட்டப்பட்டிருப்பதாகும். தற்போது சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி லெனின் வகுத்துத் தந்த பாதையில் கம்யூனிஸத்தை நோக்கி சோவியத் மக்களைத் தன்னம்பிக்கையோடு அழைத்துச் செல்கிறது.

**சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி ஆக்க ரீதியான மார்க்சியத்தைப் பின்பற்றும் கட்சி.** ஒரு புது வகையான கட்சியின், அதாவது கம்யூனிஸ்டுக் கட்சியின் வலிமை முக்கியமாக எதில் காணக்கிடைக்கிறது? அதன் நடவடிக்கைகள் யாவும் மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தால் வழி காட்டப்படுகின்றன

என்பதில்தான் அதன் வலிமை முக்கியமாகப் பொதிந்துள்ளது. ஒரு முன்னேற்றமடைந்த சித்தாந்தத்தால் வழிகாட்டப்படும் கட்சிதான் ஒரு முன்னணிக் கட்சியாக இருக்க முடியும் என்று லெனின் நமக்குப் போதித்தார். மார்க்சிய சித்தாந்தமே தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் பதாகை. கட்சி இந்த சித்தாந்தத்தை மேலும் செழுமைப் படுத்தி, அதனை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்; அதே சமயம் திருத்தல் வாதிகள் சந்தர்ப்ப வாதிகளின் அத்துமீறல்களிலிருந்து அதனைக் காப்பாற்ற வேண்டும்.

லெனின் கம்யூனிஸ்டுக் கட்சியை உருவாக்கி அதனைப் பலப்படுத்தினார்; உரம் பெறச் செய்தார். பூர்ஷுவா, குட்டி பூர்ஷுவா சிந்தாத்தையும், திருத்தல் வாதத்தையும், டிராட்ஸ்கிய வாதத்தையும், வலதுசாரி, இடதுசாரி சந்தர்ப்பவாதத்தையும், குறுகிய மனோபாவம் கொண்ட சமூகவாதிகளையும், தேசிய திரிபு வாதிகளையும் எதிர்த்துப் போராடினார். சுருங்கச் சொன்னால் புரட்சிகர மார்க்சிய சித்தாந்தத்தின் எல்லா எதிரிகளையும் எதிர்த்துப் போராடினார்.

மார்க்ஸ், எங்கெல்ஸின் போதனைகளை லெனின் விரிவாக செழுமைப்படுத்தி, அவற்றைப் புதிய உயர்ந்த கட்டத்திற்கு உயர்த்தினார். லெனினியம் என்பது மார்க்சியத்தின் தொடர்ச்சியும் ஆக்க பூர்வமான வளர்ச்சியுமாகும். லெனினியம் என்பது, ஏகாதிபத்திய சகாப்தத்தின், பாட்டாளி வர்க்கப் புரட்சி சகாப்தத்தின், சோவியத் யூனியனில் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும், கட்டும் சகாப்தத்தின், உலக சோஷலிச அமைப்பு தோன்றி, வளர்ந்துள்ள சகாப்தத்தின், தேச விடுதலைப் புரட்சிகள் சகாப்தத்தின், காலனி அமைப்பு வீழ்ச்சியுறும் சகாப்தத்தின், மனித குலம் கம்யூனிசத்திற்கு மாறும் சகாப்தத்தின் மார்க்சியமாகும்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினை விசுவாசமுடன் பின்பற்றுபவர்கள். மார்க்சியம்-லெனினியத்தைப் பேணிப் பாதுகாத்துள்ளனர். சோஷலிசம் கம்யூனிசத்தை நிர்மாணித்தும் இன்றைய நிலைமைகளில், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை முன்னிட்டு, தேசங்களின் தேசிய, சமூக விடுதலையின் நலன்களை முன்னிட்டு, அதனைத் தொடர்ந்து வளர்த்துள்ளனர்.

கட்சி தனது வளர்ச்சியின் எல்லாக் கட்டங்களிலும் மார்க்சிய-லெனினிய போதனையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கொள்கையைப் பின்பற்றி வந்துள்ளது; தொழிலாளி வர்க்கத்தின் உழைக்கும் விவசாயிகளின், நாட்டிலுள்ள எல்லா மக்களின், நலன்களையும் தாயகத்தின் நலன்களையும், சோவியத் யூனியனில் கம்யூனிசம் வெற்றி வாகை சூடுவதன் நலன்களையும்,

உலக சோஷலிச லட்சியத்தின் நலன்களையும் பாதுகாத்து வந்துள்ளது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி மிகுந்த அனுபவத்தை ஈட்டியுள்ளது; அக்டோபர் புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில், கட்சி தலை மறைவாகப் பணியாற்றி வந்த நிலைமையில், போல்ஷிவிக்குகள் சித்தாந்த, அரசியல், ஸ்தாபனப் பி ச்சினைகளை கோட்பாட்டு ரீதியாக விளக்கினர்; அவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நடைமுறை தீர்வுகளைக் கூறினர்; அதனடிப்படையில் பூர்ஷுவா-ஜனநாயகப்புரட்சியிலும் சோஷலிசப் புரட்சியிலும் வெற்றி கண்டனர். இவ்வாறு அவர்கள் புரட்சிகர மார்க்சிஸ்டுக் கட்சி பற்றிய-ஒரு புது வகையான கட்சி பற்றிய - போதனையை உருவாக்கி, அத்தகைய கட்சியை நிறுவினர்; ஏகாதிபத்திய சகாப்தத்திற்கான சோஷலிசப் புரட்சிக் கோட்பாட்டை உருவாக்கினர்; பூர்ஷுவா ஜனநாயக சோஷலிசப் புரட்சிகளின் போர்த் தந்திரத்தையும், நடைமுறைத் உத்திகளையும் வகுத்துத் தந்தனர்; ஜாரிஸத்தையும் முதலாளித்துவத்தையும் தோற்கடிப்பதற்காகவும், தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமைக்காகவும், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளி-வர்க்க விவசாயிகள் நேச உறவுக்காகவும், ஒடுக்கப்பட்ட தேசங்களை பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் ஈர்ப்பதற்காகவும் பாட்டாளி வர்க்கத்தின் மேலாதிக்கத்தை நிறுவ பாடுபட்டனர். சட்ட ரீதியான போராட்ட பணி முறைகளை சட்ட விரோதமான போராட்ட பணி முறைகளுடன் இணைக்கவும், பார்லி மெண்டரி பார்லிமெண்ட முறை அல்லாத போராட்டம் பணிகளை இணைக்கவும் புதிய வரலாற்று நிலைமைகளின் தேவைக்கு இவற்றை அவ்வப்போது மாற்றிக் கொள்ளவும் தனக்குள்ள திறமைகளைக் கட்சி புலப்படுத்திற்று.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார காலகட்டத்திலும் சோஷலிச, கம்யூனிஸ நிர்மாண காலத்திலும் கட்சி பெற்ற அனுபவம் செழுமையானது, பல்வகைப்பட்டது. ஒரு பரந்த பல-தேசிய இன நாட்டில், பின்தங்கிய நாட்டில், விவசாயிகளைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த நாட்டில் மனித குல வரலாற்றிலேயே முதல் தடவையாக சோஷலிஸம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகள் வரை சோவியத் யூனியன் உலகின் ஏக சோஷலிஸ நாடாக இருக்கவேண்டியேற்பட்டதாலும், பகைமை உணர்வு கொண்ட முதலாளித்துவ உலகம் அதனை சுற்றி வளைத்துக் கொண்டு உக்கிரமாகத் தாக்கியதாலும், சிரமங்கள் பன்மடங்கு அதிகரித்தன. சோஷலிச நிர்மாணம் சம்பந்தப்பட்ட மிகச் சிக்கலான பிரச்சினைகளுக்குக் கட்சி சித்தாந்த ரீதியில் தீர்வு காண வேண்டியிருந்தது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாற்று அனுபவம் முதலாளித்துவத்

திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறுவது, கம்யூனிசம் நோக்கி சோஷலிச சமுதாயம் முன்னேறுவது ஆகியவை சம்பந்தப்பட்ட பல சிக்கலான பிரச்சனைகளைக் கொண்டது. அவற்றில் முக்கிய மானவை வருமாறு:

சோவியத்சமுதாயத்தின் பல்வேறு வளர்ச்சி கட்டங்களில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தையும் சோஷலிச ஜனநாயகத்தை யும், நிறுவுதல்; சோஷலிச, கம்யூனிச நிர்மாண காலம் முழுவதிலும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலிருந்த தொழிலாளி வர்க்க-விவசாயிகள் நேச உறவைச் செயல்படுத்துதல்; தேசிய இன பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்; சோவியத் அரசின் கட்டுக் கோப்புக்குள் சோஷலிச தேசங்களின் கூட்டமைப்பை ஏற்படுத்து தல்; சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுவது சம்பந்தப் பட்ட பிரதான பிரச்சனைகளை நிர்ணயித்தல்.

சோஷலிச பொருளாதார வடிவங்களைத் தோற்றுவித்தல்; நாட்டைத் தொழில் மயமாக்குதல்; சோஷலிசத்திற்கான பொருளாதய தொழில் நுட்ப அடித்தளத்தை நிறுவுதல்; விவசா யத்தை கூட்டுடமையாக்குதல்; பெருமளவிற்கு எந்திரமயமாக்கப் பட்ட சோஷலிச வேளாண்மையை வளர்த்தல்; சுரண்டும் வர்க் கங்களையும் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையையும் ஒழித்துக் கட்டுதல்; முன்னுள் பின்தங்கிய மக்களை முதலாளித் துவக் கட்டத்துக்குள் செல்லாமலேயே சோஷலிசத்திற்கு மாறச் செய்தல்;

சோவியத் மக்களதும் உலக உழைப்பாளி மக்களதும் நலன் களுக்கு இணங்க நாடுகளிடையான உறவுகள் சம்பந்தமாகப் புதிய கோட்பாடுகளை உருவாக்குதல்; உலக சமாதானத்திற்குப் பாடுபடுதல், சோஷலிச அரசின் பாதுகாப்பு ஆற்றலைக் கட்டி வளர்த்தல்; சோஷலிச நாடுகள் சம்பந்தமாக நட்புறவு, பரஸ் பர உதவிக் கொள்கையைக் கடைப்பிடித்தல்; அவற்றின் ஒற்று மையை வலுப்படுத்துதல்; தேச விடுதலை இயக்கங்களையும் ஏகாதிபத்தியத்திற்கும் காலனியாதிக்கத்திற்கும் எதிராக இளம் தேசிய அரசுகளை ஆதரித்தல்; வேறுபட்ட சமூக அமைப்புக்களை உடைய நாடுகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைப் பின்பற்றுதல்;

சோஷலிச சித்தாந்தத்தையும், விஞ்ஞான மார்க்சிய-லெனி னிய உலகக் கண்ணோட்டத்தையும் உறுதியாக நிலைநாட்டுதல்; கலாசாரப் புரட்சியை நடத்துதல், சோவியத் விஞ்ஞானத்தை வளர்த்தல், உழைப்பாளி மக்களிடமிருந்து ஏராளமான புதிய அறிவுத் துறையினரைப் பயிற்றுவித்துத் தயாரித்தல், சோஷலிச சர்வதேசிய கம்யூனிஸ்டு உணர்விலும் சோவியத் தேசபக்த உணர் விலும் சோவியத் மக்களை வளர்த்து ஆளாக்குதல்.

சுரண்டும் முறையை வீழ்த்தும் சக்தியாக இருந்து கம்யூனிஸ்டு சமுதாயத்தைக் கட்டும் சக்தியாக கம்யூனிஸ்டுக் கட்சியை மாற்றுதல்; பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பில் அதன் தலைமைப் பாத்திரத்தைச் செயல்படுத்துதல்; மார்க்சியம்-லெனினியம் அடிப்படையில் கட்சியின் ஒற்றுமையைப் பலப்படுத்துதல்; உட் கட்சி ஜனநாயகத்தையும், கூட்டுத் தலைமை கோட்பாடுகளையும் கட்சி வாழ்க்கையின் லெனினிய நியதிகளையும் வளர்த்தல்; கட்சி ஊழியர்களுக்கும் எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் போதனை அளித்தல்; சித்தாந்த ரீதியில் அவர்களைப் பயிற்றுவித்தல்; மார்க்சிய-லெனினியம் பாட்டாளி வர்க்க சர்வதேசிய கோட்பாடுகளின் அடிப்படையில் சோஷலிச கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுடன் உறவுகளைப் பலப்படுத்துதல்;

இன்று கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையில் சோவியத்-யூனியன் ஒரு கம்யூனிஸ்டு சமுதாயத்தைக் கட்டி வருகிறது, மனித குலத்தைக் கம்யூனிசம் நோக்கி அழைத்துச் செல்கிறது; புதிய நிலைமைகளில் புரட்சி சித்தாந்தம் சம்பந்தமாக உண்மையான மார்க்சிய - லெனினிய அணுகு முறைக்கு கட்சி சிறந்த உதாரணங்களைக் காட்டியுள்ளது. புதிய பிரதான சித்தாந்த நிர்ணயிப்புக்களையும் விளக்கங்களையும் கொண்டு மார்க்சியம் - லெனினியத்தைச் செழுமைப்படுத்தியுள்ளது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி தனது வேலைத் திட்டத்திலும், காங்கிரசுகள், பிளீனம் கூட்டங்களின் முடிவுகளிலும், மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் 50வது ஆண்டுவிழா, லெனின் பிறந்த தின நூற்றாண்டு விழா சோவியத் யூனியன் நிறுவப்பட்டதன் 50வது ஆண்டுவிழா ஆகியவை சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளிலும் நாட்டில் சோஷலிச, கம்யூனிச நிர்மாணத்தின் அனுபவத்தையும் இன்றைய சர்வதேசப் புரட்சி இயக்கத்தின் அனுபவத்தையும் பொதுமைப்படுத்தி அதன் மூலம் மார்க்சியம்—லெனினியத்தை ஆக்க பூர்வமாக செழுமைப்படுத்துகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் காலத்தால் சோதிக்கப்பட்ட செயலூக்கமுள்ள படைப் பிரிவாகும். சித்தாந்தத் துறையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் பணி, அதன் கோட்பாடு ரீதியான லெனினியக் கொள்கைகள், சோஷலிசக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்காகவும், பூர்ஷுவா சித்தாந்தம், சீர்திருத்தவாதம் வலதுசாரி, இடதுசாரி சந்தர்ப்பவாதம், ஆகியவற்றுக்கு எதிராக மார்க்சிய - லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசிய அடிப்படையில் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கம் முழுவதன் ஒற்றுமைக்

காகவுமான, அதன் உறுதியான போராட்டம் — ஆகிய இவற்றை சோதர மார்ச்சிய - லெனினியக் கட்சிகள் எப்போதும் அங்கீகரித்து ஆதரித்து வந்துள்ளன. லெனினியக் கோட்பாடுகளை நிறை வேற்றுவதிலும், புரட்சிப் போராட்டத்தை நடத்துவதிலும், சோஷலிசத்தைபும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதிலும், ஒவ் வொரு புதிய வரலாற்றுக் காலகட்டத்தின் உரிமைகளுக்கு இணங்க கட்சியை வளர்ப்பதிலும் சோவியத் யூனியன கம்யூ னிஸ்டுக் கட்சி பெற்றுள்ள மகத்தான அனுபவம் தற்போது சர்வதேச புரட்சி இயக்கம் முழுவதற்கும் கிட்டியுள்ளது. மார்க்சி யம் - லெனினியம் வளர்வதற்கு இந்த அனுபவம் இன்றியமை யாதது.

சோஷலிச உலக அமைப்பைத் தொடர்ந்து வளர்த்து அதை மேலும் வலுப்படுத்தும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பணியை நிறைவேற்றுவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சி எல்லா முயற்சகளையும் மேற்கொள்ளுகிறது. சோவியத் யூனியனில் கம்யூனிஸத்தைக் கட்டுவதையும் அதன் தற்காப்பு ஆற்றலை மேம்படுத்துவதையும், சோவியத் மக்களின் ஒரு மாபெரும் சர்வதேசக் கடமையாக — உலக சோஷலிச அமைப்பின் நலன்களுக்கும் சர்வதேசப் புரட்சி இயக்கத்தின் நலன்களுக்கும் இசைந்த ஒரு கடமையாக அது கருது கிறது. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி சமாதானப் பதாகையை, சகல தேசங்களது மக்களின் நட்புறவு என்னும் பதாகையை உயர்த்திப் பிடிக்கும் முன்னணி வீரனுக விளங்குகிறது.

கட்சி நிறுவனக் கோட்பாடுகள் ஜனநாயக மத்தியத் துவமே கட்சியின் நிறுவனக் கட்டுக்கோப்புக்கும், அரசியல் ஸ்தாபனம் என்ற முறையில் அதன் நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டும் அடிப்படைக் கோட்பாடாகும். இதன்படி எல்லாக் கட்சி அமைப்புகளும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கட்சி அமைப்புகள் தமது கட்சி நிறுவனங்களுக்கும் உயர் அமைப் புகளுக்கும் அவ்வப்போது அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். கட்சிக் கட்டுப்பாடு கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கப்பட வேண் டும். பெரும்பான்மையினர் முடிவிற்கு சிறுபான்மையினர் கட்டுப் படவேண்டும். உயர்கட்சி அமைப்புகளின் முடிவுகளைக் கீழ்க்கட்சி அமைப்புகள் ஏற்று செயல்படுத்த வேண்டும். ஜனநாயகத்தையும் மத்தியத்துவத்தையும் அடிப்படையில் இணைப்பதையே ஜன நாயக மத்தியத்துவம் குறிக்கிறது. கட்சியின் விருப்பத்தையும் அதன் தனித்தனி யூனிட்டுகளின் விருப்பத்தையும் நிர்ணயிப் பதற்கு ஜனநாயகம் இன்றியமையாதது. அதே சமயம் செய லொற்றுமையை உறுதிப்படுத்தவும் கட்சி முடிவுகளை நிறை வேற்றவும் மத்தியத்துவமும் கட்டுப்பாடும் அவசியம்.

ஜனநாயகம் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஓர் உள்ளார்ந்த அம்சமாகும். ஒரு கட்சி என்பது சுயவிருப்ப அடிப்படையில் அமைந்த அரசியல் நிறுவனம். ஒரே வித அரசியல் கருத்துடையவர்கள் ஒன்றுபடும் நிறுவனம். எனவே, கட்சி உறுப்பினர்களிடையேயான உறவுகள் பொதுக் கடமைகள், பொதுப் பொறுப்புகளும் கொண்ட சமத்துவ மக்களிடையே நிலவும் உறவுகளாக இருப்பது அவசியம்.

உட்கட்சி ஜனநாயகம் கட்சி ரீதியில் நிர்ணயித்துத் தந்துள்ள பின்கண்ட கோட்பாடுகளால் உத்தரவாதம் செய்யப் பட்டுள்ளது. எல்லாக் கட்சி அமைப்புகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவை. கட்சித் தலைமை, கூட்டுத் தலைமை; கட்சி தலைமை அமைப்புகள், சாதாரண கட்சி உறுப்பினர்களுக்குப் பொறுப்புக் கூறக் கடமைப் பட்டவை. கட்சி வாழ்க்கை பகிரங்கமானது. எல்லாக் கட்சி உறுப்பினர்களும் சமத்துவ உரிமைகளை அனுபவிக்கின்றனர். சமத்துவப் பொறுப்புகளைப் பெற்றுள்ளனர்.

எல்லாக் கட்சி நிறுவனங்களும், ஒரே மாதிரியான அரசியல், ஸ்தாபனக் கோட்பாடுகளினுல், ஒரே விதமான வேலைத் திட்டத்தினுல், கட்சி விதிகளால் வழிகாட்டப்படுவதும், கட்சிக் கட்டுப்பாட்டிற்கு ஒரே விதமாக உட்படுவதுமே மத்தியத்துவத்தின் அடிப்படை சாரம்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மிக உயர்ந்த அமைப்பு கட்சிக் காங்கிரஸ்- காங்கிரஸ்கள் கூடுவதற்கு இடைப்பட்ட காலத்தில் மத்தியக் கமிட்டி. எல்லாக் கட்சி நிறுவனங்களும் பிரதேச - உற்பத்திக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன. உயர் கட்சி அமைப்புகளின் உறவுகளும் ஆணைகளும் கீழ்க்கட்சி அமைப்புகளைக் கட்டுப்படுத்தும். கட்சி நிறுவனங்களிலுள்ள சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் முடிவுக்குக் கட்டுப்பட்டுள்ளனர். ஸ்தலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கு எல்லாக் கட்சி நிறுவனங்களுக்கும் சுதந்திரம் உண்டு; ஆனுல் இந்தத் தீர்வுகள் கட்சியின் கொள்கைகளுக்குப் புறம்பானவையாக இருக்கக் கூடாது. அதே சமயம் ஒரு தனிப்பட்ட கட்சி நிறுவனத்திலோ ஒட்டுமொத்தமாகக் கட்சிக்குள்ளோ அபிப்பிராய பேதத்திற்குரிய பிரச்சினைகளைப்பற்றி விவாதங்கள் நடத்த கட்சி விதிகள் அனுமதிக்கின்றன. ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் விமர்சன சுதந்திரத்தையும் தனது அபிப்பிராயத்தை வெளியிடும் சுதந்திரத்தையும் கட்சி உத்தரவாதம் செய்கிறது.

இவ்வாறு, ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியினதும், அதன் எல்லா

ஸ்தல நிறுவனங்களதும் நடவடிக்கைகளைப் பொறுத்த வரையிலும் உண்மையான ஜனநாயகத்தையும் மத்தியத்துவப்படுத்தப்பட்ட தலைமையையும் ஒரே விதமான கட்சிக் கட்டுப்பாட்டையும் மிகச் சிறந்த முறையில் இணைப்பதற்கு வகை செய்கின்றன.

சமூகத்தினது ஸ்தாபன அரசியல் வரலாற்றின் ஆய்வின் அடிப் படையிலும், புரட்சி நிறுவனங்களது அனுபவத்தின் அடிப்படையிலும், மார்க்ஸ் எங்கெல்சினது நூல்களின் அடிப்படையிலும் லெனின் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளை வகுத்தளித்தார்.

மத்தியத்துவக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பது கட்சியின் ஒற்றுமைக்கு ஒரு நம்பகமான உத்தரவாதமாகும். இதனை விளக்கி லெனின் இவ்வாறு சொன்னார்: ஒரு பிரச்சினையை விவாதிக்கும்போது பலரும் பல்வேறு கருத்துகளை வெளியிடலாம், பிறகு இவற்றில் பெரும்பாலோரின் அபிப்பிராயம் என்ன என்பதை நிர்ணயிக்க வேண்டும். இதனை ஒரு முடிவாக உருவாக்க வேண்டும்; இந்த முடிவை எல்லோரும் கண்டிப்பான முறையில் நிறைவேற்ற வேண்டும்.

ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டை மேலும் வளர்ப் பதற்கும், அதனைக் கட்சி நடவடிக்கைகளில் ஆக்க ரீதியாக பயன்படுத்துவதற்கும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. 24வது கட்சிக் காங்கிரசுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி சமர்ப் பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது: அராஜகமான 'கட்டுப்பாடின்மையை ஜனநாயகம் என்று கூறும் கூற்றும், கம்யூ னிஸ்டுகளின் முன்முயற்சியையும், நடவடிக்கைகளையும் அதிகரிப் பதற்கு இடையூறாக இருக்கும் அதிகார வர்க்க மத்தியத்துவம் ஆகிய இரண்டுமே மார்க்சிய - லெனினியக் கட்சிக்கு ஊறு விளைவிக்கும் அடிப்படையாகும்.''

**கட்சிக் கட்டுக்கோப்பு.** சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி பிரதேச-உற்பத்தி கோட்பாட்டின் அடிப்படையில் கட்டப்பட் டுள்ளது. கம்யூனிஸ்டுகள் வேலை செய்யும் இடங்களில், அதாவது அரசாங்க, பொது அமைப்புகள், தொழில நிலையங்கள், விவசாய நிலையங்கள் முதலியவற்றில் ஆதார நிறுவனங்கள் அமைக்கப்படு கின்றன. ஆதார நிறுவனங்கள் பிரதேசக் கோட்பாட்டின் அடிப் படையில் கட்சி நிறுவனங்களில் ஒன்றிணைக்கப்படுகின்றன.

ஆதார நிறுவனங்களே கட்சிக் கட்டுக்கோப்பின் அடித்தளம். அவை மக்கள் மத்தியில், சமூகத்தின் எல்லாப் பொருளாயத, கலாசார செலவமும் படைக்கப்படும் இடத்தில் பணி புரிகின்றன.

இந்த நிறுவனங்களே கட்சியின் பிரதான உந்து சக்தி, அதன் வலிமைக்கு ஆதாரம்.

கட்சி விதிகளுக்கும் கட்சி வாழ்க்கை நியதிகளுக்கும் இணங்கச் செயல்படும் ஒரு சுதந்திரமான ஆதார நிறுவனத்தை அமைக்க குறைந்த பட்சம் மூன்று கட்சி உறுப்பினர்களாவது வேண்டும். ஒரு தொழில் நிலையத்திலுள்ள கட்சி நிறுவனத்தில் சராசரியாக 89 கட்சி உறுப்பினர்கள், நிர்மாணத் தலத்திலுள்ள கட்சி நிறுவனத்தில் 39 உறுப்பினர்களும், அரசாங்கப் பண்ணையிலுள்ள கட்சி நிறுவனத்தில் 69 உறுப்பினர்களும், கூட்டுப் பண்ணையிலுள்ள கட்சி நிறுவனத்தில் 49 உறுப்பினர்களும் உள்ளனர்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியில் 3 லட்சத்து 78 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆதாரக் கட்சி நிறுவனங்கள் இருக்கின்றன. ஆதாரக் கட்சி நிறுவனங்களின் பங்கும் முக்கியத்துவமும் இடையறாது அதிகரித்து வருகின்றன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி 24வது காங்கிரசின் முடிவுகளில் இது பிரதிபலிக்கக் காணலாம். ஆதாரக் கட்சி நிறுவனங்களின் பங்கையும், தொழில் நிலையங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் பணியில் அவற்றுக்குள்ள செல்வாக்கையும் பெருக்குவதற்கு காங்கிரஸ் சில நடவடிக்கைகளை வகுத்துள்ளது.

ஆதாரக் கட்சி நிறுவனத்தின் பொதுச் சபையே அதன் மிக உயர்ந்த அமைப்பு. 15 கட்சி உறுப்பினர்களுக்கும் குறைவாக கொண்ட ஒரு கட்சி நிறுவனங்கள் தமது அன்றாட விவகாரங்களை நிர்வகிப்பதற்கு ஒரு காரியதரிசியையும் அவரது உதவியாளரையும் தேர்ந்தெடுக்கின்றன. அவர்கள் ஒன்றுகூடி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுவதற்கு இது எளிதாக உள்ளது. 15 கட்சி உறுப்பினர்களுக்கும் கூடுதலாகக் கொண்ட நிறுவனங்கள் ஒரு நிர்வாகக் குழுவையும் 300 கட்சி உறுப்பினர்களுக்கு அதிகமாகக் கொண்ட நிறுவனங்கள் கட்சிக் கமிட்டியையும் தேர்ந்தெடுக்கின்றன. ஒரு கட்சி நிர்வாகக் குழுவில் அல்லது கட்சிக் கமிட்டியில் இத்தனை உறுப்பினர்கள்தான் இருக்க வேண்டும் என்று கட்சி விதிகள் நிர்ணயித்துக் கூறவில்லை. இதனை அந்தந்த நிறுவனமே முடிவு செய்து கொள்கிறது. எனினும் பொதுவாகக் கட்சி நிர்வாகக் குழுவில் ஐந்து முதல் ஒன்பது உறுப்பினர்களும், கட்சிக் கமிட்டியில் பதின்மூன்று முதல் பதினைந்து உறுப்பினர்களும் இருக்கின்றனர் என்பதை நடைமுறை அனுபவம் காட்டுகிறது. கட்சி நிர்வாகக் கமிட்டியும் கட்சிக் கமிட்டிகளும் தத்தமது நிறுவனங்களின் அன்றாட பணிகளுக்கு வழிகாட்டுகின்றன. மிக முக்கியமான பிரச்சினைகள்

பற்றி விவாதிப்பதற்காக அவ்வப்போது எல்லாக் கட்சி உறுப்பினர்களேயும் கொண்ட பொதுச் சபைக் கூட்டத்தைக்கூட்டுகிறது.

நிர்வாகக் குழு வருடத்திற்கு ஒரு முறையும், கமிட்டி இரண்டு அல்லது மூன்று வருடத்திற்கு ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆதார நிறுவனங்களே இணைக்கும் வட்டார நகர, பிராந்திய, பிரதேசக் கட்சிக் கமிட்டிகளுக்கும் இது பொருந்தும். இக் கமிட்டிகள் அந்தந்த கட்சி மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. யூனியன் குடியரசுகளது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் காங்கிரஸ்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட்டப்படுகின்றன. மத்தியக் கமிட்டிகள், மத்திய தணிக்கைக் கமிஷன்கள் போன்ற உயர் அமைப்புகளேத் இந்தக் காங்கிரஸ்கள் தேர்ந்தெடுக்கின்றன.

எல்லாக் கட்சி அமைப்புகளும் — ஆதார நிறுவனங்கள் முதல் மத்திய தணிக்கைக் கமிஷன் வரை — இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அதன் இயைபு ஓர் ஒழுங்கு முறைப்படி புதுப்பிக்கப்படுகிறது. அதன் தொடர்ந்த தலைமைக்கு உத்தரவாதம் செய்யப்படுகிறது.

கட்சிக் காங்கிரஸே சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மிக உயர்ந்த அமைப்பு. குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இது கூட்டப்படுகிறது. மத்தியக் கமிட்டியின் அறிக்கையையும், மத்திய தணிக்கைக் கமிஷனின் அறிக்கையையும் ஏனைய மத்திய அமைப்புகளின் அறிக்கைகளேயும் காங்கிரஸ் விவாதித்து ஏற்கிறது; கட்சியின் வேலேத் திட்டம், விதிகள், ஆகியவற்றை ஏற்கவும் திருத்தவும் செய்கிறது; உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்களில் கட்சியின் பொது வழியை நிர்ணயிக்கிறது; கம்யூனிச நிர்மாணம் பற்றிய முக்கியப் பிரச்சினைகளேப் பரிசீலித்து முடிவுகள் எடுக்கிறது; மத்தியக் கமிட்டியையும் மத்தியத் தணிக்கை கமிஷனேயும் தேர்ந்தெடுக்கிறது.. கட்சியின் மத்தியக் கமிட்டியிலும் மத்தியத் தணிக்கைக் கமிஷனிலும் எத்தனேஉறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பதை காங்கிரஸ் நிர்ணயிக்கிறது. 1971 மார்ச்சில் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24வது காங்கிரஸ் மத்தியக் கமிட்டிக்கு 241 உறுப்பினர்களேயும், 155 மாற்று உறுப்பினர்களேயும், மத்தியத் தணிக்கைக் கமிஷனுக்கு 81 உறுப்பினர்களேயும் தேர்ந்தெடுத்தது. காங்கிரஸ் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில் மத்தியக் கமிட்டியே எல்லா கட்சி நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டுகிறது. தன்னேத் தேர்ந்தெடுத்த காங்கிரஸ் வகுத்தளித்த கொள்கைகளேயும் நடவடிக்கைகளேயும் நிறைவேற்றுகிறது.

எல்லா மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும், மாற்று உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் மத்தியக் கமிட்டி பிளீனம் கூட்டங்கள் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்றன.

மத்தியக் கமிட்டி பிளீனம் கூட்டங்கள் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில் கட்சி நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவதற்கு அரசியல் குழுவையும், அன்றாடக் கட்சிப் பணிக்கு வழிகாட்டுவதற்கு ,முக்கியமாக ஊழியர்களைப் பொறுக்கி எடுப்பதற்கு, கட்சியின் முடிவுகள்சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைச் சரிபார்ப்பதற்கு ஒரு செயற்குழுவையும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக்கமிட்டி தேர்ந்தெடுக்கிறது. மத்தியக் கமிட்டி தனது பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கிறது; மத்தியக் கமிட்டியின் கட்சிக் கண்காணிப்புக் கமிட்டியை ஏற்படுத்துகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி அரசியல் குழு உறுப்பினர்கள் வருமாறு: எல்.ஐ. பிரஷ்னேவ், ஒய்.வி. ஆந்தரபோவ், எ.எ. கிரெச்கோ, வி.வி. கிரிஷின், எ.எ. குரோமிகோ, எ.பி. கிரிலெங்கோ, எ.என். கோசிகின், எப்.டி. குலாகோவ், டி.ஏ. குனயேவ், கே.டி. மஜுரோவ், எ.ஜே. பெல்சே, என்.வி. பொட்கோர்னி, டி.எஸ். போல்யான்ஸ்கி எம்.எ. சுஸ்லாவ், எ.என். ஷெலிபின், வி.வி. செச்சர்பித்ஸ்கி.

அரசியல் குழுவின் மாற்று உறுப்பினர்கள் வருமாறு: பி.என். தெமிசேவ், பி.எம். மஷரோவ், பி.என். பொனமரேவ், எஸ்எச்.ஆர். ரஷிதோவ், ஜி.வி. ரொமனேவ், எம்.எஸ். சாலமந்த்செவ், டி.எம். உஸ்திேனவ்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் எல்.ஐ. பிரெஷ்னேவ்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிச் செயலாளர்கள்: பி.என். தெமிசெவ், வி.ஐ. தோல்கிக், ஐ.வி. கே.எப். கதுஷெவ், எ.பி. கிரிலெங்கோ, எப்.டி. குலாகோவ், கபிதனேவ், பி.என். பொனமரேவ், எம்.எ. சுஸ்லாவ், டி.எப். உஸ்திேனவ்.

கட்சிக் கண்காணிப்புக் கமிட்டியின் தலைவர் ஏ.ஜே. பெல்சே

தணிக்கைக் கமிஷன் தலைவர் ஜி.எஃப். சிசோவ்.

**சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் :** சோஷலிசத்தின் பரிபூரண வெற்றிக்குப் பிறகு சோவியத் யூனியனில் பகைமை வர்க்கங்களோ, சோஷலிசத்தை எதிர்க்கும் சமூகக் குழுக்களோ ஏதுமில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகார சோவியத் அரசு அனைத்து மக்களின் அரசாக, எல்லா வர்க்கங் களதும் சமூகக் குழுக்களதும் மக்கள் அனைவரதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாதுகாக்கும் அரசாகப் படிப்படியாக வளர்ந்துள்ளது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியில் 1 கோடி 48 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் முன்னணி தொழிலாளிகளும், விவசாயிகளும், அறிவுத்துறையினரும் ஆவர். வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்துக்கே உரியதும், எல்லா வர்க்கங்களதும் எல்லா ஜனப் பகுதியினரதும், எல்லாத் தலை முறையினரதும் ஒரே மாதிரியான நலன்களின் அடிப்படையில் அமைந்துள்ளதுமான மக்களின், உறுதியான, சமூக, அரசியல், சித்தாந்த ஒற்றுமை கட்சியின் குணரீதியான இயைபை மேலும் மேம்படுத்துவதற்கான முன்தேவைகளை வழங்கியுள்ளது; கட்சியின் வளர்ச்சிக்கான சமூக அடித்தளத்தை பெரிய அளவிற்கு விரிவு படுத்தியுள்ளது.

அதே சமயம் தொழிலாளி வர்க்கம் கட்சியின் ஆதார பலமாக, இன்னும் இருந்து வருகிறது. முன்போலவே அது சமுதாயத்தின் பிரதான உற்பத்தி சக்தியாகவும், சமுதாயத்தை கம்யூனிஸ ரீதியில் புனரமைப்பதற்காக மிக உறுதியான, முன்பின் முரணற்ற வீரனாகவும் விளங்குகிறது.

புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் உறுப்பினர்களில் தொழிலாளர்களின் வீதாசாரம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. 1966ல் புதிய கட்சி உறுப்பினர்களில் 45.4 சதவீதத் தினர் தொழிலாளர்களாக இருந்தனர். 1970ல் இது 55.4 சதவீதமாயும் 1972ல் 57.3 சதவீதமாயும் உயர்ந்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களில் தொழிலாளர்கள் இன்று 40.7 சதவீதமாக உள்ளனர். அவர் களின் எண்ணிக்கை 60 லட்சத்தைத் தாண்டியுள்ளது. கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அரசியல் முதிர்ச்சியும், உயர்ந்த பொதுக் கல்வித் தரமும், தொழில் பயிற்சியும், சமூக அரசியல் பணியில் அனுபவமுமிக்கவர்கள்.

கட்சியில் 22 லட்சத்துக்கு மேற்பட்ட கூட்டுப் பண்ணை விவசாயிகள் உள்ளனர். இது மொத்த உறுப்பினர் தொகையில்

14.7 சதவீதம், இன்று கட்சியில் சேரும் பெரும்பாலான கூட்டுப் பண்ணை விவசாயிகள் டிராக்டர் டிரைவர்களும், கம்பைன் ஆபரேட்டர்களும், இதர எந்திர ஆபரேட்டர்களுமாவர்.

சம்பளம் வாங்கும் 66 லட்சம் ஊழியர்களும், பல்வேறு அறிவுத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்களும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினர்களாக உள்ளனர். இது மொத்த கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 44.6 சதவீதமாகிறது. அதே சமயம் அறிவுத் துறையினர்—அதிலும் முக்கியமாக தொழில் நுட்ப வல்லுநர்களும், விஞ்ஞானிகளும் – கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவதில் பெரும் பங்காற்றுவதால் மேன்மேலும் அதிக அளவில் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து வருகின்றனர்.

கம்யூனிஸ்டுக் கட்சி இளம் மக்களை, குறிப்பாக இளைஞர்களின் முன்னேற்றமடைந்த படைப் பிரிவான இளம் கமயூனிஸ்டுக் கழகததைச் சேர்ந்தவர்களைத் தனது அணியில் சேர்த்துக் கொள்வதறகு எப்போதுமே ஆர்வம் காட்டி வந்துள்ளது. இதைத் தலைமுறைகளது இணைப்பின், ஒற்றுமையின் வெளியீடாக, கட்சியினது புரட்சி உணர்வின் வெளியீடாக, அதன் போராட்ட, உழைப்புப் பாரம்பரியங்கள் தொடர்ச்சியின் வெளியீடாகக் கட்சி கருதுகிறது. கட்சியில் அனுமதிக்கப்பட்ட இளம் கம்யூனிஸ்டுக் கழக உறுப்பினர்களின் — 23 வயதுக்குட்பட்ட இளம் மக்கள் — வீதாசாரம் 1966ல் 40.1 சதவீதமாக இருந்தது 1972ல் 63 சதவீதமாக அதிகரித்தது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியில் 34 லட்சம் பெண் உறுப்பினர்கள் உள்ளனர். இது மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 23 சதவீதமாகும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி சோவியத் யூனியன் மக்களது உறுதியான நட்புறவின், ஒற்றுமையின், ஒருமைப்பாட்டின் வடிவமாக விளஙகுகிறது. அதன் உறுப்பினர்களில் சோவியத் யூனியனில் வாழும் எல்லா மக்களதும் தேசிய இனங்களதும் பிரதிநிதிகள் உள்ளனர்.

கட்சியின் இடையறு வளர்ச்சி கட்சிக்கும் உழைக்கும் வெகுஜனங்களுக்கும இடையே உளள உறுதியான உறவுகளைப் பிரதிபலிக்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி விதிகளின்படி, கட்சி வேலைத்திட்டத்தையும் விதிகளையும் ஏற்றுக்கொள்ளும், கம்யூனிச நிர்மாணத்தில் முன்னின்று பங்கெடுத்துக் கொள்ளும், ஒரு கட்சி நிறுவனத்தில் பணியாற்றும், கட்சி முடிவுகளுக்குக் கீழ்ப்

படிந்து நடக்கும், கட்சி சந்தாக்களை ஒழுங்காகச் செலுத்தும் எந்த சோவியத் பிரஜையும் கட்சி உறுப்பினராகலாம்.

கட்சியில் உறுப்பினராவதற்கு 18வயது கடந்திருக்க வேண்டும். ஓராண்டுக் காலத்தைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்த உறுப்பினர்களிடையேயிருந்து புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் கட்சிக் கார்டும், பரீட்சார்த்த உறுப்பினருக்குப் பரீட்சார்த்தக் கார்டும் வழங்கப்படுகின்றது.

கட்சிக் கார்டுகள் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்ததும், 24வது கட்சிக் காங்கிரஸின் முடிவின்படி சோவியத் யூனியன் கமயூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி 1973 மார்ச் 1இல் அவற்றைப் புதுப்பிக்கும் பணியைத் தொடங்கிற்று. பல ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்கப்படி கட்சிக் கார்டு எண். 1 வி.இ. லெனினது பெயருக்கு வழங்கப்படுகிறது. இந்தக் கார்டில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி பொதுச் செயலாளர் எல்.ஐ. பிரெஷ்னேவ் கையொப்பமிட்டார்.

1972ம் வருட மே மாத பிளீனம் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டதுபோல், கட்சிக் கார்டுகளைப் புதுப்பிப்பது, அதாவது புதிய கார்டுகளை வழங்குவது வெறும் சம்பிரதாய பூர்வமான பணியல்ல. இந்த முக்கியமான அரசியல் இயக்கத்தின் நோக்கம் பிரதானமாக கட்சி அணிகளைப் பலப்படுத்துவதும், ஒவ்வொரு கட்சி உறுப்பினரது முன்முயற்சியை ஊக்குவிப்பதும், பொறுப்பை உயர்த்துவதும், 24வது கட்சி காங்கிரஸ் வகுத்தளித்த நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதில் கம்யூனிஸ்டுகளுக்குரிய முன்னணிப் பங்கை அதிகப்படுத்துவதுமே ஆகும்.

கட்சிக் கார்டுகளைப் புதுப்பிக்கும் தற்போதைய இயக்கத்திற்கும் ஒரு சமயம் கட்சியிலிருந்து அந்நிய நபர்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட களையெடுப்பு இயக்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. சோவியத் யூனியனில் சோஷலிசம் வெற்றியடைந்து சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு விட்ட பிறகு களையெடுப்பு இயக்கத்திற்கான காரணங்கள் மறைந்தொழிந்து விட்டன. அதே சமயம், கட்சி விதிகளை மீறுபவர்களும் கட்சிக்கு களங்கம் விளைவிப்பவர்களும் தனது அணிகளில் இருப்பதை கட்சி சகித்துக் கொண்டிருக்கும் என்று இதற்குப் பொருள் அல்ல.

சோவியத் சமுதாயத்தின் தலைவன் என்ற முறையில் கட்சியின் பங்கு அதிகரித்துச் செல்லும்போது, ஒவ்வொரு கட்சி

உறுப்பினரது கடமைகளும் அதிகரித்துச் செல்கின்றன. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தனது வேலையில் சிறந்தவனுக, பொதுக் கடமையை நிறைவேற்றுவதில் மற்றவர்களுக்கு உதாரணமானவனுக, கம்யூனிச அறநெறிக்கும் ஒழுக்க நெறிக்கும் ஒரு முன் மாதிரியானவனுக விளங்க வேண்டும்.

**சோவியத் சமுதாயத்தின் வழிகாட்டும் சக்தி.** சோஷலிச சமுதாயம் முன்னேறும்போது, சமுதாய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தின் மீதும் கம்யூனிஸ்டுக் கட்சியின் சித்தாந்த, அரசியல், நிறுவன செல்வாக்கு அதிகரித்துச் செல்லுமே தவிர, குறையாது என்பதை சோவியத் யூனியனில் சோஷலிச, கம்யூனிச நிர்மாண அனுபவம் காட்டுகிறது. இந்த எதார்த்தப் பொதுவிதி சோவியத் யூனியனில் நிலவுபவை போன்ற நிலைமைகளில் செயல்படுவது மட்டுமின்றி, பொதுவாக எல்லா சோஷலிச சமுதாயங்களுக்கும் பொருந்தும்.

தனிஉடைமை, தனியார் நிறுவனங்கள் அடிப்படையில் அமைந்த ஒரு சமுதாயத்துக்கு மாருக புதிய சோஷலிச அமைப்பு-சோஷலிசமும் கம்யூனிசமும் — மக்களின் உணர்வு பூர்வமான காரிய நோக்கமுள்ள முயற்சிகளின் மூலமே தோன்றி வளர்வது, அது தாளுகவே, தோன்றி வளர்வதில்லை. ஆனல் பழைய அமைப்பை விட எத்தனையோ மகத்தான அனுகூலங்களைப் பெற்றிருந்த போதிலும், கம்யூனிஸ்டுக் கட்சி போன்ற இயக்கு சக்தியின் சரியான வழிகாட்டுதலில்லாமல், மக்களால் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் எய்த முடியாது. சமூக வளர்ச்சி விதிகளைப் பற்றிய நல்ல ஞானமுள்ள, குறிக்கோள் ஒற்றுமையால் நன்கு பின்னிப் பிணைந்த, லட்சியங்களை அடைவதற்கான வழிமுறைகளை பற்றி தெளிந்த சிந்தனையுள்ள லெனினிய ஸ்தாபனக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த ஒரு கட்சியால்தான் லட்சியங்களை வெற்றிகரமாக ஈடேற்றுவதற்கு சமூகத்தின் எல்லா சக்திகளையும் அணி திரட்ட முடியும்; முன்னேற்றத்திற்கான பிரதான திசைவழிகளைப் பிழையின்றி சுட்டிக்காட்ட முடியும்; புதிய சமுதாயத்தைக் கட்டும் மக்களின் முயற்சிக்குக் காரிய நோக்குள்ள, விஞ்ஞான ரீதியான, முறைமை ரீதியான தன்மையை அளிக்க முடியும்.

ஒரு முதிர்ச்சியடைந்த, முன்னேற்றம் அடைந்த சோஷலிச சமுதாயம் சோவியத் யூனியனில் கட்டப்பட்டுள்ளது. ஒரு தகுதி வாய்ந்த அரசாங்கத்தையும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் கலாசார வளர்ச்சிக்கும் திட்டமிடும் ஆற்றல் படைத்த ஆராய்ச்சி அமைப்புகளையும் நாடு பெற்றுள்ளது. உறுப்பினர்களின் குறிப்பிட்ட நலன்களைப் பாதுகாக்கும் பலமான பொது நிறுவனங்களையும் அது பெற்றுள்ளது. நமது தேசிய பிராந்தியங்கள், குடியரசுகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்

படுத்தும் ஸ்தல அரசாங்க அமைப்புகளை அது பெற்றுள்ளது. இந்த சக்திகள் எவ்வளவுக்கு அதிக செயலூக்கமுடனுள்ளனவோ அவ்வளவுக்கு அவற்றின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதும், தேச வியாபகமான நலன்களையும், ஸ்தல நலன்களையும், பொது நலன்களையும் தனி நலன்களையும் தக்க முறையில் இணைப்பதும் அவசியம்.

கட்சி சமூக ஒழுங்கமைப்பை மேற்கொள்ளுவதன் நோக்கம் சமூக அமைப்பின் எல்லாப் பகுதிகளும் லட்சிய நோக்குடன், நன்கு ஒருமுகப்படுத்தப்பட்ட முறையில், ஒரே சீராக வளர்ச்சியுறுவதற்கு வகை செய்வதே ஆகும். கம்யூனிஸ்டுக் கட்சிதான், மக்கள் அனைவரின் முன்னணிப் படையாகும். எல்லாத் தேசிய இனங்களையும், எல்லாத் துறைகளையும், எல்லாத் தொழில்களையும் சேர்ந்த மக்களின் மிகச் சிறந்த, மிகவும் அரசியல் உணர்வுள்ள பிரதிநிதிகள் கட்சியில் இடம் பெற்றுள்ளனர். கம்யூனிஸ்டுக் கட்சியின் எல்லா வர்க்கங்களின், எல்லாச் சமூகக் குழுக்களின், எல்லாத் தேசிய இனங்களின் எல்லாத் தலைமுறைகளின் நலன்களையும் பிரத்தியேக இயல்புகளையும் மனத்திற்கொண்டு தனது கொள்கையில் அவற்றுக்குப் போதிய பிரநிதித்துவம் அளிக்க வல்லதாகும்.

இதனால்தான் கம்யூனிஸ்டுக் கட்சி சமூக வளர்ச்சியின் வழிகாட்டும் சக்தியாக, இயக்கு சக்தியாக விளங்குகிறது. தனது ஸ்தல நிறுவனங்களின் மூலமும், அரசாங்க அமைப்புகளிலும் வெகுஜன பொது நிறுவனங்களிலும் உள்ள கம்யூனிஸ்டுகள் மூலமும் கட்சி சமூகத்திற்கு அரசியல் வழிகாட்டுதலை வழங்குகிறது. அரசியல் வழிகாட்டுதல் என்பதற்கு கட்சி வெறுமனே உத்தரவுகள் பிறப்பிக்கும், எல்லோரும் அதனை நிறைவேற்றுவார்கள் என்று பொருளல்ல. அரசாங்க அமைப்புகள், இதர பொது நிறுவனங்கள் சம்பந்தமாக கட்சிக்கும் கட்சி நிறுவனங்களுக்கும் நிர்வாக அதிகாரங்கள் ஏதும் இல்லை. தக்க முறையில் எடுத்துக் கூறி மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்யும் முறையும், கம்யூனிஸ்டுகள் எங்கு வேலை செய்தபோதிலும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பதும் ஆகிய இவற்றின் அடிப்படையில் தான் சமுதாயத்திற்குக் கட்சியின் வழிகாட்டுதல் அமைந்துள்ளது.

சோஷலிச சமுதாயத்தில் இடையறாது வளர்ந்துவரும் கட்சியின் செல்வாக்கும், பங்கும் ஓர் எதார்த்தப் போக்கைப் பிரதிபலிக்கின்றன; சமுதாயம் மேற்கொள்ள வேண்டியுள்ள பரந்த, சிக்கலான பணிகளிலிருந்தே இந்த எதார்த்தப் போக்கு எழுகிறது. இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு உயர்ந்த தரமான அரசியல் வழிகாட்டுதலும் ஸ்தாபனமும் வேண்டும். எனினும் இவ்வாறு கூறுவதால், கட்சி அரசு நிர்வாகத்தின் அலுவல்களை ஏற்கிறது என்றோ,

அரசாங்க, பொது நிறுவனங்களின் சார்பில், செயல்படுகிறது அல்லது அவற்றைக் கண்காணிக்கிறது என்றோ அர்த்தமல்ல. அதற்கு மாறாக, கட்சி கடைப்பிடிக்கும் கொள்கை இநத நிறுவனங்களின் முன்முயற்சியையும் சுதந்திரத்தையும் முடிந்த எல்லா வழிகளிலும் வளர்ப்பதையும், கூடிய மட்டும் எல்லாப் பொதுஜன நிறுவனங்களையும் தூண்டி ஊக்குவிப்பதையும், சோவியத் அரசின் வாழ்விலும, சோவியத் சமுதாயத்தின் அரசியல் ஒழுங்கமைப்பிலும் அவை மேன்மேலும் முக்கிய பங்காற்றும்படி பார்த்துக் கொள்வதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

சோவியத யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி சோவியத் அரசியல் அமைப்பை முழு நிறைவடையச செய்வதற்காக காரியார்த்தமான, விரிவான பணியினை மேற்கொள்கின்றது. சோஷலிச ஜனநாயகத்தையும் மெய்யான ஜனநாயக ஆட்சி அமைப்புகளாக உள்ள உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகள், தொழிற் சங்கங்கள், காம்சொமால் மற்றும் இதர பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்கையும் மேலும் வளர்ப்பதில் விசேட கவனம செலுத்துகின்றது.

தலைவன் என்ற முறையில் கட்சியின் வெற்றி அதன் உறுப்பினர்களது தரத்தையும், ஏற்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதில் எல்லாக் கம்யூனிஸ்டுகளும் கட்டுப்பாடாகப் பங்கெடுத்துக் கொள்வதையும் முக்கியமாக பொறுத்துள்ளது. இதல்லாமல், கட்சிக் கட்டுப்பாட்டின் தரம், சித்தாந்த போதனை, கம்யூனிஸ்டுகளைக் கோட்பாட்டு ரீதியாகப் பயிற்றுவித்தல், ஜனநாயக மத்தியத்துவத்தை உறுதியாக பின்பற்றுதல், நாடெங்கிலும் எல்லாத் துறைகளிலும் மக்களுடன் கம்யூனிஸ்டுகள் வளர்த்துக் கொள்ளும் அன்றாடத் தொடர்புகள் ஆகியவற்றையும் இது நேரடியாகச் சார்ந்துள்ளது. கட்சித் தலைமையின் செயல்பாணியையும முறைகளையும சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி இடையறாது மேம்படுத்தி வருகிறது. தனது எல்லா நிறுவனங்களின திண்மையை உயர்த்த சகல முயற்சிகளும் செய்கிறது. குறைபாடுகளை அனுமதிக்காத போல்ஷிவிக் உணர்வில் கம்யூனிஸ்டுகளை பயிற்றுவிககிறது; விமர்சனம், சுயவிமர்சனத்திற்கான நிலைமைகளை தோற்றுவிக்கிறது.

கம்யூனிஸ்டுக் கட்சி மக்களுக்காகவே இருக்கிறது: மக்களுக்கு சேவை செய்கிறது. உழைப்பாளி மக்களின் மிகப் பெரும்பாலோரின் இடையறாத ஆதரவு காரணமாகவும், நம்பிக்கை காரணமாகவும், தீவிர பங்கெடுப்பு காரணமாகவும் சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சி ஆரம்பத்தில் தனித்தனி மார்க்சியக் குழுக்களாக இருந்த நிலையிலிருந்து வெகு தூரம் முன்னேறி, கம்யூனிச லட்

சியத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஒரு மாபெரும் நிறுவனமாக வளர்ந்துள்ளது. மார்க்சியம் — லெனினியத்தின்பால் வைத்துள்ள விசுவாசத்திலும், தொழிலாளி வர்க்கத்துடனும் அனைத்து மக்களுடனும் கொண்டுள்ள ஜீவனுன, உறுதியான உறவு களிலும், சித்தாந்த கட்டமைப்பு ஒற்றுமையிலும், உறுப்பினர் களின் உயர்ந்த அரசியல் உணர்விலும் கட்டுப்பாட்டிலும் தான் கட்சியின் வலிமையும் வெல்லற்கரிய தன்மையும் பொதிந் துள்ளன என்பதை அதன் முழு வரலாறும் காட்டுகிறது.

கட்சியின் நலன்களும் அனைத்து சோவியத் மக்களது நலன் களும் ஒரே மாதிரியாக இருப்பதும், கட்சியின் கொள்கைக்கு கிட்டும் விரிவான ஆதரவும், உழைப்பாளி மக்களின் நடவடிக்கை களும் சோவியத் சமுதாயத்திற்கு ஒரு வெல்லற்கரிய சக்தியை வழங்குகின்றன: இந்த சோவியத் சமுதாயம் எத்தகைய சோதனை களையும் சமாளித்து தன்னம்பிக்கையோடு முன்னேறிச் செல்வதற்கு இது துணை புரிகிறது.

# பொது ஸ்தாபனங்கள்

சோவியத் யூனியனில் உள்ள வெகுஜன பொது ஸ்தாபனங்கள் குடிமக்கள் தாமாக முன்வந்து தமது ஆர்வ விருப்பங்களுக்கு ஏற்ப அமைத்துக் கொண்ட ஸ்தாபனங்களாகும். இந்த ஸ்தாபனங்கள் மூலமாக பொது விவகாரங்களையும் தொழில்களையும் நிர்வகிப்பதில் லட்சோப லட்ச மக்கள் பங்கு கொள்ளுகின்றனர். இந்த ஸ்தாபனங்கள் சோவியத் மக்கள் அனைவரையும் பொதுவான நலன்களையும் பொதுவான குறிக்கோள்களையும் கொண்ட நெருக்கமான ஒரு கூட்டமைப்பாக ஒன்றிணைக்கின்றன.

தொழிற்சங்கங்கள் சோவியத் உழைப்பாளி மக்களின் மிகப் பெரிய வெகுஜன ஸ்தாபனங்களாகும். இவற்றின் உறுப்பினர் தொகை 9 கோடி 80லட்சத்துக்கும் அதிகம்.

சகல சோவியத்தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளுக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் லெனினியக் கொள்கையே வழிகாட்டுகிறது. 1905-07ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற முதலாவது ரஷ்யப் புரட்சியில் புடமிடப்பட்டுப் பிறந்ததான தொழிற்சங்கங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் நீண்ட நெடியதொரு பாதையைக் கடந்து வந்துள்ளன.

சோஷலிசம் நிலைபெற்றுள்ள ஒரு சமுதாயத்தில் சோவியத் தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன. இதுவே, இந்தத் தொழிற்சங்கங்களின் தலையாய சிறப்பியல்புகளை நிர்ணயிகின்றது. சோவியத் யூனியனில் தொழிற்சங்கங்களின் பணியானது, தொழிலாளிகளின் பொருளாயத நலன்களைப் பேணிக்காப்பதுடன் நின்றுவிடுவதில்லை. சமுதாயம் முழுவதன் வளர்ச்சி, உற்பத்தியை அதிகரித்தல், உற்பத்தித் திறனைப் பெருக்குதல், தேசப் பொருளாதாரத்தை நிர்வகித்தல் ஆகிய பணிகளில் சோவியத் தொழிற்சங்கங்கள் நேர்முகமாகப் பங்கு

கொள்கின்றன. உழைப்பாளி மக்களின் வாழ்க்கை, வேலை கலாசாரம் ஆகியவற்றின் சகல நலன்களின் அனைத்து முகங் களிலும் இந்த சங்கங்கள் அக்கறை கொண்டிருக்கின்றன.

தொழிற்சங்கங்கள் அவற்றின் ஏனைய அமைப்புக்கள் ஆகிய இவற்றின் மூலமாகவும், தொழில் நிலையத்தின் இயக்குநர் உட்பட நிர்வாகத் தரப்பிலிருந்து தரப்படும் சுருக்கமான அறிக்கைகளையும் விவரங்களையும் முறையாகப் பரிசீலிக்கின்ற தொழிற்சங்கக் கூட்டங்கள் மூலமாகவும், தொழிலாளர்களின் அணிகளைக் கொண்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நிரந்தர உற்பத்தி மாநாடுகள் வாயிலாகவும் உற்பத்தியை நிர்வகிக்கும் பணியில் தொழிலாளர்கள் கலந்து கொள்ளுகின்றனர். லெனின் கூறியது போல, சோவியத் நிலைமைகளில் தொழிற்சங்கங்கள் உழைப்பாளி மக்களுக்கான நிர்வாகப் பள்ளிகளாகவும், ஆட்சி நிர்வாகப் பள்ளிகளாகவும கம்யூனிஸப் பள்ளிகளாகவும் விளங்குகின்றன

சுரண்டும் அமைப்பைத் தகர்த்தழித்துவிட்டு, உழைப்பாளி மக்களை முதலாளித்துவ ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை செய்த அக்டோபர் சோஷலிசப் புரட்சியானது, உழைப்பாளி மக்கள் தமக்காகவும் சமுதாயத்திற்காகவும் உழைப்பதற்கான நிலைமை களை அதாவது அவர்கள் பயன் தரு வகையில் ஆக்கபூர்வமான பிரயத்தனங்களை மேற்கொள்வதற்குரிய நிலைமைகளை அவர் களுக்கு வழங்கிற்று. அதே சமயம் தொழிற்சங்கங்களின் பங்கிலும், பணியிலும் ஓர் அடிப்படையான மாற்றத்தையும் இது முக்கியமாகக் குறித்தது. முதலாளித்துவ அமைப்பில் தொழிற்சங்கஙகள் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டப் பள்ளி யாகவும், அவ்வர்க்கம் தனது பொருளாதார, அரசியல் நலன் களைப் பாதுகாத்துக் கொள்ளும் அரங்கமாகவும் விளங்குகின்றன ஆனால் தொழிலாளர் கரங்களுக்கு அதிகாரம் வந்து சேரும் போது தொழிற்சங்கங்கள் புதிய சமூக அமைப்பின் முதுகெலும் பாக மாறுகின்றன. அவை சோஷலிச சமுதாயத்தைக் கட்டும் செயலூக்கமுள்ள நிர்மாணிகளாகின்றன.

**தொழிற் சங்கங்களின் அமைப்பு.** உழைப்பாளி மக்கள் தொழிற் சங்கங்களை அமைத்துக் கொள்ளும் உரிமையை சோவியத் அரசியல் சட்டத்தின் 126ஆவது விதி உத்தரவாதம் செய்கிறது. அனைத்துத் தொழில்களிலும் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் ஊழியர்களையும், அவர்களது வருண இனம், தேசிய இனம், பால், சமயம் எதுவாயிருப்பினும் அவர்கள் அனைவரையும் அவர் தம் சுயவிருப்ப அடிப்படையில் சோவியத் தொழிற்சங்கங்கள் ஒன் றிணைக்கின்றன.

சோவியத் தொழிற்சங்கங்கள் ஆலை அல்லது தொழில் சம்பந்தமான கோட்பாட்டின் அடிப்படையில் நிறுவப் படுகின்றன. ஒரு தொழில் நிலையத்தில், அல்லது ஒரு தொழில் துறையின் கிளையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைகள் எத்தகையதாயிருப்பினும் அவர்கள் அனைவரும் ஒரே தொழிற் சங்கத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

தொழிற்சங்கங்களின் அடிப்படை யூனிட்டுகள் ஆரம்பத் தொழிற்சங்க அமைப்புக்களேயாகும். இவை எல்லாத் தொழில் நிலையங்களிலும் நிறுவனங்களிலும் அமைக்கப்படுகின்றன. 1973ல் 6,46 000 ஆரம்ப தொழிற்சங்க அமைப்புகள் இருந்தன. இவற்றை அடுத்து, கிளைக் கோட்பாட்டிற்கிணங்க வட்டார, நகர, பிராந்திய, பிரதேச, குடியரசு தொழிற் சங்கக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. எல்லாத் தொழிற் சங்க அமைப்புக்களும் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகவே தேர்ந்தெடுக்கப் படுகின்றன. தொழிற் சங்கக் காங்கிரஸ்தான் உயர் அதிகார அமைப்பு. இது குறைந்தது ஐந்தாண்டுக் கொருமுறை கூட்டப் படுகிறது. இது, விதிகளை அங்கீகரிக்கிறது. பணிகளை வகுத் தளிக்கிறது; மத்திய அரசாங்கத் திட்ட, பொருளாதார அமைப்புக்களின் அறிக்கைகளைப் பரிசீலிக்கிறது; மற்றும் தேசப் பொருளாதார திட்டங்களை நிறைவேற்றுதல், தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் கலாசாரத் தரத்தை மேம்படச் செய்தல், அவர்களது அரசியல் விழிப்புணர்வை அதிகரித்தல் ஆகிய பணிகளில் தொழிற்சங்கம் பங்கு கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகளையும் வகுத்தளிக் கிறது. 1972 மார்ச் மாதத்தில் நடைபெற்ற தொழிற்சங்க காங்கிரஸ்தான், அதாவது 15ஆவது காங்கிரஸ்தான் இதுவரை நடைபெற்றுள்ள காங்கிரசில் கடைசியானது.

காங்கிரசுகள் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில், தொழிற்சங்கங்களின் அனைத்து யூனியன் மத்திய கவுன்சில் (ஏயூசிசிடியூ) தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுகிறது. இந்த ஏயூசிசிடியூவின் தலைவரான எ. என். ஷெலிபின் பிரபல பொது வாழ்வுப் பிரமுகர். ஏயூசிசிடியூவின் முகவரி வருமாறு: 42, லெனின் புரோஸ்பெக்த், மாஸ்கோ.

கிளைத் தொழிற்சங்கத்தின் உயர் அதிகார அமைப்பான காங்கிரஸ் ஐந்தாண்டுக்கொரு தடவை கூட்டப்படுகிறது. காங்கிரசுகள் நடைபெறுவதற்கு இடையிலுள்ள காலத்தில் கிளை யின் மத்தியக் கமிட்டியே இத்தொழிற்சங்க நடவடிக்கைகளை நிர்வகித்து வருகிறது.

நாட்டில் மொத்தம் 25 கிளைத் தொழிற்சங்கங்கள் உள்ளன. உலோகத் தொழிலாளர்கள், இரயில்வே தொழிலாளர்கள் எஞ்சினியரிங் தொழிலாளர்கள், நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள், இரசாயன. எண்ணெய்த் தொழில் தொழிலாளர்கள் கட்டட நிர்மாணத் தொழிலாளர்கள், மருத்துவத் தொழிலாளர்கள், கல்வி, விஞ்ஞானத் துறைத் தொழிலாளர், கலாசார துறை தொழிலாளர்கள் ஆகியோரை இணைக்கும் தொழிற்சங்கங்களே மிகப் பெரியவையாகும்.

அண்மை ஆண்டுகளில் கூட்டுப்பண்ணைத் தொழில் நுட்ப வல்லுநர்கள் உட்பட விவசாயத் தொழிலாளர்கள், நிபுணர்களின் தொழிற்சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையும், அரசாங்கப் பண்ணைத் தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கையும் குறிப்பிடத் தக்க அளவு பெருகியுள்ளது.

கிளைத் தொழிற்சங்கங்கள் தமது நடவடிக்கைகளைத் தமது துறையின் வரம்புடன் நிறுத்திக் கொள்ளுவதில்லை. அவற்றின் பணியை தொழிற்சங்கங்கள் ஒருமுகப்படுத்துவதற்கு கவுன்சில்கள் நகரங்களிலும், பிராந்தியங்களிலும், பிரதேசங்களிலும், குடியரசுகளிலும் பிரதேசக் கோட்பாட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகின்றன.

தொழிற்சங்கங்களின் செயல் முறைகள். முக்கியமான நான்கு துறைகளில் சோவியத் தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன

சோவியத் தொழிற்சங்கங்கள் நிர்வாக முறை பற்றியும், பொருளாதாரக் கட்டுப்பாடு பற்றியும் உழைப்பாளி மக்களுக்குப் போதிக்கின்றன; அவர்கள் மனதில் உற்பத்தி சம்பந்தமான பொறுப்புணர்வை ஊட்டி வளர்க்கின்றன; உற்பத்தி, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அவர்களது ஆக்க பூர்வமான முன்முயற்சியை வளமாக்குகின்றன; அவர்கள் உற்பத்தியின் நிர்வாகத்தில் நேரடியாகப் பங்குகொள்ளச் செய்கின்றன.

இவை, உழைப்பாளி மக்களின் சட்டபூர்வமான உரிமைகளையும், பொருளாயத நலன்களையும் பாதுகாத்து நிற்கவும், அவர்களது வேலை, வாழ்க்கை நிலைமைகளையும், பொழுதுபோக்கு வசதிகளையும் மேம்படுத்தப் பாடுபடவும், பொது சுகாதாரத்தை உயர்வுறச் செய்யவும், தொழில்சட்டங்கள், தொழிலாளர் உரிமைகள் ஆகிய இவை கடைப்பிடிக்கப்படுவதைக் கண்காணிக்கவும் கோரப்படுகின்றன.

சிறந்த கல்வியறிவும், வினையூக்கமும், உயர்ந்த ஒழுக்கசீலமும் கொண்ட புதிய மனிதனை உருவாக்கும் நோக்குடன் விரிந்த

அளவில் கல்வி, கலாசாரப் பணியை வளமாக்கத் தம்மால் இயன்ற தனைத்தையும் இவை செய்து வருகின்றன.

முற்போக்குத் தன்மை கொண்ட தொழிற்சங்க இயக்கத்தின் மிகப்பெரிய, திண்மை மிக்க படைப் பிரிவுகளில் ஒன்றுகத் திகழும் சோவியத் தொழிற்சங்கங்கள் சர்வதேச அரங்கில் முனைப் பாகச் செயல்படுகின்றன. இவை உலகு முழுவதிலும் உள்ள தொழிலாளர்களின் வர்க்க ஒருமைப்பாட்டை உருவாக்குதல், சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்கான போராட்டத்தில் உலகத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமையை வலுவாக்குதல் என்ற திசை வழியில் தமது பிரயத்தனங்களை ஈடு படுத்துகின்றன.

**தொழிற்சங்கங்களின் உரிமைகள்:** பணி நடைபெறும் எல்லா இடங்களிலும் தொழிற்சங்கங்கள், தமது நடவடிக்கைளில் சுயேச்சையாக ஈடுபட அரசியல் சட்டம் எல்லா வகையான வாய்ப்புக்கும் உத்தரவாதம் வழங்குகின்றது. இவற்றுக்கு கூட்டங்கள் நடத்த வசதியான இடங்கள் உள்ளன. மற்றும் இவற்றுக்குச் சொந்தமான மன்றங்கள், நூலகங்கள், விளையாட் டரங்க வசதிகள் உள்ளன; இவையல்லாமல் தொழிற்சங் கங்களுக்குச் சொந்தமான பதிப்பகங்களும், செய்தி இதழ்களும், சஞ்சிகைகளும் உள்ளன.

தொழிலாளர்கள், அவர்களது சம்பளங்கள், வேலை, வாழ்க்கை நிலைமைகள் ஆகிய இவை சம்பந்தமான ஏதொரு சட்டமும் தொழிற்சங்கங்களின் சம்மதம் இல்லாமல் சோவியத் யூனியனில் நிறைவேற முடியாது.

தேசப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும், மக்களின் பொருளாயத, கலாசாரத் தரத்தை உயர்த்துவதைக் குறியாகக் கொண்ட திட்டங்களையும் வகுப்பதில் தொழிற் சங்கங்கள் நேர் முகமாகப் பங்கு கொள்கின்றன. தொழிற் சங்க நிறுவனங்களின் கருத்தை உரியவாறு கவனத்தில் கொண்டு அரசாங்க பொருளா தார அமைப்புக்கள் முன்கூறிய பிரச்சினைகள் சம்பந்தமான முடிவுகளை மேற் கொள்ளுகின்றன.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்குவதிலும், அதைச் செயலாக்குவதிலும் தொழிற்சங்கங்கள் தீவிரமான பங்கு கொண்டன. இத்திட்டத்தில் தொழிலாளர்களதும் அவர்தம் குடும்பங்களதுமான வேலை, வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்து வதற்குகந்த விரிவான சமூக-பொருளாதார வேலைத்திட்டம் அடங்கியுள்ளது.

சட்டங்களைக் கொண்டு வருவதற்கான உரிமை சோவியத் தொழிற்சங்கங்களுக்கு உண்டு. அதாவது, சோவியத் தொழிற் சங்கங்கள், உழைப்பாளி மக்களுச்கான பொருளாயத நிலைமைகளை யும், அவர்தம் சேம நலவாழ்வையும், கலாசார சேவைத் துறை களையும் மேம்படுத்துதல், இத்துறையில் தொழிற்சங்கங்கள் வகிக்கும் பங்கினை அதிகரித்தல் ஆகிய வற்றை நோக்கமாகக் கொண்ட சட்டங்களின் நகல்களை வகுத்து சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தினிடமும், அதன் தலைமைக் குழுவினிடமும் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கலாம் என்று பொருள்.

இந்த உரிமையைச் சோவியத் தொழிற் சங்கங்கள் விரிவாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. இவற்றின் முன்முயற்சியினுல், 1971ஆம் ஆண்டில் ஏயூசிசிடியூவினுல் சமர்ப்பிக்கப்பட்ட ''ஆலை, அலுவலகத் தொழிற்சங்கக் கமிட்டிகளின் உரிமைகள்'' எனும் புதிய விதிகள் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தால் அங்கீ கரிக்கப்பட்டதை உதாரணமாகக் காட்டலாம். தொழிலாளர் களின் பாதுகாப்பு முறை, சமூக இன்ஷூரன்ஸ், பென்ஷன்முறை ஆகிய இவற்றை மேம்படுத்துவதற்காகத் தொழிற்சங்கங்களின் முன்முயற்சியால் வகுக்கப்பட்ட பல சட்டங்கள் நிறைவேறி யுள்ளன.

1970ல், சோவியத் யூனியன் தொழிலாளர் சட்டத்தின் அடிப்படைகளையும் ஒன்றியத்தின் பகுதியான குடியரசுகளின் தொழிலாளர் சட்ட அடிப்படைகளையும் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் அங்கீகரித்தது. இவை, தொழிற்சங்கங்கள் நேர் முகமாகக் கலந்து கொண்டு வகுக்கப்பட்டவை, மிகுந்த முக்கியத் துவமுடையவை. சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஏயூசிசிடியூ செயலாளர்களில் ஒருவர் அறிக்கையளித்தார்.

அரசாங்க சமூக இன்ஷூரன்சைத் தொழிற்சங்கங்கள் நிர்வகிக்கின்றன. தொழிலாளர் சட்டம், பாதுகாப்பு இஞ்ஜினியரிங் இவை சம்பந்தமாக அரசாங்கக் கட்டுப் பாட்டைச் செயலாக்குகின்றன. தொழிற்சங்கங்களின் சம்மதத்துடனும் தற்போதுள்ள சட்டங்களின் அடிப்படையிலும் தான் வேலை நிலைமைகளும், சம்பளங்களும் வகுக்கப்படுகின்றன. அரசாங்க அமைப்புகள் மட்டுமன்றி, தொழிற்சங்கங்களும் பொது உணவு விடுதிகள், வாத்தக, சமுதாய சேவைத் துறைகள் ஆகியவற்றின் பணிகளை மேற்பார்வையிடுகின்றன. வீட்டு நிர்மாணம், குடி யிருப்பு ஒதுக்கீடு இவை சம்பந்தமாகக் கண்காணிக்கவும் தொழிற் சங்கங்களுக்கு உரிமை உண்டு. மக்களின் கலாசார, சேவைகள், அன்றாட சேவைகள் சம்பந்தமாகவும் இவை கவனம செலுத்து கின்றன. லட்சக் கணக்கான தொழிற்சங்க முன்னணி ஊழியர்கள்

பொதுக் கட்டுப்பாட்டின் பல்வேறு துறைகளில் பங்கெடுக்கின்றனர்.

தொழிற்சங்கங்களும், நிர்வாகமும். ஆலே, அலுவலகத் தொழிற்சங்கக் கமிட டிகள் வருடாந்தர அடிப்படையில் நிர்வாகத்துடன் கூட்டுமுறை பேரங்களைச் செய்து கொள்ளுகின்றன. இவை, ஊழியர்களும், நிர்வாகத்தினரும், உற்பத்தித் துறையிலும், வேலே, வாழ்க்கை நிலைமைகள், சம்பளம், தொழிலாளர்களின் திறமைகளை உயர்வுறச் செய்தல் ஆகியவற்றிலும் பரஸ்பரம் பொறுப்புக்களை எதிர்பார்க்கின்றன. வேறுவிதமாகச் சொல்லுவதானால் இந்தக் கூட்டுப் பேரங்கள் ஊழியர் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் தழுவி நிற்கின்றன எனலாம். ஒவ்வொரு கூட்டுப் பேரமும் அங்கீகரிக்கப்படுமுன்னர் தொழிலாளர்களின் பொதுப் பேரவைக் கூட்டத்தில் முழுமையாக விவாதிக்கப்படுவது அவசியமாகும். உற்பத்திக் கோட்டாக்கள், வீதங்கள், வகைகள், சம்பள முறைகள், போனஸ்கள், முதலிய பிரச்சினைகள் குறித்து நிர்வாகங்கள் முடிவுகளை எடுக்க முடியும்.

குறிப்பிட்ட தொழில் நிலையத்தில் ஊழியர் ஒருவரை நிர்வாகத்திலோ, அல்லது கண்காணிப்புப் பிரிவிலோ மேல் பதவிக்கு நியமனம் செய்யும் போது, தொழிற் சங்கக் கமிட்டியின் அபிப்பிராயத்தைக் கருத்திற் கொள்வது அவசியம். தற்போதைய சட்டப்படி தொழிற்சங்கக் கமிட்டியின் இசைவு இல்லாமல் தொழிலாளர்களை வேலேயிலிருந்து விலக்குவதற்கு நிர்வாகத்திற்கு உரிமை இல்லே. மேலும், நிர்வாகம் தனது பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றி வருவதுபற்றி முறையாகக் கண்காணிப்பது தொழிற்சங்கக் கமிட்டிகளின் பொறுப்பாகும்.

ஆலே, அலுவலகத் தொழிற்சங்கக் கமிட்டிகளுக்கு விரிவான உரிமைகள் உள்ளன. இவை உற்பத்தித் திட்டங்களை வகுத்தல், தொழில் நிலையங்களை விஸ்தரிக்கும் திட்டங்களை வகுத்தல், வீடுகளைக் கட்டுதல், குடியிருப்புக்களைப் பழுது பார்த்தல் ஆகியவற்றுக்கான திட்டங்களை உருவாக்குதல் ஆகிய பணிகளில் பங்கு கொள்ளுகின்றன. தொழிற்சங்கக் கமிட்டிகளின் சம்மதம் பெற்றுத்தான் சட்டத்தில் கூறியுள்ளபடி குறிப்பிட்ட விசேட காரணங்கள் இருந்தால் மட்டுமே ஊழியரை வேலே நீக்கம் செய்ய முடியும்.

சம்பளங்கள், உற்பத்திக் கோட்டாக்களை நிர்ணயித்தல் ஆகிய விஷயங்களில் தொழிற்சங்கங்களுக்கு விரிவான உரிமைகள் உள்ளன. தொழிற்சங்கக் கமிட்டிகளின் சம்மதத்துடன் தான் ஊக்குவிப்பு நிதிகள் நிர்ணயிக்கப்பட்டு நிர்வாகத்தால் பயன்படுத்தப்படுகின்றன.

நிர்வாகத்துக்கும், ஊழியர்களுக்கும் இடையில் சில சமயங்களில் தகராறுகள் எழுவதுண்டு. இவை, ஸ்தல தொழிற்சங்கக் கமிட்டியின் குறைபாடு விசாரணைக் கமிஷன்களுக்கு அனுப்பப்படுகின்றன. இக்கமிஷன்கள் சரிசம எண்ணிக்கை அடிப்படையில் நிர்வாகம், தொழிற்சங்கம் ஆகிய இருதரப்புப் பிரதிநிதிகளையும் கொண்டு அமைக்கப்படுபவையாகும். தகராறுக்குத் தீர்வுகாணக் கமிஷன் தவறிவிடுமானால், பிறகு இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு தொழிற்சங்கக் கமிட்டியின் வசமே விட்டு விடப்படுகிறது. இதன் தீர்ப்பு நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த வல்லது; இதன் தீர்ப்பை நீதிமன்றத்தின் உத்தரவு மூலமாகவே மாற்றமுடியும். அதுவும் தொழிலாளர் சட்டம் மீறப்பட்டதாக நிரூபித்தால் மட்டுமே சாத்தியமாகும்.

தொழிற்சங்கம், அல்லது நிர்வாகத்தின் முடிவினை ஊழியர் ஒருவர் ஒப்புக் கொள்ள முடியாது போனால், அவர் தனது தொழில் நலன்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக அரசாங்கத்தை நாடலாம்; அதாவது புரோக்யூரேடர் அலுவலகத்தை அல்லது மக்கள் கோர்ட்டின் உதவியை நாடலாம். பத்துநாட் கெடுவுக்குள் இவ்வழக்கை விசாரித்தறிய வேண்டிய கடமை இவற்றுக்கு உண்டு.

வேலை நிலைமைகளை மேம்படச் செய்வதிலும், தமது உறுப்பினர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஓய்வுக்கும் பொழுது போக்குக்கும் அவர்களுக்குச் சீரிய வாய்ப்புக்களை வழங்குவதிலும் தொழிற்சங்கங்கள் பெருங் கவனம் செலுத்துகின்றன.

தொழிலாளர் சம்பந்தமான சட்டங்களும், அவர்கள் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு விதிகளும், தொழில்துறை சம்பந்தமான சுகாதார முறைகளும் செவ்வனே கடைப்பிடிக்கப்படுகின்றனவா எனவும் தொழிற்சங்கங்கள் கண்காணித்துக் கொள்ளுகின்றன.

ஒரு புதிய தொழில் நிலையம், போதிய வசதிகள் இல்லாதிருந்தால் அல்லது, சுகாதாரத் தரங்களுக்கு இசைவானதாக இல்லாமல் போனால் அதற்குத் தொழிற் சங்கத்தின் சம்மதம் கிட்டாதாகையால் அது செயல் படமுடியாது. போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லையெனில் ஓர் ஆலைப் பிரிவையோ, அல்லது, தொழில் நிலையத்தையோ மூடிவிடும்படி தொழிற்சங்கக் கமிட்டிகள் கோரமுடியும்.

தொழிலாளர் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஆறு விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் தொழிற் சங்கங்களுக்கு சொநதமாக உள்ளன. இவை, இரைச்சல் அதிர்வு கட்டுப்பாட்டு முறைகளை

மேம்படுத்துதல், மின்முறைப் பாதுகாப்பு, பாதுகாப்பு சாதனங்கள் சம்பந்தமாகவும் மற்றும் வேலை நிலைமையினை மேப்படுத்துதல் சம்பந்தமாகவும், பாதுகாப்பு இஞ்சினியரிங் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்தும் பணி புரிபவையாகும்,

தொழிற்சங்கங்களும், உற்பத்தி நிர்வாகமும்: சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24 ஆவது காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மத்தியக்கமிட்டி அறிக்கை பின்வருமாறு கூறுகிறது: ''மேன் மேலும் அதிகமான அளவில் உழைப்பாளி வெகுஜனங்களை உற்பத்தி நிர்வாகத்தில் ஈர்ப்பது கட்சியின் மையமான பணிகளில் ஒன்ருகும்;'' உணர்வு பூர்வமான ஒவ்வொரு ஊழியரும் ஒவ்வொரு தொழிலாளியும் 'தனது ஆலைக்குத் தான் தான் எஜமானன் என்பது மட்டுமல்லாமல் தனது நாட்டின் பிரதிநிதியுமாவார்' என்று லெனின் கூறியதை உணரச் செய்ய கட்சி தனது பிரயத்தனங்களையெல்லாம் ஈடுபடுத்துகிறது''.

உழைப்பாளி மக்களை உற்பத்தி நிர்வாகத்தில் ஈர்க்கச் செய்வதில் தொழிற் சங்கங்களும். அவற்றின் இதர அமைப்புக்களும் தொழிலாளர் கூட்டங்களும பெரும்பங்காற்றி வருகின்றன. ஆலை தொழிற்சங்கக் கமிட்டிகளுக்கும், இதர ஸ்தல தொழிற்சங்கக் கமிட்டிகளுக்கும், அவற்றின தணிக்கைக் கமிஷன்களுக்கும் சுமார் 20லட்சம் தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். வட்டார, பிராந்திய, பிரதேச, குடியரசு தொழிற் சங்கக் கமிட்டிகளுக்கும், கவுன்சில்களுக்கும் செயலாளர்களாக இருப்பவரில் பெரும்பான்மையினர் சாமான்ய அணிகளைச் சேர்ந்த தொழிலாளர்களாவர். நிரந்தர உற்பத்தி மாநாடுகள் உற்பத்தி நிர்வாகத்தில் தொழிலாளர்கள் முன்னின்று பங்கு கொள்ளும் ஒரு தீவிர முறையாக விளங்குகின்றன. இத்தகைய மாநாடுகளின் உறுப்பினர்கள் பொதுப் பேரவைக் கூட்டங்களில், ஓராண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர் அவர்கள் ஆலைத் தொழிலாளர்கள் அலுவலக ஊழியர்கள் ஆகியோரும், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் நிர்வாகம், கட்சி, இதர பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் ஆவர். இந்த மாநாடுகளின் பணி தொழிற் சங்கங்களால் வழி நடத்தப்படுகின்றது. இவற்றுக்கு, உற்பத்தி, சம்பளம், உற்பத்தி கோட்டாக்கள், வேலை நிலைமைகள், வாழக்கை நிலைமைகளையும் கலாசார சேவைகளையும மேப்படுத்துதல் ஆகிய சகல பிரச்சினைகள் பற்றிய அறிக்கைகளைக் கேட்டுப் பிறகு நிர்வாகிகளுக்குப் பரிந்துரை வழங்க உரிமை உண்டு

இன்று கிட்டத்தட்ட 1,60,000 நிரந்தர உற்பத்தி மாநாடுகள் நாட்டில் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ 60 லட்சம் உழைப்பாளி மக்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

மக்களின் கட்டுப்பாடு அமைப்புக்கள், குழுக்கள் 80 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களைக் கொண்டவை. இவையும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை அரசாங்கத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதை முறையாகக் கண்காணிக்கின்றன. உற்பத்திச் சேமிப்புகளின் இருப்புக்களை மதிப்பிடுகின்றன; தொழில் நிலையத்தின் உற்பத்தி, நிதி, பொருளாதார நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகின்றன.

தொழிலாளர்கள் தமது புதிய கண்டுபிடிப்புக்களையும், சிக்கனச் சீரமைப்பு யோசனைகளையும் முறையாக சமர்ப்பிப்பதில் மிகுந்த முனைப்புக் காட்டுகின்றனர். இது உற்பத்தியை செம்மையாக்குவதில் அவர்கள் கொள்ளும் பங்கின் வெகுஜன வடிவத்தை பிரதிபலிக்கிறதெனலாம். ஸ்தல இஞ்சினியரிங் கழகங்களும், புதுமை புனைவாளர் சழகங்களும் கண்டுபிடிப்பாளர்கள் ஆராய்ச்சி நிலையங்களும் ஆபிரக்கணக்கான தொழில் நிலையங்களில் செயல்படுகின்றன. இவை, 1 கோடி 10 லட்சத்துக்கும் அதிகமான விஞ்ஞானிகள், இஞ்சினியர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், தொழிலாளர்கள் ஆகியோரை ஒன்றிணைக்கின்றன. 1972ல் தேசப் பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளில் 36 லட்சம் புதிய கண்டு பிடிப்புகளும், சிக்கனச் சீரமைப்பு யோசனைகளும் செயலாக்கப்பட்டன. இவற்றால் ஆண்டொன்றுக்கு 300 கோடி ரூபாய் மிச்சமாயிற்று.

வெவ்வேறு தொழிலாளர்கள், தொழிலாளர்களின் அனைத்து குழுவினர் ஆகியோரிடையில் உற்பத்திக்காக நடைபெறும் சோஷலிச ஆதர்சப் போட்டியானது உழைப்பின்பால் சோவியத் தொழிலாளர்கள் காட்டும் புதிய மனப்பான்மையின் வெளியீடெனலாம். உற்பத்தியின் எஜமானன் என்ற உணர்வும் நாட்டின் எஜமானன் என்ற உணர்வும், உழைப்பின்பால் புதிய, ஆக்கப் பூர்வமான மனப்பான்மையைத் தோற்றுவிக்கின்ற புதிய, சோஷலிச சமுதாய நிலைமைகளில்தான் இது சாத்தியமாகும். இந்த நிலைமைகளில் தான் ஒவ்வொரு தொழிலாளியும் தனது உழைப்பின் பலன்களிலும், தொழில் நிலையம் முழுவதன் பணியின் பயன்களிலும் நேரடியாக அக்கறை கொள்ளலாகும்.

சோஷலிச ஆதர்சப் போட்டிக்கு சுயநல நோக்கங்கள் கிடையாது. ''போட்டி'' என்ற சொல்லுக்கு வழக்கமாக உள்ள அர்த்தத்துக்கும் இதற்கும் ஏதொரு சம்பந்தமும் இல்லை. சோஷலிச ஆதர்சப் போட்டி பின்வரும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். ''ஒருவன் நன்கு பணியாற்றுகிறான், மற்றொருவன் முன்னவனைவிடச் சிறப்பாக பணி புரிகிறான். மூன்றாமவன் இவர்களை விட பின் தங்கி நிற்கின்றான். பின்தங்கி நிற்பவர்கள் முன்னணியில் உள்ளவர்களுக்குச் சமமாக

முன்னேற உதவி புரிவது, அனைவரும் சேர்ந்து உற்பத்தி மொத்தத்தில் அதிகரிக்கப் பணியாற்றுவது'' என்பதே இதற்குப் பொருளாகும். மக்களுக்கு இடையில் நிலவும் உறவுகள் தோழமை மிக்க ஒத்துழைப்பையும் பரஸ்பர உதவியையும் அடிப்படையாகக் கொண்ட சோஷலிச சமுதாய இயல்புக்கு சோஷலிச உழைப்புப் போட்டி இசைவானதாகும் தொழிலாளர்கள் தமது சொந்த முன் முயற்சியையும், தனிப்பட்ட ஆக்கத்திறன்களையும் எடுத்துக் காட்டுவதற்கு நட்புமிக்க இந்த ஆதர்சப் போட்டியில் விரிவான வாய்ப்புகள் உள்ளன.

1919ஆம் ஆண்டில் நடைபெற்ற கம்யூனிச சுபோத்னிக்குகளுடன் சோஷலிச ஆதர்சப் போட்டியின் தொடக்கங்கள் சம்பந்தமுடையவையாகும். அப்போது, ரயில்வே ஊழியர்கள் தாமாக முன்வந்து, தமது ஓய்வு நேரங்களில் ஊதியம் எதுவும் பெற்றுக் கொள்ளாமல் ரயில் எஞ்சின்களைப் பழுது பார்த்தனர், உயர்வான அளவில் உழைப்பின் உற்பத்தி ஆற்றலைச் சாதித்துக் காட்டினர், இது, உழைப்பின் பாலான புதிய, உயரிய விழிப்புணர்வுமிக்க கம்யூனிஸ மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிற்று.

முதலாவது ஐந்தாண்டுப் பொருளாதார வளர்ச்சித்திட்டக் காலத்தில (1929-33) தொழிலாளி வர்க்கம் முழுவதும் சோஷலிச ஆதர்சப் போட்டியில் ஈடுபட்டது. கூட்டுப்பண்ணை முறை உறுதியாக வேர் பிடித்ததும், சோஷலிச உழைப்புப் போட்டி உண்மையான வெகுஜன இயக்கமாகப் பரிணமித்து விட்டது. சோஷலிச உழைப்புப் போட்டியில ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்தது. இது, அவர்கள் தமது அனுபவத்தை வளமாக்கிக் கொள்ளவும், திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் உதவி புரிந்தது.

இன்று 7 கோடிக்கும் அதிகமானோர் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24 ஆவது காங்கிரசால் ஏற்கப்பட்ட 9ஆவது ஐந்தாண்டுத் தேசிய பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை (1971-1975) திட்டகாலத்துக்கு முன்னதாகவே பூர்த்தி செய்யும் பெருமையை எய்துவதற்காக மும்முரமாக முனைந்துள்ளனர். மொத்தத்தில் அவர்கள் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கவும், அதன் பயனை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பாடுபடுகின்றனர்.

புதிய குறிக்கோள்கள் புதிய ஆதர்சப் போட்டி முறைகளுக்கு வழிகோலின. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24 ஆவது காங்கிரசுக்கு மத்தியக் கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையில், சோவியத் மக்களை இப்போது எதிர்நோக்கும் கடமை ''வரலாற்றுச் சிறப்புடைய ஒன்று'' என லியோனித் பிரெஷ்னேவ் கூறினார்.

''விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளை சோஷலிசப் பொருளாதார முறையின அனுகூலங்களுடன அங்கப்பகுதியாக இணைத்தல், உற்பத்தியுடன் விஞ்ஞானத்தை இணைக்கும் நமது சொந்தமான உண்மையான சோஷலிச வடிவங்களை விரிவான அளவில் புலனுக்குதல்.''

தேசப் பொருளாதார வளர்ச்சியிலும், உற்பத்தி நிர்வாகத்திலும் உழைப்பாளி மக்கள் பெருமளவில் ஈடுபட்டிருப்பது இந்த சாதகங்களில் ஒன்ருகும். சோஷலிச உழைப்புப் போட்டியின் தற்போதைய இலக்குகளில் இது தெளிவாகப் புலனுகிறது. மிகக் குறைவான அடக்கச் செலவில் சிறந்த தரமுடைய பொருள்களை மேலும் அதிகமாக உற்பத்தி செய்தல் என்பதே அது.

அரசாங்கத் திட்டங்களில் உள்ளதைவிட அதிக குறியளவு கொண்ட தமது சொந்தத் திட்டங்களை உழைபபாளி மக்கள் ஏற்கின்றனர். மிகக் குறைவான செலவில் தரத்தில் சிறந்த பொருள்களை உற்பத்தி செய்வதற்காகவும், புதிய தொழில்நுட்பத்தில் பாண்டித்தியம அடைவதற்காகவும், உற்பத்தித் திறனை உயர்வடையச் செய்வதற்காகவும் அவர்கள் வலிந்து முனைந்துள்ளனர். சோஷலிச உழைப்புப் போட்டியானது சமூக முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்குகந்த சக்தி வாய்ந்த சாதனமாகப் பரிணமித்துள்ளது.

சமூக இன்ஷுரன்ஸ் உழைப்பாளி மக்களுக்குரியது, சோவியத் யூனியனில் உழைப்பாளி மக்களுக்கான சமூக இன்ஷுரன்ஸுக்கு அரசாங்கமே நிதியுதவி செய்கிறது. ஆனுல், சமூக இன்ஷுரன்ஸ் துறையில் ஏற்படும எல்லாச் செலவினங்களும், தொழிற்சங்கக் கமிட்டிகளில் ஏற்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையிலேயே செய்யப்படுகின்றன.

1973 ஆம் ஆண்டுக்கான சமூக இன்ஷுரன்ஸ் பட்ஜெட் 2140 கோடி ரூபிளாகும்.

சமூக இன்ஷுரன்ஸ் அமைப்பின் வளர்ச்சியானது, சுகாதார சேவைத் துறைகளின் இடைவிடாத மேம்பாட்டுடனும், உழைப்பாளி மக்களுக்கான பொழுதுபோக்கு நிறுவனங்கள் சம்பந்தமாகத் தொழிற்சங்கங்கள் கொண்டுள்ள அக்கறையுடனும், ஆரோக்கிய ஸ்தலங்களில் உள்ள ஏராளமான சுகாதார இல்லங்கள் விஸ்தரிக்கப்படுவதுடனும், உல்லாசப் பயணம், உடற்பயிற்சி, கலை ஆகியவற்றின் வளர்ச்சியுடனும் இசைவுற இணைந்துள்ளதெனலாம். கீழே குறிப்பிடப்படும் புள்ளிவிவரம், தொழிற்சங்கங்களால் நடத்தப்படுகின்ற விளையாட்டுப் பந்தய, சுகாதார நிர்மாணப் பணியின் வீச்சைப் பற்றி ஓரளவு தெளிவாக்கக்கூடும். தொழிற்சங்கங்களுக்கு இப்போது, 2600 விளையாட்டு அரங்கங்கள்,

2,00,000 க்கும் அதிகமான கால்பந்து, கூடைப்பந்து, வாலிபால் ஆட்டக் களங்கள். டென்னிஸ் விளையாட்டுக் களங்கள் ஆகியவை யும், 12000 விளையாட்டுப் பந்தயக் களங்களும், ஏறத்தாழ 7000 உடற்பயிற்சி ஸ்தலங்களும், ஆயிரக்கணக்கான நீச்சல் குளங்கள். சறுக்கு விளையாட்டுக் களங்கள், முதலானவையும் உள்ளன. இவற்றை லட்சோப லட்சக்கணக்கான மக்கள் இலவச மாகப் பயன்படுத்தி மகிழ்கின்றனர்.

சோவியத் யூனியனில் 22 தொழிற்சங்க விளையாட்டுப் பந்தயக் சழகங்கள் உள்ளன. (1,05,000 விளையாட்டுப் பந்தய குழுக்கள்) இவற்றின் உறுப்பினர் தொகை 2 கோடி 30 லட்சத்துக்கும் அதிகம். ''ஸ்பார்த்தக்'' ''துருத்'' ''புரெவெஸ்தனிக்'' ''லோகோமோடிவ்'' ஆகிய இவை மிகப் பெரிய விளையாட்டுக் கழகங்களாகும்.

தொழிற்சங்கங்கள் 18000 ஆரோக்கிய இல்லங்கள், சுகாதாரப் பாதுகாப்பு கேந்திரங்கள், உல்லாசப் பயணிகள் விடுதிகள், ஏனைய பொழுதுபோக்கு அமைப்புக்கள் ஆகியவற்றை நடத்துகின்றன. 1972 ஆம் ஆண்டில் மட்டுமே இந்த நிறு வனங்கள் 80 லட்சத்துக்கும் அதிகமான பேர்களுக்கு சிகிச்சையும், விடுமுறைக்கால வசதிகளையும் வழங்கின. அதேசமயம் 77 லட்சத்து 50 ஆயிரம் உழைப்பாளி மக்களின் குழந்தைகள் கோடைகால ஆரோக்கிய முகாம்களில் தமது விடுமுறைக் காலத்தைச் செல விட்டன. இந்த முகாமகள் தொழிற்சங்கங்களின் நிதி உதவியால் நடைபெறுவனவாகும். இந்த நிறுவனங்களில் தங்க தொழிலாளர் களில் மிகப் பெருமபான்மையினர் இலவசமாகவோ அல்லது 70 சதச் சலுகையுடனோ இடவசதியளிக்கப்படுகின்றனர்.

தொழிற்சங்கங்கள் மிகவும் விரிவான அளவில் கல்வி, கலா சாரப் பணியையும் நடத்துகின்றன.

எயூசிசியூவும் தொழிற்சங்கங்களின் மத்தியக் கமிட்டிகளும் ஏராளமான செய்தி இதழ்களையும், சஞ்சிகைகளையும் வெளியிடு கின்றன, இவை சுயேச்சையாகவோ, அல்லது அமைச்சகங்கள், இதர அமைப்புக்களுடன் சேர்ந்தோ வெளியிடப்படுகின்றன.

தொழிற்சங்கங்களின் முக்கியமான செய்தி இதழ் துருத்: 50 லட்சத்துக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகின்ற பத்திரிகை இது.

''புரோஃபிஸ்தத்'' என்பது தொழிற்சங்கங்களுக்குச் சொந்த மான மிகப் பெரிய பதிப்பகமாகும்.

நடமாடும் நூலகங்கள், அடங்கலாக 30 ஆயிரம் நூலகங்கள் தொழிற்சங்கஙகளுககுச் சொந்தமாக உள்ளன. மற்றும, 21000

கிளப்புகளும் சலாசார மாளிகைகளும் தொழிற்சங்கங்களுக்குச் சொந்தமானவை.

**சர்வதேசப் பிணைப்புக்கள்.** பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாட்டின்பால் மெய்ப்பற்றுக் கொண்டுள்ள சோவியத் தொழிற்சங்கங்கள் சர்வதேசத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்காக உறுதியுடன் பாடுபட்டு வருகின்றன. இவை, சோஷலிச நாடுகளிலுள்ள தொழிற்சங்கங்களுடனான சோதர ஒத்துழைப்பையும் ஏனைய நாடுகளில் உள்ள முற்போக்குத் தன்மை கொண்ட தொழிற்சங்க கேந்திரங்களுடனும், உலகு முழுதும் உள்ள உழைப்பாளி மக்களுடனும் சர்வதேசப் பிணைப்புக்களையும் வளர்த்து வலுவாக்கி வருகின்றன.

இவை, தேசவிடுதலை இயக்கங்களுக்கும், முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்கள் ஏகபோகங்களுக்கு எதிராக நடத்தும் போராட்டத்துக்கும் நிலையான ஆதரவளித்து வருகின்றன.

சோவியத் தொழிற்சங்கங்கள் 116 நாடுகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களுடன் பிணைப்புக்களை மேவிக் கொண்டுள்ளதோடு அவற்றுடன் செயலூக்கமாக ஒத்துழைத்தும் வருகின்றன.

சோவியத் தொழிற்சங்கங்கள் உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஒரு பகுதியாகும். இவை சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் பணியில் யூனெஸ்கோவிலும் பங்குகொள்ளுகின்றன.

**அனைத்து யூனியன் லெனினிய இளங் கம்யூனிஸ்டுக் கழகம் (ஒய். சி. எல்)** காம்சொமோலானது முன்னணி இளம் சோவியத் மக்களின் வெகுஜன நிறுவனமாகும். உணர்வு பூர்வமான, சோஷலிசத் தாயகத்துக்குத் தம்மை அர்ப்பணித்த, உயரிய கல்வி கற்ற, இளம் கம்யூனிச சமுதாய நிர்மாணிகளை வளர்த்து ஆளாக்குவதே இதன் முக்கிய பணியாகும், தமது பணியில் சோவியத் இளைஞர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதும், தமது அறிவாற்றலையும் கல்வியையும் நல்குதலும், நாட்டின் சமூக, அரசியல் வாழ்க்கையில் தீவிரமாக முனைவதும், சோவியத் யூனியனின் சகல இன மக்களிடையிலும் நட்புறவை வளர்த்துக் கொள்ளவும், எல்லா நாடுகளிலும் உள்ள உழைப்பாளி இளைஞர்களுடனும் சோதரப் பிணைப்புக்களை வலுப்படுத்திக் கொள்ளுவதும் இளங் கம்யூனிஸ்டுக் கழக (ஒய் சி எல்) உறுப்பினர்களின் கடமை. இந்த இளங் கம்யூனிஸ்டுக் கழகத்திற்குரிய விதிகளும் மத்திய, ஸ்தல தலைமை அமைப்புக்களும் உள்ளன. இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் எல்லாச் செயல்முறைகளும் சோவியத் கம்யூனிஸ்டு, கட்சி தலைமையிலேயே வழிகாட்டப் பெறுகின்றன. இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தை ஒவ்வொரு

அரசாங்க, பொருளாதார நிர்மாணத் துறையில் தனது முதல் உதவியாளஞக சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

1918 ஆம் ஆண்டு, அக்டோபர் 29ல் நடைபெற்ற, தொழிலாளர், விவசாயிகளின் இளைஞர் கழகங்களின் முதலாவது அனைத்து ரஷ்ய காங்கிரசில் இளங் கம்யூனிஸ்டுக் கழகம் அமைக்கப் பட்டது. பண்ணைகள், ஆலைகள். அலுவலகங்கள், பள்ளிகள் கல்லூரிகள், ஆகியவற்றிலும, சோவியத் சேனை யூனிட்டுகளிலும் உள்ள ஆரம்ப அமைபபுக்களைக் கொண்டு இளங் கம்யூனிஸ்டுக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. மற்றும் மூன்று இளம் கம்யூனிஸ்டுக் கழக உறுப்பினர்கள் எங்கு இருந்தாலும் அங்கு அதன் அமைப்புக்கள் நிறுவப்படுகின்றன.

இளங் கம்யூனிஸ்டுக் கழகத்திற்கு, 1973ல் 4 லட்சத்துக்கும் அதிகமான ஆரம்ப அமைப்புக்கள் இருந்தன; இவற்றின் உறுப்பினர் தொகை கிட்டத்தட்ட 3 கோடி. இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தில் 14-28 வயதுக்குட்பட்ட இளைஞர்கள், இளம் பெண்கள் எவரும் சேரலாம். அனைத்து யூனியன் இளம் கம்யூனிஸ்டுக் கழகக் காங்கிரஸ்தான் இதன் உயர் அதிகார அமைப்பாகும். காங்கிரசுகள் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில் இளங் கம்யூனிஸ்டுக் கழக நடவடிக்கைகள் யாவும் அதன் மத்தியக் கமிட்டியின் மூலமாகவே வழி நடத்தப்படுகின்றன. இதன் உறுப்பினர்களிடையி லிருந்து, செயற்குழுவும், அரசியல் குழுவும் தேர்ந்தெடுக்கப் படுகின்றன. இளங் கம்யூனிஸ்டுக் கழக மத்தியக் கமிட்டியின் முதற் செயலாளர் இ. எம். தியோஷெல்னிக்கோவ்.

ஜனநாயக இளைஞர்களின் உலக சம்மேளனம், மாணவர்களின் சர்வதேச சங்கம, உலக இளைஞர் விழாக்கள் ஆகியவற்றின் பணிகளில் இளங் கம்யூனிஸ்டுக் கழக உறுப்பினர்கள் தீவிரமாகப் பங்கு கொள்ளுகின்றனர். மற்றும் இவர்கள் நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் உள்ள இளம் மக்களுடனும், 30 சர்வதேச நிறுவனங்களுடனும், பல்வேறு வகைப்பட்ட ஆயிரம் தேசிய, இளைஞர், மாணவர் நிறுவனங்கள், குழந்தைகளுக்கான நிறுவனங்கள் ஆகியவற்றுடனும, நேச பூர்வமான தொடர்புகளை வைத்துப் பேணி வருகின்றனர்.

இளம் கம்யூனிஸ்டுக் கழகம் 160 காம்சொமால், இளம் பயோனீர்களின் செய்தி இதழ்களை வெளிபிடுகின்றது. (காம்சொமால்ஸ்காயா பிராவ்தா, இது 80 லட்சத்துக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகின்றது பயோனெர்ஸ்காயா பிராவ்தா ஆகிய இரண்டுப் மத்திய பத்திரிகைகளாகும்) மற்றும் இளைஞர்களுக்கான 26 சஞ்சிகைகளையும், 40 இளம் பயோனீர்கள், குழந்தைகளுக்கான பத்திரிகைகளையும் சோவியத் மக்களிடை வழங்கும் 22

மொழிகளில் வெளியிடுகின்றது. இவற்றின் மொத்த விற்பனை 6 கோடி 40 லட்சம் பிரதிகளாகும். மற்றும் ரேடியோ, டெலிவிஷன் சம்பந்தமான 286 இளைஞர் ஆசிரியர் குழுக்களும், மூன்று பதிப்பகங்களும், (இளங் கம்யூனிஸ்டுக் கழக மத்தியக் கமிட்டி நடத்தும் "மொலோதயா குவார்தியா", "மொலோத" (உக்ரைன்) யெஷ்குவார்தியா (உஸ்பெக் குடியரசு) ஆகியனவும் உள்ளன.

அனைத்து யூனியன் லெனின் இளம் பயோனீர் நிறுவனம். இது, லெனின் பெயரைக் கொண்ட குழந்தைகளின் மிகப்பெரிய இஷ்டபூர்வமான கம்யூனிஸ்டு நிறுவனமாகும். இது 2 கோடி 50 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டது. இது 1922 மே, 19ல் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்து யூனியன் லெனினிய இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தால் வழி நடத்தப்படுகின்றன.

இந்த இளம் பயோனீர்கள் நிறுவனமானது, இதர பள்ளி, பொது ஸ்தாபனங்களுடன் சேர்ந்து, தாயகத்தின்பால் நேயம் கொள்ளுதல், கம்யூனிஸ்டுக் கட்சியின்பால் ஈடுபாடு, மக்களிடை நட்புறவு ஆகிய உணர்வினைக் குழந்தைகளிடம் ஊட்டி வளர்க்கிறது. சமூக வாழ்க்கையில் முனைப்பாக முன்னிற்க வேண்டும் வினையூக்கமுடனும் ஆரோக்கியமுடனும் இருக்க வேண்டும், - உடலியலிலும் தார்மிக ரீதியிலும் - என்று இந்நிறுவனம் குழந்தைகளுக்குப் போதித்து வருகிறது.

பத்து, பதினைந்து வயதுக்குட்பட்ட எந்த ஒரு பள்ளிக் குழந்தையும் இளம் பயோனீர் - நிறுவனத்தில் உறுப்பினராக சேரலாம். அனுமதிப் பிரச்சினை இளம் பயோனீர் யூனிட் அணி வகுப்பில் முடிவு செய்யப்படுகிறது.

இளம் பயோனீர் நிறுவனம் யூனிட்டுகளிலிருந்து உருவாக்கப்பட்டதெனலாம். இவை, பள்ளியில் ஒரே குழுவில் கலந்து கொள்ளும் இளம் பயோனீர்களை இணைக்கின்றன. (தங்குமிடங்களிலும் கூட யூனிட்டுகள் அமைக்கப்படலாம்.) யூனிட்டுகள் பள்ளிகளிலும், குழந்தை இல்லங்களிலும், போர்டிங் பள்ளிகளிலும் இயங்கும் குழுக்களாக அமைக்கப்படுகின்றன.

இந்த அமைப்பின் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அதற்குரிய செம்பதாகை உண்டு, ஒவ்வொரு யூனிட்டுக்கும் சிறிய கொடியும் உண்டு. இளம் பயோனீர்களின் இதர சின்னங்கள் வருமாறு: முக்கோண வடிவுள்ள கழுத்துப் பட்டை, பயோனீர் சல்யூட் முறை; ''கம்யூனிஸ்டுக் கட்சி இலட்சியத்துக்காகப் போராடத் தயாராக இருங்கள்' என்பது இதன் குறிகோள் வாசகம். ''எப்போதும் சித்தமாயிருக்கிறோம்'' என்று பதிலளிக்கப்படுகிறது.

இளம் பயோனீர்கள் தமது நாட்டைப் பற்றி மேலும் நன்கு தெரிந்து கொள்வதற்காக, அணிவகுப்புக்கள், உல்லாசப் பயணங்கள், சிறு தூரம் பிரயாணங்கள் ஆகியவற்றுக்கும், திறமை மிக்க இளைஞர்களுக்கான விழாக்கள், விளையாட்டுப் பந்தயங்கள், இராணுவ விளையாட்டுப் பந்தயங்கள் ஆகியவற்றுக்கும் ஏற்பாடு செய்கின்றனர். அவர்கள் தமது மன்றங்களில் விஞ்ஞான இளம் நண்பர்களின், தொழில் நுட்ப, கலைக் குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். இதுமட்டுமல்லாமல், தாங்கள் தங்கியுள்ள இடங்களில் தமது அண்டையிலுள்ளவர்களுக்கும், ஏனைய வெவ்வேறு வட்டாரங்களுக்கும் உதவி புரிய பல குழுக்களையும் அமைக்கின்றனர்.

லட்சோப லட்சம் சோவியத் குழந்தைகள் தமது விடுமுறை நாட்களை இளம் பயோனீர் முகாம்களிலும், உல்லாசப் பயணக் கேந்திரங்களிலும், ஆரோக்கிய இலலங்களிலும் இனிதே செலவிடுகின்றனர். உதாரணமாக, 1973ல் சுமார் 10 ஆயிரம் கிராமப்புற முகாம்கள் 50 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகளுக்கு இடவசதியளித்தன. நாட்டில் மிகப் பெரிய முகாமான ஆர்த்தெக் முகாம் கருங்கடற்கரையில் கிரிமியாவிலுள்ளதாகும், இது ஆண்டு தோறும் 30 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகளுக்கு விடுமுறையைக் கழிக்க, எல்லா வசதிகளையும் வழங்குகின்றது.

சோவியத் யூனியனில் 3500க்கும் அதிகமான இளம் பயோனீர்கள், பள்ளிக் குழந்தைகளின் இல்லங்களும், மாளிகைகளும், சுமார் 900 இளம் தொழில் நுட்ப நிபுணர்கள், இயற்கையாளர்கள் நிலையங்களும், உல்லாசப் பயணிகள் கேந்திரங்களும், 2500க்கும் அதிகமான விளையாட்டுப் பள்ளிகளும், 3200 இசை, கலை, பாலே நாட்டியப் பள்ளிகளும், 127 குழந்தைகள் நாடக அரங்குகளும் 32 குட்டி ரயில்களும் உள்ளன. மேலும், வயது வந்தவர்களுக்கான மன்றங்கள் கலாசார மாளிகைகள், ஆகியவற்றில் குழந்தைகளுக்கான விசேட பகுதிகளும் உள்ளன. இவையல்லாமல், குழந்தைப் பூங்காக்கள், விளையாட்டரங்குகள், சிறு கப்பற்தொகுதி, மோட்டார் பாதைகள் ஆகியனவும் உள்ளன.

குழந்தைகளுக்காக 27 செய்தி இதழ்களும், கிட்டத்தட்ட 40 பத்திரிகைகளும் வெளியிடப்படுகின்றன. பயோனெர்ஸ்காயா பிராவ்தா எனும் மத்திய இளம் பயோனீர் பத்திரிகை 90 லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றது. விசேட பதிப்பகங்கள் ஆண்டு தோறும் குழந்தைகளுக்காக லட்சக்கணக்கான புத்தகங்களை வெளியிடுகின்றன.

சோவியத் இளம் பயோனீர்கள் 60க்கும் அதிகமான நாடுகளில் உள்ள குழந்தைகள் நிறுவனங்களுடன் தொடர்புகள் வைத்துக் கொண்டுள்ளனர்.

சோவியத் மாதர் கமிட்டியானது 1941ல் பாசிசத்துக்கு எதிரான சோவியத் மாதர்கள் கமிட்டியாக நிறுவப் பட்டதாகும். இதன் இப்போதைய பெயர் 1956ல் வழங்கப் பட்டது. சோவியத் மாதர்களுக்கும் அயல் நாட்டு மாதர் களுக்கும் இடையில் உள்ள நேசப் பிணைப்புக்களையும், பரஸ்பர நல்லிணக்கத்தையும் வலுவாக்குதலும் பெண்கள், குழந்தைகளின் உரிமைகளுக்கான சர்வதேச ஜனநாயக இயக்கத்தில் பங்கு கொள்ளுதலும் இந்தக் கமிட்டியின் நோக்கங்கள்.

இந்தக் கமிட்டியை நிர்வகிக்கும் உயர் அமைப்பு பிளீனம் கூட்டம். பிளீனம் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இதன் தலைமைக் குழுவே நிர்வாசம் செய்கிறது. இந்தக் கமிட்டியின் தலைவர் முதலாவது பெண் விண்வெளி வீரர் வாலெந்திறு-நிக் கொலெயேவா - தெரஷ்கோவா. இந்தக் கமிட்டி சர்வதேச, ஜனநாயக மாதர் சம்மேளனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த மாதர் கமிட்டி 120 நாடுகளில் உள்ள மாதர் நிறுவனங் களுடன் தொடர்பு கொண்டுள்ளது.

இந்தக் கமிட்டியானது, தொழிற் சங்கங்களின் அனைத்து யூனியன் மத்தியக் கவுன்சிலுடன் சேர்ந்து, சோவியத் பெண் எனும் பத்திரிகையை 10 மொழிகளில் பிரசுரிக்கிறது. இதன் முகவரி: 23, புஷ்கின் தெரு, மாஸ்கோ.

சோவியத் இளைஞர் நிறுவனங்களின் கமிட்டி 1956ல் நிறுவப் பட்டது. (இது 1941 முதல் 1956 வரை) பாசிசத்துக்கு எதிரான சோவியத் இளைஞர் கமிட்டி என அழைக்கப்பட்டது. ஏகாதிபத்தி யத்துக்கு எதிரான போராட்டத்திலும், சமாதானம், தேச சுதந் திரம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்கான போராட்டத்திலும் இளந் தலைமுறையினரின் பிரயத்தனங்களை ஒருமுகப்படுத்துவதும், அவர்களை ஊக்குவிப்பதும் இதன் நடவடிக்கைகளின் குறிக்கோள். சோவியத் இளைஞர் நிறுவனங்களில் உள்ள இளைஞர், மாணவர் நிறுவனங்கள் பல்வேறு சர்வதேச ஸ்தாபனங்களுடன் வைத்துள்ள ஒத்துழைப்பை வலுவாக்குவதும் இதன் நோக்கம். சோவியத் இளைஞர் நிறுவனங்களின் கமிட்டி 126 நாடுகளில் உள்ள இளைஞர் களுடன் தொடர்பு கொண்டுள்ளது. இந்தக் கமிட்டி பல்வேறு வகையான பொது, தொழில், மாணவ, கலாசார, விளையாட்டுப் பந்தய ஸ்தாபனங்களையும் மற்றும் இளைஞரிடை பணி புரிகின்ற பல நிறுவனங்களையும் இணைக்கிறது.

1972 நவம்பரில் உழைப்பாளி இளைஞர்களின் சர்வதேசக் கூட்டம் மாஸ்கோவில் நடைபெற்றது. இது, சோவியத் இளைஞர் நிறுவனங்களின் கமிட்டியினது முன் முயற்சியினுல் நடைபெற்றது.

இந்தக் கமிட்டியில் சோவியத் மாணவர் கவுன்சிலின் மூலமாக மாணவர் ஸ்தாபனங்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. சோவியத் இளைஞர் ஸ்தாபனங்களுக்கு, ஜனநாயக இளைஞர்களின் உலக சம்மேளனம், இந்த ஸ்தாபனத்தின உலக இளைஞர்கள் எனும் பத்திரிகையினுடைய ஆசிரியர் குழு, சர்வதேச மாணவர் சங்கச் செயற்குழு, இதன் பத்திரிகையான உலக மாணவர் செய்தியின் ஆசிரியர் குழு, ஆகியவற்றில் நிரந்தரப் பிரதிநிதிகள் உள்ளனர். சோவியத் இளைஞர் கமிட்டிக்கு யூனியன் குடியரசுகள், பிராந்தியங்கள், பிரதேசங்கள் ஆகியவற்றில் கிளைகள் உள்ளன. சோவியத் இளைஞர் நிறுவனங்களின் கமிட்டித் தலைவர் ஜி. ஐ. யனயேவ்.

முகவரி: 8/7, போல்ஷாய் காம்சொமால்ஸ்கி, பெரியுலோக், மாஸ்கோ.

அயல் நாடுகளுடன நட்புறவு, கலாசார உறவு கொள்வதற்கான சோவியத் கழகங்களின ஒன்றியம் 1958ல் நிறுவப்பட்டது. (1925-1958 ஆம் ஆண்டுகளுக்கிடையில் அயல் நாடுகளுடன் கலாசார உறவு கொள்வதற்கான அனைத்து யூனியன் கழகம் இருந்தது.) அயல்நாடுகளுடன் நட்புறவு கலாசார, உறவு கொள்வதற்கான சோவியத் கழகங்களின் ஒன்றியத்தினது உயர் அதிகார அமைப்பு அனைத்து யூனியன் காங்கிரசாகும். இந்தக் காங்கிரஸ் ஒன்றியத்தின் கவுன்சிலையும்-காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சங்கத்தை நிர்வகிக்கும் அமைப்பு-தணிக்கைக் கமிஷனையும் தேர்ந்தெடுக்கிறது. இக்கவுன்சில் நிர்வாக அமைப்பான தலைமைக் குழுவைத் தேர்நதெடுக்கிறது. தலைமைக் குழுத் தலைவர் பிரபல பொது வாழ்வுப் பிரமுகரான என். வி. பொப்போவா.

அயல் நாடுகளுடன் நட்புறவு, கலாசார உறவு கொள்வதற்கான கழகங்களின் ஒன்றியம் ஒரு வெகுஜன ஸ்தாபனமாகும். இதன் நடவடிக்கைகளில் லட்சக்கணக்கான சோவியத் மக்கள் பங்கு கொள்ளுகின்றனர். அயல் நாடுகளுடன் நட்புறவு கலாசார உறவு கொள்ளுவதற்கான 58 கழகங்களை இது இணைக்கிறது. மற்றும் இது பல்வேறு விஞ்ஞானம், கலாசாரம், கலை இவற்றுக்கான 16 பகுதிகளையும், சங்கங்களையும், சோவியத் நகரங்களுக்கும் அயல் நகரங்களுக்கும் இடையிலான கழகத்தையும், ரஷ்ய சமஷ்டியிலுள்ள 6 சோவியத் கிளைகளையும், (லெனின்கிராடு, வோல்காகிராடு, இர்குத்ஸ்க், காபரோவ்ஸ்க், சோச்சி, டோக்ளியாட்டி) 795 குடியரசு, பிராந்திய, பிரதேச. நகர, வட்டார நட்புறவுக் கழகங்களையும், கிட்டத்தட்ட 20 000 கூட்டு உறுப்பினர்களையும் (தொழில் நிலயங்கள், ஆராய்ச்சி நிலையங்கள். கூட்டுப் பண்ணைகள், அரசாங்கப் பண்ணைகள் பொது, கலாசார, கல்வி நிறுவனங்கள், கல்வி ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள்) இணைக்கின்றது.

மாஸ்கோவில், அயல்நாட்டு மக்களுடன் நட்புறவு கொள்ளுவதற் கான நட்புறவு மாளிகையும், லெனின்கிராடில் சமாதான-நட்புறவு மாளிகையும் உள்ளன. அயல் நாடுகளுடன் நட்புறவு, கலாசார உறவு கொள்ளுவதற்கான சோவியத் கழகங்களின் ஒன்றியம் மாஸ்கோ நியூஸ் எனும் பத்திரிகையை ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிய, அராபிய மொழிகளிலும், கல்ச்சா அண்டு லைப் எனும் பத்திரிகையை ரஷ்யன், ஆங்கிலம், ஸ்பானிய, பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலும் வெளியிடுகிறது.

இந்த ஒன்றியம் 135 நாடுகளில் உள்ள 6 ஆயிரத்துக்கும் அதிக மான பொது, விஞ்ஞான, கலாசார நிறுவனங்களுடனும், கலாசார, விஞ்ஞான உலகிலுள்ள முக்கிய பிரமுகர்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

இதன் முகவரி : 14, கலினின் புராஸ்பெக்த், மாஸ்கோ.

முதுபெரும் சோவியத் யுத்த வீரர்கள் கமிட்டி 1956 செப்டம்பரில் நிறுவப்பட்டது. இதன் உயர் அதிகார அமைப்பு அனைத்து யூனியன் முதுபெரும் யுத்த வீரர்கள் மாநாடாகும். மாநாடுகளுக் கிடையில் கமிட்டியின் பிளீனம் இதை நிர்வகித்து வருகிறது. இந்தக் கமிட்டியின் தலைவர் ஜெனரல் பி. ஐ பாதோவ்.

இந்தக் கமிட்டியானது, முன்னாள் முன்னணி யுத்த வீரர்கள், விடுதலை இயக்கப் போர் வீரர்கள், பாசிசத்தால் பழிவாங்கப்பட்ட வர்கள், யுத்தத்தால் ஊனமடைந்தவர்கள் ஆகியோரது தேசிய, சர்வதேசிய நிறுவனங்களுடன் நட்புப் பிணைப்புக்களை நிறுவி வளர்த்து வருகிறது. இநதக் கமிட்டி, விடுதலை இயக்கங்களின் சர்வ தேச சம்மேளனத்திலும் மற்றும் ஆஸ்ச்வித்ஸ், மாவ்தாவ்சன், தாச்செள ஆகியவற்றின் முன்னாள் பழி வாங்கப்பட்டவர்களின் சர்வதேச கமிட்டிகளில் உறுப்பினர்களாயுள்ளது.

முகவரி : 4, கோகல் புலிவார், மாஸ்கோ.

சோவியத் சமாதானக் கமிட்டி 1949ல் அமைக்கப்பட்டது. இது சோவியத் யூனியனில் சமாதான இயக்கங்களை ஒருமுகப்படுத்திச் செயல்பட வைக்கும் நிறுவனமாகும். இதை இயக்கும் அமைப்பு இதன் தலைமைக் குழு. இக்குழுவின் தலைவர் புகழ்மிகு சோவியத் எழுத்தாளரும், லெனின் பரிசு வெற்றியாளருமான என். எஸ். திக்கொனேவ்.

20ஆம் நூற்றுண்டும் சமாதானமும் எனும் மாதாந்திர செய்தி இதழை ரஷ்யன், ஆங்கிலம், ஸ்பானிய, பிரெஞ்சு, ஜெர்மன் மொழி களில் வெளியிடுகிறது.

முகவரி : 10, கிரோபோத்கின்ஸ்காயா தெரு, மாஸ்கோ.

சோவியத் ஆசிய-ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டுக் கமிட்டி ஆசிய-ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு இயக்கத்தின் ஒற்றுமையையும், இணைவையும் வலுவாக்குதல், சோவியத் மக்களுக்கும், ஆசிய ஆப்பிரிக்க மக்களுக்கும் இடையிலான நட்பையும் ஒத்துழைப்பையும மேம்படச் செய்தல் ஆகிய இவை இந்த ஸ்தாபனத்தின் குறிக்கோள்களாகும். இது 1956 மே மாதத்தில் அமைக்கப்பட்டது. இதன் தலைவர் தாஜிக் சோவியத் எழுத்தாளரான மிர்ஸோ துர்சுன் ஜாதே. கெய்ரோவில் உள்ள ஆசிய-ஆப்பிரிக்க மக்கள் ஒருமைப் பாட்டு நிறுவனத்தின் நிரந்தர செயற்குழுவில் இந்தக் கமிட்டியின் பிரதிநிதிகள் உள்ளனர்.

முகவரி : 10, கிரோபோத்கின்ஸ்காயா தெரு, மாஸ்கோ.

கிரேக்க ஜனநாயக வாதிகளுடன் ஒருமைப்பாட்டுக்கான சோவியத் கமிட்டியானது, கிரீசில் ராணுவத்தால் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏயூசிசிடியூ, சோவியத் சமாதானக் கமிட்டி, இளைஞர் நிறுவனங்களின் சோவியத் கமிட்டி, சோவியத் மாதர் கமிட்டி, சோவியத் புதுபெரும் வீரர்களின் கமிட்டி, அயல் நாடுகளுடன் நட்புறவு, கலாசார உறவு கொள்ளுவதற்கான சோவியத் கழகங்களின் ஒன்றியம், சோவியத் பத்திரிகையாளர்களின் சங்கம் சோவியத் எழுத்தாளர்கள் சங்கம், ஆகியவற்றால் உருவாக்கப் பட்டதாகும். இநதக் கமிட்டியின் தலைவர் பிரபல எழுத்தாளர் செர்கி ஸ்மிர்னோவ், புகழ்மிக்க பொது வாழ்வுப் பிரமுகர்கள் இக்கமிட்டி உறுப்பினர்களாயுள்ளனர்.

இந்தக் கமிட்டி ரஷ்யன், கிரேக்கம், பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் ஆகிய மொழிகளில் மாத இதழ் ஒன்றை வெளியிடுகிறது.

இந்தக் கமிட்டியின் முகவரி : 10, கிரோபோத்கின்ஸ்காயா தெரு, மாஸ்கோ.

ஐரோப்பிய பந்தோபஸ்துக்கான சோவியத் கமிட்டி 1971 ஜூனில் அமைக்கப்பட்டது. இது, தொழிற்சங்கம், இளைஞர் நிறுவனங்கள், பெண்கள் ஸ்தாபனங்கள், ஆராய்ச்சிக் கழகங்கள், கூட்டுறவுக் கழகங்கள் முதலானவற்றின் பிரதிநிதிகளாலும், இதர பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாலும், கலை, இலக்கியக் கழகங் களின, உறுபபினர்கள் சோவியத் நாடாளுமன்ற குழுவினர் ஆகிய வர்களைக் கொண்டும் நிறுவப்பட்டதாகும். பொது வாழ்வுப் பிரமுகர்கள், தொழிலாளர்கள், குடியானவர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளாகள், கலாசார ஊழியர்கள் ஆகியோர் இக் கமிட்டி உறுபபினர்களாயுள்ளனர். சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் யூனியன் கவுன்சில் தலைவரும், சோவியத் நாடாளுமன்றக்

குழுத் தலைவருமான ஏ. பி. ஷித்திகோவ் இந்தக் கமிட்டித்தலைவர். இக்கமிட்டி, ரஷ்யன், பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் மொழிகளில் ஒரு பிரசுரம் வெளியிடுகிறது.

இச்கமிட்டியின் முகவரி: 10, கிரோபோத் கின்ஸ்காயா தெரு, மாஸ்கோ.

**சோவியத் யூனியனில் ஐக்கிய நாடுகள் சங்கம்.** இது 1956ல் நிறுவப்பட்டது. இதன் தலைமை உறுப்பான மத்திய போர்டின் தலைவர் பேரவையாளர் கான்ஸ்தாந்தினேவ். இதில் பத்துக் கூட்டு உறுப்பினர்கள் உள்ளனர். சோவியத் விஞ்ஞானப் பேரவை, தொழிற்சங்கங்களின் அனைத்து யூனியன் மத்திய கவுன்சில், அனைத்து யூனியன் ஸ்நானியே சழகம் முதலானவை. இவற்றின் மூலமாக இந்த ஸ்தாபனம் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் பிரபலப்படுத்துகின்றது; சமாதானம், சர்வதேச ஒத்துழைப்பு, மக்களிடையில் பரஸ்பர நல்லிணக்கம், பெருமளவில் ஒருமைப்பாடு, நட்புறவு ஆகியவற்றுக்காகப் பாடுபடுகிறது.

சோவியத் ஐக்கிய நாடுகள் சங்கம், ஐக்கிய நாடுகள் சங்கங்களின் உலக சம்மேளனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

முகவரி: 19, திமித்ரி உல்யானேவ் தெரு, மாஸ்கோ.

**சர்வதேச சட்டத்திற்கான சோவியத் சங்கம்,** 1957ல் நிறுவப்பட்டது. இது, சர்வதேச சட்ட சங்கத்தின் தேசியப் பிரிவாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த சர்வதேச சட்ட சங்கத்தின் தலைமையகம் லண்டனில் இருக்கிறது.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள், சர்வதேசப் பிரச்சினைகளில் தனிப் பயிற்சி பெறும் சட்ட அறிஞர்களும், மேல் கல்வி நிலைய ஆசிரியர்களும் அமைச்சக அதிகாரிகளும், ராஜிய நிபுணர்களும், சர்வதேச சட்ட நிபுணர்களுமாவர். இந்தச் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஜி. ஐ. துன்கின்.

இந்தச் சங்கம் சர்வதேச சட்டம் பற்றிய சோவியத் ஆண்டு நூலை வெளியிடுகிறது.

முகவரி: 10, பிரூன்ஸ் தெரு, மாஸ்கோ.

**சோவியத் ஸ்லாவ் கமிட்டி:** இது 1947ல் அமைக்கப்பட்டது. இது, சோவியத் மக்களுக்கும், அயல் நாடுகளில் உள்ள ஸ்லாவ் இன மக்களுக்கும் இடையே சோதர நட்புறவை மேம்படுத்தப் பாடுபடுகிறது. இந்தக் கமிட்டியின் தலைவர் ஏ. எஸ். குந்தரோவ், முகவரி: 10, கிரோபோத் கின்ஸ்காயா தெரு, மாஸ்கோ,

சோவியத் செஞ்சிலுவைச் சங்கங்கள், செம்பிறைச் சங்கங்களின் ஒன்றியம்: இது, 1923ல் அமைக்கப்பட்டது. இது, சர்வதேச செஞ்சிலுவை சங்கங்களின், நிறுவனத்தில் சோவியத் செஞ்சிலுவை சங்கங்கள், செம்பிறைச் சங்கங்களின் ஒன்றியத்தினுடைய நிர்வாகக் கமிட்டி மூலமாக பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது. இந்த நிர்வாகக் கமிட்டித் தலைவர் என். வி. திரோயான்.

சோவியத் யூனியனில் 4,23,000 தொடக்க அமைப்புக்கள் உள்ளன. இவற்றின் உறுப்பினர் தொகை 8 கோடி 50 லட்சத்துக்கும் அதிகம், இவை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவும், தொற்று நோய்களை ஒழிக்கப் போராடவும், சுற்றுப்புறங்களை காப்பாற்றவும், இரத்த தான இயக்கத்தை ஒழுங்கமைக்கவும் மருத்துவ நிலையங்களுக்கு உதவி புரிகின்றன.

சோவியத் செம்பிறை, செஞ்சிலுவைச் சங்கங்களின் ஒன்றியமானது, பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் தமக்கு தேவையான மருத்துவ மனைகளையும், சிகிச்சை நிலையங்களையும் கட்டிக் கொள்வதற்கும், தொற்று நோய்களை ஒழிக்கவும், மருத்துவ ஊழியர்களைப் பயிற்றுவிக்கவும் உதவி புரிகின்றன. இயற்கை உற்பாதங்களால் பாதிக்கப்படும் நாடுகளுக்கும் இது உதவி புரிகிறது. மற்றும் சோவியத் மக்களும் இதர நாடுகளின் மக்களுடன் காணுமற் போன தமது உறவினர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் உதவி புரிகிறது. இதன் நிர்வாகக் கமிட்டி சோவியத் செஞ்சிலுவை எனும் மாத ஏட்டினை வெளியிடுகிறது. முகவரி: 51வது செர்யோ முஷ்கின்ஸ்கி புரோயெஸ்த், மாஸ்கோ.

அனைத்து யூனியன் ''ஸ்னானியே'': (ஞானம்) கழகம் ஒரு விஞ்ஞான, கல்விக் கழகம். இது, 1947ம் ஜூலையில் நிறுவப்பட்டது. இதன் போர்டுதான் இதை நிர்வகிக்கும் அமைப்பு. இதன் தலைவர் பேரவையாளர் ஐ ஐ. அர்த்தோபோலெவ்ஸ்கி, இந்தக்கழகம் 1,31,422 தொடக்க நிறுவனங்களை இணைக்கின்றது.

இதன் உறுப்பினர் தொகை 25,00,000. இவர்களில் 1700 பேர் சோவியத் விஞ்ஞானப் பேரவை, யூனியன் குடியரசுகளின் விஞ்ஞானப் பேரவைகள் ஆகியவற்றின் பேரவை இணைப்பு உறுப்பினர்களுமாவர்; மற்றும் 1,07,000பேர் விஞ்ஞானத்தில் டாக்டர் பட்டமும், கேண்டிடேட பட்டமும் பெற்றவராவர். 1972ல் இந்தக் கழகத்தின் உறுப்பினர்கள் 20,000 சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்: இக்கூட்டங்களில் 95 கோடிக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். மேலும் ஏறத்தாழ 3 லட்சம் ரேடியோ, டெலிவிஷன் ஒலி பரப்புக்களும் செய்யப்பட்டன. சுமார் 70லட்சம் விவாதங்களும் 8 லட்சம் கூட்டங்களும், விஞ்ஞான ஆலோசனைகளும், மற்றும் பலவகைக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. 22,500

மக்கள் பல்கலைக் கழகங்களில் (இதில் 50 லட்சம் பேர் பயிலுகின்றனர்.) இந்தக் கழகம் பெரும்பணி புரிந்துள்ளது. பாலிடெக்னிக் பொருட்காட்சிக்கூடம், மாஸ்கோ மத்திய சொற்பொழிவு ஸ்தாபனம், பல நகரங்களில் உள்ள சொற்பொழிவு ஸ்தாபனங்கள், விஞ்ஞான - தொழில் நுட்ப பிரசார இல்லங்கள் (மாஸ்கோ, லெனின் கிராடு, கீவ் ஆகியவற்றின்) மத்திய பாலிடெக்னிக் நூலகம், விஞ்ஞான நாத்திக இல்லங்கள். (மாஸ்கோ, புரூன்ஸ், தாஷ் கெண்டு)-கிவாவில் ஒரு கிளையும் இதற்குள்ளது- ஆகிய இவை இக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கழகத்துக்கு 32 கோள் ஆராய்ச்சி நிலையங்களும் உள்ளன.

இந்தக் கழகத்தின் நிறுவனங்களால் 1973ல் வெளியிடப்பட்ட விஞ்ஞானப் பிரசுரங்கள் 10 கோடி பிரதிகளுக்கும் அதிகமானவை.

முகவரி: 4, பிரோயிஸ்த் செரோவா, மாஸ்கோ.

**சேனை, விமானப்படை இவற்றுடன் ஒத்துழைப்பதற்கான அடிப்படையிலமைந்த சோவியத் கழகம** இராணுவ தேசபக்த வெகுஜன நிறுவனம். இது 1951ல் மூன்று பாதுகாப்பு கழகங்கள் இணைக்கப்பட்டதன் பயனாக நிறுவப்பட்டதாகும். சேனையுடன் ஒத்துழைப்பதற்கான, சுய விருப்ப அடிப்படையிலமைந்த கழகம், கடற்படையுடன் ஒத்துழைப்பதற்கான, சுயவிருப்ப அடிப்படையில் அமைந்த கழகம், விமானப் படையுடன் ஒத்துழைப்பதற்கான சுயவிருப்ப அடிப்படையிலமைந்த கழகம் ஆகியவை அவை. இந்த நிறுவனத்தின் அனைத்து யூனியன் காங்கிரசே இதன் உயர் அதிகார அமைப்பாகும். இக்காங்கிரஸ் இதன் மத்தியக் கமிட்டியையும், மத்தியத் தணிக்கைக் கமிஷனையும் தேர்ந்தெடுக்கிறது. இதன் தலைவர் மும்முறை சோவியத் யூனியன் வீரர் விருது பெற்ற விமானத்துறை மார்ஷல் ஏ. ஐ. பொக்ரிஷ்கின்.

முகவரி: 88/3 வோலொகொலாம்ஸ்கோயெ நெடுஞ்சாலை, மாஸ்கோ.

**சோவியத் விஞ்ஞான தொழில் நுட்பக் கழகங்கள்:** இவற்றில் உற்பத்திக்கிளைகளால் நிறுவப்பட்ட 23 விஞ்ஞான தொழில் நுட்ப கழகங்களும் அடங்கும். இவை தொழிற் சங்கங்களின் வழிகாட்டுதலில் செயல் படுகின்றன. இவை விஞ்ஞான, தொழில் நுட்பக் கழகங்களின் அனைத்து யூனியன் கவுன்சிலால் ஒன்றிணைக்கப்பட்டவையாகும். இவற்றின் தலைவர் ஏ. எய். இஷ்லின்ஸ்கி. 1973ல் 55,00,000 விஞ்ஞான - தொழில் நுட்பக் கழகங்களின் உறுப்பினர்களும், 1 லட்சத்துக்கும் அதிகமான நிதித்துறை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுமிருந்தனர். தொழில் நிலையங்களிலும், நிர்மாணத்தலங்களிலும், கூட்டுப்பண்ணை, அரசாங்கப் பண்ணை

களிலும் ஆராய்ச்சி, வடிவமைப்பு நிலையங்களிலும் உள்ள இந்தக் கழகத்தின் தொடக்க அமைப்புகளின் எண்ணிக்கை 1 லட்சத்தை எட்டியுள்ளது. இந்தத் தொடக்க அமைப்புகளின் 44000 கவுன் சில்கள் தொழில் நிலையங்களின் உற்பத்தி, தொழில் நுட்ப கவுன் சில்களின் செயல் முறைகளை நிறைவேற்றுகின்றன.

இந்தக் கழக நிறுவனங்களின் வழிகாட்டுதலில் 3,00,000க்கு அதிகமான புதுமை புனைவுக் குழுக்கள், பொருளாதார ஆய்வுக் குழுக்கள், ஆய்வுக்கூடங்கள், தொழில் நுட்பத் தகவல் குழுக்கள், பணியின் விஞ்ஞானப் பூர்வ ஒழுங்கமைப்புக்கான கவுன்சில்கள் முதலானவை தொழில் நிலையங்களிலும், கட்டட நிர்மாணம், போக்கு வரத்து, விவசாயத் தொழில் நிலையங்களிலும் செயல்படு கின்றன. இந்த விஞ்ஞான, தொழில் நுட்பக் கழகங்களுக்கும் பெரு நகரங்களில் அமைந்துள்ள தொழில் நுட்ப நிலையங்கள் உள்ளன. இவற்றின் அமைப்புக்கள் சுமார் 2500 மக்கள் பல்கலைக் கழகங்களைத் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காகவும், பொரு ளாதார அறிவாற்றலைப் வளப்படுத்துவதற்காகவும் நடத்தி வரு கின்றன. இவற்றில் 6 லட்சத்துக்கும் அதிகமானோர் பயிலுகின் றனர். விஞ்ஞான தொழில் நுட்பக் கழக மத்திய போர்டுகள் அமைச்சகங்கள், இலாகாக்கள் ஆகிய இவற்றுடன் சேர்ந்து 56 விஞ்ஞான தொழில் நுட்ப பத்திரிகைகளை வெளியிடுகின்றன. அனைதது யூனியன் விஞ்ஞான, தொழில் நுட்ப கழகக் கவுன்சிலின் அதிகார பூர்வமான பத்திரிகை என் டி ஓ எஸ் எஸ் ஆா (சோவி யத் விஞ்ஞான தொழில் நுட்பக் கழகங்கள) எனும் பெயருடைய தாகும்.

சோவியத் விஞ்ஞான தொழில் நுட்ப கழகங்கள் பிற நாடு களில் உள்ள விஞ்ஞான தொழில் நுட்ப இஞ்சினியரிங் கழகங் களுடன் தொடர்பு கொண்டுள்ளன. சோவியத் சழகங்களில் சில சர்வதேச அமைப்புக்களில் உறுப்பினர்களாகவும் உள்ளன. இந்த நிறுவனத்தின் அனைத்து யூனியன் கவுன்சிலானது இஞ்சினி யரிங் நிறுவனங்களின் உலக சம்மேளனத்தில் உறுப்பினராக இருந்து வருகின்றது.

முகவரி: 42 லெனின் புரோஸ்பெக்த், மாஸ்கோ.

புதுமை புனைவாளர்கள், சிரமைப்பாளர்களின் அனைத்து யூனியன் கழகம் 1958ல் நிறுவப்பட்டது. இதைத் தொழிற் சங்கங்கள் மேற்பார்வையிடுகின்றன.

1973ல் இந்தக் கழகத்தின் உறுப்பினர் தொகை சுமார் 60,00,000. இவற்றின் தொடக்க நிறுவனங்களின் எண்ணிக்கை 65000. 1972ல் கிட்டத்தட்ட 35,00,000 புதிய கண்டு

பிரசுரங்கள் புகுத்தப்பட்டன. இவற்றால் ஆண்டுக்கு சராசரி 300 கோடி ரூபிளுக்கும் அதிகமான தொகை சிக்கனம் ஏற்பட்டது.

இதன் மத்தியக் கவுன்சில் தலைவர் ஜி. பி. சோபொலேவ்".

இந்தக் கழகம் இசோப்ரெடெடெல் இ ரேசியனலேசேகர் (புதுமை புனைவாளர்) எனும் மாதப்பத்திரிகையை வெளியிடுகின்றது. இது 1929ல் நிறுவப்பட்டதாகும்.

முகவரி: 42, லெனின் புரோஸ்பெக்த், மாஸ்கோ.

அனைத்து யூனியன் விஞ்ஞான மருத்துவக் கழகங்கள்: 1973ல் 35 அனைத்து யூனியன் விஞ்ஞான மருத்துவக் கழகங்கள் சுமார் 3 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. சோவியத் பொது சுகாதார அமைச்சகத்தின் ஆலோசனை அமைப்பினால் விஞ்ஞான மருத்துவக் கழகத்தின் சவுன்சில் செயல்முறைகளில் இணக்கம் ஏற்பட்டது. இதன் தலைவர் கே. வி. புனின்.

இந்த அனைத்து யூனியன் விஞ்ஞான மருத்துவக் கழகங்கள் 37 விஞ்ஞானப் பத்திரிகைகளை வெளியிடுகின்றன, இவை 28 சர்வதேசக் கழகங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன.

இந்தக் கவுன்சில் முகவரி: 3, ரக்மனோவ்ஸ்கி பெரியூலோக், மாஸ்கோ.

சோவியத் எழுத்தாளர் சங்கம் 1931ல் நிறுவப்பட்டது. இதில் 7300 பேருக்கும் அதிகமானோர் உறுப்பினர்களாக உள்ளனர். சோவியத் எழுத்தாளர் சங்க போர்டின் முதல் செயலாளர் ஜி. எம். மார்கோவ். யூனியன் குடியரசுகளிலும், சுயாட்சிக் குடியரசுகளிலும், பல பிரதேசங்கள் பிராந்தியங்களிலும் ஸ்தல எழுத்தாளர் சங்கங்கள் பல உள்ளன. இவை நூற்றுக்கணக்கான செய்தி இதழ்களையும் சஞ்சிகைகளையும் பிரசுரிக்கின்றன. லித்தரதுர்னயா கெஜட்டா லிடரரி கெஜட், ஸ்வெஸ்தா (நட்சத்திரம்) ஸ்னாமியா (பதாகை) துருஷ்பா நாரோதோவ் (தேசங்களின் நட்பு) இனோஸ்த்ரான்னயா லித்தரேத்துரா (அயல் இலக்கியப்) நோவி மீர் (புதிய உலகம்) புனோஸ்த் (இளைஞன்) ஆகியவையும் முன் கூறியவற்றில் அடங்கும். "சோவெத்ஸ்கி பிசாதெல்" (சோவியத் எழுத்தாளர்) லித்தரதுர்னயா கெஜட்டா" பதிப்பகங்கள், கார்க்கி இலக்கியக் கழகம், ஆகிய இவையும், சங்க உறுப்பினர்களின் நல்வாழ்வு, ஆக்கப்பணி இவற்றை மேம்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட சோவியத் இலக்கிய நிதி இவை சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

முகவரி 52, வொரோவ்ஸ்கி தெரு, மாஸ்கோ.

சோவியத் ஓவியக் கலைஞர்கள் சங்கம், 10 ஆயிரத்துக்கும் அதிகமான சோவியத் கலைஞர்களையும், கலை விமர்சகர்களையும் இணைக்கும் சங்கமாகும். சோவியத் ஓவியக் கலைஞர்களின் சங்க போர்டின் முதற் செயலாளர் புகழ் பெற்ற கலைஞர் என். ஏ. பொனொமரெவ். இது 1932ல் இருந்த சோவியத் கலைஞர்களின் பிரதேச, நகர, யூனியன் குடியரசுகளிலுள்ள சங்கங்களின் அடிப்படையில் 1957ல் அமைக்கப்பட்டதாகும். இதன் பத்திரிகைகள் இஸ்குஸ்த்வோ (கலை) துவோர்செஸ்த்வோ (ஆக்கப்பணி) தெகொராதிவ்நொயே இஸ்குஸ்த்வோ எஸ் எஸ் எஸ் ஆர் (சோவியத் யூனியனில் அலங்காரக் கலை) ஆகியனவாம். இந்த சங்கத்துடன் சோவியத் கலை நிதி இணைக்கப்பட்டுள்ளது. அது படைப்பாக்கப் பணியையும், அதன் உறுப்பினர்களின் நலவாழ்வையும் மேம்படுத்துவதற்கானதாகும்.

முகவரி: 16 கோகல் புலிவார், மாஸ்கோ.

சோவியத் கட்டடக் கலைஞர்கள் சங்கம். 1932ல் அமைக்கப்பட்டது. அப்போது பல்வேறு கட்டடக் கலைஞர் குழுக்களும் ஒரே அமைப்பில் இணைந்தன. சோவியத் கட்டடக் கலைஞர்களின் சங்கத்தின் முதற்செயலாளர் ஜி. எம். ஓர்லோவ். இவர் புகழ்பெற்ற கட்டடக் கலைஞராவார். இதில் 12,000 உறுப்பினர்கள் உள்ளனர். ஆர்க்கிதெக்சுரா எஸ் எஸ் எஸ் ஆர் எனும் பத்திரிகையையும் (சோவியத் யூனியனில் கட்டடக் கலை) சோவெத்ஸ்கயா ஆர்க்கிதெக்சுரா (சோவியத் கட்டக்கலை) எனும் தொகுப்பையும் வெளியிடுகின்றது. இது சோவியத் கட்டடக்கலை நிதியை நிர்வகித்து வருகிறது. இந்த நிதி சங்க உறுப்பினர்களின் படைப்பாக்கப் பணிகளுக்கும், நலவாழ்வுக்கும் உதவுகிறது.

முகவரி: 3, சுசேவ் தெரு, மாஸ்கோ.

சோவியத் திரைப்பட தொழிலாளர் சங்கம்: இது திரைப்படத் தொழிலில் சம்பந்தப்பட்ட சகல வேலைகளிலும் உள்ள ஊழியர்களையும் இணைக்கும் நிறுவனம். இது 1965ல் நிறுவப்பட்டது. (அதுவரை 1957ல் அமைக்கப்பட்ட ஆ த்துக் கமிட்டி மட்டுமே இருந்து வந்தது: இதில் 4 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர். சோவியத் திரைப்படத் தொழிலாளர் சங்க போர்டின் முதற் செயலாளர் திரைப்பட இயக்குநரான எல். ஏ. குலித்ஜானோவ். யூனியன் குடியரசுகளில் ஸ்தல சங்கங்கள் உள்ளன. இஸ்குஸ்த்வோ கினோ (திரைப்படக்கலை) சோவெத்ஸ்கி எக்ரான் (சோவியத் திரை) எனும் பத்திரிகைகளை இந்தச் சங்கம் நடத்தி வருகிறது. சோவியத் திரைப்படக் கலையின்

பிரசாரக் குழுவும் மத்திய சினிமா மாளிகையும் திரைப்படத் தொழிலாளர் சங்கத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

முகவரி: 13, வாசிலியெவ்ஸ்காயா தெரு, மாஸ்கோ.

சோவியத் இசை அமைப்பாளர்கள் சங்கம்: இது 1932ல் நிறுவப்பட்டது. இது 15 குடியரசு சங்கங்களையும் இணைக்கிறது. இதன் உறுப்பினர் தொகை சுமார் 2,000. சோவியத் இசையமைப்பாளர் சங்க போர்டின் முதற் செயலாளர் பிரபல இசையமைப்பாளரான டி.என்.கிரென்னிக்கோவ். இந்த நிறுவனம், சோவெத்ஸ்காயா மியூசிகா (சோவியத் இசை) மியூசிகல்னயாசிஷின் (இசை வாழ்க்கை) எனும் பத்திரிகைகளை நடத்துகிறது. இந்த சங்கத்துடன் அனைத்து யூனியன் இசையமைப்பாளர் இல்லம், சோவியத் இசை நிதி ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. இந்த நிதி இசையமைப்பாளர்கள், இசை விமர்சகர்கள் தொழிலுக்கு உதவவும் அவர்தம் நல்வாழ்வுக்கு உதவவும் அமைக்கப்பட்டதாகும். முகவரி: 8/10 நெஸ்தனோவா தெரு, மாஸ்கோ.

சோவியத் பத்திரிகையாளர் சங்கம்: 1959ல் நிறுவப்பட்ட இந்தச் சங்கத்தில் 1973ல் 50 ஆயிரம் உறுப்பினர்களிருந்தனர். அனைத்து யூனியன் காங்கிரஸ்தான் இதன் உயர் அதிகார அமைப்பு. காங்கிரசுக்கு இடைப்பட்ட காலத்தில், இதன் போர்டு, சங்க நடவடிக்கைகளை மேற்பார்த்துக் கொள்ளுகிறது. படைப்பாக்க, ஸ்தாபனப் பணிகளை செயற்குழு கவனித்துக் கொள்ளுகிறது.

போர்டின் தலைவர் எம். வி. ஜிம்யானின். இவர் பிராவ்தா செய்தி பத்திரிகையின் தலைமை ஆசிரியராவார்.

சோவியத் பத்திரிகையாளர் சங்கமானது, சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பில் உறுப்பினராக இருந்து வருகிறது. நூறு நாடுகளில் உள்ள முற்போக்குப் பத்திரிகையாளருடன் தொடர்புகள் கொண்டுள்ளது. ஜருபேஷோம் (அயல் நாடு) ஜூர்னலிஸ்த் (பத்திரிகையாளர்) சொவெத்ஸ்கோய ஃபாதோ (சோவியத் புகைப்படம்) டெமாக்ரேடிசெஸ்கிஜூர்னலிஸ்த் (ஜனநாயகப் பத்திரிகையாளர்) இது சர்வதேசப் பத்திரிகையாளர் நிறுவனத்தின் ரஷ்ய மொழிப் பிரசுரம்—ஆகிய பத்திரிகைகளை வெளியிடுகிறது.

முகவரி: 30 மீர் புராஸ்பெக்த், மாஸ்கோ.

நொவோஸ்தி செய்தி நிறுவனம் (ஏ. பி. என்.) சோவியத பொது ஸ்தாபனங்களின் செய்தி நிறுவனமாகும். இது 1961ல் நிறுவப்பட்டது. நிர்வாக உறுப்பினர்களின் மாநாடு தான் இதன் உயர் அதிகார அமைப்பு. மாநாடுகளுக்கு இடைப்பட்ட

சாலத்தில் நிறுவன உறுப்பினர் கவுன்சில் இதை நிர்வகித்து வருகிறது. ஏபிஎன் போர்டு ஸ்தாபன பணிகளை நிறைவேற்று கிறது ஏபிஎன் போர்டின் தலைவர் ஐ. ஐ. உதல்தசோவ். ஏ பி என் நிறுவனமானது, 104 சர்வதேச, தேசிய நிறுவனங் களுடனும், 120 பதிப்பகங்களுடனும், 183 ரேடியோ, டெலிவிஷன் கம்பெனிகளுடனும் தொடர்புகளைப் பேணி வருகிறது. ஏ பி என் நிறுவனம் சுயேச்சையாக ரேடியோ, டெலிவிஷன் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கிறது. வெளிநாடுகளில் உள்ள 52 சோவியத் பத்திரிகைகளுக்கும், 9 செய்தி இதழ்களுக் கும், 100க்கும் அதிகமான செய்திப் பிரசுரங்களுக்கும் விஷய தானம் செய்கிறது. இவற்றின் விநியோகம் 25,00,000. ஸ்புட்னிக் பத்திரிகை ரஷ்யன் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், செக், உருது மொழிகளில் வெளியிடப்படுகின்றது. நொவோஸ்தி செய்தி நிறுவனப் பதிப்பகத்திலுல் வெளியிடப்படும் புத்தகங்கள், சிறு வெளியீடுகள், வழிகாட்டு நூல்கள், ஆகியவற்றின் எண்ணிக்கை சுமார் 2 கோடிப் பிரதிகளாகும். இவை ஆண்டுதோறும் 56 மொழிகளில் வெளியிடப்படுகின்றன. இது வெளிநாடுகளில் நடைபெறும் சோவியத் கண்காட்சிகள் சந்தைகள், முதலியவற்றுக் குரிய தகவல்களை வழங்குகின்றது. அயல் பதிப்பகத்தார்களிட மிருந்து பிரதிகளுக்கான ஆர்டர்களை பூர்த்தி செய்கிறது.

மற்றும் 82 நாடுகளில் ஏ பி என் குழுக்களும், நிருபர்களும் உள்ளனர். எல்லா யூனியன் குடியரசுகளிலும் சில முக்கிய சோவியத் நகரங்களிலும் கிளைகளும் நிருபர்களும் உள்ளனர்.

முகவரி: 2 புஷ்கின் சதுக்கம், மாஸ்கோ.

# தேசப் பொருளாதாரம்

சோவியத் யூனியனில் பொருளாதார வளர்ச்சியானது அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு வழி நடத்தப்படுகிறது. இது தேசிய செல்வம் அதிகரிப்பதற்கும், அனைத்து மக்களின் வாழ்க்கைத்தரமும், கலாசாரத்தரமும் உயர்வடைவதற்கும் உத்தரவாதமாக அமைகிறது.

## பொருளாதார ஒழுங்கமைப்பு

சோவியத் சமுதாயத்தின் பொருளாதார அடிப்படையானது, அதன் பொருளாதார நிர்வாகத்திலான சோஷலிச முறை, உற்பத்தி சாதனங்களிலும் இயற்கை மூலவளங்களிலும் நிலவும் பொது உடமை முறை, ஆகியவற்றில் அடங்கியுள்ளது. சோவியத் யூனியனில் அரசாங்கத்துக்குச் சொந்தமான 50,000 முக்கிய தொழில் நிலையங்களும் 32,000 கூட்டுப் பண்ணைகளும், 15 000 அரசாங்கப் பண்ணைகளும் அரசாங்க விவசாயத் தொழில் நிலையங்களும் உள்ளன.

ஒரு முகப்படுத்தப்பெற்ற அரசாங்கத் திட்டத்திற்கேற்ப சோவியத் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகிறது. இதனால், தொழில்துறையை மேலும் அறிவார்ந்த முறையில் ஒழுங்கமைப்பது சாத்தியமாகிறது, உற்பத்தித் துறையில் அராஜக விளைவுகளால் ஏற்படும் தீமைகளிலிருந்து சமுதாயத்தை மீட்கத் துணை புரிகிறது. பொருளாதார நெருக்கடிகளையும், பின்னடைவுகளையும் தவிர்க்கிறது, தொடர்ந்து பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கு உத்தரவாதமளிக்கிறது.

சகல மக்களுக்கும் ஏராளமான பொருளாயத, கலாசார செல்வங்களைப் படைத்தளிப்பதே சோஷலிச உற்பத்தி முறையின் இறுதி லட்சியமாகும். சோஷலிச உற்பத்தியின் உயர்ந்த பட்ச

வளர்ச்சியானது, சோவியத் யூனியனில் கம்யூனிச சமுதாயத்தை கட்டி உருவாக்குவதற்கு இன்றியமையாதத் தேவை எனலாம். இச் சமுதாயத்தில்தான் ''திறமைக்கேற்ற வேலை, தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கோட்பாடு செயலாக்கப்படும்.

அரசாங்கப் பொருளாதாரத் திட்டங்கள் தற்காலிகமான முன்னறிவிப்புகள் அல்ல. இவை தேசப் பொருளாதார வளர்ச்சிக்கும், அதன் சகல கிளைகள் தொழில் நிலையங்கள் அனைத்தின் வளர்ச்சிக்கும், விஞ்ஞான அடிப்படையிலமைந்த வேலைத் திட்டமாக அமைகின்றன. மத்தியப்படுத்தப்பட்ட திட்டமிடுதலானது, தனிப்பட்ட தொழில் நிலையங்கள் அவற்றின் இணைப்புக்கள் ஆகியவை மேற் கொள்ளும் ஸ்தல முன் முயற்சியை அதிகபட்சம் ஊக்குவிப்பதுடனும், உற்பத்தியின் நிர்வாகத்தில் உழைப்பாளி மக்கள் தீவிரமாகப் பங்கு கொள்வதுடனும் இசைவாக இணைந்துள்ளது.

வழக்கமாக ஐந்தாண்டுக் காலக் கெடுவுள்ள நீண்ட காலத் திட்டங்கள் உற்பத்திக்கான மொத்த குறியளவுகளை நிர்ணயிக்கின்றன, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முற்போக்குத் தன்மை வாய்ந்த போக்குகள் இடம் பெற வகை செய்கின்றன. பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளிலும் நாட்டின் தனிப் பகுதிகள் பொருளாதாரப் பிராந்தியங்கள், குடியரசுகள் ஆகியவற்றிலும் திட்டவட்டமான வடிவை மேற்கொள்ளுகின்றன. நீண்டகாலத் திட்டமானது, குறிப்பிட்ட ஆண்டு காலத்துக்கு ஏற்பப் பிரிக்கப்படுகின்றது: இந்த அடிப்படையில் நடப்புத் திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டுக்குமாக வகுக்கப்படுகின்றன.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியே சோவியத் சமுதாயத்தின் ஒழுங்கமைக்கும் சக்தியாகவும், வழி நடத்தும் சக்தியாகவும் விளங்குவதால் நாட்டின் வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற ஐந்தாண்டுத் திட்டங்கள் கட்சிக் காங்கிரசுகளில் விவாதிக்கப்பட்டு, தாக்கீதுகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைத் தனக்கு ஆதார பீடமாகக் கொண்டு, மக்களின் விருப்பங்களுக்கும் அனுபவத்திற்கும் ஏற்பச் செயல்படுகின்ற கம்யூனிஸ்டு கட்சி சமூக-பொருளாதாரக் கொள்கையை வகுத்தளிக்கிறது. கம்யூனிச சமுதாயத்தைக் கட்டி உருவாக்குவதைத் தனது பிரதான குறியாகக் கொண்ட இக்கொள்கை நாட்டின் வளர்ச்சியினுடைய குறிப்பிட்டதொரு வரலாற்று வழிப்பட்ட கட்டத்தில் உழைப்பாளி மக்களின் நலன்களுக்கும் சமுதாயத்தின் நலன்களுக்கும் பெரிதும் உகந்ததாக விளங்குகிறது.

காங்கிரஸ் நடைபெறுவதற்கு வெகு நாட்களுக்கு முன்னதாகவே, கட்சியானது தனது தேசிய வளர்ச்சித் திட்டங்களை நாடு தழுவிய விவாதத்திற்காகச் சமர்ப்பித்து விடுகிறது. லட்சக்கணக்கான குடிமக்கள் இத்திட்டங்கள் குறித்த தமது கருத்துக்களை வெளியிடுகின்றனர், தமது யோசனைகளையும், திருத்தங்களையும் முன்வைக்கின்றனர். இத்திட்டங்கள் தேசத்துக்கு மிக முக்கியமானவை, ஒவ்வொருவரிடத்திலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்த வல்லவை. நாடு தழுவிய விவாதத்தின் போது, மக்கள் கூறும் யோசனைகளைக் கருத்தில் கொள்வதுடன் காங்கிரஸ் பிரதிநிதிகளின் கருத்துக்கள் யோசனைகளையும் கவனத்திற் கொண்டு, ஐந்தாண்டுத் திட்டத் தாக்கீதுகளை கட்சிக் காங்கிரஸ் ஏற்கிறது. இவை, இறுதியில் சோவியத் அமைச்சரவையால் திட்டத்திற்கு இறுதி வடிவமளிக்கப்படுவதற்குரிய அடிப்படையாக அமைகின்றன.

உழைப்பாளி மக்களின் தீவிரப் பங்கெடுப்புடன் அரசாங்கத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஆலைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், அரசாங்க, கூட்டுப் பண்ணைகள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திட்டங்கள் உற்பத்தி மாநாடுகளிலும், தொழிலாளர் கூட்டங்களிலும் விவாதிக்கப் படுகின்றன. பின்பு, விவாதங்களின் பயன்களைப் பற்றிய குறிப்புக்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு ஒவ்வொரு நகர, வட்டார, பிராந்திய, குடியரசுத் திட்ட அமைப்புகளிடம் நகல் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இவை தேவையான பரிசீலனைக்காகவும், திருத்தங்களுக்காகவும் இவ்வாறு சமர்ப்பிக் கப்படுகின்றன. குடியரசுகளின் நகல் திட்டங்கள் சோவியத் அமைச்சரவையின் அரசாங்கத் திட்டக் கமிஷனிடம் சமர்ப்பிக்கப் படுகின்றன.

இந்தக் கமிட்டியானது, முறையான அமைச்சகங்கள், இலாகாக்கள் தொழிற் சங்கங்கள், ஆகியவற்றுடன் சேர்ந்தும் விஞ்ஞான ஊழியர்கள் முக்கிய நிபுணர்கள் ஆகியோரது உதவியுடனும் நாட்டின் தேசப் பொருளாதார வளர்ச்சிக்கும், பொருளாதாரத்தின் சகல கிளைகளுக்குப், எல்லாப் பிராந்தியங்களுக்குமான நகல் திட்டத்தை வகுத்தளிக்கிறது. சோவியத் அமைச்சரவையானது இந்த நகல் திட்டத்தைத் தணிக்கை செய்த பிறகு, இதை விவாதித்து, அங்கீகாரமளிப்பதற்காக சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்தின் முன் சமர்ப்பிக்கின்றது. சோவியத் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதும் அரசாங்கத் திட்டம் சட்டமாக பரிணமிக்கின்றது.

சாத்தியமான அளவு மிகக் குறுகிய காலத்திலேயே, நவீனமான உயர் வளர்ச்சி பெற்ற ஒரு பொருளாதாரம் சோவியத்

யூனியனில், கட்டி உருவாக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப, பொருளாதார ரீதியில் ரஷ்ய நாடு, 50-100 ஆண்டுக் காலமாகவே மிக முன்னேற்றமடைந்துள்ள மேலை நாடுகளைவிட மிகப் பின்தங்கியிருந்ததாயினும் நாற்பதாண்டுக்கும் குறைவான காலத்திலேயே வல்லமைமிக்க, தொழில் துறையில் வளர்ச்சியடைந்த அரசாகப் பரிணமித்துவிட்டது. முற்குறிப்பிடப்பட்ட நாற்பதாண்டுக் காலத்தில் ஏறத்தாழ இருபதாண்டுக் காலம் யுத்தங்களிலும் யுத்தத்தினால் நாசமடைந்த பொருளாதாரத்தை புனரமைப்பதிலும் செலவழிக்கப்பட்டது.

முதலாவது உலகப் போர், உள்நாட்டுப் போர், அந்நியப் படையெடுப்பு ஆகியவற்றின் விளைவாக 1920ல் நாட்டின் தொழில்துறைப் பொருள் உற்பத்தி 1913 ஆம் ஆண்டின் உற்பத்தி அளவில் ஏழில் ஒரு பங்காகக் குறைந்து போய்விட்டது. பொருளாதார சீர்குலைவுகள், கடுமையான இடையூறுகள், பஞ்சம், பொருளாதார முற்றுகை ஆகியவற்றையெல்லாம் வெற்றி கொண்டு, அந்நிய உதவி ஏதொன்றும் இல்லாமல் 1927 ஆம் ஆண்டுவாக்கில், யுத்த காலத்துக்கு முற்பட்ட தொழில்துறை உற்பத்தி அளவை எட்டிவிட்டனர் சோவியத் மக்கள். அவர்கள் குலைந்துபோன பொருளாதாரத்தை சீரமைக்கும்போது, உற்பத்தி நடைமுறையை நிர்வகிக்கவும் கற்றுக் கொண்டனர்.

முதலாவது ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்கள் நிர்ணய காலத்துக்கு முன்னதாகவே நிறைவேற்றப்பட்டு விட்டன. அதாவது, 1929-32ல் முதலாவது திட்டமும், 1933-37ல் இரண்டாவது திட்டமும், நிறைவேற்றப் பட்டன. மூன்றாவது திட்டம் (1938-42) நிறைவேறுவது 1941ல் ஏற்பட்ட பாசிச ஆக்கிரமிப்பு யுத்தத்தினால் தடைப்பட்டது.

சோவியத் யூனியனின் ஆரம்ப ஐந்தாண்டுத் திட்டங்களை—ஒவ்வொன்றும் முக்கியமானவை—வெறும் கற்பனையென்று மேலை நாடுகள் நிராகரித்து விட்டன. ஆனால் முதலாளித்துவ மேலை நாடுகளின் ஆருடங்களுக்கு, மாறாக, சோவியத் யூனியனானது, மிகப் பின்தங்கிய விவசாய நாடு என்ற நிலையிலிருந்து, மிக முன்னேற்றமடைந்த தொழில் துறை வல்லரசாக வெகுவேகமாக மாறிவிட்டது. முந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது, தான் சக்திமிக்க தொழில் துறைக்கும், பெருமளவில் கூட்டுடைமையாக்கப்பட்ட விவசாயத்துக்கும் அடித்தளமிட்டன எனலாம். இதுவே பாசிசத்தை வெற்றி கொள்வதற்கான பொருளாதார தளத்தை சோவியத் யூனியனுக்கு வழங்கிற்று.

இரண்டாம் உலகப் போரினால் சோவியத் மக்கள் பேரழிவுக்கும் முன்னென்றும் அறியாத துன்ப துயரங்களுக்கும் உள்ளாயினர்.

இரண்டு கோடிக்கும் அதிகமான மக்கள் களப்பலியாயினர், தேச செல்வத்தின் மூன்றில் ஒரு பங்கு அழிவுண்டது.

ஆனால், மக்களின் ஈடுபாடுமிக்க பிரயத்தனங்களினாலும், சோவியத் சோஷலிச அமைப்பின் அளப்பரிய ஆக்கத்தினாலும் 1950 ஆம் ஆண்டுவாக்கிலேயே, தொழில்துறைப் பொருள் உற்பத்தி அளவு, 1940 ஆம் ஆண்டு அளவைவிட 70 சதம் விஞ்சிச் சென்றது; மற்றும் இது 1972ல் மாத்திரம் யுத்த முற்கால ஐந்தாண்டுத் திட்ட காலங்கள் அனைத்தின் மொத்த உற்பத்தி அளவுக்கும் இரட்டிப்பாகி விட்டது.

1913 ஆம் ஆண்டில் ஜார்கால ரஷ்யாவின் தொழில்துறைப் பொருள் உற்பத்தி உலகின் தொழில்துறைப் பொருள் உற்பத்தியில் 4 சதத்துக்கு மேல் சிறிது மட்டுமே அதிகமாக இருந்தது. ஆனால் அது 1973ல் கிட்டத்தட்ட 20 சதமாக உயர்ந்துள்ளது.

உற்பத்தி சாதனங்களில் பொதுவுடைமை, மனிதனை மனிதன் சுரண்டுவது ஒழிக்கப்பட்டது, பொருளாதார நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றுக்கான காரணங்கள் அகற்றப்பட்டது, திட்டமிட்ட பொருளாதார நிர்வாக ஒழுங்கமைப்பு ஆகிய இவை உற்பத்தித் துறையில் முதலாளித்துவத்தைவிட சோஷலிசத்துக்குத் தீர்மானமான அனுகூலங்களை உறுதி செய்துள்ளன.

சோவியத் யூனியனில் தொழில்துறைப் பொருள் உற்பத்தி முக்கியமான முதலாளித்துவ நாடுகளை விடவும் அதிகமான வீதத்தில் அதிகரித்து வருகிறது. இருபத்தியோரு ஆண்டுக்கும் மேலாகவே (1951–1971) அமெரிக்காவின் தொழில்துறைப் பொருளுற்பத்தியின் வளர்ச்சி வீதம் சராசரி 4·1 சதமாகவும், சோவியத் யூனியனின் தொழில்துறைப் பொருள் உற்பத்தி வளர்ச்சி வீதம் 10·0 சதமாகவும் இருந்து வந்துள்ளது. 1950ல் சோவியத் யூனியனின் தொழில்துறைப் பொருள் உற்பத்தி அமெரிக்காவின் உற்பத்தி அளவைவிட, மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாக இருந்தது. ஆனால் இப்போது மூன்றில் இரு பங்குக்கும் கூடுதலாக இருக்கிறது.

24 ஆவது கட்சிக் காங்கிரஸ் தீர்மானங்களை அடுத்து, சோவியத யூனியனில் 1976-1990 ஆம் ஆண்டுகளுக்கான பொருளாதார வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

உற்பத்தியை மும்முரமாக்குதல். சோஷலிச முறையிலான திட்டமிட்ட பொருளாதாரமானது, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் சர்வாம்ச முன்னேற்றத்துக்குப் பெரும் வாய்ப்பை வழங்குகிறது. இதனால், உற்பத்தி சக்திகளின்

வளர்ச்சிக்காக, விஞ்ஞானப் புரட்சியின் அரும்பெரும் சாதனைகளை விரிவான முறையில் செயலாக்குவது சாத்தியமாகிறது. விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம்தான், கம்யூனிசத்திற்கான பொருளாதார, தொழில்நுட்ப அடித்தளத்தைத் தோற்றுவிப்பதற்கு முக்கிய சாதனமாகும். அதனால்தான் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24 ஆவது காங்கிரசானது, விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளை, பொருளாதார நிர்வாசத்தின் சோஷலிச முறையினால் கிட்டியுள்ள அனுகூலங்களுடன் இசைவுற இணைக்கும் பணியை விசேட முக்கியத்துவம் கொண்ட பணியாக முன்வைத்துள்ளது.

தற்போதைய ஐந்தாண்டுக் காலத்தில், விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனைகளை சோவியத் சமுதாய உறுப்பினர் அனைவரது நன்மைக்காகவும் விரிவான முறையில் பயன்படுத்தல், தேசப் பொருளாதாரத்தின் கட்டமைப்பையும், நிர்வாகத்தையும் நவீனமயமாக்குதல் ஆகிய இவை உற்பத்தியின் எல்லாக் கிளைகளிலும் உறுதியான, உயரிய வளர்ச்சி வீதங்களையும், உழைப்பின் உற்பத்தி ஆற்றலுடைய இடைவிடாத வளர்ச்சியையும், வாழ்க்கைத் தரத்தில் உறுதியான அதிகரிப்பையும் மேம்படுத்தியுள்ளன.

1971-75ஆம் ஆண்டுக்கான தேசப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் தேசிய வருமானத்தில் 80-85 சத அதிகரிப்பும், தொழில் துறைப் பொருளுற்பத்தியில 87 சத அதிகரிப்பும், கட்டுமானப் பணியில் 95 சத அதிகரிப்பும் உயரளவான உழைப்பின் உற்பத்தி ஆற்றலின் வாயிலாக விவசாயப் பொருள் உற்பத்தியில் ஒட்டு மொத்த அதிகரிடபும் காணவேண்டுமெனப் பணிக்கிறது.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் உழைப்பின் உற்பத்தி ஆற்றலானது 1940 ஆண்டுடன் ஒப்பிட்டால் தொழில் துறையில் 39 சதமும், கட்டுமானப் பணியில் 37 சதமும், விவசாயத்தில் 38 சதமும் உயரும்.

புதிய சமூக அமைப்பின் வெற்றிக்கு, தொழிலாளரின் உயர் உற்பத்தி ஆற்றலானது, முக்கியமான, அறுதியிட்ட நிபந்தனையாகும் என்று லெனின் கூறியது இன்றும் பொருத்தமானதாக விளங்குகிறது. உலக அரங்கில் இரு சமூக அமைப்புகளிடையே நடைபெறும் வரலாற்றுப் புகழ் படைத்த போட்டியில், முதலாளித்துவத்தை சோஷலிசம் வெற்றி கொள்வதற்கு உழைப்பின் உயர் உற்பத்தி ஆற்றலை அடையப் பெறுவது, பிரதான நிபந்தனையாகும். சோஷலிசம் மேலும் முன்னேற்றமடைவதற்கும் அது கம்யூனிசமாக வளர்ச்சியடைவதற்கும் இன்றியமையாத தேவையுமாகும்.

நிர்வாகம் மேலும் மேம்படுகிறது. சோவியத் தொழில் துறையும், தேசப் பொருளாதாரம் முழுவதும் தொடர்ந்து வளர்ச்சியும் மேம்பாடும் அடைந்து வருகின்றன. பொருளாதார சீர் திருத்தத்தை செயலாக்கத் தொடங்கிய 1965ஆம் ஆண்டு முதல் குணாதியில் புதிய பொருளாதார மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன; நிர்வாகம் மேம்பட்டுள்ளது; மேலும் அதிகமாக மத்தியத் துவப்படுத்தி நிர்வாகத்தை ஜனநாயக மயமாக்கும் போக்கு கூடுதல் வளர்ச்சியடைந்துள்ளது.

ஆயினும் உற்பத்தியை இன்னும் திறமையுடையதாக்குவதற்கும், விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்கும் உழைப்பின் உற்பத்தி ஆற்றலை உயர்த்துவதற்கும தனிப் பயிற்சியில மேலும் கவனத்தை ஒருமுகப்படுத்துவதும் உற்பத்தியில் ஒத்துழைப்பும் அவசியமாகும். இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டுள்ள சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24ஆவது காங்கிரஸ் தாக்கீதுகள் தொழில் துறையை இரண்டு, மூன்று கட்ட நிர்வாகமுடையதாக மாற்றுவதற்கும் மிகப்பெரும் உற்பத்தி இணைப்புக்கள், கூட்டமைப்புகளைத் தோற்றுவிப்பதற்கும் உத்தேசித்துள்ளன. இவை சுய-ஆதரவு அடிப்படையில் இயங்கும் உற்பத்தியின் ஆதாரத் தொடர்புகளாகப் பரிணமிக்கும்.

''தொழில்துறை நிர்வாகத்தை மேலும் மேம்படுத்துவதற்கான சில நடவடிக்கைகள் பற்றி' எனும் அறிக்கை ஒன்றை 1973 ஏப்ரலில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியும், சோவியத் அமைச்சரவையும வெளியிட்டன. பொருளாதார நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட அமைப்புக்களை உற்பத்திக்கு மிக நெருங்கியதாக்குவது, பல்வேறு பொருளாதார அமைப்புக்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் மிகத் தெளிவாக வேறுபடுத்திக காட்டுவது, நிர்வாக துணை அமைப்புக்களின் பணியை மேலும் திறமையுடையதாகவும், நீச்குப்போக்குடையதாகவும் ஆக்குவது ஆகிய இவையே எதிர்பார்க்கப்படும் மாற்றங்களின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

அண்மை ஆண்டுகளில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு தொழில்களில் ஆயிரத்துக்கும் அதிகமான உற்பத்தி இணைபபுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இரு கட்ட நிர்வாக முறைக்கு மாறிச் செல்லுவதில் ஓரளவு அனுபவமும் கிட்டியுள்ளது—ஒரு பொருளாதாரக் கிளை முழுவதும் (கருவி உற்பத்தி, தானியங்கி சாதனங்கள், கட்டுப்பாட்டு அமைப்புக்கள் ஆகியவற்றுக்கான அமைச்சகம்) மூன்றாண்டுக் காலமாக சுய-ஆதரவு அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. இந்த அனுபவமானது தொழில்துறை நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக மேலும் பல முறைகளை வகுக்கும் பணியை

சாத்தியமாக்கியுள்ளது. இந்த நடவடிக்கைகள் இப்போது செயலாக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலம் வரை, பொருளாதாரச் சீர்திருத்தமும், புதிய நிர்வாக முறைகளும் தொழில் நிலையங்களில்தான் புகுத்தப்பட்டு வந்தன. ஆனால் இன்று மிகப் பெரிய அமைப்பு—அதாவது அமைச்சகம், இதன் முக்கிய இலாகாக்கள் ஆகியவைகூட அடிப்படையிலேயே புனரமைக்கப்படுகின்றன.

மூன்றாண்டுக் காலத்துக்குள் (1973-1975) தொழில்துறை புதிய நிர்வாக முறைக்கு மாற்றப்பட்டு விடும். அமைச்சகம், தொழில்நிலையம் இவை இரு கட்ட முறையில் அடங்கும். அமைச்சகம், அனைத்து யூனியன அல்லது தொழில்துறை இணைப்பு, தொழில்நிலையம் ஆகியவை மூன்று கட்ட முறையில் அடங்கும்.

இந்தப் புதிய முறையில் உற்பத்தியை ஒருமுகப்படுத்தும் தரம் பெரிதும் உயர்வடையும். இந்தப் புதிய தொழில்துறை இணைப்புகள் தொழில் நிலையங்களை மட்டுமல்லாமல், ஆராய்ச்சிக் கழகங்கள், வடிவமைப்பு குழுக்கள், தொழில நுட்ப நிறுவனங்கள், இதர நிறுவனங்கள் ஆகியவற்றையும் இணைக்கும். இது விஞ்ஞானத்தை உற்பத்தியுடன் இணைப்பதையும், நவீன தொழில் நுட்ப புனரமைப்பு, சகல தொழில்களின் முன்னேற்றம் ஆகியவற்றைத் துரிதப்படுத்துவதையும் சாத்தியமாக்கும்.

அதே சமயம், மற்றொரு முக்கிய பிரச்சினைக்கும் தீர்வு காணப்படுகின்றது—அதாவது கிளை நிர்வாகத்தின் பல கட்ட முறை அகற்றப்படுகிறது.

புதிய நிர்வாக முறைக்கு மாறிச் செல்லுவது என்பது, அமைச்சகங்களின் முக்கிய இலாகாக்கள் ரத்துச் செய்யப்படுவதைக் குறிப்பதாகும். பொருளாதார, உற்பத்தி நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் தொழில் நிலையங்கள், இணைப்புக்கள் ஆகியவற்றினால் நேரடியாகவே தீர்வு காணப்படும். ஓர் இணைப்பின இயக்குநர்கள் கவுன்சிலில இணைப்பின் தலைவரும் தனிப்பட்ட தொழில் நிலையங்கள், நிறுவனங்களின் இயக்குநரும் அல்லாமல் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதியும் சேர்த்துக் கொள்ளப்படுவார். ஒரு தொழில் துறை இணைப்பானது, முழுவதும் சுய ஆதரவிலேயே செயல்படுகிறது என்பது அரசாங்க நிர்வாக அமைப்பாக உள்ள முக்கிய இலாகாவிலிருந்து வெளிவாகப் புலனாகிறது. இது தன் கீழுள்ள நிறுவனங்கள் அனைத்தின் பொருளாயத, நிதி, உழைப்பு ஆதாரவளங்கள் முழுவதையும் நிர்வகிக்கிறது, அவை செயல்படப் பூரண பொறுப்பாளியாகிறது: இதனால் அமைச்சகங்கள், சம்பந்தப்பட்ட கிளையின் நீண்டகால

வளர்ச்சியுடன் தொடர்புள்ள முக்கிய பணிகளிலும், உற்பத்தித் திறனை உயர்த்துவதிலும் சவனம் செலுத்துவது சாத்தியமாகிறது.

மேலும் சோவியத் அரசாங்கத் திட்டக் கமிட்டியும் யூனியன் குடியரசுகளின் அமைச்சரவைகளும் கொள்முதல் செய்தல் பழுது பார்த்தல், முதலான சேவைத் தொழில் நிலையங்களை, குறிப்பிட்ட ஒரு குடியரசின் பிரதேசத்தில் அமைந்துள்ள எல்லா நிறுவனங் களுக்கும் சேவையாற்றவல்ல மிகப் பெரிய கிளைகளுக்கிடையிலான தொகுதிகளாக ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளை வகுத்தளிக்கும் பொறுப்புடையவை.

பிரதேச மத்திய அமைப்பையும் கிளை மத்திய அமைப்பையும் இசைவாக இணைப்பதானது. சோவியத் தொழில் துறை வளர்ச்சிக்கு புதிய விசேடமான பெரும் வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கிறது என்பதில ஐயமில்லை.

பொருளாதார நிர்வாக முறை மேலும் சிறப்படைவதானது, மக்களின் வாழ்க்கைத் தரங்களை இன்னும் உயர்வுடையனவாக்கு வதற்கு முககிய சாதனமாக அமையும்.

மனிதனின் நன்மைக்காக. இன்றைய சோஷலிச சமுதாய நிலைமைகளில் சோவியத் பொருளாதார வளர்ச்சியானது, நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளையும், அதே சமயம் மக்களின் அதிகரித்து வரும் தேவைகளையும் சமாளித்தல், வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்ததுவதற்கு தேசியப் பிரயத் தனங்களையும். நிதிகளையும் பேன்மேலும் அதிக வீதாசாரத்தில் ஒருமுகட படுத்துதல் ஆகியவற்றைச் சாத்தியமாக்கச் செய்வது என 24ஆவது கட்சிக் காங்கிரசில் குறிப்பிடப்பட்டது.

1971—1975ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கங்கள் மக்களின் உண்மை வருமானங்களின் வளர்ச்சியானது, அதிகரிக்கப்பட்ட பயனீட்டுப் பண்டங்களின் உற்பத்தியின் சமபடைவகை உத்தா வாதமாக அமைய வகை செய்கின்றன. இந்தப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களின் வளர்ச்சி துரிதப்படுத்தப் பெறும் லகு தொழிலிலும், உணவுப பொருள் உற்பத்தித் தொழிலிலும், இதுவரை இல்லாத பெருந்தொகை ஆதார மூதலீட்டாக்கப்படுகிறது. சோவியத் நாட்டின வரலாற்றிலேயே முதல் தடவையாக ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதிலும் பயனீட்டுப் பண்ட வளர்ச்சி வீதங்கள் கனரகத் தொழில் துறையின் உற்பத்தி வீதங்களை விஞ்சிச் செலும். 1961 1965 ஆம ஆண்டுக் காலத்தில் உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி 58 சதமும், பயனீட்டுப் பண்டங்களின் உற்பத்தி 36 சதமும் அதிகரித்தன. 1966-1970இல் இவ்வீதங்கள் முறையே 51 சதமாகவும், 49 சத

மாகவும் அதிகரித்தன. 1971-1975ஆம் ஆண்டுகளில் இந்த வளர்ச்சி வீதங்கள் முறையே 46 3 சதமாகவும், 48·6 சதமாகவும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு சோவியத் யூனியனில் கனரகத் தொழில் சம்பந்தமாக அவ்வளவாகக் கவனம் செலுத்தப்படுவதில்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. கனரகத் தொழிலின் பங்கும் முக்கியத் துவமும் இன்று குன்றி விடவில்லை. ஏனெனில் இதுவே தேசப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. கனரகத் தொழில் இல்லாமல், பெரு எந்திரத் தொழில் உட்பட இதர கிளைகளின் முன்னேற்றம் ஏற்பட முடியாது. இது மட்டுமன்றி, கனரகத் தொழில் நிலையங்கள் கூட, பயனீட்டுப் பொருள்களை (மோட்டார் கார்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் குளிர்பதன சாதனங்கள் முதலானவை உற்பத்தி செய்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ளுவது அவசியமாகும். மேலும் பயனீட்டுப் பண்டங்களின் உற்பத்தியில் கனரகத் தொழிலின் பங்கு தொடர்ந்து பெருகி வருகிறது. 1965ல் 19 சதமாக இருந்தது, 1970ல் 23 சதமாயிற்று; இது 1975ல் 29 சதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24 ஆவது காங்கிரசினால் அங்கீகரிக்கப்பட்ட, 1971-1975 ஆம் ஆண்டுகளுக்கான சோவியத் பொருளாதார வளர்ச்சித் திட்டத் தாக்கீதுகள் இவ்வாறு வலியுறுத்திக் குறிப்பிடுகின்றன. "சோஷலிசப் பொருள் உற்பத்தி வளர்ச்சியின் உயர் வீதங்கள், அதன் வினைத்திறனை உயர்த்துதல், விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம், உழைப்பின் உற்பத்தி ஆற்றலைத் துரிதப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களின் பொருளாயத, கலாசாரத் தரத்தில் கணிசமான உயர்வு காண உத்தரவாதம் செய்வதே ஐந்தாண்டுத் திட்டத்தின் தலையாய பணியாகும்."

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24ஆவது காங்கிரசால் ஏற்கப் பட்ட சமூக வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் வருமாறு :

மக்களின் எல்லாப் பகுதிகளுக்கும் சிறந்த வேலை நிலைமைகளையும் வாழ்க்கை நிலைமைகளையும் வழங்குதல் ;

உழைப்புக்குரிய ஊதியத்தையும், பொருளாதார ஊக்குவிப்புகளையும் மேலும் மேம்படுத்துவதன் மூலமாக மக்களின் வருமானங்களை அதிகரித்தல் ;

இளந் தலைமுறையினரை வளர்த்து ஆளாக்குவதற்காகவும், பெரிய குடும்பங்களுக்கு உதவி புரிவதற்காகவும், வீடுகளிலும், வேலை செய்யும் இடங்களிலும் பெண்களின் உழைப்பை எளிதாக்குவதற்காகவும அரசாங்க பட்ஜெட் ஒதுக்கீடுகளை அதிகரித்தல் ;

அனைவருக்கும் செகண்டரிக் கல்வி முறையைப் புகுத்துவதைப் பூர்த்தி செய்தல் விசேட கல்வியை வளமாக்குதல், மக்களின் கலாசார, தொழில்நுட்பத் தரத்தை மேம்படச் செய்தல் ;

நகர மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கு நெருக்கமாக கிராம மக்களின் வாழ்கைத் தரத்தை கொணர்தல் ;

இந்தத் திட்டம் சோவியத் யூனியனின் 1971-1975 ஆம் ஆண்டுக்கான ஐந்தாண்டுப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் பற்றிய சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்திஞல் அங்கீகரிக்கப்பட்டதாகும். இந்தத் திட்டம், சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அவசியம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய குறியிலக்குகளைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

1971-1975 ஆம் ஆண்டுக் காலத்தில் சோவியத் யூனியனின் தேசிய வருமானம் 38 6 சதம் உயரும். தொழில்துறைப் பொருள் உற்பத்தி 47 சதம் அதிகரிக்கும்; இதில், உற்பத்தி சாதனங்களின் உற்பத்தியின் 46 3 சத அதிகரிப்பும், பயனீட்டுப் பண்டங்களின் உற்பத்தி அதிகரிப்பு 48 6 சதமும் அடங்கும். விவசாயப் பொருள்களின் சராசரி வருடாந்தர உற்பத்தி 20—22 சதம் அதிகரிக்கும்.

நபர் விகித உண்மை வருமானங்கள் 31·8 சதம் அதிகரிக்கும் ; பலவகைப்பட்ட பண வழங்கீடுகள் அதாவது பென்ஷன்கள், உதவித் தொகைகள், படிகள், இலவசக் கல்வி மருத்துவ சேவைக்கான செலவுகள் ஆகியவை 40 சதம் அதிகரித்து, கிட்டத்தட்ட 9,000 கோடி ரூபிளை எட்டும். மேலே குறிப்பிடப்பட்ட பண வழங்கீடுகள் சமூகப் பயனீட்டு நிதி மூலமாக அரசினிடமிருந்து சோவியத் மக்களுக்குக் கிடைப்பவை.

செய்பொருள்கள், உணவுப் பொருள்களின் பயனீடு பெருமளவு அதிகரிக்கும். சில்லறை வர்த்தகம் 40 சதம் பெருகும் ; அன்றாட சேவைகள் இரட்டிப்பாகும்.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 6 கோடி மக்களுக்குச் சிறப்பான குடியிருப்பு வசதிகள் வழங்கப்படும். 20 லட்சம் குழந்தைகளுக்குப் பள்ளிப் படிப்புக்கு முந்திய கல்வி நிலையங்களும், 60 லட்சம் மாணவர்களுக்கான பள்ளிகளும் கட்டப்படும். அனைவருக்கும் செகண்டரிக் கல்வி அளிக்கும் முறைக்கு மாறிச் செல்வது பூர்த்தியடையும். மேற்கல்வி நிலையங்களிலும் செகண்டரிப் பள்ளிகளிலும் ஏறத்தாழ 90 லட்சம் நிபுணர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

சுருங்கச் சொன்னால் இவையே 9 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொருளாதார, சமூக வேலைத் திட்டத்தினுடைய முக்கிய குறிக்கோள்களாகும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும், தொழில் துறை, வேளாண்மை மற்றும் தேசப் பொருளாதாரத்தின் இதர கிளைகள் ஆகியவற்றை வளமாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட இந்த நடவடிக்கைகளை எல்லாம் செயலாக்குவதற்கு அளப்பரிய நிதிவளம் தேவை பட்ஜெட்டின் மூலமாகவும், குறிப்பிட்ட சில தொழில் நிலையங்கள் மூலமாகவும் வகை செய்யப் பட்டுள்ள அரசாங்கச் செலவு, இந்த ஐந்தாண்டுக் காலத்தில், சுமார் 50 சதம் அதிகரிக்கும்; இதற்கு 1975ல் 36,000 கோடி ரூபிள் செலவாகும்.

1971-75 ஆம் ஆண்டுகளுக்கான திட்டத்தின் முதலீடு வருட காலத்தில் கிட்டியுள்ள பயன்கள் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24 ஆவது காங்கிரஸ் தீர்மானங்களுக்கு இசைவான முறையில் சோவியத பொருளாதாரம் வெற்றியுடன் வளமடைந்து வருகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இவ்விரு வருடங்களில் முதலீடுகள் 18,000 கோடி ரூபிளாயின; தேசிய வருமானம் 10 சதம் அதிகரித்து, 31,000 கோடி ரூபிளை எட்டிற்று.

தொழில்துறை உற்பத்தி 15 சதம் உயர்ந்தது; தொழில் துறையில் தொழிலாளர் உற்பத்தி ஆற்றல் 11·8 சதம் உயர்ந்தது.

இந்த இரண்டு ஆண்டுகளில் தேசிய வருமானத்தில் 80 சதம் பயனீட்டில் செலவழிந்தது. சுமார் 3 கோடி 40 லட்சம் மக்களின் சம்பளங்களும், பென்ஷன்களும், மாணவர்களுக்கான உதவித் தொகைகளும் அதிகரித்துள்ளன. நபர் விகித உண்மை வருமானம் 1970 ஆம் ஆண்டின இலக்கத்தைவிட 8·2 சதம் அதிகரித்தது.

## தொழில்கள்

சோவியத தொழில் துறையில் செய்பொருள் உற்பத்தியின் சகல நவீன கிளைகளும் அடங்கியுள்ளன. பொருளாதாரம் மிக வேகமாகவும் சகல துறைகளிலும் வளர்ச்சியடையவும் இடைவிடாமல் அதிகரித்து வரும் சோவியத் மக்களின் தேவைகளைச் சமாளிக்கவும் இது வகை செய்கிறது. 1972ல் நாட்டின் மொத்த தொழில் துறை உற்பத்தியானது புரட்சிக்கு முந்திய காலத்து தொழிலதுறை உற்பதி அளவைவிட நூற்றுக்கும் கூடுதலான மடங்கு அதிகரித்தது.

எரிபொருள் தொழில். நீண்ட நெடுங்காலமாக, நாட்டின் பிரதான எரிபொருளாய் நிலக்கரி பயனபடுத்தப்பட்டு வந்தது.

யுத்த பிற்காலத்தில் மிகவும் சிக்கனமான எரிபொருள் அதாவது எண்ணெய், எரிவாயு ரகங்கள் பயன்படுத்தப்படுவது மும்முரமாயிற்று. 1972 ல் மொத்த எரிபொருள் உற்பத்தியில் எண்ணெய், எரிவாயு 62 சதமாக இருந்தது. இது 1950 ல் 19 7 சதமாகவும், 1958ல் 32 சதமாகவும இருந்தது. 1975 ஆம் ஆண்டுவாக்கில் இரு எரிபொருளும் மொதத எரிபொருள் உற்பத்தியில் 67 சதமாக உயரும்.

நிலக்கரி. நாட்டின் மொத்த எரிபொருள் இருப்பு நிலையில் நிலக்கரியின பங்கு குன்றி வருகின்றதாயினும் இது தொடர்ந்து முக்கிய டங்கு வகித்து வருகிறது, இதன உற்பத்தி இன்னும் அதிகரித்து வருகிறது. 1972ல் நிலககரி உற்பத்தி 65 கோடி 50 லடசம் டன்னுக இருந்தது. (உலக நிலசகரி உற்பத்தியில் ¼ பங்கு இது) இது 1940 ல் 16 கோடி 60 லட்சம் டன் தான. தோனெதஸிலும், மாஸ்கோ அருகிலும் உள்ள பழைய சுரங்கங்களிலும், புதிய சுரங்கங்களிலும், குறிப்பாக நாட்டின் கிழக்குப் பகுதிகளிலும் நிலசகரி உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு சைபீரியாவிலும், கஜாகஸ்தானிலும் நிலக்கரிப் படிவஙகள் பூமியின் மேற்பரப்புகக அருகாமையிலேயே இருக்கின்றன. ஆகையால திறந்தவெளிச சுரங்கம் அமைப்பது சாத்தியமாகும். இப்போதுகூட, மொத்த நிலக்கரி உற்பத்தியில் நால்ல் ஒரு பங்கு திறந்தவெளிச் சுரங்க முறையில் கிடைக்கிறது. 1975 ஆம் ஆண்டுவாக்கில இந்த முறையினுல மொத்த நிலககரி உற்பத்தியில் 30 சதவீதம் உறபததி செய்யப்படும். 1975 ல் சோவியத் யூனியன் 69 கோடி 50 லட்சம் டன் நிலககரியை உறபத்தி செயயும்.

எண்ணெய். சோவியத் யூனியனில் எண்ணெய் உற்பத்தியின் வீதமும் துரிதமாகப் பெருகி வருகினறது. 1972ல் எண்ணெய் உற்பத்தி 39 கோடி 40 லட்சம் டன. திரவ எரிபொருள் உற்பத்தயில சோவியத் யூனியனது அமெரிககாவுககு மடடுமே (1972ல் அதன் உறபததி 47 கோடி 50 லட்சம் டன) அடுதத நிலையில் உள்ளது. இவ் இடைவெளி இப்போது வேகமாக நிரவி வருகிறது எனலாம்.

கடந்த 20 ஆண்டுகளாக, எண்ணெய் உற்பத்தியில் சராசரி வருடாந்தர வளர்ச்சியானது அமெரிககாவில் 1 கோடி 40 லட்சம் டன்னுகவும், சோவியத் யூனியனில் 1 கோடி 57 லடசம் டன்னுகவும் இருந்து வந்துள்ளது. இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாகவே (அதாவது 1971 - 1972) சோவியத் யூனியன் எண்ணெய் உற்பததியின் அதிகரிபபு 4 கோடி 45 லட்சம் டன். இது 1950 ஆம ஆண்டுக்கால நாட்டின மொதத எண்ணெய் உற்பததியைவிட அதிகம். 1975ஆம் ஆண்டு வாககில் ஆண்டுககு

50 கோடி டன்னுக எண்ணெய் உற்பத்தியை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜார்கால ரஷ்யாவில் பாகு பிரதேசம்தான் மிகப் பெரும் எண்ணெய் வளம் கொண்ட ஒரே பிரதேசமாக இருந்து வந்தது. 1973ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் செயல்பட்ட எண்ணெய் எரிவாயு வளப் பிரதேசங்களின் எண்ணிக்கை 500க்கும் அதிகமாயிருந்தன. 1971, 1972 ஆகிய இரண்டாண்டுக் காலத்தில் புதிய பிரதேசங்களில் 70 புதிய எண்ணெய்ப் படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டன, மேலும் தற்போதுள்ள எண்ணெய் வயல்களிலும் 109 புதிய எண்ணெய்ப் படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இன்று சோவியத் யூனியனிலேயே எண்ணெய் உற்பத்தி செய்யும் மிகப் பெரிய பிரதேசம் வோல்காவுக்கும் யூரல் மலைகளுக்கும் இடையே அமைந்துள்ளது. இதிலிருந்து நாட்டின் எண்ணெய் உற்பத்தியில் முக்கால் பங்கு உற்பத்தியாகிறது. இங்கிருந்து, நாட்டிலுள்ள தொழில் துறைக் கேந்திரங்களுக்கு எல்லாம் குழாய் வழிப்பாதை மூலமாக எண்ணெய் சப்ளை செய்யப்படுகிறது. சோவியத் யூனியனிலுள்ள குழாய் வழிப்பாதைகளின் நீளம் 40 ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகமாகும். இவற்றில் பாதி, கடந்த பத்தாண்டுக் காலத்திற்குள்ளாகவே செயல்படுத்தப் பட்டவையாகும். வெகு விரைவில் மேற்கு சைபீரியாவின் புதிய எண்ணெய் வயல்கள், குழாய் வழிப்பாதை மூலமாக நாட்டின் மத்தியப் பகுதியுடன் இணைக்கப்படும்.

1972ல் 38 கோடி 80 லட்சம் டன் எண்ணெயும், எண்ணெய்ப் பொருள்களும் குழாய் வழிப்பாதை மூலமாகக் கொண்டு செல்லப் பட்டன. தற்போதைய ஐந்தாண்டுத் திட்ட இறுதிவாக்கில் குழாய் வழியில் கொண்டு, செல்லப்படும் எண்ணெயின் அளவு 1970ஆம் ஆண்டுக்கான அளவைப் போல் இரட்டிப்பாகி விடும்.

உலகிலேயே மிக நீளமான துருஷ்பா குழாய் வழிப்பாதை தாத்தாரியாவிலிருந்து 4500 கிலோ மீட்டருக்கும் அதிக தூரம் செல்லுகிறது. இது, ஒவ்வோராண்டும் ஹங்கேரி, போலந்து, செக்கோஸ்லோவாகியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றுக்கு 1 கோடி 50 லட்சம் டன்னுக்கும் அதிகமான சோவியத் எண்ணெயைக் கொண்டு செல்லுகின்றது. 1975 ஆம் ஆண்டு வாக்கில் இந்த அளவு 5 கோடி டன்னை எட்டிவிடும்.

யுத்த பிற்கால ஆண்டுகளில், மேற்கு துருக்மீனிய பாலைவனங்களில், காஸ்பியன் கடற்கரை மீதமைந்துள்ள, சிறந்த வாய்ப்புக்களுடன் கூடிய புதிய எண்ணெய் வளப் பிரதேசம் மும்முரமாகப் பயன்படுத்தப்பட்டது. அண்மையில் வளம் பொங்கும் 120

எண்ணெய், எரிவாயுப் படிவங்கள் மாங்கிஷ்லாக் தீபகற்பத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சகாலின் தீவிலும், உஸ்பெக்கிஸ்தான், கஜாக்ஸ்தான, கிர்கீஜியா ஆகியவற்றில் சில பிரதேசங்களிலும் ஆற்றுததுறையிலும் புதிய எண்ணெய் வயல்கள் உதித்தெழுந் துள்ளன கார்ப்பதியன் பிரதேசங்களிலும், பைலோரஷ்யாவில் உள்ள மேல்கோடிப் பகுதியிலும் எண்ணெய் உற்பத்தி பெருமளவு விரிவடைந்துள்ளது.

மேற்கு சைபீரியாவில் அண்மையில் தொடங்கிய மிகப் பெரிய எண்ணெய், எரிவாயுப் பிரதேசம் பழைய எண்ணெய் எரிவாயுப் பகுதியைப் பெரிதும் விஞ்சிச் சென்று விட்டது. நூற்றிருப துக்கும் அதிகமான படிவங்கள் அங்கு ஆராயப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் 1970ல் உற்பத்தியான எண்ணெய், நாட்டின் மொத்த எண்ணெய் உற்பத்தியில் பத்தில் ஒரு பங்காக இருந்தது. மேற்கு சைபீரியாவில் இப்போது எண்ணெய்த் தொழிலுக்கு மிக முக்கியமான தளம் ஒன்று கட்டப்பட்டு வரு கிறது. இது 1975ஆம் ஆண்டு வாக்கில் 12 கோடி 50 லட்சம் டன் வரை எண்ணெயை உற்பத்தி செய்யும். இது, நாட்டின் திட்டமிடப்பட்டுள்ள மொத்த உற்பத்தியில் காற்பங்காகும்.

சோவியத் எண்ணெய்த் தொழிலில் நவநவீன சாதனங்கள் பயன்படுத்தப் படுகின்றன. சோவியத் இஞ்சினியர்களும் விஞ்ஞானிகளும் உலக எண்ணெய் உற்பத்தித் தொழிலில் புதிய சோதனைகள் புரிகின்றனர்.

எரிவாயு. சோவியத் எரிவாயுத் தொழில், பெரிதும் யுத்த பிற்கால ஆண்டுகளிலேயே உருவானதெனலாம். இது எண்ணெய்த் தொழிலை விடவும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

உலகிலேயே மிகப் பெரிய எரிவாயுப் படிவங்கள் சோவியத் யூனியனில் தான் உள்ளன. இது 17·9 லட்சம் கோடி கனமீட்டர் அளவினதாகும் (அமெரிக்காவில் 9 லட்சம் கோடி கனமீட்டர் எரிவாயுப் படிவம் தான் உள்ளது). சோவியத் யூனியனில் உள்ள ஆற்றல் மூலவளம் 1,00,00,000 கோடி கனமீட்டர் என ஆரம்ப மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன. இந்த வளங்கள் உற்பத்தி செய்யப்படும் முக்கிய பிரதேசங்கள் மேற்கு சைபீரியா, துருக்மீனியா, வட காகசஸ், வோல்கா பிராந்தியங்கள், பாஷ்கிர் சுயாட்சிக் குடியரசு, மேற்கு, தென்கிழக்கு உக்ரைன், டிரான்ஸ் காகேசியா, உஸ்பெக்கிஸ்தான் முதலியனவாகும். தாஜிகிஸ்தான், சகாலின், பெச்சோரா பிராந்தியம் மற்றும் சில இடங்களிலும் எரிவாயுப் படிவங்கள் உள்ளன.

மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே, பிரம்மாண்டமான எரிவாயுக் குழாய்ப் பாதைகள், நாட்டின் தொழில்துறைக்

கேந்திரங்களுக்கு எரிவாயு கொண்டு செல்லுவதற்காகப் போடப்பட்டுள்ளன. இவை, மாஸ்கோ, ஒஸ்த்ரோ நோஷக், விளதீமிர், உஃபா, கோர்க்கி, சஜான் முதலான பல நகரங்களின் எரிவாயு சப்ளைப் பாதைகளை, முழுமையான ஓர் அமைப்பாக இணைக்கின்றன. இதனால், நாட்டின் எரிவாயு மூலவளங்களை மிகவும் விவேகமான முறையில் பயன்படுத்துவது சாத்தியமாகிறது.

நாடு முழுவதற்குமாக வகுக்கப்பட்டுள்ள முக்கிய எரிவாயுக் குழாய்ப் பாதைகளின் ஒரே அமைப்பானது அதன் திறனாலும், அது எரிபொருள் சப்ளை செய்யவேண்டிய பிரதேச அளவினாலும் அற்புதமான தொழில்நுட்பத் திட்ட நிலையமாகத் திகழ்கின்றது.

இப்போது கட்டப்பட்டு வருகின்ற எரிவாயுக் குழாய் வழிப் பாதைகள் இந்த அமைப்பின் முக்கிய பகுதியாக அமையும். இவற்றில், மத்திய ஆசிய, மத்திய சோவியத் யூனியன் குழாய் வழிப்பாதையின் மூன்றாவது, நான்காவது பிரிவுகளும், தியூமென் நாட்டின் மையத்துடன் இணைத்து, சோவியத் யூனியனின் மேற்கு எல்லையை நோக்கி ஓடுகின்ற குழாய் வழிப்பாதையும் உள்ளன. தியூமெனிலிருந்து ஐரோப்பாவின் மத்திய பிரதேசங்களுக்குச் செல்லும் குழாய் வழிப்பாதை 5000 கிலோ மீட்டர் நீளமிருக்கும். இதன் வழியாக ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 3 ஆயிரம் கோடி கன மீட்டர் எரிவாயு அனுப்பப்படும். இதுவே உலகில் அதிக கொள் திறனுடைய குழாய் வழிப்பாதையாகும்.

சோவியத் யூனியனுக்குள் குழாய் வழிப்பாதைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட குழாய்கள் 1020 - 1220 மில்லி மீட்டர் குறுக்களவுள்ளதாக இருப்பது வழக்கம். ஆனால் இப்போது, 1420 மி. மீ. ரும், அதற்கும் அதிகமாகவும் குறுக்களவுள்ள குழாய்கள் பதிக்கப்படுகின்றன. சோவியத் குழாய் வழிப்பாதைகளின் நீளம் 80 ஆயிரம் கிலோ மீட்டரை எட்டுகிறது. சப்ளை செய்யப்படும் எரிவாயு 25,000 கோடி கன மீட்டர். 1975ஆம் ஆண்டு வாக்கில் எரிவாயு சப்ளையின் அளவு, 1970ஆம் ஆண்டின் அளவுடன் ஒப்பிட்டால் ஏறத்தாழ 50 சதம் அதிகமாகி விடும்; நாட்டின் குழாய் வழிப்பாதையின் மொத்த நீளம் 1,00,000 கிலோ மீட்டராகி விடும்.

சோவியத் யூனியனில் எரிவாயு உற்பத்தி சாத்தியமான எல்லா வழிகளிலும் துரிதப்படுத்தப்படுகிறது. 1972ல் உற்பத்தி 22,100 கோடி கன மீட்டராக இருந்தது. இது 1960ல் 4,700 கோடி கன மீட்டர்தான். 1975ஆம் ஆண்டில் 32,000 கோடி கன மீட்டராக உயரவேண்டும்.

இப்போது போலந்துக்கும் செக்கோஸ்லோவாகியாவுக்கும் சோவியத் யூனியன் எரிவாயு சப்ளை செய்கிறது. மற்றும்,

ஹங்கேரி, பல்கேரியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஆஸ்திரியா, பிரான்சு, இத்தாலி, ஜெர்மன், சமஷ்டிக் குடியரசு, பின்லாந்து ஆகிய நாடுகளுக்குப் எரிவாயு வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. யூகோஸ்லாவியாவுக்கு எரிவாயு சப்ளை செய்வதற்கான ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டுள்ளது. சோவியத் எரிவாயு சம்பந்தமாக ஜப்பானும், அமெரிக்காவும் அக்கறை காட்டி வருகின்றன.

மின்விசை உற்பத்தி. புரட்சிக்கு முன்னிருந்த ரஷ்யாவில் ஆரம்ப நிலையிலேயே இருந்தது. 1920ல் நாட்டின் மின்விசை உற்பத்தி 50 கோடி கிலோவாட் மணிக்கும் சற்றே அதிகம் என்ற அளவில் தான் இருந்தது. அதாவது ஏறத்தாழ இப்போதுள்ள ஒரு சிறிய மின் நிலையத்தின் உற்பத்தி அளவுதான் எனலாம்.

ஆனல் 1972ல் சோவியத் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின்விசை அளவு 85800 கோடி கிலோவாட் மணி. 1960ல் 29 200 கோடி கிலோவாட் மணி மின்விசைதான் உற்பததி செய்யப்பட்டது.

கடந்த 20 ஆண்டுக் காலத்தில் மின்விசை உற்பத்தியின் வருடாந்தர சராசரி வளர்ச்சி வீதம் சோவியத் யூனியனில் 11 சதமாகவும், அமெரிக்காவில் 7·5 சதமாகவும் இருந்து வந்துள்ளது. 1975ல் சோவியத் யூனியனில் மின்விசை உற்பத்தி 1,06,500 கோடி கிலோவாட் மணியாக உயரும்.

சோவியத் யூனியனில் இப்போது 24 லட்சம் கிலோவாட் மணி உற்பத்தி ஆற்றலுள்ள மிகப் பெரிய அனல் மின் நிலையங்கள் உள்ளன. ஆனல் இன்னும் மிகப் பெரிய அனல் மின் நிலையங்கள் கட்டப்படுகின்றன, கட்டுவதற்குத் திட்டமிடப்படுகின்றன. இந்த நிலையங்களில் 1972ல் ஒவ்வொன்றும் 2 லட்சம், 3 லட்சம் கிலோவாட் மணி உற்பத்தி ஆற்றல் கொண்ட 18 மின் யூனிட்டுகள் அமைக்கப்பட்டன. இன்னும் மிகச் சக்தி வாய்ந்த எநதிரங்களின் உற்பத்தி தொடங்கியுள்ளது. (5 லட்சம், 6 லட்சம் கிலோவாட் மணி ஆற்றலுள்ளவை.) அவற்றில் சில ஏற்கெனவே செயல்படுகின்றன. 12 லட்சம் கிலோவாட் மணி ஆற்றல் கொண்ட டர்பைன் ஒன்று நிர்மாணிக்கப்படுகிறது. இந்த ஒரு டர்பைன் புரட்சிக்கு முந்திய ரஷ்யாவிலிருந்த எல்லா மின் நிலையங்களையும் விட அதிக அளவு மின்விசையை உற்பத்தி செய்யும்.

இப்போதைய உற்பத்தியில் கிட்டத்தட்ட 80 சதம் அனல் மின்நிலையங்களில் உற்பத்தியாகிறது.

1954ல் சோவியத் யூனியன்தான் உலகிலேயே முதன் முதலாக அணு சக்தி ஆலையைக் கட்டிற்று. இப்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் மிகப் பெரிய அணு ஆலைகள் செயல்படுகின்றன.

மொத்தம் 3 கோடி கிலோவாட் ஆற்றல் கொண்ட அணு ஆலைகளை 10, 12 ஆண்டுகளில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எரிபொருளை உற்பத்தி செய்யும் மூலவளங்கள் குன்றியுள்ள பிரதேசங்களில் இந்த அணு ஆலைகளில் பெரும்பாலானவை அமைக்கப்படும். நடப்பு ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்கு முன்பாகவே, லெனின்கிராடு, கோலா அணு மின்னிலையங்களின் ஆற்றல்கள் செயல்படத் தொடங்கி விடும்; ரஷ்யாவின் ஐரோப்பியப் பகுதியின் மத்திய பிராந்தியங்களிலும் உக்ரைனிலும் ஏனைய ஆலைகளின் நிர்மாணப் பணி தொடங்கி விடும். இந்த ஆலைகளின் மொத்த உற்பத்தி ஆற்றல் 60 — 80 லட்சம் கிலோவாட்டாக இருக்கும். நடப்பு ஐந்தாண்டுக் காலத்தின் மொத்த ஆற்றல் அதிகரிப்பில் இவற்றின் பங்கு 11 - 12 சதமாக இருக்கும். சக்தி மிகுந்த அணு ரியாக்டர்கள் பொருத்தப்படுவதனால் (லெனின் கிராடு அணு ஆலையில் பத்து லட்சம் கிலோவாட் ஆற்றல் கொண்ட ரியாக்டர்) அணு சக்தி அடக்கச் செலவு குறையும். அதனால், கிட்டத்தட்ட அனல் மின்னிலையங்களில் மின்விசை உற்பததிக்கு ஆகும் செலவுதான் பிடிக்கும்.

சோவியத் யூனியனில் விரிவான அளவில் நீர் மின்நிலைய நிர்மாணப் பணி வளமடைந்துள்ளது. 1932ல் நீப்பர் நீர் மின் ஆலை பூர்த்தியடைந்தது. இது, அந்நாட்களில் மிகச் சக்தி வாய்ந்த ஆலையாக விளங்கிற்று. (5,62,000 கிலோவாட்) இது, இப்போது நவீன மயமாக்கப்படுகிறது; இதன் ஆற்றல் 15 லட்சம் கிலோ வாட்டாக அதிகரிக்கப்படும்.

வால்கா நதிக்கரையில் ஒன்றன் பின் ஒன்றாக மின் நிலையங்கள் கட்டப்பட்ட யுத்த-பிற்கால ஆண்டுகள் வரையில் நீர் மின் நிலைய நிர்மாணம் தொடங்கவில்லை. இப்போது வால்கா நதிக்கரையில் ஏழு மின் நிலையங்கள் உள்ளன. இவற்றில், 23,00,000 கிலோ வாட்டுக்கும் அதிக திறன் வாய்ந்த லெனின் நீர் மின் நிலையமும் (இதுவே அமெரிக்காவின் 19,47,000 கிலோவாட் திறன் கொண்ட கிராண்டு கௌலீ மின் நிலையத்தை விஞ்சியதாகும்) அடங்கும். இப்போது நீப்பர், நியெஸ்டர், மேற்கு திவினா, நெமான், இர்திஷ், ஒப், அங்காரா, யெனிசி, ஆகியவற்றிலும், டிரான்ஸ்காகேசியா, மத்திய ஆசிய நதிகளிலும் வரிசை வரிசை யாக நீர் மின் நிலையங்கள் கட்டப்படுகின்றன.

அங்காரா மீதமைந்துள்ள பிராத்ஸ்கி நீர் மின் நிலையம் (41 லட்சம் கிலோவாட்) தான் உலகின் மிகப் பெரிய நீர் மின் நிலையம்

என சமீபகாலம் வரை கருதப்பட்டது. ஆனால், யெனிசி நதி மீதமைந்துள்ள அறுபது லட்சம் கிலோவாட் ஆற்றல் கொண்ட கிராஸ்னேயார்ஸ்க் மின் நிலையம் அதை விஞ்சிவிட்டது.

பாசனம், தண்ணீர் சப்ளை, நீர்வழிப் போக்குவரத்து, மீன் பிடித்தல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஏககாலத்தில் தீர்வு காணும் வகையில் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில மிகப் பெரிய நீர் மின் நிலையங்களைத் தொடர்ந்து நிர்மாணிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. கோக்தோகுல், ரிகா, காப்சக்காய், கானெவ் முத லான நீர் மின் நிலையங்களின் நிர்மாண வேலை பூர்த்தியாகி விடும். அங்காரா மீதுள்ள உஸ்த் - இலிம் நீர் மின நிலையம், டிரான்ஸ்கா கேசியாவில் உள்ள இங்குரி ஆலை, மத்திய ஆசியாவில் உள்ள நீயூரெக் ஆலை, தொலை கிழக்கிலுள்ள ஸெயா ஆலை ஆகியவற்றின் முதலாவது யூனிட்டுகள் செயல்படத் தொடங்கும்.

பொது கோப்பு ஒன்றை உருவாக்குவதற்காக, ஒன்றிணைக்கப் பட்ட சக்தி மிக்க மின் அமைப்புக்களை நிர்மாணிப்பதானது பெரிதும் நம்பகமான மின் சப்ளைக்கு உத்தரவாதமளிக்கிறது.

இந்த அமைப்பு நாட்டின் தொழில் துறைப் பிரதேசங்களில் அதாவது யூரலுக்கு மேற்கிலும் அப்பகுதியிலும் பெரிதும் வள மடைந்துள்ளது. இங்கு சக்தி மிக்க மின் அமைப்புக்கள் பல — மத்திய பகுதி, மத்திய வால்கா, யூரல் மலை, வட மேற்குப் பகுதி, தெற்குப் பகுதி, வட காகசஸ், டிரான்ஸ்காகேசியா, ஆகியவற்றில் உள்ளவை — ஒரே உயர் வோல்டேஜ் அமைப்பாக இணைக்கப்பட் டுள்ளன. பாரென்ட்ஸ் கடல் முதல், ஈரான், துருக்கி எல்லைகள் வரையிலும், யூரல்சிலிருந்து சோவியத் யூனியனின் மேற்கு எல்லைகள் வரையிலுமாகப் பரந்தகன்ற மிகப் பெரிய மின் அமைப் பொன்று நிறுவப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியைச் சேர்ந்த, ஒன்றிணைக்கப்பட்ட மின் கோப்பானது, மொத்தம் 12 கோடி 80 லட்சம் கிலோவாட்டுக்கும் அதிக ஆற்றல் கொண்ட சுமார் 600 அனல் மின் நிலையங்களையும், நீர் மின் நிலையங்களையும் ஒன்று சேர்க் கிறது.

சைபீரியாவிலும் மத்திய ஆசியாவிலும் ஒன்றிணைக்கப்பட்ட மின் கோப்புகள் உள்ளன. தொலைக் கிழக்கில் ஓர் ஒன்றிணைக்கப் பட்ட மின கோப்பினை அமைப்பதற்கான வேலை நடைபெறு கின்றது. சோவியத் யூனியன் முழுவதையும் தழுவி நிற்கும் ஒரே மின் கோப்பைத் தோற்றுவிப்பதற்குரிய வேலைகள் 9ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொடர்ந்து நடைபெறும்.

இரும்பு, உருக்குத் தொழில். உலகு முழுவதிலும் உற்பத்தியாகும் உருக்கில் சோவியத் யூனியனின் உருக்கின் அளவு ஐந்தில் ஒரு பங்காகும். இது ஜெர்மன் சமஷ்டி, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகள் அனைத்தின் மொத்த உற்பத்தியையும் விட அதிகமாகும். சோவியத் யூனியனது உலகின் மிகப்பெரும் உருக்கு உற்பத்தியாளனாகப் பரிணமித்துள்ளது. 1972ல் சோவியத் யூனியனின் உருக்கு உற்பத்தி 12 கோடி 60 லட்சம் டன் (அமெரிக்க உற்பத்தி 12 கோடி 30 லட்சம் டன்தான்.)

பழங்கால ரஷ்யாவில், ஓரளவு பெரிய உருக்கு உற்பத்தித் தளம் தெற்கே - ஒன்று டான்பாஸ், நீப்பர் பிராந்தியத்தில் - அமைந்திருந்தது. அதில் ரஷயாவின் மொத்த வார்ப்பு இரும்பு உற்பத்தியில முக்கால் பங்கு உருக்கப்பட்டது, நாட்டின் மொத்த உருக்கு உற்பத்தியில் சுமார் மூன்றில் இரு பங்கு உற்பத்தியாயிற்று. 18 ஆம் நூற்றாண்டிலேயே, உருவாகியிருந்த பழைய நிலக்கரி, உருக்குப் பிரதேசம மிகப் பின்தங்கிய தொழில் நுட்பத்தை அனுசரித்து வந்தது. இப்பகுதியின் கச்சாப் பொருட்கள் மிக உயர்ந்த தரமானவையாக இருப்பினும் இது, தென் பகுதியைச் சேர்ந்த இரும்பு - உருக்குத் தொழிலுக்கு ஈடு கொடுக்கும் தகுதியுடையதாக இருக்கவில்லை.

இன்று. யூரல் பகுதியின் இரும்பு, உருக்குத் தொழில் துறையில் மிகப் பெரிய நான்கு நவீன ஆலைகள் உள்ளன. மாக்னிதோகோர்ஸ்க், செலியாபின்ஸ்க், நிஷ்னிதாஜில், ஓர்ஸ்க் ஆகியவற்றில் அவை உள்ளன.

அண்மை ஆண்டுகளில் சைபீரியாவிலும், கஜாக்ஸ்தானிலும் இரும்பு - உருக்குத் தொழில் விரைவாக வளர்ச்சியடைந்தது. காரகண்டா நகரில் பிரம்மாண்டமான ஓர் ஆலை கட்டப்பட்டுள்ளது. இதில் இரும்பு, உருக்கு, உருட்டப்பட்ட உருக்கு ஆகிய முக்கிய ரகப் பொருட்கள் யாவும் உற்பத்தியாகின்றன. இது மிகச் சிறந்த உருட்டு ஆலைகளையும் கொண்டுள்ளது. நொவோகுஸ்னெத்ஸ்க்கில் உள்ள மேற்கு சைபீரிய, இரும்பு உருக்கு ஆலை செயல்படத் தொடங்கியுள்ளது.

உற்பத்தி சம்பந்தமாய் எல்லா வகையான செயல் முறைகளையும் கொண்ட புதிய, மிகப் பெரிய தொழில் நிலையங்களும் உள்ளன. இவை, நாட்டின் வட மேற்குப் பகுதியில் லெனின் கிராடுக்கு அருகில் உள்ள யூரெப்போவெத்ஸ்ஸிலும், தெற்கே ஜார்ஜியாவில் ருஸ்தாவிபிலும் அமைந்துள்ளன.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் எந்திர நிர்மாண வளர்ச்சிக்கு உள்ளூர்களில் உருக்கு வார்ப்பு ஆலைகள் கட்டுவது அவசியம்; இவை லீபஜா (லாத்வியா), லெனின் கிராடு, கார்க்கி,

நோவோசிபிர்ஸ்க், பெகோபாத் (உஸ்பெக்கிஸ்தான்), ஆமூரின் மீதமைந்துள்ள காம்சொமால்ஸ்க் (தொலைக் கிழக்கு) முதலான இடங்களில் உதித்தெழுந்துள்ளன.

நாட்டின் எந்திர நிர்மாண கேந்திரமான சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியின் மையத்தில் உருக்கு உற்பத்திக்கும் பெரும் வாய்ப்புள்ளது. மாஸ்கோ எலெக்த்ரோத்செல், தூலா, லிப்பெத்ஸ்க் முதலான நகரங்களில் ஏராளமான உருக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. லிப்பெத்ஸ்கிலும், தூலாவிலும் இரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. நாட்டின் மத்தியப் பிரதேசமான இது, உருக்கு உற்பத்தியில் வகித்து வரும் பங்கு அண்மை எதிர் காலத்தில் பெரிதும் கூடுதலாகிவிடும். குர்ஸ்க்மாக்னெடிக் அனேமலி எனப் பிரபலமடைந்துள்ள அளப்பரும் இரும்புப் படிவங்கள் ஆராய்வும் பயனீடுமே இதற்குக் காரணமாகும். 63 சதம் வரை உலோக உள்ளடக்கம் கொண்ட வளமான கனிப்படிவ சேமங்கள் மாத்திரம் 3000 கோடி டன் இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. அதே சமயம் 25-40 சத வீத உலோக உள்ளடக்கம் கொண்ட மிகச் சாதாரண இருப்புப் படிவங்கள் பல ஆயிரம் கோடி டன் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. சில படிவ இருப்புகள் பூமியின் கீழ் அருகாமையில் உள்ளன. இதனுல் திறந்த வெளிச் சுரங்கம் அமைப்பது சாத்தியம். நடப்பு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தப் பிரதேசத்தில் ஆண்டு தோறும் இரும்புப் படிவம் தோண்டி எடுக்கப்படுவது 4 கோடி டன்னுக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன.

யுத்த கால முதலாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய இரும்புப் படிவங்கள் நாட்டின் இதர உலோக உற்பத்திப் பிரதேசங்களின் தேவைகளை முழுமையாகச் சமாளிக்கின்றன,

1972ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் முழுவதிலும் 20 கோடி 80 லட்சம் டன் இரும்புப் படிவம் தோண்டி எடுக்கப் பட்டது.

சோவியத் யூனியனில் 300க்கும் அதிகமான உருக்கு ஆலைகள் உள்ளன. அவற்றில் ஆண்டுதோறும் 1 கோடி 45 லட்சம் டன் உருக்கை உற்பத்திச் செய்கின்ற மாக்னிதோகோர்ஸ்க் கூட்டாலை யும், ஆண்டுக்கு 1 கோடி 80 லட்சம் டன் உற்பத்தி செய்யும் கிரிவோய் ராக் ஆலையும், ஆண்டுக்கு 71 லட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்யும் ஜதானேவ் ஆலையும், வருஷத்துக்கு 64 லட்சம் டன் உற்பத்தி செய்யும் நிஷ்னிதாஜில் ஆலையும், 63 லட்சம் டன் உற்பத்தி செய்கிற செரெபோவெத்ஸ் ஆலையும், 62 லட்சம் டன் உற்பத்தி செய்கின்ற செலியாபின்ஸ்க் உருக்காலையும் அடங்கும். இந்த ஆலைகள் உலகின் மிகப் பெரிய ஆலைகளின் வரிசையில் இடம்

பெற்றவையாகும். 1973 பிப்ரவரியில் நொவோலிபெத்ஸ்க் உருக்கு ஆலையில் 3200 கன மீட்டர் ஊதுலை செயல்படுத்தப் பட்டது. கிரிவோய் ரோகில் நிர்மாணிக்கப்படுகின்ற 5000 கன மீட்டர் ஊதுலை உலகிலேயே மிகப்பெரியதாகும்.

உலோகவியலில், உருக்கின் தரத்தை உயர்த்துதல், கலவை உருக்கு உற்பத்தியை அதிகரித்தல், உருட்டப்பட்ட உருக்கின் வகைகளை பெருக்குதல் ஆகிய அம்சங்களில் சோவியத் உருக்கு உற்பத்தியாளர்கள் பெரும் முன்னேற்றங்களைச் சாதித்துள்ளனர். 1975 ஆம் ஆண்டு வாக்கில் உருக்கு உற்பத்தி 14 கோடி 64 லட்சம் டன்னை எட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதில், 11 கோடி 60 லட்சம் டன் உருட்டப்பட்ட உருக்காக இருக்கும்; உயர் ஆற்றல் கொண்ட யூனிட்டுகளை அமைப்பதற்கும், மிக முற்போக்கான தொழில் நுட்பத்தைக் கையாளுவதற்குமே இப்போது முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**இரும்பு அல்லாத உலோகங்கள்:** இரும்பு அல்லாத இதர கனிப் படிவங்களிலும் சோவியத் யூனியனிடம் போதிய வள முள்ளது: அதாவது தங்கம், வெள்ளி, பிளேட்டினம் முதலான அரிய விலையுயர்ந்த உலோகங்களிலும் வளமுடையதாக விளங்கு கிறது. செம்பு, வெள்ளீயம், நிக்கல், துத்தநாகம், பாதரசம், பாக்சைட் முதலானவற்றில் இதர தேசங்களை விட சோவியத் யூனியன் மிகுந்த வளமுடையதாக இருக்கிறது. எனவே, நாட்டில் வெகுவேகமாக வளரும் பல்வேறு உலோகங்களின் தேவைகளையும் சமாளிக்கவல்ல பெருமளவிலான, இரும்பல்லாத உலோகத் தொழிலை உருவாக்கக் கூடியதாக சோவியத் யூனியன் விளங்கு கிறது.

பழைய ரஷ்யாவில் அறவே இல்லாத அலுமினிய உற்பத்தி, யூரல்ஸ் பகுதியிலும் (ஸ்வெர்த்லோவ்ஸ்க் பிரதேசம்) லெனின் கிராடு பிரதேசத்திலும் திகவின் கிட்டும் பாக்சைட்டின் அடிப் படையில் தான் அண்மைக் காலம் வரை நடைபெற்று வந்தது. சமீபத்தில் கஜாக்ஸ்தானில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய பாக்சைட் படிவங்கள் பாவ்லொதாரில் புதியதொரு ஆலையை உருவாக்கியுள்ளன.

நெபிலைனிலிருந்து அலுமினியம் உற்பத்தி செய்யும் மிகச் சிக்கனமான முறையொன்றை சோவியத் இஞ்சினீயர்கள் இப் போது வகுத்துள்ளனர். இதனால் அலுமினியம் தொழிலின் கச்சாப் பொருள் அடிப்படை பெருமளவு விரிவாகியுள்ள தெனலாம். ஏனெனில் கிழக்கு சைபீரியா, கோலா தீபகற்பம், டிரான்ஸ்காகேசியா, முதலான பிரதேசங்களில் இத்தகைய மூலப்பொருள் இருப்புக்கள் ஏராளமாக உள்ளன. கோலா

நெபலேன் ஏற்கெனவே பயன்படுத்தப் படுகிறது. (முர்மான்ஸ்க் பிரதேசத்திலும் கரேலியாவிலும் ஆலேகள் உள்ளன.) இர்குத்ஸ்க் அருகிலுள்ள அலுமினியம் தொழிற்சாலே இப்போது இயங்கு கின்றது. கிராஸ்னெயார்ஸ்க், பிராத்ஸ்க் ஆலேகள் பூர்த்தி பெறும் தருவாயிலுள்ளன. இவை, நாட்டின் மிகப்பெரிய நெபலேன் படிவங்களுக்கும், மலிவான மின் ஆதார வளங்களுக்கும் அருகாமையில் அமைந்துள்ளன. (இவை அங்காரா, யெனிசி மீதமைந்துள்ள பிரம்மாண்டமான நீர்மின் நிலேயங்களும் பூமியின் மேற்பரப்புக்கு அருகாமையில் உள்ள பெரும் நிலக்கரிப் படிவங்களுமாகும்)

நாட்டின் கிழக்குப் பகுதியில், முக்கியமாக கஜாக்ஸ்தானில் இரும்பல்லாத உலோகம் எடுத்தலும் அவற்றின் உற்பத்தியும் மையப்படுத்தப்படுகின்றன. அவ்விடத்தில் செம்பு, ஈயம், துத்தநாகம், முதலான அரிய உலோகங்கள் பெருமளவில் உற்பத்தியாகின்றன.

கஜாக்ஸ்தானேப் போலவே, யூரல் பகுதியும் முக்கியமானது; இங்கு செம்பு, அலுமினியம், நிக்கல், துத்தநாகம், தங்கம், பிளாட்டினம் முதலான உலோகங்களின் உற்பத்தி வளமடைந் துள்ளது. சைபீரியாவிலும், தொலேக் கிழக்கிலும், கரேலியா விலும் கோலா தீபகற்பத்திலும் இரும்பல்லாத உலோகத் தொழில் கேந்திரங்கள் (செப்பு, நிக்கல், அலுமினியம் முதலான அரிய உலோகங்கள்;) காகஸஸில் (செம்பு, அலுமினியம், துத்தநாகம், ஈயம்) உக்ரைனில் (மாக்னிஷியம், துத்தநாகம் முதலானவை) அமைந்துள்ளதைக் காணலாம்.

1975ஆம் ஆண்டு வாக்கில் இரும்பல்லாத உலோகங்களின் உற்பத்தியானது, 1970 ஆம் ஆண்டின் உற்பத்தி அளவை விட 50 சதம் அதிகமாக இருக்கும் என்று திட்டத்தில் எதிர்பார்க்கப் படுகிறது. (அலுமினிய உற்பத்தி 60 சதமும், செம்பு 40 சதமும் அதிகரித்திருக்கும்.)

இஞ்சினியரிங் தொழில்: பழைய ரஷ்யாவில் 1913ஆம் ஆண்டு முழுவதிலும் உற்பத்தியான இஞ்சினியரிங் தொழில்துறைப் பொருள்களே விட அதிகமாக இப்போது சோவியத் ரஷ்யாவின் இஞ்சினியரிங் தொழில் துறையானது ஒரே நாளில் உற்பத்தி செய் கிறது. சோவியத் இஞ்சினியரிங் தொழில்துறையானது பல ஆண்டுக் காலமாகவே அமெரிக்காவுக்கு இரண்டாவது இடத்தில் இருந்து வருகிறது. டிராக்டர்களின் உற்பத்தியிலும், (மொத்த ஆற்றல்) டீசல், மின்விசை ரயில் இஞ்சின்கள் உற்பத்தியிலும் சோவியத் யூனியன் அமெரிக்காவை விஞ்சிச் சென்று விட்டது.

விண்கலங்களை நிர்மாணிப்பதிலும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை நிர்மாணிப்பதிலும் அணுசக்திக் தொழில்நுட்பத்திலும், அதன் ஜெட் விமானங்கள் சைபெர்னெடிக் கருவிகள், துளையிடும் எந்திரங்கள் ஆகியவற்றை உருவாக்குவதிலும் புரிந்துள்ள சாதனைகள் சோவியத் இஞ்சினீயரிங் தொழிலின் வளமையைத் தெளிவாகக் காட்டுகின்றன.

சகல வகைப்பட்ட கடைசல் எந்திரங்களையும் சோவியத் யூனியன் உற்பத்தி செய்கின்றது. இதில் நுண் எந்திரக் கருவிகள், தானியங்கிக் கட்டுப்பாட்டு எந்திரங்கள், தானியங்கி வரிசைகள் முதலானவையும் அடங்கும். 1972ல் உற்பத்தி செய்யப்பட்ட எந்திர உபகரணங்களின எண்ணிக்கை 2,10,000. இந்த எண்ணிக்கை 1975ல் 2,30,000—2,50,000 ஆக உயரும்.

வேலை நிர்ணயக் கட்டுப்பாட்டு எந்திரங்களின் வளர்ச்சி வீதம்— இது உலோக வேலைக் கருவிகளில் மிகவும் முன்னேற்றமடைந்த வகைப்பட்டது பெரிதும் உயர்வாக உள்ளது. இத்தகைய 3,050 எந்திரங்கள் 1972ல் உற்பத்தியாயின. அதே சமயம் 1970ல் 1687 எந்திரங்கள்தான் உற்பத்தியாயின. இது 1971ல் அமெரிக்கா உற்பத்தி செய்த இவ்வகை எந்திரங்கள் எண்ணிச்கையை விட அதிகமாகும் இந்த எந்திரங்களின் பற்பல வகைகளும் கூடுதலாகியுள்ளன. 1970ல் சோவியத் யூனியன் 30 வகைப்பட்ட வேலை நிர்ணயக் கட்டுப்பாட்டு எந்திரங்களை உற்பத்தி செய்தது. 1972ல் இந்த வகை எந்திரங்களின் எண்ணிக்கை 63 ஆக உயர்ந்தது. 1971—1972 ஆகிய இவ் இரு ஆண்டுகளில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான எந்திர மயமாக்கப்பட்ட உற்பத்தி வரிசைகளும், 3000 தானியங்கி வரிசைகளும் புகுத்தப்பட்டன.

பழைய கேந்திரங்களில் அதாவது மாஸ்கோவிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும், லெனின்கிராடிலும்—இயந்திர நிர்மாணத் தொழில்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. அதே சமயம் சகல யூனியன் குடியரசுகளிலும் இத்தொழில்கள் தோன்றியுள்ளன.

மின்விசை, மின்தொழில்நுட்ப இஞ்சினீயரிங் தொழிலானது சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியினுடைய மத்திய பிரதேசங்களிலும் லெனின்கிராடு, ஸ்வெர்த்லோவ்ஸ்க், கார்கவ், யெரெவான் முதலானவற்றில் உக்ரைனைச் சேர்ந்த பல நகரங்களிலும் பால்டிக் குடியரசுகளிலும், நாட்டின் கிழக்குப்பகுதியிலும் விரிவான அளவில் வளர்ச்சியடைந்துள்ளது.

1972ல் உற்பத்தி செய்யப்பட்ட டர்பைன்களின் மொத்த ஆற்றல் 1 கோடி 46 லட்சம் கிலோவாட்; டர்பைன் ஜெனரேட்டர்

களின் ஆற்றல் 1 கோடி 37 லட்சம் கிலோவாட்; ஏ.சி. மோட்டார்களின் ஆற்றல் 4 கோடி கிலோவாட்.

போக்குவரத்து இஞ்ஜினீயரிங் தொழில். நெடுவழி மின்சார ரயில் இஞ்சின் உற்பத்தி ஆண்டுக்கு 350க்கும் அதிகமாகிறது. டீசல் ரயில் இஞ்சின்களின் பிரிவுகளது உற்பத்தி ஆண்டுக்கு 1500. (இது, பிரிட்டனில் உள்ளதைவிட ஏழு மடங்கும், ஜப்பானைவிட 4·5 மடங்கும், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசைவிட 3·5 மடங்கும் அதிகம். பிரயாணிகளுக்கான வண்டிகள், சரக்கு வண்டிகள், டிராலி பஸ்கள், டிராம் வண்டிகள், பாதாள ரயில் வண்டிகள் முதலானவை ஏராளமாகத் தயாரிக்கப்படுகின்றன.

மத்தியப் பகுதிகள், உக்ரைன், லெனின்கிராடு, யூரால்ஸ், பால்டிக் குடியரசுகள் டிரான்ஸ்காகேசியா மற்றும் பல பிராந்தியங்களில் போக்குவரத்துத் தொழில் சம்பந்தமான தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.

கப்பல் கட்டும் தொழில் பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளது. அடுத்த ஏழு ஆண்டுகளில் சோவியத் கப்பல்கள் புதிய பொது மாதிரியான தனி ஆற்றலுடைய கலங்கள் கொண்டவையாக இருக்கும். இவை கப்பல் எந்திர நுட்பத்தினதும் அமைப்புக்களது மான தானியங்கிக் கட்டுப்பாட்டு முறையுடன் கூடியவையாக விருக்கும்.

அண்மை ஆண்டுகளில் மிகவும் வேகமாகச் செல்லுகின்ற பயணிகள் கப்பல் வெற்றியுடன் கட்டப்பட்டுள்ளன. இவை மோட்டார்ப் படகுகளையும் மீன்பிடித்தலுக்கான மிதவை அமைப்புக்களையும் கொண்டவை. ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதல் தடவையாக 1,50,000 டன் கலங்கள் இடம் பெறும். 1,00,000 டன் எடை கொண்ட எண்ணெய்க் கப்பல்களும், பெரும் சரக்குக் கப்பல்களும் கட்டப்படும்.

மோட்டார் வண்டி உற்பத்தித் தொழில். மாஸ்கோ ஏ எம் ஓ ஆலையில் 1924 ஆம் ஆண்டில், சோவியத் யூனியனின் முதலாவது மோட்டார் வண்டிகள் (சிறிய லாரிகள்) உற்பத்தியாயின. (இவ் ஆலை இப்போது லிக்காச்கோவ் ஆலை எனப்படும்). சோவியத் யூனியன் 1972ல் பல்வேறு நோக்கங்களுக்கான 13,79,000 மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்தது. இவ் எண்ணிக்கையில் பாதிக்கும் சற்று குறைவானவை லாரிகள்; இவை பல நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. சோவியத் யூனியனில் உற்பத்தியாகும் பயணிகள் காரில் சில வெளிநாடுகளில் பிரபலமானவை. இப்போது சோவியத் மோட்டார் வண்டி தொழிலின் வளர்ச்சியில் பெரும் மாறுதல் இடம் பெற்று வருகிறது. 1975 ஆம் ஆண்டு வாக்கில், 20 லட்சத்துக்கும் சிறிது கூடுதலான மோட்டார்

வண்டிகள் உற்பத்தியாவதற்கு ஐந்தாண்டுத் திட்டம் வகை செய கிறது. இவற்றில் 10 லட்சத்து 25 ஆயிரம் பயணிகள்-கார்களும் அடங்கும். இந்தத் திட்டத்திற்கு ஏற்ப, 1972ல் டோக்ளியாட்டி நகரில் வோல்கா மோட்டார் கார் ஆலையின் மூன்றும் பகுதி செயல்படத் தொடங்கிற்று. இவ் ஆலை அதன் உற்பத்தியின் வீதா சார ஆற்றலை எட்டியுள்ளது. அதாவது ஆண்டுக்கு 6,60,000 கார்களை உற்பத்தி செய்யும், மாஸ்கோவில் கார்களின் உற்பத்தி அளவு 2 00,000க்கு இரட்டிப்பாக்கப்படுகிறது. யூரலில் புதிய இரஷவ்ஸ்க் ஆலையானது திட்டமிடப்பட்ட அதன் உற்பத்தி ஆற்றலை அதாவது ஆண்டுக்கு 2,20,000 கார்கள் உற்பத்தி செய்யும் திறனை அடைகின்றது. பயணிகள் காரின் மொத்த உற்பத்தியானது ஐந்தாவது திட்ட காலத்தில் 250-280 சதவீதம் கூடுதலாகும்.

தாத்தாரிய சுயாட்சிக் குடியரசில் நபெரெஷ்னியே செல்னியில் கட்டப்படுகின்ற ஒரு மிகப் பெரிய ஆலை 1,50,000 லாரிகளை ஆண்டுதோறும் உற்பத்தி செய்ய வல்லதாகும்.

**விவசாய இஞ்சினீயரிங் தொழில்.** சோவியத் வேளாண்மையில் பலவேறு வகையான எந்திரங்கள் பயன்படுகின்றன. அதாவது பல டஜன் வகைப்பட்ட டிராக்டர்கள், கம்பைன்கள், உருளைக் கிழங்கு விதைகள் நடவு எந்திரங்கள், கூலங்களை அறுக்கும் எந்திரங்கள், சர்க்கரைவள்ளி, உருளைக்கிழங்கு பருத்தி, தேயிலை அறுவடை எந்திரங்கள், கால்நடை, வளர்ப்புப் பண்ணைகளுக்கான தொழில் நுட்ப சாதனங்கள், பால் கறவை எந்திரங்கள் முதலானவை பயன்படுத்தப்படுகின்றன. இவை இல்லாமல் நவீன வேளாண்மைத் துறையை நினைத்துப் பார்க்கவும் முடியாது.

வேளாண்மை சம்பந்தமான எந்திர சாதனங்களை உற்பத்தி செய்யும் இஞ்சினீயரிங் தொழில் நிலையங்கள் எல்லா யூனியன் குடியரசுகளிலும் அமைந்துள்ளன. குறிப்பிட்ட சில ரக விவசாய எந்திர சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள், எங்கு இந்த எநதிர சாதனங்கள் தேவைப்படுகின்றனவோ அவ்விடத்திற்கு சாத்தியமான அளவு அருகாமையில் அமைக்கப் பட்டுள்ளன.

சோவியத் எந்திர சாதன நிர்மாணத் தொழிலானது 700க்கும் கூடுதல் வகைப்பட்ட விவசாய எந்திரங்களை உற்பத்தி செய் கின்றது; இந்த எண்ணிக்கை அடுத்த சில ஆண்டுகளில் 900-950 ஆக அதிகரிக்கும், இவற்றில் 500 புதுரக எந்திரங் களாக விளங்கும். முக்கியமான விவசாய நடவடிக்கைகளை எல்லாம் எந்திர மயமாக்கும் பணியைத் துரிதப்படுத்துவது இதனால் சாத்தியமாகும்.

சோவியத் யூனியனின் டிராக்டர் தொழில்துறை மிக முன் னேற்றமடைந்த தொழில், இதன் தொழில்நுட்ப முன்னேற்றம் நவநவீனமானது. 300 குதிரைத் திறன கொண்ட தொழிலதுறை சம்பந்தப்பட்ட டிஇடி 250 முதலாக 7 குதிரைத் திறன் கொண்ட ரிமோனி ரகம் ஈறுக (இது பழத்தோட்டங்கள் கொல்லைகளில் பயன்படுத்துவதற்கானது) எல்லா வகையான டிராக்டர்களையும் சோவியத் தொழில் நிலையங்கள் உற்பத்தி செய்கின்றன.

மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்தில் செயல்படவல்ல சக்தி மிக்க டிராக்டர்களை சோவியத் டிராக்டா தொழில்துறை உற்பத்தி செய்கின்றது. இவற்றில் 300 குதிரைத் திறன கொணட கே. 701, 150 குதிரைத திறன் கொணட டி-150 உருள் சககரங் கொண்ட டிராகடர்கள ஆகிய பென்னம பெரிய ரகங்களும் அடங்கும். 1973ல 80 குதிரைத திறன் கொண்ட பல நோககு டிராகடர், புதிய தானிய அறுவடை கம்பைன்கள் —''நிவா'' ''கொலோஸ்'' ''சிபிரியாக்'' முதலானவை—கழனிகளில் செயல் படத் தொடங்கின.

சோவியத் யூனியன் 1972 ல் 4,78,000 டிராக்டர்களையும், 1,30,000 அறுவடைக் கம்பைனகளையும உற்பத்தி செய்தது; 1975 ஆம் ஆண்டுவாக்கில் இநத எண்ணிக்கைகள் முறையே 5,75,000, 1,38,000 ஆக உயருமென எதிாபார்க்கப்படுகிறது;

இரசாயனத் தொழில். இரசாயனப் பொருள்களின் உற்பத்தி யில் சோவியத் யூனியன் அமெரிக்காவுககு அடுத்த இடம் வகிதது வருகின்றது.

பிளாஸ்டிக்குகள், இரசாயன இழைகள். முக்கியமாக பெட்ரோலியம், எரிவாயு, நிலக்கரி, வெட்டுமரம், தீப்பற்றக் கூடிய மாககல் ஆகியவற்றைச செய்முறை செய்வதன் அடிப்படை யில, மிகக் குறுகிய காலத்திலேயே சோவியத் நாடு மகப் பல இரசாயனத் தொழில் நிலையங்களின் தொகுதிகளைக் கட்டி உருவாக்கியுள்ளது. இவை பளாஸ்டிக்குள், இரசாயன இழைகள், சேர்க்கை ரப்பர், சாயஙகள், துப்புரவுப் பொருட்கள் ஆகிய வற்றையும், உற்பத்தித துறையிலும், வீட்டு உபயோகத்திலும் மேன்மேலும் பயன்படுத்தப்படுகின்ற இதர பொருட்களையும் உற்பத்தி செய்வனவாகும்.

இரசாயன இழையின் உற்பத்தி யுத்த முற்கால முதலாய் 70 மடங்கு அதிகரிததுள்ளது; 1972ல் இதன் மொத்த உற்பத்தி 7,46,000 டன்களாகும். பிளாஸ்டிக, செயற்கைப் பிசின் உற்பத்தி 20,35,000 டன்னுக்கும் அதிகமாகியுள்ளது; 1975 ஆம் ஆண்டில் 1970 ஆண்டளவைவிட ரசாயன இழை உற்பத்தி

70 சதத்துக்கும் மேல் கூடுதலாகியிருக்கும். பிளாஸ்டிக்குகள், ரசாயனப் பொருட்கள் உற்பத்தி 90 சதம் கூடுதலாகிவிடும்.,

இன்றைய இரசாயனத் தொழிலின் வளர்ச்சியளவும், அதன் நவீன தொழில்நுட்ப சாதனங்களும் குறிப்பிடத்தக்க சிறப்புடையவைகளாகும். 1972ல் செயல்படத் தொடங்கிய மிகப் பெரிய தொழில் நிலையங்களின் ஒவ்வொரு யூனிட்டும் 4,00,000-4,50,000 டன் அமோனியாவை உற்பத்தி செய்ய வல்லவை. இந்த யூனிட்டுகள் ஒன்றின் உற்பத்தித் திறனானது 1948ல் நாட்டில் இருந்த அமோனியா ஆலைகள் அனைத்தின் உற்பத்தித் திறனுக்கும் கிட்டத்தட்டச் சமமானதாகும்.

செயற்கை ரப்பர். 1930 ஆம் ஆண்டுகளிலேயே செயற்கை ரப்பர் சோவியத் யூனியனில் உற்பத்தி செய்யப்பட்டது. இப்போது செயற்கை ரப்பரில் 90 சதத்துக்கும் அதிகமான அளவு இயற்கை எரிவாயுவிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. பாஷ்கிர் சுயாட்சிக் குடியரசு, வோல்கா பிராந்தியங்கள், காகசஸ், கஜக்ஸ்தான், சைபீரியா ஆகியவற்றில் செயற்கை ரப்பர் உற்பத்தி செய்வதற்கான பெரிய கேந்திரங்கள் கட்டப்பட்டுள்ளன.

அண்மை ஆண்டுகளில் இஸாப்பிரின் ரப்பர் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டது. இது, தரத்தில் இயற்கை ரப்பரைப் பெரிதும் ஒத்துள்ளது. சில அம்சங்களில் அதை விடவும் சிறந்ததெனலாம். மோட்டார் கார் தொழில் வளர்ச்சி சம்பந்தப்பட்ட விரிவான திட்டத்தைப் பூர்த்தி செய்ய இது விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1975 ஆம் ஆண்டுவாக்கில், ரப்பர் உற்பத்தி 70 சதம் உயரும். கார் டயர்கள் உற்பத்தி 1972ல் 3 கோடி 87 லட்சமாக இருந்தது, 1975ல் 5 கோடியாகப் பெருகும். மாஸ்கோ, லெனின்கிராடு, யரோஸ்லாவல், வொரோனேஷ், நீப்ரோ பெத்ரோவ்ஸ்க், ஓம்ஸ்க், கிராஸ்னோயார்ஸ்க் ஆகியவற்றில் மிகப் பெரிய டயர் உற்பத்தி ஆலைகள் உள்ளன.

கனி உரம். விவசாயத்தின் மும்முரமான வளர்ச்சிக்கு, கனிஉர உற்பத்தி இன்றியமையாததாகும் இரசாயனத் தொழிலின் இந்தக் கிளையின் வளர்ச்சி வீதத்தைப் பின்வரும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 1913ல் 10 ஆயிரம் டன்; 1940ல் 32 லட்சம் டன், 1972ல் 6 கோடி 61 லட்சம் டன், (சம்பிரதாய யூனிட்டில்) 1975 ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி 9 கோடி டன்னை எட்டும். அதில் 80 சதம் உயர் செறிவுடைய கலப்பு உரமாக இருக்கும்.

வெட்டுமரத் தொழில். சோவியத் யூனியன் மிகப் பெரிய வெட்டு மரங்கள் ஏற்றுமதியாளராக விளங்குகிறது. வெட்டு மரத்தை வீழ்த்தல், பயனீட்டுக்கு தயார் செய்தல் இவற்றுடன் சம்பந்தப்பட்ட பொருளாதாரக் கிளைகள் யாவும் (மொத்த

ரிசர்வுகள் கிட்டத்தட்ட 8000 கோடி கனமீட்டர். (அதாவது இவ்வகையில் உலகின் மொத்த இருப்பில் ஐந்தில் ஒரு பங்கு) நாட்டில் அடர்த்திக் குறைவான காடுகளைக் கொண்ட ஐரோப்பியப் பகுதியிலேயே மையப்பட்டிருந்தன. அவை இப்போது முக்கிய மாக யூரலுக்கு கிழக்கிலுள்ள வளம் கொழிக்கும் வெட்டுமரப் பிரதேசங்களுக்கு மாற்றப்படுகின்றன. அறுக்கப்பட்ட மர உற்பத்தியிலும், மரங்களை வெட்டி வீழ்த்துவதிலும் சோவியத் யூனியனது உலகிலேயே மிகச் சிறப்பான முதலிடம் பெற்றுள்ளது. 1972ல் 29 கோடி 80 லட்சம் கனமீட்டர் அளவுள்ள வர்த்தகத்துக்கான மரம் ஏற்றுமதி செய்யப்பட்டது.

**சிமெண்ட்டும் முன் தயாரித்த காங்க்ரீட்டும்.** சிமெண்ட், முன் தயாரிப்பு காங்க்ரீட் கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் சோவியத் யூனியன் முதலிடம் வகிக்கிறது. 1972ல் சிமெண்ட் உற்பத்தி 14 கோடி 30 லட்சம் டன். இது 1975ல் 12 கோடி 20 லட்சம் முதல் 12 கோடி 70 லட்சம் டன்னுக அதிகரிக்கும்.

சிமெண்ட் தொழிலில் புதிய, தானியங்கி முறையொன்று புகுத்தப்பட்டுள்ளது; இதற்கு உலகில் வேறெந்த நாட்டிலும் ஈடு கிடையாது. தனித்தனி செய்முறைகள் தானியங்கிமயமாக்கப் பட்டிருப்பது மட்டுமல்லாமல், கச்சாப் பொருள் தயாரிப்பு முதலாக, தயாராகியுள்ள சிமெண்டை வண்டிகளில் ஏற்றி விடுவது ஈருக உற்பத்தியில் அடங்கியுள்ள ஒவ்வொரு பணியும் தானியங்கி மயமாக்கப்பட்டுள்ளது. மொத்தமாக தொழில் நிலையம் முழுவதும் உண்மையில் தானியங்கி முறையாலேயே இயக்குவிக்கப்படுகின்றது எனலாம்

**லகு தொழில்**. பயனீட்டுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள் (துணிகள், பாத அணிகள், டெலிவிஷன், வயர்லஸ் செட்டுகள், உணவுப் பொருட்கள், முதலானவை) நாட்டின் மொத்த தொழில் துறைப்பொருள் உற்பத்தியில் கால் பங்கிற்கும் அதிகமாகும்.

பயனீட்டுப் பண்ட உற்பத்தியைப் பெருக்க முன்னுரிமை வழங்கப்படுகின்றது, 1975ல் இல் உற்பத்தி 1970ஆம் ஆண்டின் அளவைவிட 50 சதம் அதிகமாகிவிடும். இவ் அளவு 1960ஆம் ஆண்டின் உற்பத்தி அளவைவிட மூன்று மடங்கும் 1940ஆம் ஆண்டின் உற்பத்தியைவிட ஏறத்தாழ 10மடங்கும் அதிகமாகும்.

**ஜவுளித்தொழில்.** கம்பளி, லினென் துணிகள் உற்பத்தியில் சோவியத் யூனியன் இதர நாடுகளை விட வெகுதூரம் முன் சென்றுள்ளது. 1972ல் 68 கோடி 10லட்சம் சதுர மீட்டர் கம்பளித்

துணிகளையும், 77 கோடி 50 லட்சம் சதுர மீட்டர் லினெனையும் உற்பத்தி செய்தது. பஞ்சிஞல் நெய்த துணி உற்பத்தி 640 கோடி 90 லட்சம் சதுர மீட்டர். இது, 1940ஆம் ஆண்டு உற்பத்தி அளவைவிட இரண்டு மடங்கு அதிகம். பட்டு உற்பத்தி (127 கோடி சதுரமீட்டர்) யுத்த முற்கால அளவைவிட 20மடங்கு அதிகமாகியுள்ளது.

இன்று ஜவுளித்தொழிலின் தொழில்நிலையங்கள் முக்கியமான பொருளாதாரப் பிராந்தியங்களில் எல்லாம் உள்ளன. ஆனல் மத்திய பிராந்தியங்கள் யாவும் ஜவுளித் தொழிலின் கேந்திரப் பகுதியிலேயே இன்னும் இருக்கின்றன. (மாஸ்கோ இவானேவா, ஷுயா, ஒரிகோவா-ஜியெவோ முதலானவை) சோவியத்யூனியனில் உள்ள பிரதான பருத்தி விளைக்கும் பகுதியான உஸ்பெக்கிஸ்தானில் ஜவுளித்தொழில் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது, இங்கு புரட்சிக்கு முன்பு இத்தொழில் அறவே இல்லை, பருத்தித் துணிகளின் உற்பத்தியில் உஸ்பெக்கிஸ்தான் சோவியத் யூனியனில் இரண்டாவது இடம் பெற்றுள்ளது. இது மிகப் பழமையான வடமேற்கு ஜவுளித்தொழில் பிரதேசங்களையும், பால்டிக் பிரதேசத்தையும் மிஞ்சிச் சென்று விட்டது. உக்ரைன், வால்கா பகுதி, காகசஸ், பைலோ ரஷ்யா ஆகிய இப்பகுதிகளில் ஜவுளி உற்பத்தி கணிசமான அளவு வளர்ச்சியடைந்துள்ளது, இன்று சோவியத் ஜவுளித்தொழில் இட அமைவில் முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஏனெனில், புதிய பிராந்தியங்களில் முக்கியமாக கிழக்கு பிராந்தியங்களில் ஜவுளித் தொழில் வளர்ச்சி பின்தங்கி இருப்பதனல் புதிய தொழில் நிலையங்களைக் கட்டுவது அநேகமாக நாட்டின் தெற்கு, கிழக்கு பகுதிகளுக்கு முற்றிலும் மாற்றப்பட்டிருப்பதை உதாரணமாகக் காட்டலாம்.

சோவியத் பின்னலாடை துணிமணிகள் தொழிலானது அநேகமாக புனர் நிர்மாணமாகியுள்ளதெனலாம். 1975ல் பின்னலாடை உற்பத்தியானது, 1970 ஆம் ஆண்டின் இவ்வகை உற்பத்தி அளவைவிட 50 சதம் அதிகரிக்கும், துணிமணிகள் உற்பத்தி சுமார் 24 சதம் உயரும். 1975ல் 1,100 கோடி சதுர மீட்டருக்கும் அதிகமான பல்வேறு வகை துணிமணிகள் உற்பத்திக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

காலணி உற்பத்தி தொழில். 64 கோடி 50 லட்சம் ஜோடிக் காலணிகள் 1972ல் உற்பத்தியாயின. 1975ஆம் ஆண்டில் இவ் உற்பத்தியை 83 கோடி ஜோடியாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

லெனின்கிராடு, மாஸ்கோ, டான் நதிக்கரையிலுள்ள ரோஸ்தோவ், கிஷினெவ், கிரோவ், கீவ், மின்ஸ்க், திபிலிசி, ஸ்வெர்த்லோவ்ஸ்க், சாராபுல் (உத்முர்த் சுயாட்சிக்குடியரசு) ஆகியவற்றில்

முக்கியமான, காலணித் தொழில் நிலையங்கள் உள்ளன. காலணித் தொழில் சோவியத் நோல் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டதாகும், உயர்தரமான இமிடேஷன் தோலைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் தொழிலும் நாட்டில் உள்ளது.

**ரஷ்ய மென்மயிர் தோல்.** சோவியத் யூனியன் நீண்ட காலமாகவே மென்மயிர்த் தோலின் அளவு, தரம், பல்வகைத் தன்மை ஆகியவற்றில் உலகில் முதலிடம் வகித்து வந்துள்ளது. இங்கு, மென்மயிர்த்தோல் பொருட்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றது. உலகச் சந்தையில் இவற்றுக்குப் பெரும் கிராக்கியுண்டு. காஜானில் தான் சோவியத் யூனியனிலேயே மிகப்பெரிய மென்மயிர்த் தோல் தொழில் நிலையம் உள்ளது. ஆண்டுக்கு இரண்டு தடவை ரஷ்ய மென்மயிர்த் தோல் லெனின்கிராடில் சர்வதேச ஏலத்தில் விடப் படுகின்றது.

யுத்தப் பிற்கால ஆண்டுகளில் கரடி, காட்டுப் பூனை, நீர் நாய், முதலான பிராணிகளின் மென்மயிர்த் தோல் போன்ற செயற்கை மென்மயிர்த் தோல் துணிகள் தயாரிப்பு தொடங்கிற்று.

**அன்றுடத் தேவைப் பொருட்கள்.** அன்றுடத் தேவைப் பொருள்களுக்கு அமோக கிராக்கி, இது மென்மேலும் கூடுதலாகி வருகின்றது.

1972ல் மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்களின் உற்பத்தி 8,98,000 சைக்கிள் லகு மோட்டார் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களின் வருடாந்திர உற்பத்தி 46 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

யுத்த பிற்கால ஆண்டுகளில் சோவியத் யூனியனது சுவர்க் கடிகாரங்கள், கைக்கடிகாரங்களின் உற்பத்தியிலும் (4கோடி 40லட்சம்) கேமராக்களின் உற்பத்தியிலும் (20 லட்சம்) உலகின் மிகப்பெரும் உற்பத்தி நாடுகளில் ஒன்றாக உயர்வுற்றுள்ளது. இவற்றில் பலவற்றுக்கு உலகச்சந்தையில் பெரும் கிராக்கியுள்ளது.

1972ல் ரேடியோ, ரிக்கார்டு பிளேயர்களின் உற்பத்தி 88 லட்சத்தை தாண்டிற்று. டெலிவிஷன் செட்டுகளின் உற்பத்தி 60 லட்சம்.

யுத்தப் பிற்கால ஆண்டுகளில் சலவை எந்திரங்கள் (ஆண்டுக்கு 30 லட்சத்துக்கு அதிகம்) குளிர்பதன சாதனங்கள் (50 லட்சம்) ஆகியவற்றின் பெருமளவு உற்பத்தி ஒழுங்கமைக்கப்பட்டது. சுமார் 70 லட்சம் குளிர்பதன சாதனங்கள் 1975ஆம் ஆண்டு வாக்கில் உற்பத்தி செய்யப்படும்.

புரட்சிக்கு முன்னிருந்த ரஷ்யாவிலும், சோவியத் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளிலும் அன்றுட உபயோகப் பண்ட வகைகளின்

உற்பத்தி மிகக் குறைவாக இருந்ததுடன் அது பழைய தொழில் துறை பிரதேசங்களிலேயே குவிந்து கிடந்தது. (மத்திய பகுதிகள் லெனின் கிராடு, பால்டிக் பிரதேசம் ஆகியவை) அது இப்போது நாடு முழுவதிலும் வியாபித்துள்ளது.

**உணவுப் பொருள் உற்பத்தி தொழில்:** சோவியத் யூனியனின் உணவுப்பொருள் உற்பத்தித் தொழில் பெருமளவு தானியங்கிமய மாக்கப்பட்டுள்ளது, பல்வேறு வகையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வது இதன் சிறப்பியல்பாகும்.

**சர்க்கரை உற்பத்தித் தொழில்,** சர்க்கரை வள்ளிக்கிழங்கை ஆதாரமாகக் கொண்டதாகும். இது பொருளாதாரத்தின் ஓரளவு வளர்ச்சியடைந்த கிளையாகவே எப்போதும் இருந்துவந்துள்ளது. சோவியத் சர்க்கரைத் தொழிலானது, உலகில் மிகப் பெருமளவு சர்க்கரை உற்பத்தி செய்ய வல்ல தொழிலாக மாறியுள்ளது. இதன் உற்பத்தி மொத்தம் 90 லட்சம் டன் மணிச் சர்க்கரை யாகும், (இவையாவும் உள்நாட்டு மூலப் பொருள் கொண்டே தயாரிக்கப்பட்டது.) அதாவது அமெரிக்காவில் உற்பத்தியானதை விட இரு மடங்கு.

சர்க்கரைத் தொழில் நிலையங்களின் இடஅமைவில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது முன்னைய, சர்க்கரை சுத்தி கரிப்புப் பிராந்தியங்களின் எல்லைக்கு அப்பாலும் பரவியுள்ளது. கடந்த காலத்தில் உக்ரைன் மொத்த உற்பத்தியில் 80 சதத்துக் கும் அதிகமாக உற்பத்தி செய்தது.ஆனல் உற்பத்தி அதிக வளர்ச்சி யடைந்திருப்பினும் இன்று அதன் உற்பத்தி வீதம் 60 சதத்துக்கு சற்றே அதிகம். மோல்தாவியாவிலும் உக்ரைனுக்கு அருகாமை யிலுள்ள, ரஷ்ய சமஷ்டியின் மத்தியப்பிரதேசங்களிலும் வோல் காவிலும, முந்தைய யூரல் பிரதேசங்களிலும் சர்க்கரைத் தொழில் சுத்திகரிப்பு ஆலைகள் கட்டப்பட்டுள்ளன. குபான் பிரதேசம் மிகமுக்கியமான சர்க்கரைக் கேந்திரமாகும், தெற்கு கஜாக்ஸ்தான், கிர்கீசியா, அல்தாய் பகுதி, தொலைக் கிழக்கு ஆகியவற்றிலும் சர்க்கரை சுத்திகரிப்பு ஆலைகள் நிர்மாணிக்கப் பட்டுள்ளன.

**விலங்கு எண்ணெய்** உற்பத்தியிலும் **பால்** உற்பத்தியிலும் சோவியத் யூனியன் உலகிலேயே மிகப் பெரும் உற்பத்தியாளனுக விளங்குகின்றது. (விலங்கெண்ணெய் 10 லட்சம் டன், பால் 8 கோடி 30 லட்சம் டன்) நபர் வீத பால் பண்டம் ஆண்டுக்கு சராசரி 350 கிலோ கிராமாகும்.

**சூரிய காந்தி எண்ணெய்** சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியிலும் கரிசல் நில மத்தியப் பிரதேசங்களிலும் தான் பெரிதும் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேற்கு பிராந்தியங்களிலும் வடமேற்குப் பிராந்தியங்களிலும் ஆளி விதை எண்ணெயும்,

மத்திய ஆசியாவில் பருத்திக் கொட்டை எண்ணெயும், வோல்கா பிரதேசத்தில் கடுகு எண்ணெயும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தாவர எண்ணெயின் மொத்த உற்பத்தி 20 லட்சத்து 80 ஆயிரம் டன்களாகும்

மா அரைக்கும் ஆலைகளும், தானியந் தூக்கும் பொறிகளும் தானியம் விளையும் பிரதேசங்கள், தானியப் பயனீட்டுக் கேந்திரங்கள் ஆகியவற்றில் அமைந்துள்ளன. இன்று எல்லா நகரங்களிலும் ஜனநெருக்கமான பிரதேசங்களிலும் எந்திர மயப்படுத்தப்பட்ட பேக்கரிகளில் ரொட்டி, மாவுப்பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை உயர் தரம் கொண்ட சரக்குகளுக்கு உத்தரவாதமாகவுள்ளன. பொருளாதார அமைப்பில் பெரியதோர் கிளையாக மக்கரோனி (கோதுமை மாவுப் பண்ட) தொழில் வளர்ந்துள்ளது.

எந்திர மயமாக்கப்பட்ட முறையில் ஒயின் உற்பத்தி அநேகமாக சோவியத் ஆட்சியில்தான் முற்றிலும் வளர்ச்சி கண்டது. 1940ல் 19 கோடி 70 லட்சம் லிட்டராக இருந்த இதன் உற்பத்தி 182 கோடி லிட்டராகப் பெருகியுள்ளது. சோவியத் தயாரிப்பில் சுமார் 600 வகையான ஒயின் ரகங்கள் உள்ளன. ஒயின் தயாரிக்கும் முக்கியமான பிரதேசங்கள் மோல்தாவியா, கிரைமியா, டிரான்ஸ்காகேசியா, மத்திய ஆசியா ஆகியவைகளாகும். பீர், நாடு முழுவதும் பரவலான அளவில் தயாரிக்கப்படுகிறது.

சோவியத் ஆட்சியில் வளர்ச்சியுற்ற தேயிலை உற்பத்தி, இப்போது பெருமளவில் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறது. 1940ம் ஆண்டிற்கு பிறகு உற்பத்தி ஐந்து மடங்குக்கும் அதிகமாகப் பெருகியுள்ளது. அதாவது இப்போதைய உற்பத்தி 1,09,000 டன்கள், இது உலக உற்பத்தியில் ஏறக்குறைய 10 சதவீதமாகும். பிரதானமான தேயிலைத் தோட்டங்கள் காகசஸில் உள்ள கருங்கடல் கரையோரப் பிரதேசத்தில் உள்ளன.

டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களின் உற்பத்தி, 1940க்குப் பிறகு பத்து மடங்கு அதிகரித்துள்ளது. வருட உற்பத்தி 1200 கோடி டப்பாக்களுக்கும் அதிகம். தேசத்தின் சகல பகுதிகளிலும் உணவுப் பொருட்களை டின்களில் அடைக்கும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. கெர்ஸான் (தெற்கு உக்ரைன்) குபான் பகுதியில் உள்ள கிரிம்ஸ்காயா கிராமம் ஆகியவற்றில் உள்ள இத்தொழிற்சாலைகள் உலகின் மிகப் பெரிய தொழிற்சாலைகளின் வரிசையைச் சார்ந்தவையாகும். இவ்விரு ஆலைகளும் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை டப்பாக்களில் அடைத்து அனுப்புகின்றன.

இறைச்சி தயாரிப்பு 1 கோடி 36 லட்சம் டன்களைத் தாண்டி விட்டது. இதை டப்பாக்களில் அடைத்தனுப்பும் பிரம்மாண்ட

மான ஆலைகள் மாஸ்கோ, லெனின்கிராடு, கஜான், சராதோவ் எங்கெல்ஸ், ஸெமிபாலாதின்ஸ்க், புருன்ஸ் மற்றும் பல நகரங்களில் உள்ளன.

**மீன்பிடித் தொழில்.** கடந்த சில ஆண்டுகளில் சோவியத் மீன்பிடிக் கப்பல்கள் இவ்வகையில் உலகிலேயே மிகப் பெரிய அணிகளில் ஒன்ருகப் பரிணமித்துள்ளன. சிறந்த தொழில்நுட்பப் புதுமை சாதனங்கள் கொண்டனவாக உள்ளன, இதனுல் ஆழ்கடலில் மீன்பிடிக்கும் நவீனமான படகுகள், பெரிய கப்பல்கள், குளிர்பதன சாதன வசதி கொண்ட கப்பல்கள், ஆலைகள் உள்ள கப்பல்கள் ஆகிய யாவும் உள்ளன. கரையோர மீன்பிடித் தொழிலி லிருந்து ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு முன்னேறுவது சாத்தியமாகி யுள்ளது. உலக மாகடல்கள் அனைத்திலும் சோவியத் மீன்பிடிக் கப்பல்களையும் திமிங்கில வேட்டைக் கலங்களையும் காணலாம்.

மீன், கடல் பிராணிகள், திமிங்கிலங்களின் உற்பத்தி 1940 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐந்து மடங்கு அதிகரித்து 80 லட்சம் டன்னை எட்டியுள்ளது. இத்துறையில் மூன்ருவது ஸ்தானத்தை, அதாவது பெரு, ஜப்பான் ஆகியவற்றுக்கு அடுத்த இடத்தை சோவியத் நாடு வகிக்கிறது. கீழ் வால்கா பகுதியிலும் வடகாகசசிலும், பால்டிக் குடியரசுகளிலும், தூரக் கிழக்கிலும் டின்களில் அடைக்கப்பட்ட மீன் பெருமளவில் தயாரிக்கப்படு கிறது. டின்களில், பதமாக்கப்பட்ட நண்டுகளை அடைத்து அனுப்பும் தொழில் தூரக்கிழக்கில் மும்முரமாக நடைபெறுகிறது. 1975 வாக்கில் மீன் பிடிப்பு 1 கோடி 30 லட்சம் டன்னைத் தாண்டி விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

உணவுப் பண்டத் தொழிலின் சகல பிரிவுகளிலும் கணிசமான வளர்ச்சி காணத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வகையில் 1975 ஆம் ஆண்டு உணவுப் பண்டத் தொழிலின் உற்பத்தியானது 1970 ஆண்டு உற்பத்தியை விட 35 சதம் அதிகரித்து விடும்.

## விவசாயம்

சோவியத் யூனியனின் பிரதேசம் மிகவும் விரிந்து பரந்த தாயினும் நிலம் முழுவதும் சாகுபடிக்கு லாயக்கானவை அல்ல. மூன்றில் ஒரு பங்கு காடுகள்; மற்றும் பெரிய பிராந் தியங்கள் மரங்களற்ற துந்தரப் பிரதேசங்கள், மலைப்பிரதேசங்கள், சதுப்பு நிலங்கள், பாலைவனப் பகுதிகள் ஆக உள்ளன. எனவே தேசத்தின் ஒட்டு மொத்த நிலப் பரப்பில் கால் பங்கிற்கும் குறை வான பிரதேசமான 54 கோடி 60 லட்சம் ஹெக்டர் மட்டுமே விவ -ாய உற்பத்திக்குப் பயன்படுத்த முடியும்.

சோவியத் நாட்டின் வெட்ப, தட்பநிலை பலவகையானது. விவசாயத்திற்கான நிலைமைகளும் அவ்வாறே.

பால்டிக் பிரதேசம், பைலோரஷ்யா, ரஷ்ய சமஷ்டியின் மத்திய பகுதிகள் ஆகிய இவை ஈரப் பதமிக்க மண்ணுடையவை. இது, விவசாயிகளுக்குப் பெரும் தொந்தரவளிப்பதாகும். இதைச் சமாளிப்பதற்காக மிகவும் விரிவான அளவில் வடிகால் பணிகள் அமுலாக்கப்படுகின்றன. உக்ரேன், வோல்கா பிரதேசங்கள், கஜக்ஸ்தான் ஆகிய, நாட்டின் பிரதான தானிய உற்பத்திப் பிரேதசங்களின் நிலை இதற்கு மாறுனது. ஈரப்பசை இல்லையே என தவிப்பவை இவை. மூன்று, நான்கு வருடத்திற்கு ஒருமுறை அல்லது இன்னும் குறுகிய இடைவெளிக் காலத்தில் அல்தாயிருலிந்து, கார்பேதியன்ஸ், காகஸஸ் வரை ஏராளமான பிரதேசங்களை வறட்சி தாக்குகிறது. வேளாண்மைக்குச் சேதத்தை விளைவிக்கிறது.

வறட்சியால் பாதிக்கப்படும் பிரதேசங்களுக்கு தண்ணீர் கொண்டு வருவதற்காக பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. எனினும் விவசாய வளர்ச்சிக்கான விரிவான திட்டங்களின் பகுதி என்ற முறையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் காலம் பிடிக்கின்றது. மிகுந்த ஆதார முதலீடுகளும் பொருளாதார-தொழில்நுட்ப ஆதார வளமும் தேவைப்படுகின்றன.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் வேளாண்மை அபிவிருத்தியை நிர்ணயிக்கின்ற சகல அம்சங்களையும் கருத்திற் கொள்கின்றது—மேலும் எந்திர மயமாக்குதல், இரசாயன மயமாக்குதல், மூலதன நிர்மாணத்தை விரிவாக்குதல். விரிவான நில மேம்பாட்டுத்திட்டங்களைச் செயலாக்குதல், உற்பத்தி ஒழுங்கமைப்பை அறிவார்ந்த முறையில் சீரமைத்தல் முதலியவையே முற்கூறிய அம்சங்களாகும். இதனுல், விவசாயத்திற்குப் பொருளாயத தொழில் நுட்ப அடித்தளத்தைப் படைக்கும் பணியில் புதிய ஐந்தாண்டுக் காலத்துக்குள் வெகுதூரம் முன்னேறிச் செல்லுவது சாத்தியமாகின்றது; இது விவசாய உற்பத்தி சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவி புரிகிறது. விவசாயம் இயற்கை சக்திகளையே நம்பியிருக்கும் நிலைமையைக் குறைக்கின்றது.

வடிகால் அமைத்தல், நீர்பாசனம், மண்ணுக்குச் சுண்ணும்புச் சத்திடல், ஆகிய பணிகளுக்கு, சுருங்கச் சொன்னுல் பெருமளவு அபிவிருத்திப் பணிகள் அனைத்துக்கும் அரசு பொருளுதவி புரிகிறது. தேவையான எந்திரங்கள், கருவிகள், தேவைப் பொருள்களையும் தந்து உதவுகிறது, நிபுணர்களை அனுப்பிவைக்கிறது. தனிப்பட்ட விவசாய நிறுவனங்களும் தமது நிலத்தில் மேம்பாட்டு வேலைகளை மேற்கொள்ளுகின்றன. எனினும் பெரும் பகுதி அரசினுல்தான் செய்யப்படுகிறது: 1971-75ஆம் ஆண்டுகளில் நில அபிவிருத்திப்

பணிகளுக்காக—ஏராளமான கன்னி நிலங்களைப் பண்படுத்துவது அடங்கலாக—2,660 கோடி ரூபிளை அரசு செலவிடும்.

இன்று சோவியத் நாட்டில் 1கோடி 10 லட்சம் ஹெக்டர் நீர் வடித்த நிலமும், 1கோடி, 20லட்சம் ஹெக்டர் பாசன நிலமும் உள்ளன.

நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்குள் மேலும் புதிதாக 30 லட்சம் ஹெக்டருக்கு வடிகால் வசதியும், 50 லட்சம் ஹெக்டருக்கு பாசன வசதியும் அளிக்கப்படும். இதற்காகும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.

**விவசாய உற்பத்தி ஒழுங்கமைப்பு** : சோவியத் யூனியனில் நிலங்கள் அரசாங்கத்தின் தேச உடைமையாகும். இவற்றை விற்கவோ வாங்கவோ முடியாது. விவசாயத்துக்கான நிலத்தில் பெரும் பகுதியை கூட்டுப் பண்ணைகளும் (கோல்கோஸ்கள்) அரசாங்கப் பண்ணைகளும் (அரசுக்குச் சொந்தமான விவசாய நிறுவனங்கள்) தான் பயன்படுத்துகின்றன. 11 கோடி ஹெக்டர் நிலம் கூட்டுப் பண்ணைகளின் வசம் உள்ளது. இது 22 கோடி 30 லட்சம் ஹெக்டர் பரப்புள்ள நாட்டின் மொத்த சாகுபடி நிலத்தில் கிட்டத்தட்ட சரிபாதிப் பங்கு.

பலவேறு அரசாங்க சோதனைப் பண்ணைகள், கோழிப் பண்ணைகள் பொலிகாளை நிலையங்கள், கல்வி, ஆராய்ச்சி நிலையங்கள் முற்றறிப்பிட்ட நிலத்தில் ஒரு பகுதியைப் பயன்படுத்துகின்றன.

இது தவிர கூட்டுப்பண்ணை விவசாயிகளுக்கும், அரசாங்கப் பண்ணை ஊழியர்களுக்கும் கூட்டுப்பண்ணை அல்லது அரசாங்கப் பண்ணை நிலங்களிலிருந்து, குடியிருப்பையொட்டி கொல்லை நிலங்கள் சுமார் அரை ஹெக்டேர் வழங்கப்படுகின்றன. இந் நிலங்கள் காய்கறித் தோட்டங்களாகவும், பழத்தோட்டங்களாகவும், திராக்ஷைத் தோட்டங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இம்மாதிரியான துண்டு நிலங்களின் அளவு 79 லட்சம் ஹெக்டேர் தேறுகிறது. (மொத்தத்தில் 3.5 சதவீதம்).

புரட்சிக்கு முந்திய ரஷ்யாவில், 20 லட்சம் எண்ணிக்கை கொண்ட விவசாயப் பண்ணைகளில் மூன்றில் இரண்டு பகுதி மிகச்சிறியனவாக இருந்தன. அத்தோடு பெரிய நிலக்கிழார்களிடமும் வங்கிகளிடமும் கடன், குத்தகை முதலான விலங்குகளுக்கு அவை உட்பட்டிருந்தன.

1917 அக்டோபர் புரட்சி நடந்த இரண்டாம் நாள் நிறைவேறிய நிலச்சட்டத்தின்படி எல்லா நிலங்களும் தேசியமயமாக்கப்பட்டு பொது உடைமை ஆயின. பெரிய நில உடைமைகள் உழைக்கும் விவசாயிகள் வசம் மாற்றப்பட்டன.

புரட்சிக்கு முன்பு தாங்கள் வைத்திருந்த நிலங்கள் அல்லாமல் புதிதாக விலை எதுவுமின்றி 1 கோடி 50 லட்சம் ஹெக்டேர் நிலங்களை அவர்கள் பெற்றார்கள். அவர்கள் பாங்குகளுக்கும் பெரிய நிலப்பிரபுக்களுக்கும் கொடுக்க வேண்டியிருந்த கடன் பாக்கிகள் யாவும் ரத்து செய்யப்பட்டன. குத்தகைகளும் ஒழிக்கப்பட்டன. ஏழை விவசாயிகளுக்கு, மகத்தான நன்மை தரும் வகையில் சோஷலிஸப் புரட்சி அமைந்தது. காலங்காலமாக பிணித்திருந்த தளைகளிலிருந்து அந்த விவசாயிகள் விடுவிக்கப்பட்டனர்.

**கிராமப்புறங்களில் கூட்டுடைமையாக்கம்.** சோவியத் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளிலேயே பலவகை விவசாய உற்பத்தி, விற்பனைக் கூட்டுறவு நிறுவனங்கள் உதயமாயின. ஏழை, ''நடுத்தர'' விவசாயிகள் தாமாக முன்வந்து இந்த நிறுவனங்களில் சேர்ந்தனர். கூட்டுப்பண்ணை முறைகளில் கிடைக்கும் பயன்களை விவசாயிகள் நன்கு தெரிந்து கொண்டிருந்த கிராமங்களில் கூட்டுடைமையாக்கம் தீவிரமடைந்தது. 1930ஆம் ஆண்டுகளின் முதற் பாதியிலேயே இது பூர்த்தியாகி விட்டதெனலாம்.

நாடு வெகு வேகமாகத் தொழில் மயமானதும், டிராக்டர் உற்பத்தி, விவசாய இஞ்சினீயரிங் இவற்றின் வளர்ச்சியும் விவசாயத்தைக் கூட்டுடைமையாக்கும் பணியைத் துரிதப்படுத்தின. இவை இல்லாமல் போயிருந்தால் பெருமளவிலான விவசாய உற்பத்தி சாத்தியமாகியிருக்காது.

**கூட்டுப் பண்ணைகள்** விவசாயத் தொழிலாளர்கள் தாமாக உருவாக்கிய விவசாயக் கூட்டுறவு அமைப்புகள்தான். இந்தக் கூட்டுப்பண்ணைகளுக்கு நிரந்தரமாகவும் இலவசமாகவும் நிலங்களை வழங்குகிறது அரசு. நவீன விவசாய உபகரணங்களையும் இரசாயனப் பொருட்களையும், கொடுத்துதவுகிறது; அவசியப்படும் போது விதைகள் வாங்கக் கடனும் பாங்க் மூலம் கடனுதவியும் நல்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக கூட்டுப் பண்ணையின் உற்பத்திப் பொருள்களை சர்க்கார் மொத்தமாக விலைக்கு வாங்கிக் கொள்வதன் மூலம் அவைகளுக்கு நிரந்தரமான மார்க்கெட்டை உத்தரவாதம் செய்து கொடுக்கிறது.

கூட்டுப் பண்ணையின் சொத்துக்களான, கட்டிடங்கள், இயந்திரங்கள், கால்நடைகள், உற்பத்திப் பொருள்கள் யாவும் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் அனைவருக்கும் சொந்தமானதாகும். அவர்களுடைய உழைப்பின் பலன்களுக்கு அவர்களே முழு உரிமையாளர்கள். கூட்டுப் பண்ணையை நிர்வகிக்கும் உயர் அதிகாரம் கொண்ட அமைப்பு, அனைத்து உறுப்பினர்களின் பேரவையேயாகும். நிர்வாகிகள் போர்டையும், சேர்மனையும் இந்தப் பேரவைதான் தேர்ந்தெடுக்கிறது. கூட்டுப் பண்ணையின் அபிவிருத்திக்கான திட்டங்களையும், போர்டின் வருடாந்திர

அறிக்கைகளையும் இந்த மகாசபைதான் அங்கீகரிக்கிறது; பண்ணை யின் வாழ்க்கை, நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட சகல பிரதான தீர்மானங்களையும் பேரவையே செய்கிறது. தலைவரும் நிர்வாக போர்டு உறுப்பினர்களும் தமது நடவடிக்கைகள் தொடர்பாக பேரவைக்கும் பொறுப்பாளிகளாவர்.

கூட்டுப் பண்ணைகளின் உறுப்பினர்களுக்கு அவர்களது வேலை யின் அளவு, தரம் இவற்றிற்கேற்ப ஊதியம் அளிக்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில் உத்தரவாதமான மாதச் சம்பள முறைக்குக் கூட்டுப்பண்ணைகள் மாறியுள்ளன.

இன்றைய கூட்டுப்பண்ணை, எந்திர மயமாக்கப்பட்ட, பெரிய பொருளாதாரப் பிரிவாக விளங்குகிறது. இதன் சராசரி நிலப் பரப்பு 6000 ஹெக்டர். இதில் 3000 ஹெக்டர் சாகுபடி நிலம். மற்றும் இதில் 4000 கால்நடைகள் (பசுக்கள், பன்றிகள், ஆடுகள்) 15 குதிரைத்திறன் கொண்ட 60 டிராக்டர்களும் உள்ளன.

1972ல் சோவியத் யூனியனில் 32,256 கூட்டுப் பண்ணைகள் இருந்தன.

நாட்டு விவசாயத்தின் மொத்த வாணிபப் பொருள்களில் கிட்டத்தட்ட சரிபாதி கூட்டுப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப் படுகிறது.

கூட்டுப்பண்ணைகளின் வருமானத்தில் பெரும் பகுதி அவை தமது உற்பத்திப் பொருள்களை நிலையான விலைகளில் அரசாங்கத் துக்கு விற்பதன் மூலமாகவும் (இவை மண்டல வாரியாக வித்தியாசப்படும்) டெலிவரிக்கான நிலையான திட்டங்களுக்கு இசைவாகவும் கிடைக்கிறது. இது, விவசாய உற்பத்திக்கு உறுதி யான பொருளாதார ஊக்குவிப்புகள் தர உத்தரவாதமளிக்கிறது.

உபரி உற்பத்திப் பொருட்கள் நகர்ப்புற மார்க்கெட்டுகளில் விற்கப்படலாம். இவை, சுயேச்சையாகவோ, அல்லது கிராமப் புறப் பயனீட்டாளர்கள் கூட்டுறவு அமைப்பான சென்த்ரோ சோ யூஸ் (சோவியத் பயினீட்டாளர் சங்கங்களின் மத்திய யூனியன்) மூலமாகவோ விற்கப்படுகின்றன.

**அரசாங்கப் பண்ணைகள்** அரசுடைமையான விவசாய நிறு வனங்கள், அரசின் இலாகா மூலம் நியமிக்கப்பட்ட ஒரு இயக்குநர் இதை மேற்பார்வையிடுகிறார். அரசாங்கப் பண்ணை ஊழியர்கள் தொழிற் சங்கத்தில் இணைந்துள்ளனர். இது ஒவ்வொரு சோஷலிச தொழிற்சாலையிலும் உள்ளது போலவே இங்கும் உற்பத்தியை நிர்வகிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. அவர்களின் நிர்ணயமான ஊதியம் பெறுகின்றனர். மற்றும் ஏனைய விவசாயத்தின் தொழிலாளர்களைப் போலவே, இவர்

களுக்கும் சொந்த உபயோகத்துக்கான கொல்லை நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டில் 15,502 அரசாங்கப் பண்ணைகள் உள்ளன. இவை மிகப் பெரியவை. பெரிதும் எந்திர மயமாக்கப்பட்டவை; விவசாய உற்பத்திக்கு உகந்த பயன் நிறைவுள்ள வலுவான பொருளாதார அடிப்படை கொண்டவை. ஒரு சராசரி அரசுப் பண்ணைக்கு 21,000 ஹெக்டருக்கும் அதிகமான நிலமுண்டு. இதில் 6000 ஹெக்டர் சாகுபடி நிலம். மேலும் இதில் 7000 பசு, பன்றி, ஆடுகள் முதலான கால்நடைகளும், 15 குதிரை சக்தி கொண்ட 120 டிராக்டர்களும் உள்ளன. அரசுப் பண்ணைகளில் பெரும்பாலானவை தனித்தேர்ச்சி வசதி பெற்றவை.

நாட்டில் வாணிபத்துக்கான தானியங்கள் காய்கறிகளில் ஏறத்தாழச் சரிபாதியையும், கச்சாப் பருத்தியில் ஐந்தில் ஒரு பங்கையும் அரசாங்கப் பண்ணைகள் உற்பத்தி செய்கின்றன. கால் நடைப் பண்ட உற்பத்தியில் இவற்றின் பங்கு 40 சதத்துக்கும் அதிகம். இப்பண்ணைகளின் வர்த்தகப் பொருள்கள் அனைத்தையும் அரசு விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறது.

**சொந்த நிலங்கள்:** கூட்டுப் பண்ணைக் குடியானவர்கள், அரசுப் பண்ணைத் தொழிலாளர்களின் கொல்லை நிலங்களில் உற்பத்தியாகும் காய்கறிகள், பால், முக்கியமாக முட்டைகள் ஆகியவை நாட்டின் மொத்த உற்பத்தியில் கணிசமான பங்காகும். குடும்பக் கொல்லைகளில், உற்பத்தியாகும் இப்பண்டங்களை பெரும்பாலும் அவர்களே உபயோகப் படுத்திக் கொள்கிறார்கள். எஞ்சியவை சுயேச்சையாக மார்க்கெட்டுகளிலோ அல்லது பண்ட நுகர்வோர் கூட்டுறவு ஸ்தாபனமான ''ஸென்த்ரோஸோயுஸ்'' மூலமோ விற்கப்படுகின்றன.

1973 ஆரம்பத்தில் விவசாயிகளுக்கு சொந்த உடைமையாக 1 கோடி 50 லட்சம் பசுக்களும், 2 கோடி 33 லட்சம் பன்றிகளும் 3 கோடி 20 லட்சம் ஆடுகளும் பல கோடிக்கணக்கான கோழிகளும் இருந்தன.

**வேளாண்மை நிர்வாகம்:** வேளாண்மைக்கு வழி காட்டும் நெறிகள், சோவியத் விவசாய அமைச்சகத்தால் நிர்ணயிக்கப் படுகின்றன.

யூனியன் குடியரசுகளில் விவசாயத் துறைக்கென தனியாக அமைச்சகங்களும், மாவட்ட வாரியாகவும் பிரதேச வாரியாகவுமான விவசாய இலாக்காக்களும் உள்ளன.

நாடு முழுவதிலும் விவசாய வளர்ச்சிக்கான அடிப்படைத் திட்டமிடுவதிலும், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்ப

தில் விவசாய அமைச்சகம் ஈடுபடுகிறது. அது விவசாயப் பொருள் உற்பத்தித் திட்டங்களை இசைவாக இணைக்கிறது; விவசாய விஞ்ஞான வளர்ச்சியையும், சிறந்த விவசாய உற்பத்தி வழி முறைகளையும் பொதுமைப்படுத்தி, அவற்றை பரப்பும் பணியினை மேம்படுத்துகிறது; நவநவீன கருவிகள், இரசாயன உரங்கள், ரசாயன, உயரியல் பூச்சிகொல்லிகள் முதலானவை விவசாயத் துக்குக் கிட்டும்படி பார்த்துக் கொள்கிறது.

விவசாயப் பொருள் உற்பத்தியை நிர்வகிப்பது சம்பந்தமான, விஞ்ஞான வழிப்பட்ட பரிந்துரைகளையும் காலத்திற்கேற்ற உடனடி உதவிகளையும் ஸ்தல, பிராந்திய, முக்கியமாக வட்டார வேளாண்மைத்துறை இலாகாக்களும் வழங்குகின்றன. இவை அரசாங்கப்பண்ணைகளுடனும் நேர்முகமாக கூட்டுப்பண்ணை களுடனும் சம்பந்தப்பட்டுள்ளவையாகும்.

**விவசாயமும் விஞ்ஞானமும்:** சோவியத் யூனியனில் நூற்றுக் கணக்கான விவசாய ஆராய்ச்சிக் கழகங்கள், மேற்கல்வி, செகண்டரி தனிப்பயிற்சிக் கல்வி நிலையங்கள், பல்வேறு சோதனைக் கூடங்கள் உள்ளன. 1972ல் நூற்றுக்கும் அதிகமான உயர் விவசாயக் கல்வி பள்ளிகள் 70,000க்கும் அதிகமான நிபுணர்களது பயிற்சியை பூர்த்தி செய்தன, செகண்டரி தனிப் பயிற்சிப் பள்ளிகள் 1,45,000 பேர்களுக்குப் பயிற்சியைப் பூர்த்தி செய்தன. விவசாயத் துறையில் அமர்த்தப்பட்டுள்ள நிபுணர் களின் மொத்த எண்ணிக்கை 8,50,000க்கும் கூடுதலாகும். கூட்டுப் பண்ணைத் தலைவர்களில் 85 சதத்தினரும், அனேகமாக அரசாங்கப் பண்ணை நிர்வாகிகள் அனைவரும் தனித் தேர்ச்சிக கல்வி கற்றவர்களேயாவர்.

விவசாய கால்நடை ஆராய்ச்சிக் கழகங்களிலும் கல்லூரி களிலும் 35 ஆயிரத்துக்கும் அதிகமான விஞ்ஞான ஊழியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களில் ஏறத்தாழ 16,000பேர் விஞ்ஞானத்தில் கேன்டிடேட் பட்டமும், 1400 பேர் விவசாயம், அல்லது கால்நடை விஞ்ஞானத்தில் டாக்டர் பட்டமும் பெற் றுள்ளனர்.

**தொழில் நுட்ப சாதனங்கள்:** டிராக்டர்களின் மொத்தத் தொகை 20 லட்சத்தை மிஞ்சி விட்டது. அவற்றின் சராசரி ஆற்றல் 30 குதிரை விசையிலிருந்து 60 குதிரை விசையாகக் கடந்த 15 ஆண்டுகளில் உயர்ந்துள்ளது. வேறு நாடுகளில் பயன் படுத்தப் பெறும் டிராக்டர்களைவிட இவை சராசரி அதிக ஆற்ற லுடையவை. டிராக்டர்களின் மொத்த ஆற்றல் 12கோடி 50 லட்சம் குதிரை விசை, விவசாய எந்திரங்கள் அனைத்தின் ஆற்றல் (டிராக்டர் உட்பட) 35 கோடி குதிரைவிசை.

13 லட்சம் மோட்டார் வண்டிகளும், 6,50,000 தானிய அறுவடை எந்திரங்களும், மக்காச் சோளம், உருளைக்கிழங்கு, பீட் கிழங்கு, மென்சணல், பருத்தி ஆகியவற்றை அறுவடை செய்வதற்கான டலவகைக் கம்பைன்களும் லட்சக்கணக்கில் செயல் படுகின்றன.

சோவியத் இஞ்சினியர்களும் வடிவமைப்பாளர்களும் தேயிலை பறிக்கும் திறமைமிக்க எந்திரமொன்றினை உருவாக்கி, மனித உழைப்பு அதிகமாக செலவழிக்கும் இவ்வேலையை எந்திரமயமாக்குவதை சாத்தியமாக்கியுள்ளனர்.

கழனி வேலைகளில் எந்திரமயமாக்கப் பணியின் தரம் உயர்தரமானது. உழவு, தானியமணிகளையும், பருத்தி, சர்க்கரைக் கிழங்குகளையும் விதைத்தல், தானியங்களையும் கூலங்களையும் அறுவடை செய்தல் அவையாவும் எந்திர மயமாக்கப்பட்டுள்ளன. தானியங்களின் தவிடு நீக்கும் பணியை எந்திரமயமாக்குதல், முதிர்ந்த மக்காச் சோளத்தை அறுவடை செய்தல், புல்லறுத்தல், உருளைக் கிழங்கு, பருத்தி, சர்க்கரை வள்ளி, காய்கறி இவற்றை பயிரிடல் ஆகிய பணிகளும் எந்திரமயமாக்கப்படுவது அநேகமாக பூர்த்தியடைந்து வருகிறது. உருளைக்கிழங்கு தோண்டியெடுத்தல் சம்பந்தப்பட்ட பணிகளும், சர்க்கரை வள்ளி அறுவடை வேலைகளும் தீவனப் போரடிக்கும் வேலைகளும் 70-85 சதம் எந்திரமயமாக்கப்பட்டுள்ளன எனலாம்.

விவசாயத்தை எந்திரமயமாக்க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உதாரணமாக, 1971-1975 ம் ஆண்டுகள் காலத்தில் 17,00,000 டிராக்டர்களையும், 11,00,000 மோட்டார் வண்டிகளையும் விவசாயப் பணிகளுக்கு அரசு சப்ளை செய்யும். இந்த இனங்கள் முன்னைய ஐந்தாண்டுக் காலகட்டத்தில் வழங்கப்பட்டதைவிட முறையே 2,30,000மும் 3 83,000மும் அதிகமாகும்.

விவசாய எந்திரங்களின் ஒட்டுமொத்தக் குதிரைவிசை அளவு 50 சதமானமாக அல்லது 16 கோடி 10 லட்சம் குதிரை விசையாக உயரும்.

விவசாயத் துறையில் மின்விசை உபயோகம் 1940ல் இருந்ததைவிட 70 மடங்கு பெருகியுள்ளது. எனினும் மின் மயமாக்கம் சம்பந்தப்பட்டவரை விவசாயப் பொருளுற்பத்தியானது பொருளாதாரத்தின் ஏனைய கிளைகளைவிட மிகப் பின்தங்கியுள்ளது. அரசாங்கப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் இதுவரை மின்சக்தியை வீட்டு உபயோகங்களுக்கே பெரிதும் பயன்படுத்தி வந்துள்ளன. அதனால்தான் மின்விசையால் அதிகமான நேரத்தை விழுங்கிவிட வல்ல வேலையை செய்யக்கூடிய விவசாயப்

பொருளுற்பத்திப் பணியில் புதிய மின் எந்திரங்களும் கருவிகளும் உருவாக்கப்படுகின்றன. 1975ஆம் ஆண்டில் மின்விசைப் பயனீட்டுப் பரிமாணம் 1970ஆம் ஆண்டின் அளவைப் போல் இரட்டிப்பாகி விடும்.

எந்திர மயமாக்கப்பட்டதன் பயனுக, சோவியத் ஆட்சியில் விவசாயத் துறை உழைப்பின் உற்பத்தி ஆற்றல் 5 மடங்கு கூடுதலாகியுள்ளது. விவசாயத்துறை உழைப்பின் உற்பத்தி ஆற்றலை உயர்த்தும் பிரச்சினை சோவியத் பொருளாதாரத்தின் மிக முக்கியமானவற்றுள் ஒன்றாகும்.

விவசாயப் பொருளுற்பத்தியை அதன் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்துவதன் மூலமாகவும், நில அபிவிருத்திப் பணியின் அளவை அதிகரிப்பதன் வாயிலாகவும் கனி உரப் பயனீட்டை விரிவாக்குவதன் மூலமாகவும் மேலும் மும்முரமாக்குவதனுல் உழைப்பின் உற்பத்தி ஆற்றல் 1975ல் 37-40 சதம் அதிகரித்து விடும்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க, கடந்த 10 ஆண்டுக் காலத்தில் செய்யப்பட்ட மொத்தத் தொகை அளவுக்கு அதாவது 12,900 கோடி ரூபிள் 1971-75 ஆம் ஆண்டுகளில் முதலீடு செய்யப்படும். இதுவன்றி வேளாண்மைக்குத் தேவையான சாதனங்களையும், தொழில்நுட்பக் கருவிகளையும், விநியோகிக்கும் பணியுடன் சம்பந்தப்பட்ட பொருளாதாரக் கிளைகளுக்காக 2,900 கோடி ரூபிள் முதலீடு செய்யப்படும்.

விவசாயப் பொருள்களின் வருடாந்தர உற்பத்தி 1971-75ஆம் ஆண்டுகளில் 20-22 சதம் கூடுதலாகும்.

**தானிய சாகுபடி.** சோவியத் விவசாய உற்பத்தியில் தானிய விளைச்சல் முதுகெலும்பு போன்றது. கோதுமை பிரதான பயிர். தானிய சாகுபடிப் பரப்பில் ஏறக்குறைய பாதியில் கோதுமை பயிராகிறது. (6 கோடி 50 லட்சம் ஹெக்டர்). அதாவது ஒட்டுமொத்த தானிய விளைச்சலில் பாதிக்கு மேல் கோதுமை பயிராகிறது. 1972ம், ஆண்டு-பருவநிலை மிகவும் பாதகமாக இருந்த காலத்தில்—தானிய உற்பத்தி 16 கோடி 80 லட்சம் டன்கள். இது, 1971ஆம் ஆண்டு உற்பத்தியை விட 1 கோடி 30 லட்சம் டன்கள் குறைவானதாகும். இருப்பினும் கடந்த 5 ஆண்டு சராசரி அறுவடையை விட இது கொஞ்சம் கூடுதலாகும்.

1975 ஆம் ஆண்டில் சோவியத் நாட்டின் தானிய விளைச்சல் 20 கோடி டன் இலக்கை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்டெப்பி பகுதியின் மத்திய, கிழக்குப் பிரதேசங்களில், வசந்தகால கோதுமை நன்கு பிரபலமானது. இப்பிரதேசங்களில் முக்கால் பகுதியில் கோதுமைதான். வசந்தகால கோதுமைச் சாகுபடியில் அருமையான தானியம் விளைகிறது. இதிலுற்பத்தி யாகும் மாவு புரதச் சத்து நிறைந்தது. ரொட்டி சுட இது மிகவும் உகந்ததாகும். ஆயினும் இது குளிர்கால கோதுமை போல் நிறைய மகசூல் தருவதில்லை. அதனால்தான் குளிர்கால கோதுமையானது ஓரளவு குறைவான குளிர்ச்சியும் போதிய பனியும் கொண்ட பிராந்தியங்களில் பரவலாகச் சாகுபடியாகிறது. காட்டு-ஸ்டெப்பி பகுதி முழுவதும், மற்றும் ஸ்டெப்பி பகுதியின் மேற்கு பாசமும் முன்கூறிய பிரதேசங்களைச் சேர்ந்தவையாகும்.

சோவியத் ஆட்சிக் காலத்தில் கோதுமைச் சாகுபடிப் பிரதேசங்கள் இருமடங்கு அதிகரித்துள்ளன. ரை தானியச் சாகுபடியை விட அதிகரித்து விட்டன. ரை தானியம் மதிப்பில் சற்று தாழ்ந்ததாகும். இது புரட்சிக்கு முந்தைய ரஷ்யாவில் கோதுமைச் சாகுபடியளவு விரிந்த நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு வந்த தானியம்.

ஓட்ஸ் ஏழு லட்சம் ஹெக்டரில் சாகுபடியாகிறது. இந்தப் பரப்பளவு எல்லா தானியப் பயிர்ச் சாகுபடிப் பரப்பில் ஐந்து சதத்துக்கு சற்று அதிகமெனலாம். இதன் வருடாந்தர சராசரி மகசூல் 1 கோடி 45 லட்சம் டன்

பார்லி ஏறத்தாழ 2 கோடி ஹெக்டரில் பயிரிடப்படுகிறது. இதன் உற்பத்தி 3 கோடி 45 லட்சம் டன்.

மக்கச் சோளம் பெரிதும் வெப்பம் விரும்பும் பயிராகும். அதனால்தான் இப்பயிர் தெற்கு உக்ரைன், மோல்தாவியா வட காகசஸ் பகுதிகளில் மட்டுமே விளைகின்றது.

1971ல் மக்காச்சோளப் 86 லட்சம் டன் உற்பத்தியாயிற்று. இது 1940 ஆண்டில் இப்பயிரின் உற்பத்தி அளவைவிட சுமார் இரண்டு மடங்கு அதிகம். 1975ல் இதன் உற்பத்தி 2 கோடி டன்னை எட்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெல் ஓரளவு குறைவான பிரதேசப் பரப்பில்தான் சாகுபடியாகிறது. அதாவது 3,50,000 ஹெக்டரில்தான் சாகுபடியாகிறது. ஆனால் பாசனப் பணியின் வளர்ச்சியினால் அண்மை ஆண்டுகளில் நெல் மகசூல் இரட்டிப்பாகியுள்ளது. இந்தப் பயிர் மாமூலாக சாகுபடியாகி வரும் மத்திய ஆசியா, கஜாக்ஸ்தான் முதலான பிரதேசங்களிலும் நாட்டின் ஐரோப்பியப் பகுதியிலும் இனிமேல் இதன் சாகுபடி பெருமளவு அதிகரிக்கும். குறிப்பாக வட காகசஸ், டான் நதிப்பகுதி, தெற்கு உக்ரைன் ஆகியவற்றில்

இதன் சாகுபடி மிகவும் பெருக்கமடையும். 1972ல் நெல் உற்பத்தி 16 லட்சம் டன்னுக்கும் அதிகம். இது 1975ல் 20 லட்சம் டன்னுகைப் பெருகும். இது நாட்டின் அரிசித் தேவை முழு வதையும் சமாளிக்கப் போதுமானது.

**காய்கறிகள், உருளைக்கிழங்கு.** இவை சாகுபடியாகும் பரப்பு சோவியத் ஆட்சிக்காலத்தில் இரு மடங்குக்குப் அதிகமாகியுள்ளது. இப்பரப்பளவு இப்போது 1 கோடி ஹெக்டருக்கும் அதிகம். நாடு முழுவதிலும் காய்கறி பயிரிடப்படுகிறது. அதாவது வடகோடி முதல் தென்கோடி வரை, வனஸ்டெப்பி பகுதிகளிலும் வனப் பகுதிகளிலும் தான் உருளைக்கிழங்கு பயிரிடப்படும் முக்கிய பிரதேசங்கள் உள்ளன. இவ் இடங்களில்தான் இச்சாகுபடிக்குப் பெரிதும் உகந்த பருவ நிலைகள் உள்ளன. உலகில் சோவியத் யூனியனில் தான் உருளைக்கிழங்கு மிக அதிக விளைச்சல் காணு கின்றது. ஆனாலும் 1972ல் வழக்கத்தைவிட இவ்விளைச்சல் 20 சதம் குறைவாகி விட்டது. அதாவது 7 கோடி 78 லட்சம் டன் உருளைக்கிழங்குதான் விளைந்தது. அந்த ஆண்டு காய்கறி மகசூல் 1 கோடி 90 லட்சம் டன்.

**தொழில் துறைப் பயிர்களில்** முப்பதுக்கும் அதிகமான வகைகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சோவியத் ஆட்சிக் காலத்தில் அறிமுகமானவை. இவை இப்போது 1 கோடி 45 லட்சம் ஹெக்டரில் சாகுபடியாகின்றன. தொழில்துறைப் பயிர்கள் பலவற்றின் சாகுபடியில் சோவியத் யூனியன் முன்னணி இடம் வகித்து வருகின்றது.

**பருத்தி** உற்பத்தியில்—70 லட்சம் டன்—சோவியத் யூனியன் உலகில் முதலிடம் பெற்றுள்ளது. சோவியத் யூனியனில்தான் கச்சாப் பருத்தி உற்பத்தி உச்சத்தில் உள்ளது. அதாவது, ஹெக்டருக்கு சராசரி 2.56 டன். மத்திய ஆசியா, தெற்கு கஜாக்ஸ்தான், அஜெர்பைஜான் ஆகியவற்றின் பாசன வசதி யுள்ள பிரதேசங்களில்தான் பருத்தி சாகுபடி அமோகமாக நடை பெறுகின்றது. பருத்தி சாகுபடிப் பிரதேசங்கள் அனைத்திலும் உஸ்பெக்கிஸ்தானின் பருத்தி சாகுபடிப் பரப்பளவு மூன்றில் இரண்டு பங்காகும். ஒட்டுமொத்த கச்சாப் பருத்தி உற்பத்தியில் 70 சதமானம் உஸ்பெக்கிஸ்தானில் விளைகிறது.

**ரஷ்ய மென் சணலுக்கு** நீண்டகாலமாகவே உலகச் சந்தையில் நிலையான இடமுண்டு. இது ஸ்திரத்தன்மையற்ற பயிர் எனலாம். மேலும் மிகவும் கவனமாகப் பராமரிக்கப்பட வேண்டிய பயிரும் கூட. நடுத்தரமான வெப்பதட்ப நிலையுடன் கூடிய ஈரப்பசைப் பிரதேசங்களில் முக்கியமாக, வடமேற்குப் பிராந்தியத்தின் தென்பாகத்திலும் மாஸ்கோவுக்கு வடக்கிலும், மேற்கிலும்

உள்ள மத்திய பிராந்தியங்களிலும் பைலோ ரஷ்யாவிலும் பால்டிக் பிரதேசத்திலும்தான் இது சாகுபடியாகின்றது. சணல் இழையின் வருடாந்தர சராசரி விளைச்சல் 4,60,000 டன்னுக்கும் அதிகம். அதாவது உலகின் உற்பத்தியில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்காகும்.

சோவியத் யூனியனில் தொழில்துறை பயிர்களின் சாகுபடிப் பரப்பில் பெரும் பகுதியில் எண்ணெய் சத்துப் பயிர்கள் இடம் பெற்றுள்ளன. (அதாவது 60 லட்சம் ஹெக்டருக்கும் அதிகம்). இப் பயிர்களில் பலவகைகள் உள்ளன சூரிய காந்தி, சோயா பீன்ஸ், ருத்ரியாஷ் எனப்படும் தென் பகுதி மென் சணல், ஆமணக்குச் செடி, கடுகு, நிலக்கடலை, எள் முதலியவை.

சமையலுக்குப் பயன்படும் தாவர எண்ணெய்களில் சூரிய காந்தி எண்ணெய் சோவியத் மக்களிடையில் பெருவழக்கில் உள்ளதாகும். சோவியத் ஆட்சிக் காலத்தில் சூரியகாந்தி சாகுபடிப் பிரதேசம் 5 மடங்கு அதிகரித்து 50 லட்சம் ஹெக்டராகியுள்ளது. இது பயிராகும் பிரதான கேந்திரங்கள் ஸ்டெப்பி வெளிப் பகுதிகளிலும், முக்கியமாக தெற்கு உக்ரைன், வடக்கு காகசசிலும் உள்ளன.

சோவியத் பயிர் வளர்ப்பாளர்கள் பெரும் மகசூல் தரக்கூடிய சூரியகாந்தி வகைகளைப் பெருக்கியுள்ளனர். இவற்றின் வித்துக்களில் எண்ணெய்ச்சத்து 50 சதத்துக்கும் அதிகம். வழக்கமான சூரியகாந்தி வித்தில் இது 23.25 சதம்தான். 1972ல் சூரிய காந்தி விளைச்சல் 50 லட்சம் டன்னுக்கும் கூடுதலாயிற்று. இது உலகின் மொத்த சூரியகாந்தி உற்பத்தியில் மூன்றில் இரு கூறுகளுக்கும் அதிகம்.

சோவியத் யூனியன்தான் உலகிலேயே சர்க்கரை உற்பத்தியில் தலைமையிடம் பெற்றுள்ளது என்பது நிச்சயம். சர்க்கரை வள்ளி சாகுபடியாகும் பிரதேசம் கிட்டதட்ட 35 லட்சம் ஹெக்டராகியுள்ளது. இது யுத்த முற்கால அளவைவிட மூன்று மடங்கு அதிகம். 1972ல் 7 கோடி 57 லட்சம் டன் சர்க்கரைவள்ளி உற்பத்தியாயிற்று.

சோவியத் யூனியனின் தெற்குப் பகுதிகளில் புகையிலை அமோகமாக உற்பத்தியாகின்றது. சோவியத புகையிலையின் உயர் தரம் காரணமாக அதற்கு உலக மார்க்கெட்டில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. கிரைமியா, மோல்தாவியா, தெற்கு உக்ரைன், காகசஸ் ஆகிய இடங்களில் புகையிலை சாகுபடியாகின்றது.

சோவிய விவசாயத்தில் தேயிலை சாகுபடியும் சிறப்புற்றுள்ளது. காகசசில் கருங்கடற்கரைப் பகுதிலும், காஸ்பியன் கடலின் தென் மேற்குக் கரையிலுள்ள லென்கொரன் பகுதியிலும் 74,400 ஹெக்டர் பரப்பில் தேயிலை சாகுபடியாகின்றது. (இச்சாகுபடி 1913ல் 1 000 ஹெக்டரும், 1940ல் 55 300 ஹெக்டரும் தான்). இவற்றிலிருந்து தரத்தில் மிக உயர்ந்த தேயிலை ஆண்டுதோறும் சுமார் 2,40 000 டன் கிட்டுகிறது. இந்தச் சாதனையைக் கண்டுள்ள பெருமை குடியானவர்களுக்கு மட்டுமல்லாமல் சோவியத் தாவர வளர்ப்பாளர்களுக்கும் உரியதாகும். இவர்கள் உருவாக்கியுள்ள தேயிலை உயர்தரமானவை; பலவகைப்பட்டவை; இவை சீனு, இந்தியா, ஸ்ரீலங்கா இந்நாடுகளிலுள்ள தேயிலை வளரும் பிரதேசங்களின் பருவநிலைமைகளை விட மிகவும் சிக்கலான பருவ நிலைமைகளில் பயிரிடவும் உகந்தவையாகும்.

நாரத்தை வகைப் பழங்களை சாகுபடி செய்வதிலும் சோவியத் ஆட்சிக் காலத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மற்றும் சீன வார்னிஷ் மரம், வாகை, அத்தி, பேரீச்சை, யூகாலிப்டஸ், ஆலிவ் முதலான தாவரங்களின் சாகுபடியிலும் பெருங்கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் மொத்தத்தில் மித வெப்பப் பயிர் சாகுபடி வரம்புக்குட்பட்டிருக்கிறது எனலாம். ஏனெனில் இச்சாகுபடி பருவநிலைமைகளையே பெரிதும் சார்ந்துள்ளதே காரணம்.

**கனிவகை வளர்த்தல்.** விவசாயத்தின் இந்தக் கிளையின்பால் சோவியத் யூனியனில் அண்மை ஆண்டுகளில் பெரும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சிறுரக கனிவகைச் சாகுபடி செய்யும் பிரதேச அளவு ஏறத்தாழ இரட்டிப்பாகி இப்போது இச்சாகுபடிப் பரப்பு ஏறத்தாழ நாற்பது லட்சம் ஹெக்டராகி விட்டது. அதே சமயம் திராட்சை சாகுபடிப் பிரதேசம் மும்மடங்கு அதிகரித்து, இருபது லட்சம் ஹெக்டர்களுக்கும் கூடுதலாகி விட்டது.

மத்திய ஆசியா, கஜாக்ஸ்தான், கிரைமியா ஆகியவற்றில் சாகுபடிப் பிரதேசம் பரப்பில் கணிசமான அதிகரிடபுக் காணத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனுல் கனிவகை திராட்சை வேளாண்மைக்கு இன்னும் வலுமிக்க தளமிடுவது சாத்தியமாகும்.

**கால்நடை வளர்ப்பு.** சோவியத் நாட்டில் 1973 ஆம் ஆண்டின தொடக்கத்தில் நீண்ட கொம்புகளையுடைய 10 கோடி 40 லட்சம் கால்நடைகளும், (4 கோடி 17 லட்சம் பசுக்கள் உட்பட) 6 கோடி 65 லட்சம் பன்றிகளும், 14 கோடி செம்மறி ஆடுகளும், 45 லட்சம் வெள்ளாடுகளும் இருந்தன.

சோவியத் ஆட்சிக் காலத்தில் வர்த்தகத்துக்கான கால் நடைகள் பெருமளவு அதிகரித்துள்ளன. 1975 ஆம் ஆண்டு வாக்கில் இறைச்சி உற்பத்தி, கிட்டத்தட்ட 1 கோடி 60 லட்சம் டன்னையும், பால் உற்பத்தி 10 கோடி டன்னையும் எட்டக்கூடும். விவசாயத்தின் இந்தக் கிளையை முனைப்பாக்குவதானது உற்பத்தியில் தனித்தேர்ச்சி அதிகரிப்பு, அதை ஒருமுகப்படுத்தல் ஆகிய அம்சங்களுடன் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளது. நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூட்டுப் பண்ணைத் தொழில் நிலையங்கள் அல்லாமல், 1170 அரசாங்கத் தொழில் நிலையங்களும் கட்டப்படும். இவை மாட்டிறைச்சியையும் பாலையும், பன்றி இறைச்சியையும் உற்பத்தி செய்வதற்கானவை.

நீண்ட கொம்புகளையுடைய கால்நடை வளர்ப்பானது கால்நடை வளர்ப்பின் முக்கிய பிரிவு. இது நாட்டின் ஏனைய பகுதிகளைவிட ரஷ்ய சமஷ்டி, உக்ரைன், வைலோ ரஷ்யா பால்டிக் பிரதேசம், கஜாக்ஸ்தான் ஆகிய இடங்களில் மிக விரிவான அளவில் வளர்ச்சியடைந்து வருகிறது.

சோவியத் நாட்டின் கரிசல் நிலமில்லாத ஐரோப்பியப் பகுதியில் உள்ள செழுமை குலுங்கும் புல்வெளிகளில் பால் வளமிக்க கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. கோல்மோகோர்ஸ்காயா, யரோஸ்லாவ்ஸ்காயா, கோஸ்த்ரோம்ஸ்காயா இனக் கால் நடைகள் அசாதாரணமான பால் வளமுடையவை. உக்ரைன், மொல்தாவியா, டிரான்ஸ் காகசஸ் ஆகிய பகுதிகளில் பெருமளவில் பால்பண்ணைத் தொழில் நடைபெறுகிறது.

உக்ரேனின் சில பகுதிகள், காகசஸ், வோல்கா பிரதேசம், கஜாக்ஸ்தான். கிர்கீசியா, ஆகியவற்றில் இறைச்சிக்கான கால் நடைகளை அதிகரிப்பதற்குத் தனிப் பயிற்சியளிக்கப்படுகிறது. ஆனால் இந்த இனத்தின உற்பத்தி ஆற்றல் சோவியத் யூனியனில் இன்னும் அவ்வளவு அதிகமாக இல்லை.

கூட்டுப் பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் உள்ள மொத்த கால்நடைகளில் உயர் ஜாதிக் கால்நடைகள் 90 சதம், ஒரு பசுவினிடமிருந்து கிடைக்கும் பால் ஆண்டொன்றுக்கு 2 00 கிலோ கிராமுக்கும் அதிகமாகும். இது யுத்த - முற்கால அளவைவிட இரண்டு மடங்கு அதிகம்.

மொத்த பன்றி வளர்ப்பில் கிட்டத்தட்ட சரிபாதி, ரஷ்ய சமஷ்டியிலும் மூன்றில் ஒரு பங்கு உக்ரைனிலும் நடைபெறுகிறது. பைலோ ரஷ்யாவிலும் பால்டிக குடியரசுகளிலும் உள்ள பன்றிகளின் எண்ணிக்கை மொத்த கால்நடையில் சுமார் 40சதம்.

உயர்சாதிப் பன்றிகளின் வீதாசாரம் மொத்த எண்ணிக்கையில் 95 சதத்தை எட்டுகிறது. சோவியத் விஞ்ஞானிகளால் வளர்க்கப்படும் உயர் வம்சாவளிப் பன்றிகளும் ஏராளமாக உள்ளன. இறைச்சி வற்றலிடுவதற்காக பன்றிகளைக் கொழுக்க வைப்பது இப்போது பரவலாகக் கையாளப்படுகிறது. இந்தச் செய்முறையில் விசேடமாக பால்டிக் குடியரசுகள் நீண்டகாலமாக வெற்றி கண்டுள்ளன.

மிகப் பெரிய செம்மறியாட்டுப் பண்ணைப் பிரதேசம் கஜாக்ஸ்தானில் உள்ளது. இதில் நாட்டின் மொத்த செம்மறியாடுகளில் கால் பங்கு இங்கு வளர்க்கப் படுகின்றன. இதற்கு அடுத்த நிலையில் உள்ளவை மத்திய ஆசியக் குடியரசும், வோல்கா பிரதேசமும், வடகாகசசும் ஆகும்.

இந்தப் பிரதேசங்களில் எல்லாம் முன்பு மட்டரக இனத்தைச் சேர்ந்த, முரட்டு ரோமம் உள்ள அதிக பயனளிக்காத செம்மறி ஆடுகள்தான் மிகுதியாக இருந்தன. ஆனால் இப்போது ஸ்தல நிலைமைகளுக்கு உகந்த, கலவை இன செம்மறியாடுகள் ஆதிக்கம் பெற்றுள்ளன. இவற்றிலிருந்து மிக உயர்ந்த ரக கம்பளி ரோமம், அல்லது ஓரளவு உயர்ந்த ரக கம்பளி ரோமம் கிடைக்கின்றன. சைபீரியாவில் அருமையான ரோமமுடைய செம்மறி ஆடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. மத்திய ஆசிய பாலைவனங்களிலும், முக்கியமாக உஸ்பெக்கிஸ்தான், துருக்மீனியாவிலும் காணப்படும் அஸ்த்ரகான் இன ஆடுகள் வெகுவேகமாக இனப் பெருக்கமடைகின்றன. பேரல்தாவியப் பருவ நிலைகளுக்கும் இவற்றை பழக்கப்படுத்தும் முயற்சி அண்மையில் வெற்றி கண்டுள்ளது. அஸ்தரகான் ஆட்டினங்களின் அருமையான தோல்களுக்கு சோவியத் யூனியனிலும், உலகச் சந்தையிலும் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

உக்ரைனிலும் வடகாகசசிலும் வளரும் ஸ்தாவ்ரொபோல் செம்மறியாடுகள் நேர்த்தியான, ஓரளவு நேர்த்தியான ரோமங்களைக் கொண்டவை. நாட்டில், ஒவ்வொரு செம்மறியாட்டிலிருந்தும் கிடைக்கின்ற வருடாந்தர சராசரி கம்பளி ரோமம் 3·3 கிலோ கிராமாகும். அதே சமயம், ஒரு ஸ்தாவ்ரபோல் ஆட்டிலிருந்து 25 கிலோ கிராம்வரை முதல் தரமான ரோமம் கிடைக்கிறது. இது ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கான கம்பளிக் கால்சட்டைகள் தைக்கப் போதுமானது.

செம்மறி ஆட்டினங்களில் கண்டுள்ள அபிவிருத்தியினாலும் அவற்றின் எண்ணிக்கை பெருகியிருப்பதனாலும் கம்பளியின் உற்பத்தியை ஆண்டுக்கு 4,19,000டன்னாக உயர்த்துவது சாத்தியமாகியுள்ளது. இது, 1940ம் ஆண்டின் கம்பளி உற்பத்தியைவிட

50 சதம் அதிகம். கம்பளி உற்பத்தியில் சோவியத் யூனியன் ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த நிலையில் உள்ளது. அர்ஜென்டினாவை விட இரண்டு மடங்கும், அமெரிக்காவைவிட சுமார் 2. 5 மடங்கும் அதிகமாகக் கம்பளி உற்பத்தி செய்கிறது.

சோவியத் நாடு முழுவதிலும், முக்கியமாக உக்ரைனிலும் பைலோ ரஷ்யா, மோல்தாவியா, வடகாகஸ், பால்டிக், மத்தியப் பிரதேசங்களிலும் கோழி வளர்ப்பு நடைபெறுகிறது. உக்ரைனில் உள்ள கோழிகளின் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையில் கால் வாசிக்கும் அதிகம்.

கோழிப்பண்ணையில் பெட்டைக் கோழிகள் 80 சதத்துக்கும் அதிகம். இதற்கு அடுத்தபடியாக வாத்துக்கள், துருக்கி கினியா கோழிகள் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஆனுல் மேற்கு ஐரோப்பாவிலுள்ளது போல் அவ்வளவு அதிகமாக பெருக்கமடையவில்லை ஏனெனில் பருவநிலை இக்கோழிகளின் இனப் பெருக்கத்துக்குக் குந்தகமாக இருக்கிறது.

சோவியத் யூனியனில் வெவ்வேறு வகையான ஆயிரக்கணக்கான கோழிப் பண்ணைகள் உள்ளன. இவை மிகப் பெரியவை, எந்திரமயமாக்கப் பட்டவை. அரசாங்கப் பண்ணைகள், கூட்டுப் பண்ணைகளின் கோழிப்பண்ணை இலாகாக்களும் அரசாங்கப் புறநகர்க் கோழிப் பண்ணைகளும் உள்ளன. புறநகர்க் கோழிபண்ணை இலாகாவானது வாடிக்கையாளர்களுக்கு குளிர்பதனம் செய்யப்பட்ட கோழி முதலான பறவைகள், புதிய கோழிக்குஞ்சு, முட்டைகள் இவற்றை சப்ளை செய்கிறது. இம் முட்டைகள் இரண்டாவது நாளிலேயே விற்பனைக்கு வந்து விடுகின்றன. மாஸ்கோ அருகிலுள்ள பிராத் செவோ, தோமிலினே, கோழிப்பண்ணைகள் இத்தகைய பண்ணைகளில் மிகப் பெரியனவாம்.

கோழி, வாத்து முதலானவற்றின் எண்ணிக்கை 65கோடிக்கும் அதிகம். 1975 ஆம் ஆண்டு வாக்கில் முட்டை உற்பத்தி 5,200 கோடியை எட்டி விடும்.

யுத்தத்தினுல் விளைந்த கடுமையான இழப்பிலிருந்து சோவியத் வேளாண்மைத் துறை வெகு விரைவிலேயே செம்மையடைந்து விட்டது. ஆயினும் யுத்த - பிற்கால ஆரம்ப ஆண்டுகளில் விவசாயத்தின் வளர்ச்சி விகிதமானது பொருளாதாரத்தின் ஏனைய கிளைகளின் வளர்ச்சி விகிதத்துக்கு மிகவும பின் தங்கி நின்றது. 1965ஆம் ஆண்டுவரை சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சியும்,சோவியத் அரசாங்கமும் வகுத்தளித்து, செயலாக்கப்பட்ட சமூக-பொருளாதார, ஸ்தாபன நடவடிக்கைகளால், விவசாய வளர்ச்சிக்கு குந்தக

மாயிருந்த காரணங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. இதனால் வேகமான முன்னேற்றம் சாத்தியமாகியுள்ளது.

## போக்குவரத்து

சோவியத் யூனியனின் பரந்த பிரதேசம், அதனுடைய பொருளாதாரம் முழுமையும் விரைவாக வளர்ச்சியடைந்து வருவது. குறிப்பாக அதனுடைய தொலைதூரப் பிரதேசங்களின் வளர்ச்சி ஆகியவை போக்குவரத்து பெருமளவு, மென்மேலும் அதிகமாக வளர்ச்சி அடைவதை அவசியமாக்குகின்றன.

மொத்த சரக்குப் போக்குவரத்தின் சுமார் மூன்றில் இரண்டு பங்கு ரயில்வேக்களின் மூலமாக நடைபெறுகின்றது. நாட்டின் ரயில்வேக்களின் நீளம் சோவியத ஆட்சிக் காலத்தில் ஏறக்குறைய இரண்டு மடங்கு ஆகியுள்ளது. இன்று அவற்றின் மொத்த நீளம் 1 36,000 கிலோ மீட்டர்களாகும். இது உலக ரயில் பாதை அமைப்பின 10 சதவீதத்தை விட சிறிதளவு அதிகமாகும். மேலும், உலக ரயில்வேக்களில் எடுத்துச் செல்லப்படும் சரக்குகளில் பாதி அளவுக்குச் சற்றே குறைவான அளவு சரக்குகள் சோவியத் ரயில் வேக்களில் எடுத்துச் செல்லப் படுகின்றன. வேறு வகையில் கூறுவதெனில், சோவியத் ரயில்வேக்கள் சராசரியாக உலகின் பிற பகுதியின் ரயில்வேக்களைப் போன்று ஏறத்தாழ ஐந்து மடங்கு மும்முரமாகவும் திறமையாகவும் செயல்படுகின்றன.

புதிய ரயில்வேக்களின் பெரும்பகுதி சைபீரியா, கஜாக்ஸ்தான் மத்திய ஆசியா ஆகியவற்றின் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களில் அமைக்கப்பட்டு வருகிறது; இங்கு கடந்த காலத்தில் நம்பகமான போக்குவரத்து சாதனங்கள் அனேகமாக இல்லையென்றே கூறலாம். சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியிலுள்ள ரயில் பாதை அமைப்பும் விரிவு படுத்தப்பட்டு வருகிறது.

விரைவான பொருளாதார வளர்ச்சியானது பிரதான மார்க்கங்களில் சரக்குப் போக்குவரத்தின் அளவைப் பெருமளவு அதிகரித்துள்ளது. இது ரயில் போக்குவரத்தை தீவிர தொழில் நுட்ப புனரமைப்புக்கு இட்டுச் சென்றது.

சுமார் 1,20,000 கிலோ மீட்டர் தூர ரயில்வேக்களில் டீசல், மற்றும் மின்சார இஞ்சின்கள் செயல்படுகின்றன,

மின்மயமாக்கப்பட்ட மின்சாரப் பாதைகளின் நீளம் ஒவ்வோர் ஆண்டும் 1 500-2,000 கிலோ மீட்டர் அதிகரிக்கிறது தற்போது இது 35.000 கிலோ மீட்டரை விஞ்சுகிறது-இது உலகின் மின்மய

மாக்கப்பட்ட ரயில்வேக்களின் மூன்றிலொரு பகுதிக்கும் அதிக மாகும்.

பிரயாணிகளில் பெரும் பகுதியினர் ரயில்வேக்கள் வாயிலாகவே பிரயாணம் செய்கின்றனர், ஆண்டுக்கு 32 கோடியே 40 லட்சம் பேர் (புறநகர் ரயில் பிரயாணிகள் இக்கணக்கில் சேர்க்கப்படவில்லை).

1975 இறுதியில் ரயில்வேக்களில் சரக்குப் போக்குவரத்து, 1970 உடன் ஒப்பிடும் போது 22 சதவீதம் அதிகரிக்கும்.

சகல போக்கு வரத்தின் சுமார் ஆறில் ஒருபகுதி கப்பல்களின் வாயிலாக நடைபெறுகிறது-இது 1940ம் வருட அளவைப் போல் 27 மடங்கு ஆகும்; மொத்த சரக்குப் போக்குவரத்தில் இதன் பங்கு மும்மடங்கு ஆகியுள்ளது. சோவியத் யூனியனின் அயல்துறை வர்த்தகப் பிணைப்புகள் பெருமளவாக வளர்ச்சியுற்றதே இதற்குக் காரணமாகும்.

வர்த்தகம் விரிவடைவதோடு கப்பல் அணியும் வளர்ச்சியுற்று வருகிறது. 1960ல் சோவியத் கப்பல் அணி, உலக எடையில் உலகில் பதினொன்றாவது இடத்தை வகித்து வந்தது. தற்போது ஆறாவது இடத்தை வகிக்கிறது; மீன் பிடி நாவாய்கள் உள்ளிட்ட கப்பல்களின் எண்ணிக்கையில் இரண்டாவது இடம் வகிக்கிறது. சோவியத் கப்பல் அணியின் ஆற்றல் 1 கோடி 60 லட்சப் பதிவு செய்யப்பட்ட டன்களை மிஞ்சுகிறது, அதனுடைய வருடாந்திர வளர்ச்சி பத்து லட்சம் டன்னுக்கும் அதிகம்: சோவியத் வர்த்தகக் கப்பல் அணியில் சுமார் 1600 கப்பல்கள் உள்ளன; இவற்றில் ஏறத்தாழ 80 சதவீதம் கடந்த பத்தாண்டு காலத்தில் சட்டை பெற்றவை. 1975 இறுதியில் வர்த்தக கப்பல்களின் மூலமான சரக்குப் போக்குவரத்து 1970ஐ காட்டிலும் 40 சதவீதம் அதிகரிக்கும். ஒவ்வோர் ஆண்டும் கப்பல்களின் அணி 3 கோடியே 85 லட்சம் பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றது.

1971 இறுதியில், சோவியத் யூனியன் கப்பல்களின் இருப்பிடத்தின் மீது தன்னியக்க கட்டுப்பாடு செலுத்துவதற்கான எலெக்ட்ரானிக் கம்ப்யூடிங் மையம் மாஸ்கோவில் செயல்படத் தொடங்கியது. இது கப்பல் நடமாட்டம் குறித்து நிபுணர்களுக்கு கப்பல்களின் இருப்பிடம், அவை ஏற்றிச் செல்லும் சரக்குகள், அவை செல்லும் பாதைகள் குறித்து உடனுக்குடன் தகவல்களை வழங்குகிறது. சோவியத் யூனியனின் கப்பல் போக்கு வரத்து கட்டுப்பாட்டுக்குரிய அடித்தளம் இந்த மையம்தான். இது பூரணமாகத் தானியங்கி மயமாக்கப்பட்டு வருகிறது.

**நதிப் போக்குவரத்து.** சோவியத் யூனியனின் பிரதான நதிகள் அனைத்தும் சமதரையான பிரதேசம் வழியாகவே பாய்கின்றன. ஆனால் நாட்டின் ஐரோப்பியப் பகுதியில் ஆண்டில் நான்கு முதல் ஆறுமாத காலமும், வடக்கு சைபீரியா, தொலை கிழக்குப் பிர தேசங்களில் 8,9 மாதகாலமும் உறைந்து கிடக்கும். அதனால் தான் மொத்த சரக்குப் போக்கு வரத்தில் நதிகளின் வாயிலான போக்குவரத்து ஒப்பிட்டு அளவில் சிறிய பகுதியேயாகும்.

சோவியத் ஆட்சிக் காலத்தில் மனிதனால் உண்டாக்கப்பெற்ற 15,000 கிலோ மீட்டர் நீர்-வழிப்பாதைகள் செயல் படுத்தப் பெற்றன. நாட்டின் பிரதான நீர் - வழிப்போக்கு மார்க்கமாகிய வால்கா புனரமைக்கப்பட்டது. வால்காவின் மீது நிர்மாணிக்கப் பெற்ற ஹைட்ரோ அமைப்புகள் கலினின் நகரிலிருந்து நதியின் முகத்துவாரம் வரையிலும் ஒரு குறிப்பிட்ட ஆழத்தை உத்தர வாதம் செய்கின்றன. வெண்கடல்—பால்டிக் கடல், வால்கா- பால் டிக் கடல், வால்கா-டான் கப்பற் போக்குவரத்துக் கால்வாய்கள் வடக்கு தெற்குக் கடல்களை இணைத்துள்ளன; மாஸ்கோ கால்வாய் வழியாக பெரிய கப்பல்கள் வால்காவிலிருந்து மாஸ்கோவுக்கு வருகின்றன. அடுத்த சில ஆண்டுகளில் நதிகள் வாயிலான கப்பற் போக்குவரத்தின் பங்கை பிரதானமாகக் கலப்புப் போக்குவரத்தில் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கப்பல் அணிக்கு ஆறு களிலும் கடல்களிலும் செல்லத் தக்க புதிய கப்பல்கள் கிடைக்கும்; சைபீரியாவின் தொலை தூர பிரதேசங்களுடன் போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்துவதற்கு இது குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஒவ்வோராண்டும் நதிவழிச் செல்லும் கலங்கள் சுமார் 14 கோடி 50 லட்சம் பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன.

**மோட்டார் போக்குவரத்து.** சாமான்களை ஏற்றிச் செல்வதில் இன்னும் ஒரு சிறு பங்கே வகிக்கிறது, மொத்த சரக்குப் போக்கு வரத்தில் இது சுமார் 8 சதவீதமேயாகும். எனினும், அடுத்த சில ஆண்டுகளில் மோட்டார் வாகனங்கள் அணி பெருமளவு அதிகரிக்கப்படும்.

பிரயாணிகள் போக்குவரத்தில் மோட்டார் போக்கு வரத்து ஒரு பெரும் பங்கு வகிக்கிறது; பஸ்கள் ரயில்வேக்கு அடுத்த இரண்டாவது இடத்தை வகிக்கின்றன. பிரயாணிகள் போக்கு வரத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான அளவு மோட்டார் களின் வாயிலாக நடை பெறுகின்றது. ரயில்வேக்கள் 50 சதவீதப் பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன புறநகர்ப் பிரதேசங்களில் பிர யாணிகள் போக்கு வரத்து வசதிகள் குறிப்பாக நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளன. அண்மை ஆண்டுகளில் வசதியான நீண்டதூர

பஸ்களிலான பிரயாணிகள் போக்குவரத்து இது போன்றே விரிவடைந்துள்ளது.

1971-75 ஆண்டுகளின் போது 1,10,000 கிலோ மீட்டர்களுக்கு அதிகமான மோட்டார் சாலைகள் அமைக்கப்படவிருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் பொது-நோக்கு மோட்டார் போக்கு வரத்து மூலமான சாமான் போக்குவரத்து 60 சதவீதம் உயரும், பஸ் மூலமான பிரயாணிகள் போக்குவரத்து அனேகமாக இரட்டிப்பாகும்.

**விமானப் போக்கு வரத்து:** நாட்டின் முதலாவது விமான சர்வீஸ் 1923ல் துவக்கப்பட்டது. அது முதற் கொண்டு விமான மார்க்கங்கள் 8 லட்சம் கிலோ மீட்டர்களை எஞ்சியுள்ளன. இதில் 2,25,000 கிலோ மீட்டர்கள் சர்வதேச விமான மார்க்கங்களாகும். உலகின் 60 நாடுகள் சோவியத் யூனியனுடன் விமான மார்க்கங்களின் மூலமாக இணைந்துள்ளன. உலகின் மிகப் பெரிய விமானப் போக்கு வரத்துக் கம்பெனியான ஏரோஃப்புளோட் 1972ல் 8 கோடி 20 லட்சம் மக்களை ஏற்றிச் சென்றது. 1975ல் ஏரோஃப்புளோட் பிரயாணிகளின் எண்ணிக்கை 11 கோடியே 50 லட்சத்தை எட்டும்.

நகரங்களிலும் கிராமங்களிலும் வசிக்கும் சோவியத் மக்களிடையே விமானப் பயணம் சர்வசாதாரணமாகி வருகிறது. வளர்ச்சி குறைவான வடக்குப் பிரதேசங்களிலும் மலைப்பாங்கான பிரதேசங்களிலும் ஹெலிகாப்டர்கள் விரிவாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

சோவியத் யூனியனின் சிவில் விமானப் போக்குவரத்து சோவியத் நாட்டில் செய்யப்பட்ட ஏராளமான பல்வேறு விமானங்களையும் ஹெலிகாப்டர்களையும் கொண்டுள்ளது; இவை ஆறு முதல் 220 பிரயாணிகள் வரை ஏற்றிச் செல்லும் வல்லமை உடையவை

பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் ஒரு ஜெட் விமானத்தை டி. யு-104 முதல் முதலில் உலகத்தில் அறிமுகப்படுத்தியது சோவியத் விமான சர்வீசேயாகும். உலகின் மிகப்பெரிய ஹெலிகாப்டர்கள் வி-12, 80 டன் எடையுள்ள சரக்குகளை ஏற்றிச் செல்ல வல்ல பிரம்மாண்டமான எ.என்—22 போக்குவரத்து விமானம் - முதலியவை சோவியத் விமானப் போக்குவரத்துத் துறையிடம் உண்டு. ஒலியைவிட வேகமாகச் செல்லும் டி.யு. 144 'சூப்பர் சானிக்' விமானம்—140 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு மணிக்கு 2,500 கிலோமீட்டர் வேகம் வரையிலும் இது செல்ல முடியும்—தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

சோவியத் நாட்டில் செய்யப்பட்ட விமானங்களும் ஹெலிகாப்டர்களும் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## அந்நிய பொருளாதாரத் தொடர்புகள்

சோவியத் யூனியன் நூறு நாடுகளுடன் வாணிபம் புரிகின்றது. அந்நிய வர்த்தகப் பரிமாற்றத்தின் அளவில் உலகில் ஏழாவது ஸ்தானத்தை வகிக்கிறது.

சோவியத் ஏற்றுமதிகளில் 85 சதவீதம் தொழிற்துறைப் பண்டங்கள், 15 சதவீதம் விவசாயப் பண்டங்கள். இயந்திரங்கள், சாதனங்கள், உலோகங்கள், உலோகப் பொருட்கள், கேபிள்கள், உலோகத் தாதுக்கள் ஆகியவை சோவியத ஏற்றுமதிகளில் சுமார் பாதி அளவாக உள்ளன. சோவியத் யூனியன் இயந்திரங்கள், சாதனங்கள் (மொத்த இறக்குமதிகளில் 34 சதவீதம்), உணவுப் பண்டங்கள், பயனீட்டுப் பொருள்கள் (40 சதவீதம்), ரசாயனப் பொருள்கள், ரப்பர், உரங்கள், உலோகங்கள் (20 சதவீதம்), பஞ்சாலைத் தொழிலுக்கான கச்சாப் பொருட்கள் (5 சதவீதம்) முதலியவற்றை இறக்குமதி செய்கிறது. 1971—75 காலகட்டத்தில் சோவியத் வர்த்தகப் பரிமாற்றம் 33-35 சதவீதம் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சோஷலிச நாடுகள் — பிரதான பங்காளிகள்: சோவியத் யூனியனின் அயல்துறை வர்த்தக பரிமாற்றத்தில் சோஷலிச நாடுகளின் பங்கு அனேகமாக மூன்றில் இரண்டு பங்காகும். (1972ல் 1,680 கோடி ரூபிள்கள்).

தமது தேசியப் பொருளாதாரங்களை வளர்ப்பதில் சோவியத் யூனியனும் சோதர சோஷலிச நாடுகளும் எல்லா வழிகளிலும் ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்கின்றன. 1949 ஜனவரியில் அமைக்கப்பட்ட பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலில் (சீஎபஇஉ) பல்கேரியா, கியூபா (1972 ஜூலையில் சேர்ந்தது.) செக்கோஸ்லோவாக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, மங்கோலியா, போலந்து, ருமேனியா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் உள்ளன.

சீஎபஇஉ நாடுகளிடையேயான பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்பானது சோஷலிச சர்வதேசியம், நாட்டின் அரசுரிமை, சுதந்திரம், தேசிய நலன்களை மதிப்பது, பூரண சமத்துவம், நல்லிணக்கம், பரஸ்பர அனுகூலம், தோழமை பூர்வமான உதவி ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது.

சிஎப்இஏயில், இந்த ஸ்தாபனத்தின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் ஏற்றுக் கொள்வதற்கு இணக்கமாகவும், அதனுடைய சாசனத்தைக் கடைப்பிடிப்பதற்குத் தயாராகவும் உள்ள எந்த நாடும் சேரலாம். சிஎம்இஏ உறுப்பினர்களாக இல்லாத நாடுகள் அதனுடைய துணை அமைப்புக்களின் பணியில் பங்கெடுத்துக் கொள்ள முடியும் (சில நாடுகள் பங்கெடுத்து வருகின்றன.)

| | 1946 | 1965 | 1970 | 1972 |
|---|---|---|---|---|
| அயல்துறை வர்த்தகப் பரிமாற்றம் (நூறு கோடி ரூபிள்களில்) | 1.3 | 14 6 | 22.1 | 26 |
| ஏற்றுமதி | 0.6 | 7 4 | 11.5 | 12 7 |
| இறக்குமதி | 0·7 | 7 2 | 10.6 | 13.3 |

சிஎம்இஏ உறுப்பு நாடுகளின் எரிபொருள், கச்சாப் பொருள் தேவைகளில 70 சதவீதத்திற்கு மேற்பட்ட பகுதியை சோவியத் யூனியன் வழங்குகிறது, மேலும் இப்பொருள்களுக்கான வியத்நாம் ஜனநாயகக் குடியரசு, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றின் தேவைகளையும் சோவியத் யூனியன் பெருமளவுக்கு பூர்த்தி செய்கிறது. பதிலுக்கு சோவியத் யூனியன் சோதர நாடுகளிலிருந்து தொழில் துறை சாதனங்கள், சப்ளைகள், விவசாயப் பண்டங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்கிறது. சோதர நாடுகளுக்கு அவற்றின் பொருளாதாரங்களின் வளர்ச்சிக்காக வழங்கப்படும் சோவியத் கடன்கள் தற்போது 1,300 கோடி ரூபிள்களை விஞ்சுகின்றன. சோஷலிச நாடுகள், சோவியத் உதவியுடன் 1966–70 காலகட்டத்தில் மட்டும் 300க்கு மேற் பட்ட தொழில் துறை, மற்றும் விவசாய நிலங்களைக் கட்டி யமைத்துள்ளன, அல்லது புதிய கருவிகளைக் கொண்டு புனரமைத் துள்ளன.

1972ல் சிஎம்இஏ நாடுகளின் தொழிற்துறை உற்பத்தி, 1950ஆம் ஆண்டின் உற்பத்தியைப் போல் 700 சதவீதம் அதிகரித்தது; அதே பொழுதில் முன்னேற்றமடைந்த முதலாளித் துவ நாடுகளில் இது, இதே காலகட்டத்தில் 200 சதவிகிதம் மட்டுமே அதிகரித்தது.

உயர்வான பொருளாதார வளர்ச்சி விகிதங்களைக் கொண் டுள்ள சிஎம்இஏ கூட்டமைப்பு தற்போது உலகின் மிகு இயக்க ஆற்றல் வளர்ச்சியுடைய தொழில்துறைப் பிராந்தியங்களில்

ஒன்றாக உள்ளது. 1966-70 காலகட்டத்தில் இதனுடைய தொழில்துறை உற்பத்தி 49 சதவீதம் அதிகரித்தது. உலக ஜனத்தொகையில் 10 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ள இப் பிராந்தியம் உலகின் தொழிற்துறை உற்பத்தியில் சுமார் மூன்றிலொரு பங்கை உற்பத்தி செய்கிறது; உலக தேசிய வருமானத்தில் நாலில் ஒரு பங்குக்கும் அதிகமான அளவுக்கு வகை செய்கிறது.

1972ல் சீஎம்இஏ நாடுகளின் தேசிய வருமானம் 5.1 சதவீதம் அதிகரித்தது; தொழிற்துறை உற்பத்தி 7 5 சதவீதம் அதிகரித்தது. பொது மார்க்கெட் நாடுகளில் தொழிற்துறை உற்பத்தி 4 3 சதவீதம் அதிகரித்தது. தேசிய வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதில் சீஎம்இஏ நாடுகள் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளன.

ஒன்பதாவது ஐந்தாண்டுக் காலகட்டத்தில் சோஷலிச நாடுகளுடன் சோவியத் யூனியன் தொடர்ந்து பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்பை வளர்த்து வருகிறது; உதாரணமாக, சீஎம்இஏ நாடுகளுக்கான சோவியத் எண்ணெய் சப்ளைகள் 1966-70ல் 13·8 கோடி டன்களிலிருந்து 1971-75ல் 24.3 கோடி டன்களாக அதிகரிக்கும்; இயற்கை வாயு 800 கோடியிலிருந்து 3,300 கோடி கனமீட்டர்களாக அதிகரிக்கும்; மின்விசை 1,400 கோடியிலிருந்து 4,200 கோடி கிலோவாட் மணியாக அதிகரிக்கும்; இருப்புத்தாது (உலோகத்தைப் பொருத்த மட்டில்) 7.2 கோடி டன்களிலிருந்து 9.4 கோடி டன்களாக அதிகரிக்கும்.

அதே சமயத்தில் சோவியத் யூனியன் பிற சீஎம்இஏ நாடுகளிலிருந்து ரசாயனத் தொழில்துறைக்கான இயந்திரங்களை 130 கோடி ரூபிள் தொகைக்கு இறக்குமதி செய்யும்; ரயில்வே நீர் வழிப் போக்குவரத்து சாதனங்களை சுமார் 300 கோடி ரூபிள்களுக்கும், அதே பொழுதில் 850 கோடி ரூபிள்களுக்கு அதிகமான மதிப்புடைய பயனீட்டுப் பண்டங்களையும் இறக்குமதி செய்யும்.

1971-75ல் சீஎம்இஏ நாடுகளுடனான சோவியத் வர்த்தகப் பரிமாற்றம் 7,700 கோடி ரூபிள் மதிப்புடையதாகும். இது முந்திய ஐந்தாண்டுக் காலகட்டத்தில் இருந்ததைவிட 50 சதவீதம் அதிகமாகும்—இதில் வளர்ச்சி விகிதங்கள் ஏறத்தாழ 30 சதவீதம் உயர்வானது.

சோஷலிச ஒருமைப்பாடு: சோஷலிச நாடுகளிடையே ஒத்துழைப்பு விரிவடைவதும், சீஎம்இஏ கட்டமைப்புக்குள் சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பும் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதற்கான பொது முயற்சிகளின் வெற்றிக்குத் தலையாய முக்கியத்துவமுடையவையாகும்.

சோஷலிச ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துவதற்கும், அபி விருத்தி செய்வதற்குமான சர்வாம்ச வேலைத்திட்டம் அரசியல் பொருளாதார ஒற்றுமையை பலப்படுத்துவதிலும், சோஷலிச நாடுகளிடை சகல துறை ஒத்துழைப்பை வளர்ப்பதிலும் தலையாய முக்கியதுவமுடையதாகும். 1971 ஜூலையில் நடைபெற்ற 25 ஆவது சீஎமஇஎ கூட்டத் தொடரில் ஏற்கப்பட்டது. சீஎமஇஎ நாடுகளால் கூட்டாக வகுக்கப்பட்ட இந்தவேலைத்திட்டம் 15-20 ஆண்டுகளுக்குரியது; இது சர்வதேச உழைப்புப் பிரிவினையின் அடிப்படையில் படிப்படியாக நிறைவேற்றப்பட வேண்டிய பொருளாதார, ஸ்தாபன நடவடிக்கைகளின் ஒரு பரந்த தொகுப்பை விவரிக்கிறது. பொருளாதார நடவடிக்கையின் சகல அம்சங்களையும், சகல உற்பத்திக் கிளைகளையும் தழுவி நிற்கும் அதேசமயத்தில், அது, முன்னறிவிப்புகளைத் தயாரிப்பதில் ஒத்துழைப்பு, திட்டமிடுதலில ஒருங்கிணைப்பு, கூட்டு விஞ்ஞான, பொறியியல் ஆராய்ச்சியை ஒழுங்கமைத்தல, உற்பத்தியிலும் பண்டங்களின் விற்பனையிலும் ஒத்துழைப்பு, தனித்தொச்சி உள்ளிட்ட பொருளாயத உற்பத்தியின் எல்லாக்கட்டங்களிலும் சோதர நாடுகளின் முயற்சிகள் ஒருங்கிணைக்கப் படுவதை சிறப்பாக வலியுறுத்துகிறது.

1972ஜூலையில் மாஸ்கோவில் நடைபெற்ற 26ஆவது சீஎம்இஎ கூட்டமானது பொருளுற்பத்தி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், அன்னிய வர்த்தகம் ஆகியவற்றில் ஒத்துழைப்பிற்கான ஸ்தாபன வடிவங்களையும வழிமுறைகளையும் அபிவிருத்தி செய்வது குறித்தும், செலாவணி-நிதி மற்றும் சட்ட அம்சங்கள் குறித்தும் விசேஷமாக வலியுறுத்தியது.

பொருளாதாரத்தின் தனித்தனிக் கிளைகளின் வளர்ச்சிக்குரிய திட்டங்களைக் கூட்டாகத் தயாரிப்பது உள்ளிட்ட நீண்டகால, மற்றும் ஐந்தாண்டு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை ஒருமுகப்படுத்துவது சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையை ஏற்பாடு செய்யும் பிரதான வழிமுறையாக இருந்துவரும். கச்சாப் பொருள், மின்விசை, எரிபொருள் ஆதாரங்களை அபிவிருத்தி செய்வதிலும், தொழில்துறைத் தொகுப்புக்களை நிர்மாணிப்பதிலும், திறனுள்ள, முறையான உற்பத்தி பந்தங்களை விஸ்தரிப்பதிலும் கூட்டாளி நாடுகள் தமது முயற்சிகளை ஒன்று சேர்க்கும். தற்போதுள்ள சர்வதேச பொருளாதார ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்வதற்கும், புதியவற்றை நிறுவுவதற்கும், பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆற்றல்களை ஒன்று சேர்ப்பதற்குமான பணி தொடர்ந்து நடைபெறும்.

சர்வாம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில் பிரதான அம்சம், திட்டமிடும் நிறுவனங்களின் முறையான ஒத்துழைப்பாகும்;

இன்று கூட்டு முறையில் திட்டமிடுதலின் ஒரு முறையான அமைப்பு உருவாகி வருகிறது. பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பவியல் ஆகிய மிக முக்கிய துறைகளில் வருங்கால வளர்ச்சிக்கான வாய்ப்புகளை நிர்ணயம செய்வது மென்மேலும் அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. 1976-80 காலகட்டத்திற்கான திட்டங்கள், தேசிய ஐந்தாண்டுத் திட்டங்கள் இறுதியாக அங்கீகாரம் செய்யப்படுவதற்கு முன்பாக ஒருமுகப்படுத்தப்படும். இது, ஒவ்வொரு நாடும் ஒருமுகப்படுத்தப்படும் நடைமுறையின் போது அது ஏற்றுக் கொள்ளும் சகல கடமைப் பொறுப்புகளையும் பற்றி உரிய காலத்தில் கவனம் செலுத்துவதை சாத்தியமாக்கும். 1990 ஆம் ஆண்டு வரையிலும் ஒரு நீண்ட காலத் திட்டத்தின் பிரதான நிர்மாணத் திட்டங்களை ஒருமுகப்படுததுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வாம்சத் திட்டத்தின் ஒரு பிரதான வகையினம், உறுப்பு நாடுகளிடையில் உற்பத்தியில் தனி தேர்ச்சியும் ஒத்துழைப்பு மாகும். இன்றைய நீண்டகால ஒபபந்தங்களும் உடன்பாடுகளும் பொருளாதார, உற்பத்தி, வர்த்தக, விஞ்ஞான, தொழில்நுட்ப வியல், நிதி, சட்டம் பற்றும் பல முழு வரிசையான பிரச்சினைகளை உள்ளடக்கியுள்ளன.

அண்மையில் கையெழுத்திடப் பெற்ற பொது உடன்பாட்டின் விதிகளின்படி, சிஎம்இஏ உறுப்பு-நாடுகள் ஆண்டுக்கு 5லட்சம் டன் உற்பத்தி ஆற்றலுடைய ஒரு பெரிய பரக் குழாய் ஆலையை நிர்மாணிப்பதில் கூட்டாகப் பங்கெடுத்துக் கொள்ளும். இந்தத் திட்ட நிலையம் சோவியத் பிராந்தியத்தில் உஸ்த்-இலிம் நகருக்கு அருகாமையில் கட்டப்படவிருக்கிறது. இந்த ஆலையின் உற்பத்தி, இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள அனைத்து நாடுகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யப் போதுமானது. இந்த ஒப்பந்தத்தை உருவாக்குவதில் பெறப்பட்டுள்ள அனுபவமானது, இத்தகைய வடிவங்களிலான ஒத்துழைப்புக்கு அதிகமான வாய்ப்புக்கள் உண்டு என்பதைக் காட்டியுள்ளது.

ஐரோப்பிய சிஎம்இஏ உறுப்பு நாடுகளின் மின்விசைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பல்கேரியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, செக்கோஸ்லோவாகியா ஆகிய நாடுகளில் பெரிய அணுசக்தி மின்நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன; இவை நிர்மாணிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை சோவியத் யூனியன் வழங்கி வருகின்றது. 1972 இறுதியில் செக்கோஸ்லோவாக்கியாவின் முதலாவது அணுசக்தி மின்நிலையம் செயல்படத் தொடங்கியது. அணுசக்தி மின் பொறியியலுக்கான தொழில்நுட்பவியல் அடித்தளத்தைக் கட்டியமைப்பதில் தமது

முயற்சிகளை ஒருமுகப்படுத்துவதற்கு சிஎம்இஏ நாடுகள் கோட்பாட்டு அளவில் ஒத்துக்கொண்டுள்ளன. மின்விசைப் பொறியாளர்களின் இன்றைய அவசரக் கடமைகளில் ஒன்று பலதரப்பு அடிப்படையில் 750 கிலோ வாட் மின்விசை செலுத்தும் அமைப்பை நிர்மாணிப்பதாகும். இது சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியின், மற்றும் சிஎம்இஏ உறுப்பு நாடுகளின் மின்விசைக் கோப்பின் திறனை உயர்த்தும்.

சிலவகைப் பொருள்களின் - உதாரணமாக வேலைத் திட்டக் கட்டுப்பாட்டுக்குரிய இயந்திரக் கருவிகள் - உற்பத்தியைக் கூட்டு முறையில் திட்டமிடுவதற்குத் தொடங்குவதென்ற சிஎம்இஏ உறுப்பு நாடுகளின் முடிவு மிகுந்த முக்கியத்துவமுடையதாகும். டிரக்குகள், டிராக்டர்கள் விவசாய இயந்திரங்கள், நதி கடல் போக்குவரத்துக் கப்பல்கள் முதலியவற்றைத் தயாரிப்பதற்கான ஆலைகளின் உற்பத்தியில் தனித் தேர்ச்சி, ஒத்துழைப்பு குறித்த பல தரப்பு உடன்பாடுகள் கையெழுத்திடப் பெற்றுள்ளன. பல இருதரப்பு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப் பெற்றுள்ளன.

இன்டர்மெட்டல், இன்டர்செம், இன்டராட்டோமின்ஸ்ட்ருமென்ட், அக்ரோமாச் போன்ற இருபதுக்கு மேற்பட்ட சர்வதேச ஸ்தாபனங்களை சிஎம்இஏ உறுப்பு நாடுகள் நிறுவியுள்ளன. இன்டர்ஸ்பூத்னிக் சங்கத்தின் வேலைகளில் பல நாடுகள் கலந்து கொள்கின்றன.

பொருளாதார ஒத்துழைப்புக்கான சர்வதேச பாங்கும், சர்வதேச முதலீட்டு பாங்கும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிப் போக்கில் ஒரு பெரும் பங்கு வகிக்கின்றன. 1964 முதல் - சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு பாங்கி நிறுவப்பட்டதிலிருந்து - சிஎம்இஏ நாடுகளின் பரஸ்பர நிதி நடவடிக்கைகள் அனேகமாக இரட்டிப்பாகியுள்ளன. 1972ல் இத்தகைய நடவடிக்கைகளின் பரிமாணம் 4,300 கோடி மாற்றத்தக்க ரூபிள்களை விஞ்சின.

சர்வதேச முதலீட்டு வங்கி, அது துவக்கப்பட்டபின் இரண்டு ஆண்டுகளில் (1971-72) சிஎம்இஏ உறுப்பு நாடுகளில 26 திட்ட நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் பிற கருவிகள் அளிப்பதற்குமாக மொத்தம் 28 கோடி மாற்றத்தக்க ரூபிள் தொகையை கடனாக வழங்கியுள்ளது. இந்தத் திட்ட நிலையங்களில் செக்கோஸ்லோவாக்கிய தத்ரா ஆலை, ஹங்கேரிய இகாரஸ் ஆலை ஆகியவையும் உள்ளன, இவை நவீனமயமாக்கப்பட்டன; பல்கேரியா, ஹங்கேரி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் கட்டப்பெற்ற ஆலைகளும் இதில் உட்படும்.

1972ல் சிஎம்இஈ நாடுகளின் விஞ்ஞான, தொழில் நுட்பவியல் ஒத்துழைப்பு சகல துறைகளையும், தொழில் - நுட்பவியல் முன்னேற்றத்தையும், உற்பத்தித் திறனையும் நிர்ணயிக்கும் தொழில்களையும் தழுவி நின்றது.

அண்மை ஆண்டுகளில் 30 ஒருங்கிணைப்பு மையங்கள் நிறுவப் பட்டன; இவை, உறுப்பு நாடுகளது தேசிய ஆராய்ச்சி நிலையங் களின் பணிகளை ஒருங்கிணைக்கின்றன. இவை தவிர, இரு விஞ்ஞான - உற்பத்தித் தொகுப்புகளும் நிறுவப்பட்டுள்ளன.

விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்து சிஎம்இஈ கமிட்டியும், சிஎம்இஈ நிரந்தரக் கமிஷன்களும் மிகவும் பயனுள்ள பணியாற்றி வருகின்றன. இன்று, சிஎம்இஈ அமைப்புகள் நூற்றுக்கு மேற்பட்ட கூட்டு விஞ்ஞான, தொழில்நுட்ப, பொரு ளாதார நீண்ட காலத் திட்டங்களைச் செயலாக்கி வருகின்றன. இரு தரப்பு விஞ்ஞான, தொழில் நுட்பவியல் பந்தங்களும் விரி வடைந்து வருகின்றன.

உலக சோஷலிசத்தின் வளர்ச்சியில் பொருளாதார ஒருங் கிணைப்பு ஒரு புறநிலை வரலாற்று நிகழ்ச்சிப் போக்கு ஆகும். சர்வாம்சத் திட்டமானது சோஷலிச ஒருங்கிணைப்பின் நோக் கங்கள், பிரதான திசை வழிகள் குறித்த சிஎம்இஈ நாடுகளின் கருத்துக்களின் ஒத்த தன்மையினைப் பிரதிபலிக்கிறது. ஒத்துழைப்பு மேலும் விரிவடைவதும், மேம்படுவதும் சோதர சோஷலிச நாடுகள் தமது பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்கும், இதன் மூலம் அதை ஒரு சீராக உயர் மட்டத் திற்குக் கொண்டு வரவும், தேசிய வாழ்க்கைத் தரங்களை உயர்த் தவும் உதவ முடியும். இது அவற்றின் ஒற்றுமையை பலப்படுத்தி, உலக சோஷலிச அமைப்பை உறுதிப்படுத்தும்.

வளர்முக நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பு. 1920, 1930ஆம் ஆண்டுகளிலேயே இளம் சோவியத் நாடு, காலனி ஆதிக் கத்தை முறித்தெறிந்த நாடுகள் சிலவற்றுக்கு உதவி அளிக்கத் தொடங்கியது. அப்பொழுதுதான் சோவியத் யூனியன் துருக்கி, இரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. அந்த சமயத்தில் அதனுடைய சொந்த செல்வாதாரங்கள் மிகவும் குறைவானதாயிருந்த போதிலும் சோவியத் யூனியன், பஞ்சாலைகள், ஜின்னிங் பாக்டரிகள், பாரந் தூக்கிகள் முதலியன கட்டியமைப்பதற்கு அந்நாடுகளுக்கு உதவி செய்தது.

இன்று சோவியத் யூனியன், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் 45 வளர்முக நாடுகளுடன் பொருளாதார,

தொழில் நுட்ப ஒத்துழைப்பு சம்பந்தமான ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் இந்நாடுகளுக்கான சோவியத் பொருளாதார, தொழில் நுட்ப உதவி ஆறு மடங்குக்கு மேலாக அதிகரித்துள்ளது. இது தொடர்ந்து வளர்ச்சியுறும், முன்னிலும் விரிவான வீச்சைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1971-75 ஆண்டுகளுக்குரிய சோவியத் யூனியனின் ஐந்தாண்டு பொருளாதார வளர்ச்சித் திட்டத்திற்கான சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24 ஆவது காங்கிரசின் ஆணைகள் இவ்வாறு கூறின: ''வளர்ச்சியடைந்து வரும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் நிலையான, அயல்துறை பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பப் பிணைப்புகளை வளர்ப்பதானது பரஸ்பர நன்மையின் அடிப்படையிலும், அவற்றின் பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்தும் நலனுக்காகவும் தொடர்ந்து நடைபெறும்.''

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24ஆவது காங்கிரசுக்கான தனது அறிக்கையில் சோவியத் அமைச்சரவைத் தலைவர் அலெக்சி கோசிகின் இவ்வாறு கூறினர்: சமத்துவம், பரஸ்பர நலன்களுக்கு மதிப்பளிப்பது என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் வளர்முக நாடுகளுடனான சோவியத் ஒத்துழைப்பு ஒரு நிலையான உழைப்புப் பிரிவினைத் தன்மையை அடைந்து வருகிறது; இது, சர்வதேச பொருளாதார உறவுகள் துறையில் ஏகாதிபத்தியச் சுரண்டல் முறைக்கு நேர் எதிரானது.

1972ல் சோவியத் அயல் வர்த்தக பரிமாற்றத்தில் வளர்முக நாடுகளின் பங்கு 13 சதவீதத்தை எட்டியது, இதன் மதிப்பு 330 கோடி ரூபிள்கள். சோவியத் யூனியனின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளிகள் எகிப்திய அரபுக் குடியரசு (51·4 கோடி ரூபிள்கள்), இந்தியா (45·1 கோடி ரூபிள்கள்), இரான் (23 கோடி ரூபிள்கள்), ஈராக் (15·2 கோடி ரூபிள்கள்), துருக்கி (14·5 கோடி ரூபிள்கள்), அல்ஜீரியா (11·5 கோடி ரூபிள்கள்), சிரியா (11·2 கோடி ரூபிள்கள்) ஆக இருந்தன. ஆப்கானிஸ்தான், மலேசியா, மொராக்கோ, கினியா, கானா, லிபியா, நைஜீரியா, பிரேஜில், பெரு, மற்றும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்காவின் இதர பல வளர்முக நாடுகளுடன் சோவியத் யூனியன் தனது வாத்தகத்தை அதிகரித்து வருகிறது. பங்களாதேஷ் மக்கள் குடியரசுடனும் சோவியத் யூனியன் பொருளாதார ஒத்துழைப்பு பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

வளர்முக நாடுகளில் சோவியத் உதவியுடன் 800க்கு அதிகமான தொழில் துறை நிலையங்கள், கல்வி, மருத்துவ நிறுவனங்கள்,

விவசாயப் பண்ணைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன, அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 400 திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வளர்முக நாடுகளுக்கான சோவியத் பொருளாதார, தொழில் நுட்ப உதவியின் நோக்கம், அந்நாடுகள் மெய்யாகவே சுதந்திரமான பொருளாதாரங்களை, பிரதானமாக அவற்றின் அரசுத் துறைகளைக் கட்டுவதற்கும், வலுப்படுத்துவதற்கும் உதவுவதாகும்; இதன் பயனாக, மிகவும் அவசரப் பிரச்சினைகளின் தீர்வுக்கு தேசந் தழுவிய அளவில் செல்வாதாரங்களைத் திரட்டுவது சாத்தியமாகும்.

அதனால்தான் மொத்த சோவியத் உதவியில் 70 சதவீதத்திற்கு அதிகமான பங்கு தொழில் துறைக்கு அளிக்கப்படுகிறது. சோவியத் உதவியுடன் மின்விசை நிலையங்கள், இரும்பு சார்ந்த, இரும்பல்லாத உலோக ஆலைகள், பொறியியல், உலோகவேலை, ரசாயனத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், மற்றும் பிற கன இயந்திரத் தொழில் நிலையங்கள் இந்தியா, எகிப்திய அரபுக் குடியரசு, அல்ஜீரியா, ஈரான், துருக்கி, பாகிஸ்தான் ஆகியவற்றிலும் மற்றும் பொருத்தமான பொருளாதார அஸ்திவாரமுடைய பிற நாடுகளிலும் கட்டப்பட்டு வருகின்றன.

வளர்முக நாடுகளுக்கு சோவியத் யூனியன் சாதகமான நிபந்தனைகளின் பேரில் கடன்கள் வழங்குகிறது. இந்த நாடுகளுக்கான சோவியத் கடன் உதவியின் மொத்தத் தொகை 500 கோடி ரூபிள்களையும் விஞ்சியது. சோவியத் யூனியன் கட்டியமைத்த தொழில் நிலையங்கள், எந்த நாடுகளுக்காக அவை கட்டப்பெற்றனவோ, அந்த நாடுகளுக்குரிய சொத்துக்களே ஆகும். அவற்றின் லாபங்களில் சோவியத் யூனியன் பங்கு கேட்பதில்லை. இந்தக் கடன்களைத் திருப்பி செலுத்துவது சோவியத் யூனியனுக்கு மரபாக ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்கள் வாயிலாகவே நடைபெறுகிறது - இரும்பு சாராத தாதுப் பொருள்கள், எண்ணெய் நீண்ட இழைப் பருத்தி, இயற்கை ரப்பர், சணல், பதனிடாத தோல், சணல், எண்ணெய் வித்துக்கள், அரிசி, தேயிலை, காப்பி, கோகோ விதைகள் வெப்ப மண்டலப் பழங்கள், மற்றும் பல செய்பொருள்கள் போன்றவை இந்த ஏற்றுமதிகளில் அடங்கும். இந்த வடிவ ஒத்துழைப்பானது வளர்முக நாடுகள் ஒரு சுயேச்சையான தேசியப் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள உதவுகிறது, அதற்கு ஒரு நிலையான சந்தையையும் வழங்குகிறது.

சோவியத் உதவியுடன் கட்டப்பெற்ற தொழில் நிலையங்கள் வளர்முக நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு முக்கிய பாத்திரம் வகிக்கின்றன. இந்தத் தொழில் நிலையங்கள், நாட்டின்

ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தியில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியையும் சில துறைகளில் மிகப் பெரும் பகுதியையும் உற்பத்தி செய்து வருகின்றன, அல்லது உற்பத்தி செய்யும். உதாரணமாக, சோவியத் உதவியுடன் கட்டப்பெற்ற பிலாய் இரும்பு, உருக்கு ஆலை இந்தியாவின் இரும்பு, உருக்குத் தொழில் துறையின் அரசாங்க உடமை அரங்கின் முன்னணி நிலையமாயுள்ளது. இது நாட்டின் மொத்த உருக்கு உற்பத்தியில் 30 சதவீதத்தை உற்பத்தி செய்கிறது. விரைவில் இதனுடைய உற்பத்தி ஆற்றல் ஆண்டுக்கு 32 லட்சம் டன்களுக்கு உயர்த்தப்படும். பின்னர் இது 70 லட்சம் டன்களுக்கு உயர்த்தப்படும்.

இந்தியாவில் பரௌனியிலும் கோயாலியிலும் சோவியத் உதவியுடன் கட்டப்பெற்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் நாட்டின் மொத்த எண்ணெய் உற்பத்தியின் மூன்றிலொரு பகுதியை உற்பத்தி செய்கின்றன.

மொத்தத்தில், சோவியத் யூனியன், இந்தியாவில் 24 பெரிய தொழில் நிலையங்களின் நிர்மாணத்திற்கு உதவியுள்ளது; இந்தத் துறையில் இன்னும் நிறையப்பணி ஆற்றவேண்டியுள்ளது. 1973ல் பொகாரோவில் ஓர் உருக்காலையின் முதற்பகுதி இயக்கிவைக்கப்படும். அதன் உற்பத்தியில் குளிர் நிலையில் உருட்டப்பெற்ற உருக்குத் தகடுகளும் உட்படும், இவற்றிற்கு இந்தியாவில் தற்போது அதிக கிராக்கி உள்ளது; இது பூர்த்தி செய்யப்பட்டவுடன் இந்த ஆலை ஆண்டுக்கு ஒரு கோடி டன் வரையில் உருக்கு உற்பத்தி செய்யும்.

21 லட்சம் கிலோவாட் வரை உற்பத்தி செய்யும் எகிப்தி லுள்ள அஸ்வான் நீர்மின் நிலையம் சோவியத் உதவியுடன் நிர்மாணிக்கப்பெற்றது. தற்போது ஹெல்வான் இரும்பு, உருக்காலையை (ஆண்டுக்கு 15 லட்சம் டன் உற்பத்தி ஆற்றலுடையது) விரிவுபடுத்தவும் ஓர் அலுமினியம் ஆலை ஒரு பாஸ்பரம் ஆலையைக் கட்டவும் மற்றும் பிற திட்ட நிலையங்களை நிர்மாணிக்கவும் சோவியத் யூனியன் எகிப்துக்கு உதவி வருகிறது. மொத்தத்தில் எகிப்திய அரபுக் குடியரசில் 70க்கு மேற்பட்ட பெரிய தொழில் நிலையங்களைக் கட்டுவதற்கு சோவியத் யூனியன் உதவியுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இவை ஒரு பெரும் பங்குப் பணியாற்றி வருகின்றன.

கிராமப் புறத்திற்கு மின்விசையைக் கொண்டு செல்வதில் சோவியத் - எகிப்திய ஒத்துழைப்பானது எகிப்திய மக்களுக்கு மாபெரும் முக்கியத்துவமுடையதாகும். 1973 ஆம் ஆண்டின் இறுதியில் அறுநூறு கிராமங்கள் மின்விசையைப் பெற்றிருக்கும்.

4,100 எகிப்திய கிராமங்களுக்கு மின்விசையை அளிப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

சோவியத் உதவியுடன் இராக்கில் தேசியத் தொழில்துறையின் புதிய கிளைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, சோவியத் உதவியுடன் ஓர் எலக்ட்ரோ-தொழில் நுட்ப ஆலையும், விவசாய இயந்திரங்கள் உற்பத்தி ஆலையும் நிர்மாணிக்கப்பட்டதோடு ஒரு தேசிய பொறியியல் தொழில் துறைக்கான அஸ்திவாரம் இடப்பட்டு விட்டது.

1972 வசந்தத்தில், ஆண்டுக்கு 50 லட்சம் டன் உற்பத்தியைக் கொண்ட இராக்கின் வடக்கு ருமீய்லா எண்ணெய் வயலின் அபிவிருத்தியிலும், இந்த வயலை ஃபாவோ துறைமுகத்துடன் இணைக்க குழாய்ப் பாதையை நிர்மாணிப்பதிலும் சோவியத் யூனியன் அதற்கு உதவி வழங்கியது. இந்த இரண்டு நிர்மாணத் திட்டங்கள் இராக்கில் ஒரு தேசிய எண்ணெய் தோண்டும் தொழிலை உருவாக்குவதற்கான முதல் பங்குப் பணிகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. புதிய எண்ணெய் வயலின் உற்பத்தி 1974ல் 1கோடி 80 லட்சம் டன்களை எட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மோசல் நகரத்தில் 15லட்சம் டன் ஆற்றலுடைய ஓர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையைக் கட்டுவதற்கும், பாக்தாத்திலிருந்து பாஸ்ரா வரையிலும் 600 கிலோமீட்டர் நீள குழாய்ப் பாதை போடுவதற்கும் சோவியத் ஸ்தாபனங்கள் தற்போது திட்டம் புனைந்து கொண்டிருக்கின்றன. மொத்தத்தில் சுமார் 70 பெரிய நிலையங்களைக் கட்டுவதில் சோவியத் யூனியன் இராக்குக்கு உதவி அளித்துள்ளது.

ஓர் உருக்காலையைக் கட்டுவதற்கு ஈரான் சுமார் 30 ஆண்டு காலம் மேலை நாடுகளின் உதவி கோரி ஏமாற்றமடைந்தது; தற்போது, சோவியத உதவியுடன் அது, இஸ்ஃபஹான் என்ற இடத்தில் ஆண்டுக்கு 12 லட்சம் டன் ஆற்றல் கொண்ட ஓர் உருககாலை நிர்மாணத்தைத் தொடங்கியுள்ளது. ஆலையின் முதற் பிரிவு 1973 துவக்கத்தில் உற்பத்தியைத் தொடங்கியது.

பல ஜீவாதாரமான திட்டநிலையங்களை - ஓர் உருக்காலை, ஒரு தெர்மல் மின்நிலையம், சுரங்க, மற்றும் தாதுப்பொருளைத் துப்புரவாக்கும் நிலையங்கள் நிர்மாணிப்பதிலும், கல்வி நிலையங்களை நிறுவுவதிலும் சோவியத் யூனியன் அல்ஜீரியாவுக்கு உதவி செய்து வருகிறது.

சிரியாவில் யூப்ரடிஸ் நீர்மின் விசைத் தொகுப்பு நிர்மாணம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதனுடைய நீர்மின்

நிலையத்தின் உற்பத்தி தற்போது சிரியாவிலுள்ள சகல மின்விசை நிலையங்களின் உற்பத்தியையும் விஞ்சும், இந்தத் தொகுப்பின் நீர்ப்பாசனப் பகுதி சுமார் 6லட்சம் ஹெக்டர்களுக்கு தண்ணீரைக் கொண்டு வரும், இது அனேகமாக இன்று நாட்டில் பாசன வசதி பெற்றுள்ள நிலப்பரப்புக்கு சமமாகும். மின் நிலையத்தின் முதற் பகுதி 1973 இறுதிக்குள் செயல்படத் தொடங்கும்.

பல்வகையான தொழில் நிலையங்களை நிர்மாணிப்பதில் ஆப்கானிஸ்தானுக்கு சோவியத் யூனியன் உதவியுள்ளது. தற்போது ஆப்கானிஸ்தானத்தின் முதலாவது ரசாயன நிலைய நைட்ரஜன் உரஆலை-நிர்மாண வேலை மஜார்-இ-ஷாரிப் என்ற இடத்தில் நிறைவு அடையும் நிலையை எட்டியுள்ளது.

துருக்கிக்கு சோவியத் யூனியன், பிற திட்ட நிலையங்களோடு, ஓர் இரும்பு, உருக்காலையை நிர்மாணிப்பதற்கு உதவி வருகிறது; இது மத்திய கிழக்கில் இவ்வகைப்பட்ட மிகப் பெரிய ஆலைகளில் ஒன்றாக இருக்கும். 1974ல் இது நிறைவு அடையும் போது துருக்கியின் உருக்கு உற்பத்தியை இது இரட்டிப்பாக்கும், துருக்கியிடம் வளமான பாக்சைட் படிவங்கள் இருந்த போதிலும். அது அலுமினியத்தை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனினும் 1973ஆம் ஆண்டில் துருக்கியின் முதலாவது அலுமினிய ஆலையில் அலுமினியம் ஆக்சைட் உற்பத்தி தொடங்கும் பின்னர் அலுமினியமும், உருட்டப்பெற்ற அலுமினியமும் உற்பத்தி செய்யப்படும்; சோவியத் உதவியுடன் இங்கு அலுமினிய ஆலை நிர்மாணிக்கப் பெற்று வருகிறது.

ஒரு திட்ட நிலையத்தின் பொருளாதார முக்கியத்துவம் எப்போதும் அதனுடைய பரிமாணத்தின் விதாசாரத்தில் இருப்பதில்லை. இந்தியாவிலுள்ள பிலாய் ஆலை, அல்லது எகிப்தி லுள்ள அஸ்வான் அணைத்தொகுப்பு போன்ற பிரமாண்டமான திட்டநிலையங்களுடன் கூடவே சோவியத் யூனியன், வளர்முக நாடுகளுக்கு சிறிய, ஆனால் பொருளாதார ரீதியில் மிக முக்கியமான நிறுவனங்களைக் கட்டுவதற்கும் உதவி அளித்து வருகிறது.

உதாரணமாக, ஆண்டுக்கு 3 60,000 டயர்களை உற்பத்தி செய்யும் ஓர் ஆலையைக் கட்டுவதற்கு சோவியத் யூனியன் ஸ்ரீலங்கா குடியரசுக்கு உதவி அளித்துள்ளது, இவ்வாறு அந்த நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது. இந்த ஆலையை நிர்மாணிப்பதற்கு முன்னர், உலகின் நான்காவது மிகப் பெரிய இயற்கை-ரப்பர் உற்பத்தியாளராகிய இந்தக் குடியரசு, ரப்பர் பொருட்களை வாங்குவதற்குப் பெருமளவில் கடின செலாவணித் தொகைகளைச் செலவிட வேண்டியிருந்தது,

டப்பாக்களில் பதனம் செய்து அடைக்கும் பண்டங்களைத் தயாரிக்கும் ஆலைகள், பால்பண்ட உற்பத்தி ஆலைகள், நெசவு நூற்பு ஆலைகள் ஆகியவற்றை கினி, சூடான், சோமலியா மற்றும் பிற வளர்முக நாடுகளில் கட்டியமைப்பதற்கு சோவியத் யூனியன் உதவியுள்ளது; இவ்வாறு விவசாயப் பொருள்கள் ஸ்தலத்திலேயே பதனம் செய்வதற்கும், மக்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பளிப்பதற்கும், உணவு மற்றும் பயனீட்டுப் பண்டங்களின் இறக்குமதிகளைக் குறைப்பதற்குமான சாத்தியப்பாடுகளை வழங்கியுள்ளது.

கடந்த காலத்தில் மிகப் பல வளர்முக நாடுகள், தம்மிடம் எவ்வளவு இயற்கைவளங்கள் உள்ளன என்பது கூடத் தெரியாமலிருந்தன. இவ்வாறுதான், மேலைய நிபுணர்கள், இந்தியாவில் குறிப்பிடத்தக்க அளவு எண்ணெய்ப் படிவங்கள் ஒன்றும் கிடையாது என்று பல ஆண்டுகளாக சாதித்து வந்தனர். அதன் மூலம் நாட்டை எண்ணெயையும், எண்ணெய்ப் பொருட்களையும் என்றென்றைக்கும் இறக்குமதி செய்யும் கதிக்கு உள்ளாக்கியிருந்தனர். ஆனால் சோவியத் பூகர்ப்பவியலாளர்கள், இந்தியாவில் லாபகரமான 26 எண்ணெய்ப் படிவங்களைக் கண்டு பிடித்தனர்; இன்று சுமார் 20 நாடுகளில் அவர்கள் எண்ணெய் வளத் தேட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானத்திலும் பாகிஸ்தானிலும் அவர்கள் எரிவாயுவைக் கண்டுபிடித்துள்ளனர்; இராக்கில் கந்தகமும் பாஸ்வரம் மூலங்களையும் கண்டு பிடித்துள்ளனர். அல்ஜீரியாவில் பாதரசம், பாறைட் கனிப்பொருள், இரும்பல்லாத உலோகங்களையும், எகிப்திய அரபுக் குடியரசிலும் சிரியாவிலும் எண்ணெயையும், மாலியில் சிமிட்டிக்கான மூலப்பொருளையும் கண்டுபிடித்துள்ளனர்.

1955 க்கும் 1972க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் வளர்முக நாடுகளில் இந்த நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையேயான ஒப்பந்தங்கள், உடன்பாடுகளுக்கு ஏற்ப, 80 000 சோவியத் தனித்தேர்ச்சியாளர்கள் பணியாற்றியுள்ளனர். அவர்கள் ஸ்தல நிபுணர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு வேலை செய்தனர், தமது ஞானத்தையும் அனுபவத்தையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். அண்மை ஆண்டுகளில் வளர்முக நாடுகளின் நிர்மாணத் தலங்களில 2,50,000 நுட்பத்தொழிலாளர்களையும், தொழில் நிபுணர்களையும் சோவியத் தனித்தேர்ச்சியாளர்கள் பயிற்றுவித்துள்ளனர். பல ஆயிரக்கணக்கானவர்கள் சோவியத் யூனியனில் உற்பத்தித் துறையில் பயிற்சி பெற்றனர். பல நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தனித்தேர்ச்சியாளர்கள் சோவியத் உயர்கல்வி நிலையங்களில் பொறியாளர்கள், மருத்துவர்கள், விவசாய விஞ்ஞானிகள், போன்ற இத்தியாதி தகுதிகளைப் பெற்றுள்ளனர்.

120 க்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதில் சோவியத் யூனியன் வளர்முக நாடுகளுக்கு உதவியளித்து வருகிறது; இவற்றில் 80 ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. பின்வருவன அவற்றில் உட்படும்: ஆப்கானிஸ்தானத்திலுள்ள பாலி-டெக்னிகல் கல்லூரி, கம்போடியாவிலுள்ள உயர் தொழில் நுட்பவியல் கல்லூரி, கினியிலுள்ள பாலிடெக்னிகல் கல்லூரி, அல்ஜீரியாவிலுள்ள எண்ணெய், எரிவாயுக் கழகம், எகிப்திய அரபுக் குடியரசு, இராக், இரான், ஏமன் ஆகிய நாடுகளிலுள்ள கல்வி நிலையங்கள்.

தமது பொருளாதார சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொள்ள வளர்முக நாடுகளுக்கு சோவியத் யூனியன் தொடர்ந்து உதவி அளித்துவரும்.

பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்த நாடுகளுடனான வர்த்தகம், சமீப ஆண்டுகளில் தொழில்துறையில் முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளுடனான சோவியத் வர்த்தக, பொருளாதார உறவுகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சர்வதேச பதட்டநிலை குறிப்பாக ஐரோப்பாவில் தளர்ச்சியடைந்திருப்பதானது மேலை ஐரோப்பாவின் நாடுகளுடனான சோவியத் யூனியனின் வர்த்தக, பொருளாதார பந்தங்கள் வளர்ச்சியடைவதற்குப் பெருமளவு உதவியுள்ளது. கடந்த எட்டு ஆண்டுகளில் இந்த நாடுகளுடனான வர்த்தகப் பரிமாற்றம் இரட்டிப்பாகியுள்ளது. ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளுடனான சோவியத் யூனியனின் தற்கால வர்த்தக உறவுகளின் மிகவும் பிரத்தியேகமான இயல்பு, அவற்றுக்கிடையே செய்து கொள்ளப்படும் வர்த்தக உடன்பாடுகளின் நீண்டகாலத் தன்மையாகும். உதாரணமாக, பின்லந்து, பிரான்ஸ், ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் சோவியத் யூனியன் பத்தாண்டு காலத்திற்குரிய பொருளாதார, தொழில் நுட்பவியல், தொழில்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது.

சோவியத் யூனியனின் மேலை ஐரோப்பிய வர்த்தகப் பங்காளிகளில் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு தற்போது முதலிடம் வகிக்கிறது. 1972ல் இந்த இரு நாடுகளிடையேயான வர்த்தகப் பரிமாற்றம் 82·8 கோடி ரூபிள்களாக இருந்தது. இது சோஷலிச நாடுகளுக்கும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்குமிடையேயான அரசியல் உறவுகள் அபிவிருத்தி அடைந்திருப்பதின் பிரதிபலிப்பேயாகும். சோவியத்-பிரெஞ்சு ஒத்துழைப்பும் நன்கு வளர்ச்சியுற்று வருகிறது. 1965-72 காலகட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் 170 சதவீதம் அதிகரித்தது.

பின்லாந்து சோவியத் யூனியனுடன் தொடர்ந்து ஒரு பிரதான வர்த்தகப் பங்காளியாக இருந்து வருகிறது. இந்த நாட்டுடனான

வர்த்தகப் பரிமாற்றம் 1972ல் 60·2 கோடி ரூபிள்களை எட்டியது. இதன் மூலம் சோவியத் யூனியனின் மேற்கு ஐரோப்பிய வர்த்தகப் பங்காளிகளில் பின்லாந்து இரண்டாவது இடத்தைப் பெற்றது.

சோவியத்-பிரிட்டிஷ் வர்த்தகம் 55·8 கோடி ரூபிள் அளவில் உள்ளது; இத்தாலியுடனான வர்த்தகம் 46·6 கோடி ரூபிள் அளவிலும், ஹாலந்துடனான வர்த்தகம் 22·2 கோடி ரூபிள் அளவிலும், ஸ்வீடனுடன் 18·9 கோடி ரூபிள் அளவிலும், ஆஸ்திரியாவுடன் 16·4 கோடி ரூபிள் அளவிலும் உள்ளது.

1973 பிப்ரவரி இறுதியில் நடைபெற்ற பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஒத்துழைப்புக்கான சோவியத்-இத்தாலியக் கூட்டுக் கமிஷனின் முறையான கூட்டம், அடுத்த பத்தாண்டுகளுக்குப் பொருளாதார, தொழில் நுட்பவியல், தொழிற்துறை வளர்ச்சி குறித்த ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வது சம்பந்தமாக வெகு அண்மை எதிர்காலத்தில் பேச்சு வார்த்தைகள் நடத்துவதென்ற ஒரு முடிவை அங்கீகரித்தது.

இயற்கை வாயு சப்ளைக்காக சோவியத் யூனியனுக்கும் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள் மகத்தான முக்கியத்துவம் உடையவை. 1973-74 காலகட்டத்தில் சோவியத் வாயு 5,000 கிலோ மீட்டர் நீள ட்ரான்ஸ்யூரோப்பியன் குழாய்ப் பாதை வழியாக ஆஸ்திரியா, இத்தாலி, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு சப்ளை செய்யப்படும். பின்லாந்துக்கான ஒரு குழாய்ப் பாதை நிர்மாணமும் நடைபெற்று வருகிறது. 1975 உடன் தொடங்கி இந்தக் குழாய்ப் பாதை வழியாக சப்ளை செய்யப்படும் இயற்கை வாயு இந்த எரிபொருளுக்கும் மதிப்புமிக்க ரசாயன கச்சாப் பொருளுக்குமான பின்லாந்தின் பிரதான தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

முதலாளித்துவ நாடுகளுடனான சோவியத் யூனியனின் அயல் வர்த்தகப் பரிமாற்றத்தில் ஜப்பான் ஒரு பிரதான இடத்தை வகிக்கிறது. 1972ல் இந்த வர்த்தகத்தின் மதிப்பு 80 கோடி ரூபிள்களை விஞ்சியது; இது மேலும் வளர்ச்சியுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொலைக் கிழக்கில் வெட்டுமர ஆதாரங்களை அபிவிருத்தி செய்வதற்கு உபயோகப்படுத்துவதற்கான சாதனங்களை ஜப்பானிடமிருந்து பெறுவதற்கு அதனுடன் சோவியத் யூனியன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதற்கு மாற்றாக ஜப்பான், சோவியத் யூனியனிடமிருந்து வெட்டு மரத்தையும் பிற பண்டங்களையும் பெற்றுக் கொள்ளும். ரேங்கல் வளைகுடாவில் ஒரு துறைமுகத்தைக் கட்டியமைப்பதில் ஒத்துழைப்புக்கு வகை செய்யும் சோவியத்-ஜப்பானிய ஒப்பந்தம் ஒன்றும் கையெழுத்திடப் பெற்றுள்ளது.

1972ல, மிகப் பல ஆண்டுகளுக்குப் பின்னர், சோவியத்-அமெரிக்க வர்த்தகம் ஏறுமுகமாக இருந்தது. 53·8 கோடி ரூபிள்கள் என்ற குறிப்பிடத்தக்க தொகையை எட்டியது. இரு நாடுகளின் பொருளாதார சக்தியையும், செல்வாதாரங்களையும் கவனத்தில் கொள்ளும்போது, இந்தத் தொகை பெருமளவு அதிகரிக்கப்பட முடியும் என்று நிச்சயமாகக் கருதலாம்.

1972 மே மாதத்தில் நடைபெற்ற சோவியத்-அமெரிக்க உச்சநிலைப் பேச்சுகளின்போது ஏற்கப்பட்ட தஸ்தவேஜுகள் இரு நாடுகளிடையே பொருளாதாரப் பிணைப்புகளை அபிவிருத்தி செய்வதில் தீவிர மேம்பாட்டுக்கான சாத்தியப்பாடுகளை உருவாக்கியுள்ளன. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பரஸ்பர அனுகூலம், சமத்துவம் என்ற கோட்பாடுகளின் மீது நிலையான நீண்டகால உறவுகளை அமைத்துக் கொள்வதற்கான சர்வதேச சட்ட அடிப்படையை வழங்குகின்றன.

1972 அக்டோபரில், சோவியத்-அமெரிக்க பொருளாதார உறவுகளை ஒரு சீரான வர்த்தக அடிப்படையில் அமைக்கும் பல ஒப்பந்தங்கள் வாஷிங்டனில் கையொப்பமிடப் பெற்றன. அனுகூலமான நிலைமைகள் தொடர்ந்து இருக்கும் பட்சத்தில் சோவியத்-அமெரிக்க வர்த்தகத்தின் பரிமாணத்தை அடுத்த சில ஆண்டுகளில் மூன்று மடங்காக்க முடியும், என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1971-75 காலகட்டத்தில் சோவியத் அயல் வர்த்தகத்தின் பரிமாணம் 33-35 சதவிகிதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனோடுகூட, சோவியத் ஏற்றுமதிகளின் கட்டமைப்பில் மேலும் ஆக்கமான மாற்றங்கள் ஏற்படும். செய்பொருள்களின் வீதாசாரம் அதிகரிக்கும். இது, முதலாவதாக, இயந்திரங்கள், சாதனங்களைக் குறிப்பிடுவதாகும் இவை இன்று, சோவியத் ஏற்றுமதிகளில் ஏற்கனவே 24 சதவீதமாக இருக்கின்றன. ''சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்டவை'' என்ற குறிப்புடன் கூடிய இயந்திரக் கருவிகள், வார்ப்பட-அழுத்த சாதனம், இருப்பு, உருக்குத் தொழிற்துறை மற்றும் இரசாயனத் தொழில் துறைக்கு வேண்டிய இயந்திரங்கள், கார்கள், விமானங்கள், கப்பல்கள் ஆகியவை உலகெங்கும் மேலும் மேலும் அதிகப் பாராட்டுதலைப் பெற்று வருகின்றன. ஒன்பதாவது ஐந்தாண்டு காலகட்டத்தினுள் இந்தப் பொருள்களின் ஏற்றுமதி வளர்ச்சி வீதம் சோவியத் ஏற்றுமதிகள் முழுமையின் வளர்ச்சி வீதத்தை விஞ்சும். அதே சமயத்தில் இறக்குமதிகளுக்கான விலையை செலுத்துவதில் சோவியத் யூனியன் ஓரளவு-முழுமை பெற்ற பண்டங்களையும், கச்சாப் பொருட்களையும் தொடர்ந்து ஏற்றுமதி செய்துவரும்.

இயந்திரங்கள், சாதனங்களில் தேசப் பொருளாதாரத்தின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு சோவியத் தொழில் துறை, நடைமுறையில் வல்லதாயிருக்கிறது. ஆனால் சோவியத் கொள்கை சர்வதேச உழைப்புப் பிரிவினையிலிருந்து தோன்றும் அனுகூலங்களை வளர்ப்பதாகும். எனவே, அது சில வகை சாதனங்களையும், இயந்திரக் கருவிகளையும் லைசென்சுகளையும் தொடர்ந்து இறக்குமதி செய்துவரும். ஏனெனில் பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் இது மிகவும் காலோசிதமானதாகும். 24 ஆவது கட்சிக் காங்கிரஸ் பணித்த பிரதான பொருளாதாரக் கடமையை நிறைவேற்றுவதற்கு—அதாவது சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேலும் உயர்த்துவதற்கு இந்த இறக்குமதிகள் உதவும். இதே காரணத்திற்காக, சோவியத் யூனியன் தயார்-நிலை பயனீட்டுப் பண்டங்கள் தமது செய்பொருள்களுக்கான கச்சாப் பொருட்கள் ஆகியவற்றையும் இறக்குமதி செய்து வருகிறது. 1972ல் சோவியத் இறக்குமதிகளில் இந்தப் பண்டங்களின் வீதாசாரம் 40 சதவீதத்திற்கும் அதிகமாகும். 1973ல் அதே மட்டத்தில் அது இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பிட்ட நாடுகளை மட்டுமே கொண்ட வர்த்தக அணிகள் அல்லது சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ளும் நடைமுறையை சோவியத் யூனியன் எதிர்க்கிறது. பணக்கசப்பு உண்டுபண்ணும் பாரபட்சம் காட்டப்படாத பலதரப்பு பொருளாதார உறவுகளை வளர்க்க வேண்டுமென்று சோவியத் யூனியன் பாடுபடுகிறது.

# மக்களின் நல்வாழ்வு

*மக்களின் நல்வாழ்வைப் பராமரிப்பது சோவியத் அரசின் முக்கியமான பணிகள் கடமைகளில் ஒன்ருகும்*

**சோவியத் பொது சுகாதார அமைப்பு.** ஆரோக்கியப் பாதுகாப்பு சம்பந்தமான குடிமக்களின் உரிமைகள் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் சட்டத்திலும், 1969 டிசம்பரில் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்திஞல் ஏற்கப்பட்ட, மக்களின் நல்வாழ்வு குறித்த சோவியத் ஒன்றிய, மற்றும் யூனியன் குடியரசுகளின் சட்டத்தின் அடிப்படைகளிலும் வரையறுக்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படைகள் இவ்வாறு கூறுகின்றன: ''மக்களின் நல்வாழ்வு குறித்த சோவியத ஒன்றியம், மற்றும் யூனியன் குடியரசுகளின் சட்டமானது, மக்களின் நல்வாழ்வுத் துறையில் சமூக உறவுகளை முறைப்படுத்துகிறது. குடிமக்களின் உடல் வலிமையும் அறிவாற்றலும் இசைவிணக்கமாக அபிவிருத்தி அடைவதை ஊக்குவிப்பதும், அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதும், அவர்களின் உழைக்கும் திறனை உயர்வான மட்டத்தில் நிலைநிறுத்துவதும், அவர்கள் நீண்டகாலம், செயலூக்கமான வாழ்வு வாழச் செய்வதும், நோயைத் தவிர்ப்பதும், நோய் விகிதத்தைக் குறைப்பதும்; இயலாமை ஏற்படுவதையும் மரணவிகிதத்தையும் மேலும் குறைப்பதும், குடிமக்களின் நல்வாழ்வுக்குத் தீங்கான அம்சங்களையும் நிலைமைகளையும் அகற்றுவதுமே இதன் நோக்கம்.''

இந்த அடிப்படைகள் சோவியத் பொது சுகாதார அமைப்பின் சகல அம்சங்களையும் தொகுத்து அவற்றுக்கு சட்ட வடிவம் கொடுக்கின்றன. அவை ஒரு சமூக, பொருளாதார, மருத்துவ, அரசு, மற்றும் பொது நடவடிக்கைகளின் ஒரு தொகுப்பாகும். அவை மக்களுக்கு சாத்தியமான சிறந்த உழைப்பு நிலைமைகளையும் வேலை நிலைமைகளையும் அளிக்கின்றன.

**சோவியத் பொது சுகாதார அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள்:** அரசு அடிப்படையில் சுகாதார சேவைகளை ஒழுங்கமைத்தல்; எல்லோருக்கும் இலவச மருத்துவ வசதி; மத்தியத்துவப் படுத்திய வழிகாட்டுதல், திட்டமிடல், நிதி வசதி; மருத்துவ விஞ்ஞானத்தின் சாதனைகளை அதிக பட்சமாக நடைமுறையில் பிரயோகித்தல்; நோய் தடுப்பை வலியுறுத்தல், சுகாதாரப் பாதுகாப்புப் பணியில் சர்க்கார், வெகுஜன ஸ்தாபனங்கள், மற்றும் பொது மக்கள் செயலூக்கமாகப் பங்கெடுத்தல்.

சோவியத் பொது சுகாதார அமைப்பு சமுதாயம் முழுமையினுடைய, மற்றும் ஒவ்வொரு தனிநபருடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிறது, மேலும் மேம்பாடுகளுக்கு வகை செய்யும் முறையில் அது ஒழுங்கமைக்கப்படுகிறது.

பிரதானமாக சோவியத் யூனியனில் ஏற்கப்பட்டுள்ள முறைகளுக்கு இசைவான பொது சுகாதார ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளை உலக நல்வாழ்வு ஸ்தாபனம் (W. H. O) அரசாங்க பொது சுகாதார அமைப்பை ஒழுங்கமைக்கும் நாடுகளுக்குப் பரிந்துரைத்திருப்பது வியப்புக்குரியதல்ல.

சோவியத் யூனியனில் தனியார்-உடைமையிலுள்ள மருத்துவ மனைகளோ, மருத்துவப் பரிசோதனை சாலைகளோ இல்லை. ஆரோக்கியத்தைப் பாதுகாக்க அல்லது அதை மீண்டும் நிலை நிறுத்த அல்லது பலப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள சகல ஸ்தாபனங்களுக்கும் தேவையான நிதி வசதிகளை சர்க்கார் அளிக்கிறது: 1973ல் பொது சுகாதாரத்திற்கான அரசாங்க நிதி ஒதுக்கீடுகள் மொத்தம் 1,020 கோடி ரூபிள்களாகும். இது தவிர, பல்வேறு தொழில் நிலையங்களும், ஸ்தாபனங்களும் தமது ஊழியர்களுக்கான மருத்துவ, பொழுதுபோக்கு வசதிகளுக்கு நிதி உதவுகின்றன.

சோவியத் யூனியனில், அரசு, சராசரியாக, நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்தின் சுகாதார சேவைகளுக்கு ஆண்டுதோறும் 200 ரூபிள்களுக்கு மேல் செலவு செய்கிறது.

சகல சோவியத் பிரஜைகளுக்கும்-சாதாரண ஜலதோஷம் சம்பந்தமாகவாயினும் சரி அல்லது பிரபல தனித்தேர்ச்சியாளர்களால் செய்யப்படும் மிகவும் சிக்கலான அறுவை சிகிச்சை விலை உயர்ந்த, மற்றும் நவீன சாதனங்களுடன் கூடிய சிகிச்சை ஆயினும் சரி, இலவசமான, திறமான மருத்துவ உதவி சம அளவில் கிடைக்கிறது. இலவச மருத்துவ உதவியானது மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே சுயேச்சையான உறவுகளுக்கு வகை செய்கிறது, இவை பரஸ்பர நம்பிக்கை, மரியாதை, மெய்யான மனித நேயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

பொது மருத்துவ சேவை. ஒவ்வொரு நபரும், முதலாவதாக, அவரது ஸ்தல நோய்த் தடுப்பு மருத்துவமனையில் தேவையான மருத்துவ உதவியைப் பெறலாம். சோவியத் யூனியனில் பல்வேறு வகையான 36,600க்கு மேற்பட்ட மருத்துவப் பரிசோதனை நிலையங்கள் உள்ளன. 1975ல் மேலும் 5௦0 பெரிய நிலையங்கள் திறக்கப்படவிருக்கின்றன.

பெரும் அளவான பரிசோதனை நிலையங்கள் (கிளினிக்குகள்) மருத்துவ பனைகளுடன் இணைக்கப் பெற்றுள்ளன; இவை பொதுவாக பிரதான மருத்துவத் தனித்தோர்ச்சகளுக்கான—அதாவது சிகிச்சை, அறுவை சிகிச்சை, பெண் நோய் மருத்துவக்கலை, நரம்பு வியல், காது, மூச்கு, தொண்டைக் கோளாறுகள், கண் வியாதிகள். வாய் நோய் மருத்துவ இயல் முதலியவற்றிற்கு—தனிப் பிரிவுகள் உள்ளன; மேலும் நோயை ஆராய்ந்தறிவதற்கும், சிகிச்சைக்குமான பல்வேறு அறைகளும், சோதனைக் கூடங்களும் உள்ளன. அவை மக்களிடையே தடுப்புச் சோதனைகளையும் நடத்துகின்றன, இதனால் நோய்களை அவற்றின் ஆரம்ப கட்டங்களிலேயே கண்டறிய முடியலாம். ஒவ்வொரு கிளினிக்கும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குப் பொறுப்பு எடுத்துக் கொள்கின்றன, இந்த ஒவ்வொரு பிரதேசமும் பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. பகுதியின் டாக்டர் நோயாளிகளுக்கு கிளினிககில் சிகிச்சை அளிக்கிறார், வீடுகளுக்கும் செல்கிறார் தேவைப்பட்டால் அவர், நோயாளிகளைப் பிற தனித்தேர்ச்சியாளர்களிடம் அனுப்புகிறார், அவர்களை ஆய்வுக்கோ அல்லது மருத்துவ பனையில் சிகிச்சை பெறுவதற்கோ அனுப்புகிறார். (நோயாளிகள் தனித்தேர்ச்சியாளர்களை நேரடியாகவும அணுகி ஆலோசனை பெறலாம்) நோய்த் தடுப்புக் காரியங்களுக்காக பகுதி டாக்டர் தன்னிடம் வரும் நோயாளிகளின் வாழ்க்கை மற்றும் வேலை நிலைமைகளை ஆய்வு செய்கிறார்.

கிளினிக்குகளின் அலுவலர்கள் இரு 'ஷிப்டு'களில் வேலை செய்கின்றனர், டாக்டர்கள் காலையிலும் மாலையிலும் மாறி மாறிப் பணியாற்றுகின்றனர். ஒரு டாக்டர் ஒரு நாளில் ஆறு மணி நேரம் வேலை செய்கிறார்.

மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுதல். விசேஷ சிகிச்சைக்கென 27,00,000க்கு மேற்பட்ட மருத்துவமனைப் படுக்கைகள் உள்ளன. 1940ல் மக்களின் 10 000 பேருக்கு மருத்துவமனைப் படுக்கைகள் 40 மட்டுமே இருந்தன. ஆனால் இன்று அவை 112 ஆகும், இது, அமெரிக்கா உள்ளிட்ட மிகவும் முன்னேறிய நாடுகளில் உள்ளதைக் காட்டிலும் அதிகமாகும்.

1975க்குள் சோவியத் மருத்துவமனைகளில் படுக்கை வசதி 30 லட்சத்தை, அல்லது 10,000 மக்களுக்கு 117 படுக்கைகள் என்ற வீதத்தை எட்டும்.

அண்மை ஆண்டுகளில், நகரங்களில் 1 000மும் அதற்கும் மேற்பட்ட படுக்கைகள், கிராமப்புறத்தில் 300-400 படுக்கைகள் கொண்ட பெரிய பொது மருத்துவமனைகளைக் கட்டும் போக்கு சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ளது. இது, விசேஷ மருத்துவ உதவியை ஒழுங்கமைப்பதை மேம்படுத்துவதற்கும் நோய்களைத் தடுப்பதிலும், சிகிச்சை அளிப்பதிலும் மேலும் சிறந்த பலன்களை அடைவதற்கும் உதவும்.

முதல் உதவி. அவசரத் தேவை சேவையும், விசேஷ முதல்-உதவி சேவைப் பிரிவும் இரவு பகலாகப் பணியாற்றுகின்றன. சமீப காலம் வரையிலும முதல்-உதவி நிலையங்கள் பொதுவாக சுயேச்சையாகச் செயல்பட்டன. எனினும், மருத்துவ மனைகளுடன் இணைந்த முதல் உதவி நிலையங்கள் தாம் கூடுதல் சிறந்த முறையில் செயல்படுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது, அங்கு திறமான முதல்-உதவி அளிக்கப்பட முடியும், அவற்றில் அவசர அறுவை சிகிச்சை, நோய்-சிகிச்சை முதலியவற்றில் பெருமளவு அனுபவம் அடையப் பெற்றுள்ளது. இது முதல்-உதவி அலுவலர்கள், தமது தேர்ச்சி நுட்பத்தை இடையறாது மேம்படுத்துவதற்கு உதவுகிறது, முதல்-உதவி மட்டத்திற்கும் தகுதி வாய்ந்த மருத்துவமனை சிகிச்சைக்கும் இடையேயான இடைவெளியை நிரப்புகிறது.

பிராந்திய மையங்களில் விமானங்களையும், ஹெலிகாப்டர்களையும் கொண்ட ஆம்புலன்ஸ் நிலையங்கள் தொலைதூரப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு அவசர உதவி அளிக்கின்றன ஒவ்வோர் ஆண்டும் இந்த ஆம்புலன்ஸ் விமானங்கள் சுமார் 1,00,000 தடவை பறந்து சென்று உதவி வழங்குகின்றன.

மாதர்களுக்கும் குழந்தைகளுக்கும் மருத்துவ உதவி. இந் நாட்டில் 21,000க்கு அதிகமான மாதர் ஆலோசனை மையங்களும் குழந்தைகள்-கிளினிக்குகளும் உள்ளன. மாதர் ஆலோசனை மையங்களிலுள்ள அலுவலர்கள் குழந்தை பிறப்புக்கு முன்பும், பின்புமான தாய்மார்கள் பராமரிப்பு, பெண்களின் வியாதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்து கின்றனர். தம்மிடம் வரும் நோயாளிகளின் வேலை நிலைமைகளையும் அவர்கள் கண்காணிக்கின்றனர்.

நாட்டின் பேறுகால இல்லங்களிலும் கிராமப்புற மருத்துவ மனைகளிலும் சுமார் 2,23,000 படுக்கைகள் உள்ளன; இவை குழந்தை பிறப்பு சம்பந்தமான தேவைகளைப் பூரணமாக கவனிக் கின்றன.

குழந்தைகளுக்கான தடுப்புப் பரிசோதனைகள், சிகிச்சை முதலியவற்றுக்கு விசேஷ கிளினிக்குகளும், மருத்துவமனைகளும் சுகவாசஸ்தலங்களும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளன. நீண்ட

கால சிகிச்சை தேவைப்படும் சிறுவர், சிறுமிகள், குழந்தைகளுக்கான மருத்துவ மனைகளில் விசேஷப் பிரிவுகளில் வைக்கப்படுகின்றனர். தற்போது நாட்டில், குழந்தைகளுக்காக மருத்துவமனைகளில் 4,60,000 படுக்கைகள் உள்ளன. குழந்தை மரண விகிதம் 1913 ஆம் வருடத்திய புள்ளிவிவரத்தைக் காட்டிலும் 90 சதவீதம் குறைவு.

தொழில் நிலையங்களில் மருத்துவ உதவி: ஆலைகளிலும் தொழில் நிலையங்களிலும் மருத்துவ பிரிவுகளோ அல்லது மருத்துவ நிலையங்களோ உள்ளன. இவற்றின் அலுவலர்கள் உற்பத்தி செய்யுமிடங்களிலுள்ள சுகாதார நிலைமைகளைக் கண்காணிக்கிறார்கள்; ஊழியர்களின் வேலை நிலைமைகளையும், வாழ்க்கை நிலைமைகளையும் ஆராய்கிறார்கள், யாருக்கு சுகவாசஸ்தல சிகிச்சை அவசியமாக உள்ளது, விசேஷ உணவு அல்லது கூடுதல் ஓய்வு தேவையாக உள்ளது என்பதைக் கண்டறிகின்றனர். பெரிய ஆலையின் மருத்துவப் பிரிவுகள் ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் சிகிச்சையும் ஆரோக்கிய சேவைகளையும் அளிக்கின்றன. ஒரு வைத்தியப் பிரிவில் பொதுவாக, முறையான கிளினிக்கையும், மருத்துவமனையையும் தவிர இரவு தங்குவதற்கான சுகவாசஸ்தலமும் ஆலையைச் சுற்றியுள்ள பகுதியிலோ, அல்லது அக்கம் பக்கத்திலோ அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தொழிலாளிகளுக்கு அவசியமான சிகிச்சை, டாக்டர் ஆலோசனையின் படியான உணவு, அடுத்த வேலைநாளுக்கு முன்னதாக நல்ல ஓய்வு முதலியன கிடைக்கின்றன.

அவசியமேற்படும் போது தொழில் நிலயத்தின் டாக்டர்கள் ஊழியர்களின் வீடுகளுக்கு விஜயம் செய்கின்றனர். ஒவ்வொரு 2,000 தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலைக்குள்ளேயே டாக்டர் ஒருவர் இருக்கிறார்; ரசாயன, சுரங்க எண்ணெய் சுத்திகரிப்புத் தொழில்களில் 1,000 தொழிலாளர்களுக்கு ஒரு டாக்டர் வீதம் இருக்கிறார். ஆலைக்குள் இருக்கும் டாக்டரின் பணி நோய்த் தடுப்பை வலியுறுத்துவதாகும்.

நோய்த் தடுப்பும் பொது சுகாதாரமும்: நோய்களை முன் கூட்டியே தடுப்பது என்ற கோட்பாட்டை சோவியத் சுகாதார அமைப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது. கிளினிக்குகளுக்கு அடுத்தாற்போல் தனித்தேர்ச்சி மருந்தகங்கள் சோவியத் பொது சுகாதார அமைப்பில் மிக முக்கியமான இணைப்பு ஆகும். இவை காச நோய், கட்டிகள் வகைப்பட்ட நோய், மன-நரம்பியல், சருமம், மேகநோய்கள் மற்றும் பிற தனித் தேர்ச்சி மருந்தகங்கள் உள்ளிட்டவையாகும்.

தனித்தேர்ச்சி மருந்தக சேவைகள்—பொது மருத்துவ நிலையங்களாலும் இவை ஏற்பாடு செய்யப்படுகின்றன—சகல குழந்தைகள் மாணவர்கள், கர்ப்பமுற்றுள்ள பெண்கள், பாதகமான நிலை

மைகள் உள்ள தொழிற்சாலைகள், சிற்றுண்டிச்சாலைகள், பிற சேவைகள் முதலியவற்றில் பணியாற்றுவோர் உள்ளிட்ட கோடிக் கணக்கான ஆரோக்கியமான மக்களுக்கு சேவை செய்கின்றன. இது தவிர, மக்களில் பெரும்பான்மையோர் ஆண்டுக்குக் குறைந்த பட்சம் ஒரு தடவையாவது செய்யப்படும் கட்டாய ஒளி மூல மான சோதனைகள் போன்ற முறையான தடுப்பு சோதனைகளைச் செய்து கொள்ளுகின்றனர். இது, காசநோயை அல்லது நுரையீரல்களில் தீங்கான அன்னிய படிவங்கள் தோன்றியிருப்பதையும், நோய்த் தோன்றுவதற்கு இட்டுச் செல்லும் மிகச் சிறிய முறை கேடுகள் ஏற்பட்டிருப்பதையும் கூட ஆரம்பத்திலேயே கண்டு பிடிப்பதற்கு உதவுகிறது. கட்டிகள் மற்றும் பிற உபாதைகளை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவதற்காக எல்லா மாதர்களும் பெண் நோய் மருத்துவ இயல் நிபுணர் ஒருவரால் சோதனை செய்யப்படுவதற்காகப் பிராந்தியக் கிளினிக்குகளுக்கு முறையாக வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்; இது சிகிச்சையை அதிக பயனுள்ளதாக்குகிறது.

அளவுக்கு மீறிய ரத்த அழுத்தம், இருதயம் சம்பந்தமான நோய், மரபான சிறுநீரகக் கோளாறுகள் ஆகியவற்றினால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் சகல நோயாளிகளும் பதிவு செய்து கொள்ளப்பட்டு, முறையான கட்டாய சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

**சுற்றுப்புற சுகாதார தொற்று நோய்த் தடுப்பு சேவைகள்:** ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் ஒரு சுற்றுப்புற சுகாதார-தொற்று நோய்த் தடுப்பு நிலையம் உண்டு; இதற்கு விரிவான உரிமைகள் உண்டு. இத்தகைய நிலையங்களின் பிரதான பொறுப்பு சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்பாகும்.

சுற்றுப்புற சுகாதார சேவையின் கேந்திரமான கடமைகள் நகரமைப்புத் திட்ட மிடலில் உதவுவது, தொழிற்துறை, வர்த்தக, மற்றும் குழந்தை நிலையங்களை அமைக்கும் இடம் சம்பந்தமாக ஆலோசனை கொடுத்து உதவுவது, வீட்டிலும் வேலையின் போதும் உள்ள ஆரோக்கிய நிலைமைகளைக் கண்காணிப்பது, நகரங்களில் இரைச்சலைத் தணிக்க இயக்கம் நடத்துவது ஆகியவையாகும். கண்டிப்பான சுற்றுப்புற சுகாதாரச் சட்டம் பொருத்தமான மருத்துவ அதிகாரிகளால் கறாரான கட்டுப்பாடு ஆகியவற்றின் விளைவாக சுற்றுப்புறச் சூழலின் தூய்மை கெடும் பிரச்சினை—பிரதான சோவியத் நகரங்களிலும் கூட—சில மேலை நாடுகளில் உள்ளதைப் போன்று அவ்வளவு நெருக்கடியானதாக இல்லை.

தொற்றுநோய்த் தடுப்பு சேவையின் நோக்கம் தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதாகும். எந்தக் கிருமிகளினாலும்,

குறிப்பாக வைரஸ்களினால் ஏற்படும் தொற்றுநோயைத் தடுப்ப பதற்காக முனைப்பான, மற்றும் முறையான பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஒரு நோயின் விளை நிலங்களின் (பூச்சிகள் முட்டையிடும் இடங்கள்) மீது கூர்மையான கண் காணிப்பு செலுத்தும் அதே சமயத்தில் தொற்று நோய் இயலாளர்கள், மக்களுக்குக் குறிப்பிட்ட தடுப்பு ஊசி போடுவது உள்ளிட்ட விரிவான நடவடிக்கைத் திட்டத்தையும் செயலாக்கி வருகிறார்கள்.

**மருத்துவப் பயிற்சி:** உலகில் ஜனத்தொகையுடனான வீதா சாரத்தைக் கொண்டு பார்க்கும் போது சோவியத் யூனியனில் தான் மிக உயர்வான எண்ணிக்கையில் மருத்துவ அலுவலர்கள் உள்ளனர். 1972ல் அங்கு, எல்லாத் தனித்தேர்ச்சிகளையும் சார்ந்த 7,20,000க்கு மேற்பட்ட டாக்டர்கள் அல்லது 10,000 பேருக்கு 29 பேர் வீதம் இருந்தனர். சோவியத் டாக்டர்கள் உலக டாக்டர்களின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்குக்கு அதிகமாக உள்ளனர், ஐரோப்பாவிலுள்ள டாக்டர்களின் எண்ணிக்கையில் சுமார் பாதி அளவினராக உள்ளனர்.

சோவியத் யூனியனில் 90க்கு மேற்பட்ட உயர் மருத்துவப் பள்ளிகள் உள்ளன. உயர் மருத்துவக் கல்வியில் ஐந்தாண்டு பொதுப் பயிற்சி, ஒரு முக்கிய பிரிவில்: அறுவைச் சிகிச்சை, நோய்த்தடுப்பு சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், பெண்களுக் குரிய வியாதிகள் சிகிச்சை, குழந்தை நோய் மருத்துவ இயல் ஆகியவற்றில் ஒன்றில் ஓராண்டு தனித்தேர்ச்சி அடங்கும். பட்டப் பெற்ற டாக்டர்கள், அனுபவம் வாய்ந்த நிபுணர்களின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொண்டு தனித்தேர்ச்சியை மேற் கொள்கின்றனர். அப்போது, அந்த ஆண்டில், அவர்கள், பூரணத்துவம் வாய்ந்த ஒரு டாக்டருக்குரிய சம்பளம் பெறு கின்றனர்.

1971-75 காலகட்டத்தில் சுமார் 2,12,000 டாக்டர்களும், 18 000க்கு மேற்பட்ட மருந்தாக்கத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் களும் பயிற்றுவிக்கப்படுவார்கள்; இதன் பயனாக, தோராயமான டாக்டர்களின் எண்ணிக்கை 1975 முடிவில் 10,000 பேருக்கு 33 என்ற வீதாசாரத்தை அடையும். செகண்டரி மருத்துவப் பள்ளிகள் ஆண்டுதோறும் 1,00,000க்கு மேற்பட்ட தனித் தேர்ச்சியாளர்களைப் பயிற்றுவிக்கின்றன, தற்போது தனித் தேர்ச்சியாளர்களின் மொத்த எண்ணிக்கை 22,00,000ஐ விஞ்சுகிறது.

13 மறுபயிற்சிக் கல்லூரிகளும், மருத்துவக் கல்லூரிகளில் 17 மறுபயிற்சிப் பிரிவுகளும் உள்ளன; இங்கு டாக்டர்களும், மருந்

தாக்க நிபுணர்களும் தமது ஞானத்தை விருத்தி செய்து கொள்ள முடியும். ஒரு டாக்டரும் பிராந்தியக் கிளினிக்குகளிலும் பெரிய மருத்துவமனைகளிலும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை தனித் தேர்ச்சி பெறலாம், தனது தகுதிகளை மேம்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வோர் ஆண்டும் சுமார் 70,000 டாக்டர்கள் மறுபயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்கின்றனர்.

**மருத்துவ ஆராய்ச்சிகள்:** சோவியத் யூனியனில் மருத்துவ விஞ்ஞானத்திற்கு மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. 385 பெரிய ஆராய்ச்சி நிலையங்கள் - 278 ஆராய்ச்சிக் கழகங்களும், அனேகமாக எல்லா மருத்துவக் கல்லூரிகளும் உள்ளிட்டு - மருத்துவ விஞ்ஞானத்தின் பல்வேறு பிரச்சினைகளை ஆராய்கின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் பெரிய ஆராய்ச்சிக் கழகங்கள் குடல், இரைப்பை சார்ந்த நோய்கள், நுரையீரலுக்குரிய வியாதிகள், இன்புளுயன்சா, மாற்று உறுப்புகளையும் தசைகளையும் பொருத்துதல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆராய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன; மேலும் பிறப்பு மரபு ஆராய்ச்சி மருத்துவக் கழகம், மருந்து தயாரிப்புகளின் மீதான கட்டுப்பாடு செலுத்தும் கழகம், மற்றும் பல ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப் பட்டன. சோவியத் மருத்துவ விஞ்ஞானங்கள் பேரவையின் சைபீரியக் கிளை நிறுவப்பட்டது.

சோவியத் மருத்துவ விஞ்ஞானங்களின் பேரவையின் ஆராய்ச்சிக் கழகங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும் பெரும் தத்துவார்த்த மருத்துவப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றன. இந்தப் பேரவையில் நாட்டின் பிரதான மருத்துவ அறிஞர்கள் 266 பேர் உள்ளனர் - பேரவை அறிஞர்களும், பேரவையின் இணை உறுப்பினர்களும் ஆவர் இவர்கள். சோவியத் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகமும், சோவியத் மருத்துவ விஞ்ஞானப் பேரவையும் கேந்திரமான விஞ்ஞானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், பல்வேறு மருத்துவ நிலையங்களில் ஆராய்ச்சியை ஒருமுகப் படுத்துவதிலும் ஈடுபடுவது மட்டுமன்றி, புதிய பரிகாரங்களையும், சிகிச்சை முறைகளையும் சோதனை செய்வதற்கும், மருத்துவ நடைமுறையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பிரயோகப்படுத்துவதற்கும் பொறுப்பாக உள்ளன.

புதிய ஐந்தாண்டுக் காலகட்டத்தில் உயிரியலிலும், முதலாவதாக இருதய ரத்த நாளங்கள் சம்பந்தப்பட்ட நோய், வைரஸ் எனும் நுண்கிருமிகள், கட்டி வகை வியாதிகள் ஆகியவற்றைத் தடுப்பது, சிகிச்சை செய்வது, உழைப்பாளர் சுகாதாரம் உடற்கூறு ஆய்வு, ஆயுள்துறை, குழந்தைகள் மருத்துவம், மருத்துவத்தின் மரபு, நோய்களிலிருந்து காக்கும் துறை, உறுப்புகள் உறுப்பு மூலங்களை மாற்றி அமைத்தல், செயற்கை உறுப்புகள்

புதிய உடற்கூறு ஊக்குவிப்புத் தயாரிப்புகள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

அடுத்த சில ஆண்டுகளில் சோவியத் யூனியனில் ஏற்படுத்தப் படும் இருதய நோய் ஆராய்ச்சி, புற்றுநோய் ஆராய்ச்சி மையங்கள் இந்தத் துறைகளில் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும்.

மருந்துகளின் தரத்திற்கு உத்தரவாதம்: மோசமான, அல்லது தீங்கு விளைவிக்கும் மருந்துகளை விற்பனை செய்வது என்பது சோவியத் யூனியனில் நடைமுறையில் அசாத்தியமாகும்.

பல தனித்தேர்ச்சிக் கழகங்கள் புதிய மருந்துப் பொருள்களை யும், கிருமி நாசினி மருந்துகளையும் தயாரித்து வருகின்றன. ஒவ்வொரு புதிய பொருளையும் சோவியத் பொது சுகாதார அமைச்சகத்தின் புதிய மருந்துகள், மருத்துவ சாதனங்களின் அபிவிருத்திக்கான இலாகாவும், சோவியத் மருந்தியல் கமிட்டியும் ஆய்வு செய்கின்றன. இக்கமிட்டியில் பிரபல விஞ்ஞானிகளும் தனித் தேர்ச்சியாளர்களும் உள்ளனர். பின்னர் இந்த மருந்து உயர் தகுதி பெற்ற மருத்துவ நிறுவனங்களுக்கு சோதனைக்காக அனுப்பப்படுகின்றன. இந்த ஆய்வுகள் எல்லாம் வெற்றிகரமாக முடிவுற்றதற்குப் பின்னர்தான் ஒரு மருந்தானது சோவியத் அரசாங்க மருந்துப் பட்டியல் நூலில் சேர்க்கப்பட்டு, பொதுவான நடைமுறை உபயோகத்திற்குச் சிபாரிசு செய்யப்படுகிறது. ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டு வருகிற தயாரிப்புகளின் மீதான கட்டுப்பாட்டை ஒரு விசேஷ கட்டுப்பாட்டுக் கழகமும், மருந்துகளின் தரத்தைக் கட்டுப்பாடு செய்வதற்கான அரசு ஆய்வகமும் அமுல் செலுத்துகின்றன. வெளிநாட்டுத் தயாரிப்பு களும் இதே முறையில் சோதிக்கப்படுகின்றன.

சோவியத் யூனியனில் ஒரு மருந்தின் சராசரி விலை 30 - 40 கோபெக்குகளாகும். சகல மருந்துத் தயாரிப்புகளில் 50 சதவீதம், அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றன. மருத்துவ மனைகளில் தங்கி சிகிச்சை பெறும் சகல நோயாளிகளுக்கும், காச நோய், நீரழிவு, புற்றுநோய், வாதம், ரத்தம் சம்பந்தமான, மற்றும் வேறு சில நோய்களினால் அவதிப்படுகின்றவர்களுக்கும், மேலும் ஓராண்டுக்குக் குறைவான வயதுடைய குழந்தைகளுக்கும், போரினால் அங்கஹீனம் அடைந்தவர்களுக்கும் மருந்துகள் இலவச மாக வழங்கப்படுகின்றன.

சர்வதேசத் தொடர்புகள்: பொது சுகாதாரத்திலும், மருத்துவ விஞ்ஞானத்திலும் ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்து கொள் வதற்காக சோவியத் யூனியன் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது; உலக சுகாதார ஸ்தா பனத்தின் வேலைத் திட்டங்களில், குறிப்பாக, அம்மை நோயை ஒழித்துக் கட்டுவதற்காக சோவியத் யூனியனால் - முன்மொழியப்

பெற்ற உலகு - தழுவிய இயக்கத்தில் ஒரு முக்கிய பாத்திரம் வகிக்கிறது. உதாரணமாக, 1961—1972க்கு இடைப்பட்ட கால கட்டத்தில் சோவியத் யூனியன் இந்தியாவுக்கு, இலவசமாக, 100 கோடி 'டோஸ்'களுக்கு மேற்பட்ட அம்மை நோய்த் தடுப்பு மருந்தை வழங்கியுள்ளது. சோவியத் யூனியனிலிருந்து அனுப்பப் பட்ட 'போலியோ' (இளம்பிள்ளை வாத) தடுப்பு மருந்துகள் பல நாடுகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகளை இந்த வியாதியின்றும் காப்பாற்றியுள்ளன.

உலக சுகாதார ஸ்தாபனம் ஆதரவிலான சர்வதேசக் கருத் தரங்குகளும், மாநாடுகளும், பயிற்சித் திட்டங்களும் சோவியத் யூனியனில் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகின்றன. உலக சுகா தார ஸ்தாபனத்தின் ஏழு சர்வதேச தகவல் மையங்கள், ஐந்து பிராந்திய தகவல் மையங்கள் 13 (உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்புடன் கூடிய) தகவல் ஆய்வுக் கூடங்கள் சோவியத் யூனியனில் சோவியத் ஆராய்ச்சி, கல்வி நிலையங்களின் அடிப் படையில் நிறுவப்பட்டுள்ளன. உலக சுகாதார ஸ்தாபனத்தின் எண்ணற்ற விஞ்ஞான நிர்மாணத் திட்டங்களும் சோவியத் யூனியனில் செயலாக்கப்பட்டு வருகின்றன.

தமது பொது சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்து கொள்ளும் விஷயத்தில் பல நாடுகளுக்கு சோவியத் யூனியன் உதவுகிறது. சோவியத் உதவியுடன் பர்மா, கினி, கம்போடியா, இந்தோனேஷியா, ஈரான், நேப்பாளம், சோமாலியா, மற்றும் பிற நாடுகளில் மருத்துவ மனைகள் கட்டப்பெற்றுள்ளன. ஏமன் அரபுக் குடியரசு, கென்யாவில் கட்டப்பெற்றுள்ள மருத்துவ மனைகளும், காங்கோ மக்கள் குடியரசில் கட்டப்பெற்றுள்ள மகப் பேறு மனை ஆகியவை அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிர்மாணத் திட்டங்களாகும். கினியாவில் கோனுக்ரி என்ற இடத்தில் உள்ள பல்-தொழில் பயிற்சிக் கல்லூரியில் சோவியத் ஆசிரியர்களைக் கொண்ட ஒரு மருத்துவப் பிரிவு சோவியத் உதவியுடன் திறக்கப் பட்டுள்ளது. ஜாம்பியாவில் லூசாகா என்ற இடத்தில் ஒரு மருத்துவப் பிரிவும் நிறுவப்பட்டுள்ளது; தேசிய மருத்துவ அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கான மையங்களைக் கட்டுவதற்கும் பல நாடுகளுக்கு உதவி அளிக்கப்பெற்றுள்ளது. நூற்றுக்கு அதிக மான நாடுகளிலிருந்து 2,000க்கு மேற்பட்ட அன்னிய மாண வர்கள் சோவியத் மருத்துவக் கல்லூரிகளில் பயில்கின்றனர்.

இருபதுக்கும் அதிகமான வெளி நாடுகளில் சோவியத் டாக் டர்கள் வேலை செய்கின்றனர். வழக்கமான மருத்துவப் பயிற்சி யுடன் கூடவே, அவர்கள், தொற்று நோய்களை எதிர்த்துப் போராடவும், தேசிய மருத்துவ அலுவலர்களைப் பயிற்றுவிக்கவும், நவீன பொது சுகாதார சேவைகளை ஒழுங்கமைக்கவும் உதவு கின்றனர்.

# சமூகப் பாதுகாப்பு

> சோவியத் பிரஜைகளுக்கு வயதான காலத்திலும் நோயுற்ற காலத்திலும் அல்லது வேலை செய்ய ஏலாமற் போகும்போதும் பராமரிப்புப் பெறும் உரிமையை சோவியத் அரசியல் சட்டம் வழங்குகிறது;

சோவியத் யூனியனில் மிகவும் பயனுறுதியான, சர்வாம்ச அரசு சமூகப் பாதுகாப்பு அமைப்பு இருந்து வருகிறது; இது இடையறாது செம்மைப்படுத்தப்பட்டு வருகிறது. பென்ஷன் களும், அலவன்சுகளும் மீண்டும் மீண்டும் அதிகரிக்கப்படுவது, வயதானவர்களுக்கும் ஏலாதவர், மற்றும் அவர்களின் குடும்பங் களுக்கும் மேலும் அதிக அனுகூலங்கள் வழங்கப்படுவது ஆகியவை நாட்டின் பொருளாதார முன்னேற்றம், தேசிய வருமானத்தின் வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாகவே சாதனையாகி உள்ளன.

1966-70க்கு இடைப்பட்ட ஐந்து ஆண்டுகளில் உழைக்கும் மக்களின் பெரும் பகுதிகளுக்கு சமூகப் பராமரிப்பிலும், இன்சூரன்ஸிலும் பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

சமூகப் பராமரிப்புக்கும் இன்சூரன்சுக்குமான அரசு நிதி ஒதுக்கீடுகள் 1965ல் 1,440 கோடியிலிருந்து 1970ல் 2,210 கோடி ரூபிள்களுக்கு உயர்ந்தது. பென்ஷன் ஒதுக்கீடுகள் 1,060 கோடி ரூபிள்களிலிருந்து 1,600 கோடி ரூபிள்களுக்கு அதிகமாக உயர்ந்ததும் இதில் உட்படும்.

அதே சமயத்தில் உணவு, பயனீட்டுப் பண்டங்களின் விலை களும், கட்டணங்களும், வாடகைகளும் நிலையாக இருந்தன, அல்லது குறையவும் செய்தன.

சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு விரிவான வேலைத் திட்டத்தையும், அரசு பென்ஷன்கள், சமூக இன்சூரன்ஸ் அமைப்பை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான பல நடவடிக்கைகளையும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24 ஆவது காங்கிரஸ் வரையறுத்துக் கொடுத்தது.

குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு கூடுதல் பொருளாயத உதவி அளிக்கப்படும்; உழைக்கும் தாய்மார்களுக்கு வழங்கப்படும் அனுகூலங்கள் அதிகரிக்கப்படும்; நபருக்கு சராசரி மாதாந்திர வருமானம் 50 ரூபிள்களுக்கு அதிகப்படாத குடும்பங்களுக்கு குழந்தை - அலவன்சுகள் அமுலாக்கப்படும்; ஒரு நோயுற்ற குழந்தையை கவனிப்பதற்காக, சம்பளத்துடன் கூடிய லீவ் நாட்கள் அதிகரிக்கப்படும்; சகல உழைக்கும் மாதர்களும் பேறுகால விடுமுறையின்போது—அவர்களின் சர்வீசைப் பொருட்படுத்தாது—முழுச் சம்பளம் பெறுவார்கள். (இதுவரையிலும் இது, சர்வீசை அடிப்படையாகக் கொண்டிருந்தது, சம்பளத்தில் மூன்றில் இரு பங்கு குறைந்தபட்சத் தொகையாயிருந்தது.)

1971 மத்தியில் ஆலை, அலுவலக ஊழியர்களுக்குக் குறைந்த பட்ச மூப்புக்காலப் பென்ஷன்கள் 50 சதவீதம் அதிகரிக்கப் பட்டது. இதே சமயத்தில் கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கான பென்ஷன்கள் 66 சதவீதம் அதிகரித்தது; ஆலை, அலுவலக ஊழியர்களுக்கு அமுலாகும் அதே வகை பென்ஷன் திட்டம் இவர்கள் விஷயத்திலும் அமுலாயிற்று.

1973 முதல் 1974 வரையிலான காலகட்டத்தில் ஏலாமைக் காலப் பென்ஷன்கள் சராசரி 33 சதவீதம் உயர்த்தப்படும், சம்பாதிக்கும் தலைமகளை இழந்த குடும்பங்களுக்கான பென்ஷன்கள் சராசரியாக 20 சதவிகிதம் அதிகரிக்கப்படும்.

1973ல், அரசாங்கம் சமூக இன்ஷுரன்ஸுக்கும், பராமரிப்புக் கும் 2,740 கோடி ரூபிள்களை ஒதுக்கியது. இந்தத் தொகையில் 2,140 கோடி ரூபிள்கள் பென்ஷன்களுக்காகச் செலவிடப்பட்டது.

தொடர்ந்து வேலை செய்ய முடிகின்றவர்களுக்கு, வேலை செய்ய விரும்புகின்றவர்களுக்கு இன்னும் அதிக சாதகமான நிலைமைகளை உருவாக்குவதற்கும், ஊனமுற்றோருக்கும், வயதானவர்களுக்கும் அதிக வீடுகளைக் கட்டுவதற்கும், ஊனமுற்றோருக்குப் போக்குவரத்து வசதிகளும், எலும்புமுறிவு, ஊனமுற்ற உறுப்புகள் உள்ளவர்களுக்குத் தேவையான சாதனங்களை இன்னும் நல்ல முறையில் அளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

சோவியத் சமுதாயம், அதனுடைய வயதான, மற்றும் ஊனமடைந்த பிரஜைகளின் பொருளாயத, மற்றும் கலாசாரத்

தேவைகளை சாத்தியமான அளவு பூரணமாகத் திருப்தி செய்வதற்கு முயல்கிறது.

சோவியத் சமூகப் பராமரிப்பின் அடிப்படைக் கோட்பாடுகள். இவற்றை சுருக்கமாக இவ்வாறு வரையறுத்துக் கூறலாம்:

சமூகப் பாதுகாப்பு சகல சோவியத் பிரஜைகளுக்கும் அமுலாகிறது;

சமூகப் பாதுகாப்புக்கான செலவுகள் பூரணமாக அரசாங்க, மற்றும் கூட்டுறவு நிதிகளிலிருந்து வழங்கப்படுகிறது;

வயதான காலத்திலும், ஏலாமையின் போதும், இன்னும் பிற சந்தர்ப்பங்களிலும் பராமரிப்பு ஏற்பாடுகள் இன்ஷூரன்ஸ் நடைமுறையில் அடங்கியுள்ளன;

சம்பாதிக்கும் தலைமகனை இழந்த குடும்பங்களின் சமூகப் பராமரிப்பு;

ஏலாமற்போகும் சகல சந்தர்ப்பங்களிலும், மற்றும் மூப்புக் காலத்திலும் உயர் அளவு பராமரிப்பு, பொருளாயத, மற்றும் பிறவகை உதவிகளின் சீரான இணைப்பு, பல்வேறு சலுகைகள்;

எல்லாப் பிரஜைகளுக்கும் உத்தரவாதமான, இலவசமான, தகுதி வாய்ந்த மருத்துவ உதவியை அடிப்படையாகக் கொண்ட ஒரு விரிவான பொது சுகாதார அமைப்பு;

பொது மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் ஜனநாயக முறையில் நடத்தப்படும் சமூகப் பராமரிப்பு, இன்ஷூரன்ஸ் அமைப்பு, தொழிற்சங்கங்களின் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வகிக்கப்படுதல்:

தற்போது 4 கோடி 20 லட்சத்திற்கு மேற்பட்ட பென்ஷனர்கள் உள்ளனர், இவர்கள் அனைவரும் அரசாங்கத்தினுலோ, அல்லது கூட்டுப்பண்ணைகளினுலோ பராமரிக்கப்படுகின்றனர்.

தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்கள் கூட்டுப் பண்ணை விவசாயிகள்—ஆகிய அனைத்து உழைக்கும் மக்களிடமிருந்தும் சமூகப் பாதுகாப்பு நிதிகளுக்குக் கட்டணங்கள் ஏதும் பெறப்படுவதில்லை.

சோவியத் யூனியனில் சமூகப் பாதுகாப்பு சர்வாம்சத் தன்மை வாய்ந்தது, வயதான காலத்திலும், தற்காலிக அல்லது நிரந்தர ஏலாமையின்போதும், சம்பாதிக்கும் தலைமகனின் இழப்பின் போதும், பேறுகாலம், குழந்தை பிறப்பின்போதும் பொருளாயத உதவிக்கு வகை செய்யப்படுகிறது; பெரிய குடும்பங்களுக்கு உதவி வழங்கவும், ஆலோசனை கூறப்பட்ட உணவுகள், சுகவாசஸ்தலம், ஓய்வுவிடுதி சிகிச்சை, வேலை செய்ய விரும்பும் ஊன

மடைந்தவர்களுக்கு தொழிற்பயிற்சி, மறுபயிற்சி முதலியவற்றுக்கும் வகை செய்யப்படுகிறது.

பென்ஷன்களுக்கு வரி இல்லை.

மூப்புக்கால பென்ஷன் திட்டம். ஆண்கள் 25 ஆண்டுகள் வேலை செய்தபின் 60 ஆம் வயதிலும், பெண்கள் 20 ஆண்டுகள் வேலை செய்தபின் 55 ஆவது வயதிலும் பென்ஷன் பெறத் தகுதி உடையவர்கள் ஆகிறார்கள். வேலை கிடைக்கப் பெறுவது என்பது ஒரு பிரச்சினையே அல்ல, ஏனெனில் சோவியத் யூனியனில் வேலையில்லாத் திண்டாட்டம் பூரணமாக ஒழிக்கப்பட்டு விட்டது. ராணுவ சேவை, உயர்நிலை மற்றும் செகண்டரி பள்ளிகளில் கழிக்கப்பெற்ற காலம் (ராணுவ சேவையிலிருந்து விடுபட்டபின், என்பது போன்ற சில நிலைமைகளின்கீழ்), தொழிற்பயிற்சிப் பள்ளிகள், பல்வேறு வகைப்பட்ட படிப்புகள், மற்றும் பிறவகை செயல்பாடுகள்.

சோவியத் அரசு, தாய்மார்கள் விஷயத்தில் விசேஷப் பரிவு காட்டுகிறது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட எட்டு வயது வரை குழந்தைகளைப் பெற்று வளர்த்த பெண்கள் 15 ஆண்டுகள் வேலை செய்தபின் ஐம்பதாவது வயதில் பென்ஷன் பெறத் தகுதி உடையவர்களாவர்.

அதிகப்படியான பென்ஷன்கள், முன்கூட்டியே பென்ஷன் பெறும் தகுதி (45-55 ஆண்டுகள்), அல்லது தகுதி பெறும் சேவைக் காலம் (15-20 ஆண்டுகள்) போன்ற விசேஷப் பென்ஷன் சலுகைகள் பெறும் பல பிரிவு மக்கள் உள்ளனர். சுரங்கத் தொழில், ரசாயனம், உலோகவியல், வெட்டுமரத் தொழில்கள், ஆகியவற்றில் வேலை செய்வோர், போக்குவரத்து, கட்டிட நிர்மாணம், மற்றும் தேசப் பொருளாதாரத்தின் பிற கிளைகளில் வேலை செய்வோர் ஆகிய பல தொழிலாளர்களுக்கும் இது பொருந்தும். வயோதிக காலப் பென்ஷன்கள் ஒரு நபரின் சராசரி மாதாந்திர ஊதியத்தில் 50 அல்லது 75, அல்லது சிலர் விஷயத்தில் 100 சதவிகிதம் கூட ஆகும். சம்பளம் குறைவாயிருப்பதற்கு ஏற்ப, பென்ஷன் கணக்கிடுவதற்கு உயர்வான சதவிகிதம் பயன்படுத்தப்படுகிறது.

பென்ஷன்கள் வழங்கப்படும் நடைமுறை. உழைக்கும் மக்களது பிரதிநிதிகளின் மாவட்ட, நகர சோவியத்துகளின் நிர்வாகக் கமிட்டிகளால் ஏற்படுத்தப்படும் பென்ஷன் கமிஷன்கள் சம்பளம், ஊதியம் பெறுவோருக்குரிய பென்ஷன்களை நிர்ணயம் செய்கின்றன. இந்தக் கமிஷன்களில் அரசாங்க அமைப்புகள், மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

பென்ஷனுக்கான விண்ணப்பம் வேலை செய்யுமிடத்தில், நிர்வாகத்திடம் அளிக்கப்படுகிறது. தொழிற்சங்க ஸ்தாபனத்துடன் கூட்டாக, நிர்வாகம், தேவையான, தஸ்தவேஜுகளைத் தயாரித்து, தனது பரிந்துரையுடன், விண்ணப்பதாரர் குடியிருக்கும் மாவட்டத்திலுள்ள சமூகப் பாதுகாப்பு இலாகாவுக்கு அனுப்புகிறது. இவற்றை ஸ்தல பென்ஷன் கமிஷன் ஆய்வு செய்யும்.

ஏலாதவர் பராமரிப்பு. சோவியத் யூனியனில் ஏலாத காலத்திற்குரிய பென்ஷன்கள்—வயதைப் பொருட்படுத்தாமல்—வழங்கப்படுகின்றன. வேலை சம்பந்தமான காயம் அல்லது நோயின் காரணமாக, அல்லது அரசு அல்லது பொதுக் கடமைகள் அல்லது ஒருவரின் சமூகக் கடமை ஆற்றும்போது ஏற்பட்ட ஊனமாக இருந்தால், அவர் எவ்வளவு காலம் வேலை செய்திருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது பென்ஷன் வழங்கப்படுகிறது. இவ்வாறில்லையேல், பென்ஷன் தகுதி பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட—அது குறுகியதாயிருந்த போதிலும்—சேவைக் காலகட்டம் ஒன்று உண்டு.

ஏலாமையின் அளவைப் பொறுத்து, ஊனமுற்றோர் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளனர், இவை மருத்துவ-தொழிலாளர் - நிபுணர் கமிஷன்களினால் நிர்ணயிக்கப்படுகின்றன, இவற்றில் தகுதி வாய்ந்த டாக்டர்கள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், சமூகப் பாதுகாப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளனர்.

வேலை சம்பந்தமான காயம், அல்லது நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு அதிகப் பென்ஷன் பெறுவதற்கு உரிமையுண்டு. தவிரவும், குறிப்பிட்ட நிறுவனமோ, அல்லது தொழிற்சாலையோ மேற்படி காயம் அல்லது நோயிக்குப் பொறுப்பு உடையதென்றால், அது சட்டப்படி நஷ்டஈடு கொடுக்கவேண்டும், இதுவும் ஏலாமைக் கால பென்ஷனும் சேர்ந்து, காயமடைந்ததன் விளைவாய் இழக்கப்பட்ட சம்பளத்திற்கு சமமானதாய் இருக்கவேண்டும்.

யுத்தத்தில் ஊனமடைந்தோருக்கு அரசாங்கம் விசேஷப் பரிவு காட்டுகிறது. அவர்கள் ஐந்தாண்டுகள் முன்னதாகவே—ஆண்கள் 55 வயதிலும் பெண்கள் 50 வயதிலும்—மூப்புக்கால பென்ஷன் பெறுவதற்கு உரிமை பெறுகிறார்கள்.

தற்காலிக ஏலாமையைப் பொறுத்தமட்டிலும் போரினால் ஊனமுற்றவர்கள் வேலை செய்யும் போது அவர்கள் எவ்வளவு மணி நேரம் வேலை செய்த போதிலும் சரி, தங்கள் சம்பளத்தின் 100 சதவீத நோய்க்கால அனுகூலங்கள் பெறுவதற்கு உரிமை பெறுகிறார்கள். போரினால் ஊனமடைந்தோர் ஒரு நாளைக்குக் குறைந்த மணி நேரம் வேலை செய்தால் போதும்.

ஒரு மருத்துவ-தொழிலாளர் நிபுணர் கமிஷனின் பரிந்துரையின் பேரில், போரினுல் ஊனமுற்ற ஒரு நபருக்கு கையால் இயக்கப்படும் ஒரு காரும், மோட்டார் பொருத்தப் பெற்ற ஒரு சக்கர நாற்காலி அல்லது ஒரு சாதாரண சக்கர நாற்காலியும் இலவசமாக அளிக்கப்படுகிறது. போரினுல் ஊனமுற்ற ஒரு நபர், 'கராஜ்' ஆக உபயோகப்படுத்தும் இடத்திற்கு வாடகை கொடுக்க வேண்டியதில்லை. ஒவ்வோர் ஆண்டும் ஊனமுற்ற மக்களுக்கு அரசு 18,000க்கு மேற்பட்ட கைகளால் இயக்கப் பெறும் கார்களை இலவசமாக வழங்குகிறது.

முதற் பிரிவு, இரண்டாம் பிரிவு, சில மூன்றும் பிரிவு ஊனமுற்றோர் சகல வகைப்பட்ட நகர்ப்புற போக்குவரத்துகளிலும் (டாக்சிகளைத் தவிர) இலவசமாகவும், ரயில், மோட்டார் ரோடு, நீர்வழி அல்லது விமானப் போக்குவரத்துகளில் அரைக் கட்டணத்திலும் பிரயாணம் செய்யமுடியும்.

மேம்பட்ட வீட்டு வசதிக்கு முன்னுரிமை பெற்றுள்ள அதே சமயத்தில், போரினுல் ஊனமுற்றோரும், போரில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களும் தங்களுக்கென வீடு கட்டிக் கொள்வதற்கு முன்னுரிமை உதவி பெறுகின்றனர். அவர்களுக்கு அரசு, இந்தக் காரியத்திற்காக 1000 ரூபிள் வரைக்கும் வட்டியில்லாக் கடன்களை அளிக்கிறது, இவை, கடன் வாங்கப் பெற்ற மூன்றும் ஆண்டிலிருந்து பத்தாண்டு காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தமது வீடுகளில் அடிப்படையான பழுதுகள் பார்ப்பதற்கும் அவர்களுக்கு வட்டியில்லாக் கடன்கள் கிடைக்கின்றன.

கிராமப்புறத்தில் வாழும் போரினுல் ஊனமுற்ற முதற் பிரிவு, இரண்டாம் பிரிவு நபர்களும் அவர்களது குடும்பங்களும் தமது வீட்டு உபயோகத் துண்டு நிலங்களுக்கு விவசாய வரி கொடுப்பதினின்றும் பூரணமாகவோ அல்லது ஓரளவுக்கோ விலக்களிக்கப்படுகிருர்கள்.

போரினுல் ஊனமுற்றவர்களுக்கு சுகவாச ஸ்தலத்தில் தங்குவதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது; முதற் பிரிவு இரண்டாம் பிரிவு என்று வகைப்படுத்தப்பட்டவர்களுக்கு சுகவாச ஸ்தலத்திற்குச் சென்று, திரும்புவதற்குரிய கட்டணங்கள் முழுமையாக வழங்கப்படுகின்றன. சுகவாச ஸ்தல இடவசதியில் குறைந்தபட்சம் 10 சதவீதம், போரினுல் ஊனமுற்றோருக்கு ரிசர்வ் செய்யப்படுகிறது; அவர்களுக்கு ஊனமுற்ற கால்களுக்கான விசேஷ காலணிகள், மற்றும் தேவையான பிற சாதனங்கள், வேலை செய்வதற்கு உதவும் கருவிகள் யாவும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

1973ல் ஊனமுற்றோருக்கான பென்ஷன்கள் சராசரி 33 சதவீதம் அதிகரிக்கப்பட்டது. சம்பாதிக்கும் குடும்பத் தலைவனை இழந்த குடும்பங்களின் பென்ஷன்கள் 20 சதவீதம் அதிகரிக்கப்பட்டன.

**கூட்டுப்பண்ணை விவசயிகளுக்கு சமூகப் பாதுகாப்பும் சமூக இன்ஷூரன்சும்.** 1964ல், மிகுந்த சமூக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டத்தை சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் இயற்றியது: கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கான பென்ஷன்கள், மானியங்கள் பற்றிய சட்டம் என்பதே அது.

அது வரையிலும் கூட்டுப்பண்ணை விவசாயிகளுக்கு பென்ஷன்களோ, மானியங்களோ இருக்கவில்லை என்று இதற்குப் பொருளல்ல. ஆனால் பென்ஷன்கள் மானியங்களின் அளவு ஒரு கூட்டுப் பண்ணைக்கும் மற்றொன்றுக்கும் வேறுபட்டிருந்தது; ஒவ்வொரு கூட்டுப்பண்ணையும் எவ்வளவு வழங்க முடியும் என்பதற்கேற்ப இது நிர்ணயிக்கப்பட்டது. போரில் ஊனமுற்ற விவசாயிகளுக்கும், விவசாயத் தனித்தேர்ச்சியாளர்களுக்கும் மட்டுமே அரசாங்கப் பென்ஷன்கள் வழங்கப்பட்டன; பெரிய குடும்பங்களை உடைய தாய்மார்களுக்கும், திருமணம் செய்து கொள்ளாத தாய்மார்களுக்கும் அரசாங்க மானியங்கள் வழங்கப்படுகின்றன,

தேசப் பொருளாதாரத்தின் பொதுவான முன்னேற்றத்தினாலும், அண்மை ஆண்டுகளில் கம்யூனிஸ்டுக் கட்சியினாலும் சர்க்காரினாலும் விவசாய வளர்ச்சியை மேலும் முன்னேறச் செய்வதற்கு செயலாக்கப்பட்ட நடவடிக்கைகளினாலும் கூட்டுப் பண்ணைகள் மேலும் விருத்தி அடைந்து, அவற்றின் உறுப்பினர்களுக்குக் கூடுதல் நன்மைகளை வழங்க முடிந்தது. இதன் பயனாக, 1969 நவம்பரில் நடைபெற்ற மூன்றாவது அகில-யூனியன் கூட்டுப் பண்ணை விவசாயிகளின் காங்கிரசைத் தொடர்ந்து 1970ல் விவசாயிகளுக்கு ஒரு சீரான சமூக இன்ஷூரன்ஸ் அமைப்பை நிறுவுவது சாத்தியமாயிற்று.

ஆலை, அலுவலக ஊழியர்கள் பெறுவது போன்ற அதே வகையான பென்ஷன்களைக் கூட்டுப்பண்ணை விவசாயிகள் பெறுகின்றனர். வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயது ஆண்களுக்கு 60ம் பெண்களுக்கு 55ம் ஆகும். பெரிய குடும்பங்களை உடைய தாய்மார்கள் 50ஆவது வயதில் பென்ஷன் பெற முடியும். 1 கோடியே 20 லட்சம் கூட்டுப்பண்ணை விவசாயிகள் தற்போது ஏதாவது ஒருவகைப் பென்ஷன் பெறுகின்றனர்.

உடல் நலக் குறைவு, தாய்மை, குழந்தை பிறப்பு ஆகியவற்றினால் ஏற்படும் தற்காலிக ஏலாமைக்காகவும், சுகவாசஸ்தலம், ஓய்வு விடுதி சிகிச்சை முதலியவை சம்பந்தமாகவும்

கூட்டுப்பண்ணை விவசாயிகள், ஆலை அலுவலக ஊழியர்கள் பெறுவதைப் போன்ற அதே அனுகூலங்களைப் பெறுகின்றனர். கூட்டுப் பண்ணைகள் தமது சொந்த சுகவாச ஸ்தலங்கள், விடுமுறை இல்லங்கள், ஓய்வு விடுதிகளைக் கட்டுகின்றன. மிகவும் பிரபலமான சுகவாசஸ்தலங்களில் கூட்டுப்பண்ணை ஆரோக்கிய நிலையங்களைக் கட்டுவதற்கு மேலும் மேலும் அதிகமான கூட்டுப்பண்ணைகள் தமது முயற்சிகளை ஒன்றிணைத்து வருகின்றன. வேலை அதிகமுள்ள சாகுபடி காலம் முடிந்தபின், ஆயிரக்கணக்கான கூட்டுப்பண்ணை விவசாயிகள் கிரைமியாவின் கருங்கடல் கரைக்கும், காக்கசஸுக்கும், பால்டிக் கரையோர விடுதிகளுக்கும் தமது கூட்டுப்பண்ணைகளின் செலவில் செல்கின்றனர்.

ஆலை, அலுவலக ஊழியர்களைப் போன்றே, கூட்டுப்பண்ணை விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு, சமூக இன்ஷூரன்சுக்கு நிதிக் கட்டணம் செலுத்தவேண்டிய அவசியமில்லை. கூட்டுப்பண்ணை விவசாயிகளுக்கான மத்தியப்படுத்திய அகில-யூனியன் சமூகப் பாதுகாப்பு, சமூக இன்ஷூரன்ஸ் நிதிகள் விவசாய வருமானங்களிலிருந்து செய்யப்படும் குறைப்புகள், அரசு நிதி ஒதுக்கீடுகள் ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்படுகின்றன.

ஓரளவு ஊனமடைந்தவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது. சோவியத் யூனியனில் வேலை பெற விரும்புகின்ற ஊனமுற்றோரை சமூக ரீதியில் பயனுள்ள வேலையில் ஈர்த்து, அவ்வாறு செய்வதற்கான நிலைமைகளை உருவாக்கும் பிரச்சினை ஒரு முக்கிய அரசாங்கக் கடமையாகக் கருதப்படுகிறது. சமூகப் பாதுகாப்பு நிறுவனங்களும், தொழிற்சங்கங்களும், இது ஊனமுற்றோரின் ஆரோக்கியத்தையும், வேலை செய்வதற்கு அவருக்குள்ள சக்தியையும் திரும்பப் பெறுவதற்கு உதவுகிறது என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு முன்செல்லுகின்றன.

ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பளிப்பதில் சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்கள் உடற்கூறு இயலாளர்கள், மனோதத்துவ இயலாளர்கள், சமூகவியலாளர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், சிகிச்சை அளித்து நோய்களை குணப்படுத்துவோர், பிற துறைகளில் தனித்தேர்ச்சியாளர்கள் ஆகியோருடன் பணியாற்றுகின்றன. இந்தத் துறையில் தனித்தேர்ச்சியை மேற்கொள்ளும் ஏழு ஆராய்ச்சிக் கழகங்கள் உள்ளன.

ஊனமுற்றோருக்கு வெவ்வேறு வகையான தொழில்நிலையங்களில் வேலை செய்வதற்கு வகை செய்யும் திறமை மிகுந்த உதவி சாதனங்களுடன் கூடவே, அவர்களுக்கான பல்வேறு உதவிக் கருவிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

ஊனமுற்றோருக்குப் பயிற்சியளிப்பதற்கும், மறுபயிற்சி அளிப்பதற்கும் பெரும்பணி ஆற்றப்பட்டு வருகிறது. தங்கிப் படிக்கும் விடுதிகள் கொண்ட பரவலான தனித்தேர்ச்சிப் பள்ளிகள் நிறைய இருக்கின்றன, அங்கு ஊனமுற்றோர் அரசாங்கச் செலவில் பராமரிக்கப்படுகின்றனர். உதாரணமாக, ரஷ்ய சமஷ்டிக் குடியரசில் 9,000 ஊனமுற்றோர் பதினொரு தனித்தேர்ச்சி செகண்டரி பள்ளிகளிலும், 42 தொழிற்பயிற்சிப் பள்ளிகளிலும் பயிற்சி பெற்றனர், இவற்றில் 40 தொழில்களில் பயிற்சி தரப்படுகின்றன.

வேலை செய்ய விரும்பும் முதற் பிரிவு, இரண்டாம் பிரிவு ஊனமுற்றோருக்காக தனித்தேர்ச்சி நிலையங்களும், பட்டறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன, இவ்வாறு வேலை செய்வதற்கு மருத்துவ-தொழிலாளர் நிபுணர் கமிஷன்கள் இவர்களுக்கு அனுமதி அளித்துள்ளன. இத்தகைய தொழில் நிலையங்களில் வேலை செய்யும் ஊனமுற்றோர் குறைவான வேலை நேரம், வெவ்வேறான வேலை அளவுகள், வேலை நாளின் போது கூடுதல் இடைவேளைகள், சம்பளத்துடன் கூடிய அதிகமான விடுமுறை நாட்கள் போன்ற பல சலுகைகளை அனுபவிக்கின்றனர். நடந்து செல்வதற்குக் கஷ்டமாக இருக்கும் பலர் வீட்டிலேயே வேலை செய்கின்றனர். அவர்களின் தொழில் நிலையங்கள் மூலப் பொருள்களை சப்ளை செய்து, அவர்கள் செய்து முடித்த பொருள்களை வாங்கிக் கொள்கின்றன. முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட வேலையும் மருத்துவ சிகிச்சையும் அவர்களின் ஆரோக்கியத்தை நிலைநிறுத்த உதவுகின்றன என்று நடைமுறை காட்டியுள்ளது.

பென்ஷன்களும் வேலை வாய்ப்பும். உடல் வலுவுள்ள சோவியத் பிரஜை ஒவ்வொருவருக்கும்-அவர் வயது எவ்வளவாக இருந்த போதிலும்-வேலை செய்ய உரிமை உண்டு என்று அரசியல் சட்டம் வரையறுத்துக் கூறுகிறது.

மேலும், ஒரு மனிதன் ஓய்வு பெறும் வயதை அடைந்துவிட்ட போதிலும், உடல் வலுவுள்ளவராகவும், தொடர்ந்து வேலை செய்ய விருப்பமுள்ளவராகவும் இருந்தால் யாரும் தடை சொல்வதில்லை. வயதான உழைப்பாளி ஒவ்வொருவரும் தனது வளமான அனுபவத்தை இளம் மக்களுக்குத் தொடர்ந்து அளித்து வருவது சமுதாயத்திற்கு நன்மை அளிப்பதேயாகும்.

பென்ஷனர்களை வேலை செய்வதற்காக ஊக்க மூட்டுவதற்கும் மேலதிகமான பொருளாயத ஊக்குவிப்புகளை அளிப்பதற்கும் சோவியத் யூனியனில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களில் பலரும் முழுவயோதிக – காலப் பென்ஷன்கள் பெறுகின்றனர். சகல ஆலைத் தொழிலாளர்கள், இளநிலை சேவை ஊழியர்கள்—அவர்கள் எங்கு வேலை செய்த போதிலும் - ஃபோர்

மென்கள், வெகுஜனத் தொழில்களில் வேலை செய்வோர் (போக்கு வரத்து, சில்லறை வர்த்தகம், பொது வினியோக சேவைகள்) இளநிலை, நடுநிலை மருத்துவ அலுவலர்கள், சிகிச்சையும் நோய்த் தடுப்பு ஏற்பாடுகளும் அளிக்கும் மருத்துவமனைகள், கிளினிக்குகள், பிறமருத்துவ நிலையங்களில் வேலை செய்யும் டாக்டர்கள், கிராமப் பள்ளி ஆசிரியர்கள் முதலியவர்கள் இதில் அடங்குவர்.

விவசாயத்தில் பணிபுரியும் சகல பென்ஷனர்களும் முழு வயோதிக காலப் பென்ஷன்கள் பெறுகின்றனர்.

நகரங்களிலுள்ள பள்ளி ஆசிரியர்கள், சுகாதார நிலையங்களிலுள்ள டாக்டர்கள், தொழிற்துறையிலுள்ள பொறியாளர்கள், டெக்னீஷியன்கள் கட்டிடவேலை, போக்குவரத்து, தகவல்போக்குவரத்து, வீட்டுவசதி, சமுதாய, மற்றும் சேவைத் தொழில்களில் உள்ள பொறியாளர்கள், டெக்னீஷியன்கள், மற்றும் பல தனித் தேர்ச்சியாளர்கள் பென்ஷன்வயதை அடைந்த பின்னும் தொடர்ந்து வேலை செய்பவர்கள்—தமது சம்பளங்களைத் தவிர, தமது வயோதிக காலப் பென்ஷன்களில் 50 சதவீதத்தையும் பெறுகின்றனர்; யூல்ஸ், சைபீரியா, தொலைக்கிழக்கு ஆகிய பகுதிகளில் வேலை செய்வோர் பென்ஷனில் 75 சதவீதத்தைப் பெறுகின்றனர். இரண்டாண்டுகள் வேலை செய்த பின்னர், வயோதிக காலப் பென்ஷனர்கள்—தங்கள் பென்ஷன்களைத் தமது புதிய, உயர் ஊதியங்களின் அடிப்படையில் மறு கணக்கிடச் செய்யும் உரிமை உடையவர்கள்.

இல்லங்கள்: தொழிலிலும் அல்லது போரின் போதும் ஊனமடைந்தோரின் பராமரிப்புக்கு மட்டுமின்றி, ஊனமாக உள்ள பிற வாலிபர்கள், குழந்தைகளின் பராமரிப்புக்கும் சோவியத் அரசு முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறது. தேவையான பராமரிப்பும் மருத்துவ உதவியும் தருவதற்குத் தங்களுக்கு யாருமே இல்லாத வயதான ஆண்கள், பெண்களுக்கும் சர்க்கார் பொறுப்பேற்றுக் கொள்கிறது. அரசாங்கச் செலவில் 2,60,000க்கு அதிகமான வயதானவர்கள். ஊனமடைந்தோரைப் பராமரிப்பதற்காக அது ஏராளமான இல்லங்களைக் கட்டியுள்ளது. வயது வந்தவர்களுக்கும குழந்தைகளுக்கும் கூட இல்லங்கள் உள்ளன. சில, விசேஷமானவை, மற்றவை பொது வகையானவை. வயதானவர்களுக்கும் கடும் நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஊனமுற்றோருக்கும், இளம் மக்களுக்குமான இல்லங்களும் உள்ளன; இங்கு அவர்கள் கிசிச்சை பெறுவதோடு மட்டுமன்றி, பொதுக் கல்வியும், தொழிற்பயிற்சியும் பெறுகின்றனர்.

சமூகப் பாதுகாப்பு. நிர்வாகம் அரசு அதிகாரத்தின் உயர் அமைப்புகளும், மத்திய நிர்வாக அமைப்புகளும் சமூகப் பாது

காப்புக்கான வழிகாட்டு நெறிகளை நிர்ணயிக்கின்றன. சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத், நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும், அரசாங்க பட்ஜெட்டையும் அங்கீகாரம் செய்கிறது, மிக முக்கியமான சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்படுகிறது.

நேரடி நிர்வாகம் ஒவ்வொரு யூனியன் குடியரசின் சமூகப் பாதுகாப்பு அமைச்சகத்தின் அதிகாரத்தின் கீழ்வருகிறது. இந்த அமைச்சகங்கள் 'செயற்கை உறுப்புகள் துறை உடன்' சம்பந்தப் பட்ட பிரச்சினைகள், ஏலாமையை நிர்ணயித்தல், ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பளித்தல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தனித் தேர்ச்சியை மேற்கொள்ளும் ஆராய்ச்சிக் கழகங்கள், மற்றும் மிகப் பெரிய செயற்கை உறுப்புகள் துறை நிறுவனங்களையும், விசேஷ ஆரோக்கிய நிலையங்களையும் நிர்வகிக்கின்றன.

சுயாட்சிக் குடியரசுகளும் கூட, சமூகப் பாதுகாப்பு அமைச் சகங்களைக் கொண்டுள்ளன; பிரதேசங்கள், பிராந்தியங்கள், மாவட்டங்கள், நகரங்கள் ஆகியவற்றினது உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் சமூகப் பாதுகாப்பு இலாகாக்களைக் கொண்டுள்ளன.

**பார்வையிழந்தோர் பராமரிப்பு.** பார்வை இழந்த மக்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் முழுவதும் சோவியத் யூனியனில் வெற்றிகரமாக சமாளிக்கப்பட்டு வருகின்றன. பார்வையிழந்தோருக்கு அரசு சாத்தியமான எல்லா உதவியும் அளித்து வருகிறது. அவர்கள் அனைவருக்கும் பென்ஷன்கள் வழங்கப்படுகின்றன. வேலை செய்வோர் நாளொன்றுக்கு ஆறுமணி நேரம் வேலை செய்கின்றனர்; ஆண்டுக்கு சம்பளத்துடன் கூடிய ஒரு மாத விடுமுறை பெறுகின்றனர். அவர்களுக்கு வருமான வரி இல்லை; நகராட்சி, மற்றும் மாவட்ட போக்குவரத்துகளிலும், ரயில்வேயிலும் அவர்களுக்குக் கட்டணமில்லை; வீட்டுவசதியிலும் சுகவாசஸ்தலத்தில் தங்கவும் அவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

பார்வையிழந்த எல்லாக் குழந்தைகளுக்கும் நாடு தழுவிய ரீதியில் கல்வி இலவசம், வயதுவந்தவர்களுக்கு விசேஷப் பள்ளி களிலும் கல்வி இலவசமே. இந்தப் பள்ளிகளில் கல்வி முடிந்த வுடன், அவர்கள், பார்வையிழந்தோர் கழகத்தின் விசேஷ பயிற்சி உற்பத்தி நிலையங்களில் சேருகின்றனர், அங்கு அவர்கள் தொழில் பயிற்சி பெறுகின்றனர்; அவர்கள் விரும்பினால் செகண்டரி தொழிற் கல்வியும் பெறலாம்.

3000க்கு மேற்பட்ட பார்வையிழந்த மக்கள் ரஷ்ய சமஷ்டியில் உயர்கல்வி அல்லது தனித்தேர்ச்சி செகண்டரி கல்வி பெற்றுள்ளனர். அவர்களில் பலர் பொது, தனித்தேர்ச்சி, செகண்டரி, உயர்நிலை

பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். அவர்களில் ஒரு பேரவை அறிஞர், டாக்டர் பட்டம் பெற்ற 25 பேர், மாஸ்டர் பட்டம் பெற்ற 110 பேர் உள்ளிட்ட பல விஞ்ஞானிகள் உள்ளனர்.

பார்வையிழந்தோருக்கு வேலை வாய்ப்பளிப்பது சோவியத் யூனியனில் ஒரு பிரரச்சினையேயல்ல. வேலை செய்ய விரும்பும் சகல பார்வையற்றோருக்கும் வேலை உத்தரவாதம் செய்யப் படுகிறது. வேலை செய்யும் போதே அவர்கள் தமது முழுப் பென்ஷனையும் பெறுவார்கள். ரஷ்ய சமஷ்டியில் மட்டும், குடியரசின் பார்வையற்றோர் கழகம், அரசின் உதவியுடன் 250க்கு மேற்பட்ட பயிற்சி-உற்பத்தி நிலையங்களை நிறுவியுள்ளது.

பார்வையற்றோர் கழகம் அதனுடைய உறுப்பினர்களின் நிலைமை, அவர்களின் கலாசார, மற்றும் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில அக்கறை எடுத்துக் கொள்கிறது. அது நடத்தும் தொழிலகங்களில் லாபங்கள் குடியிருப்பு வீடுகளும், 'கிளப்' இல்லங்களும், உற்பத்திக்கான கட்டடங்களும் கட்டுவதற்குச் செலவழிக்கப்படுகின்றன.

பார்வையற்றோருக்கு சுமார் ஆயிரம் நூல் நிலையங்களும், நூற்றுக்கணக்கான 'கிளப்பு'களும் கலாசார இல்லங்களும் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் 'பிரைய்ல்' முறையில் 270 வரையிலான பல்வேறு புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன; மேலும் நூறு புத்தகங்கள் 'டேப்'பில் பதிவு செய்யப் படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ரஷ்ய சமஷ்டியிலுள்ள பார்வையற்றோருக்கான கழகம் ஏறத்தாழ 2000 குடித்தனப் பகுதிகளைக் கட்டுகிறது. விடுமுறை இல்லங்களிலும், சுகவாசஸ் தலங்களிலும் 10,000க்கு மேற்பட்டவர்கள் தங்கி ஓய்வெடுப்பதற்கான செலவுகளை ஏற்றுக் கொள்கிறது.

செவிடர் பராமரிப்பு: காது செவிடான குழந்தைகளுக்குக் 'கிண்டர் கார்டன்'களும் தங்கிப் படிப்பதற்கான பள்ளிகளும், தனித்தேர்ச்சி செகண்டரி பள்ளிகளும் உள்ளன. இவற்றில் செவிடர்கள் அரசாங்கச் செலவில் மிகவும் சிக்கலானவை உள்ளிட்ட வெவ்வேறு தொழில்களைக் கற்கின்றனர்.

சோவியத் யூனியனில் உடல் வலுவுள்ள செவிடர்களாயுள்ள அனைவரும் தொழில் துறையின் எல்லாக் கிளைகளிலும்-தங்களுடைய ஊனம் அனுமதிக்கின்ற அளவு-லாபகரமான உழைப்பில் ஈடுபடுகின்றனர். சம்பளங்கள், ஊதியங்களைத் தவிர, செவிடர்கள் அனைவரும் பென்ஷன்களும் பெறுகின்றனர்.

பார்வையற்றோருக்கான கழகங்கள் அமைக்கப்பட்டுள்ள அதே கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த கழகங்களில்

செவிடர்கள் ஒன்றுதிரண்டுள்ளனர்; இந்தக் கழகங்கள் அவற்றுக்கே உரிய பயிற்சி-உற்பத்தி நிலையங்களையும், விடுமுறை இல்லங்களையும் கொண்டுள்ளன. செவிடர்கள் சமுதாயத்தின் முழுமையான உறுப்பினர்கள் என்று உணரச் செய்யவும், அவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கும் அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டுள்ளது. செவிடர்களிடையே தொழில் முறை, மற்றும் பயில்முறைக் கலைஞர்களும் சிற்பிகளும் உள்ளனர், பலர் குழு இசையிலும், நாடகக் கலை, விளையாட்டுகளிலும் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

மாஸ்கோவில் செவிடர்களின் மத்திய நாடக ஸ்டுடியோவும், நையாண்டி நாடக அரங்கும் உள்ளது; இது வெளிநாடுகளில் வெற்றிகரமான சுற்றுப் பயணங்கள் செய்துள்ளது. செவிடர்களாயுள்ள ஆட்டக்காரர்கள், செவிடர்களுக்கான சர்வதேச விளையாட்டுகளில் பங்கெடுத்துக் கொள்கின்றனர்; இவை நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றன. 1969ல் கடைசியாக பெல்கிரேடில் நடைபெற்ற விளையாட்டுகளில் 33 நாடுகளைச் சேர்ந்த 1,500 ஆட்டக்காரர்கள், 13 நிகழ்ச்சிகளில் போட்டியிட்டனர். சோவியத் ஆட்டக்காரர்கள் 40 தங்கப் பதக்கங்கள் உள்ளிட்ட 99 பதக்கங்களைப் பெற்றனர்.

**அங்கஹீனமுற்றோருக்கு உதவும் சாதனங்கள்.** ''உயிர்-கை'' சாதனம் சோவியத் விஞ்ஞானிகள், பொறியாளர்களின் ஒரு சிறந்த சாதனையாகும். இந்த செயற்கைக் கையில் உயிர்-விசை-கட்டுப்பாட்டில் செயற்படும் விரல்கள் எந்த நிலையிலும், போதிய வலுவுடனும் அசைவுகளை நிகழ்த்த முடியும். இது, கைகளில்லாத நபர்கள், தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்வதையும், சாதாரண வேலைகளைச் செய்வதையும் சாத்தியமாக்குகிறது. பேராசிரியர் போரிஸ் போபாவ் தலைமையில் ''உயிர்க் கையை'' உருவாக்கிய குழுவுக்கு 1970 ஆம் வருடத்தில் அரசாங்கப் பரிசு வழங்கப்பட்டது. பிரிட்டன், கனடா, மற்றும் பிற நாடுகளும் இந்த சாதனங்களைத் தயார் செய்வதற்கான லைசென்சுகளை வாங்கியுள்ளன.

லெனின்கிராடு செயற்கை உறுப்புகள் துறை கழகமானது ஒரு செயற்கையான முன் கையை உருவாக்கியுள்ளது. தொடர்பு-கட்டுப்பாடு மின்விசையினால் இது இயக்கப்படுகிறது. செயற்கை சாதனங்கள் தேவைப்படுகிற குழந்தைகளுக்கு பெரும் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. துண்டிக்கப்பட்ட முன்கை, கால்களுக்கு பதிலாக செயற்கை சாதனங்களைப் பொருத்துவதற்குப் பல வகை துணைக் கருவிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**சர்வதேசத் தொடர்புகள்.** சமூக பந்தோபஸ்துத் துறையில் ஒத்துழைப்புக்கான பல்வேறு அம்சங்கள் உள்ளன.

சோவியத் யூனியன் செக்கோஸ்லோவாக்கியாவுடனும் மற்றும் பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றுடனும் முக்கிய இருதரப்பு சமூக பந்தோபஸ்து உடன்படிக்கைகள் செய்து கொண்டுள்ளது. இந்த உடன்பாடு களின்கீழ் சோவியத் யூனியனில் நிரந்தரமாக வாழும் இந்நாடு களின் பிரஜைகள் சோவியத் சமூக பந்தோபஸ்து அனுகூலங்களுக்கு உரியவர்களாகிறுர்கள்; அந்த நாடுகளில் வாழும் சோவியத் பிரஜைகள் விஷயத்திலும் இது பொருந்தும்.

சமூக பந்தோபஸ்து நிறுவனங்களின் ஒத்துழைப்பின் ஒரு நிரந்தர அம்சம், ஊனமுற்ருேரை மருத்துவ - தொழிலாளர் நிபுணர் கமிஷன்கள் ஆய்வு செய்வது சம்பந்தமான பிரச்சினைகள் ஏலாமையின் அளவை நிர்ணயம் செய்வது, ஊனமுற்ருேருக்கு வேலை அளிப்பது பற்றி கூட்டு விவாதம் செய்வதாகும்.

சோவியத் செயற்கை உறுப்புகள் தயாரிப்பு தொழில்துறை நிலையங்களுக்கு சோஷலிச நாடுகளிலிருந்து பயிற்சியாளர்கள் வரு கின்றனர். சில நாடுகளின் வேண்டுகோளின் பேரில் (ஹங்கேரி, கியூபா, யூகோஸ்லாவியா, இராக் முதலிய நாடுகள்) சோவியத் தனித் தேர்ச்சியாளர்கள், அந்நாடுகளுக்கு, ஊனமுற்ற மக்களின் வேலை செய்யும் ஆற்றலை மீண்டும் நிலைநாட்டுவதற்கும், செயற்கை உறுப்புக்களைத் தயாரிப்பதற்கான தொழில்துறை நிலையங்களை நிர்மாணிப்பதற்குத் தேசிய மையங்களை ஏற்பாடு செய்வதற்கும் தொழில்நுட்ப உதவி அளித்துள்ளனர்.

ரஷ்ய சமஷ்டியின் சமூகப் பாதுகாப்பு அமைச்சகம் சர்வதேச சமூகப் பாதுகாப்புக் கழகத்தில் ஓர் உறுப்பினராக அங்கம் வகிக்கிறது; இதில் 95 நாடுகளில் உள்ள 225 கழகங்கள் உள்ளன.

# வீட்டு வசதி நிர்மாணம்

*ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ முப்பது லட்சம் சோவியத் குடும்பங்கள் தமது வீட்டு வசதிகளை மேம்படுத்திக் கொள்கின்றன. வீட்டு வாடகைகள் கடந்த 47 ஆண்டுகளாக மாறாமல் அப்படியே உள்ளன.*

இளம் சோவியத் குடியரசு, ஜாராட்சி ரஷ்யாவிடமிருந்து ஒரு மிகப் பெரும் பிரச்சினையைப் பெற்றிருந்தது. ஒரு மாடி, அல்லது இரண்டு மாடி மரத்தாலான குடியிருப்புகளே நகர்ப்புற வீட்டு வசதியின் 80 சதவீதத்திற்கு அதிகமானவையாயிருந்தன. அவற்றுக்கு மத்தியப்படுத்திய வெப்பமூட்டும் ஏற்பாடு எதுவும் கிடையாது; பெரும் நகரங்களின் மத்தியப் பகுதிகளில் பத்து சதவீதத்திற்கு மேற்படாத வீடுகளே குழாய்த் தண்ணீர் வசதி பெற்றிருந்தன; மூன்று சதவீதத்திற்குக் குறைவான வீடுகளே சாக்கடை வசதி பெற்றிருந்தன; ஐந்து சதவீத வீடுகளே மின் வசதி பெற்றிருந்தன.

உழைக்கும் மக்கள் கற்பனைக்கெட்டாத கேவலமான நிலைமைகளில் வாழ்ந்து வந்தனர். குடித்தனப் பகுதிகளல்ல, தனி அறைகளிலேகூட வாழமுடியாத நிலைமையில், தனித் தனித் தொழிலாளர்கள் மட்டுமல்ல, முழுக் குடும்பங்களே, கட்டில்களையும், அறைகளின் மூலைகளையும் வாடகைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டிய நிலைமையிருந்தது. 1917ல் மாஸ்கோ மக்கட் தொகையின் செம்பாதி அத்தகைய நிலைமைகளில்தான் வாழ்ந்து வந்தது. ஒரு தொழிலாளியின் குடும்பத்தின் பட்ஜெட்டில் 15 முதல் 22 சதவீதத்தை வாடகைகள் விழுங்கி வந்தன. கிராமப்புற ஏழை மக்களின் நிலைமை மேலும் மோசமாயிருந்தது. அவர்கள்

பாழடைந்த குள்ளக் குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். சாதாரண வசதிகளைக்கூட அவர்கள் பெற்றிருக்கவில்லை.

அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்த ஆரம்ப நாட்களில் சோவியத் சர்க்கார், நகர்ப்புற மக்களின் வீட்டு வசதி நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக முக்கிய முடிவுகளை மேற்கொண்டது. 1917, நவம்பர் 8ல், ''ஏழை மக்களின் பரிதாபமான நிலைமைக்கு நிவாரணம் காண்பதற்காக பணக்காரர்களின் குடித்தனப் பகுதிகளை மேற்கொள்ளல்'' என்ற ஆணையை அது பிறப்பித்தது. இந்த ஆணையைத் தொடர்ந்து, வாடகைகளை உயர்த்துவதைத் தடை செய்தும், நகரங்களில் வீடுகள், மனைகளில் தனியார் உடைமையை ரத்து செய்தும் பிற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

சட்டத்தின்படி, குடியிருப்புப் பகுதிகள் தேச உடைமையாக்கப்பட்டு, அவை நகர அதிகாரிகளின் அதிகார வரம்புக்குள் கொண்டு வரப்பட்டன; எண்ணற்ற தொழிலாளர் குடும்பங்கள் சேரிகளிலிருந்தும், பூமியின் கீழான குடியிருப்புப் பகுதிகளிலிருந்தும், மேம்பட்ட குடித்தனப் பகுதிகளில் அமர்த்தப்பட்டன.

எனினும், இதனால் வீட்டுவசதிப் பற்றாக்குறையைப் போக்க முடியவில்லை. ஏற்றுக் கொள்ளக் கூடிய தரமான வீட்டு வசதி மிகக் குறைவாகவே இருந்தது. சோவியத் அரசு இந்தப் பிரச்சினையை சமாளிப்பதற்கு முதலில் கவனம் செலுத்தியது. இடிந்து, பாழாகிக் கிடந்த கட்டடங்கள் முதல் முதலாக இடித்துத் தள்ளப்பட்டு, நவீன குடித்தனப் பகுதிகள் அங்கு கட்டப்பெற்றன. தண்ணீர், எரிவாயு சப்ளை, சாக்கடை அமைப்புகள் நிர்மாணம் துவக்கப்பட்டது.

1940ல்—புரட்சிக்கு முந்திய புள்ளி விவரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நகர்ப்புற வீட்டு வசதியின் அளவு சுமார் 150 சதவீதம் பெருகியது. லட்சக்கணக்கான மக்கள் புதிய குடித்தனப் பகுதிகளில் குடியேறினர். ஆனால் சோஷலிசத் தொழில்மயமாக்கலுடன் கூடவே, மக்கள் முன்னென்றும் காணாத அளவில் நகரங்களுக்கு வந்து குடியமரத் தொடங்கினர்.

இரண்டாம் உலகப்போரினால் வீட்டுவசதிப் பிரச்சினை மேலும் உக்ரமாக்கப்பட்டது; இது நாட்டின் தேசியப் பொருளாதாரத்திற்கு சொல்லவொண்ணா நாசத்தை ஏற்படுத்தியது. மிருகத்தனமான நாஜிப் படையெடுப்பாளர்கள் 1,710 நகரங்களையும், நகர்ப்புற வகையான குடியிருப்புக்களையும், 70,000 கிராமங்களையும் பூரணமாகவோ, பகுதியளவோ நாசம் செய்தனர். போரினால் 2 கோடியே 50 லட்சம் மக்கள் வீடு வாசல்களை இழந்தனர்.

இந்த அம்சங்கள் அனைத்தும் வீட்டுவசதிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் பின்னுக்குத் தள்ளின; இதனால், மிகப் பெருமளமான கட்டட நிர்மாணம் நடந்து கொண்டிருந்த போதிலும்கூட, சமாளிக்க வேண்டிய கஷ்டங்களை மிகப் பெருமளவு அதிகரித்தது;

வீட்டு வசதிப் பிரச்சினைக்கு எவ்வாறு பரிகாரம் காணப்பட்டு வருகிறது? சோவியத் யூனியனில் வீட்டுவசதிப் பிரச்சினைக்கு உரிய தீர்வுக்கான சமூக அடிப்படை பின்வருவனவற்றில் அடங்கியிருக்கிறது; நிலங்கள், மற்றும் பெரிய வீடமைப்பு எஸ்டேட்டுகள் சம்பந்தமாக தனியார் உடமை இல்லாமை; நகர்ப்புற வீட்டு வசதியின் கணிசமான பகுதி பொது (அரசு அல்லது கூட்டுறவு) உடைமையாக இருப்பது; வீட்டுவசதி நிர்மாணத்தில் அரசின் திட்டமிடுதலானது, தேசியப் பொருளாதாரம் முழுமையின் வளர்ச்சியின் ஓர் அங்கப்பகுதியாகும்; நிரந்தரமான உபயோகத்திற்காக அரசினால், குறைந்த வாடகைகளில் கட்டப்பட்ட குடித்தனப் பகுதிகள் வினியோகம் (இந்தக் குடித்தனப் பகுதிகளின் அளவு, முதல் முதலில் அங்கு குடியமரப் போகும் குடும்பத்தின் அளவைப் பொறுத்தது, இது, மக்களுக்கு ஓரளவு சமத்துவமான வீட்டு வசதியை—எல்லா சௌகரியங்களுடனும்—அளிப்பதற்கு வகை செய்கிறது); நகர்ப்புற வீடுகளுக்கு அரசு பராமரிப்பு, சேவை; வீட்டு நிர்மாணத்தை துணை சேவைகள், கலாசார வசதிகள் இவற்றை வழங்குவதுடன் ஒருங்கிணைப்பது.

மக்களின் நலவாழ்வு, அவர்களின் வாழ்க்கை நிலைமைகள், பொழுது போக்குகள் விஷயத்தில் அக்கறை செலுத்துவது சோவியத் அரசின் வீட்டுவசதிக் கொள்கையின் அடிப்படையாகும். வீட்டுவசதி நிர்மாணத்தின் அளவில் சோவியத் யூனியன் உலகில் முதல் இடம் வகிக்கிறது; கட்டப்படும் வீடுகள் எண்ணிக்கையில் மக்கள் தொகையுடனான வீதாசாரத்தில் முதல் வரிசையில் உள்ள நாடுகளில் சோவியத் யூனியனும் ஒன்று.

சோவியத் யூனியனில் தற்போது, நகர்ப்புறத்தில் வாழும் தலா நபருக்கு சராசரி வீட்டுவசதி நிலப்பரப்பு 11·2 சதுர மீட்டர்களுக்கும் அதிகம். வீடுகளின் நிர்மாணத்திற்கு அரசாங்கம் ஏராளமான தொகைகளைச் செலவழிக்கிறது. இது இடையறாது அதிகரிக்கப்பட்டும் வருகிறது. 1971-75 காலகட்டத்தில் மொத்தம் 7,350 கோடி ரூபிள்கள், முந்திய ஐந்து ஆண்டுகளைக் காட்டிலும் 22 சதவிகிதம் அதிகம்—வீட்டு வசதி நிர்மாணத்திற்குச் செலவிடப்படும். இந்தக் காலகட்டத்தில் சுமார் 1 கோடியே 40 லட்சம் குடித்தனப் பகுதிகள் கட்டப்படும்—இவற்றின் மொத்தத் தரைப்பரப்பு 5 கோடியே 80 லட்சம் சதுர

மீட்டர்களாகும்—இது 1950ல் சோவியத் யூனியன் கொண்டிருந்த மொத்த வீட்டுவசதி தரைப் பரப்பைவிட அதிகம். மேற்கொண்டு 6 கோடி மக்களுக்கு அவர்களின் வீட்டுவசதி அபிவிருத்தி அடையும்.

வீட்டு நிர்மாண அளவை மேலும் விரிவுபடுத்துவதுடன் கூடவே, நடப்பு ஐந்தாண்டுத் திட்டம், குடித்தனப் பகுதிகளின் அமைப்பிலும், செய்நேர்த்தியிலும், வசதிகளிலும், அதுபோன்றே வீடுகளின் சிற்பக்கலையிலும், செய்நேர்த்தியிலும் பெருமளவு மேம்பாடுகளை எதிர்நோக்குகிறது. புதிய குடித்தனப் பகுதிகளின் தரத்தை இடையறாது மேம்படுத்துவதும், அவற்றில் வசதிகளின் அளவை விரிவுபடுத்துவதும் சோவியத் மக்களின் அதிகரித்து வரும் தேவைகளுக்கும், நாட்டின் பொருளாயத, தொழில் நுட்ப சாத்தியப்பாடுகளுக்கும் ஏற்றதாக இருக்கிறது.

குடித்தனப் பகுதிகளை ஒதுக்கீடு செய்தல். பிரஜைகள், தாங்கள் வசிக்கின்ற, அல்லது தாம் வேலை செய்கின்ற ஸ்தலத்தில் தமது வீட்டு வசதித் தேவைகளைப் பதிவு செய்கிறார்கள். அவசரத் தேவையே பிரதான அளவு கோலாகும். போரினால் ஊனமுற்றவர்கள், போரில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்கள், அங்கஹீனமடைந்த தொழிலாளர்கள், பழைய வீடுகளில் வசிப்பவர்கள் போன்ற வேறு சிலவகைப் பட்டவர்களும் சில சலுகைகளை அனுபவிக்கிறார்கள்.

ஸ்தல உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்குச் சொந்தமான கட்டடங்களிலுள்ள குடித்தனப் பகுதிகள் சோவியத்துகளின் நிர்வாகக் கமிட்டிகளினால்—பார்லிமெண்டு உறுப்பினர்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் பங்கெடுத்துக் கொண்டு—ஒதுக்கீடு செய்யப்படுகின்றன; தொழில் நிலையங்கள், ஸ்தாபனங்கள் ஆகியவை கட்டியுள்ள பிளாக்குகளிலுள்ள வீடுகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினாலும், தொழிற் சங்க ஸ்தாபனத்தினாலும்—ஸ்தல சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியின், அங்கீகாரத்துடன்—ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

சோவியத்துகளின் வீட்டுவசதிக் கமிஷன்களினாலோ அல்லது தொழிற்சாலைகள், ஸ்தாபனங்களின் தொழிற்சங்க கமிட்டிகளின் வீட்டுவசதி, நலவாழ்வுக் கமிஷன்களினாலோ முன்னுரிமைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்தப் பணியில் ஒரு முக்கிய பங்கு பொதுக் கமிஷன்களினால் (விருப்பப் பூர்வமாக உதவி செய்பவர்களைக் கொண்டது) ஆற்றப்படுகிறது; இது விண்ணப்பதாரர்களின் வீட்டு வசதி நிலைமைகளை ஆய்வு செய்து தமது பரிந்துரைகளை வீட்டு வசதிக் கமிஷன்களிடம் சமர்ப்பிக்கின்றன.

வாடகை. சோவியத் யூனியனிலுள்ள வாடகை உலகிலேயே மிகவும் குறைவானதும், மிகவும் ஸ்திரமானதுமாகும். சேவைக் கட்டணங்களோடு கூட, பொதுவாக, அது, குடும்ப பட்ஜெட்டில் நான்கு அல்லது ஐந்து சதவீதத்திற்கு அதிகமாகப் போவதில்லை.

வீடுகளில் குடிபுகும் போது கட்டணங்கள் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. ஒரு குடும்பத்தில் அதிக ஊதியம் பெறும் நபரின் சம்பளங்களைப் பொறுத்து வாடகை நிர்ணயிக்கப்படுகிறது. வசிக்கும் தரை அளவுக்கு மட்டுமே வாடகை செலுத்த வேண்டும், சமையலறை, குளியலறை முதலியவை இக்கணக்கிடுதலில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இந்த வாடகை, கட்டட நிர்மாணச் செலவுகளை ஈடுகட்டுவதில்லை என்பது மட்டுமன்றி, பராமரிப்புச் செலவுகளைக் கூட இது சரிக்கட்டுவதில்லை, இது மக்களுக்கு 200 கோடிக்கு மேற்பட்ட ரூபிள்களை ஆண்டுதோறும் மீதப்படுத்துகிறது.

கட்டடங்களைப் பழுதுபார்ப்பது, பாராமரிப்பு, சிறந்த நவீனத் தேவைகளுக்கு ஏற்றதல்லாத, ஆனால் வசிப்பதற்குத் தகுந்த கட்டடங்களில் அமைந்துள்ள குடித்தனப் பகுதிகளை நவீனப்படுத்தல், மாற்றியமைத்தல் ஆகியவற்றையும் அரசு மேற்கொள்ளுகிறது. இதற்கு ஒவ்வோர் ஆண்டும் குறைந்தபட்சம் மேலும் 400 கோடி ரூபிள்கள் செலவாகின்றன. நவீனப்படுத்துவதற்கு பொருத்தமற்ற கட்டடங்கள் அழிக்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் மொத்தம் 90 லட்சம் முதல் 1 கோடி சதுர மீட்டர் தரைப்பரப்புள்ள பழைய கட்டடங்கள் தகர்க்கப்படுகின்றன. அவற்றில் குடியிருந்த மக்களுக்கு நவீன குடித்தனப் பகுதிகள் வழங்கப்படுகின்றன.

கூட்டுறவு முறையில் வீடுகள் நிர்மாணம். பெருமளவில் வீடுகள் கட்டப்பட்டு வந்த போதிலும், இன்னும், நிறைய வீடுகள் தேவையாயிருக்கின்றன. எனவே, தங்கள் சொந்தப் பணத்தைக் கொண்டு குடித்தனப் பகுதிகளைக் கட்ட விரும்புகின்றவர்களின் கூட்டுறவுகள் தொழில் நிலையங்களிலும், ஸ்தாபனங்களிலும், நகர்ப்புறம் கிராமப்புறம் இரண்டிலும் சோவியத்துகளின் நிர்வாகக் கமிட்டிகளிலும் தனி அமைப்புகளாக ஒழுங்கமைக்கப்படுகின்றன. கூட்டுறவின் ஒவ்வொரு உறுப்பினரும் தனது குடித்தனப் பகுதியைக் கட்டுவதற்கான செலவின் 40 சதவீதத்தை முன் பணமாகச் செலுத்துகிறார். மீதித் தொகையை சரிக்கட்டுவதற்கு அரசாங்கம் 0·5 சதவீத வட்டிக்குக் கடன்களை வழங்குகிறது; இத்தொகை சமமான தவணைகளில் பத்துமுதல் பதினைந்து ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தொலைதூரப் பிரதேசங்களில் ஆரம்பத்தில் செலுத்த வேண்டிய தொகை 30சத

வீதம்; மீதித் தொகைக்கு இருபதாண்டுகளில் திருப்பிச் செலுத்தத் தக்க அரசாங்கக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

ஒரு கட்டட நிர்மாணக் கூட்டுறவுக்கு ஸ்தல அதிகாரிகள் ஒரு நிலப் பகுதியை ஒதுக்கித்தரக் கடமைப் பட்டுள்ளார்கள் (இலவசமாகத் தான்); இதற்குரிய விண்ணப்பம் கிடைத்த ஒரு மாதத்திற்குள் இதைச் செய்ய வேண்டும், சாத்தியமானவரை கூட்டுறவு உறுப்பினர்களின் வேலை ஸ்தலத்திற்கு அருகாமையிலேயே இந்த இடம் இருக்க வேண்டும். கூட்டுறவுக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஏதாவது கட்டடங்கள் இருந்தால் அவற்றை இடித்துத் தள்ளுவதற்கும், அவற்றின் மதிப்புக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கும் அங்கு குடியிருந்தவர்களை வேறு இடத்தில் குடியமர்த்துவதற்கும், அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கும், தேவையான இன்ஜினீரியங் வசதிகள் அனைத்தையும் அமைத்துக்கொடுப்பதற்கும் அதைத் தொடர்ந்து பிறசேவைகள், கலாசார வசதிகளுக்குமான பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்ளுகிறது.

கூட்டுறவு வீட்டு நிர்மாணம், காண்ட்ராக்ட் அடிப்படையில் அரசு ஸ்தாபனங்களால், தரமான நிர்மாணத் திட்டங்களுக்கு ஏற்ப, அவற்றில் குடியிருக்கப் போகின்றவர்களின் விருப்பங்களுக்கும் ஏற்பக் கட்டப்படுகிறது; அரசு வீட்டு நிர்மாணத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கால வரம்புகளுக்கும் விலைகளுக்கும் உள்ளிட்டு இவ் வீடுகள் கட்டப்படுகின்றன.

நாட்டில் நடைபெறும் மொத்த வீட்டு நிர்மாண அளவில் 6 முதல் 7 சதவீதம் வரையிலான நிர்மாணம் கூட்டுறவுகளினுல் நடத்தப்படுகிறது.

**தனிப்பட்டவர் வீட்டு நிர்மாணம்.** ஒவ்வொரு பிரஜையும் தனக்காக ஒன்று அல்லது இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொள்ளலாம்; பொதுவாக இதில் ஐந்து அறைகளுக்கு மேல் இருத்தலாகாது. இத்தகைய வீடுகளுக்கு வேண்டிய மனைகள் அரசாங்கத்தினுல், நிரந்தரமாக, கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. அவற்றின் அளவு ஸ்தல அதிகாரிகளால், நிலைநாட்டப்பட்டுள்ள தரங்களுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படுகிறது.

நகர்ப்புற மக்கள் தங்கள் உபயோகத்திற்காக கிராமப்புறத்திலும் ஒரு வீடுகட்டிக் கொள்ளலாம்.

தனிப்பட்டவர்களின் வீட்டு நிர்மாணம் நாட்டின் கட்டப்படும் மொத்த வீடுகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்காக உள்ளது. குறிப்பாக சிறு நகரங்களிலும், கிராமப்புறத்திலும் இது பரவலாக உள்ளது.

வீட்டுக்காக மனை கிடைக்கப் பெற்ற பிரஜைகள், அவர்களின் கட்டட நிர்மாண அமைப்புத் திட்டமும் முறைப்படி இருந்தால், அவர்களுக்கு 700 ரூபிள் வரை அரசாங்க வங்கியின் கடன் பெறுவதற்கு உரிமையுடையவர்கள், 2 சதவீத வட்டியில் ஏழாண்டு காலத்திற்கு இது வழங்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கும் டாக்டர்களுக்கும் இன்னும் இலகுவான நிபந்தனைகளின் பேரில் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு 1000 ரூபிள் வரையிலும் அரசாங்க வங்கிக் கடன்கள் வழங்கப்படுகின்றன. நகரங்களிலும் நகர்ப்புற வகை குடியிருப்புப் பகுதிகளிலும் குடியிருக்கும் டாக்டர்களுக்கும் ஆசிரியர்களைப் போன்ற அதே சலுகைகள் உண்டு; கிராமப்புறங்களில் வேலை செய்யும் டாக்டர்கள் 1200 ரூபிள் வரையிலும் கடன் பெறுவதற்கு உரிமையுள்ளவர்கள்; பத்தாண்டுகளில் இது திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

போரில் ஊனமுற்றோரும், கடமையாற்றும் போது ஊனமடைந்தவர்களும் 1000 ரூபிள்கள் வரையிலும் வட்டியில்லாக் கடன் பெறுகிறார்கள். கடன் வாங்கிய மூன்றாவது ஆண்டிலிருந்து பத்தாண்டுகளுக்குள் இது திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

வீடுகள் கட்டிக் கொள்ள விரும்பும் தனிப்பட்டவர்களுக்குத் தொழிற்சங்கங்கள் முக்கிய உதவி அளிக்கின்றன. வீட்டுமனைகளைப் பெறுவதற்கும், கடன்கள் பெறுவதற்கும், நிர்வாகத்தின் ஆதரவைப் பெறுவதற்கும் கூட்டு ஒப்பந்தங்களில் பொருத்தமான ஷரத்துகளைச் சேர்த்துக் கொள்ளச் செய்வதற்கும் அவை உதவுகின்றன.

தனிநபர்கள் உடைமையாகக் கொண்டுள்ள வீடுகள் அமைந்துள்ள மனைகள் அரசாங்கத் தேவைகளுக்கோ அல்லது பொதுத் தேவைக்காகவோ வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தால், அந்த வீடுகளின் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படுகிறது, அல்லது, அவர்கள் விரும்பினால் சகல வசதிகளுடன் கூடிய அரசாங்க குடித்தனப் பகுதிகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. எப்படியிருந்த போதிலும், இடிக்கப்படும் வீடுகளின் சாமான்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். அவர்கள் தங்கள் வீடுகளையும் பிற கட்டடங்களையும் வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ளவும், சம்பந்தப்பட்ட மனைகள் யாருக்கு மறு ஒதுக்கீடு செய்யப்படுகின்றனவோ அந்த ஸ்தாபனங்களின் செலவில் அந்த வீடுகளை மீண்டும் நிர்மாணம் செய்து தரும்படிச் செய்யவும் முடியும்.

**சோவியத் நகர அமைப்பின் போக்குகள்.** சோவியத் நகரமைப்பின் அடிப்படையான கோட்பாடு, மக்களுக்கு அவர்களது வேலைக்கும், ஓய்வுக்கும் சாத்தியமான அளவு சிறந்த நிலைமைகளை உருவாக்குவதாகும். நிலம் பொதுவுடைமையாயிருப்பதும்,

வீட்டு வசதி நிர்மாணத்தின் திட்டமிட்ட தன்மையும் நாடு தழுவிய அளவில் இது நடத்தப்படுவதும்-நவீன கால நகரமைப் பின் மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதை சாத்தியமாக்குகிறது. வீடுகள் நிர்மாணம் பெரும்பாலும் காலியாக இருக்கும் இடங்களிலேயே நடத்தப் பெறுகிறது; வீடுகள் நிறைந்த எஸ்டேட்டுகள், அல்லது அவற்றின் தொகுதிகள் குடியிருப்பு மாவட்டங்களாகவும், துணை-மாவட்டங்களாகவும் அமைகின்றன; ஒவ்வொன்றும் அதற்கே உரிய வசதிகள், சேவைகள் அமைப்பைக் கொண்டிருக்கின்றன.

இன்று அனேகமாக ஒவ்வொரு சோவியத் நகரமும் அதற்கே உரிய அபிவிருத்தி, மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டுள்ளது, இது 20 முதல் 25 ஆண்டுகளுக்கான திட்டமாக அமைந்துள்ளது. எனினும், நகரத்திட்ட அமைப்பாளர்கள் இன்னும் அதிக கால முன்நோக்கைக் கொண்டவர்களாக இருந்து, வருங்காலப் போக்குகளை முன் கூட்டியே கண்டு, நீண்ட காலகட்டங்களில் நகரங்களின் அபிவிருத்திக்கான சிறந்த நிலைமைகளை உறுதி செய்யும் வகையில் திட்டமிடவும் வேண்டியுள்ளது.

அரசாங்க அமைப்புகளால் அங்கீகாரம் செய்யப்படுவதற்கு முன்னால், நகல் பொதுத்திட்டங்கள் சோவியத் யூனியனின் கட்டடக் கலைஞர்களின் யூனியன் ஸ்தாபனங்களிலும், பத்திரிகைகளிலும் விவாதிக்கப் பெற்று, வெவ்வேறு துறைகளில் தனித்தேர்ச்சி யாளர்களின் கமிஷன்களினால் ஆய்வு செய்யப்படுகின்றன. அங்கீகாரம் செய்யப் பெற்ற ஒரு பொதுத் திட்டம், திட்டமிடு தலிலும், கட்டட நிர்மாணத்திலும் எழும் ஸ்தூலமான பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதில் நகர நிர்மாண அமைப்பாளர் களுக்கு வழிகாட்டுவதற்கான ஒரு நெறியாகிறது.

# திருமணமும் குடும்பமும்

*பிரஜைகளின் சமூக நலன்களையும் சொந்த நலன்களையும் இணைக்கும் ஓர் அங்கமாகிய குடும்பம் குறித்து சோவியத் சோஷலிச சமுதாயம் விசேஷ அக்கறை செலுத்துகிறது.*

மக்களிடையே தனி உடைமை உறவுகளை ஒழித்துக் கட்டியதன் மூலம், சௌகரியத்தை முன்னிட்டுத் திருமணம் செய்து கொள்வதன் சமூக-பொருளாதார ஆதாரங்களை சோஷலிசம் அகற்றியது.

சோவியத் திருமணச் சட்டம், மத சம்பந்தமான அல்லது இன சம்பந்தமான எத்தகைய தடைக் கட்டுப்பாடுகளையோ அல்லது வரம்புகளையோ அனுமதிப்பதில்லை. ஒரு கிர்கீஸ் பையன் ஒரு ரஷ்யப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டாலோ, அல்லது ஒருவருடைய உறவினர்களில் ரஷ்யர்கள், யூதர்கள், உக்ரேனியர்கள், தத்தாரியர்கள் அல்லது நாட்டில் வசிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட இனத்தவர்களில் யார் இருந்தாலும் எவரும் வியப்படைவதில்லை.

குழந்தைகள் தமது பெற்றோரின் முடிவுப்படி, தாயாரின் தேசிய இனத்தையோ அல்லது தந்தையின் தேசிய இனத்தையோ ஏற்றுக் கொள்கின்றன.

1968 ஜூன் 27ல் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத், திருமணம், குடும்பம் சம்பந்தமான ஒரு புதிய சட்டத்தை இயற்றியது; இது சோவியத் யூனியன் முழுமைக்கும், அதனுடைய அங்கப் பகுதிகளான ஒவ்வொரு குடியரசுக்கும் பொருந்தும். இந்த சட்டம் வெளிப்படையாகவே இவ்வாறு கூறுகிறது.

''பிரஜைகளின் சமூக நலன்களும், சொந்த நலன்களும் இசைவிணக்கமாக ஒன்றுகக் கலக்கும் சோவியத் குடும்பத்தின் நல்வாழ்வு சோவியத் அரசின் பிரதான அக்கறையாகும்.''

சோவியத் யூனியனில் இளைஞர்களுக்குக் குறைந்த பட்சத் திருமண வயது பதினெட்டு. பெரும்பாலான குடியரசுகளில் யுவதிகளுக்கும் திருமண வயது இதுவேதான். மிகவும் அசாதாரண மான நிலைமைகளில் பதினெட்டு வயதிற்கு முன்பே ஒரு திருமணம் பதிவு செய்யப்படலாம்; ஆனுல் இதற்குப் பெற்ருேரின் சம்மதமும், ஸ்தல அதிகாரிகளின் விசேஷ அனுமதியும் தேவை. உக்ரைன், மொல்தாவியா, இன்னும் வேறு சில யூனியன் குடியரசுகளிலும்—ஸ்தல சட்டத்தின்படி பெண்கள் பதினுறு வயதில் திருமணம் செய்து கொள்ளலாம்.

திருமணம், ஒரு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப் படுகிறது, இது ஸ்தல சோவியத்துடனே, அல்லது திருமண மாளிகைகளுடனே இணைந்ததாக இருக்கும். மணமகளும், மண மகனும் ஒரு விசேஷப் புத்தகத்தில் தமது (பெயர்களைக்) கை யெழுத்திடுகின்றனர்; அவர்களின் கையெழுத்துக்களை சோவியத் பார்லிமெண்டு உறுப்பினர் ஒருவரோ, அல்லது பதிவாளரோ, மற்றும் சாட்சிகளும் ஊர்ஜிதம் செய்கின்றனர்; அதன் பின்னர் தம்பதிகளுக்கு ஒரு திருமணச் சான்றிதழ் வழங்கப் படுகிறது.

சோவியத் யூனியனில் வசிக்கும் வெவ்வேறு தேசிய இனங்கள் அவர்களுக்கே உரிய திருமண வழக்கங்களைக் கொண்டுள்ளார்கள் என்பது உண்மையே. எனினும் மணமகன் வீட்டிலும், மணமகள் வீட்டிலும் எப்போதும் விழாக் கொண்டாட்டங்கள் நடை பெறுவதுண்டு.

சோவியத் யூனியனில் சுமார் 25 லட்சம் திருமணங்கள் ஒவ்வொரு ஆண்டும் பதிவாகின்றன, அதாவது, குடியிருக்கும் 1000 மக்களுக்கு பத்து திருமணங்கள் வீதம்.

1970ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி சோவியத் யூனியனில் 10.72 கோடி திருமணமானவர்கள் இருந்தனர் (1959ல் இது 8·65 கோடியாக இருந்தது).

பெற்ருேருக்குரிய கடமைகள். குழந்தைகள் வயதுக்கு வரு கின்ற வரையிலும் பெற்ருேர்கள் அவர்களைப் பராமரிக்க வேண்டும்; அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும், சமூக ரீதியில் பயனுள்ள செயல்பாட்டுக்கு அவர்களைத் தயார்ப் படுத்த வேண்டும்.

இவற்றிலெல்லாம் அவர்களுக்கு அரசாங்கத்தின் முழு ஆதரவு உண்டு. உதாரணமாக, ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்குச்

செல்வதற்கு வகை செய்வதற்காக அரசாங்கம் பெரிய குடும்பங் களுக்கும் தனிப்பட்ட தாய்மார்களுக்கும் நிதி உதவி அளிக் கின்றது. தேவைப்பட்டால் குழந்தைகள் அரசுக்குச் சொந்த மான நர்சரிகளிலும், குழந்தைப் பள்ளிகளிலும் அனுமதிக்கப் படுகின்றனர். குழந்தைகளுக்கான மருத்துவ நிலையங்கள், விளையாட்டுப் பள்ளிகள், விளையாட்டு அரங்குகள், தியேட்டர்கள், சினிமாக்கள் முதலியவற்றின் எண்ணிக்கையை அரசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு பெற்றோர் இருவரும் கடமைப்பட்டவர்கள். திருமண விலக்கு ஏற்படும் போது, குழந்தையைத் தன்னுடன் வைத்துக் கொள்ள பெற்றோர்களில் ஒருவர் விரும்பினால், பெற்றோரில் மற்றவர், தன்னுடைய ஊதியத் தில் 25 சதவீதத்தை ஒரு குழந்தைக்கும், இரண்டு குழந்தைகளா யிருந்தால் மூன்றில் ஒரு பங்கையும், இரண்டுக்கு மேற்பட்ட குழந்தைகளாயிருந்தால் ஊதியத்தில் பாதியையும் கொடுக்கும் படிக் கட்டாயப் படுத்தலாம். பராமரிப்புக்குப் பணம் வழங்கும் ஒரு பெற்றோருக்குப் புதிய குடும்பம் இருக்குமானால், அவர் கொடுக்கும் இந்த வாழ்க்கைப்படி, நீதிமன்ற உத்தரவின் மூலம் குறைக்கப்படலாம்.

**பிள்ளைத் தொடர்புக்குரிய கடமைகள்.** பெரும்பாலான சோவியத் குடும்பங்களில், குழந்தைகளுக்கும் பெற்றோருக்கு மிடையே சட்ட தாவாக்கள் என்றும் ஏற்படுவதில்லை. இருந்த போதிலும், அது ஏற்படும் போது சட்டத்தின் படி அது தீர்த்து வைக்கப்படுகிறது. தமது வயதான பெற்றோர்களை—தாய்மார் களை 55 வயதுக்குப் பிறகும், தகப்பன்மார்களை 60 வயதுக்குப் பிறகும், அல்லது அவர்கள் ஊனமுற்றிருந்தால் வயதைக் கணக்கிலெடுக்காமலும் — பராமரிப்பதற்குக் கடமைப்பட்டுள் ளார்கள். பெற்றோர்களைப் பராமரிக்கும் பொறுப்பு நீதிமன்ற உத்தரவின் மூலம் பிள்ளைகளின் மீது அமுலாக்கப்படுகிறது; நீதி மன்றம் நிர்ணயிக்கும் தொகை, சம்பாதிக்கும் ஊதியத்தைப் பொறுத்து இருக்கும்.

**மணவிலக்கு நடைமுறை.** திருமணத் தம்பதிகளில் ஒருவர் மணவிலக்கு கோரி நீதிமன்றத்தில் விண்ணப்பித்துக் கொண்டால், இதற்கான உள்-நோக்கங்களை நீதிமன்றம் மெய்ப்பித்து, தம்பதி களிடையே சமரசம் ஏற்படுத்துவதற்கு முயலவேண்டும். சமரச முயற்சி தோல்வி அடைந்து குடும்ப வாழ்க்கை நீடிப்பது சாத்தியமல்ல என்று நீதிமன்றம் முடிவு செய்தால், பின்னர் அது மணவிலக்கை அனுமதிக்கிறது.

தம்பதிகள் இருவரும் ஒத்துக் கொண்டு, அவர்களுக்கு வயதுக்கு வராத குழந்தைகளும் இல்லாதிருந்தால், சட்ட

நடவடிக்கைகள் இல்லாமலேயே பதிவாளர் அலுவலகத்தின் மூல மாகவே மணவிலக்கை அமுலாக்கலாம்.

மண விலக்கை நிராகரிக்கும் மனைவி கர்ப்பமுற்றிருந்தால், அல்லது ஓராண்டுக்கும் குறைவான வயதுடைய ஒரு குழந்தை உடையவராக இருந்தால் மணவிலக்கு மறுக்கப்படுகிறது.

மணவிலக்குக்குப் பின்னர், எந்த பெற்றோருடன் குழந்தை தங்க வேண்டுமென்று தீர்மானிக்கும் போது, நீதிமன்றங்கள் முற்றிலும் குழந்தையின் நலனை அடிப்படையாகக் கொண்டே செயலாற்றுகின்றன. சட்டத்தின் முன்னே இரு பெற்றோருக்கும் சம உரிமைகள் உண்டு. தகராறு ஏற்படுங் காலை, தாயின் பராமரிப்பு குழந்தைக்கு தேவையாயிருக்கும் காரணமே பிரதானமாக கவனிக்கப்படுகிறது; முடிவு, தாயாருக்கு சாதகமாக வழங்கப் படுகிறது. ஒவ்வொரு தனிப்பட்ட சம்பவத்திலும், குழந்தையின் பால் பெற்றோரின் கண்ணோட்டம், அதே போல் பெற்றோரின்பால் குழந்தையின் மனப்பாங்கு உள்ளிட்ட சகல சூழ்நிலைகளையும் நீதிமன்றம் பூரணமாக ஆய்வு செய்கிறது. எல்லா சந்தர்ப்பங்களிலும், மண விலக்குக்குப்பின், தமது குழந்தையைப் பார்ப்பதற்கு தகப்பனுருக்கும், தாயாருக்கும் உள்ள உரிமை உத்தரவாதம் செய்யப் படுகிறது.

**மணவிலக்கின் போது சொத்துப் பிரிவினை:** மண வாழ்க்கையின் காலகட்டத்தின் போது பெறப் பட்ட சொத்துக்களின் மீது தம்பதிகள் இருவருக்கும் சம உரிமை உண்டு. மனைவி வேலை செய்தாளா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது மனைவியின் உரிமைகள் சுயேச்சையானவையாகும். அவள் முற்றிலும் வீட்டு வேலைகளிலும், குழந்தைகளைப் பராமரிப்பதிலும் ஈடுபட்டிருந்த போதிலும், அவளுடைய நலன்கள் குறைவு படுத்தப் படுவதில்லை.

வீடு, கிராமப்புற வீடு, கார், வீட்டு உபயோக சாமான்கள், விலை மதிப்புடைய பொருள்கள் முதலியன பொதுச் சொத்தில் உள்ளடங்கும்; ஆனால், ஒவ்வொரு தம்பதியினுடைய சொந்த தனிப்பட்ட உடமைகளும், திருமணத்திற்கு முன்னால் தம்பதி களில் எவரும் கொண்டிருந்த சொத்தும், மரபுரிமையாகப் பெற்றது அல்லது பரிசாகப் பெற்றது ஆகியவை இதில் அடங்கா.

சில சந்தர்ப்பங்களில், தம்பதி ஒவ்வொருவருக்கும் சம பங்குகள் என்ற கோட்பாட்டிலிருந்து விலகிச் செல்வதற்கு சட்டம் அனுமதிக்கிறது. வழக்கமாக, இந்த விதிவிலக்கு, குழந்தைகளைத் தன்னுடன் வைத்துக்கொள்ளும் பெற்றோருக்கு சாதகமாக இருக்கும்.

தம்பதிகளில் ஒருவர் சமூக ரீதியில் பயனுள்ள வேலையில் ஈடுபட்டிருக்கா விட்டாலோ, அல்லது பொது சொத்தைக் குடும்பத்திற்குத் தீங்கு ஏற்படக் கூடிய வகையில் வீண் விரயம் செய்தாலோ, அப்போதும் சொத்தின் அதிகமான பங்கு மற்றைய தம்பதிக்குப் போய்ச் சேரும்.

தம்பதிகள் இருவரின் பொருளாயத ஸ்திரத் தன்மை, வருங்காலத்தில் நம்பிக்கை-சோவியத் வாழ்க்கை முறையில் உள்ள இந்த பிரதான அம்சங்கள் திருமண விவகாரங்களைத் தனி மனிதன், குடும்பம், சமுதாயம் ஆகியவற்றின் நலன்களின் அடிப்படையில், சபரசம் செய்வதற்கு உதவுகின்றன.

வழி வழிச் சொத்து உரிமை: வாரிசுகள் யாரும் இல்லாமல் காலமாகிவிட்ட ஒருவரின் சொத்து அரசுக்கு சேர்ந்ததாக அறிவிக்கப்படும். ஆயினும் இவ்வாறு ஏற்படுவது மிக அரிதே, பொதுவாக, தனிப்பட்ட சொந்த உடமைகள் மரபுரிமையாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. பெரும்பாலான நாடுகளில் உள்ளதற்கு மாறான முறையில் சோவியத் யூனியனில், வாரிசுரிமையாகப் பெறும் சொத்துக்களுக்கு வரி கிடையாது.

சட்டத்தின்படி முதலாவது வாரிசுகள்—சம உரிமை உடையவர்கள்—குழந்தைகள், (ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களும், தந்தை இறந்த பிறகு பிறந்த குழந்தைகளும் உள்ளடங்குவர்). உயிருடனுள்ள தம்பதி, பெற்றோர்கள் அல்லது பெற்றோராக ஏற்றுக் கொள்ளப் பட்டவர்கள். இரண்டாவது வாரிசுகள் (முதலாவது வாரிசுகள் இல்லாத நிலைமையில், அல்லது முதலாவது வாரிசுதாரர்கள் சொத்தைப் பெறுவதற்கு மறுக்கும் போது), காலமானவரின் சகோதரர்கள், சகோதரிகள், அவருடைய (அல்லது அவளுடைய) தந்தை வழியிலோ, தாய் வழியிலோ, பாட்டன், பாட்டிமார்கள். சட்டப்படியான வாரிசுதாரர்களில், இறந்து போனவரின் மீது அவர் இறப்பதற்கு முன்பாக ஓர் ஆண்டுக்குக் குறைவில்லாமல் பொருளாயத ரீதியில் சார்ந்திருந்தவர்களும் (குருதித் தொடர்பு உடையவர்களாயினும் சரி, இல்லாதவராயினும் சரி) உட்படுவர். அவர்களுக்கும், வாரிசு உரிமையுள்ள மற்றவர்களைப போல் சொத்தில் சம உரிமை உண்டு.

வாரிசு உரிமையுள்ள தமது பெற்றோர்கள் யாரும் உயிருடனிருக்கா விட்டால், பேரப்பிள்ளைகளும் அவர்களின் குழந்தைகளும் சட்டப்படி வாரிசுதாரர்களாவர். காலமான பெற்றோரைப்போல் சம பங்குகளை அடைவதற்கு அவர்கள் உரிமை உடையவர்கள்.

சட்டப்படியான ஒவ்வொரு வாரிசுதாரரும், வாரிசு சொத்தில் ஒரு சம பங்கைப் பெறுகிறார்; ஆனால் இது சம்பந்தமான உயில்

எதுவும் இல்லாதபோதுதான் அவ்வாறு பெற முடியும். சோவியத் பிரஜை ஒருவர் தனது சொத்து அனைத்தையுமோ, அல்லது அதனுடைய ஒரு பகுதியையோ தான் விரும்பும் எவருக்கும் உரிமையாக்கலாம்-அவர்கள் சட்டப்படியான வாரிசுதாரர்களில் அடங்கியிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. தன் சொத்து முழுமையும் அவர் எழுதி வைத்து விடலாம், அல்லது உதாரணமாக, தனது வீடு, அல்லது கார், முதலியவற்றை யார் யாருக்கு கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அவரவர்களுக்கு எழுதி வைக்கலாம். எனினும், சட்டப்படியான வாரிசுகள் ஊனமுற்றிருந்தாலோ, அல்லது வயதுக்கு வராதவர்களாக இருந்தாலோ, சட்டம் அவர்களின் உரிமையைப் பாதுகாக்கும், உயிலைப் பொருட்படுத்தாது அவர்கள் இந்த உரிமையைப் பெறுகிறார்கள், சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்ற வகையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ள பங்கில் மூன்றிலிரண்டு பங்கினைப் பெறுவார்கள். அரசாங்கம் அல்லது பொது ஸ்தாபனங்களுக்கும் சொத்துக்களை எழுதி வைக்கலாம். அடிக்கடி, கலைப் படைப்புகள், மதிப்புமிக்க நூல் நிலையங்கள், மற்றும் பிற தனிச்சிறப்பு வாய்ந்த கலாசார ஆஸ்திகள் ஆகியவற்றின் உடைமையாளர்கள் இவ்வாறுதான் செய்கிறார்கள்.

**அயல் நாட்டவரின் தனி உடைமை உரிமைகளுக்குப் பாதுகாப்பு.** மாஸ்கோ வழக்குரைஞர்கள் ஸ்தாபனத்தின் தலைமைக்குழு இன்யூர் கொலிஜியா என்ற ஓர் உட்குழுவைக் கொண்டுள்ளது.

இந்த அரசு-சார்பற்ற தொழில் ரீதியான ஸ்தாபனம் வெளி நாடுகளிலிருந்து சோவியத் பிரஜைகள் வாரிசு உரிமையாகப் பெறுகின்ற சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பெரும்பாலான நிகழ்ச்சிகள் சம்பந்தமாயும், சோவியத் யூனியனிலிருந்து வெளி நாட்டவர் வாரிசுரிமையாகப் பெறும் சொத்துக்கள் சம்பந்தமாயும் ஆய்வு செய்கின்றது. சோவியத் ஸ்தாபனங்களுடனான பேரங்களில் வெளிநாட்டு வாணிப, தொழில்துறை, கடல் போக்குவரத்து நலன்கள் சம்பந்தமாயும் இந்த ஸ்தாபனம் வாதாடுகிறது. இது போன்றே, வெளி நாட்டவர் சோவியத் பிரஜைகளிடமிருந்து வாழ்க்கைப்படி கோரும் வழக்குகளையும், அதுபோன்ற சோவியத் பிரஜைகள் வெளிநாட்டவரிடமிருந்து வாழ்க்கைப்படி கோரும் வழக்குகளையும் இன்யூர்கொலிஜியா ஆய்வு செய்கிறது.

இந்த ஸ்தாபனம் உலகின் பல நாடுகளிலுள்ள வழக்கறிஞர்களுடன் பரந்த தொடர்புகளைக் கொண்டுள்ளது. இது—பரஸ்பர அடிப்படையில்—நிரந்தரப் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. சோவியத் பிரஜைகள், ஸ்தாபனங்களின் பொது-சட்டத்தின் படியான உரிமைக் கோரிக்கைகளை கவனிக்கிறது.

இன்யூர்கொலிஜியாவின் வழக்கறிஞர்கள், தமது எல்லா சக வழக்கறிஞர்களைப்போன்றே, கட்சிக்காரர்களிடமிருந்து கட்டணம் பெறுகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் இன்யூர்கொலிஜியா, ஆயிரக்கணக்கான வழக்குகளை பெரும்பாலும் வாரிசு உரிமைகளைப் பற்றியவை — பரிசீலனை செய்கிறது.

சோவியத் பிரஜை ஒருவர் தனது சொத்தை அன்னியர் ஒருவருக்கு எழுதி வைத்துவிட்டுச் சென்ருல், சோவியத் யூனியனின் அன்னிய வர்த்தக வங்கி, தேவையான தொகையை வெளிநாட்டுச் செலாவணியில் அதற்குரியவரின் பெயருக்கு மாற்றுகிறது. சோவியத் யூனியன், வாரிசு உரிமை சம்பந்தப்பட்ட விஷயங்களில் பரஸ்பர ஒப்பந்தங்களைக் கொண்டுள்ள சகல நாடுகளின் பிரஜைகள் சம்பந்தமாகவும் இத்தகைய பேரங்கள் எத்தகைய கஷ்டமுமின்றி நடத்தப்படுகின்றன. நடைமுறையில், சோவியத் யூனியன் ராஜிய உறவுகள் கொண்டுள்ள சகல நாடுகளும் இவற்றில் அடங்கும்.

வெளிநாட்டுப் பிரஜைகள், சோவியத் யூனியனில் வசிக்கும் தமது உறவினர்களுக்கோ அல்லது பிற நபர்களுக்கோ தமது சொத்தை வாரிசு உரிமையாக எழுதி வைக்கலாம். இத்தகைய அனுகூலம் பெறும் நபர்கள், வெளி நாடுகளிலிருந்து வாரிசு உரிமையாகச் சொத்துக்களைப் பெறுவதற்கு எத்தகைய தடையும் இல்லை. பணத்தை விட்டுச் செல்லும் நபருக்கு, சோவியத் யூனியனிலுள்ள தனது உறவினர்களின் சரியான விலாசம் தெரியாவிட்டால், இன்யூர்கொலிஜியா, இது சம்பந்தமாகப் பின்வரும் பொருத்தமான அறிவிப்பைப் பத்திரிகைகளில் வெளியிடுகிறது: ''மரணமடைந்த திரு. ''என்'' அவர்களின் சொத்து சம்பந்தமாக, அவருடைய பேரன் ''எம்'' அவர்களோ, அல்லது பிற உறவினர்களோ எங்களுக்கு எழுதும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.'' இன்யூர்கொலிஜியாவின் விலாசம், 13, த்வெர்ஸ்கோய் பொலிவார், மாஸ்கோ.

# கல்வி

உயர்கல்வி உட்பட, அனைத்து மட்டங்களிலும், சோவியத் பிரஜைகளுக்கு இலவசக் கல்வி பெறும் உரிமை உண்டு.

ஜார் கால ரஷ்யாவில், மக்கட்தொகையினரில் முக்கால் வாசிப்பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். தேசியப் புறப் பகுதிகளிலிருந்தோர் அநேகமாக அனைவரும் முற்றுக எழுத்தறி வற்றவர்கள். 1897-ம் ஆண்டு மக்கட்தொகை கணக்கீட்டின்படி, தாஜிக், கிர்கீஸ், துருக்மன், உஸ்பெக், கசாக் ஆகியோரிடையே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் அளவு முறையே 0.5, 0.6, 0.7, 1.6, 2 சதவிகிதமேயாகும். மொத்த மக்கட்தொகையான 12 கோடி 56 லட்சம் பேர்களில் 14 லட்சம் பேரே ஆரம்பப் பள்ளிகளைத் தாண்டியவர்கள். நகர்ப்பகுதிகளில் ஆரம்பக் கல்வி யைத் தாண்டியவர்கள் 1000-ல் 61 பேராவர்; கிராமப் பகுதி களில் அந்த விகிதம் 1000க்கு 3 ஆகும். தொழிலாளர் குடும் பங்களிலுள்ள பெருவாரியான குழந்தைகள் செகண்டரிக் கல்வி யைப் பூர்த்தி செய்வது பற்றி சிந்தித்துக் கூடப் பார்க்க முடியாத வர்களாயிருந்தனர். புரட்சிக்கு முந்திய ரஷ்யாவில், 2,90,000 பேர்களே உயர் கல்வியோ, அல்லது முற்றுப்பெறுத உயர் கல்வி யோ அல்லது விசேஷ செகண்டரிக் கல்வியோ பெற்றிருந்தனர்.

1917ல் நடைபெற்ற அக்டோபர் சோஷலிசப் புரட்சி, உழைக்கும் மக்களனைவருக்கும் கலாசாரத்தையும், கல்வியையும் எளிதில் கிட்டுமாறு செய்தது.

1919ல் நிறைவேற்றப்பட்ட எழுத்தறிவின்மையை அகற்றும் ஒரு சட்டத்தின்படி நகரங்களிலும், கிராமங்களிலும், தொழிற் சாலைகளிலும், ஆலைகளிலும், எழுத்தறிவின்மையைப் போக்கு வதற்காக விசேஷ வகுப்புகள் தொடங்கப்பட்டன; லட்சம்,

பத்து லட்சக்கணக்கான வயது முதிர்ந்தோர் எழுதவும், படிக்கவும் தொடங்கினர். செகண்டரிப் பள்ளிகளும், உயர் கல்வி நிறுவனங்களும் முற்றிலும் புனரமைக்கப்பட்டன; கல்வி அனைவருக்கும் இலவசமாக்கப்பட்டது; பாடங்கள் அவரவர்களது தேசிய மொழிகளிலேயே நடத்தப்பட்டன. அந்த நாட்களிலிருந்தே, கல்லூரிகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் செல்லும் தொழிலாளர், விவசாயிகளின் குழந்தைகளுக்கு அரசு உதவித் தொகைகளை வழங்கி வருகிறது.

படிப்படியாக, எல்லோருக்கும் கட்டாய நான்காண்டுக் கல்வி நாடு முழுவதும் புகுத்தப்பட்டது.

1920ல், லெனின் இளைஞர்களை படியுங்கள், படியுங்கள், படியுங்கள் என வேண்டி அறைகூவல் விடுத்தார்.

கடந்தகாலத் தலைமுறையினரின் கலாசாரப் பாரம்பரியத்திலிருந்து தேவையானவற்றையும், பயனுள்ளவை அனைத்தையும் கவனமாகத் தேர்ந்தெடுக்கும்படியும், அதன் அடிப்படையில் ஒரு புதிய, சோஷலிச கலாசாரத்தை நிர்மாணிக்கும்படியும், மக்களிடையே ஒரு புதிய அறிவுத் துறையினரை உருவாக்கும்படியும் அவர் கேட்டுக் கொண்டார். அரசும், சமூகமும், ஊக்குவித்த ஒரு பெரும் அறிவுத் தாகம், சோவியத் வாழ்வின் சிறப்பு அம்சமாயிற்று.

சோவியத் ஆட்சியின் போது, வரலாற்றிலேயே ஈடிணையற்ற ஒரு கலாசாரப் புரட்சி சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் தோன்றிற்று. இதற்கு முன்னர் பணம் படைத்தவர்களின் விசேஷ உரிமையாக இருந்த கல்வியையும், கலசாரத்தையும் சோஷலிசம் சமூகத்தின் எல்லாப் பகுதியினருக்கும், அனைத்து மக்களுக்கும் கிடைக்குமாறு செய்தது.

பொதுக்கல்வி அமைப்பை மேலும் வளர்க்கவும், மேம்படுத்தவுமான வழிகளை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24-வது காங்கிரஸ் வகுத்துரைத்தது. காங்கிரஸின் முடிவுகளுக்கு ஏற்ப, பொதுக்கல்வி, தொழிற்கல்வி, விசேஷ செகண்டரி, உயர் கல்வியை மேலும் முன்னேற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை வரையறுத்து கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியும், சோவியத் அரசாங்கமும் பல முடிவுகளை மேற்கொண்டுள்ளன.

1973 ஜூலையில்,சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத், கல்வி குறித்த சோவியத் ஒன்றியம், யூனியன் குடியரசுகளின் சட்ட அடிப்படைகளை நிறைவேற்றியது; அவை, கிண்டர்கார்டன்களிலிருந்து,பல்கலைக் கழகங்கள் வரையிலான பொதுக்கல்வி அனைத்

தையும் அமைப்பதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை விவரிக்கிறது.

அக் கோட்பாடுகளாவன :

— எல்லாப் பிரஜைகளுக்கும் — இன, வருண, பால், சமயக் கருத்து, சொத்து அந்தஸ்து, சமூக நிலை என்ற வேறுபாடுகளின்றி — கல்விக்கான சம வாய்ப்புக்கள்;

— எல்லாக் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் கட்டாயக் கல்வி;

— எல்லாக் கல்வி நிறுவனங்களும், அரசுத் தன்மை வாய்ந்ததாகவும், பொதுத்தன்மை வாய்ந்ததாகவும் இருத்தல்;

— போதனா மொழியைச் சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை; அதாவது, ஒருவரது சொந்தத் தாய் மொழியிலோ அல்லது சோவியத் யூனியனைச் சேர்ந்த பிற எந்த மொழியிலோ கல்வி போதனையைப் பெறும் உரிமை;

— உயர்கல்வி உட்பட, கல்வியின் எல்லா மட்டங்களிலும் இலவச போதனை;

— சிலவகைப்பட்ட மாணவர்களுக்கு அரசு பராமரிப்பு; மாதாந்தர மானியங்களும், பிற வசதிகளையும் அளித்தல்;

— பொதுக்கல்வியின் ஒருங்கிணைந்ததொரு அமைப்பும், கல்வியின் பல்வேறு கட்டங்களிலும் ஒரு தொடர்ச்சியும்; இவை தான், கீழ்மட்டத்திலிருந்து கல்வியின் உயர் மட்டத்திற்கான மாற்றத்தை சாத்தியமாக்கும் அம்சங்களாகும்;

— கல்வி போதனையை, கம்யூனிஸ்டு வளர்ப்பு முறையுடன் இணைத்தல்; குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் கல்வி போதிப்பதில் பள்ளி, குடும்பம் பொதுமக்கள் ஆகியோரது கூட்டு முயற்சிகள்;

— மலரும் தலைமுறையினரது போதனையையும், வளர்ப்பையும், வாழ்வுடனும், கம்யூனிச நிர்மாண நடைமுறையுடனும் ஒன்று சேர்த்தல்;

— விஞ்ஞான ரீதியாகக் கல்வியை அணுகுதல்; விஞ்ஞானம் தொழில் நுட்பம், கலாசாரம் ஆகியவற்றின் நவீன வளர்ச்சியின் அடிப்படையில் கல்வி நடைமுறையைத் தொடர்ந்து மேம்படுத்துதல்;

— கல்வியிலும், வளர்ப்பு முறையிலும் மனித நேயத்தையும் மிக உயர்ந்த தார்மீக நெறிமுறைகளையும் கடைப்பிடித்தல்;

— ஆண்களும், பெண்களும் சேர்ந்து பயிலுதல்;

— மதச் செல்வாக்கு அற்ற, கல்வியின் தன்மை;

பள்ளி செல்லுமுன் குழந்தைகளுக்கான நிலையங்கள், பொது ஆரம்ப, செகண்டரிக் கல்வி, பள்ளிகளுக்கு வெளியேயான பொழுது போக்கு, தொழிற்பயிற்சி, தனித் தேர்ச்சி யளிக்கும் செகண்டரி, உயர்கல்வி ஆகிய அனைத்தையும் தழுவிய, ஒரு நன் கமைக்கப்பட்ட ஒன்றிணைந்த பொதுக் கல்வி அமைப்பு சோவியத் யூனியனில் உள்ளது.

**பள்ளி செல்லுமுன் குழந்தைகளுக்கான நிறுவனங்கள்,** பள்ளிக்கூடம் செல்வதற்குக் குழந்தைகளைத் தயாரிப்பதற்கு குடும்பத்திற்கு உதவுகின்றன. குழந்தைகளைக் கவனமுடன் பராமரித்துக் கொள்வதன் மூலம், தாய்மார்கள் தங்களது வேலைகளையும், தொழில்களையும் மேற்கொள்வதையும், அவர்கள் சமூகப் பணியில் செயலூக்கமுடன் பங்கேற்பதையும் அவை சாத்திய மாக்குகின்றன.

கிண்டர் கார்டன்களும், நர்சரிகளும் சுமார் ஒரு கோடி குழந்தைகளுக்கு இடமளிக்கின்றன; இந்த நிறுவனங்களைப் பராமரிப்பதற்கான செலவில் முக்கால் வாசியை அரசு ஏற்றுக் கொள்கிறது.

**சோவியத் பள்ளிகள்,** ஆரம்ப (முதல் மூன்று வகுப்புகள்) எட்டாண்டு (ஒன்று முதல் எட்டு ஆண்டுகள்) மற்றும் செகண்டரி (ஒன்று முதல் 10 ஆண்டுகள் வரை) பள்ளிக்கூடங்களைக் கொண் டவையாகும்.

சகலருக்கும் எட்டு ஆண்டுக்கல்வி என்பது, வளரும் தலை முறையினருக்கு, 1962-ம் ஆண்டு புகுத்தப்பட்டது. நடப்பு ஐந்தாண்டு காலத்தில், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24-வது காங்கிரஸ் முடிவுகளுக்கேற்ப, சகலருக்கும் செகண்டரிக் கல்வி முறை புகுத்தப்படுவது பூரணமாகும்.

மாலைநேரக் (ஷிப்ட்) கல்விக்கூடங்களும், அஞ்சல் வழி பொதுக் கல்விக் கூடங்களும் உள்ளன; பணிபுரியும் இளைஞர்கள் இவற்றின் மூலம் தங்களது செகண்டரிக் கல்வியைப் பூர்த்தி செய்து கொள்ளுகின்றனர். ஒவ்வோர் ஆண்டும், ஏறக்குறைய 10 லட்சம் இளைஞர்கள், தங்களது எட்டாண்டு, பத்தாண்டுக் கல்வியை, பகுதிநேர மாணவர்களாகவே பூர்த்தி செய்கின்றனர்,

மாணவர்களது பின்னணியை விரிவாக்கவும், அவர்களது திறமைகளை வளர்ப்பதற்கும் தங்களுக்குரிய தொழில்களைத் தேர்ந் தெடுப்பதற்கும் உதவும் பொருட்டு, பொதுக் கல்விக் கூடங்களில் இஷ்ட பாடக் கல்வி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதே நோக் கத்துடன் தான், பல பள்ளிகளில் விசேஷ பாடங்களும், சில கைத்திறன் பயிற்சியும், கலை, விளையாட்டு ஆகியவையும், ஒரு முன்னேறிய திட்டத்தின் பகுதியாக போதிக்கப்படுகிறது.

நீடித்த வைத்திய சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளும், இளைஞர்களும், நகரங்களுக்கருகே வனங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆரோக்கிய நிலைய பொதுக் கல்விக் கூடங்களில் இடமளிக்கப் படுகின்றனர். நீண்டகாலமாக ஆஸ்பத்திரிகளிலும், ஆரோக்கிய விடுதிகளிலும் தங்கியுள்ள குழந்தைகளுக்கும், அல்லது வீடுகளி லேயே படுக்கையில் இருக்கும் குழந்தைகளுக்கும் முறையான பாடங்கள் நடத்தப்படுகின்றன.

உடல், உளக் குறைபாடுள்ள குழந்தைகள்,விசேஷ பொதுக் கல்விப் பள்ளிகளுக்கோ அல்லது போர்டிங் பள்ளிகளுக்கோ செல் லுகின்றனர்; அவை அக்குழந்தைகளின் கல்வியையும், தொழிற் பயிற்சியையும், ஆரோக்கியத்தையும் கவனித்துக் கொள்ளு கின்றன.

1972-73 பள்ளி ஆண்டின் போது, சோவியத் யூனியனில்; 4,93,24,000 மாணவர்களையும் (1,40,72,000 பேர் முதல் மூன்று வகுப்புக்களையும், 2,63,19,000 பேர் 4-வதிலிருந்து எட் டாவது வகுப்புகளிலும், 89,33,000 பேர் 9-வது, 10-வது வகுப்புகளிலும் இருந்தனர்) மொத்தத்தில் 26,86,000 ஆசிரியர் களையும் கொண்ட 1,81,000 பள்ளிக்கூடங்கள் (46,700 பத் தாண்டுக் கல்விக்கூடங்கள் உட்பட) இருந்தன.

1973-ல், ஏறக்குறைய 50 லட்சம் பேர் 8 ஆண்டு பள்ளி களிலும், 37 லட்சம் பேர் பத்தாண்டுக் கல்வித் திட்டத்தையும், பயின்று தேறினர். தற்போது, எட்டாண்டுக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்களில் ஏறக்குறைய 90 சதவிகிதத்தினர், பொது செகண் டரிப் பள்ளிகளிலோ, அல்லது செகண்டரிக் கல்வியை அளிக்கும் பிற நிலையங்களிலோ தங்களது கல்வியைத் தொடர்கின்றனர்.

**தொழிற் பயிற்சி:** 1940-ம் ஆண்டு வரை, இளம் தொழி லாளர்கள், தங்கள் பயிற்சியைப் பிரதானமாக தொழிற்சாலை களில் நேரடியாகவோ, அல்லது தொழிற்சாலைப் பயிற்சிப் பள்ளி களிலோதான் பெற்று வந்தனர். அந்த ஆண்டிற்குப் பின்னர் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் என்ற அரசு அமைப்பு தோற்று விக்கப்பட்டது. தற்போது, இந்த வகையைச் சேர்ந்த 5,700க்கும்

## பொது செகண்டரிப் பள்ளிகளின் தரப்படுத்தப்பட்ட பாடத்திட்டம்

| பாடங்கள் | வாரத்திற்கு அந்தந்தப் படிவங்களில் செலவிடப்படும் மணிநேரம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | I | II | III | IV | V | VI | VII | VIII | IX | X |
| 1. தாய் மொழி | 12 | 10 | 10 | 6 | 6 | 3 | 3 | 2 | 2/0 | — |
| 2. இலக்கியம் | — | — | — | 2 | 2 | 2 | 2 | 3 | 4 | 3 |
| 3. கணக்கியல் | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 5 | 5 |
| 4. வரலாறு | — | — | — | 2 | 2 | 2 | 2 | 3 | 4 | 3 |
| 5. சமூக விஞ்ஞானம் | — | — | — | — | — | — | — | — | — | 2 |
| 6. இயற்கை வரலாறு | — | 2 | 2 | 2 | — | — | — | — | — | — |
| 7. பூகோளம் | — | — | — | — | 2 | 3 | 2 | 2 | 2 | — |
| 8. உயிரியல் | — | — | — | — | 2 | 2 | 2 | 2 | 0/2 | 2 |
| 9. பௌதிகம் | — | — | — | — | — | 2 | 2 | 3 | 4 | 5 |
| 10. வானியல் | — | — | — | — | — | — | — | — | — | 1 |
| 11. வரைவு வடிவப் பயிற்சி | — | — | — | — | — | 1 | 1 | 1 | — | — |
| 12. அயல்மொழி | — | — | — | — | 4 | 3 | 3 | 2 | 2 | 2 |
| 13. இரசாயனம் | — | — | — | — | — | — | 2 | 2 | 3 | 3 |
| 14. நுண்கலைகள் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | — | — | — | — |
| 15. பாடல், இசை | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | — | — | — |
| 16. உடற் பயிற்சி | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| 17. உழைப்புப் பயிற்சி | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| மொத்த கட்டாயப் பாடங்கள் | 24 | 24 | 24 | 24 | 30 | 30 | 30 | 30 | 30 | 30 |
| இஷ்ட பாடங்கள் | — | — | — | — | — | — | 2 | 4 | 6 | 6 |
| மொத்த மணிநேரம் | 24 | 24 | 24 | 24 | 30 | 30 | 32 | 34 | 36 | 36 |

அதிகமான பள்ளிகள் உள்ளன. 1,100 தனித் துறைகளில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1965லிருந்து 1970 வரையான காலத்தில், 70 லட்சம் பேருக்கும் மேற்பட்டோர் தொழிற்பயிற்சி பெற்றனர். 1971 லிருந்து 1975 வரையான காலத்தில் மேலும் 90 லட்சம் பேர் தொழிற் கல்வி நிலையங்களில் பயிற்சி முடித்து வெளி வருவர். துரிதமான விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றமும், உற்பத்தி, சர்வாம்ச எந்திர மயமாக்கல், தன்னியக்கமயமாதலை யும் அடைந்து வரும் இக்காலத்தில், ஒரு தொழிலாளியின் பிரதான பணிகள், எந்திரங்களை இயக்குதல், கட்டுப்படுத்துதல் மிக நவீன எந்திர அமைப்புக்களையும், பொறிகளையும் நிர்வகித்தல் ஆகியவையே; இதற்கு, தொழில் நுட்பச் சிந்தனையில் ஆழ்ந்த அறிவும், பெரும் திறனும் தேவைப்படுகிறது.

பூரணமான செகண்டரிக் கல்வியுடன், ஒரு மாணவனுக்கு ஒரு தொழிலையும் கற்றுக் கொடுக்கும் வகையில், பல பள்ளிகளை யும் ஆங்காங்கே விரிவுபடுத்துவதே, தொழிற்பயிற்சித் துறையில் மிக முக்கியமான பணியாகும்.

1973-ல், நாட்டில் ஏறக்குறைய 1,300 செகண்டரி தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. 1975 இறுதிக்குள்ளாக, இவ் வகைப் பள்ளிகளிலுள்ள மாணவர்களின் தொகை, முழுநேர தொழிற்பள்ளிகளிலுள்ள மொத்த மாணவர் எண்ணிக்கையில் 40 சதவிகிதத்தை எட்டவிருக்கிறது. பொதுவாக, ஏழாண்டுக்குக் குறையாத பள்ளிப் பயிற்சியுள்ள மாணவ, மாணவிகளையே தொழிற்பயிற்சிப் பள்ளிகள் சேர்த்துக் கொள்ளுகின்றன. இங்கும் பயிற்சி இலவசமே. பல மாணவர்களுக்கும் இலவச உடை, காலணி, தங்குமிடம், உணவு ஆகியவையும் வழங்கப்படுகின்றன. மீதியுள்ளவர்கள் அரசாங்க உதவித் தொகை பெறுகின்றனர். பயிற்சியைப் பூர்த்தி செய்யும் அனைவருக்கும், அவரவர்களது சொந்தத் தொழிற் துறைகளிலேயே வேலையளிக்கப்படுகிறது.

சாதாரண நகர்ப்புற தொழிற்பள்ளிகளில், பயிற்சிக் காலம் ஒன்று முதல் மூன்றாண்டுகளாகும்; தொழிற்பயிற்சியுடன் சேர்த்து, செகண்டரிக் கல்வியையும் அளிக்கும் மூன்று முதல்—நான்காண்டு பயிற்சிக் காலத்தைக் கொண்ட பள்ளிகளும் உள்ளன. தொழிற்பள்ளிகள், பல்வேறு தொழிற் துறைகளில் நிர்மாணம், போக்குவரத்து, வர்த்தகம், பொதுச் சேவைத் துறை களில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கின்றன. கிராமப் புறப்பள்ளிகள், டிராக்டர் பிற எந்திர ஓட்டிகள், பண்ணை எந்திர ரங்கள், விசைக்கருவிகள் ஆகியவற்றை இயக்குபவர்களுக்கு ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் பயிற்சி யளிக்கின்றன.

தொழிற் பள்ளிகளின் பாடத் திட்டத்தில், தத்துவமும், நடைமுறையும் சேர்ந்துள்ளன. பயிற்சிக் காலத்தில், நடைமுறைப் பயிற்சிக்கென 60 -70 சதவிகித நேரம் ஒதுக்கப்படுகிறது. முதலில் மாணவர்கள் அடிப்படைத் தேர்ச்சியை பள்ளிகளிலுள்ள, பட்டறைகளிலும், பண்ணைகளிலும் பெறுகின்றனர். பின்னர், பயிற்சி ஆலைகளிலும், கூட்டுப்பண்ணை, அரசுப் பண்ணைகளிலும் தொடர்கிறது; அங்கு எதார்த்த வேலைச் சூழலில் அவர்களது நடைமுறைத் தேர்ச்சி வளர்ச்சியடைகிறது.

தத்துவார்த்தப் பயிற்சியில், தொழில் நுட்பப் பாடங்களும் (மின் பொறியியல், ரேடியோ மின்னணுவியல், தொழில் நுட்ப எந்திரவியல், புனைவரைவு போன்ற பிற) பொதுப் பாடங்களும், (கணிதம், பௌதிகம், இரசாயனம் போன்றவை) போதிக்கப் படுகின்றன.

1973-ம் ஆண்டில், நாட்டின் தொழிற்பள்ளிகள், 18,00,000 இளம் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்துள்ளன. ஆலைகளிலும், அலுவலகங்களிலும், பண்ணைகளிலும், தனிப்பட்ட, குழு ரீதியிலான பள்ளி முறைப் பயிற்சியின் மூலம், ஏறக்குறைய 2 கோடி தொழிலாளர்கள் புதிய தொழில் முறைத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**விசேஷ செகண்டரிப் பள்ளிகளில்,** எட்டு அல்லது பத்தாண்டுக் கல்வியைப் பூர்த்தி செய்த இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர்; இங்கு 500க்கும் மேற்பட்ட பல்வேறு தனித் துறைகளில் தேர்ச்சியளிக்கப்படுகின்றனர்.

விசேஷ செகண்டரிப் பள்ளிகளை, இரு பிரதான பிரிவுகளாக பிரிக்கலாம். முதல்வகை, தொழிற்கூடம், நிர்மாணம், போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து, விவசாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் தனித் தேர்ச்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் தொழில் நுட்பப் பள்ளிகள் ஆகும்; இரண்டாவது பிரிவு, ஆசிரியர்கள், வைத்தியக் கூடப் பணியாளர்கள், இசைக் கலைஞர்கள், ஓவியர்கள், நாடகத்துறையைச் சோந்தவர்கள், மாலுமிகள், போன்றோருக்குப் பயிற்சி தரும் நிலையங்களைக் கொண்டதாகும்.

எந்திரவியல், தொழில் நுட்பவியல், உலோகவியல், மின்னியல், ரேடியோ, சுரங்கவியல் போன்ற துறைகளில் நிபுணர்களை பயிற்றுவிப்பது விசேஷ செகண்டரிப் பள்ளிகளேயாகும். கால்நடை நிபுணர்கள், விவசாயப் பொருளியலாளர்கள், ஜூனியர் எந்திரவியலாளர்கள் ஆகியோரின் பயிற்சி விவசாயத் தொழில் துறையைச் சேர்ந்ததாகும். இப்பள்ளிகளிலிருந்து கட்டட நிர்மாணத் துறைக்கு, கோத்திணைப்பாளர்கள், திட்டமிடுவோர்,

**உருக்குத் துறையிலும், வலுப்படுத்தப்பட்ட கான்கிரீட் நிர்மாணத் துறையிலும் பணிபுரியக் கூடிய ஊழியர்களுக்கான தொழிற்பயிற்சி பள்ளிகளின் பாடத்திட்டம்**

(பொது செகண்டரிப் பாடத்திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது)

| பாடங்கள் | மூன்றாண்டுப் பயிற்சி மணி நேரம் |
|---|---|
| **I. தொழிற்பயிற்சி** | |
| 1. உற்பத்திப் பயிற்சி | 2,224 |
| 2. விசேஷ தொழில்நுட்பம் | 334 |
| 3. பொருள்களின் தன்மை பற்றி | 73 |
| 4. எந்திர வரைபடம் | 112 |
| 5. மின் பொறியியலும், அடிப்படை தொழில்துறை மின்னணுவியலும் | 126 |
| 6. உடற் பயிற்சி | 212 |
| மொத்தம் | 3081 |
| **II. பொதுக் கல்வி** | |
| 1. தாய் மொழி | 90 |
| 2. இலக்கியம் | 212 |
| 3. கணிதம் | 430 |
| 4. வரலாறு | 202 |
| 5. சமூக விஞ்ஞானம் | 60 |
| 6. பூகோளம் | 78 |
| 7. உயிரியல் | 269 |
| 8. பௌதிகம் | 202 |
| 9. வானியல் | 17 |
| 10. இரசாயனம் | 178 |
| 11. அயல் மொழி | 192 |
| மொத்தம் | 1930 |
| ஆலோசனைகள் | 100 |
| தேர்வுகள் | 54 |
| மொத்தம் | 5165 |
| அழகியற் கல்வி (இஷ்டபாடம்) | 60 |
| ஆக மொத்தம் | 5225 |

அளவையியலர்கள் போன்ற தொழில் நுட்ப நிபுணர்கள், செல் லுகின்றனர். வர்த்தகப்பண்ட நிபுணர்கள், கணக்காயர்கள் ஆகி யோர் வர்த்தகத் தொழில் நுட்பப் பள்ளிகளிலிருந்து செல் கின்றனர். போதனுவியல், இசை, கலைப்பள்ளிகளிலிருந்து ஆரம் பப் பள்ளி ஆசிரியர்களும், இசை, ஓவிய ஆசிரியர்களும், பொதுப் பள்ளிகள், கிண்டர்கார்டன்களில் பணி புரிவதற்கான ஆசிரிய, ஆசிரியைகளும் பயிற்சி பெற்று வெளியேறுகின்றனர். வைத்தியப் பள்ளிகள், உதவி டாக்டர்களுக்கும், மருந்தியலாளர்களுக்கும், பல்வைத்திய எந்திரவியலாளர்களுக்கும், நர்ஸுகளுக்கும் பயிற்சி யளிக்கின்றன.

விசேஷ செகண்டரிப் பள்ளிகளில், மாணவர்கள், பொது செகண்டரிக் கல்வியுடன் சேர்த்து, தங்கள் தங்கள் விசேஷத் துறைகளில் தத்துவார்த்த, நடைமுறை அறிவைப் பெறுகின்றனர். இப்பள்ளிகளில், இறுதி ஆண்டுகள் பெரும்பாலும் நடைமுறைப் பயிற்சிக்கே ஒதுக்கப்படுகின்றன. இறுதியில், ஒவ்வொரு மாணவனும் ஓர் ஆய்வுக்கட்டுரை தயாரிப்பதுடன், அரசுத் தேர்வுகளிலும் வெற்றி பெற வேண்டும். எட்டு ஆண்டுக் கல்வியை முடித்தோருக்கு, இப்பள்ளிகளில் பயிற்சிக்காலம் மூன்று முதல் நான்காண்டுகளாகவும், செகண்டரிக் கல்வியை முடித்தோருக்கு இரண்டிலிருந்து, மூன்றுண்டுகளாகவும் (அநேகமாக $2\frac{1}{2}$ ஆண்டுகள்) உள்ளது. மாலை நேர மாணவர் களுக்கும், அஞ்சல் வழிக்கல்வி மாணவர்களுக்கும் சாதாரணமாக, பயிற்சிக் காலம் ஓராண்டு கூடுதலாகும். விசேஷ செகண்டரிக் கல்விக் கூடங்களில் மாணவ, மாணவியர் பெறும் பட்டத்தைக் கொண்டு, அவர்கள் உயர் கல்வி நிறுவனங்களில் சேர விண்ணப் பிக்கலாம்.

1973-ல், 4270 விசேஷ செகண்டரிப் பள்ளிகளில், ஏறக் குறைய 45 லட்சம் மாணவர்கள் இருந்தனர், இவர்களில் 27 லட்சம் பேர் முழுநேர மாணவர்களும், 5,70,000 பேர் மாலை நேர மாணவர்களும், 11.8 லட்சம் பேர் அஞ்சல் வழிக் கல்வி. பெறுபவர்களும் ஆவர்.

**உயர் கல்வி**, பல்கலைக் கழகங்களிலும்,பாலிடெக்னிக்குகளிலும் உயர்கல்விக்கான விசேஷ கல்லூரிகளிலும் போதிக்கப்படுகிறது. பரந்த அறிவு வீச்சுக் கொண்ட, உயர் தகுதி பெற்ற தனிச் தேர்ச் சியாளர்களை, பல்வேறு விஞ்ஞான, தொழில் நுட்ப, கலாசாரத் துறைகளுக்கு இவை அளிக்கின்றன.

1973-ல் (58 பல்கலைக் கழகங்கள் உட்பட) 825 உயர்கல்வி நிறுவனங்கள் சோவியத் யூனியனில் இருந்தன; அவற்றில் மொத்

தம் 46,30,000 மாணவ, மாணவிகளிருந்தனர். அவர்களில், **23,90,000 பேர் முழுநேர மாணவர்களும், 6,40,000 பேர்** மாலைக் கல்வி பெறுபவர்களாகவும், 16,00,000 பேர் அஞ்சல் வழிக் கல்வி பெறுபவர்களாகவும் இருந்தனர். 1973-ல், சோவியத் நாட்டின் தேசியப் பொருளாதாரத் துறைகளில் உயர்கல்வி பெற்ற 7,00,000 புதிய தனித் தேர்ச்சியாளர்கள் பணி புரிய வந்தனர்.

சோவியத் யூனியனில், உயர்கல்வி நிறுவனங்களில், புவி இயல், சுரங்கவியல், மின் பொறியியல், உலோகவியல், எந்திர, மின் என்ஜினீயரிங், ரேடியோ-மின்னணுவியல், வனவியல், இரசாயனமும், இரசாயனத் தொழில் நுட்பவியலும், நிர்மாணவியலும் கட்டடவியலும், நில அளவை இயல், காலநிலை இயல், விவசாயம் (விவசாயப் பொருளியல், பிராணியியல், பிராணி பராமரிப்பு இயல் உட்பட) போக்குவரத்து, பொருளாதாரம் சட்டம், மருத்துவம், உடற்பயிற்சி, தத்துவம், வரலாறு, மொழி இயல், பத்திரிகைத்துறை, போதனவியல், நூலகவியல், விவரத் தொகுப்பியல், நாடகம், இசை, நுண்கலை ஆகிய 400க்கும் மேற்பட்ட துறைகளில் தனித் தேர்ச்சி யளிக்கப்படுகிறது.

பரந்த விஞ்ஞான அடிப்படையிலேயே போதனை அமைந்துள்ளது. ஒவ்வொரு தனித் தேர்ச்சித் துறையிலும் தத்துவார்த்த உரைகளுடன், நடைமுறைப் பயிற்சியும் சேர்த்தே அளிக்கப்படுகிறது. பொதுவாக, ஆரம்ப ஆண்டுகள் பொது விஞ்ஞானத்திற்கும், பொறி இயலுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன (பொறி இயல், என்ஜினீயரிங் கல்விக் கூடங்களில்) ஒன்றுக்கொன்று தொடர்புள்ள துறைகளிலும், இயல்களிலும், முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில், பொதுவான பாடத்திட்டமே வகுக்கப்பட்டுள்ளது. தனித் தேர்ச்சி, சாதாரணமாக, மூன்ருவது அல்லது நான்காவது ஆண்டிலேயே தொடங்கப்படுகிறது. அத்திட்டத்தில், கட்டாய பொது விஞ்ஞான, என்ஜினீயரிங் பாடங்களும், மாணவர்களின் விசேஷ இஷ்ட பாடங்களும் அடங்கும். சமூக-அரசியல், அழகியல் பாடங்களுக்கும் உடற்பயிற்சிக்கும் பெருங்கவனம் அளிக்கப்படுகிறது. எல்லா உயர்கல்வி நிறுவனங்களிலும் அரசியல், பொருளாதாரம், தத்துவம், அயல் மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. உடற்பயிற்சி, விளையாட்டு ஆகியவற்றிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களை ஆராய்ச்சியில் ஈர்ப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது. தற்போது, பல்கலைக் கழகப் பிரிவுகளிலும், மாணவர்கள் விஞ்ஞானக் கழகங்களிலும், புனைவரைவு அலுவலகங்களிலும் ஏறக்குறைய் 10 லட்சம் மாணவர்கள் பங்கு கொண்டு வருகின்றனர். மிக நவநவீன பரிசோதனைக் கூடங்களில் நடைமுறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுதந்திரமான ஆராய்ச்சியின் விளைவாகக்

கருதப்படும், ஓர் ஆய்வுக் கட்டுரையை மாணவர்கள் அளிப்பதுடன், இந்தக் கல்வித்திட்டம் முடிவடைகிறது. இல்லையெனில், அரசுத் தேர்வுகளுக்குப் பின்னர் பட்டம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 4லிருந்து 6 ஆண்டுகள் நீடிக்கிறது. எல்லாப் பட்டதாரிகளுக்கும், அவரவர் துறைகளிலேயே வேலை கொடுக்கப்படுகிறது; வேலையளிக்கப்படும்போது, ஒவ்வொருவரது சொந்த விருப்பங்களும், ஆர்வமும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகிறது. அனைவருக்கும் குடியிருப்பு வசதிகளும் தரப்படுகின்றன.

பொதுக்கல்வி, மிக உயர்ந்த தரங்களையொட்டி இருக்க வேண்டும் என்பது சோஷலிச சமூகத்தின் நேரடி அக்கறையாகும். கல்வி கற்றுக்கொண்டே, அதே சமயத்தில் வேலையும் செய்யும் திறமை மிக்க மாணவர்களுக்கு சோவியத் அரசு கணிசமான சலுகைகளையும், உதவிகளையும் வழங்குகிறது. அவர்களுக்கு 20-40 தினங்களிலிருந்து நான்கு மாதங்கள் வரை சம்பளத்துடன் கூடிய கூடுதல் விடுமுறையும், அவர்கள் கல்வி கற்கும் இடங்களுக்குப் போய்வருவதற்கான போக்குவரத்துக் கட்டணங்களில், 50 சதவிகிதச் சலுகையும், பிற சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

பிரான்சு, மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், இத்தாலி ஆகிய நாடுகளின் மொத்த மக்கட்தொகை, சோவியத் மக்கட் தொகையினருக்குச் சமமாக இருந்த போதும், அந்த நாடுகளிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களிலுள்ள மாணவர்களைக் காட்டிலும், சோவியத் உயர்கல்வி நிறுவனங்களில் $3\frac{1}{2}$ மடங்கு அதிக மாணவர்கள் உள்ளனர். ஆண்டுதோறும் சோவியத் நாட்டில் பயிற்சி பெறும் என்ஜினீயர்களின் எண்ணிக்கை 2,85,000 அதிகம் ஆகும்; அமெரிக்காவில் இந்த எண்ணிக்கை 55,000தான். தற்போது, சோவியத் யூனியனில் பட்டம் பெற்ற 29 லட்சம் என்ஜினீயர்கள் உள்ளனர்; அமெரிக்காவில் 9 லட்சத்து 90 ஆயிரம் பேர்களே உள்ளனர்.

எல்லா வகையான கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் வளர்ந்து வருகிறது. பாடப் புத்தகங்கள், திட்டங்கள், முறைகள் ஆகியவை சதா மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சோவியத் கல்வி அமைப்பு சகல நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டதாகும். சோவியத் உயர்கல்வி நிறுவனங்களிலும், விசேஷ செகண்டரிப் பள்ளிகளிலும், 130 பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 36,000 அயல் நாட்டு மாணவர்கள் பயின்றுவருகின்றனர்.

# விஞ்ஞானம், தொழில்நுட்ப முன்னேற்றம்

உற்பத்தி சக்தியாகியுள்ள சோவியத் விஞ்ஞானம், சோவியத் தொழில் நுட்ப முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, மக்களின் வாழ்க்கைத் தரங்கள் ஆகியவற்றில் மேன்மேலும் அதிக செல்வாக்கைச் செலுத்தி வருகிறது.

சோஷலிசப் புரட்சியானது, கல்வி, கலாசாரம், விஞ்ஞானம் ஆகியவற்றை மக்களுக்குச் சேவை செய்யுமாறு செய்தது. அக்டோபர் புரட்சி வெற்றியடைந்ததற்குச் சற்றுப் பின்னர் லெனின் கீழ்வருமாறு எழுதினுர்: ''கடந்த காலத்தில், மனித அறிவுத் திறனும், அவனது மூளையும், ஒரு சிலருக்கே தொழில் நுட்பக், கலாசாரத்தின் பயன்களைத் தோற்றுவித்தது; கல்வி, வளர்ச்சி, மற்றும் அடிப்படைத் தேவைகளைக் கூடப் பிறருக்கு மறுத்து வந்தது. இன்றிலிருந்து, விஞ்ஞானத்தின் எல்லா அற்புதங்களும், கலாசாரத்தின் ஆதாயங்களும் மொத்தத்தில் நாடு முழுவதற்குமே சொந்தமாகும்.''

மிகக் கடுமையான புரட்சிக்குப் பிந்திய ஆண்டுகளிலும் கூட, இளம் குடியரசு, உண்மையில் அனைத்தையுமே பாதுகாப்பதற்குப் போராடிக் கொண்டிருந்த போதும், ஆராய்ச்சி நிறுவனங்கள் கொண்ட பரந்த தொடர் அமைப்புக்கள், தேர்ச்சி பெற்ற விஞ்ஞானப் பணியாளர்களுக்கான பயிற்சி உட்பட, அடிப்படையான, நடைமுறை ஆய்வுக்கென அரசு, திறனையும், வழிவகைகளையும் மேற்கொள்ளத் தவறவில்லை.

1918-ம் ஆண்டில், பெட்ரோகிராடில் (தற்போது லெனின் கிராடு) ஓர் ஒளிக்கருவிக் கூடமும், ஓர் பௌதீக தொழில்

நுட்பக் கூடமும், மாஸ்கோவில், விமானயியல், நீரியக்கவியல், பௌதீகம், இரசாயனம் ஆகியவற்றிற்கான மத்தியக் கூடங் களும் தோற்றுவிக்கப்பட்டன. நிஷ்னி நோவாகிராடில் (தற் போது கோர்க்கி) ஒரு ரேடியோ ஆய்வுக் கூடமும் ஏற்படுத்தப் பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள், பிரயோக இரசா யனம், உரப் பொருள்கள், உயிர் இரசாயனம், மோட்டார் என்ஜினியரிங், வெப்பத் தொழில் நுட்பம், பௌதிகம், கணிதம் மின்சார என்ஜினியரிங், மற்றும் பிற துறைகளில் ஆராய்ச்சிக் கான கூடங்கள் நிறுவப்பட்டன.

1922 டிசம்பரில் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்பட்டு, லெனினிய தேசிய இனக் கொள்கை இடையறுது செயல்படுத்தப்பட்டதன் விளைவாக, பொருளாதார வளர்ச்சிக்கும், சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த தேசங்கள், தேசிய இனங்களின் கலாசார முன்னேற்றத்திற்கும் புதிய வாய்ப் புக்கள் தோன்றின. குடியரசுகளிடையே பொருளாதார, கலா சாரப் பிணைப்புக்கள் உறுதிப்பட்டதானது, நாட்டின் பொரு ளாதார, விஞ்ஞான முன்னேற்றத்தில் சோவியத் மக்களிடையே நிலவும் நட்புறவின் செல்வாக்கை வலுப்படுத்திற்று. ஜார் ஆட்சி யின் கீழ் மிகப் பின்தங்கியிருந்த, தங்களுக்கெனச் சொந்த எழுத்து மொழி கூடப் பெற்றிருந்திராத மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் கூட புதிய கலாசார, விஞ்ஞானக் கேந்திரங்கள் தோன்றின.

யூனியன் குடியரசுகளிலும், சுயாட்சிக் குடியரசுகளிலும், ரஷ்ய சமஷ்டியின் சில பகுதிகளிலும், விஞ்ஞான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதில், சோவியத் விஞ்ஞானப் பேரவையின் ஆய்வுப் பயணம் பெரும் பங்கு வகித்தது. சோவியத் விஞ்ஞானப் பேரவை யின் கிளைகள் தோன்றுவதற்கான அடிப்படையாகத் திகழ்ந்த ஆராய்ச்சிக் கேந்திரங்கள் அங்கு ஏற்படுத்தப்பட்டன. மத்திய, குடியரசுகளிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற தேசிய நிபுணர்களில் பெரும் பகுதியினர், அந்தக் கிளைகளில் வேலைக்கமர்ந்தனர்.

அத்தகைய விஞ்ஞானக் கிளைகளின் வளர்ச்சியும், மேன் மேலும் அதிக எண்ணிக்கையில் தேசிய விஞ்ஞான நிபுணர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியும், தேசியக் குடியரசுகளில் விஞ்ஞானப் பேரவைகளை நிறுவுவதற்குத் தேவையான நிலைமைகளை ஏற் படுத்தின. இப்பேரவைகளின் பணியானது, குடியரசுகளில் சக்தி உற்பத்தி களின் வளர்ச்சிக்கும், விஞ்ஞான, கலாசார வளர்ச்சிக்கும் பெரும் துணை புரிந்தது.

இன்று, குடியரசுகளின் விஞ்ஞானப் பேரவைகளில், தாங் களே சொந்தமாக, விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள,

தேர்ச்சி பெற்ற பல ஆய்வாளர்கள் பெரும் எண்ணிக்கையில் பணிபுரிந்து வருகின்றனர். திடப்பொருள் பௌதீகம், ( ) ஜடப் பொருள்கள் பற்றிய ஆய்வு, பற்றவைக்கும் நிகழ்வின் அடிப் படைகள், விசேஷ மின் உலோகவியல் ஆகிய துறைகளில், உக் ரேனிய விஞ்ஞானப் பேரவையின் ஆய்வுப்பணி உலக முழுவதும் பிரபலமானதாகும். அதேபோன்று, ஆர்மினிய விஞ்ஞானப் பேரவையின் வான் பௌதீக இயல்துறை ஆய்வும், உஸ்பெக் விஞ்ஞானப் பேரவையின் இயற்கைக் கூட்டுப்பொருள் இரசாயன ஆய்வும், லாத்விய விஞ்ஞானப் பேரவையின் நுட்பமான அங்கக சேர்க்கை குறித்த ஆய்வும், ஜார்ஜிய விஞ்ஞானப் பேரவையின் கணிதம், எந்திர வியல் ஆய்வும் புகழ்பெற்றவையாகும். கஸாக் விஞ்ஞானப் பேரவை மேற்கொண்டு வரும் புவியியல் ஆராய்ச்சியும், தாதுப் பொருள்களைப் பிரித்தெடுக்கும் முறை பற்றிய ஆராய்ச்சியும் நாடுதழுவிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; அதேபோன்றுதான், அஸர்பைஜான் விஞ்ஞானப் பேரவை மேற்கொண்டு வரும் பெட்ரோ-இரசாயனம், எண்ணெய் எடுக்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சியும் ஆகும். பருத்தி வளர்ப்பு, வறண்ட நிலப்பகுதி களைச் சீரமைத்தல் ஆகிய ஒன்றிணைந்த பிரச்சினைகளில், மத்திய ஆசியக் குடியரசுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பெருமளவு ஆராய்ச் சிகளை நடத்தி வருகின்றனர். கணிதம், பௌதீகம், இரசாயனம், உயிரியல், சைபர்னெடிக்ஸ் ஆகிய துறைகளில், பல பேரவைகள் தங்களுக்கெனத் தனிப்பெயரும், புகழும் பெற்றுத் திகழ்கின்றன. பல குடியரசுகளும், தமக்குச் சொந்தமான அணு உலைகளையும், அணுக் கிளர்ச்சி தூண்டும் எந்திரங்களையும், டெலஸ்கோப்புகள் போன்றவற்றையும் பெற்று விளங்குகின்றன. தாது வள ஆராய்ச்சி யிலும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளிலும், தமது மக்க ளின் கலாசார வளர்ச்சி வரலாறு குறித்த ஆய்விலும், பொதுவாக, சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தைச் சேர்ந் துள்ள தேசங்கள் அனைத்தின் கலாசார சாதனைகளின் அடிப்படை யில் சோவியத் யூனியனின் பொதுவான கலாசார ஆய்விலும், குடியரசுகளைச் சேர்ந்த விஞ்ஞானப் பேரவைகள் பெரும் பங் காற்றியுள்ளன.

யுத்த பிற்கால ஆண்டுகளில் சோவியத் விஞ்ஞானத்தின் முன்னே பரந்து விரிந்த வாய்ப்புக்கள் திறந்து விடப்பட்டன; புதிய விஞ்ஞானக் கேந்திரங்கள் தோன்றின; ஆய்வாளர்களுக்குப் புதிய கருவிகளும், சாதனங்களும் கிடைத்தன; ஆயிரக்கணக்கான புதிய எந்திரங்களும், உபகரணங்களும் உருவாக்கப்பட்டு, உற் பத்தித் துறையில் புகுத்தப்பட்டன.

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் சைபீரியக் கிளை 1957ல் தோற்றுவிக்கப்பட்டதானது, சோவியத் விஞ்ஞான வளர்ச்சியில்

முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும். நோவோஸிபிர்ஸ்க்கிற் கருகே, ஒரு பெரிய விஞ்ஞானக் கேந்திரத்தை அமைத்ததானது, பல சைபீரிய நகரங்களில் விஞ்ஞான ஆராய்ச்சியை முன்னேற்று வதற்கான தூண்டுதலாக அமைந்தது. சைபீரியக் கிளையைச் சேர்ந்த ஆய்வுக் கூடங்கள், தத்துவார்த்த மற்றும் பிரயோகக் கணிதம், நீர் இயக்கவியல், அணு பௌதீகம், அங்கக, அனங்கக இரசாயனம், புவியியல், தொல் பொருளியல் உட்பட அடிப்படை ஆராய்ச்சியில் பெரும் வெற்றிகளை அடைந்துள்ளன. சைபீரியா வின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, எல்லா வழிகளிலும் ஊக்கு விக்கப்படுகிறது. சோவியத் விஞ்ஞானப் பேரவையின் சைபீரியக் கிளை, நாட்டின் மிகப்பெரிய விஞ்ஞானக் கேந்திரங்களில் ஒன்ருக உள்ளது.

1969-ல், சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழ் யூரல் மற்றும் தூரக் கிழக்கு விஞ்ஞானக் கேந்திரங்கள் தோன்றின; உயர் கல்வி நிறுவனத்திற்கான வட காகேசியக் கேந்திரமும் அமைக்கப்பட்டது.

அண்மை ஆண்டுகளில், பல விசேஷ விஞ்ஞானக் கேந்திரங் களும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள், இரசாயனத்திலும், திடப்பொருள் பௌதீக ஆய்விலும் ஈடுபட்டுள்ள மாஸ்கோவுக் கருகேயுள்ள நோகின்ஸக் விஞ்ஞானக் கேந்திரம், பாக் ராவில் ஒரு பௌதீக ஆய்வுக் கேந்திரம், புஷ்சிஞேவில் ஓர் உயிரியல் ஆராய்ச்சிக் கூடம், லெனின்கிராடுக்கருகே அணு பௌதீக ஆய்வுக் கூடம் ஆகியவை அடங்கும். உக்ரேனிய விஞ்ஞானப் பேரவையின் கீழ் உள்ள தோனத்ஸ்க் விஞ்ஞானக் கேந்திரம், உலோகவியல், சுரங்கவியல் ஆகிய துறைகளில் (பௌதீக, தொழில்நுட்ப அம்சங்களில்) ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. அகில யூனியன் விவசாய விஞ்ஞானப்பேரவை, வைத்திய விஞ்ஞான பேரவைகளின் கீழும் புதிய விஞ்ஞான கேந்திரங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அணு பௌதீகம், வான பௌதீகம், வானியல், ரேடியோ வானியல், ஆகிய துறைகளிலும் ஆராய்ச்சியை நடத்துவதற்கான நிறுவனங்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

அடிப்படை ஆய்வு வளர்ச்சியுடனும், சோவியத் ஒன்றிய, மற் றும் குடியரசுகளின் விஞ்ஞானப் பேரவைகளின் வளர்ச்சியுடனும் சேர்ந்து, விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் நடைமுறைப் பிர யோகம், தொழில்துறையின் புதிய கிளைகளின் வளர்ச்சி ஆகிய வற்றுடன் பிரதானமாகத் தொடர்புடைய, பிரயோக ஆராய்ச்சி நிறுவனங்களும் நிறுவப்பட்டு வருகின்றன. சோவியத் யூனியனில், விஞ்ஞான ஆராய்ச்சியின் வளர்ச்சி, மொத்தத்தில் தேசியப்

பொருளாதாரத்தின் முன்னேற்றத்துடன் நெருக்கமாக ஒன்றி ணைக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் வலியுறுத்த வேண்டும்.

அண்மை ஆண்டுகளில், விஞ்ஞானத்திற்கும், உற்பத்திக்கு மிடையே புதிய இணைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன; பெரிய ஆலைகள், ஆய்வுக் கூடங்கள், புனைவரைவுக் கூடங்கள் பரீட்சார்த்த நிறுவனங்கள் ஆகியவற்றை இணைக்கும் விஞ்ஞான-உற்பத்தி அமைப்புத் தொகுதி, சில தொழிற்சாலைகளில் ஏற்படுத்தப்பட் டுள்ளன. அத்தகைய அமைப்புத் தொகுதிகளால், முக்கியமான விஞ்ஞான, தொழில் நுட்பப் பிரச்சினைகளைச் சுதந்திரமாகத் தீர்ப்பது சாத்தியமே: மேலும் புதிய எந்திரம், தொழில் நுட்ப முறையைக் கண்டு பிடிப்பதற்கும் அவற்றை உற்பத்தியில் ஈடுபடுத் துவதற்கும் இடையேயான கால இடைவெளியைக் குறைப்பதன் மூலம், விஞ்ஞான ஆராய்ச்சியின் திறனை உயர்த்துவதும் சாத்திய மாகிறது.

விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகளனைத்தையும், உற் பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குப் பூரணமாகவும், திறனுள்ள வகை யிலும் பயன்படுத்துவதற்கான முன்தேவைகளை, சோஷலிசமும், திட்டமிட்ட சோஷலிசப் பொருளாதார அமைப்பும் புறவயரீதி யாகப் பெற்றுள்ளன. நாடுதழுவிய தேசப் பொருளாதாரக் கட்டுக்கோப்பினுள், தொழில் நுட்ப முன்னேற்றம் குறித்த தனியொரு கொள்கையை வகுப்பதையும் பொருளாயத, நிதி, உழைப்பு, மூலவளங்களை மிக முக்கியமான தொழில் துறைகளில் ஈடுபடுத்துவதையும், பிற நாடுகள் அடைந்துள்ள அனுபவத்தின் அடிப்படையில், தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பெறுவதற் குரிய மிகத் திறமையான வழிகளைத் தேர்ந்தெடுப்பதையும், சோவியத் பொருளாதாரத்தின் திட்டமிடும் தன்மை சாத்திய மாக்குகிறது.

சமூக உறுப்பினர்கள் அனவரது சேவையிலும் ஈடுபடுத்தப் படும் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம், சோஷலிசத்தின் கீழ் மட்டுமே, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான சக்தி மிகு இயக்க விசையாகவும், வாழ்க்கைத் தரங்களை நிலையாக உயர்த்தும் பொருளாயத சாதனமாகவும் விளங்குகிறது.

**விஞ்ஞான ஸ்தாபனம்**: நாட்டின் விஞ்ஞானத்துறையை அரசு அடிப்படையில் ஸ்தாபனரீதியான அமைப்புடன் நிறுவிய உலகின் முதல்நாடு சோவியத் யூனியனே ஆகும். இந்த அமைப்பின் பயன்கள் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளன. சோவியத்

யூனியனில், விஞ்ஞானத் துறையை அரசு அமைப்பாக ஏற்படுத்து வதற்கு விஞ்ஞானிகள் குழு, தனிப்பட்ட விஞ்ஞானிகள் ஆகி யோரது முன்முயற்சிகள் பெரிதும் உதவின. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கடமைகளையும், ஒவ்வொரு தேசியக் குடியரசின் பொரு ளாதார, கலாசார வளர்ச்சிப் பிரச்சினைகளையும் தீர்ப்பதில் எல்லா விஞ்ஞானிகளும் செயலூக்கமான பங்கு பெறுவதற்கு அவ் வமைப்பு வழி வகுக்கிறது.

இன்று சோவியத் யூனியனில் ஏறக்குறைய 5300 ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளன; அவற்றில் 10 லட்சம் பேருக்கு மேல் பணியாற்றுகின்றனர். உலகின் மொத்த விஞ்ஞான ஊழியர் களில் இது கால்வாசியாகும். விஞ்ஞான, தொழில் நுட்ப, பிற துறைகளையும் சேர்த்தால், விஞ்ஞானத்துறையில் ஈடுபட்டிருப் போரின் மொத்த எண்ணிக்கை 30,00,000-க்கும் அதிகமாகும்.

1973-ல் சோவியத் அரசு, ஆராய்ச்சிக்கென 1,550,00,00,000 ரூபிள்களை ஒதுக்கிற்று. இது பிரிட்டன், பிரான்சு, ஜெர்மன், சமஷ்டிக் குடியரசு ஆகிய நாடுகள் அனைத்தும் ஆராய்ச்சிக்கென ஒதுக்கிய மொத்தத் தொகையைக் காட்டிலும் அதிகமானதாகும்.

குறிப்பிட்ட கிளைகளில் ஆராய்ச்சிப் பணியை, பெரும் எண்ணிக்கையிலான பிரயோக ஆராய்ச்சிக் கூடங்களை நிர்வகிக் கும், அமைச்சகங்களும், அந்தந்தத் துறைகளுமே கட்டுப்படுத் துகின்றன. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும், புதிய முறை களையும் நடைமுறையில் பிரயோகப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளையும், அவை விரைவில் உற்பத்தித் துறையில் புகுத்தப் படுவதற்கான வாய்ப்புக்களையும் குறித்தே இந்த நிறுவனங்கள் பிரதான ஆர்வம் காட்டுகின்றன.

நாடுதழுவிய ரீதியில் எல்லா விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சியையும் திசைப்படுத்தி, ஒருங்கிணைப்பது, விஞ்ஞானம், தொழில் நுட்பத்திற்கான அரசுக் கமிட்டியின் பணியாகும். இக் கமிட்டி, நாடு தழுவிய ரீதியில் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிக் கான பிரதான வழிகளை வகுத்துரைப்பதுடன், சோவியத் விஞ்ஞானப் பேரவை, அமைச்சகங்கள், துறைகள் ஆகியவற்றின்கீழ் உள்ள ஆராய்ச்சிக் கூடங்களால் நடத்தப்படும் ஆய்வுப் பணியை யும், வளர்ச்சித் திட்டங்களையும் அறிந்து மதிப்பிடுகிறது. இந்தக் கமிட்டியுடன், பல விஞ்ஞானக் கழகங்கள் இணைந்துள்ளன. அவை ஒவ்வொன்றும், அடிப்படையில் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள விசேஷ விஞ்ஞான, தொழில்நுட்ப பிரச்சினைகளையும், எல்லா ஆராய்ச்சி, பரீட்சார்த்தப் புனைவரைவுப் பணிகளையும் ஒன் றிணைக்கும் பணியையும் கவனித்துக் கொள்ளுகின்றன.

சோவியத் யூனியன் முழுதிலுமிருந்து எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த விஞ்ஞானிகளைக் கொண்டுள்ள சோவியத் விஞ்ஞானப் பேரவையே, இயற்கை, சமூக விஞ்ஞானப் பிரச்சினைகளில் ஆராய்ச்சிக்கான, பொதுவான திசை வழியை வகுத்துரைக்கிறது.

சோவியத் விஞ்ஞானப் பேரவை 1725-ம் ஆண்டு செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் (தற்போதைய லெனின்கிராடு) நிறுவப்பட்டது; 1934-ம் ஆண்டு அது மாஸ்கோவிற்கு மாற்றப்பட்டது. அதில் 675 உறுப்பினர்களும், (அகெடமீஷியன்கள்), இணை உறுப்பினர்களும், 70 அயல் நாட்டவரான உறுப்பினர்களும் உள்ளனர். அதன் பிரதான நோக்கம், அடிப்படையான ஆராய்ச்சியின் வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பெறுவதற்கான அடிப்படையில் புதிய வாய்ப்புகளைத் தேடுதல்,விஞ்ஞான சாதனைகளை முறையாகப் பிரயோகப்படுத்துதல் ஆகியவையேயாகும்.

சோவியத் விஞ்ஞான பேரவையின் எல்லா நிர்வாகக் குழுக்களும்,தேர்ந்தெடுக்கப்படுபவையே. இதன் மிக உயர்ந்த அதிகாரம் பெற்ற அங்கம், உறுப்பினர்கள், இணை உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட பொதுக்குழுக் கூட்டமேயாகும்; கூட்டத் தொடர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பேரவையின் தலைமைக் குழுவே அதிகாரம் பெற்ற அங்கமாகும். பொதுக்குழு கூட்டமானது சோவியத் விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படை பிரச்சினைகளை விவாதிக்கிறது; ஸ்தாபனப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கிறது.; உறுப்பினர்கள், இணை உறுப்பினர்கள், அயல் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது. விஞ்ஞானப் பேரவையின் தலைவர் மாத்திஸ்லாவ் கெல்திஷ் ஆவார். பேரவையின் பல்வேறு துறைகள், ஆராய்ச்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளை, தலைமைக் குழுவின் நான்கு பகுதிகள் வழி நடத்துகின்றன.

**பௌதீக, தொழில்நுட்ப, கணிதவியல் விஞ்ஞானப் பகுதி:** இதன் கீழுள்ள துறைகளாவன: கணிதம், பொது பௌதிகம், வானியல், அணு பௌதீகம், மின் பொறி இயலின் பௌதீக-தொழில் நுட்ப பிரச்சினைகள், எந்திரவியலும், கட்டுப்பாட்டு அமைப்புகளும்.

**இரசாயன தொழில் நுட்ப, உயிரியல் விஞ்ஞானப் பகுதி:** இதன் கீழுள்ள துறைகளாவன: பொது, தொழில்நுட்ப இரசாயனம், பௌதீக இரசாயனம்; அனங்ககப் பொருள்களின் நுட்பவியல், உயிர் இரசாயனம், உயிர் பௌதீகம், உயிரியக்கவியல் ரீதியாக செயலூக்கக் கூட்டுப் பொருள்களின் இரசாயனம், உடலியக்கவியல், பொது உயிரியல் ஆகியவை.

**புவி விஞ்ஞானப் பிரிவு** சேர்ந்த துறைகள்: புவி இயல், புவி பௌதீகம், புவி இரசாயனம், ' கடலியல், வாயுமண்டல பௌதீகம், பூகோளம் ஆகியவை.

**சமூக விஞ்ஞானப் பிரிவு** சேர்ந்த துறைகள்: வரலாறு, தத்துவம், சட்டம், பொருளியல், இலக்கியம், மொழியியல் ஆகியவை.

விஞ்ஞானப் பேரவையில், அதன் சைபீரியக் கிளையும், யூரல் மற்றும் தூரக் கிழக்கு விஞ்ஞானக் கேந்திரங்களும், பல சுயாட்சிக் குடியரசுகள், பிராந்தியங்கள், பிரதேசங்களிலுள்ள இணைக்கிளைகளும், விசேஷ விஞ்ஞானக் கேந்திரங்களும் (இரசாயனம், பௌதீகம், உயிரியல்) அடங்கும்.

பேரவையினுல் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிப்பணி, 234 கூடங்களிலும், பரிசோதனை நிலையங்களிலும், பிற விஞ்ஞான அமைப்புகளிலும் மேற்கொள்ளப்படுகிறது; 3,000 டாக்டர்களையும் 15,000-க்கும் மேற்பட்ட விஞ்ஞான'மாஸ்டர்'பட்டம் பெற்றவர்களையும் கொண்ட மொத்தம் 37,000 விஞ்ஞான ஊழியர்கள் இப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏறக்குறைய 180 விஞ்ஞான நூலகங்கள் உள்ளன. புதிய விஞ்ஞானத் துறைகள் வளர வளர, பேரவை விரிவடைந்து வருகிறது. பேரவையின் கீழுள்ள நிறுவனங்களில், விஞ்ஞான ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கென பட்ட மேற்படிப்பு துறைகள் உள்ளன. தலைமைக்குழு, அதன் துறைகள், பிரிவுகளின் கீழ் 20க்கு மேற்பட்ட விஞ்ஞானக் கவுன்சில்கள்,—விஞ்ஞான ஆலோசனைக் குழுக்கள்—இயங்கி வருகின்றன. அந்தந்தத் துறைகளில் இக்குழுக்கள் பரிந்துரைகள் வழங்குவதோடு, அத்துறைகளின் ஆய்வுப்பணிகளை ஒருங்கிணைக்கின்றன.

தனது விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும், விஞ்ஞானப் பேரவையானது 'நவ்கா'(விஞ்ஞானம்) பதிப்பகத்தின் மூலம் வெளியிடுகிறது. இப்பதிப்பகம் சோவியத் யூனியனின் மிகப் பெரும் பதிப்பகங்களில் ஒன்றாகும். தலைமைக் குழுவும்,பேரவையின் பல்வேறு துறைகளும், ஆய்வுக் கூடங்களும் விசேஷ விஞ்ஞான சஞ்சிகைகளை வெளியிடுகின்றன.

மிக உயர்ந்த பேரவை விருதான லொமனசோவ் பதக்கம் ஒவ்வொரு ஆண்டும் இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளில் தலைசிறந்த பணியாற்றிய ஒரு சோவியத் விஞ்ஞானிக்கும் ஒரு அயல் நாட்டு விஞ்ஞானிக்கும் அளிக்கப்படுகிறது. விஞ்ஞான சாதனைகளைப் பிரபலப்படுத்துவதிலும், விஞ்ஞான அறிவைப் பரப்புவதிலும் பேரவை பெரும் கவனம் செலுத்துகிறது.

யூனியன் குடியரசுகளின் பேரவைகள் சோவியத் விஞ்ஞான வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன. அடிப்படை தத்துவார்த்த ஆராய்ச்சியையும் பல்வேறு தேசியப் பொருளாதாரத்தின் தேவைகளுக்கேற்ப விஞ்ஞான சாதனைகளை நடைமுறையில் பிரயோகப்படுத்துவதையும் நிர்ணயிக்கும் மிக வளர்ச்சியடைந்த விஞ்ஞான ஸ்தாபனங்களாகும் அவை. ஒவ்வொரு பேரவைக்கும் அதன் சொந்த பிரதான ஆய்வு முறைகள் உண்டு. அந்தந்த குடியரசின் உற்பத்தி சக்திகளது தன்மையும் அக்குடியரசிலுள்ள விஞ்ஞான நிறுவனங்களின் தன்மையுமே அம்முறைகளை நிர்ணயிக்கின்றன.

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் தலைமைக் குழுவின் கீழுள்ள ஒருங்கிணைப்பு கவுன்சிலின் மூலம் குடியரசுப் பேரவைகளின் பணி ஒருங்கிணைக்கப்படுகிறது.

சோவியத் யூனியனில் கிளைப் பேரவைகளும் உள்ளன; அவை குறிப்பிட்ட அறிவுத் துறைகளில் ஆராய்ச்சிப்பணியை மேற்கொள்ளுகின்றன. சோவியத் வைத்திய விஞ்ஞானப் பேரவை, அகில யூனியன் விவசாய விஞ்ஞானப் பேரவை, போதனை இயல் விஞ்ஞானப் பேரவை, கவின்கலைப் பேரவை ஆகியவையே அவையாகும்.

**ஆராய்ச்சியின் அடிப்படைப் போக்கு:** கம்யூனிஸ நிர்மாணத்தின் தற்போதைய கட்டத்தில் விஞ்ஞானத்தை மேன்மேலும் சிக்கலான பல பிரச்சினைகள் எதிர் நோக்குகின்றன; அதன் பங்கு மேன்மேலும் முக்கியத்துவ முடையதாகிறது. குடியரசுகளிடையே பொருளாதார, விஞ்ஞான, கலாசார பரிவர்த்தனை, உழைப்புப் பங்கீடு ஆகியவற்றின் முக்கியத்துவமும் வளர்ந்து வருகிறது. இதன் விளைவாக, எல்லா சோவியத் குடியரசுகளின் ஆக்க பூர்வ முயற்சியையும், பொருளாயத மூல வளங்களையும் ஒருசேர இணைப்பது, சோவியத் விஞ்ஞானத்தின் பொதுவான முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கு முக்கியமானதொரு நிபந்தனையாகிறது.

கடந்த சில பத்தாண்டுகளுக்குள் பல அடிப்படை ஆராய்ச்சி துறைகளில் சோவியத் விஞ்ஞானம் தலைமை இடம் வகித்து வருகிறது. அணுசக்தியை கரைகண்டு ஆள்வது, விண்வெளி ஆய்வு போன்ற ''இந்நூற்றுண்டின் பிரச்சினைகளுக்கு''த்தீர்வு காண்பதை அது உறுதிப் படுத்தியுள்ளது.

நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில்(1971-1975)சோவியத் விஞ்ஞானத்தின் முன்னர் பொறுப்புமிக்க கடமைகள் உள்ளன. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24வது காங்கிரஸில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞானத் தொழில் நுட்பம் குறித்த திட்டம்

இயற்கை விஞ்ஞானத்தின் பலவகைப் பிரசசினைகள் பற்றிய அடிப் படை ஆய்வினை நடத்தவும் சமூக உற்பத்தியை தீவிரப் படுத்து வதுடன் தொடர்புள்ள மிக முக்கியமான செயல்முறைப் பிரச் சினைகளைத் தீர்க்கவும், உற்பத்தித் திறனை உயர்த்தவும் விஞ்ஞானத் தொழில் நுட்பத்தின் நவீன சாதனைகளை பரந்த அளவில் நடை முறையில் பிரயோகப்படுத்தவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அண்மை ஆண்டுகளில் உயர்ந்த முன்னேற்றமடைந்துள்ள கம்ப்யூட்டர்கள் தோன்றியிருப்பது மனித வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கணிதத்தின் பங்கை பெரிதும் உயர்த்தியுள்ளது. சமூக, இயற்கை விஞ்ஞானத் துறைகளில் கணித முறைகள் பரவ லாகப் பயன்படுத்தப்படுகின்றன. விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் நடைமுறைப் பணிக்கும் கணக்கிடு நுட்பங்கள் பெரிதும் உதவு கின்றன; அவை மேன்மேலும் அதிக அளவில் சமூக பொருளாதார உற்பத்தித் துறைகளில் புகுத்தப்பட்டு வருகின்றன.

இன்று சோவியத் யூனியனில் பண்பியல் கணிதத்தின் பல் வேறு துறைகளில் ஆராய்ச்சிப்பணி பல குடியரசுகளிலும் மத்திய ஆய்வு நிறுவனங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது; சோவி யத் கணித நிபுணர்கள் உலக விஞ்ஞானத்திற்கு அரிய பங்கினை ஆற்றியுள்ளனர். அண்மை ஆண்டுகளில் கம்ப்யூட்டர் கணித முறை யியலில் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சி சோவியத் யூனியனின் மிக உயர்ந்த கணித வளர்ச்சி மட்டத்தினாலேயே சாத்தியமாகி யுள்ளது. அணு பௌதிகம், விண்வெளி ஆய்வு போன்ற பிரச் சினைகள் உள்ளிட்ட சில முக்கியமான விஞ்ஞான தொழில்நுட்ப பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில் கம்ப்யூட்டிங் கணித இயல் முக்கியமான பங்கை ஏற்றுள்ளது; விஞ்ஞான தொழில் நுட்பத்தின் பலதுறைகளிலும் அது பெரும்பங்கு வகித்துவருகிறது.

நவீன பௌதிகத்தின் எல்லாத் துறைகளிலும் அரிய ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. சோவியத் பௌதிகவியலாளர்கள் பல முக்கியமான கண்டுபிடிப்புக்களை செய்துள்ளனர். அவற்றுள் சில: ஓர் ஊடகத்தில் ஒளியைக் காட்டிலும் வேகமாக நகரும் மின்னணுவின் கதிர்வீச்சு; படிகங்களில் ஒளிபரவல்; திரவ ஹீலி யத்தின் அதி திரவத்தன்மை; துணைக் காந்த அனுநாத நிகழ்வு; குவாண்டம் மின்னணுவியல் கோட்பாடுகள்; திடீரெனத் தோன் றும் அணுச்சிதைவு; சிங்க்ரோடிரான் கதிர் வீச்சுத் தத்துவம் ஆகியவை. அரைக் கடத்திகள், அதி திரவத் தன்மை, மிகு கடத்து திறன் ஆகியவை குறித்த தத்துவங்களை உருவாக்குவதிலும், டிரான்ஸ் யூரேனியம் மூலகங்களின் ஆய்விலும், பிளாஸ்மா தத் துவத்திலும் இன்னும் பல துறைகளிலும் மாபெரும் சாதனைகள் அடையப் பெற்றுள்ளன.

அணு பௌதிகத் துறையில் தங்களது ஆய்வுப் பணிக்கு சோவியத் பௌதிகவியலாளர்களுக்கு முதல் தரமான வசதிகள் உள்ளன. செர்புக்கோவிலுள்ள புகழ்பெற்ற ஆக்ஸிலரேட்டர் நீங்கலாக ஆராய்ச்சிப்பணிகளுக்கென மேலும் பல ''ரியாக்டர்கள்'' உள்ளன. மத்திய நிறுவனத்தில் மட்டுமல்லாது ஸைபீரியாவிலும் பல யூனியன் குடியரசுகளிலும் சிறந்த பௌதிகக் கேந்திரங்கள் உள்ளன.

துகள் வேகவளர்ச்சி உத்திகள் சதா மேம்படுத்தப்பட்டு வருகின்றன. செர்புக்கோவிலுள்ள ப்ரோட்டான் ஆக்ஸிலரேட்டரின் சராசரி ஒளிக்கற்றைத் தீவிரம் 50 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. நோவோஸிபிர்ஸ்க்கில் எலக்டிரான், பாஸிட்ரான் ஒளிக்கற்றைகளின் மோதலுக்கான 70 கோடி மின்னணு வோல்ட் எந்திரம் ஒன்று இயக்குவிக்கப்பட்டுள்ளது. நடுத்தர சக்திகளுக்கான அணுபௌதிகத்தின் பரீட்சார்த்த அடிப்படை விரிவு படுத்தப்பட்டுள்ளது ; இரண்டு சைக்ளோட்ரான்களைக் கொண்ட ஒரு ''டான்டம்'' அமைப்பு தூப்னுவிலும், இரண்டு சைக்ளோட்ரான்களைக் கொண்ட கன மின்னேட்ட எலக்டிரான் ஆக்ஸ்லரேட்டர் ஒன்று தோம்ஸ்க்கிலும், ஒரு ''ஐஸோக்ரோனஸ் சைக்ளோட்ரான்'' அல்மா அதாவிலும் நிறுவப்பட்டுள்ளன.

யுத்தத்திற்குப் பின்னர், யுத்த பிற்கால புனர்நிர்மாண காலத்தின் இன்னல்கள பல இருந்த போதிலும் கூட மிகக்குறுகிய காலத்தில் அணு நியூக்ளியஸ் ஆற்றலின் ரகசியங்கள் நன்கு ஆராயப்பட்டன; இதற்குக் காரணம் பௌதிக ஆய்வின் தீவிர வளர்ச்சி எல்லாக் குடியரசுகளின் விஞ்ஞான முயற்சியும் பொருளாயத மூல வளங்களும் இத்துறையில் ஒருமுகப்படுத்தப்பட்டதேயாகும். நாட்டின் முதலாவது அணுக்கிரியை உலை 1946ல் இயக்குவிக்கப்பட்டது. மேலும் சில ஆண்டுகளுக்குள் ஒரு சக்தி வாய்ந்த அணுத் தொழில்துறை உருவாக்கப்பட்டது. 1954லில் முதலாவது அணு மின்நிலையம் மின்சாரத்தை உற்பத்தி செய்தது. உலகிலேயே முதன் முறையாக அணு ஆற்றல் சமாதான காரியங்களுக்குப் பயன்பட்டது. அதன் பின்னர் புதிய அணு மின்நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன, தொழிற்துறைக்குப் பயனுள்ள புதிய வகை கிரியை உலைகள் புனையப்பட்டுள்ளன. அதிவேக ''பிரீடரை''க் கொண்ட ஒரு பரீட்சார்த்த மின்நிலையம் விரைவில் செயல்படவிருக்கிறது. அணு நியூகிளியஸின் ஆற்றலை வசப்படுத்தும் வழிகளிலும் வெப்ப அணு இணைவைக் கட்டுப்படுத்தும் வழிகளிலுமான ஆராய்ச்சியில் சோவியத் விஞ்ஞானிகள் உலகில் தலையாய ஸ்தானத்தை வகிக்கின்றனர்.

லாஸர் கற்றையின் மூலம் பிளாஸ்மாவை அதிக உஷ்ண நிலைக்கு வெப்பமூட்டும் ஆராய்ச்சி பலனைத் தந்துள்ளது. திட ''டியூட்டிரிய''த்தைக் கொண்ட பரிசோதனைகளில் 1000கோடி வாயுமண்டல கதிர்வீச்சு அழுத்தத்திற்கு உட்படுத்தப்படும் பொருள்கள் கிடைக்கப்பெற்றுள்ளன; 6 கோடி டிகிரி ஸெண்டி கிரேடு உஷ்ணநிலையும், துடிப்பு ஒன்றுக்கு $10^7$ நியூட்ரான் விளைவு களைப் பெறும் முறையும் சாத்தியமாகியுள்ளன. இதுகாறும் வெளிநாடுகளில் கிடைத்துள்ள விளைவுகளைக் காட்டிலும் இவை சிறந்தவையாகும்.

புதிய துறை ஆய்வுகளில் ஈடுபட்டு வரும் சோவியத் பௌதிக வியலாளர்கள் அதைத் தவிர தங்களது அன்றாடப்பணியில், மின் பொறியியல் புதிய கட்டடப் பொருளை உருவாக்குதல் செய்திப் போக்குவரத்து வழிகளை வளர்த்தல் ஆகியவை பற்றிய தொழில் நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதிலும் பெரும் பங் காற்றுகின்றன. அதே நேரத்தில் ஜடப்பொருளின் தன்மை பற்றிய மர்மங்களை அறிவதற்கான தங்களது நீண்டகால ஆராய்ச்சிக்காக வும் அதற்கான புதிய பரிசோதனை வசதிகளைத் தோற்று விப்பதற்காகவும் சோவியத் பௌதிகவியலாளர்கள், நவீன அரைக் கடத்தி உத்திகள், லாசர்களையும், குவாண்டம் மின்னணுக்கருவி களையும் பரந்த அளவில் பயன்படுத்துதல், உலோகங்கள், பிற பொருள்களை மேலும் வளர்ச்சியடையச் செய்தல், செய்திப் போக்குவரத்தை மேம்படுத்துதல், கம்ப்யூட்டர்களுக்கான புதிய மூலகங்களை உருவாக்குதல், மிகு-கடத்தி நிகழ்வை நடைமுறை யில் பிரயோகித்தல் போன்ற முக்கியமான நடைமுறைப் பிரயோக பிரச்சினைகளில் பெருங்கவனம் செலுத்தி வருகின்றனர்.

எல்லா விஞ்ஞானப் பேரவைகள் உயர்கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளில் இரசாயனத் துறை ஆய்வு முக்கியமான இடம் பெற்றுள்ளது.

இரசாயனத்தின் தத்துவார்த்த அடிப்படைகளை வளர்ச்சி யுறச்செய்வதில் சோவியத் விஞ்ஞானிகள் பெரும் பங்கு ஆற்றி யுள்ளனர். உதாரணமாக, இரசாயனக்கட்டமைப்புத் தத்துவம், இரசாயன சக்தியியல்,இரசாயனக் கிரியைகளின் இயக்கப்போக்கு ஆகியவற்றில் அவர்களது ஆய்வு கணிசமானதாகும். விரிந்த அளவில் செயற்கை ரப்பர் தொழில் துறையை நிறுவிய முதல் நாடு சோவியத் யூனியனே. சிக்கலான கூட்டுப் பொருள்கள் இரசா யனத்துறையிலும், ஹைடிரோகார்பன் இரசாயனம், பெட்ரோ இரசாயனம், மின் இரசாயனம் ஆகிய துறைகளிலும், பரப்பு நிகழ்வு பற்றிய ஆய்விலும் இன்னும் இதர பல துறைகளிலும், சோவியத் சாதனைகள், நாட்டின் இரசாயனத் தொழில்துறை வளர்ச்சிக்கான தத்துவார்த்த அடிப்படையாகத் திகழ்ந்தன.

புதிய வழிகளிலும் சோவியத் இரசாயனம் வளர்ச்சியடைந்து வருகிறது. பலதரப்பட்ட அங்ககக் கூட்டுப் பொருள் இரசாயனத் துறையில் எவ்வளவோ முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. புளோரின், பாஸ்பரஸ், சிலிகான், உலோகங்கள் ஆகியவற்றைக் கொண்ட அங்ககக் கூட்டுப் பொருள்கள்,அதிகத் திறனுள்ள கிரியா ஊக்கிகளையும், பூச்சி கொல்லிகளையும், மருந்துகளையும், கடத்தாப் பொருள்களையும்,பிறவற்றையும் உருவாக்குவதற்கான அடிப்படையாகத் திகழ்கிறது. நுண்ணிய அங்ககச் சேர்க்கைத் துறையிலும், இயற்கைக் கூட்டுப் பொருள்கள் இரசாயனத் துறையிலும், அதிக அளவு ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. இது முன்னெப்போதைக் காட்டிலும் பெருமளவு உயிர் இரசாயன ஆய்வுகளுடன் ஐக்கியமாகி வருகிறது.

புதிய உலோகவியல் முறைகள், உலோகப் பொருள்கள், கட்டுமானப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல், பதனப்படுத்துதல் ஆகிய முறைகள், உலோகங்களை வலுப்படுத்தும் முறைகள் ஆகியவற்றை வளர்ச்சியுறச் செய்வதில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் கிடைத்துள்ளன. அதிக வலுவுள்ள கண்ணாடி இழையினுல் வலுவூட்டப்பட்டுள்ள பிளாஸ்டிக்ஸ், மாறுபட்ட இயைபுடன் கூடிய பொருள்கள், பல்வேறு பாதுகாப்புப் பூச்சுக்கள் ஆகியவை தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

உயிரியல் மூலவளங்களைப் பற்றியும், மிக அவசர அவசியமான விவசாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றியும் கணிசமான அளவு ஆராய்ச்சி நடைபெற்றுள்ளது. மரபியல், தாவரவியல், பிராணி இயல் ஆகிய துறைகளில் பெருமளவு ஆராய்ச்சிப் பணி நடந்துள்ளது. விவசாய இரசாயனம்,மண் இயைபு, நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள தாவர, பிராணி ஆராய்ச்சி போன்ற துறைகளில் அரிய முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இப்பணி எல்லா யூனியன் குடியரசுகளிலும் நடத்தப்பட்டு வருகிறது. புதிய விவசாயப் பயிர்களை உருவாக்குவதற்கான சோவியத் தேர்வியலாளர்களின் சாதனைகள், உலகப் பாராட்டைப் பெற்றுள்ளது. விவசாய உற்பத்தியைத் தீவிரப்படுத்துதல், சோவியத் பொருளாதாரக் கொள்கையின் மிகப்பெரும் இலக்கு ஆகும்; விவசாய வளர்ச்சிக்கு மிக முக்கியமான அந்த உயிரியல், இரசாயன அம்சங்கள் குறித்த ஆய்வில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது.

உயர் நரம்பு இயக்க இயங்குவியல், நரம்பு மண்டலம் ஆகிய துறைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உயிர் இரசாயன வளர்ச்சித் துறையிலும் சோவியத் விஞ்ஞானிகள் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர்.

உயிரியலில் இன்று பௌதிக ரசாயன முறைகளைப் புகுத்தி யிருப்பதானது அத்துறையில் ஒரு புரட்சியையே விளைவித்துள்ளது. உயிரியல் ஆராய்ச்சியில் புதிய வழிகள் விவசாய வைத்திய விஞ் ஞான வளர்ச்சியில் ஆழ்ந்த விளைவுகளைத் தோற்றுவித்துள்ளன. நுண்ணுயிரியல் போக்குகள் தொழில் துறைக்கு மேன்மேலும் முக் கியமானதாக உள்ளன. மூலக்கூறு உயிரியல், உயிர் அங்கக ரசா யனம், நவீன மரபியல்,உயிர் பௌதிகம் போன்ற பரந்த வாய்ப் புள்ள துறைகளின் வளர்ச்சியில் பெருங்கவனம் செலுத்தப்படு கிறது.

இயற்கையின் மூல வளங்களின் ஆராய்ச்சியிலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும் எல்லா யூனியன் குடியரசுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் சாதனைகள் சோவியத் பொருளாதார முன் னேற்றத்திற்கு அளப்பரிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தற் போது தாதுப் பொருள்கள், கச்சாப் பொருள்களில் சோவியத் யூனியன் தன்னிறைவு பெற்றுள்ளது. எனினும் விஞ்ஞான முன் னறிவிப்பின் அடிப்படையில் புதிய கண்டுபிடிப்புகள் நடைபெற்று வருகின்றன. பெருமளவு எண்ணெய் எரிபொருள் படிவங்கள் புதி தாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதானது, சோவியத் யூனியனின் பொருளாதார வளர்ச்சிப் போக்கு முழுவதையுமே மாற்றி வரு கிறது. எனினும் மாபெரும் இயற்கை வளம் கண்டு பிடிக்கப்பட் டிருந்த போதும், மேலும் இயற்கை வளங்களைக் கண்டு பிடித்தல் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட தாதுவளங்களை முழுமையாகவும் அறிவார்ந்த முறையிலும் பயன்படுத்துதல் ஆகிய பிரச்சினைகள் கூர்மையடைந்து வருகின்றன. இது தொடர்பாக பூமியின் ஆழ்ந்த உள்ளடுக்குகளை ஆராய்வதும், நீர் வளத்தைத் திறமையுடன் நிர் வகிப்பதும்,கடல் மூலவளங்களைப் பயன்படுத்துதலும் அவசியமான தாகிறது. உலகின் துரிதமான தொழில் நுட்ப முன்னேற்றம் அதி கரித்து வரும் உற்பத்தி அளவு ஆகியவற்றின் விளைவாக இயற்கை பாதுகாப்புப் பிரச்சினைகள் மேன்மேலும் அவசர அவசியமான தாகிறது.

பௌதீக, இரசாயன,கணித முறைகள் புகுத்தப்பட்டதன் விளைவாக, புவியியல், புவி பௌதீகம், புவி இரசாயனம், வானிலை ஆய்வு, கடலியல், பூகோளம் போன்ற புவி விஞ்ஞானமனைத்தின் ஆராய்ச்சியும் மாற்றமடைந்து கொண்டு வருகிறது; அதன் பயனு பூமியில் நடைபெற்று வரும் போக்குகளை மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் சாத்தியமாகியுள்ளது. மனித நடவடிக்கை களின் விளைவாக இயற்கையில் நிகழக்கூடிய மாற்றங்கள் பற்றிய விஞ்ஞான அனுமானங்கள் மேன் மேலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. பூமியிலுள்ள தாதுவளங்களைக் கண்டுபிடிப் பதும், இயற்கையில் நடைபெறும் போக்குகளை ஆராய்வதும்

மட்டுமேயன்றி, அவற்றைக் கட்டுப்படுத்துவதும் இன்று அவசிய மாகிறது. மிக நுண்ணிய கருவிகள்—மிகத் துல்லியமான பௌதீக இரசாயனக் கருவிகளிலிருந்து, ஆய்வுக் கப்பல்கள், பாதிஸ்கேப்பு கள், செயற்கைத் துணைக் கோள்கள் வரை—இன்று விஞ்ஞான ஆய்வில் பணி புரியக் காத்துள்ளன.

விண்வெளி ஆய்வில் சோவியத் யூனியன் அடைந்துள்ள சாதனை களும், விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியில் மிகப் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

1957 அக்டோபர் 4-ந்தேதியன்று உலகின் முதலாவது துணைக்கோளை சோவியத் யூனியன் விண்வெளியில் செலுத்திய தானது, விண்வெளி யுகத்தைத் திறந்து விட்டுள்ளது. விஞ்ஞான, தொழில்நுட்ப இயலின் பல்வேறு துறைகளில் துரித வளர்ச்சியை விண்வெளி ஆய்வு, தூண்டி விட்டுள்ளது. அதன் விளைவாக, பல புதிய தொழில் துறைகள் தோன்றியுள்ளன. எல்லாக் குடியரசு களையும் சேர்ந்த, தத்துவார்த்த, நடைமுறை ஆய்வுக் கூடங்கள் பல, இப்பணியில் பங்கெடுத்துள்ளன. விண்வெளி ஆய்வுத்துறை யில் நடைபெறும் ஆராய்ச்சி, ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தாகியுள்ளது.

முதலாவது விண்வெளிக் கப்பல் ஏவப்பட்டதைத் தொடர்ந்த 16 ஆண்டுகளில் விண்வெளி ஆராய்ச்சியில் சோவியத் யூனியன் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்துள்ளது; அவற்றுள் மிக முக்கியமானது 1961 ஏப்ரல் 12ல் யூரி ககாரின் நடத்திய முதலா வது விண்வெளிப் பயணமாகும். இது வருங்கால புறவெளிப் பய ணத்திற்கும் கோளிடைப் பயணத்திற்கும் பாதை வகுத்தது.

சோவியத் விண்வெளி ஆராய்ச்சி மூன்று பிரதான வழிகளில் வளர்ச்சியடைந்து வருகிறது. அவையாவன: பூமிக் கருகிலுள்ள வெளியை ஆராய்தல்; சந்திரனையும் சந்திர வெளியையும் ஆராய் தல்; சூரிய மண்டலத்தின் பல கோள்களையும் ஆராய்தல்.

சந்திரன், சுக்கிரன், செவ்வாய் ஆகியவற்றின் ஆய்வில் சோவியத் விஞ்ஞானம் பல வெற்றிகளை அடைந்துள்ளது. சோவி யத் துணைக் கோள்களும் தன்னியக்க ஆய்வுக் கலன்களும், பூமிக் கருகிலுள்ள வான்வெளி, கோளிடைவெளி, சூரிய - பூமி பிணைப் புக்கள் ஆகியவை குறித்து பல பரீட்சார்த்த பொருள்களை சேகரித் துள்ளன. அவற்றின் பயனாக பூமிக்கருகிலுள்ள வான்வெளி பற்றி யும் பூமியின் வாயு மண்டலத்தின் மீது சூரியக் கதிரியக்க விளைவு களின் பயன் தன்மை குறித்தும் தற்போதுள்ள கருத்துக்களை முற்றிலும் திருத்தியமைக்க வேண்டியுள்ளது.

1961 ஏப்ரல் 12 லிருந்து 24 சோவியத் விண்வெளியாளர்கள் பூமியை வலம் வந்துள்ளனர்; விண்வெளியில் செலுத்தப்பட்ட பல்வேறு சோவியத் விண்கலங்களின் எண்ணிக்கை 600க்கும் அதிகமாகும்.

1972 ல் சுக்கிரனின் சூரிய ஒளி மிகுந்த பாகத்தில் சோவியத் கலம் ஒன்று மெல்ல இறங்கிற்று; இக்கோளில் இறக்கப்பட்ட முதலாவது கலம் அதுவே. அது இறங்கிய பின்னர் 50 நிமிட நேரத்திற்கு அக்கோளின் வாயுமண்டலம், அதன் ஒளிரும் தன்மை அதன் பரப்பிலுள்ள பாறைகளின் வகை ஆகியவை பற்றிய செய்தி களை அது பூமிக்கு அனுப்பிற்று.

**மார்ஸ்—2, மார்ஸ்—3** ஆகிய இரு ஆய்வுக் கலங்களின் உதவி உதவியுடன் செவ்வாய் கோள் ஆராய்ச்சித் திட்டம் நடத்தப் பட்டது; அவையிரண்டும் அக்கோளின் செயற்கைத் துணைக்கோள் களாகிவிட்டன. செவ்வாய் பரப்பின் உஷ்ணநிலை அதைச்சுற்றி யுள்ள வாயு மண்டலம், காந்த வெளி, அதன் அயனமண்டலத் தின் அமைப்பு, தன்மைகள், அதைச் சுற்றியுள்ள விண்வெளி ஆகியவை குறித்து அவ்விரு ஆய்வுக் கலங்களும் செய்திகளை அனுப்பின. செவ்வாயின் பரப்பில் முதன் முதலாக ஒரு கலனை மெல்ல இறக்கியதானது அக்கோளை நேரடியாக ஆராய்வதற்கு வழிவகுத்தது.

தன்னியக்க ஆய்வுக் கலங்களைக் கொண்டு சந்திரனை ஆராய் வதில் மிகப் பெரும் சாதனைகள் அடையப் பெற்றுள்ளன. நெருங்கு வதற்கே கடினமானதொரு பகுதியிலிருந்து சந்திரப் பாறைகளை **லூனு-20** பூமிக்கு எடுத்துவந்தது. 1973 ஜனவரியில் தானியங்கு வாகனமான **லூனுகோத் - 2** சந்திரனின் அமைதிக் கடல் பிரதேசத்தில் சென்று இறங்கியது. நீண்டதொரு ஆராய்ச்சித் திட்டத்தை அது நடத்தி வருகிறது.

1973 ஏப்ரலில் சுழல் விஞ்ஞான நிலையமான **சல்யூத் - 11** விண்வெளியில் ஏவப்பட்டது. பூமியையும் பூமியைச் சுற்றியுள்ள வெளியையும் ஆராய்வதற்கும், பருவநிலை முன்னறிவிப்பிற்கும், செய்திப் போக்குவரத்திற்கும், இயற்கை மூலவளங்கள் பூகோள ஆய்விற்கும் **காஸ்மோஸ், மீட்டியார், மோல்னியா** துணைக் கோள்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**இன்டர்காஸ்மாஸ்** தொடரைச் சேர்ந்த பல ஸ்புத்னிக்குகள் விண்வெளியில் ஏவப்பட்டுள்ளன. இவற்றில் சோஷலிச நாடுகளது கூட்டுறவுடன் தயாரிக்கப்பட்ட பல கருவிகள் உள்ளன. தொழில் நுட்ப ஆய்வுக்காக புனையப்பட்டதொரு பிரெஞ்சு துணைக்கோளை ஒரு சோவியத் ராக்கெட் விண்வெளியில் கொண்டு சேர்த்தது.

விண்வெளி ஆய்விற்கும், புறவெளியை சமாதான காரியங்களுக்காகப் பயன்படுத்தவுமான சோவியத் அமெரிக்க ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின்படி 1975ம் ஆண்டு சோயுஸ், அப்போலோ விண் கப்பல்கள் கூட்டாகப் பறந்து விண்வெளியில் ஒன்றிணைவதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

நட்சத்திரங்கள், விண்மீன் தொகுப்புகள் ஆகியவற்றின் ஆய்விலும், பேரண்டம் முழுமையையும் பற்றிய ஆய்விலும் பெரும் வெற்றிகள் அடையப் பெற்றுள்ளன. இவையனைத்தும் பௌதிக இயலில், குறிப்பாக பேரண்டத்தைப் பற்றிய செய்திகளைப் பெறுவதில் புதிய ரேடியோ அலைவரிசைகளில் கதிர்வீச்சைப் பயன்படுத்தும் சாதனையினால் சாத்தியமாகியுள்ளது. விண்வெளித் துணைக் கோள்களின் மூலம் இதற்கு முன்னர் பயன்படுத்தப் படாத சிற்றலை வரிசைகளில் அத்தகைய செய்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அண்டவெளியியல் நட்சத்திரங்களும் அவற்றின் தொகுதிகளும் உருவாவதற்குக் காரணமான போக்குகள் விண்மீன் தொகுப்பின் கருப்பொருள்கள் பேரண்ட வெளியின் தோற்றம் போன்ற பிரச்சினைகள் குறித்த ஆய்விலும் சோவியத் விஞ்ஞானிகள் பெரும் பங்காற்றியுள்ளனர். மிக விசேஷமான ரேடியோ டெலஸ்கோப்புகள் சோவியத் யூனியனில் உள்ளன. அத்துடன் ஸ்புத்னிக்குகளிலுள்ள வான் ஆய்வுக் கருவிகளையும் அது பயன்படுத்திக் கொள்ளுகிறது. உலகின் மிகப்பெரிய டெலஸ்கோப் ஒன்றை நிறுவும் பணி சோவியத் யூனியனில் விரைவில் பூர்த்தியாகவிருக்கிறது. இவையனைத்தும் இத்துறையில் முக்கியமான கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவும், பேரண்டத்தைப் பற்றிய நமது அறிவை விரிவாக்கவும் வாய்ப்புக்களை அளிக்கும்.

கம்யூனிசத்திற்கான பொருளாயத தொழில் நுட்ப அடிப்படையை நிர்மாணிக்கும் பணிக்கும் நாட்டின் கலாசார வளர்ச்சிக்கும் சமூக விஞ்ஞானங்கள் பெரும் பங்காற்றுகின்றன. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24வது காங்கிரஸின் அண்மைக்கால முடிவுகளும் அதன் பின்னர் நடைபெற்ற மத்திய கமிட்டி பிளீனம் கூட்ட முடிவுகளும், சமூக விஞ்ஞானங்களின் தரத்தை மேலும் உயர்த்துவது, கம்யூனிச நிர்மாணத்தில் அவற்றின் பங்கை மேலும் அதிகரிப்பது, சமூக இயற்கை விஞ்ஞானங்களுக்கிடையே உறவுகளை வலுப்படுத்துவது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளன.

சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தில் வாழும் மக்களின் வரலாறு, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு, உலக வரலாறு ஆகியவை குறித்த ஆராய்ச்சியில் சோவியத் வரலாற்றியலாளர்கள் பல சாதனைகள் புரிந்துள்ளனர். சோவியத் யூனியனது பல்வேறு மக்களும் கடந்து வந்த பாதையின் விசேஷ

அம்சங்களையும், பொதுவான விதிகளையும், கண்டு பிடிப்பதிலும் அவர்களது புகழ்மிக்க புரட்சிகர பாரம்பரியத்தையும் சோஷலிச கம்யூனிச நிர்மாணத்தில் அவர்களது உழைப்பின் வெற்றிகளையும் பிரபலப்படுத்துவதிலும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்தகைய ஆராய்ச்சிகள் சோவியத் மக்களிடையே ஐக்கியத்தை யும் நட்புறவையும் வலுப்படுத்துவதற்கும், சோவியத் தேசபக்தி, பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகிய உணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதிலும் பயன்பட்டுள்ளன. சோவியத் புதை பொருள் இயலாளர்கள் அரிய சுவையான கண்டுபிடிப்புக்களைச் செய்துள் ளனர். அவர்களது ஆராய்ச்சி சோவியத் யூனியனது பல-தேசிய கலாசாரத்தில் ஒவ்வொரு மக்களின் பங்கையும் எடுத்துரைக் கிறது. புரட்சிக்கு முன்னர் எழுத்து மொழி இல்லாத மக்களுக்கு வரி வடிவங்களைத் தோற்றுவிப்பதிலும், அம்மொழியின் இலக் கணங்களை வகுத்து பல்வேறுவகை அகராதிகளைப் பதிப்பிக்கவும், சோவியத் மொழியியலாளர்கள் அரும்பாடு பட்டுள்ளனர். இலக் கியத் துறை அறிஞர்கள், இலக்கிய வரலாறு, தத்துவம் ஆகியவை குறித்து ஆராய்ச்சிகளை நடத்தி நாட்டின் தேசிய இலக்கியங்கள் பரஸ்பரம் வலுப்படுவதற்கு பெரும் தொண்டாற்றியுள்ளனர்.

அண்மை ஆண்டுகளில், திட்டமிடுதல், பொருளாதார நிர்வாகம் ஆகியவற்றில் புதிய முறைகளை வளர்ப்பதிலும் தற் போது செயல்படுத்தப்பட்டுவரும் பொருளாதார சீர்திருத்தத் தின் அடிப்படைகளை அமைக்கவும், நாட்டின் உற்பத்தி சக்திகளை ஆராயவும் பொருளாதார ஆய்வு பெரும் செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது.

சமகால உலக வளர்ச்சிப் போக்கில் அதாவது சர்வதேச உறவுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், உலக சோஷலிச அமைப் பின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் அடிப்படை அம்சங்கள் அத னுடன் தொடர்புள்ள சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பு குறித்த பிரச்சினைகள் முதலாளித்துவ உலகில் நடைபெற்றுவரும் போக்குகளைப் பற்றிய பகுப்பாய்வு ஆகியவற்றில் சோவியத் நிபுணர்கள் கூர்மையான கவனம் செலுத்தி வருகின்றனர்.

நவீன இயற்கை விஞ்ஞானத்தின் தத்துவார்த்தப் பிரச் சினைகள், சமூக வளர்ச்சியின் தர்க்கவியல் சோஷலிச சமூகத்தின் அரசியல் அமைப்புடனும் சோஷலிச ஜனநாயகத்தின் வளர்ச்சி யுடனும் தொடர்புள்ள பிரச்சினைகள் ஆகியவை ஆராயப்பட்டு வருகின்றன.

முன்னேற்றமடைந்த சோஷலிச சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை தத்துவார்த்த ரீதியில் விளக்கவும் படிப்படியாக கம்யூனிச சமுதாயத்திற்கு மாறுவதற்கான வழிமுறைகளை விஞ்

ஞான ரீதியாக ஆதாரப்படுத்தவும் சமூக விஞ்ஞான ஊழியர்கள் பணியாற்றவேண்டுமென்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24வது காங்கிரஸ் பணித்துள்ளது. பொருளாதாரம், சமுதாயத்தின் சமூக-அரசியல் வளர்ச்சி, அயலுறவுக் கொள்கை ஆகிய துறைகளில் இன்னும் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டியுள்ளன.

1971-1975 ஐந்தாண்டு திட்ட காலத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் விஞ்ஞான நிறுவனங்களின் பொருளாயத தொழில் நுட்ப அடிப்படையை வலுப்படுத்தவும் அரசு ஒதுக்கியுள்ள தொகை, அதற்கு முந்திய ஐந்தாண்டு காலத்தைக் காட்டிலும் 60 சதவிகிதம் அதிகமானதாகும். மேலும் பல விஞ்ஞான ஊழியர்கள் குறிப்பாக விஞ்ஞான தொழில் நுட்பத்தின் புதிய துறைகளில் பயிற்றுவிக்கப்படுவர்.

இவையனைத்தும் சோஷலிச சமூகத்தின் வாழ்வில் விஞ்ஞானம் வகிக்கும் மாபெரும் பங்கை எடுத்துக் காட்டுகின்றன. இப்பங்கு வருங்காலத்தில் மேலும் அதிகரிக்கும்; ஏனெனில் கம்யூனிசத்திற்கான பொருளாயத தொழில்நுட்ப அடிப்படையை தோற்றுவிப்பதில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமே பிரதான முக்கியத்துவம் வாய்ந்ததென கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24வது காங்கிரஸ் சோவியத் மக்களின் முன் வரலாற்று முக்கியத்துவம் உள்ள பணியை வைத்துள்ளது. விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சியின் சாதனைகளை சோஷலிசத்தின் சாதக நிலைகளுடன் இணைப்பதும் சோஷலிசத்தில் உள்ளார்ந்து கிடக்கும், விஞ்ஞானம் உற்பத்தி ஆகியவற்றிடையேயான உறவுகளின் வடிவங்களை வளர்ப்பதுமே அப்பணியாகும்.

சோவியத் விஞ்ஞானத்திற்கு ஒரு தெளிவான குறிக்கோள் உண்டு. அதுதான் மக்களின் நலன்களுக்காக சோவியத் யூனியனது பொருளாதார கலாசார முன்னேற்றத்தை ஊக்குவிப்பது என்பதே.

**சர்வதேச ஒத்துழைப்பு**. ஆராய்ச்சியின் வளர்ந்துவரும் வீச்சினாலும், குறிப்பாக உயர் அழுத்த பௌதிகம், வான் பௌதிகம், வானியல் ஆகிய துறைகளில் வளர்ந்துவரும் வீச்சினாலும் சர்வதேச விஞ்ஞான ஒத்துழைப்பு அவசியமாகிறது. கடலியல், வாயு மண்டலப் போக்குகள், பூமியின் உள்ளமைப்பு, சூழ்நிலைப் பாதுகாப்பு ஆகியவற்றுடன் தொடர்புள்ள உலகப் பிரச்சினைகளை பல நாடுகளிலுள்ள விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சிகளின் மூலம்தான் வெற்றிகரமாகத் தீர்க்க முடியும். பொது சுகாதாரத் துறையிலும் ஒத்துழைப்பு அவசியமாகிறது.

சோவியத் விஞ்ஞானப் பேரவை 70க்கும் அதிகமான நாடுகளின் விஞ்ஞான நிறுவனங்களுடன் விரிவான தொடர்புகளைக் கொண்டுள்ளது. அத்தகைய தொடர்புகளின் வடிவங்கள் பல்வேறு வகைத்தானவை; பரஸ்பர விஜயங்கள், இருதரப்பு பலதரப்பு ஆராய்ச்சி, கூட்டு ஆய்வை மேற்கொள்ளுதல் போன்ற பலவும் அதில் அடங்கும். 1972ல் 50 நாடுகளிலிருந்து விஞ்ஞானிகள் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தனர்.

விஞ்ஞானத் துறையில் சர்வதேச ஒத்துழைப்புக்கான மிகச் சிறந்த உதாரணமாக சோஷலிச நாடுகள் விளங்குகின்றன. சோஷலிச நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பானது, பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலின் கட்டுக்கோப்பிற்குள் பலதரப்பு அடிப்படையிலும், இருதரப்பு அடிப்படையிலும் வளர்ச்சியடைந்து வருகிறது. அநேகமாக விஞ்ஞான தொழில்நுட்பத்தின் எல்லாத்துறைகளையும் அது தழுவியுள்ளது. அடிப்படை, பிரயோக விஞ்ஞானப் பிரச்சினைகளைப் பற்றிய கூட்டு விண்வெளிப் பரிசோதனைகளை நடத்துவதிலிருந்து குறிப்பிட்ட விஞ்ஞானத் துறைகளின் வளர்ச்சி சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாப்புப் பணியில் கூட்டுப் பங்கேற்பு, தேசிய சுகாதாரத் துறைகளின் தத்துவார்த்த நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது ஆகியவை வரை அது அனைத்தையும் தழுவியது ஆகும். உண்மையில் நிறைவேற்றப்பட்ட பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலின் திட்டம், சோஷலிசக் கூட்டணியைச் சேர்ந்த நாடுசளிடையே பொருளாதார விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பின் வளர்ச்சியில் புதியதொரு கட்டத்தைக் குறிக்கிறது.

பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பின்லாந்து, ஆஸ்திரியா, ஸ்வீடன், நார்வே, டென்மார்க் இதர சில மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் சோவியத் யூனியனின் விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பு திருப்திகரமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இந்தியா, கனடா, ஜப்பான் போன்ற நாடுகளுடனான ஒத்துழைப்பில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான சிறந்த வாய்ப்புக்கள் காணக் கிடக்கின்றன. 1972மே மாதம் சோவியத்-அமெரிக்கத் தலைவர்களிடையே நடைபெற்ற கூட்டத்தின்போது ஏற்பட்ட ஒப்பந்தங்கள்—விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளிலும், சுகாதாரப் பணித் துறையிலும், சூழ்நிலைப் பாதுகாப்பு, விண்வெளி ஆய்வு ஆகிய துறைகளிலும் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தங்கள் — சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்குமிடையேயான உறவுகளில் புதியதொரு மைல் கல்லாகும்.

அதனுடன் இணைந்துள்ள சோவியத் தேசிய விஞ்ஞான ஸ்தாபனங்களையும் உள்ளடக்கிய சோவியத் விஞ்ஞானப் பேரவை 143 சர்வதேச அரசாங்கச் சார்பற்ற விஞ்ஞான ஸ்தாபனங்களில் அங்கம் வகிககிறது. சர்வதேச புவிபௌதிக ஆண்டு, போன்ற சர்வதேச விஞ்ஞானப் பணிகளிலும் அண்டார்க்டிக், உலகக் கடல்கள், சூரியன், புறவெளி ஆகியவற்றைக் கூட்டாக ஆய்வுகள் நடத்துவதிலும் சோவியத் விஞ்ஞானிகள் செயலூக்கமான பங்கு வகிக்கின்றனர்.

ஒருங்கிணைந்த சர்வதேசத் திட்டங்களும் பிரதான விஞ்ஞானப் பிரச்சினைகளில் கூட்டு ஆராய்ச்சிகளும் மனித குலத்தின் நன்மைக்காக உலக விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மேலும் துரித வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக்களைத் திறந்து விட்டுள்ளன.

# விளையாட்டு இயக்கம்

*மனிதனது ஆளுமையின் ஒரே சீரான லய வளர்ச்சியில் உடற்பயிற்சியும் விளையாட்டும் ஒரு முக்கிய பங்காற்றுகின்றன.*

**விளையாட்டும் சமூகமும்** : தனது பிரஜைகளின் உடல் திறனை உறுதிப்படுத்தும் பிரச்சினையில் சோஷலிச சமூகம் பெருங்கவனம் செலுத்துகிறது. கட்சியின் முக்கியமான கடமைகளில் ஒன்று, குழந்தைப் பருவத்திலிருந்து தொடங்கி இளம் தலைமுறையினரை உடல் வலுமிக்கவர்களாயும், மனமும், உடலும் ஒன்றிணைந்த வளர்ச்சியுள்ளவர்களாயும் உருவாக்குவதே, என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் திட்டம் கூறுகிறது.

சோவியத் உடற்பயிற்சி இயக்கமானது, விஞ்ஞான ரீதியாக உருவாக்கப்பட்ட அமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும்; மக்களின் எல்லாப் பகுதியினரையும் அது தழுவியதாகும்.

பொதுமக்கள், உடற்பயிற்சியிலும், விளையாட்டிலும் ஈடுபடுவதற்கான நிலைகளை மேம்படுத்துவதற்குரிய சில நடவடிக்கைகள், 1971-75க்கான வளர்ச்சித் திட்டம் குறித்த சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24-வது காங்கிரஸின் ஆணைகளில் அடங்கியுள்ளன. புதிய விளையாட்டு நிறுவனங்களை நிர்மாணிப்பதற்கான பரந்ததொரு திட்டத்தைத் தொடங்குவதன் மூலமும், தற்போதுள்ள வசதிகளை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலமும், பரந்த அளவில் உல்லாசப் போக்குவரத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதன் மூலமும், உல்லாசப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும் இது சாதனையாகவிருக்கிறது.

உடற்பயிற்சியையும், விளையாட்டையும், வளர்ச்சியடையச் செய்வதற்காக, ஆண்டுதோறும், மேன்மேலும் அதிக நிதி ஒதுக்கலபட்டு வருகிறது. இந்த நிதி, அரசு பட்ஜெட்டிலிருந்தும், ஸ்தப்

நிர்வாகக் குழுக்கள் தமது பட்ஜெட்டில் விளையாட்டுக்காக ஏற்படுத்தும் ஒதுக்கீடுகளிலிருந்தும், விளையாட்டு நிறுவனங்களை அமைக்கவும், விளையாட்டுக் கருவிகளை வாங்கவும், பயிற்சி தருபவர்களுக்கு ஊதியம் அளிக்கவும், விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும், ஆலைகளும், கூட்டுப்பண்ணை, அரசுப் பண்ணைகள் ஆகியவை தாராளமாக ஒதுக்கும் தொகைகளிலிருந்தும் கிடைக்கிறது. உடல் ஆரோக்கிய இயக்கமானது சோவியத் தொழிற்சங்கத்தின் பேராதரவையும் பெற்றுள்ளது.

சோவியத் யூனியனில் உடல் ஆரோக்கிய இயக்கத்தை வளர்க்கும் பணியை சோவியத் அமைச்சரவையின் கீழ் இயங்கும் உடற்பயிற்சி, விளையாட்டுக் கமிட்டி மேற்கொண்டுள்ளது. விளையாட்டை ஒரு லாபக் கருவியாகப் பயன்படுத்தும் தனிப்பட்ட நபர்களோ, ஸ்தாபனங்களோ சோவியத் சமூகத்தில் கிடையாது; விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, சோவியத் விளையாட்டு வீரர்களுக்குப் பணம் ஏதும் தரப்படுவதில்லை. ஒவ்வொரு விளையாட்டு வீரருககும் அவரவரது சொந்தத் தொழில் ஏதேனும் ஒன்று உண்டு; அதைக் கொண்டுதான் அவர் வாழ்கிறார். சோவியத் யூனியனில் விளையாட்டே ஒரு தொழிலல்ல; தொழில்முறை விளையாட்டு என்பது சோவியத் யூனியனில் ஏதும் கிடையாது: அது ஒரு சிறந்த பொழுது போக்கு மட்டுமே.

விளையாட்டில் ஈடுபடுபவர்களுக்கு அதற்கான சாதனங்களும், வசதிகளும் இலவசமாகத் தரப்படுகின்றன. அதற்குரிய பயிற்சியும் இலவசமே. பயிற்சிக் காலத்திலும், போட்டிகளின் போதும், அதில் பங்குபெறுபவர்கள் தமது முறையான மாதச் சம்பளத்தை ஒழுங்காகப் பெறுகின்றனர். உள் நாட்டிலும், அயல் நாடுகளிலும் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அவர்களது பயணச் செலவும் தரப்பட்டுவிடுகிறது. போட்டிகள் நடத்தப்படும் போது, பார்வையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத் தொகை, விளையாட்டு அரங்குகள் கட்டவும், விளையாட்டுக் கருவிகள் வாங்கவும் செலவிடப்படுகிறது.

சோவியத் அரசாங்க காலத்தில், சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்துள்ள உடற்பயிற்சி அமைப்பானது, எல்லாப் பிரஜைகளின் உடல் ஆரோக்கிய வளர்ச்சியின் பால் அரசு காட்டும் அக்கறை, பயில் முறை விளையாட்டு இயக்கத்துடன் இணைந்துள்ள ஒன்றாகும்.

கிண்டர்காரடன்களிலும், பொதுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும், தொழிற்பயிற்சிக கேந்திரங்களிலும், இராணுவப் படையிலும் உடற்பயிற்சி கட்டாயமாகும்.

பயில்முறை விளையாட்டு இயக்கமானது, எல்லா விளையாட்டுக் கழகங்களையும், தமது வேலை அல்லது கல்வி இடங்களில் பல்வேறு விளையாட்டுகளிலும் ஈடுபடுபவர்கள் அனைவரையும் தழுவியதாகும். இது தொழிற்சாலைகள், நிர்மாண ஸ்தலங்கள், கூட்டுப்பண்ணை, அரசுப் பண்ணைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், செகண்டரி, உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள உடற்பயிற்சிக் குழுக்களையும், விளையாட்டுக் குழுக்களையும் உள்ளடக்கியதாகும்

சோவியத யூனியனில் இத்தகைய விளையாட்டுக் குழுக்களும், சங்கங்களுமட 2,12,000 உள்ளன; இவைதான் விளையாட்டுக் கழகங்களின் பிரதம யூனிட்டுகளாகும். மாணவா உடற்பயிற்சிச் சங்கங்களும், விளையாட்டுச் சங்கங்களும், அகில யூனியன் விளையாட்டுக் கழகமான ''புரெவெஸ்தினிக்''குடன் இணைந்தவையாகும்; ரஷ்ய சோவியத் சமஷ்டிக் குடியரசின் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் விளையாட்டாளர்கள் அனைவரும் பிரதானமாக, ''துருத்'' கழகத்தின் உறுப்பினர்களாவர். விளையாட்டுக்களில் ஆர்வமுள்ள அரசாங்க ஊழியர்கள், விஞ்ஞானத் துறை பணியாளர்கள், கலாசாரத்துறை ஊழியர்கள் ஆகியோர் 'ஸ்பார்தக்' கழகத்தில் சேருகின்றனர்; ரயில்வே தொழிலாளர்களிடையேயுள்ள எல்லா விளையாட்டுப் பிரியர்களையும் 'லோகோமோட்டிவ்' கழகம் ஒன்றிணைக்கிறது. ஆக, சோவியத யூனியனிலுள்ள எல்லா பயில்முறை விளையாட்டு இயக்கமும், தொழில்துறை ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் அமைந்துள்ளவை ஆகும். மொத்தம் 4 கோடி 50 லட்சம் விளையாட்டுப் பிரியர்களை இணைத்துள்ள 36 விளையாட்டுக் கழகங்கள் சோவியத் யூனியனில் உள்ளன.

**விளையாட்டில் உன்னத தரங்களை அடைதல்.** இன்று, சோவியத் யூனியனில் 59 விளையாட்டுக்களில் மக்கள் ஈடுபட்டுளளனர். அவற்றுள் மிகப் பிரபலமானவை, ஒலிம்பிக் விளையாட்டுக்களே ஆகும். உதாரணமாக, ''டிராக்-அண்ட்-ஃபீல்ட்'' நிகழ்ச்சிகளில் (ஓட்டம், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் போன்றவை) 70 லட்சம் பேர் ஈடுபடுகின்றனர். 60 லட்சத்திற்கு மேற்பட்டோர் கைப்பந்தாட்டத்திலும், 45 லட்சம் பேர் கால் பந்தாட்டத்திலும், மேலும் 46 லட்சம் பேர் பனிச்சறுக்கு விளையாட்டிலும் ஈடுபட்டுள்ளனர். **பெருவாரியான ஒலிம்பிக் விளையாட்டுக்களில்,** சோவியத் வீரர்கள் தலையாய ஸ்தானங்களைப் பெற்றுள்ளனர். ஒலிம்பிக் போட்டிகளிலும், உலக, மற்றும் ஐரோப்பிய போட்டிகளிலும் அவர்கள் பலமுறை உயர்ந்த இடங்களைப் பெற்றுள்ளனர்.

கோடை,பனிக்கால ஒலிம்பிக் திட்டங்களில் இடம் பெற்றிராத வேறு சில விளையாட்டுக்களும், சோவியத் யூனியனில் வெற்றிகரமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. கரண விளையாட்டுக்கள்,

உடலழகு விளையாட்டுக்கள், மலை ஏற்றம், 'சாம்போ' மல்யுத்தம், டென்னிஸ், பிங்-பாங், பெண்கள் கூடைப்பந்து, சைக்கிள் ஓட்டம், சதுரங்கம், 'டிராப்ட்ஸ்', ஆகியவை அவற்றுள் அடங்கும்.

கார், மோட்டார் சைக்கிள் போட்டிகள், நீர்மூழ்குதல், கிளைடர் விமானப் போட்டிகள், பாரச்சூட் வழி குதித்தல், விசைப்படகுப் போட்டி போன்றவை உட்பட பலதொழில்நுட்ப விளையாட்டுப் போட்டிகளும் சோவியத் யூனியனில் மேன்மேலும் பிரபலமாகி வருகின்றன.

சோவியத் நாட்டில் பலதேசிய விளையாட்டுக்களும் உள்ளன. ''சிதோபா'' என்ற ஒருவகை மல்யுத்தத்தில் ஜார்ஜியர்கள் ஈடு படுகின்றனர். கால் பந்தாட்டத்தையொட்டிய ''லேலோ'' என்று ஒரு விளையாட்டும் குதிரை மீதிருந்து ஆடப்படும் விளையாட்டுக்களும் இங்கு பிரபலமானவையே. கஸாக்ஸ்தான், கிர்கீஸியா, ஆர்மீனியா குடியரசுகளில் தேசியவகையைச் சேர்ந்த மல்யுத்தமும் குதிரை ஏற்ற விளையாட்டுக்களும் மிக வளர்ச்சியடைந்துள்ளன. குதிரைகளைப் பிடிக்கும் ஜல்லிக்கட்டு போன்றதொரு விளையாட்டில் யாகுத்துக்கள தேர்ச்சி பெற்றவர்கள்; புரியாத்துக்கள் வில்வித்தை யிலும், நென்த்ஸி மக்கள் மான்-வண்டிப் போட்டியிலும் சிறந் தவர்கள். ''பேஸ்-பால்'' விளையாட்டை நினைவூட்டக்கூடிய ''லாப்தா'' என்ற விளையாட்டு ரஷ்ய சமஷ்டியில் பிரபலமான தாகும்.

''உழைப்பிற்கும், பாதுகாப்பிற்கும் தயார்'' என்றதொரு தேசிய உடற்பயிற்சித் திட்டம் சோவியத் யூனியனில் 40 ஆண்டு களுக்கு முன்னர் வகுக்கப்பட்டது. சோவியத் உடற்பயிற்சி விளையாட்டு ஆகியவற்றின் வளர்ச்சியில் அது ஒரு முக்கிய மைல் கல்லாகும். நாட்டின் உடற்பயிற்சி இயக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அத்திட்டம் அண்மை யில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அது தற்போது அனைத்தையும் தழுவியதாகவும் அதே நேரத்தில் எல்லா வயதினருக்கும் பொருந் தும் வகையிலும் விளையாட்டுணர்வை மேலும் உயர்த்தும் வகை யிலும் அமைந்துள்ளது.

பெருவாரியான விளையாட்டுக்களில், குறிப்பாக ஒலிம்பிக் நிகழ்ச்சிகளில் விசேஷ விருதுகள் வழங்கப்படுகின்றன. அவற்றுள் முதன்மையானது சோவியத் யூனியனின்''மாஸ்டர் ஆப் ஸ்போர்ட் — சர்வதேசத்தரம்'' — என்பதாகும். அதையடுத்து சோவியத் யூனியன் ''மாஸ்டர் ஆப் ஸ்போர்ட்'', ''கேண்டிடேட் மாஸ்டர் ஆப் ஸ்போர்ட்'' என்ற விருதுகளாகும். விளையாட்டு வீரர்கள் முதற் தகுதியினர், இரண்டாவது தகுதியினர், மூன்றாவது தகுதி

யினர் என்று பிரிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று இளைஞர் களிலும் மூன்று ஜூனியர் தகுதியினர் உள்ளனர்.

ஒலிம்பிக் மற்றும் உலக ஐரோப்பியப் போட்டிகளில் பரிசு பெறும் சோவியத் விளையாட்டு வீரர்களுக்கு ''மெரிட்டட் மாஸ்டர் ஆப் ஸ்போர்ட்'' என்ற கௌரவப் பட்டம் வழங்கப்படுகிறது. அத் தகைய பட்டம் பெற்றோர் இன்று சோவியத் யூனியனில் 2000 பேர் உள்ளனர்.

பயிற்சி தருபவர்களும் உடற்பயிற்சி ஆசிரியர்களும் 21 அரசு உடற்பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி களிலுள்ள 77 உடற்பயிற்சித் துறைகளிலும், 25 உடற்பயிற்சி பள்ளிகளிலும், 10 பயிற்சி தருபவர்களுக்கான விசேஷப் பள்ளி களிலும் கற்றுத் தேர்ச்சி பெறுகின்றனர்.

பல்வேறு தொழில்நுட்ப, மற்றும் வைத்தியக் கூடங்களிலும், சோவியத் விஞ்ஞானப் பேரவையிலும், வைத்திய விஞ்ஞானப் பேரவையிலும், குடியரசுகளின் பேரவைகளிலும் விளையாட்டுத் துறை குறித்த ஆராய்ச்சிப் பணி நடைபெற்று வருகிறது.

சோவியத் யூனியனில் பல முதற் தரமான விளையாட்டு நிறுவன அமைப்புகள் உள்ளன. அவற்றுள் 1,01,000 பேருக்கு இட வசதியுள்ள மாஸ்கோவிலுள்ள மத்திய லெனின் ஸ்டேடியம்; 1,00,000 இட வசதியைக் கொண்ட லெனின்கிராடு கிரோவ் ஸ்டேடியம்; அதேயளவு இடவசதியைக் கொண்ட கீவ் நகரத்தின் மத்திய ஸ்டேடியம்; 60,000 இடவசதியைக் கொண்ட மாஸ்கோ டைனமோ ஸ்டேடியம் ஆகியவை அடங்கும். தாஷ்கெண்டிலுள்ள பாக்தகோர் ஸ்டேடியமும் அதே அளவினைக் கொண்டதுதான். இதைப் போன்று இன்னும் பல விளையாட்டு அரங்கங்கள் உள்ளன. லெனின்கிராடு, கீவ், திபிலிஸி, மின்ஸ்க், பார்னல், கோர்க்கி, ரிகா, எரெவான், தோனெத்ஸ்க் ஆகிய பல நகரங்களில் கூரை வேய்ந்த ''இன்-டோர்'' விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டுள் ளன. 1972 இறுதியில் புனரமைக்கப்பட்ட பின்னர் மெதியோ மலைச்சறுக்கு விளையாட்டுப் பாதை திறக்கப்பட்டது. 10,500 சதுர மீட்டர்கள் செயற்கைப் பனிக் கட்டியாலான சறுக்கு மைதா னமாகும் இது. அது திறக்கப்பட்ட பின்னர் பல உலக சாதனைகள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. மொத்தத்தில் சோவியத் நாட் டில் 3,000 ஸ்டேடியங்களும், 3,78,000 விளையாட்டு மைதானங் களும், 40,000 உடற்பயிற்சி அரங்குகளும், 5,000 உல்லாசப் பயண, மற்றும் ஆரோக்கிய கூட முகாம்களும் உள்ளன. கோடை காலத்தில் ஒரு நாளில் நாட்டிலுள்ள விளையாட்டரங்க வசதிகளை 2 கோடி விளையாட்டுப் பிரியர்கள் பயன்படுத்தலாம்.

**சோவியத் மக்களின் ஸ்பார்த்தகியாடு** என்பது சோவியத் நாட்டின் விளையாட்டு வாழ்வில் ஒரு பெரும் நிகழ்ச்சியாகும். சாதாரணமாக அத்திட்டத்தில் வெவ்வேறான 20 விளையாட்டுக் களுக்கும் அதிகமாக சேர்க்கப்பட்டுள்ளது. பல கட்ட போட்டி களுக்குப் பின்னர் நடை பெறும் இறுதிப் போட்டிகளான ஸ்பார்த் தகியாடு தரத்திலும் வீச்சிலும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணை யானது. நான்கு ஆண்டுகளுக்கொருமுறை இது நடத்தப்படுகிறது. சென்ற ஸ்பார்த்தகியாடு 1971ல் நடைபெற்றது.

**சர்வதேசப் பிணைப்புக்கள்.** சோவியத் விளையாட்டு வீரர்கள் 87 நாடுகளிலுள்ள விளையாட்டு வீரர்களுடன முறையான தொடர் புகளைக் கொண்டுள்ளனர். 1972ல் அவர்கள 1881 விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். 1953ம் ஆண்டு சோவியத நாட்டிற்கு விஜயம் செய்த அயல்நாட்டு வீரர்கள், அயல்நாடுகளில் நடை பெற்ற போட்டிகளில் கலந்து கொண்ட சோவியத் வீரர்கள் ஆகியோரது மொத்த எண்ணிக்கை 2,777 ஆகும். ஆனல் 1963ல் அந்த எண்ணிக்கை 9,000 ஆகவும், 1972ல் 30,000க்கு அதிக மாகவும் ஆகியுள்ளது.

59 சர்வதேச விளையாட்டு சம்மேளனங்களிலும், சங்கங் களிலும், குழுக்களிலும் சோவியத் விளையாட்டு வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

1966க்கும் 1973க்கும இடைப்பட்ட காலத்தில் 100க்கும் அதிகமான சோவியத் விளையாட்டுப் பயிற்சி அளிப்பவர்கள் 37 ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் பணியாற்றினர்.

அதே கால கட்டத்தில் கானு, கினி, மாலி, டூனிஸியா, எத்தி யோப்பியா, ஆப்கானிஸ்தான், கம்போடியா, இராக், மலேஷியா ஆகிய பல நாடுகளிலிருந்தும் பல இளைஞர்கள் சோவியத் உடற் பயிற்சிக் கூடங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். இந்த நாடுகளி லிருந்து 50 பேருக்கு மேல் பயிற்சியளிப்பவர் பள்ளிகளிலும் கற்றுப் பட்டம் பெற்றுள்ளனர்; 34 நிபுணர்கள் இத்துறையில் ஆராய்ச் சிக் கட்டுரைகளை வழங்கி பட்டம் பெற்றனர்.

**20வது ஒலிம்பிக் விளையாட்டுக்கள்—1972 :** மியூனிக்கில் நடை பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுகளில் 122 நாடுகளைச் சேர்ந்த ஏறக் குறைய 10,000 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.

இதில் சோவியத குழு 50 தங்கப்பதக்கங்களையும், 27 வெள் ளிப் பதக்கங்களையும், 22 வெண்கலப் பதக்கங்களையும் வென்றது. யுத்த-பிற்கால ஒலிம்பிக் விளையாட்டுகளில் 50 தங்கப் பதக்கங்கள் என்பது மிகச் சிறந்த சாதனையாகும்.

கூடைப்பந்து, ஃபிரீஸ்டைல், கிரேக்க-ரோமன் மல்யுத்தம், சைக்கிள் போட்டி, தண்ணீர்-போலோ, கைப்பந்து (பெண்கள்), ஜிம்னஸ்டிக்ஸ், கயாக், படகுப்போட்டி, நவீன பென்டத்லான், குறிபார்த்துச் சுடும் போட்டி ஆகிய 10 நிகழ்ச்சிகளில் சோவியத் வீரர்கள் வெற்றி பெற்றனர்.

33 தங்கப்பதக்கங்களையும், 30 வெள்ளிப் பதக்கங்களையும, 30 வெண்கலப் பதக்கங்களையும் பெற்ற அமெரிக்கக் குழுவை சோவியத் வீரர்கள் 16 ஒலிம்பிக் நிகழ்ச்சிகளில் தோற்கடித்து ஒரு குழுவினராக முதலிடம் பெற்றனர்.

21வது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் 1976ல் மான்ட்ரீலில் நடைபெறும். 1980ல் நடைபெறவிருக்கும் 22வது ஒலிம்பிக போட்டிக்கான அரங்கப் பட்டியல் பிரேரணையில் மாஸகோவும உள்ளது.

1973ல் சர்வதேச மாணவர் விளையாட்டுப் போட்டியான யுனிவர்சியாடு மாஸ்கோவில் நடைபெற்றது.

# இராணுவப் படைகள்

நாட்டைப் பாதுகாப்பது ஒவ்வொரு பிரஜையின் தேசபக்தக் கடமையாகும்.

சோவியத் ராணுவப் படைகள் முதன்முதலாக, 1918பிப்ரவரி 23-ல் போரில் ஈடுபட்டன. அன்றைய தினம், தொழிலாளா தொண்டர் படைப்பகுதிகளும், புதிதாக அமைக்கப்பட்டிருந்த தொழிலாளர், விவசாயிகள் செஞ்சேனையின் படைப்பகுதிகளும்,இளம் குடியரசைத் தாக்கிய கெய்ஸர் ஜெர்மனித் துருப்புக்களின் மீது பிஸ்கோவ் அருகே தமது முதல் வெற்றியை அடைந்தன.

உள்நாட்டு யுத்தம், அன்னியத் தலையீட்டின் போது (1918-20), நம்ப முடியாத இன்னல்களுக்கிடையிலும், தம்மைவிட ஆயுத வசதி படைத்த எதிரியை எதிர்த்து, செஞ்சேனை, சோவியத் அரசைப் பாதுகாத்து,மங்காப் புகழைத் தேடிக் கொண்டது.

மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போதும் (1941-45), மாஸ்கோ, ஸ்டாலின்கிராடு, குர்ஸ்க் யுத்தங்களும், நீப்பர் நதியைக் கடந்ததும், அதையடுத்து உக்ரேய்னிலும் நீப்பருக்கு மேற்கேயும், லெனின்கிராடிலும் நடைபெற்ற யுத்தங்களும், பைலோரஷ்யப் போர் நடவடிக்கைகளும், பால்டிக் குடியரசுகளை விடுவித்ததும், பெர்லின் போரும், யுத்த வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களினால் பொறிக்கப்பட்டுள்ளன. நாஜி அடிமைத் தளையிலிருந்து, சோவியத் இராணுவம் பல நாடுகளை விடுவித்துள்ளது.

சோவியத் இராணுவப் படை கம்யூனிஸ்டுக் கட்சியினால் தோற்றுவிக்கப்பட்டது. சோவியத் இராணுவத் துறைக்கான ஆரமபப் பணியினை லெனின் மேற்கொண்டதோடு, செஞ்சேனையைத் தோற்றுவித்து, நாட்டின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதற்கான கம்யூனிஸ்டுக கட்சியின் முயற்சிகளையும் நேரடியாக மேற்பார்வையிட்டு, வழிநடத்தினார்.

சோவியத் சமாதானத் திட்டமானது, மாறுபட்ட சமூக அமைப்புக்களைக் கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். சோவியத் அரசின் ஆரம்பகாலத்திலிருந்தே பின்பற்றப் பட்டுவரும் இந்த லெனினியக் கோட்பாடு, சர்வதேச உறவுகளில் முன்னேற்றத் திற்கான, மெய்யானதொரு சக்தியாகியுள்ளது.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு அபாயத்தின் காரணமாக மட்டுமே ஒரு சோஷலிச அரசு இராணுவத்தை வைத்திருக்க வேண்டியுள்ளது. சோவியத் மக்களது சமாதான பூர்வ உழைப்பைப் பாதுகாப்பதும், நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும், மகத்தான கம்யூனிச இலட்சியத்தை உறுதிப் படுத்துவதும் சோவியத் இராணுவப் படைகளின் பணியாகும்.

முற்றிலும் புதியதொரு வகையைச் சேர்ந்ததொரு அமைப்பே சோவியத் இராணுவம்; முதலாளித்துவ நாடுகளது படைகளிலிருந்து அது அடிப்படையிலேயே வேறுபட்டதாகும். அது சோஷலிச, மெய்யான வெகுஜன அரசாங்கத்தின் ஆயுதமாகும்; தொழிலாளர், விவசாயிகளது வர்க்க நேசக் கூட்டையும் சோவியத் ஒன்றியத்தில் வாழும் எல்லா தேசங்கள், தேசிய இனங்களின், நட்புறவையும், சோவியத் சமூகத்தின் தார்மீக, அரசியல் ஐக்கியத்தையும் சோஷலிச தேசபக்தியையும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் அது பிரதிபலிப்பதாகும்.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் சட்டப்படி, சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் சபை, சோவியத் இராணுவப் படைகளின் மீது கட்டுப்பாடு செலுத்துகிறது. இது யுத்தம் மற்றும் சமாதானம் எனும் பிரச்சினைகள் குறித்து சட்டமியற்றும், தேசியப் பாதுகாப்பைத் திரட்டும், இராணுவப் படையினரின் பராமரிப்புக்கும், மேம்பாட்டுக்கும் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும். இராணுவப் படைகள், சோவியத் பாதுகாப்பு அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

சோவியத் யூனியனது பாதுகாப்பு அமைச்சர், சோவியத் யூனியனின் மார்ஷல் ஏ.எ.கிரெச்கோ ஆவார். இராணுவத் தளபதி, இராணுவ ஜெனரலான வி. ஜி. குலிகோவ் ஆவார். 1972ல் மொத்தம் 1,790 கோடி ரூபிள்கள் — அரசு பட்ஜெட்டில் 10.3 சதவிகிதம் — பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டது. (1973ஆம் ஆண்டிலும் அதே தொகை தான் ஒதுக்கப்பட்டது; ஆனால் அரசு பட்ஜெட் தொகை அதிகரித்ததால், பாதுகாப்புக்காகச் செலவிடப்படும் அளவு குறைந்தது—அரசு பட்ஜெட்டில் அது 9.8 சதவிகிதமாயிற்று.)

சோவியத் இராணுவப் படைகள் எப்பொழுதும் செயலில் இறங்கத் தயாராக உள்ள நிரந்தரப் படையாகும். இராணுவப் படையில் ஐந்து அங்கங்கள் உள்ளன; அவை, மிக முக்கியமான ராக்கெட் படை, தரைப்படை, விமானப்படை, ஆகாயப்பாது காப்புப் படை, கடற்படை ஆகியவையாகும்.

**மிக முக்கியமான ராக்கெட் படை** என்பது சோவியத் தாக்கு சக்தியின் பிரதான அம்சமாகும். அதன் குறிக்கோள், எதிரியின் அணு ஆயுதத் தாக்குதலுக்கான வழிவகைகளை அழிப்பதாகும்; மேலும், எதிரியின் பெரும் தாக்கு சக்தியையும், இராணுவ தளங் களையும், ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளையும், இராணுவ நிறு வனங்களையும் அழித்து, அரசாங்கமும், இராணுவ அமைப்புகளும் இயங்குவதையும், ஆக்கிரமிப்பாளரின் கடைசிப் படைவரிசையை யும், போக்குவரத்து வசதிகளையும் சீர்குலைப்பதாகும். எனவே, அப்படையில் முதல் தரமான நடுத்தர வீச்சுக் கொண்ட ஏவு கணைகளும், கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் ஏவுகணைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

**தரைப்படைகள்:** பிற படைத்துறைகளைக் காட்டிலும், எண்ணிக்கையில் அதிகமான பகுதி இதுவே; பரந்த வீச்சுடைய ஆயுதங்களையும் கருவிகளையும் கொண்டுள்ளது.

நடுத்தர வீச்சுக் கொண்ட, மற்றும் ஏவுகணை யூனிட்டுகளை யும், ஆகாயப் பாதுகாப்பு யூனிட்டுகளையும், கவச மோட்டார் யூனிட்டுகளையும், பலநோக்கு பீரங்கி யூனிட்டுகளையும், விமானத் துருப்புக்களையும் தரைப்படை கொண்டுள்ளது. போரின்போது, அவர்களுக்குத் துணை செய்ய என்ஜினீயர் யூனிட்டுகளும், சைகைச் செய்தி அறிவிக்கும் யூனிட்டுகளும செல்லுகின்றன.

**ஆகாயப் பாதுகாப்புப் படை:** ஆக்கிரமிப்பாளரின் விமானத் தாக்குதலை எதிர்ப்பதே இதன் பிரதான பொறுப்பாகும்; பல வகையான விமான எதிர்ப்பு ஏவுகணைகளும், எக்கால நிலையிலும் செல்லும் சூப்பர்சானிக போர் விமானங்களும் இப்படையிடம் உள்ளன. மின்னணு வசதிகளையும் கம்ப்யூட்டர்களையும், பிற சாதனங்களையும் கொண்ட நவீன ரேடார் நிலையங்களை அவை இயக்குகின்றன.

**விமானப்படை:** பீரங்கிகளையும், ஏவுகணைகளையும், கொண்டு, ரேடியோ-மின்னணுசக்திகளும் பொருத்தப்பட்ட ஒலியை மிஞ்சும் வேகமுடைய சூப்பர்சானிக் ஜெட் விமானங்கள் இப்படையிடம் உளளன. சகல பருவங்களிலும் பறக்கும் இவ்விமானங்கள் இர விலும், மிகக் தாழ்வாகவோ, அல்லது அதி உயரத்திலோ பறந்து நீண்ட தூரம செல்லக் கூடியவை.

விமானப்படையிடம், போர்விமானங்கள், குண்டுவீசிகள், போரிடும் - குண்டுவீசிகள், வேவு விமானங்கள், எத்தகைய கடினமான வேலைகளையும் செய்து முடிக்க வல்ல பல்வேறு வகை ஹெலிகாப்டர்கள் ஆகியவையும் உள்ளன.

**கடற்படை:** அணு நீர் மூழ்கிகள், ராக்கெட் தாங்கிக் கப்பல்கள் பல்வேறு வகைகளையும், தரங்களையும் கொண்ட போர்க்கப்பல்கள்—இவை தான் இதன் அதிரடிப்படையாகும்.

சோவியத் இராணுவப் படையின் பலம், அதனிடமுள்ள ஆயுதங்களிலும், எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த ஆயுதங்களை இயக்கும் மக்களிடமே உள்ளது.

இராணுவ யூனிட்டுக்களிலுள்ள போர் வீரர்களில் 80சதவிகி தத்தினராகவுள்ள கம்யூனிஸ்டுகளும், இளம் கம்யூனிஸ்டு அணியின ரும் அவற்றின் ஆதர்ச சக்தியாகத் திகழ்கின்றனர்.

இராணுவப் படையின் பிரதான பகுதி அதிகாரிகளாகும். மேன்மேலும் அதிக எண்ணிக்கையிலான அதிகாரிகள் பயிற்சி பெற்ற என்ஜினீயர்களாக உள்ளனர். இராணுவப் பேரவைகளும் உயர் பள்ளிகளும் கொண்ட ஓர் அமைப்பு, சோவியத் யூனியனில் கட்டப்பட்டுள்ளது.

கொடி தாங்கும் வீரர்களும், 'வாரண்ட்' அதிகாரிகளும், பிற ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதில் அதிகாரிகளுக்கு உதவு கின்றனர்.

மிகத் திறமையும், தகுதியும், வாய்ந்த போர்வீரர்கள் 'சார் ஜெண்ட்'டுகளாக உயர்த்தப்படுகின்றனர்.

சகலருக்கும் இராணுவ சேவை எனும் சட்டத்தினடிப்படை யிலேயே சோவியத் இராணுவப்படை அமைக்கப்பட்டுள்ளது. இராணுவ சேவைக்குத் தகுதி வாய்ந்த எல்லா சோவியத் ஆண் பிரஜைகளும், தேசிய இனம், வருணம், மத நம்பிக்கைகள,கல்வித் தரம், சமூக அந்தஸ்து என்ற எந்த வேற்றுமையும் இன்றி இரா ணுவப் பயிற்சி பெறுகின்றனர். இராணுவ சேவையின காலம் இரண்டு ஆண்டுகளாகும்; கடற்படையில் மூன்றுண்டுகளாகும்.

ஆயுதங்களையும், போர்க் கருவிகளையும் கையாள்வதில் சோவியத் போர்வீரர்கள் தீவிரப் பயிற்சி பெற்றுள்ளனர்; அவர் களது போருக்கான தயார்நிலை மிக உயர்ந்துள்ளது. மொத்த இராணுவ ஊழியர்களில், உயர்கல்வி, செகண்டரிக் கல்வி பெற்ற வர்கள் 47 சதவிகிதமாகவும், பூர்த்தியாகாத செகண்டரிக் கல்வி பெற்றவர்கள் 53 சதவிகிதமாகவும் உள்ளனர். தரைப்படையினரி

லும், விமானப்படையினரிலும் பாதிப் பேர்களும், முக்கியமான ராக்கெட்படை, விமானப் பாதுகாப்புப் படை, கடற்படைகளில் உள்ளவர்களில் 80சதவிகிதத்திற்கு மேற்பட்டோரும் திறமையும் தரமும் கொண்ட தனித் தேர்ச்சியாளர்களாவர். இராணுவத்திலும், கடற்படையிலும், 45சதவிகித அதிகாரிகள் பதவியில் என்ஜினீயர்களும், தொழில்நுட்பவியலாளர்களுமே உள்ளனர்.

தார்மீக அம்சமும்,போர்வீரர்களுக்கு அளிக்கப்படும் உளவியல் பயிற்சியும், துருப்புக்கள் போருக்குத் தயாராக இருக்கும் நிலைக்குப் பெரிதும் உதவுகின்றன. அரசியல் போதமும், மக்களது இலட்சியத்திற்கும், கம்யூனிச இலட்சியத்திற்கும் விசுவாசமும் சோவியத் இராணுவப் படையை வெல்லற்கரியதாக்குகிறது.

**வார்சா ஒப்பந்தம்.** 1955 மே மாதம், 14ந்தேதி வார்சாவில் நிறைவேற்றப்பட்ட பல தரப்பு நட்புறவு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஒப்பந்தம், 1955 ஜூன் 14ந்தேதி நடைமுறைக்கு வந்தது. வார்சா ஒப்பந்தமும், அதன் இராணுவ ஸ்தாபனமும் ஐரோப்பாவில் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தும் ஒரு பெரும் அம்சமாக உள்ளது. பல்கேரிய மக்கள் குடியரசு, ஹங்கேரிய மக்கள் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலிஷ் மக்கள் குடியரசு, ருமேனிய சோஷலிசக் குடியரசு, சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம், செக்கோஸ்லோவாக் சோஷலிசக் குடியரசு ஆகிய நாடுகள் அந்த ஒப்பந்தத்தில் பங்கேற்ற நாடுகள் ஆகும். ஏகாதிபத்திய‘நேட்டோ’ அணியிலிருந்து, தங்களது பாதுகாப்புக்கு ஏற்பட்டுவரும் அபாயம் அதிகரித்து வருவதற்கெதிராக, சோஷலிச நாடுகள் மேற்கொண்ட எதிர் நடவடிக்கையே வார்சா ஒப்பந்த ஸ்தாபனமாகும். தங்களது பந்தோபஸ்தை உறுதி செய்வதும், ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநிறுத்துவதும்தான் அதன் நோக்கம்.

வார்சா ஒப்பந்த அங்க நாடுகள் கூட்டு ராணுவப் படையையும், கூட்டுத் தலைமையையும், கூட்டு இராணுவப் படைக்கான தலைமையகத்தையும் கொண்டுள்ளன.

வார்சா ஒப்பந்த ஸ்தாபனத்தின் மிக உயர்ந்த அங்கம், அதன் அரசியல் ஆலோசனைக் கமிட்டியாகும்.

நேட்டோவைப் போன்று, வார்சா ஒப்பந்த ஸ்தாபனம், ஒரு குறுகிய, இரகசிய இராணுவக்கூட்டு அல்ல. பிற நாடுகளும் அவற்றின் சமூக, அரசு அமைப்பு எவ்வாறிருந்த போதும், இந்த ஸ்தாபனத்தின் உறுப்பினராகலாம். இந்த ஒப்பந்தம், ஐ.நா. சாசனத்தின் கோட்பாடுகளுக்கு முற்றிலும் உகந்ததாகும்.

# கலாசாரம்

சித்தாந்த ரீதியில் ஐக்கியமாக உள்ள சோவியத் ஒன்றியத்தின் மக்கள் அனைவருக்கும். ஒரே, மாதிரி இலட்சியங்கள் இருந்ததால், அவர்கள் மிகக்குறுகிய காலத்தில் ஓர் உண்மையான கலாசாரப் புரட்சியை நடத்தி, சோஷலிச உள்ளடக்கத்தையும், தேசிய உருவையும் கொண்டதொரு கலாசாரத்தையும் கட்டமுடிந்தது.

1917 மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்னர், ஏற்றத் தாழ்வான வளர்ச்சி, சமூக அநீதி ஆகியவற்றின் விளைவாக ரஷ்ய கலாசார வாழ்வில் கூர்மையான பல வேறுபாடுகள் இருந்தன. மொத்தத்தில் கல்வி அறிவின்மை பெருவாரியான மக்களின் அறிவீனம் ஆகியவற்றின் பின்னணியில் ஒரு சிலரின் ஒப்பற்ற சாதனைகள் சில தோன்றின.

சோவியத் அரசாங்கத்தின் முதல் நடவடிக்கைகளே, மக்ளுக்கும் கலாசாரத்திற்கும் இடையேயிருந்த எல்லாத் தடைகளையும் புரட்சிகரமாக உடைத்தெறிவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. பத்திரிகைக் கட்டுப்பாட்டையும் கல்வி நிர்வாகத்தையும் பூர்ஷ்வா எதேச்சாதிகார எந்திரம் தன்வசம் வைத்திருந்ததை அகற்றி அவற்றை அரசு நிர்வகிக்கத் தொடங்கிற்று. நாடக அரங்குகள், பொருட்காட்சி சாலைகள், ஆவணக் காப்பகங்கள், கலைப் பொக்கிஷங்கள் ஆகிய அனைத்தும் தேசியமயமாக்கப் பட்டன.

சோஷலிசப் புரட்சி பற்றிய சித்தாந்த கலாசார அம்சங்கள் குறித்த மார்க்ஸ், எங்கெல்ஸ்ஆகியோரது கருத்துக்களை விளக்கி புதிய சோஷலிசக் கலாசாரத்தின் வளர்ச்சிக்கான குறிக்கோள்களையும் முறைகளையும் அதன் பிரதான திசைவழிகளையும் லெனின் வரையறுத்தார். கலாசாரத் துறையில் புரட்சி ஏற்படுவது

சோஷலிச, கம்யூனிச் நிர்மாணத்தின் பிரிக்க முடியாப் பகுதி என்றும் அது மிக அவசியமென்றும் லெனின் எடுத்துக்காட்டினர்.

சோஷலிச கலாசாரப் புரட்சியென்பது வெறும் கல்வித்துறை நடவடிக்கைகளின் ஒட்டு மொத்தம் மட்டுமன்று. தொழிலாளி மக்களுக்கு பேரிலக்கியங்களையும், கலைப்படைப்புகளையும், விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளையும் அறிமுகப்படுத்துவது மிகமுக்கிய மானதொரு அம்சம் என்ற போதிலும் அது அத்துடன் நின்று விடுவதல்ல. சோஷலிச கலாசாரப் புரட்சியின் பிரதானக் குறிக் கோள், சோஷலிச, கம்யூனிஸ நெறிமுறைகளின் அடிப்படையில் சமூகத்தை முற்றிலும் திருத்தியமைப்பதாகும். இதற்கு, கடந்த கால தப்பெண்ணங்களைஅகற்றுவதும், புதிய தார்மீகத் தன்மை களையும் சமூக நடத்தைத் தரங்களையும் உருவாக்குவதும், தேசியப் பொருளாதாரத்திலும் அரசு நிர்வாகத்திலும் மக்கள் தீவிரமாகப் பங்கேற்பதை உறுதிப்படுத்துவதும், சீரான வளர்ச்சியும் ஆக்க உள்ளங்கொண்ட மனிதனை உருவாக்குவதும் அவசியமாகும். அதே நேரத்தில் எல்லா சகாப்தங்கள், தேசங்களின் அரிய கலை, கலாசாரப் பொக்கிஷம் அனைத்தையும் தன்வயப்படுத்தி வளர்ச்சியுறச் செய்யாமல் சோஷலிசக் கலாசாரத்தை உருவாக்குவது பற்றி எண்ணிக் கூடப் பார்க்கமுடியாது என்று லெனின் சுட்டிக் காட்டினர்.

சோவியத் யூனியனின் சோஷலிச நிர்மாணம் முன்னேற முன்னேற இந்த லெனினிய லட்சியங்கள் புதிய சமூக வாழ்வில் பிரதிபலித்தன. கலாசாரம் மக்களை நெருங்கி வநதது. ஒரு புதிய அறிவுத் துறையினர் தோன்றத் தொடங்கினர். பல-தேசிய சோஷலிச கலாசாரம் உருவாயிற்று. தோழமை, கூட்டுத் தன்மை, சோஷலிச சிததாந்தம் ஆகியவற்றின் கோட் பாடுகள சோவியத் சமூகத்தில் ஆழ வேரூன்றின. சோவியத் மனிதன் ஒரு புதிய பிம்பமாகத் திகழ்ந்தான்; குறிக்கோளுடன் கூடிய கல்வியில் தேர்ச்சி பெற்ற சோஷலிச, கம்யூனிச நிர்மாணி யாக அவன் காட்சி தந்தான்.

தேசிய கலாசாரங்கள், அவற்றின் தன்மையிலும் பக்குவ அளவிலும் வேறுபட்டிருந்த போதும் கூட, அவை சோவியத் சமூகத்தின் பொதுவான கலாசாரமாக மலர்ந்தது. அந்த சமூகத் தில் அவை தாமும் ஓர் அங்கமாக, சர்வதேசிய உணர்வு பிணைப் புடன் கூடியதாகத் திகழ்நதது; அதே சமயத்தில் ஒவ்வொன்றின் தேசிய தனித்தன்மைகளையும் மரபுகளையும் அவை பாதுகாக்கவும் செய்தன. சோவியத் கலாசாரத்தின் இந்த ஐக்கியமானது அது, புரட்சிகர மனிதாபிமான லட்சியங்கள், பாட்டாளி வர்க்க சர்வ தேசியக் கோட்பாடுகள், நாடுகளிடையே சமாதானம் நட்புறவு சகோதரத்வம் ஆகிய உன்னதக் கருத்துக்கள் ஆகியவற்றுக்கு

ஆர்வம் நிறைந்த ஆதரவு தருவதிலும் குறுகிய தேசிய வாதத்தையும் சகலவகை குறுகிய நோக்கையும் கண்டனம் செய்வதிலும் பிரகடனமாயிற்று.

தமது கலையையும், இலக்கியத்தையும் வளர்ச்சியுறச் செய்வதில் சோவியத் மக்கள் சோஷலிச எதார்த்தவாதக் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றனர். வரலாற்று ரீதியான சந்தர்ப்பங்களில் அவற்றின் புரட்சிகரமான வளர்ச்சியுடன் சேர்த்து நிகழ்ச்சிகள் உண்மையாகக் காட்டப்பட வேண்டும் என்பதே சோஷலிச எதார்த்த வாதம். புதிய லட்சியங்களின் நடைமுறை சாத்தியப்பாட்டினை நிரூபிப்பதற்கும், சமகால வாழ்வில் உள்ள மோதல்களின் கூர்மையை எடுத்துரைக்கவும், லட்சோபலட்சம் மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளின் பிரம்மாண்டமான வாய்ப்பை எடுத்துக் காட்டவும் அது தற்போதைய சமூக வரலாற்றுப் போக்குகளின் பிரதான அம்சத்தை ஆராய்கிறது. சோஷலிச எதார்த்த வாதம் நிகழ்ச்சிகள், போக்குகள் ஆகியவை எவ்வாறிருக்கின்றன என்பதையும் அவை, எவ்வாறு இருக்கவேண்டுமென்பதையும் எதார்த்த லட்சிய சேர்க்கையின் மூலமும், ஸ்தூல நிகழ்ச்சிகள் அழகியல் உணர்வுகள் ஆகியவற்றின் சேர்க்கை மூலமும் எடுத்துரைக்கப்படுகிறது.

**இலக்கியம்:** பல தலைமுறை எழுத்தாளர்களின் படைப்பாற்றலின் விளைவே பல-தேசிய சோவியத் இலக்கியமாகும். சோஷலிச எதார்த்தவாத முதல் படைப்பாக ''தாய்'' என்னும் நவீனம் கருதப்படுகிறது. அதன் ஆசிரியரான மாக்ஸிம் கார்க்கி இலக்கியத்தில் புரட்சியை தோற்றுவித்தவராவார். புரட்சிக்கு முன்னர் தங்களது இலக்கியப் பணியைத் தொடங்கிய வி. வெரஸயேவ், எஸ். செர்ஜியேவ்—சென்ஸ்கி, வி. ஷிஷ்கோவ், எம். பெரிஷ்வின், என். அஸியேவ், எ. கிரின் ஆகிய இதர பல எழுத்தார்கள் 1920, 1930ஆம் ஆண்டுகளில் சோஷலிசக் கலாசார நிர்மாணிகளின் அணிகளில் சேர்ந்தனர். அதே சமயத்தில் புதிய உருவங்களும் இலக்கியவானில் உதயமாயின. பெரும்பாலும் அவர்கள் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாப்பதற்காக நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தில் தீவிரப் பங்கெடுத்தவர்களாவர். அவர்களில் எல். லியனேவ், எ. ஃபதயேவ், டி. ஃபுர்மனேவ், எம். ஷோலக்கோவ், வி. விஷ்னெவ்ஸ்கி, பி. லாவ்ரினேவ், என். திக்கனேவ் ஆகியோரைக் குறிப்பிடலாம். இத்தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் தாம் ஒரு புதிய கதாநாயகனை —புரட்சியின் லட்சியத்திற்காக செயலூக்கமுடன் போராடும் ஒரு கதாநாயகனை—உருவாக்கியவர்கள்.

புரட்சிக்குப் பின்னர் உள்ள முதற் சில ஆண்டுகளில் கவிதை தீவிர வளர்ச்சியுற்றது. அக்காலத்தைச் சேர்ந்த ஒப்பற்ற சில கவிஞர்களில் வி.மயாக்கோவ்ஸ்கி, எ.ப்ளோக், வி.பிரியுஸோவ், எஸ்.எஸினின் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். மயாக்கோவ் ஸ்கியின் அனல் தெறிக்கும் உணர்ச்சிமிக்க கவிதை வரிகள் சோவியத் இலக்கியம் மேலும் வளர்ச்சியடைவதில் குறிப்பிடத் தக்க செல்வாக்கு வகித்தது.

1930-ம் ஆண்டுகளில் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள் தோன்றினர்; அவர்களது பெயர்கள் நாடெங் கிலும் தெரிய வரலாயிற்று .அவர்கள், உக்ரேனிய எழுத்தாளர் களான பி.திசினு, எம்,ரில்ஸ்க்கி, வி.சொஸுயுரா; பைலோ ரஷ்யர்களான யா.குபாலா, யா.கோலஸ்; ஜியார்ஜியர்களான டி. தபிட்ஸே, பி.யாஷ்விலி, ஆர்மீனிய எழுத்தாளர்களான எஸ். ஸோரியன், ஏ. இஸக்கியான்; அஸர்பைஜானியர்களான எஸ்.உர்குன், ஆ.ரிஸா; தாஜிக்கிஸ்தானைச் சேர்ந்த எஸ்.ஐனி; கிர்கீஸியரான டி.ஸிதிக்பெகோப்; துருக்மீனிய பி.கெர்பபயேவ்; கஸாக்ஸ்தானின் எம்.அவுஸோவ் ஆகியோராவர். சோவியத் மக்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளும் மொழியாக ரஷ்ய மொழி ஆயிற்று

1930-40ம் ஆண்டுகளில் எழுதப் பெற்ற மிகச்சிறந்த நூல் களில், மிக்கைய்ல் ஷோலக்கோவின் ''டான் நதி அமைதியாகப் பாய்கிறது,'' அலெக்ஸெி டால்ஸ்டாயின் '''நரகத்தின் வழியே பாதை,''ஆகிய நவீனங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். மார்க்சிய நிலையிலிருந்து எழுதப்பட்ட அந்த நவீனங்கள், பழைய, புதிய உல கிலிடையே நடைபெறும் ஜீவ மரணப் போராட்டத்தை அற்புத மாக, உண்மையாகச் சித்தரித்தன. அந்த ஆண்டுகளில் எழுதப் பட்ட பலதரமான நாடகங்கள், உதாரணமாக, வ்சிவோலாத் விஷ்னெவ்ஸ்க்கியின் ''நம்பிக்கை மிக்க துன்பியல்'' போன்றவை இன்னமும் தொடர்ந்து நாடக, சினிமா ரசிகர்களை ஈர்த்து வருகின்றன.

1941-45 மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போது, சோவி யத் எழுத்தாளர்கள், பிற சோவியத் மக்களைப் போன்றே, சோஷ லிசத் தாயகத்தின் பாதுகாப்பிற்காகப் போராடினர். அவர்கள் பதுங்கு குழிகளிலும், இராணுவச் செய்திப் பத்திரிக்கை ஆசிரியர் குழுக்களிலும, யுததக் கப்பல்களிலும்-யுத்தத்தின் ஒவ்வொருஅரங் கிலும பணியாற்றினர். 400க்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் யுத்த அரங்கில் தங்கள் உயிர்களை இழந்தனர். கடுமையான அந்த நாட்களின் போது எழுதப்பட்ட இலக்கிய நூல்கள், தீவிர தேசபக்திக்கும், மிக உயரிய சமூகக் கடமையுணர்வுக்கும் எடுத்து

காட்டாக விளங்கின. எம்.ஷோலக்கோவ், அ.டால்ஸ்டாய், வி.விஷ்னெவ்ஸ்க்கி ஆகியோர் எழுதிய கதைகளிலும், கட்டுரை களிலும் இத் தன்மைகள் தீர்க்கமாகப் பிரதிபலித்தன. யுத்த காலத்தில் எழுதப்பட்ட மிகச் சிறந்த கவிதைப் படைப்புக்களில், சோவியத் மக்களின் ,இறவாப் புகழ் படைத்த யுத்த சாகசத்தைக் கொண்டாடும் ஏ.துவார்தோவ்ஸ்க்கியின் 'வாஸிலி தியோர்கின்', எம்.இஸாகோவ்ஸ்க்கி, கே.சிமனேவ், ஏ.சுர்கோவ், ஐ.செல்வின் ஸ்க்கி ஆகியோரது கவிதைகளும் குறிப்பிடத்தக்கவையாகும்.

அண்மைக் காலத்தில் எழுதப்பெற்று லெனின் பரிசுகளையும் பெற்ற மிகச் சிறந்த நூல்களில் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடா லிருக்கமுடியாது. எஸ்.ஸ்மிர்னேவின் ''பிரெஸ்ட் கோட்டை'', (1965); எம்..ஸ்வெத்லோவின் ''அண்மை ஆண்டுகளின் கவிதை கள்''(1967-ல் ஆசிரியரின் மறைவுக்குப் பின்னர் பரிசு வழங்கப் பட்டது); என். திக்கனேவின் ''ஆறு வரிசைகள்'' (1970); எஸ். மிக்கால்கோவின் 'குழந்தைகளுக்கான செய்யுள்கள்' (1970); ஜி.குல்யாமின் கவிதைகள் (1970; ஆசிரியரின் மறைவுக்குப் பின்னர் பரிசு வழங்கப்பட்டது) ; எம்.ஷாகின்யானின் லெனினைப் பற்றிய நூல்களான ''ஒரு மகனின் பிறப்பு'' (உல்யனேவ் குடும்பம்) 'முதலாவது அகில ரஷ்யா', வரலாற்றில் ஒரு பயணச் சீட்டு', 'லெனினிடமிருந்து நான்கு பாடங்கள்' (1972), ஐ. மெலிஷ்-ன் 'வீர நடை போடும் மனிதர்கள்,' 'ஒரு பேரிடியின் மூச்சு' (1972), ஏ.பார்த்தோவின் குழந்தைகளுக்கான கவிதைத் தொகுப்பு நூலான ''பனிக்கட்டில் மலர்கள்''(1972)ஆகியவை.

சோவியத் ஒன்றியத்தின் அரசுப் பரிசுகள் கீழ்க்கண்ட நூல் களுக்கு வழங்கப்பட்டுள்ளன: எம்.கெம்பேயின் கவிதைத் தொகுப் பான ''என்றும் வாழும் தருணங்கள்'' (1967), ஒய்.ஸ்மெல்ய கோவின் கவிதைகளான ரஷ்யாவில் ஒரு நாள்(1967) எல். ஆன்தி ரோனிக்கோவின் 'லெர்மந்தோவ் ஆராய்ச்சிகளும்' கண்டுபிடிப்புக் களும் (1967), சி.அய்த்மதோவின் ''போய் வருக குல்ஸாரி!'' (1968) எஸ்.ஸாலிகினின் ''உப்புப் பள்ளத்தாக்கு'' (1968) ஏ. மாலிஷ்கோவின் கவிதைத் தொகுப்பான ''பாதை'' (1969) எஸ். சார்த்தகோவின் மூன்று தொகுப்பான ''பார்பினேவின் கதைகள்'' (1970); என்.துபோவின் ''தனிமையின் துயரம்'' (1970); ''வி. கோஷெவ்னிக் கோவின்'' ''விசேஷச யூனிட்'' ''பியதோர் ரியாபின்கின்'' (1971), ஏ. துவார்தோவ்ஸ்கியின் கவிதைநூலான ''இக்கால ஆண்டுகளின் பாடல் அழகு'' (1971) ஆகியவை.

**நாடக அரங்கு:** சோவியத் நாடக டைரக்ஷனின் அடித்தளங் களை அமைத்த கே.ஸ்தானிஸ்லாவ்ஸ்க்கி, வி. நெமிரோவிச்-தான்

சென்கோ ஆகியோரது தத்துவார்த்த ஆய்வு, நடைமுறைச் செயல்களாலும்; இ.வாக்தன்கோவ், கே.மார்த்ஜான்னிஷ்விலி, வி.மேயர்க்கோல்ட், ஏ.தாய்ரோவ் ஆகிய பழைய தலைமுறையைச் சேர்ந்த நாடக இயக்குநர்களின் ஒப்பற்ற நடவடிக்கைகளாலும் ஏ.போப்போவ், யு.ஸவாத்ஸ்கி, என்.ஒக்லப்கோவ், என்.அகிமோவ், ஆர்.சிமனோவ் போன்ற, சோவியத் நாடகக் கலைத்துறையில் புதிய கோட்பாடுகளைப் புகுத்திய, திறமைமிக்க இளம் தயாரிப்பாளர் களது பணியினாலும், சோவியத் நாடகக்கலையின் வளர்ச்சி பெரிதும் ஊக்குவிக்கப்பட்டது.

அக்டோபர் புரட்சிக்குப் பின்னர், 38 தேசிய இன மக்கள் தங்களது சொந்த தேசிய நாடக அரங்குகளை நிறுவினர். இன்று சோவியத் நாடக அரங்குகளில் 49 மொழிகளில் நாடகங்கள் நடத் தப்படுகின்றன. ஒவ்வொரு தேசிய அரங்கமும், அந்தந்த தேசிய இன மக்களின் தனித்துவப் பண்புகளையும், வரலாற்று அனுபவத் தையும, கலை மரபுகளையும் பிரதிபலிக்கின்றன.

சோவியத் யூனியனில் 553 தொழில்முறை அரங்கங்கள் உள்ளன. இவற்றுள் 40 ஆபரா, பாலே அரங்குகள், 364 நாடக, இசை நாட்டிய அரங்குகள், 149 குழந்தைகள் நாடக அரங்குகள். ஆண்டு தோறும் 11கோடி 40 லட்சம் மக்கள் நாடக அரங்கு களுக்கு விஜயம் செய்கின்றனர்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள நிலைமைக்கு மாறாக, அநேகமாக எல்லா சோவியத் நாடக அரங்கங்களும் நிலையாக ஒரே இடத்தில் இருப்பவை. அவற்றிற்குச் சொந்தமாகக் கட்டடங்கள் உள்ளன, அவற்றைச் சேர்ந்த நிரந்தரமான குழுக் களும், 8லிருந்து 30 வரை அவற்றிற்கான வழக்கமான நாடகங் களும்-அவை பண்டைய இலக்கியத்திலிருந்து, தற்கால இலக்கியம் வரை பலதரப்பட்டவை—உள்ளன; ஆண்டு தோறும் பல புதிய நாடகங்களும் சேர்க்கப்படுகின்றன. நாட்டின் தொலைதூர மாவட்டங்களுக்குப் பயணம் செல்லும் நாடக குழுக்களும் நிரந் தரமாக உள்ளன. அவையும் பலதரப்பட்ட நாடகங்களை நடத்து கின்றன. ரஷ்ய மொழி அல்லாத பிற மொழிகளில் நடத்தப்படு கின்ற எல்லா நாடக அரங்குகள், ஆபரா, பாலே அரங்குகள். குழந்தைகள் நாடக அரங்குகள் ஆகியவற்றிற்கும், சிறிய நகரங் களிலும் கிராமப்புறங்களிலும் உள்ள ரஷ்யமொழி நாடக அரங்கு களுக்கும் அவ்வவற்றின் தேவைகளுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்ற வாறு அரசு மான்யம் வழங்கப்படுகிறது[1].

சோவியத் நாடக அரங்குகளில் ரஷ்ய,அயல் நாட்டுப் பழைய இலக்கியங்களும் (ஷேக்ஸ்பியர் நாடகங்கள் மிகவும் பிரபல

மானவை) கிரேக்கத் துன்பியல் பேரிலக்கியங்களும், நவீன அயல் நாட்டு நாடகாசிரியர்களது படைப்புக்களும் (பி. பிரெச்ட், இ.ஹெமிங்வே, ஏ.மில்லர், ஜே.அனௌயில்ஹ், எஃப்.துரென்மாட் போன்ரோரது) நடிக்கப்படுகின்றன.

நெடுங்கால மரபுகளைக் கொண்ட பழம் பெரும் அரங்குகளுடன் (மாலி அரங்கு, மாஸ்கோவிலுள்ள கலை அரங்கு, லெனின் கிராடிலுள்ள புஷ்கின் அரங்கு போன்றவை) புதிய பலஅரங்குகளையும் எவரும் காணலாம்; இளம் நடிகர், நடிகையர், நாடக இயக்குநர்கள் ஆகியோரது முயற்சிகளினால் எழுந்தவை அவை. புதிய அரங்குகளும், குழுக்களும் தங்களது சொந்தப் புதிய கண்டு பிடிப்புக்களை அரங்கேற்றுவதன் மூலம், நாடகக் கலையை வளப் படுத்தி, அது என்றும் இளமையோடிருக்க உதவுகிறது.

சோவியத் ஒன்றியம் உருவான 50 வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நாடு தழுவிய நாடகக் கலைவிழா செப்டம்பர் 71 லிருந்து தொடங்கி, 1973 மே வரை நடந்து முடிந்தது.

**குழந்தைகள் நாடக அரங்குகள்:** 50 ஆண்டுகளுக்கு முன்னர், முதன் முதலாக ஒரு நிரந்தர, நிலையான குழந்தைகள் நாடக அரங்கை நிறுவிய முதல் நாடு சோவியத் யூனியனே. இன்றோ, அங்கு 45 நாடக அரங்குகளும், 100க்கு மேற்பட்ட பொம்மலாட்ட அரங்குகளும் உள்ளன. இவற்றில் நாட்டின் 27க்கும் மேற்பட்ட மொழிகளில் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மிகச் சிறந்த ஆசிரியர்களால் குழந்தைகளுக்கென்றே எழுதப்பட்ட நாடகங்கள் அவற்றில் நடத்தப்படுவதோடு, அங்கு வழக்கமான சோவியத், அயல் நாட்டு நாடகங்களும் நடத்தப்படுகின்றன. இளம் ரசிகர்களிடையே பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் மிகவும் பிரபலமடைந்துள்ளன.

**ஆபராவும், ஆபரட்டாவும்:** இந்த அரங்கங்களின் நடைபெறும் நிகழ்ச்சிகள், சோவியத், அயல் நாட்டு நவீன இசையமைப்பாளர்களது படைபபுககளும், ரஷ்ய அயல் நாட்டுப் பழம் பெரும் இசைப் படைப்புக்களும் ஆகும்.

புரோகஃபியேவின் ''போரும், அமைதியும்'', ஷஷ்டகோவிச்சின் ''காத்தரினா இஸ்மைலோவா'', கிரென்னிக்கோவின் ''புயலில்'', காபலெவ்ஸ்க்கியின் ''கோலஸ் புருக்னன்'' (இதன் புதிய படைப்பிற்கு 1972ல் லெனின் பரிசு வழங்கப்பட்டது) ஆகியவை மிகச் சிறந்த சோவியத் ஆப்பராக்களுள் சேர்ந்தவையாகும்.

சிறிய இசைக் கதைகளை நடத்தும் ''ஆபரட்டா'' அரங்குகளில், பெரும்பாலும், கிராமீயப் பாடல்கள், நடன இசை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு புனையப்பட்ட சோவியத் இசை கலைஞர்களது படைப்புக்களே நிகழ்ச்சிகளாக உள்ளன.

**பாலே நடனம்:** ரஷ்ய கூட்டிசை மரபுகள், சோவியத் யூனியனின் வாழும் மக்களது நடனங்கள், இசை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததே சோவியத் 'பாலே' நடனம் ஆகும். பாலே நிகழ்ச்சிகளின் கருப்பொருள் முக்கியத்துவமும், அவற்றின் சித்தாந்தக் கருத்தும் குறிப்பிடத்தக்கவையாகும்; அவற்றின் ஆழ்ந்த மனிதத்துவமும், பாத்திரப் படைப்புகளின் நேர்த்தியும், கதையமைப்பின் அழகும் புகழ் பெற்று விளங்குகின்றன.

புதியன புனையும் உணர்வும், கலைப் போக்குகளின் வகைகளும், அவற்றின் தீரமும் சோவியத் பாலேயின் விசேஷ அம்சங்களாகும்.

பாலே நடனக்காரர்கள், வெறுமே நடனம் மட்டும் ஆடுவதோடு அமையாமல், நடனக்கலை நிகழ்ச்சியின் மூலம், ஒரு பாத்திரத்தின் வளர்ச்சியை உளவியல் ரீதியாகச் சித்திரித்தும் காட்ட வேண்டும் என்ற புதிய போக்கு சாய்கோவ்ஸ்க்கியைத் தந்தையாகக் கொண்ட எதார்த்த பூர்வ-பாலே நாடகத் தோற்றத்துடன், உதயமாயிற்று. இந்தப் போக்கு தான் சோவியத் பாலேயின் விசேஷப் பண்புகளை நிர்ணயிப்பதாகும்; இதன்படி பல திறமைமிக்க நடனத் தாரகைகளை—உலனேவா, மாயா பிளிஸெத்ஸ்காயா, லிப்பா, பெஸ்மர்த்னேவா, போன்ற பலரை- சோவியத் பாலே உருவாக்கியுள்ளது.

சோவியத் பாலே நிகழ்ச்சிகளில் சாய்க்கோவ்ஸ்க்கியின் ''அன்னத் தடாகம்'', ''துயிலும் அழகி'', ''நட்கிராக்கர்'', ஆதனின் ''கிஸெல்லே'' போன்ற இன்னபிற கூட்டிசைப் படைப்புக்கள் மிக உன்னத இடம் வகிப்பவையாகும்.

சோவியத் அமைப்பாளர்களும், கூட்டு நடன இசை அமைப்பாளர்களும், பல்வேறு மூலங்களிலிருந்து தங்களது கருப்பொருளைப் பெறுகின்றனர். இலக்கிய நூல்களை (புரோக்கோஃபியேவின் ''ரோமியோவும் ஜூலியட்டும்'') அடிப்படையாகக் கொண்ட பாலேக்களும், புரட்சிகரமான, வீராவேச பாலேக்களும்(கச்சத்துர்யானின் ''ஸ்பார்டக்கஸ்'')நமது சமகாலத்தவர்களைச் சித்தரிக்கும் பாலேக்களும் (விளாசோவின் ''ஏஸஸ்''), தேவதைக் கதை பாலேக்களும்(காரா காரயேவின் ''ஏழு அழகிகள்'') போன்ற பல வகை உள்ளன

இசை: சோவியத் 'ஸிம்ஃபனிக்' இசையின் தந்தையாகக் கருதப்படும் நிக்கோலாய் மியாஸ்கோவ்ஸ்க்கி, ரிம்ஸ்கி-கோர் சகோவின் மாணுக்கராவார்; இவர் 27 ''ஸிம்ஃபனிகளை'' இயற்றி யுள்ளார்.

புரட்சிக்குப் பின்னர் பழைய தலைமுறையைச் சேர்ந்த இசை அமைப்பாளர்கள் பலர், குறிப்பிடத்தக்க பல இசைப்படைப்புக் களை உருவாக்கினர். கிளையர் தனது இசைப்பாடலான ''ஸபொ ரோஷெயே கோஸாக்குகள்''- என்பதை 1921-லும், கிளாஸு னேவ் தனது ஆருவது ''ஸ்டிரிங் குவார்டட்''டை அதே ஆண்டி லும் கெதைக் தனது மூன்ருவது ஸிம்ஃபனியை 1922-ம் ஆண்டி லும் இயற்றினர்.

சோவியத் இசையமைப்பாளர்கள் தமது ''ஸிம்ஃபனி''இசை அமைப்பில், கடந்த கால மனிதத்துவ மரபுகளை வளர்க்க முற்படு வதுடன், அதே நேரத்தில், தத்துவார்த்த வீசசை விரிவும், ஆழமும் உடையதாக்கவும், எதார்த்தத்தைச் சரியானபடி விளக்கவும் முயலுகின்றனர். இவை தான் புரோகோஃபியேவ், கச்சத்துர்யன், ஷஷ்டகோவிச் ஆகியோரது படைப்புக்களின் சிறப்பு அம்சங் களாகும்.

புரோகோஃபியவ்வினது ஏழு ''ஸிம்ஃபனி' களில் ஒவ்வொன் றும்- இளமை ததும்பும் ''கிளாசிக்கல்'' எனபதிலிருந்து, அற்புத மான ஐந்தாவது, ஆருவது, மற்றும் மனதை நெகிழவைக்கும் இசையுடன் கூடிய ஏழாவது வரை—ஆழ்ந்த மனிதப்பண்புகளை யும, உலகைப்பற்றிய முழுமையான அற்புத இன்ப உணர்வையும் கொண்டு விளங்குவன ஆகும்.

ஷஷ்டகோவிச்சினது இசைப் படைப்புக்கள் வளமிகுந்த வகைப் பட்டவையாகும். மனித ஆளுமையின் வளர்ச்சியைப் பற்றிய அவரது ஐந்தாவது 'சிமஃபனி', ஆழமான உளவியல் உள்நோக் கிற்கு எடுத்துக் காட்டாகும். புரட்சியினது சாதனைகளின் மாண் பனைத்தும், அவரது நிகழ்ச்சித் தொகுப்புடன் கூடிய பதினேராவது (''1905-ம் ஆண்டு'') பன்னிரண்டாவது (''1917-ம் ஆண்டு'') சிம்ஃபனிக் கற்பனையில் கொணரப்பட்டுள்ளது. லெனின்கிராடைப் பாதுகாத்து நின்றவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள துன்பியல் சார்ந்த வீரத்தைப் பிரதிபலிக்கும் அவரது ஏழாவது 'சிம்ஃபனி' உலகெங்கும் ஓர் ஆழ்ந்த விளைவினைத் தோற்று வித்தது. மாபெரும் தேச பக்தப் போரின் கடுமையான நாட்களில், இநத இசை பல மேடைகளில் ஒலித்தது; ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது; முற்றுகை யிடப்பட்டிருந்த அந்த நகரத்திலேயே அது ஒலித்த துடன் மக்களின் உள்ள உறுதியை உயர்த்தி, வெற்றியின் பால் அவர்களது நம்பிக்கையை உறுதிப்படுத்திற்று.

''ஆரடோரியா'', ''கான்டடா'' என்ற வகை இசைப் பாடல்கள் விசேஷ பிரபலத்துவம் அடைந்துள்ளன. இந்த இசை வடிவத்தின் மிகச் சிறந்த படைப்புக்கள். புரோகோஃபியேவின் ''சமாதானத்தைப் பாதுகாத்தல்'' (1950) யு,ஷப்போரினின் ''இன்னும் எவ்வளவு நாட்கள் பட்டம் பறக்கும்'', (1963) ஸ்விரிதோவின் ''செர்ஜி எஸினினது நினைவாக'', (1955)''பரிதாபத்திற்குரிய ஆரடோரியா'' (1959) என்ற பாடல்கள், வி.ருபினின் '''காற்றின் கீதங்கள்'' (1961) ஆகியவையாகும்.

இன்னும் பல்வேறு இசைப்படைப்புக்களில், ஷஷ்டகோவிச்சின் 'கிவின்டட்', 11குவார்டட், செல்லோவுக்கான சோனட்டா ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும்.

ஐ.துனயேவ்ஸ்க்கி, எம்.பிளான்டர், ஏ.அலெக்ஸாண்டிரோவ், போக்ராஸ் சகோதரர்கள், பி.மக்ரொசோவ், ஏ.நோவிகோவ், யு. மில்யுதின், டி. கிரென்னிகோவ், வி.சொலோவயேவ்-செதோய் எ. பாக்முதோவா, என். போகோஸ்லோவ்ஸ்க்கி, ஏ. ஆஸ்திரோவ்ஸ்க்கி, இ. கோல்மனேவ்ஸ்கி, ஏ. பெத்ரோவ் போன்ற இதர சோவியத் இசை அமைப்பாளர்களது பாடல்கள், பரந்த அளவு பிரபலத்துவம் பெற்று விளங்குகின்றன.

இசை நிகழ்ச்சிகள் மிகவும் பிரபலமானவை; அவை பரந்த அளவில் நடத்தப்படுகின்றன. இசை விருந்தளிப்போர், 42 சிம்ஃபனி வாத்திய கோஷ்டிகளையும், 55 நடன, இசைக் குழுக்களையும், 34 கூட்டப் பாடல் கோஷ்டிகளையும் உள்ளடக்கிய, நாட்டின் 129 பிலார்மோனிக கழகங்களையும், 202 இசைக் கலைஞர் குழுக்களையும் சேர்ந்தவர்களாவர். ஆண்டுதோறும் அவர்கள் மொத்தத்தில் 4,00,000 இசை நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்; அவற்றை ஏறக்குறைய 13 கோடிப் பேர் ரசித்து மகிழ்கின்றனர்.

சினிமா: போட்டோ தொழில்துறையையும் சினிமாத் தொழிலையும் தேசிய மயமாக்கும் சட்டத்தில் லெனின் 1919ம் ஆண்டு கையெழுத்திட்டார். சினிமாவை, மக்களது அரசியல், கலாசாரக்கல்விக்கான சக்திமிகு சாதனமாகவும், அதனை எல்லா மக்களும் அடையும் வகையில் கொணர்வதுமே அன்று சோவியத் அரசின் முன்னிருந்த பணியாகும். சோவியத் சினிமாத் துறை, செய்திப்படங்கள் எடுப்பதுடன் துவங்கிற்று; எதார்த்த உண்மைகளை எடுத்துக்காட்ட அது மிகச்சிறந்ததொரு வழியாக விருந்தது.

20வது ஆண்டுகளின் மத்திய காலத்தில் சோவியத் சினிமா உலக சினிமாத்துறையில் ஒரு தலையாய இடத்தைப் பெற்று விளங்கிற்று. இன்றளவும் அயல்நாட்டுத் திரைப்பட விமர்சகர்கள் 1925-ல் தயாரிக்கப்பட்ட ஐஸன்ஸ்டீனின் ''போர்க்கப்பல் போதம்கின்'' ''எல்லாக் காலத்திலும் எந்த நாட்டிலும் தயாரிக்கப்

பட்ட படங்களில் மிகச் சிறந்தது'' என்று கருதுகின்றனர். இந்த படமும் சோவியத் சினிமாத் துறையின் ஆரம்ப காலத்தில் தயாரிக்கப்பட்ட பிறபடங்களும் பெரும் வெற்றிகளை அடைந்ததின் ரகசியம் அவை எதார்த்தத்தையும் புரட்சிகர சோகத்தையும் ஒன்றிணைத்ததிலும் 20வது நூற்றாண்டின் மிகப் பெரும் கருப் பொருளான புரட்சியை ஆழ்ந்த தெளிவான கலையம்சத்துடன் விளக்கியதிலும் தான் அடங்கியுள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்தே சோவியத் சினிமா ஒரு பலதேசியக் கலையாக வளர்ச்சியுற்று வந்தது. பல்வேறு குடியரசுகளிலும் திறமை மிக்க இயக்குநர்கள் தோன்றினர். உதாரணமாக உக்ரே னில் தவ்ஷென்கோ, ஜார்ஜியாவில் ஷென்கலாயா, சியெளரெலி, ஆர்மீனியாவில் பெக்-நாஸரோவ் ஆகியோராவர். கவித்துவம் நிறைந்த திரைப்படங்களின் ''(ஸ்வெனிகோரா'' 1927—''ஆர்க் ஸினல்'' 1929, ''பூமி'' 1930)சாத்தியக் கூறுகளை எடுத்துக் காட்டிய தவ்ஷென்கோ நளினமான தேசிய நகைச்சுவை உணர் வுடன் கறாரான எதார்த்தந்தையும் புரட்சியின் புகழையும் இணைத்துக் காட்டினார்.

1930ம் ஆண்டுகளில் படைக்கப்பட்ட மிகச் சிறந்த திரைப் படங்களில் ஒன்று வாஸிலியேவ் சகோதரர்களின் ''சாப்பயேவ்'' என்பதாகும்; இது உள்நாட்டு யுத்தத்தில் மக்களின் தலைவனாக வும் ஸ்தாபன அமைப்பாளனாகவும் விளங்கிய கட்சியின் பங்கை நம்பக்கூடிய வகையில் விளக்கியதுடன் ஒரு புரட்சிகர கதாநாய கனின் மெய்யான வாழ்க்கையையொட்டிய பிம்பத்தையும் எடுத்து காட்டிற்று. வரலாற்றுக் கருப்பொருளை அதற்குரிய பல்வகை வீச் சுடன் உண்மையாக எடுத்துரைத்த வரலாற்று ரீதியான புரட்சி கரத் திரைப்படங்களில் குறிப்பிடத்தக்கவை கீழ்க்காணும் படங் களாகும்: ஜி. ஹோஸின்த்சேவ், எல். ராபெர்க் ஆகியோர் தயாரித்த ''மாக்ஸிம்'' என்ற முக்கதை; ஈ.த்ஸிகன் தயாரித்த ''நாங்கள் க்ரோன்ஸ்தான்த்திலிருந்து வருகிறோம்''; எ.தவ்ஷென் கோவின் ''ஷ்கோர்ஸ்'';ஐ.கிக்ஃபிட்ஸ், எ.ஸார்க்கி ஆகியோரின் ''பால்டிக் பிரதிநிதி''; எஸ். யுத்கேவிச்சின் ''துப்பாக்கியுடன் மனிதன்'' ஆகியவை.

லெனினைப் பற்றிய மிக்கையில் ரோம் என்பாரது திரைப்படங் களான '' அக்டோபரில் லெனின்'' (1937), ''1918ல் லெனின்'' (1939) ஆகியவை விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

சோஷலிசத்தின் கீழ் புதிய மனிதன் உருவாக்கப்படுவதை கருப் பொருளாகக் கொண்ட படங்கள் பல வெளிவந்துள்ளன. அவையாவன: எஸ். காரஸிமோவ் தயாரித்த ''ஏழு வீரர்கள்''

(1936), ''காம்ஸோமால்ஸ்க்'' (1938); எ. ஸார்க்கி, ஐ. கிஃபிட்ஸ் தயாரித்த ''அரசாங்கத்தின் உறுப்பினர்''(1940); எல்.யுக்கோஃப் தயாரித்த ''மகத்தான வாழ்க்கை'' (1940) ஆகியவை குறிப்பிடத்தக்க நகைச்சுவை படங்களாவன: ஜி.அலெக்ஸாந்த்ரோவின்''ஜாலியான நபர்கள்'' (1934), ''சர்க்கஸ்'' (1936), ''வோல்கா—வோல்கா'' (1938); ஐ.பைரியேவின் ''டிராக்டர் ஓட்டிகள்'' (1939), ''ஒரு பணக்கார மணப்பெண்'' (1938), ''பன்றி மேய்ப்பவளும் ஆடு மேய்ப்பவனும்'' (1941) ஆகியவை.

மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போது, சோவியத் காமிராக்காரர்கள், யுத்தத்தின் நடுவே, வரலாற்றின் வீர காவியங்களை மிக நெருங்கி நின்று பதிவு செய்யும் முயற்சியில் எப்பொழுதும் ஈடுபட்டு வந்தனர். அவர்களில் பலர் இறந்தனர். யுத்த முன்னணியிலிருந்து கிடைத்த அந்தக் காட்சிகளைப் பயன்படுத்தி, திரைப்பட இயக்குநர்களான எல்.வார்லமோவ்,ஐ.கொபாலின் ஆகியோர் ''மாஸ்கோவிற்கருகே ஜெர்மன் துருப்புகளின் தோல்வி'' என்ற டாக்குமெண்டரிப் படத்தை (1942) தயாரித்தனர். திரைப்பட இயக்குநரும், தனது படங்களுக்குத் தானே காமிராவைக் கையாள்பவருமான ஆர்.கார்மென் ''போராட்டத்தில் லெனின் கிராடு'' என்ற படத்தையும், நாஜி யுத்த வெறியர்கள் புரிந்த பிரம்மாண்டமான குற்றங்களை அம்பலப்படுத்திய நியூரம்பர்க் விசாரணையைப் பற்றிய ''மக்களின் தீர்ப்பு'' (1946) என்ற டாக்குமெண்டரியையும் தயாரித்தார். ஐ.பைரியேவின் ''கட்சி பிராந்தியக் கமிட்டியின் செயலாளர்'' (1942), எஃப். எர்ம்லரின்'' ''அவள் தாயகத்தைக் காக்கிறாள்'', எம்.தோன்ஸ்காயின் ''வானவில்'' (1944) ஆகிய திரைப்படங்கள், நாஜி ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து சோவியத் மக்கள் நடத்திய வீரப் போராட்டத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டவையாகும்.

யுத்த பிற்கால ஆண்டுகளில், பல திறமையான சினிமாத் தொழில் கலைஞர்கள் தோன்றினர்; திரைப்படத் தயாரிப்பும் அதிகமாயிற்று. சோவியத் திரைக்கலைத் துறையில் கீழ் வருபவர்களுக்கு லெனின் பரிசு வழங்கப்பட்டது திரைப்பட இயக்குநர் ஜி. கோஸின்த்சேவ், ''ஹாம்லெட்''டாக நடித்த(1965) நடிகர் இ.ஸ்மோக்துனேவ்ஸ்க்கி; ''வீரனின் தந்தை''யில் நடித்தமைக்கா நடிகர் எஸ். ஸாக்கரியாத்ஸே; (1966), ''தலைவர்'' (1966) பட நடிகர் எம்.உல்யானேவ், இயக்குநரும், வசனகர்த்தாவுமான ஒய். ஒஸெரோவ்; வசனகர்த்தாக்களான ஒய்.பாந்தரேவ்,ஓ.குர்கனேவ்; காமிரா கலைஞர்களான ஐ. ஸ்லாப்னெவிச்; மாபெரும் திரைக் காவியமான 'லிபரேஷன்'' படத்திற்காகக் கலைஞர் ஏ. மியாக்கோவ் ஆகியோர். சோவியத் யூனியனின் அரசுப் பரிசு கீழ்க்கண்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது: திரைப்பட இயக்குநர்

எஸ்.யுத்கேவிச், வசனகர்த்தாவான இ.காப்ரிலோவிச் ('போலந்தில் லெனின்'', 1967), 'யாரும் இறக்க விரும்பவில்லை' என்றபடத்திற்காக (1967) இயக்குநர் பி.ஸாலகேவிசியஸ், காமிராக் கலைஞர் ஐ.கிரிஷியஸ், நடிகர்கள் டி.பானியோனிஸ், பி.ஓயா; ''தாயின் உள்ளம்'' (1968)) படத்திற்காக இயக்குநர் எம். தான்ஸ்கோய் வசனகர்த்தா எஸ்.லோஸ்கரென்ஸ்காயா, நடிகை இ.ஃபாத யேவா; ''திங்கள் வரை காத்திருப்போம்'' படத்திற்காக, இயக்குநர் எஸ்.ரோஸ்தோத்ஸ்கி, வசனகர்த்தா ஜி.போலோன்ஸ்கி, காமிராக்கலைஞர் வி. ஷம்ஸ்க்கி, கலைஞர் பி. துலென்கோவ், நடிகர்கள் என். மென்ஷிகோவா, வி.திக்கனேவ், ''ஏரியினருகில்'' (1971) என்ற படத்திற்காக, இயக்குநர், வசனகர்த்தா எஸ். கெராசிமோவ், காமிராக்கலைஞர் ஏ. ராப்போபோர்ட், கலைஞர் பி. காலத்ஜேவ் (இறந்த பின்னர்) நடிகர்கள என். பெலேக்வோஸ்திக்கோவா, வி. ஷுக்ஷின் ஓ. ஸாககோவ்; ''கொலை செய்த குற்றச்சாட்டு'' (1971) என்ற படத்திறகாக இயக்குநர், பி. வோல்செக், வசனகர்த்தா ஏ. ஆக்ரனேவிச் நடிகை இ. கோஷேல்கோவா ஆகியோர்.

முழுநீளக் கதைப்படங்கள், டாக்குமெண்டரிப் படங்கள் நீங்கலாக, சோவியத் யூனியனில் 39 திரைப்பட ஸ்டூடியோக்கள ஜனரஞ்சகமான விஞ்ஞானப் படங்களையும், கல்வி சம்பந்தமான படங்களையும், கார்டூன்களையும் பெரும் எண்ணிக்கையில் தயாரித்து வெளியிடுகின்றன. 1971-ல் 181 முழுநீளக கதைப்படங்கள் நீங்கலாக, அவை 37 முழு நீள விஞ்ஞானப்படங்கள், டாக்கு மெண்டரிகளையும், 1102 சிறிய படங்களையும், 1167 செய்திப் படங்களையும் வெளியிட்டுள்ளன.

பொது மக்களுக்காகப் பயன்படுத்தப்படும் திரைப்பட புரொஜெக்டர்களின் மொத்த எண்ணிக்கை 1,57,200 ஆகும்; அவற்றுள், 1,33,100 கிராமப்புறங்களில் உள்ளன. ஒவ்வொரு நாளும் 1கோடி 30 அல்லது 40 லட்சம் மக்கள் சினிமாவுக்குச் செல்கின்றனர். இது ஆண்டொன்றுக்கு 470 கோடிப் பேர் ஆகும்.

சோவியத் சினிமாத்துறையாளர்களின பணியினை, சோவியத் அமைச்சரவையின்(கோஸ்கினோ) சினிமாத்துறை அரசுக் கமிட்டி இயக்குகிறது. எல்லா சினிமாத் துறையைச் சேர்ந்தவர்களும், சோவியத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தில் உறுப்பினா பினர்களாவர். சினிமாத்துறையைச் சேர்ந்த எல்லா ஆராய்ச்சிப் பணியும், கலை வரலாற்றுக் கூடத்திலும், மாஸ்கோவிலுள்ள அகில யூனியன் போட்டோ, சினிமா ஆய்வுக் கூடத்திலும், ஸ்டூடியோக் களிலும், பிரதிகள் எடுக்கும் பரிசோதனைக் கூடங்களிலும நடை பெறுகின்றன. எல்லாத் தனித் தேர்ச்சித் துறையைச் சேர்ந்த

சினிமா ஊழியர்களும், அகில யூனியன் சினிமாட்டோ கிராபி, அரசுக் கல்லூரிகளிலும், இதர உயர்தர, விசேஷ செக்கண்டரிக் கல்விக் கூடங்களிலும் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

சோவியத் திரைப்பட ஊழியர்கள் சோஷலிச நாடுகளிலுமம பிற நாடுகளிலும் உள்ள தங்களது துறை ஊழியர்களுடன் ஒத் துழைக்கின்றனர். அவர்கள், தங்களது அயல் நாட்டு சக ஊழியர் களுடன் சேர்ந்து திரைப்படங்கள் தயாரிக்கின்றனர்; சர்வ தேசத் திரைப்பட விழாக்களில் பங்கேற்கின்றனர் (கேனிஸ், வெனிஸ், கார்லோவிவேரி ஆகிய நகரங்களில் நடந்தவற்றைப் போன்ற விழாக்களில்).

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மாஸ்கோ, ஓர் உலகத் பட விழாவை நடத்துகிறது. 1973ல், 8-வது மாஸ்கோ திரைப் பட விழாவில் 86 நாடுகளைச சேர்ந்த ஆயிரம் திரைப்பட ஊழியர்கள் பங்கு கொண்டனர், அந்த விழாவின் குறிக்கோள்: ''திரைப்படக்கலையில் மனிதத்துவம், நாடுகளிடையே சமாதானம், நட்புறவிற்காக,'' என்பதாகும். விழா நிகழ்ச்சிகளில் முழுநேர கதைப் படஙகள் போட்டியும், துண்டுப படங்கள், குழந்தைகள் படஙகள் போட்டியும், சினிமாவின் பிரதான பிரச்சினைகள் குறித்த விவாதங்களும் அடங்கும்.

**சர்க்கஸ்:** சோவியத் சர்க்கஸ், தனது கடந்த கால ஜனநாயக மரபுகளை வெற்றிகரமாக வளர்த்து வருகிறது. மிருகங்களையும், குதிரைகளையும பயிற்றுவித்து வித்தைகள் காட்டுதல், உடற்பயிற்சி வித்தைகள், ஜாலங்கள் காட்டுதல் ஆகிய வழக்கமான நிகழ்ச்சி களுடன், சமூகக் கிண்டலுக்குப் பெயர் போன கோமாளிகளும் பிரபலமடைந்துள்ளனர். இக்கலையில் போப்போவ், கரந்தாஷ், நிகுலின் ஆகியோர் பெரும் திறமை சாலிகளாவர்.

பி.எடர், ஐ.புக்ரிமோவா, ஏ.புஸ்லயேவ், ஏ.அலெக்ஸாண் டிரோவ், வி.ஸபாஷ்னி எம்.நாஸரோவா, வி.ஃபிலதோவ், ஐ.ரூபன் ஆகியோர் புகழ்பெற்ற பிராணிபழக்குவோராவர். ஜால வித்தைக் காராகளான எமில் கியோவும், அவரது மகன்களான இகோர், எமில் ஆகியோரும் உலகப் புகழ் பெற்றவர்களாவர். வி.வோல் ஷன்ஸ்க்கியின் தலைமையில் உள்ள கயிற்று மேல் நடப்பவர்கள் குழுவும் அதே அளவு பிரபலமடைந்துள்ளனர்.

சோவியத யூனியனிலுள்ள பல குடியரசுகளுக்கும் அவ்வ வற்றிற்குச் சொந்தமான தேசிய சர்க்கஸ்கள் உளளன. அவற்றுள் உஸ்பெக், உக்ரேனியன், அஸர்பைஜான், பைலோரஷ்யன், லிதுவேனியன், ஜியார்ஜியன், லாத்வியன், அர்மீனியன் தேசிய

சர்க்கஸ்கள் அடங்கும். இவை அவற்றின் நிகழ்ச்சிகளில் கிராமீய சர்க்கஸ் மரபுகளைக் கைக்கொள்ளுகின்றன. தேசிய சர்க்கஸ்களில் மிகச் சிறந்த நிகழ்ச்சியாளர்களில் சிலர். ஒட்டகங்களின் மீது வித்தை காட்டும் உஸ்பெக்கிஸ்தானைச் சேர்ந்த கதிர்-குல்யாம் குழு, துவாவைச் சேர்ந்த ஒஸ்கால்-ஊல் வித்தைக்காரர்கள், தாகெஸ்தானைச் சேர்ந்த த்சோவ்க்ரா சமனவித்தைக் குழு, பைலோரஷ்யாவைச் சேர்ந்த மந்திரவாதி ஏ.ஷாக் ஆகியோர்.

சோவியத் யூனியனில் 50க்கு மேற்பட்ட நிலையான சர்க்கஸ் களும், 14 பயண சர்க்கஸ்களும், 13 பிராணி சர்க்கஸ்களும் 50 அரங்க சர்க்கஸ் கம்பெனிகளும், 1கோடி 80 லட்சம் பார்வை யாளர்களை மகிழ்விக்கின்றன. சோவியத் நாட்டில் ஒரு சர்க்கஸ் பள்ளியும், புதிய சர்க்கஸ் திட்டங்களைத் தயாரிப்பதற்கான ஒரு ஸ்டூடியோவும், ஒரு சர்க்கஸ் மியூசியமும் உள்ளன. **"வெரைட்டியும், சர்க்கஸும்"** என்ற ஒரு சஞ்சிகையும் வெளியிடப் படுகிறது. சோவியத் சர்க்கஸ் அயல் நாடுகளிலும் பல நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளன; அவை எப்பொழுதும் அனைவரது கவனத்தையும் கவரத் தவறுவதில்லை.

**பயில்முறைத் திறன்:** நாடகத் துறை, கூட்டுப்பாடல், இசை பாலே கலை ஆகியவற்றைச் சேர்ந்த பல ரஸிகர்கள் சோவியத் யூனியனில் உள்ளனர். நடனம், பாடுதல், கவிதை இசைத்தல், கிராமீய மக்களின் இசைக் கருவிகள் உட்பட பல்வேறு வாத்தியங் களை வாசித்தல் ஆகியவை நாடெங்கிலும் பல மக்களின் பொழுது போக்காக உள்ளது. அவர்கள் அனைவரும் பல்வேறு பயில்முறைத் திறன் குழுக்களில் ஒன்று சேர்ந்துள்ளனர். அத்தகைய குழுக்கள் மொத்தம் 4,00,000 உள்ளன; அவற்றின் மொத்த உறுப்பினர் தொகை 1 கோடி 20 லட்சமாகும். தொழிற்சாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும், இராணுவ யூனிட்டுகளி லும், கூட்டுப்பண்ணை, அரசுப் பண்ணைகளிலும் பயில் முறைத் திறமையாளர்கள் குழுக்கள் உள்ளன. அதில் எவரும் பங்கு கொள்ளலாம். அவை அனுபவ மிக்க பயில்முறையாளர்களாலோ, தொழில்முறை நிபுணர்களாலோ வழி நடத்தப்படுகின்றன.

**ஓவியம் தீட்டுதல்.** மக்களின் வாழ்க்கையுடனும், கம்யூனிசத் திற்கான அவர்களது போராட்டத்துடனும் நெருங்கிய தொடர் புள்ளதால், மக்களிடையே பரந்த பிரபலத்துவம பெற்று விளங்கும் சோவியத் ஓவியக்கலை, 1920-ம் ஆண்டுகளில் வளர்ச்சி யடையத் துவங்கிற்று. சோஷலிச எதார்த்த வாதத்தின் சித்தாந்த, அழகியல் கோட்பாடுகள் உருவாகிக் கொண்டிருந்த காலம் அது; புதிய கருப்பொருளுக்கும், ஓவியக் கலையில் புதிய முறைகளுக்கும் தேட்டம் இருந்து வந்தது; வரலாற்று ரீதியான

புரட்சிகர ஓவியங்களைத் தீட்டிய எம். கிரெகோவ், ஏ,தெய்னிகா, ஆகியோரது கலையில் அது வெளிப்பாடடைந்தது. எஸ்.மில்யுதின், கே.யுவான், கே.பெத்ரோவ்-வோத்கின், பி.கான்சலோவ்ஸ்க்கி, போன்ற பழைய, புரட்சிக்கு முந்திய தலைமுறையினர் புதியதொரு ஆக்க சக்தியைப் பெற்றனர்; அவர்கள் ஆதர்ச மூட்டப் பட்டனர்.

புரட்சிக்கு முன்னர் ஓவியக்கலையை அறியாதிருந்த மத்திய ஆசிய மக்களும் கூடதங்களது சொந்த ஓவிய பாணியை வளர்க்கத் தொடங்கினர். சித்தாந்தப் பொருள், பாத்திரங்களின் தனிப் பட்ட பண்பு, நம்பிக்கை ஆகியவை சோவியத் ஓவியக்கலையின் முக்கியமான அம்சங்களாயின; ஓவியத்தில் முப்பரிமாணத்தையும், பரந்த வீச்சையும், உணர்வூட்டும் வண்ணச் சேர்க்கை விளைவுகளையும் அடையவும், மனித பாத்திரங்களுக்கு உளவியல் செறிவை அளிக்கவும் அது பற்பல முறைகளைக் கையாண்டது. மனித உருவங்களைத் தீட்டுவதில், பாத்திரத்தின் படைப்பாற்றல் உணர்வை வெளிக் கொணர்வதிலும், இயற்கைக் காட்சிகளைத் தீட்டுவதில், நேர்த்தியான கவித்துவத்தையும், மனித முயற்சிகளின் மூலம் இயற்கையின் மாற்றத்தைச் சித்திரிப்பதிலும் அழுத்தம் தரப்பட்டது. மக்களது தினசரி வாழ்வின் முக்கியத்துவத்தையும், அழகையும் எடுத்துக் காட்டுவதே ஓவியர்களின் கருப்பொருளாக இருந்தது. தேச வரலாற்றின் ஒப்பற்ற நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கும், வரலாற்று ரீதியான புரட்சிகர ஓவியங்களுக்குப் பெருத்த சமூக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. எல்லாக் குடியரசுகளிலும் ஓவியக்கலை வளர்ச்சி பெற்று வந்தது.

சோவியத் ஓவியர்களின் மிகச் சிறந்த படைப்புகளுக்கு, லெனின் பரிசு வழங்கப்பட்டது; 'ரஷ்ய பூமி' (1966) என்ற ஓவியத் தொகுப்புகளுக்கு எஸ். கெராசிமோவ், ''கூட்டுப்பண்ணை கிராமம்'' (1966) என்ற தொகுப்புகளுக்கு ஏ. பிளாஸ்தோவ், ''புதிய மாவட்டங்கள்''(1967)என்ற தலைப்பிட்ட ஓவியங்களுக்கு ஒய். பிமேனேவ் ஆகியோர் லெனின் பரிசு பெற்றனர்: கீழ்க்கண்டவர்களுக்கு சோவியத் அரசு பரிசுகள் வழங்கப்பட்டன: 'எனது துருக்மீனியா' (1967) என்ற படத் தொகுப்புகளுக்காக ஐ. கிளிச்சேவ்; ''போரடித்தல், கூடாரத்தில்,'' ''குடும்பம்-1945,'' ''ரஷ்ய மாதர்,மதிய உணவு,'' (1968) ஆகியவற்றிற்காக வி.இவானேவ், ''பழுது பார்ப்போர்,'' ''இசை அமைப்பாளர் கே. காரயேவ்,'' ''காஸ்பியன் கடலில்'' (1968) ஆகிய ஓவியங்களுக்காக டி.சாலகோவ் ஆகியோர்.

**சிற்பக் கலை:** மனித உரு, வாழ்க்கை நடைமுறைக் காட்சி, வரலாறு, அலங்காரம்,விலங்கினஙகள் உட்பட எல்லா வகையான சிற்ப முறைகளும் சோவியத் யூனியனில் காணப்படுகின்றன.

கல்வி போதனை நடவடிக்கையின் ஒரு பகுதியான, புரட்சி வாதிகள், விஞ்ஞானிகள், கலாசாரத்துறை ஊழியர்கள் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்புவதற்கான திட்டமொன்று 1918ல் லெனினால் வகுக்கப்பட்டது. இத்திட்டம் சிற்பிகளை, மாபெரும் சமூக முக்கியத்துவமுடைய, அதே நேரத்தில் கல்வி நோக்கும் கொண்ட படைப்புக்களை உருவாக்குவதற்குத் தூண்டிற்று. நினைவுச்சின்னம் சிற்பக்கலை (நினைவுச்சின்னங்கள், சிலைகள், சிற்ப-கட்டடக்கலைத் தொகுப்பு), சோவியத் யூனியனில் இக்கலை வளர்ச்சியடைவதற்கான பிரதான போக்காக ஆயிற்று. நினைவுச்சின்னச் சிற்பக்கலையின் முதல் வெற்றிகளுடன், என். ஆந்திரியேவ், ஐ. ஷாதர், எஸ். மெர்குரோவ், எஸ். லெபதேவா, எம். மானிசர், ஆகியோரது பெயர்கள் தொடர்புடையவைஆகும் ''தொழிலாளியும, கூட்டுப்பண்ணை பெண்ணும்,'' என்ற சிற்பத் தொகுப்பு, பாரிஸில் நடைபெற்ற 1937 உலகக் கண்காட்சிககாக வி.முகினாவினால் உருவாக்கப்பட்டது. அதுவே சோவியத் சமூகத்தை உருவகப்படுத்துவதாகவும் ஆயிற்று.

பல சோவியத் சிற்பிகளும், மாபெரும் தேசபக்த யுத்தத்தில் மக்களின் வீரதீரத்தை நினைவு படுத்தவும், பாசிசத்திற்கு பலியானவர்களது நினைவை நிலைநிறுத்தவும் ஆன பணியில் ஈடுபட்டனர். சிற்பத் தொகுதிகள், சிலைகள், உட்பட பல நினைவுச் சின்னங்கள் சோவியத் யூனியனில் எழுப்பப்பட்டுள்ளன. (என்.கோம்ஸ்க்கி, எம்.மனிஸெர், போன்ற இதரர்கள்) பெர்லினில் இ. உசேதிச் என்பார் ஓர் அற்புத சிற்பத்தை நிர்மாணித்துள்ளார். வோல்கா கிராடிலுள்ள ''ஸ்டாலின்கிராடு போரில் வீழ்ந்த வீரர்களுக்கு'' என்ற நினைவுச் சிற்பமும் (இ. உசேதிச், லெனின் பரிசு, 1970), லாத்விய நகரான சாலஸ்பில்ஸில், பாசிச பயங்கரத்திற்கு இரையானோருக்கான நினைவுத் தொகுதியும், (ஜி. அஸாரிஸ்), பைலோ ரஷ்யாவிலுள்ள ''காதின்'' நினைவுச் சின்னமும் (ஓய்.கிரதோவ்) சோவியத் சிற்பங்களில் மிகச் சிறந்தனவாகும்.

லெனின் நினைவுச் சின்னத்திற்காக என். தோம்ஸ்க்கிக்கு (1972) லெனின் பரிசும், உஃபாவிலுள்ள சாலவாத் யுலயேவ் நினைவுச் சின்னத்திற்காக எஸ். தவாசியேவுக்கு சோவியத் அரசுப் பரிசும் (1970) வழங்கப்பட்டது.

எம். அனிகுஷின், ஏ. கிபால்னிக்கோவ், எல். கெர்பல், ஜி. ஜோகுபோனிஸ் ஆகியோரது சிற்பங்கள் பொதுமக்களின் மதிப்பைப் பெற்றவையாகும். மக்களின் வாழ்வையும், எண்ணங்களையும், நன்கு அறிந்து, அவற்றை வெளிக்காட்டுவனவாகும் அவை. சிற்பக்கலையை உளவியல் ரீதியாகக் கையாளும் கோட்பாட்டின் ஸ்தாபகர்ளான எஸ். கோனெங்கோ, இ. பெலஷோவா, ஆகி

யோரது அடிச்சுவடுகளைப் பின்பற்றும் சிற்பங்களை, அக்கலையின் போக்கு இயைபு ஆகியவை குறிதது புதிய தீர்வுகளைக் காணும் சிற்பஙகளை, சிற்பக் கூடங்களில் காணலாம்.

**கைவினைத் தொழில்கள்:** சோவியத் நாட்டில்,ரஷ்ய சமஷ்டியில் மிகப் பிரபலமாக விளங்கும் கைத்தொழில்கள் மரம்,கல்,எலும்பு,அரக்கு, மண், உலோகங்கள் ஆகியவற்றிலும், வலைப்பின்னல், கம்பளங் கள் ஆகியவற்றிலும் நேர்த்தியான வேலைப்பாடுகள் அமைத்தல்; உக்ரேனில் பீங்கான் தொழிலும், மர அமைப்புக்களும், பைலோ ரஷ்யாவில் பீங்கான் தொழிலும், எம்பிராய்டரியும்; உஸ்பெக் கிஸ்தானில் எம்பிராய்டரி, பீங்கான், மர, கல் வேலைப்பாடுகளும் ஆர்மீனியா, அஸர்பைஜான், மோல்தேவியா, துருக்மீனியாவில் கம்பளம் நெய்தலும், ஜியாஜியாவில் மரத்திலும், தோலிலும் நுண்ணிய வேலைப்பாட்டு வினையும், நெய்தலும் பிரபலமாக விளங் குகின்றன.

பல சோவியத் கைவினைப் பொருள்கள் உலகு தழுவிய புகழ் பெற்றவையாகும்; உதாரணமாக பாலெக், ஃபெதோஸ்கினோ வின் வேலைப்பாடமைந்த அரக்கு, மரப்பிசின் பெட்டிகளும், கோக்லோமா வண்ணப் பூச்சுச் சாமான்களும், திம்கோவா பொம் மைகளும், வோலக்தா 'லேஸூம்,' (வலைப்பின்னல்) வடகாகசஸி லுள்ள வெள்ளி வேலைப்பாடுகளும், உக்ரேனிய ''குமனெட்'' ஜாடி களும், தெகின் கம்பளங்களும் உலகப் பிரசித்தி பெற்றவையாகும்.

பெரும்பான்மையான கைவினைஞர்கள், அவர்களுக்குரிய கழகங்களில் இணைந்துள்ளனர். அவர்களது கைவினைப் பொருள் களனைத்தும் பிரதானமாக கலைப்பொருட் கடைகள் மூலமும், பரிசுப் பொருள் விற்பனைக் கடைகள் மூலமும் விற்கப்படுகின்றன.

**கட்டடக் கலை:** நிலத்தில் தனியுடைமை ஒழிக்கப்பட்டதும் நிர்மாணத்தில் திட்டமிடுதல் என்ற அரசு அமைப்பு முறை புகுத் தப்பட்டதும் உட்பட, நாட்டை சோஷலிச ரீதியில் புனரமைப்ப தானது, கட்டடக்கலை சமூக சேவைக்குப் பயன்படுவதை சாத்திய மாக்கியுள்ளது.

நாடு தொழில்மயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, தொழில் துறை நிர்மாணம் முன்னேற்றமடைந்தது. திட்டப்படி நாடு நெடு கிலும் கடடப்பட்ட புதிய தொழில் கேந்திரங்களைச் சுற்றி நகரங் கள் தோன்றின; பழைய நகரங்கள் முற்றிலும் புனரமைக்கப் பட்டன.

சோவியத் கட்டடக் கலையின் வரலாறு என்பதே,புனைவரைவி லும், நிர்மாணவேலையைச் செய்து முடிப்பதிலும் மிகச் சிறந்த முறைகளைச் சதா தேடிக்கொண்டிருப்பதில் அடங்கியதாகும். ஒரே

சீரான புனைவரைவை உருவாக்கி அவற்றைப் புகுத்துவதற்கும் நவீன நிர்மாணப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கும் சோவியத் கட்டடக் கலைஞர்கள் முயன்று வருகின்றனர்.

நவீன சோவியத் கட்டடக் கலையின் விசேஷ அம்சங்கள், தாராள இடஉணர்வு, நிரம்ப சூரிய ஒளியையும், வெப்பத்தையும் வீட்டினுள் புகச் செய்வதற்கான வசதி, சூழ்-நிலையை இயற்கைச் சூழலையோ அல்லது சுற்றியுள்ள பிற கட்டடத் தொகுதிகளையோ-ஒட்டி அதன் ஒரு பிரிக்க முடியாத அங்கமாகத் திகழச்செய்வது ஆகியவையே. மக்கள் வாழ்ந்து,பணியாற்றி, கலாச்சார பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்குத் துணை செய்யும் ஒரு செயற்கை ஊடகமே கட்டடக்கலை என்ற மனிதத்துவ கோட்பாட்டின் வெளிப் பாட்டினை, மாஸ்கோவிலுள்ள புதிய செர்யோமுர்ஷ்கி, குன்த் சேவோ போன்ற விஸ்தாரமான குடியிருப்புப் பிராந்தியங்களிலும் லெனின் கிராடிலுள்ள நோவோ-இஸ்மெய்லோவ் வீதியிலும், கீவ் நகரின் ருஸனோவ்காவிலும், வில்னியஸின் ஸிர்முனாய், லாஸ்தினை யிலும், மாஸ்கோ கிரெம்ளினிலுள்ள பாலஸ்-ஆப்-காங்கிரஸ் போன்ற மாளிகை அமைப்புகளிலும் காணலாம்.

உல்யனோவ்ஸ்கிலுள்ள, பி.மெஸன்த் சேவ் மற்றும் பிறரது லெனின் நினைவுத் தொகுதி (லெனின் பரிசு பெற்றது, 1972) ஓர் ஒப்பற்ற கட்டடக்கலை அமைப்பாகும்.

சோவியத் யூனியனில் நகர் நிர்மாணமானது, அனைத்தையும் தழுவியதொரு நீண்ட காலத்திட்டத்தினால் கட்டுப்படுத்தப்படு கிறது; அதன் மூலம், பழைய நகரங்களைப் புதுப்பிக்கும் போது, அவற்றிலுள்ள வரலாற்று,நிர்மாணக் கலையின் முக்கியமான இடங் களைப் பாதுகாப்பதும், பல்வேறு சகாப்தங்களைச் சேர்ந்த கட்டடக் கலைப்பாணியின் ஓர் அழகிய சேர்க்கையைப் பெறுவதும் சாத்திய மாகிறது.

சிற்பச் சின்னங்கள், சுவர் ஓவியங்கள், வண்ணத்திட்டு உரு வங்கள், வண்ணக் கோலங்கள் போன்ற நுண்கலை வேலைப்பாடுகள் நகரின் கட்டடக்கலை அமைப்புக்களுக்கு மேலும் அழகூட்டுகின்றன.

**நூல் வெளியீடும், பத்திரிகைகளும்.** யுனெஸ்கோ தரும் புள்ளி விவரங்களின்படி, நூல் வெளியீட்டில் பல ஆண்டு களாகவே சோவியத் யூனியன் முதலிடம் பெற்று விளங்கு கிறது. (உலகில் வெளியாகும் நூல்கள் அனைத்திலும் கால் வாசி சோவியத் யூனியனில் வெளியிடப்படுபவையே) மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியீட்டிலும் சோவியத் யூனியன் முதலிடம்

பெற்று விளங்குகிறது. 1971-ல் சோவியத் யூனியன் மொத்தம் 79,000 நூல்களையும், சிறப்பு மலர்களையும் 130 கோடி பிரதிகள் வெளியிட்டுள்ளது. இவை சோவியத் யூனியனில் பேசப்படும் 89 மொழிகளிலும், 56 அயல் மொழிகளிலும் வெளியிடப்பட்டவை யாகும். சோவியத் நாட்டில் 214 நூல் வெளியீட்டகங்களும், 15 பத்திரிகை, சஞ்சிகை வெளியீட்டகங்களும் உள்ளன.

சோவியத் அமைச்சகத்தின் கீழுள்ள, வெளியீட்டக விவகாரங்கள், அச்சக நிறுவனங்கள், புத்தகத் தொழில் ஆகியவற்றிற்கான அரசுக் கமிட்டியால் நூற்பதிப்புத் தொழில் கட்டுப்படுத்தப்படுகிறது.

சில வெளியீட்டகங்கள் அரசால் நடத்தப்படுகின்றன; பிற பொது ஸ்தாபனங்களால் நடத்தப்படுகின்றன. கம்யூனிஸ்டுக் கட்சி, தொழிற் சங்கங்கள், இளம் கம்யூனிஸ்டு லீக், கலைத்துறை ஊழியர்களது ஸ்தாபனங்கள், (எழுத்தாளர் சங்கம், இசை அமைப்பாளர் சங்கம், கலைஞர்கள் சங்கம் போன்றவை) 'ஸ்நானியே' என்ற அகில யூனியன் கழகம் போன்றவை தமக்குச் சொந்தமான பதிப்பகங்களைக் கொண்டுள்ளன.

'மிசில்', அரசியல் இலக்கியப் பதிப்பகம், 'நவூகா', 'ஸ்தாடிஸ்திகா', 'நெத்ரா', 'குதோஷெஸ்த்வெநாயா லித்தரதுரா', 'தெத்ஸ்கயா லித்தரதுரா', 'இஸ்குல்த்வோ', 'சோவத்ஸ்காயா', 'என்த்சிக்ளோபீடியா', 'விஸ்ஷயா ஷ்கோலா' போன்ற பெரும்பதிப்பகங்கள் பெரும் பாலும் தனித்துறைகளைச் சேர்ந்தவையாகும்; அவை குறிப்பிட்ட பொருள்கள் பற்றிய நூல்களையே வெளியிடுகின்றன. குடியரசு, ஸ்தல (பிராந்திய, மாவட்ட) வெளியீட்டகங்கள் பிரதானமாக, ஸ்தல ஈடுபாடுள்ள பிரச்சினைகள் குறித்த நூல்களை வெளியிடுகின்றன.

சோவியத் யூனியனில், நூல்கள் பெரும் எண்ணிக்கைகளில் வெளியிடப்படுகின்றன. லெனினது நூல்கள் 102 மொழிகளில் 41 கோடிப் பிரதிகளும், மார்க்ஸ்-எங்கெல்ஸினது நூல்கள் 81 மொழிகளில் 9 கோடி 65 லட்சம் பிரதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. அண்மையில் வெளியிடப்பட்டனவற்றையும் சேர்த்து, புஷ்கினது நூல்கள் (பத்துத் தொகுதிகள்) 3,00,000 பிரதிகளும், தஸ்தயேவ்ஸ்க்கியின் நூல்கள் (பத்துத் தொகுதிகள்) 1,00,000 பிரதிகளும், எஸ். ஸ்வீக்கினது நூல்கள் (ஏழு தொகுதிகள்) 3,85,000 பிரதிகளும், பொக்காசியோவின் **'டெக்கமரான்'**, 3,75,000 பிரதிகளும், ஹெம்மிங்வேயின் தொகுப்பு நூல்கள் (நான்கு தொகுதிகள்) 1,00,000 பிரதிகளும், எம். ஷோலாக்கோவின் **'அவர்கள் தமது நாட்டுக்காகப் போரிட்டனர்'** 1,00,000 பிரதிகளும், கே. சிமனோவின் மூன்று நூல்கள் 1,50,000 பிரதிகளும் வெளியாகி

யுள்ளன. சோவியத் யூனியனில் புத்தகங்கள் எங்கணும் கிடைக்கக் கூடியவை.

குழந்தைகளுக்கான நூல்கள் 7 மத்திய, 117 குடியரசு பதிப்பகங்களில் வெளியிடப்படுகின்றன; அப்பதிப்புகளின் மொத்தப் பிரதி எண்ணிக்கை 26 கோடி 60 லட்சம் ஆகும்.

வேறு எந்த நாட்டைக் காட்டிலும் சோவியத் யூனியன், அயல் மொழிகளிலிருந்து அதிக நூல்களை மொழிபெயர்த்து வருகிறது. மொத்தத்தில், சென்ற 50க்கும் மேற்பட்ட ஆண்டுகளில் சோவியத் வெளியீட்டகங்கள் 101 நாடுகளின் நூல்களை மொழி பெயர்த்து அச்சிட்டுள்ளன. சோஷலிச நாடுகளின் எழுத்தாளர்கள் 1200, பிரான்சு 522, அமெரிக்கா 325, பிரிட்டன் 316, இத்தாலி 132, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் ஏறக்குறைய 500 பேர்களது நூல்கள் வெளியாகியுள்ளன. சோவியத் நூலாசிரியர்களது படைப்புக்களில் ஏறக்குறைய, ஆண்டுதோறும் 2500, வெளி நாடுகளில் (சுமார் 50 நாடுகளில்) வெளியிடப்படுகின்றன.

கலாசார ஒத்துழைப்பை மேலும் வளர்ப்பதற்காக, 1973 மே மாதத்தில், சோவியத் யூனியன், ஜெனீவா சர்வதேசப் பதிப்புரிமை உடன்பாட்டில் சேர்ந்துள்ளது.

சோவியத் யூனியன், மொத்தம் 8,700 செய்திப் பத்திரிகைகளை வெளியிடுகின்றது; அவற்றின் மொத்தப் பிரதிகள் 15 கோடியாகும். சோவியத் யூனியனில் பேசப்பட்டு வரும் 58 மொழிகளிலும், 8 அயல் மொழிகளிலும் அவை வெளியிடப்படுகின்றன. மத்திய செய்திப் பத்திரிகைகளும் (மாஸ்கோவிலிருந்து வெளியிடப்படுபவை; நாடு முழுவதும் அனுப்பப்படும் அச்சுவார்ப்புருக்களிலிருந்து பல இடங்களிலும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுபவை) குடியரசுப் பத்திரிகைகளும் (இவை அந்தந்தக் குடியரசுகளின் தலைநகரங்களிலிருந்து வெளியிடப்படுபவை), தேசியப் பகுதிகள், பிராந்தியங்கள், வட்டாரங்கள், சுயேச்சைக் குடியரசுகள், பிராந்தியங்கள், நகரங்கள், நகர மாவட்டங்களிலிருந்து வெளியாகும் செய்திப் பத்திரிக்கைகளும், உள்ளன. நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், ஸ்தாபனங்கள், தனித்துறைகள், கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகள், ஆகியவை வெளியிடும் பத்திரிகைகளும் ஆயிரக்கணக்கில் விற்பனையாகின்றன. இவைதவிர, ஆசிரியர்கள், பொது சுகாதார ஊழியர்கள், கலை, கலாசாரத் துறையினர், இளைஞர்கள், குழந்தைகள், விளையாட்டுத்துறையினர் ஆகிய ஒவ்வொரு துறையினருக்குமான விசேஷச் செய்திப் பத்திரிகைகளும் உள்ளன.

சோவியத் யூனியனில் ஏறக்குறைய 6000 சஞ்சிகைகளும், இதர மலர்களும் (விவாதக் கட்டுரைகள், பிரத்தியேக செய்தி வெளியீடுகள், மாநாட்டு நடவடிக்கைக் குறிப்புக்கள்) வெளியாகின்றன. ரஷ்ய மொழி தவிர,சோவியத் யூனியனில் பேசப்பட்டு வரும் பிற 48 மொழிகளிலும், 25 அயல் மொழிகளிலும் சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. எல்லாச் செய்திப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும், அரசு அல்லது பொது ஸ்தாபனங்களாலேயே வெளியிடப்படுகின்றன.

சோவியத் சஞ்சிகைகளின் நோக்கம், மார்க்சிய-லெனினியக் கருத்துக்களைப் பரப்புதல், சோவியத் யூனியனிலுள்ள வாழ்க்கையை உண்மையாக எடுத்துரைத்தல், சோவியத் அயலகக் கொள்கையின் — எல்லா முற்போக்கு உள்ளங்கொண்ட மக்களின் நலன்களையும் பிரதிபலிக்கும் கொள்கையின் — சமாதான நேயத் தன்மையை எடுத்துரைத்தல் ஆகியவையே. உழைப்பு முறைகள், பொருளாதார நிர்வாகம், அமைப்பு ஆகியவை குறித்த முற்போக்குத்தன்மை படைத்தன அனைத்தையும் உடனடியாகவும், ஆதார பூர்வமாகவும், சோவியத் பத்திரிகைகள் மக்களுக்கு எடுத்துரைக்கின்றன. வேலை குறித்த ஆக்கத்தன்மை வாய்ந்த நோக்கையும், உணர்வையும், நாட்டின்பால் மதிப்புமிக்க நோக்கையும், சமூகத்தின்பால் மிக உயர்ந்த பொறுப்புணர்வையும் எல்லா சோவியத் மக்களுக்கும் ஊட்டுவதே சோவியத் பத்திரிகைகளின் கடமையாகும்.

செய்திப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் வாசகர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன; தொழிலாளர்கள், விவசாயிகளிடையே அவற்றிற்குப் பரந்த அளவில், கௌரவ நிருபர்கள் உள்ளனர். வாசகர்களது கடிதங்களைக் கவனமாகப் பரிசீலனை செய்வது சோவியத் பத்திரிகைகளின் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்றாகும்.

மிகப் பெரும் விற்பனையுள்ள மத்திய செய்திப் பத்திரிகைகள்: **பிராவ்தா** (96 லட்சம் பிரதிகள்), **இஸ்வெஸ்தியா** (84 லட்சம் பிரதிகள்), **துருத்** (56லட்சம்), '**செல்ஸ்கயா வீஸ்னி**' (70லட்சம்), **காம்சோமால்ஸ்கயா பிராவ்தா** (84 லட்சம்), **பயோனீர்ஸ்காயா பிராவ்தா** (98 லட்சம் ஆகும்).

அதிக எண்ணிக்கையில் வெளியிடப்படும் பிரதான சஞ்சிகைகள்: **கம்யூனிஸ்ட்** (சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் தத்துவார்த்த சஞ்சிகை), **ஓகோன்யோக்** (ஒரு சமூக அரசியல், இலக்கிய வாரப் பத்திரிகை), **நோவி மிர்**, **ஸ்நாம்யா**, **அக்தியாபர்**, **இனோஸ்திரானயா லித்தரதுரா** (எழுத்தாளர்

சங்கத்தினால் நடத்தப்படும் மாத சஞ்சிகைகள் ரபோத்னித்சா, கிரெஸ்தியான்கா (வெகுஜன மாதர் சஞ்சிகைகள்), நவூகா இ ஷிசின், நவூகா இ ரிலிஜியா ('ஸ்நானியே கழகம் வெளியிடும் மாதாந்தரப் பத்திரிகைகள்), முர்ஸில்கா, பயனீர், ஸ்மினா, யுனோஸ்த், தெக்னிகா மோலோதெஜி (குழந்தைகள், இளைஞர் சஞ்சிகைகள்) ஸா ருபிஜோம் (பத்திரிகையாளர் சங்கம் வெளியிடும் வாராந்திர அயல் பத்திரிகைகள் விமர்சனம்) ஆகியவையாகும்.

சோவியத் யூனியனின் நூல் தொகுப்புக் கேந்திரம், 1917ல் நிறுவப்பட்ட அகில யூனியன் புத்தக சேம்பர் ஆகும்; இங்கு அச்சிடப்படும் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, தொகுத்து வைக்கப் படுகிறது. இது போன்றே புத்தக சேம்பர்கள் யூனியன், சுயேச்சைக் குடியரசுகளிலும் உள்ளன. அவை நூல்கள் சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள், ஆதாரங்கள் காண்பதற்கான குறிப்பு நூல்கள் ஆகியவற்றின் விவரங்களைக் கொண்ட குறிப்புத் தொகுப்புக்களை வெளியிடுகின்றன.

**டெலிவிஷனும், ரேடியோவும் :** சோவியத் டெலிவிஷனும், ரேடியோவும், சோவியத் அமைச்சரவையின் ரேடியோ டெலிவிஷனுக்கான அரசு கமிட்டியினால் நிர்வகிக்கப்படுகின்றன. நாட்டு மக்களில் மூன்றில் இரு பங்கினருக்கு மேல் வசிக்கும் பகுதிகளில் டெலிவிஷன் அஞ்சல் அமைப்பு உள்ளது. டெலிவிஷன் நிகழ்ச்சிகள் காட்டப்படும் மொத்த நேரம், நாளொன்றுக்கு சராசரி 1656 மணிகளாகின்றன. மொத்தம் நாளொன்றுக்கு 38 மணி நேரம் இயங்கக்கூடிய ஆறு மத்திய டெலிவிஷன் பாதைகள் உள்ளன.

நாட்டில் மொத்தம் 127 டெலிவிஷன் கேந்திரங்கள் உள்ளன; அவை ஒவ்வொன்றுக்கும் சொந்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. இவற்றிலெல்லாம் மிகப் பெரியது, அக்டோபர் புரட்சியின் 50ஆம் ஆண்டு விழாவின் பெயரால் விளங்கும் மாஸ்கோவிலுள்ள டெலிவிஷன் கேந்திரமே. டெலிவிஷன் நிகழ்ச்சிகளைப் பரப்புவதற்கு தரை மார்க்கம், விண்வெளிச் செய்திப் போக்குவரத்து ஆகிய இரு முறைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. தரை மார்க்க ஒலிபரப்பு அமைப்பில், 145 சக்தி வாய்ந்த அஞ்சல் நிலையங்களும், 560 தாழ்ந்த சக்தியுள்ள அஞ்சல் நிலையங்களும், உலகின் மிக நெடிய கம்பி மற்றும் கம்பியில்லாப் பாதைகளும் உள்ளன.

மாஸ்கோ, கீவ், திபிலிசி ஆகிய நகரங்களிலுள்ள டெலிவிஷன் ஸ்டூடியோக்களும் 1971 இறுதிக் காலத்திலிருந்து தாஷ்கெண்ட், பாகூ, லெனின்கிராடு நகரங்களிலுள்ள டெலிவிஷன் ஸ்டூடியோக்களும், சராசரியாக நாளொன்றுக்கு 5 மணி நேரத்

சீரான புனேவரைவை உருவாக்கி அவற்றைப் புகுத்துவதற்கும் நவீன நிர்மாணப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கும் சோவியத் கட்டடக் கலைஞர்கள் முயன்று வருகின்றனர்.

நவீன சோவியத் கட்டடக் கலையின் விசேஷ அம்சங்கள், தாராள இடஉணர்வு, நிரம்ப சூரிய ஒளியையும், வெப்பத்தையும் வீட்டினுள் புகச் செய்வதற்கான வசதி, சூழ்-நிலையை இயற்கைச் சூழலையோ அல்லது சுற்றியுள்ள பிற கட்டடத் தொகுதிகளையோ-ஒட்டி அதன் ஒரு பிரிக்க முடியாத அங்கமாகத் திகழச்செய்வது ஆகியவையே. மக்கள் வாழ்ந்து,பணியாற்றி, கலாச்சார பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்குத் துணை செய்யும் ஒரு செயற்கை ஊடகமே கட்டடக்கலை என்ற மனிதத்துவ கோட்பாட்டின் வெளிப் பாட்டினை, மாஸ்கோவிலுள்ள புதிய செர்யோமுர்ஷிகி, குன்த் சேவோ போன்ற விஸ்தாரமான குடியிருப்புப் பிராந்தியங்களிலும் லெனின் கிராடிலுள்ள நோவோ-இஸ்மெய்லோவ் வீதியிலும், கீவ் நகரின் ருஸனேவ்காவிலும், வில்னியஸின் ஸிர்முனய், லாஸ்தினை யிலும், மாஸ்கோ கிரெம்ளினிலுள்ள பாலஸ்-ஆப்-காங்கிரஸ் போன்ற மாளிகை அமைப்புகளிலும் காணலாம்.

உல்யனேவ்ஸ்கிலுள்ள, பி.மெஸன்த் சேவ் மற்றும் பிறரது லெனின் நினைவுத் தொகுதி (லெனின் பரிசு பெற்றது, 1972) ஓர் ஒப்பற்ற கட்டடக்கலை அமைப்பாகும்.

சோவியத் யூனியனில் நகர் நிர்மாணமானது, அனைத்தையும் தழுவியதொரு நீண்ட காலத்திட்டத்தினால் கட்டுப்படுத்தப்படு கிறது; அதன் மூலம், பழைய நகரங்களைப் புதுப்பிக்கும் போது, அவற்றிலுள்ள வரலாற்று,நிர்மாணக் கலையின் முக்கியமான இடங் களைப் பாதுகாப்பதும், பல்வேறு சகாப்தங்களைச் சேர்ந்த கட்டடக் கலைப்பாணியின் ஓர் அழகிய சேர்க்கையைப் பெறுவதும் சாத்திய மாகிறது.

சிற்பச் சின்னங்கள், சுவர் ஓவியங்கள், வண்ணத்திட்டு உரு வங்கள், வண்ணக் கோலங்கள் போன்ற நுண்கலை வேலைப்பாடுகள் நகரின் கட்டடக்கலை அமைப்புக்களுக்கு மேலும் அழகூட்டுகின்றன.

**நூல் வெளியீடும், பத்திரிகைகளும்.** யுனெஸ்கோ தரும் புள்ளி விவரங்களின்படி, நூல் வெளியீட்டில் பல ஆண்டு களாகவே சோவியத் யூனியன் முதலிடம் பெற்று விளங்கு கிறது. (உலகில் வெளியாகும் நூல்கள் அனைத்திலும் கால் வாசி சோவியத் யூனியனில் வெளியிடப்படுபவையே) மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியீட்டிலும் சோவியத் யூனியன் முதலிடம்

பரிவர்த்தனை முறையிலும் அயல் நாட்டு வெளியீடுகள் நூலகங்களால் பெறப்படுகின்றன. ஏறக்குறைய, 100 பெரிய சோவியத் நூலகங்கள் 100 நாடுகளுடன் பரிவர்த்தனை ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன. அனைத்தும் சேர்ந்து, சோவியத் நூலகங்கள் சராசரி 9,00,000 நூல்கள் சஞ்சிகைகளையும்,30லட்சம்'உரிமைப் பதிப்புகளையும்' அயல் நாடுகளிலிருந்து பெறுகின்றன. தங்கள் பங்கிற்கு,அவை அயல் நாடுகளுக்கு 10லட்சம் நூல்கள், சஞ்சிகைகளையும், 25 லட்சம் உரிமைப் பதிப்புகளையும் அனுப்புகின்றன.

பொழுது போக்கு இல்லங்கள், விடுதிகள், கலாசார மாளிகைகள் ஆகியவையும், விஞ்ஞான, அரசியல் செய்திகளைப் பரப்புவதற்கு மிக முக்கியமான கேந்திரங்களாக விளங்குகின்றன.

மொத்தத்தில், 1,34,000 பொழுது போக்கு இல்லங்கள், விடுதிகள், கலாசார மாளிகைகள் உள்ளன. அவற்றில் 80 சதவிகிதம் கிராமப்புறங்களிலேயே இருப்பனவாகும். பற்பல பயில்முறைக் கலைக் குழுக்களும், ஸ்டூடியோக்களும், நாடகக் குழுக்களும், இசை, நடனம், இலக்கியம், சினிமா, நாடகம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருப்போருக்கு பல வசதிகளையும் அளிக்கின்றன. இந்த சங்கங்களும், இவற்றைப் போன்ற நிறுவனங்களும், அந்தந்தத் துறையிலுள்ள தனித்தேர்ச்சியாளர்களால் வழி நடத்தப்படுகின்றன. இவை பல சந்தர்ப்பங்களில் தொழில் முறை நடிக-நடிகையர், எழுத்தாளர்கள்,கலைஞர்கள் ஆகியோரை விருந்தினராகத் தங்கள் சங்கங்களுக்கு அழைக்கின்றன.

பொதுப் பூங்காக்களில், கலாசார, பொழுது போக்கு வசதிகள் உள்ளன. பூங்காக்களின் வசதிகளை அனுபவிப்பதுடன்,அங்கு மக்கள் ஏதேனும் ஒரு சொற்பொழிவையோ அல்லது இசை நிகழ்ச்சியையோ கூட செவி மடுக்கலாம். சோவியத் யூனியனில் மொத்தம் 823 பூங்காக்கள் உள்ளன; ஆண்டுதோறும் அவற்றிற்கு 100 கோடிப் பேர் விஜயம் செய்கின்றனர்.

**அரும் பொருட்காட்சி சாலைகள்:** சோவியத் யூனியனிலுள்ள 1144அரும் பொருட்காட்சிச் சாலைகள்,ஆண்டு தோறும் 10கோடிப் பேரை ஈர்க்கின்றன. அவையனைத்தும் அரசால் நடத்தப்படுகின்றன. பல காட்சிச் சாலைகளில் நுழைவுக் கட்டணம் கிடையாது; சிலவற்றில் அவ்வாறே இருந்தாலும் மிகக் குறைவான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. புரட்சி வரலாற்றுக் காட்சிக் கூடங்களும் வரலாற்று, நினைவுக்கூட, இயற்கை விஞ்ஞானக் காட்சிக்கூடங்களும், பிராந்திய ஆய்வுக் காட்சிக் கூடங்களும், கலைக் கூடங்களும், ஓவிய அரங்குகளுமாக, அவை பல்வேறு வகைப்பட்டனவாக உள்ளன. அரசு காட்சிக் கூடங்கள் நீங்கலாக, பொது

ஸ்தாபன அடிப்படையில் நடத்தப்படும் 3,000 காட்சிக் கூடங் களும் உள்ளன.

மாஸ்கோவிலுள்ள உலகப் புகழ் வாய்ந்த, மத்திய லெனின் காட்சிக் கூடம், புரட்சியின் அழியாப் புகழ் வாய்ந்த தலைவரின் அரசியல், நிர்வாக, விஞ்ஞானத்துறை நடவடிக்கைகளையும், அவரது வாழ்க்கையையும் பற்றிய பல்வேறு காட்சிப் பொருள் களைக் கொண்டதாகும். லெனின் பிறந்த இடமான உல்யனோவ்ஸ் கிலுள்ள லெனின் நினைவுத் தொகுதியையும், ஷுஷென்ஸ்கோயே கிராமத்திலுள்ள காட்சி அரங்கினையும் (''லெனினது சைபீரிய வாழ்க்கை'') லெனினுடன் தொடர்புள்ள இதர இடங்களையும் மக்கள் அரியனவாகப் போற்றுகின்றனர்.

அரிய, சுவையான தொகுப்புகளைக் கொண்ட பிற காட்சிச்சாலை களில் குறிப்பிடத்தக்கவை; மார்க்ஸ், எங்கெல்ஸ் காட்சிக்கூடம், சோவியத் இராணுவ மியூசியம், பாலிடெக்னிகல் மியூசியம், கீழ்த் திசைக் கலைப் பொருட்கூடம், ரஷ்யக் கட்டடக் கலை (மாஸ்கோ) மியூசியம், ஸ்டாலின்கிராடு (வோல்காகிராடு) பாதுகாப்பு பற்றிய கலைப் பொருட் கூடம், லெனின்கிராடு பாதுகாப்பு மியூசியம், மாஸ்கோ பல்கலைக் கழகத்தின் மானிடவியல் காட்சிக்கூடம், லெனின்கிராடிலுள்ள மனித குலவியல் காட்சிக் கூடம். சோவி யத் விஞ்ஞானப் பேரவையின் புதையுயிர்த் தடயக் காட்சிக் கூடம், திமிரியஸேவின் உயிரியல் மியூசியம், இலக்கிய மியூசியம், நாடக மியூசியம் ஆகியவையாகும்.

புஷ்கின், லியோடால்ஸ்டாய், தஸ்தயேவ்ஸ்க்கி, ஸ்தானிஸ் லாவ்ஸ்க்கி, மயகோவ்ஸ்க்கி, செக்கோவ், கார்க்கி, செக்கொவ்ஸ்க்கி, ஷெவ்செங்கோ, கோலாஸ், சியல்கோவ்ஸ்க்கி ஆகிய இதர புகழ்பெற்ற அறிஞர்களுடன் தொடர்பு கொண்ட நினைவுக் காட்சி சாலைகள் மிகப் பிரபலமானவையாகும்.

சோவியத் யூனியனில் 172 கலைக் காட்சிக் கூடங்களும், ஓவிய அரங்குகளும் உள்ளன. மாஸ்கோவிலுள்ள கிரெத்யகோவ் அரங்கு மிகச் சிறந்தனவற்றுள் ஒன்றாகும். அங்கு 11-வது நூற் றாண்டிலிருந்து சேகரித்து வைக்கப்பட்ட 37,000 ஓவியங்களும் சிற்பங்களும், படங்களும் உள்ளன. ஆந்திரி ருப்லேவிலிருந்து (15-வது நூற்றாண்டு) தற்காலப் புகழ்பெற்ற ரஷ்ய, சோவியத் ஓவியர்களது மிகச் சிறந்த படைப்புக்கள்வரை இங்கு வைக்கப் பட்டுள்ளன.

மற்றொரு புகழ்பெற்ற, உலகப் பெரும் மியூசியம், லெனின் கிராடிலுள்ள ஹெர்மிடேஜ் என்பதாகும். அதில் புராதன எகிப்தியக் கலை, கிரேக்க, ரோம சிற்பங்கள், ரஃபேல், லியனார்

டோ டாவின்சி, மைக்கல் ஏன்ஜெலோ ஜியார்ஜியோன், டிடியன், முரில்லோ, வாலஸ்குவெஸ், கெயின்ஸ்பரோ, பௌசின், வாட்டியூ, ரெம்பிராண்ட், ரூபென்ஸ், வான்டைக் ஆகியோரது ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன.

ஆண்டு தோறும் சோவியத் யூனியனில் 4,000 சிறிய, பெரிய கண்காட்சிகள் நடைபெறுகின்றன. இவற்றுள், பெரும்பாலும் கிராமப்புறங்களைச் சேர்ந்த பல நூறு இனத்தவர்களுக்காக நடத்தப்படும் 'நடமாடும் கண்காட்சிகள்' பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சோவியத் யூனியன் பல கண்காட்சிகளை அயல் நாடுகளுக்கும் அனுப்புகிறது; உலகக் கண்காட்சிகளிலும் அது தவறாது பங்கு கொள்கிறது.

**சர்வதேசக் கலாசார உறவுகள்:** இன்று, சோவியத் யூனியன், ஏதேனும் ஒரு வகையில் 118 நாடுகளுடன் கலாசார உறவுகளைக் கொண்டுள்ளது; அவற்றுள் 70 நாடுகளுடன் கலாசார ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை சோவியத் யூனியன் கையெழுத்திட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 15,000 நடிகர்கள், ஓவியர்கள் கலாசாரத் துறையைச் சார்ந்த மற்றப் பணியாளர்கள் ஆகியோர் அயல் நாடுகளுக்கு பயணம் செய்கிறார்கள். 1972ல் சோவியத் யூனியன் 167 கலைக் குழுக்களையும், 150 விசேஷ கலாசாரப் பணியாளர்களையும் கலாசாரத் துறையில் பிரசித்தி பெற்ற, 700 நபர்களையும் நீண்டகால ஒப்பந்தங்களின் கீழ் அயல்நாடுகளுக்கு அனுப்பியது. அவர்கள் பல்வேறு பணிகளில் பங்கு கொண்டதோடு சக கலைஞர்களுடன் கலந்துரையாடினர். 130க்கும் மேற்பட்ட சோவியத் கண்காட்சிகள் அயல்நாடுகளில் நடத்தப்பட்டன.

170க்கும் மேற்பட்ட சோவியத் கலாசாரத்துறை நிபுணர்கள் வளர்ச்சி அடைந்து வரும் 110 நாடுகள் உள்ளிட்ட அயல் நாடுகளில் பணிபுரிந்து வருகிறார்கள். கெய்ரோவில் இசைக் கல்லூரிகளிலும் உயர்மட்ட நடனக் கழகங்களிலும் அவர்கள் போதித்து வருவதோடு இசை, நாடக மற்றும் நடனக் குழுக்கள், சர்க்கஸ், கிராமிய நடனக் குழு, பொம்மலாட்ட அரங்கம், ஆகியவற்றை நிறுவவும் உதவியுள்ளனர். 1972ல் 54 நாடுகளைச் சார்ந்த 550 மாணவர்கள், சோவியத் இசைக் கல்லூரிகள், நடனப் பள்ளிகள் மற்றும் கலாசாரக் கலைத்துறைகளில் பணியாளர்களை பயிற்றுவிக்கும் ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் படித்தனர். அயல் நாடுகளிலிருந்து 1972ல் 132 பல்வேறு கலைக்குழுக்கள் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்து, 15 சோவியத் குடியரசுகளையும்

சேர்ந்த 124 நகரங்களில் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். சோவியத் யூனியன் 86 தேசங்களுடன் ரேடியோ நிகழ்ச்சிகள் டெலிவிஷன் படங்கள், செய்திச் சுருள்கள், இசைப் பதிவுகள், இன்ன பிறவற்றைப் பரிவர்த்தனை செய்து கொள்கிறது. சோவியத் யூனியனின் கலாச்சார அமைச்சகமும், அதன் ஸ்தாபனங்களும் சர்வதேச ஒத்துழைப்புக்கான அவற்றின் முயற்சியில் எழுத்தாளர்கள், சாகித்ய கர்த்தாக்கள், கலைஞர்கள், கட்டிடக் கலை நிபுணர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரது ஸ்தாபனங்களுடனும் அந்நிய நாடுகளுடனும் நட்புறவு கலாசார உறவுகளுக்கான சோவியத் கழகங்களுடனும், மற்ற நட்புறவுக் கழகங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன.

# மதமும் திருச்சபையும்

*சோவியத் யூனியனின் எந்தப் பிரஜையும் எந்த மதத்தையும் பின்பற்றலாம் அல்லது எந்த மதத்தையும் பின்பற்றாமலும் இருக்கலாம்.*

சோவியத் யூனியனுடைய அரசியற் சட்டத்தின் 124 பிரிவு ''பிரஜைகளுக்கு மனச்சாட்சி சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காகச் சோவியத் யூனியனில் திருச்சபை அரசாங்கத்திலிருந்தும், பள்ளிகளிலிருந்தும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. எல்லாப் பிரஜைகளுக்கும் மதத் தொழுகைக்கும் மதவிரோதப் பிரசாரத்திற்கும் ஆன உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது'' என்று கூறுகிறது.

பல்வேறு மதஸ்தாபனங்களின் உள் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுவதில்லை. அது போலவே அவைகளும் அரசாங்கத்தில் தலையிடுவதில்லை. எந்த ஒரு திருச்சபையும் அரசாங்கத்தின் பொருளாயத அல்லது தார்மீக ஆதரவைப் பெற்றிருக்கவில்லை.

ஒரு நபரின் மதம் அவருடைய அன்றாட வாழ்வை பாதிப்பதில்லை. எந்த ஒரு விண்ணப்பத் தாளும், ஆணையும், பாஸ்போர்ட், கேள்வித்தாள் அல்லது ஜனக்கணிதத்தாளும் எந்த ஒரு நபரையும், அவருடைய மதத்தைப் பற்றிக் கேட்பதேயில்லை. இதனால்தான் சோவியத் யூனியனில் வெவ்வேறு மதநம்பிக்கை உடையவர்களின் எண்ணிக்கையை கணிப்பது கடினமாகவுள்ளது.

எல்லா மதங்களுக்கும் - அவற்றைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை அளவைப் பொருட்படுத்தாமல்—சம உரிமைகளும் வாய்ப்புக்களும் உள்ளன. மதநம்பிக்கை எனும் போர்வையில் ஒரு பிரஜையின் ஆளாண்மையையும், கௌரவத்தையும் பாதித்து, அவருடைய உடல் நலத்திற்கு ஊறு விளைவிப்பதையோ, அல்லது தம்மைப் பின்பற்றுபவர்கள் அரசாங்கச் சட்டத்தை மீறவும், தமது சமூக பொதுக் கடமைகளைச் சரிவரச் செய்ய மறுக்கவும் தூண்டவோ செய்யும் மதக் குழுக்களை சோவியத் சட்டம் தடை செய்கிறது.

எந்த ஒரு மதஸ்தாபனமும், சங்கமும், குறைந்த பட்சம் அதில் 20 உறுப்பினர்களேனும் இருந்தால், அரசாங்க ஸ்தல ஸ்தாபனக் குழுவின் ஒப்புதலின் பேரில், தமக்குரிய கோவிலேயோ அல்லது பிற தொழுகைக்குரிய இல்லத்தையோ அமைத்துக் கொள்வதற்கான இடத்தை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். அந்த இடத்தை நிர்வகிப்பதும், பழுது பார்த்துக் கொள்வதும், அந்தந்தக் குழுவைச் சேர்ந்ததாகும். மதச் சடங்குகளை செய்வதற்காக அவரவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம், மற்றும் நன்கொடைகள் ஆகியவற்றிலிருந்து மதகுருமார்களும், பிற மதபோதகர்களும் ஊதியம் பெறுகின்றனர்.

மதஸ்தாபனங்கள், தமது சொந்த சஞ்சிகைகளையும், பிரார்த்தனை நூல்களையும், பிற மத இலக்கியத்தையும் வெளியிடுகின்றன. மதச்சடங்குகளுக்கான பல்வேறு பொருள்களையும், தோரண விளக்குகளையும், தயாரிப்பதற்கான பட்டறைகளையும் இடங்களையும் மதக்குழுக்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம்; அல்லது அவற்றைக் கட்டிக் கொள்வதற்கான இடத்தையும் வாங்கிக் கொள்ளலாம். கோவில்கள் மற்றும் பல்வேறு மத ஸ்தாபனங்களது வருமானத்திற்கும் நிதி வருவாய்க்கும் வரி ஏதும் கிடையாது.

கீழ்க்கண்டவை சோவியத் யூனியனிலுள்ள மிகப்பெரும் மத ஸ்தாபனங்களாகும்:

**ரஷ்ய வைதீகத் திருச்சபை:** அப்போதைக்கப் போது கூட்டப்படும் மாநாடு, ரஷ்ய வைதீகத் திருச்சபையின் தலைவரை, மாஸ்கோ மற்றும் அகில ரஷ்யப் பாதிரியை தேர்ந்தெடுக்கிறது; அந்த மாநாடு தான் சர்வ அதிகாரமும் பெற்றதாகும். புனித ஸைனோத்தின் ஒப்புதலுடன், அப்போதைக்கப் போது கூட்டப்படும் மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சர்வ அதிகாரத்தையும் செலுத்துவது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும், பாதிரியும் ஆவர்.

ரஷ்ய வைதீகத் திருச்சபை, பல 'டயோசிஸ்'களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு டயோசிஸின் தலைமையில் ஒரு ஆர்ச்பிஷப் இருப்பார். அமெரிக்கா, பிரான்சு, ஆஸ்டிரியா, இஸ்ரேல் போன்ற வெளிநாடுகளிலும் பல 'டயோசிஸ்'களும், இதர மத நிறுவனங்களும் உள்ளன.

1970ல் மதத்தலைவர் (அலெக்ஸியஸின் மரணத்திற்குப் பின்னர், ஓராண்டுக்கு மேலாக புனித சைனோத்தின் முதிய உறுப்பினரும், குருடிட்ஸ்க்கி கோலம்னு மதத் தலைமை குருவுமான பிமென் தற்காலிகத் தலைவராக விருந்தார்; 1971, ஜூன்

2-ந் தேதி, மாஸ்கோவிற்கருகே ஸகோர்ஸ்கில், டிரினிடி செர்கியஸ் மடாலயத்தில் நடைபெற்ற மாநாட்டில் அவர் மாஸ்கோ அகில ரஷ்ய மதகுருவாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே சமயத்தில், அந்த மாநாடு, ''மற்ெறாரு உலக யுத்த அபாயத்தைத் தடுப்பதற்குத் தங்களது முயற்சிகளனைத்தையும் ஒன்று திரட்டவும், எல்லா தேசங்களிடையே நட்புறவு, நல்லிணக்கம்,ஒத்துழைப்பு ஆகியவற்றை வலுப்படுத்தவும்,''கிறிஸ்தவர்களுக்கு உலகு தழுவிய வேண்டுகோள் ஒன்றினையும் விடுத்தது.

**ஜியார்ஜிய வைதீகத் திருச்சபை.** அகில ஜியார்ஜியாவின் கத்தோலிக்க மதத் தலைவரான ஐந்தாவது டேவிட்டின் தலைமையிலுள்ள ஒரு சுயாட்சிக் குழுவாகும் இது; இக்குழுவின் தலைவர் ஜியார்ஜியத் தலைநகரான திபிலிசியில் வசிக்கிறார்.

**ஆர்மீனிய கிரிகோரியின் சபை:** சோவியத் யூனியனிலும்,வெளிநாடுகளிலும் உள்ள ஆர்மீனிய பக்திமான்கள் இச்சபையைச் சேர்ந்தவர்கள்,இதன் தலைவர் அகில ஆர்மீனிய கத்தோலிக்க மத குருக்களின் தலைவரான முதலாவது வாஸ்ஜென் என்பவராவர்; ஆர்மீனியத் தலைநகரான எரவானுக்கு வெளியேயுள்ள எக்மியாத்சின் மடத்தில் இவர் வசிக்கிறார்.

**பழைய வழிபாட்டாளர்கள்** அல்லது முன்னாள் வழிபாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள், இவர்கள் திருச்சபையில் ஏற்பட்ட பெரும் உட்பிளவின் விளைவாக, முதன் முதலில் 17-வது நூற்றாண்டில் தோன்றினர். இவர்களைச் சேர்ந்த குழுவினர் மத்திய ரஷ்யா, உக்ரேய்ன், பைலோரஷ்யா, மோல்தேவியா, பால்டிக் குடியரசுகள் ஆகிய பகுதிகளில் உள்ளனர்.

**இஸ்லாம்:** சோவியத் முஸ்லீம்களில் பெருவாரியானவர்கள் 'சன்னி'களாவர்; ஷியாக்களும் கூட உள்ளனர். இம்மதத்தைச் சேர்ந்தவர்களில் நால்வகை சுதந்திரமான குழுக்கள் அல்லது கேந்திரங்கள் உள்ளன; உஸ்பெக் தலைநகரான தாஷ்கெண்டில் உள்ள, மத்திய ஆசியா, கஸாக்ஸ்தான் முஸ்லீம் குழு; இதன் தலைவர் மஃப்தி ஸியாவுத்தீன் பாபகனேவ் ஆவார்; மஃப்தி ஷகீர் ஹியாலெத்தினேவின் தலைமையிலுள்ள சோவியத் ஐரோப்பியப் பகுதி, சைபீரியாவுக்கான முஸ்லீம் குழு; இது பாஷ்கீர் சுயாட்சிக் குடியரசின் தலைநகரான உஃபாவில் உள்ளது. மஃப்தி முகம்மது ஹாத்ஜி குர்பனேவின் தலைமையில் உள்ள வடகாகஸ் முஸ்லீம் குழு; இது தாகெஸ்தான் சுயாட்சிக் குடியரசிலுள்ள பியூனக்ஸில் உள்ளது. அஸர்பைஜான் தலைநகரான பாகூவில் உள்ள டிரான்ஸ் காகேசிய முஸ்லீம் குழு; இதன் தலைவர் ஷேக்-உல்-இஸ்லாம் சுலைமான் சாதே அலி ஆகா என்பார். இந்த நான்கு குழுக்களுமே

முஸ்லீம் மத நிர்வாகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளால் அவர்களது மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

பொதுவான பிரச்சினைகளை விவாதிப்பதற்கும், புனித யாத்திரைகளை மேற்கொள்ளுவதற்கும் சோவியத் முஸ்லீம்கள் முறையாகக் கூட்டப்படும் மாநாடுகளில் கலந்து கொள்கின்றனர்.

**ரோமன் கத்தோலிக்கக் கோவில்கள்:** இவை பெரும்பாலும் மேற்கு உக்ரேன், மேற்கு பைலோரஷ்யா, பால்டிக் குடியரசுகள், ரஷ்ய சமஷ்டியின் இதர பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றிற்கு எந்த தனியொரு நிர்வாகக் கேந்திரமும் கிடையாது. அதற்குத் தலைவரும், குழுக்களும் மாவட்டக் கிளைப் பிரிவுகளும் உள்ளன.

**இவாஞ்சலிகல் லூதரன் கோவில்:** எஸ்தோனியாவிலும், லாத்வியாவிலும் உள்ளன. ஆர்ச் பிஷப் தூமிங்கின் தலைமையிலுள்ள ஒரு 'கன்சிஸ்டரி' எஸ்தோனியக் குழுவைக் கட்டுப்படுத்துகிறது. லாத்வியக் குழு, ஆர்ச்பிஷப் மாதுலிஸின் தலைமையிலுள்ள குழுவினால் கட்டுப்படுத்தப் படுகிறது.

**இவாஞ்சலிகல் கிறித்துவ பாப்டிஸ்டுகள்:** குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையேனும் கூட்டப்படும் இவாஞ்சலிகல் கிறிஸ்துவ-பாப்டிஸ்டு பிரதிநிதிகளைக் கொண்ட மாநாடே இவர்களது மிக உயர்ந்த அதிகாரக் குழுவாகும். இரு மாநாடுகளுக்கிடையே உன்னத அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கென, அம்மாநாடு இவாஞ்சலிகல்-கிறிஸ்துவ பாப்டிஸ்டுகளின் சோவியத் கவுன்சிலைத் தேர்ந்தெடுக்கிறது. அதன் தலைவர் இலியா இவானோவ் என்பவராவார்.

**யூத மதம்:** மாஸ்கோ, லெனின்கிராடு, கீவ், மின்ஸ்க், ரிகா, வில்னியஸ், கிஷினேவ், தாஷ்கண்ட், திபிலிசி, ஸ்வெர்த்லொவ்ஸ்க், லுவோவ், ஒதெஸ்ஸா ஆகிய இதர இடங்களிலும் யூத மதக் குழுவினரும், அவர்களது மடாலயங்களும் உள்ளன. அம்மடாலயங்கள் சுயேச்சையாக இயங்குகின்றன.

**புத்த மதம்:** புர்யாத், கால்மிக், துவா சுயாட்சிக் குடியரசுகளிலும ரஷ்ய சமஷ்டியின் சிதா, இர்குத்ஸ்க் பிராந்தியங்களின் சில பகுதிகளிலும் புத்த மதம் பின்பற்றப்படுகிறது. சோவியத் யூனியனின் பௌத்தர்களின் மத்தியக் குழுவின் தலைவர் பாண்டிடோ காம்போ-லாமா கோம்பயேவ் ஸாம்பால்-தோர்ஷி ஆவார்.

சோவியத் யூனியனிலுள்ள பிற மதக்குழுக்களில், உக்ரேனின் டிரான்ஸ்கார்பேதியன் பகுதியிலுள்ள சீர்திருத்தப்பட்ட திருச்சபை எஸ்தோனியாவில் ஒரு மேற்பார்வையாளரால் கட்டுப்படுத்தப்படும் மெதாடிஸ்டுகள்; ஏழாவது நாள் அட்வெண்டிஸ், மேலோ

கானி, மெனேனைட்ஸ் ஆகிய சிறிய அளவான குழுக்கள் அடங்கும்.

சோவியத் யூனியனில் சர்ச்சுகள், பள்ளிக்கூடங்களிலிருந்து தனியே பிரிக்கப்பட்டுள்ளன; சோவியத் யூனியனின் எந்தப் பொதுக் கல்வி நிறுவனத்திலும் மதபோதனை எதுவும் அளிக்கப் படுவதில்லை. மதகுருமார்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென, சர்ச்சுகளுக்கு சொந்தமான கல்விக் கூடங்கள் உள்ளன.

ரஷ்ய வைதீகத் திருச்சபை, ஸகோர்ஸ்கிலும், லெனின் கிராடிலும் 5 இறையியல் போதனைக் கூடங்களையும், 2 இறையியல் பேரவைகளையும் நிர்வகிக்கிறது. கத்தோலிக்குகள் ரிகாவிலும், கவுனுசிலும் இரண்டு கல்விக் கூடங்களையும், ஆர்மீனிய சர்ச், எக்மியாத்ஸினில் ஒரு இறையியல் பேரவையையும், முஸ்லீம்கள் பொகாராவில் ஒரு மதரஸாவையும் தாஷ்கண்டில் ஒரு இறை யியல் கல்லூரியையும், யூத மதத்தினர் மாஸ்கோவில் ஒரு யெஷீவாவையும் நடத்துகின்றனர். எஸ்தோனியாவிலும், லாத் வியாவிலும் உள்ள லூதரன் சபைக் குழுவினர், மத குருமார் பயிற்சிக்கென விசேஷ இறையியல் கல்வியை அளிக்கின்றனர்.

மேற்சொன்ன இறையியல் நிறுவனங்கள், தமது மாணவர் களை, பட்டம் பெறுவதற்காகவும், பட்ட பிற்படிப்பிற்காகவும், வெளிநாடுகளிலுள்ள உரிய கேந்திரங்களுக்கும் அனுப்பலாம். உதாரணமாக, கெய்ரோவிலுள்ள அல் அஷார் பல்கலைக் கழகம், லிபியாவின் எல் பெய்தாவிலுள்ள இஸ்லாம் பல்கலைக்கழகம், ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜிலுள்ள தெய்வீகப் பள்ளிகள், மெர்ஃபீல் டிலுள்ள ஆங்கிலிகன் கம்யூனியன் கல்லூரி, மேற்கு ஜெர்மனி யிலுள்ள கோட்டின்கென் பல்கலைக் கழகம் ஆகியவை அவற்றுள் சில ஆகும்.

சோவியத் யூனியனிலுள்ள மிகச் சிறந்த மடாலயங்களும், கான்வென்ட்டுகளும் ரஷ்ய வைதீகத் திருச்சபை, எக்மியாத் ஸினிலுள்ள ஆர்மீனிய சர்ச்சின் மடாலயம் ஆகியவை நடத்தும் ஸகோர்ஸ்கிலுள்ள டிரினிடி செர்ஜியஸ் மடாலயம், மேற்கு உக் ரேனிலுள்ள போச்சயேவ் மடாலயம், ப்ஸ்கோவிற்குச் சற்று தொலைவிலுள்ள ப்ஸ்கோவ்-பெச்செர்ஸ்க் மடாலயம் ஆகியவை.

சோவியத் மத ஸ்தாபனங்கள், வெளிநாடுகளிலுள்ள தமது சகோதர ஸ்தாபனங்களுடன் பரந்த தொடர்புகளைக் கொண் டுள்ளன. முற்றிலும் தமது மதவிஷயங்களை மட்டுமே விவாதிக்கும் பல்வேறு மாநாடுகள், காங்கிரஸுகள் இவற்றுடன், சமாதானத் தைப் பாதுகாப்பதற்கான விவாத அரங்குகளிலும் மதகுருமார்கள் பங்கு கொள்கின்றனர்.

ரஷ்ய ஜியார்ஜிய வைதீகத் திருச்சபைகள், எஸ்தோனியா, லாத்வியாவின் லூத்தரன்கள், ஆர்மீனிய கிரிகோரியன்கள், இவாஞ்சலிகல், கிறிஸ்துவ பாப்டிஸ்டுகள் ஆகியோர் உலக சர்ச்சுகள் கவுன்சிலில் அங்கம் வகிக்கின்றனர். சமாதானத் திற்கான பிராக் கிறிஸ்துவ இயக்கம் என்றழைக்கப்படும் கிறிஸ் துவ கோயில்களின் சர்வதேச சம்மேளனத்தில் சோவியத் கிறிஸ் துவர்கள் அங்கம் வகிக்கின்றனர். உலக பாப்டிஸ்டு நேசக் கூட் டிலும், ஐரோப்பிய பாப்டிஸ்டு சம்மேளனத்திலும் இவாஞ் சலிகல் கிறிஸ்துவ-பாப்டிஸ்டுகளின் பிரதிநிதிகள் உள்ளனர். உலக பௌத்தச் சங்கத்தில், சோவியத் நாட்டின் பௌத்தர்களது பிரதிநிதிகளும் உள்ளனர். ஐரோப்பிய சர்ச்சுகள் மாநாடு, லூதரன் உலக சம்மேளனம், ஐரோப்பிய கத்தோலிக்குகள் மாநாடு, சமாதான மேம்பாட்டிற்கான ஆசிய பௌத்த மாநாடு, இஸ்லாம் ஆராய்ச்சிக்கான அல்-அஷார் ஆகியவற்றின் பணிகளில் சோவியத் யூனியனைச் சேர்ந்த மதஸ்தாபனங்கள் பங்கு கொள்ளு கின்றன.

அரசுக்கும் பல்வேறு மதக் குழுக்களுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்துவதற்கென மத விவகாரங்களுக்கான விசேஷ கவுன் சில் ஒன்றை சோவியத் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. முற்றிலும் மத சம்பந்தமான விவகாரங்களில் அது குறுக்கிடுவ தில்லை; அதற்குரிய சோவியத் சட்டங்கள் சரிவர கடைப்பிடிக்கப் படுவதை அது கண்காணிக்கிறது.

சோவியத் அரசியல் சட்டத்தினுல் உத்தரவாதம் செய்யப் பட்டுள்ள மனச்சாட்சிச் சுதந்திரக் கோட்பாட்டின்படி, ஒவ் வொரு பிரஜையும் எந்த மதத்தையும் பின்பற்றும் உரிமையைப் பெறுவதுடன் மட்டுமின்றி, நாத்திக நம்பிக்கையைப் பிரசாரம் செய்யும் உரிமையையும் பெற்றுள்ளனர். விஞ்ஞான ரீதியான நாத்திகவாதம், ஆத்திகர்கள் தமது மூட நம்பிக்கைகளை விட் டொழிப்பதற்கு உதவுவதுடன் உலகைக் குறித்தும் அதில் நடை பெறுவது குறித்துமான ஒரு சரியான பொருள்முதல் வாதக் கண்ணேட்டத்தை ஏற்படுத்தவும் உதவுகிறது. எனினும், இப் பணி, முற்றிலும் விளக்கவுரைகள் மூலமும், இணக்கவுரைகள் மூலமுமே நடத்தப்படுகிறது; மத உணர்ச்சிகளைப் புண்படுத்து வதோ அல்லது ஒருவரது பிரஜா உரிமைகளை மீறுவதோ அனுமதிக்கப்படுவதில்லை என்பதையும் கூறியாக வேண்டும்.

குறிப்பு :

இந்த புத்தகத்தின் 27வது பக்கத்தின் கடைசி பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள 168 வயது நிரம்பிய ஷிராலி முஸ்லிமோவ் 1973 செப்டம்பர் 3ல் காலமானுர்,